செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியம்

தொகுதி–3

சிறைப்புறம்



முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்

செம்மொழித் தமிழ்

அகப்பொருள் களஞ்சியம்

தொகுதி 3

சிறைப்புறம்

முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்

பழனியப்பா பிரதர்ஸ்
'கோனார் மாளிகை'
25, பீட்டர்ஸ் சாலை, இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
தொலைபேசி : 044-28132863 / 43408000
e-mail: sales@palaniappabrothers.com

கிளைகள்

திருச்சி – 620 002
சேலம் – 636 001
கோயம்புத்தூர் – 641 001
மதுரை – 625 001
ஈரோடு – 638 001

முதல் பதிப்பு : 2017
© உரிமை – ஆசிரியருக்கு

ISBN: 978-81-8379-767-2 (Set of 14)
978-81-8379-770-2 (Vol-3)

தனிப்பிரதி விலை ரூ. 520/–
(தொகுதி-3)

மொத்த விலை ரூ. 7200/–
(14 தொகுதிகள்)

கணினி அச்சு : திருமதி இந்திராகாந்தி ரவி
ரமணா கணினி வரையகம், 97890 65515

ஏசியன் பிரிண்டர்ஸ், சென்னை - 600 014.

கிளைகள்

திருச்சி
பழனியப்பா பிரதர்ஸ்
அஞ்சல் பெட்டி எண். 312,
தெப்பக்குளம்,
திருச்சிராப்பள்ளி – 620 002
தொலைபேசி : 0431–2702160

சேலம்
பழனியப்பா பிரதர்ஸ்
கதவு இலக்கம் 77,
(பழைய எண் 39) செர்ரி சாலை,
சேலம் – 636 001
தொலைபேசி : 0427–2450711

கோவை
பழனியப்பா பிரதர்ஸ்
683, ராஜா தெரு,
கோயமுத்தூர் – 641 001
தொலைபேசி : 0422–2393704

மதுரை
பழனியப்பா பிரதர்ஸ்
23-A, மேற்கு கோபுரத் தெரு,
மதுரை – 625 001
தொலைபேசி : 0452–2346258

ஈரோடு
பழனியப்பா பிரதர்ஸ்
950, ப்ரோக் சாலை,
ஈரோடு – 638 001
தொலைபேசி : 0424–2256261

பொருளடக்கம்

களஞ்சிய வாயில் xvi

மதிப்புரை xxi

பதிப்புரை xxii

அகத்திணை xxiv

சிறைப்புறம்

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
அகநானூறு 8	ஈயல்	பெருங்குன்றூர் கிழார்	154
அகநானூறு 20	பெருநீர்	உலோச்சனார்	271
அகநானூறு 28	மெய்யின்	பாண்டியன் அறிவுடைநம்பி	109
அகநானூறு 38	விரிஇணர்	வடம வண்ணக்கன் பேரிசாத்தனார்	112
அகநானூறு 88	முதைச்சுவல்	ஈழத்துப் பூதன் தேவனார்	170
அகநானூறு 98	பனிவரை	வெறிபாடிய காமக்கண்ணியார்	340
அகநானூறு 102	உளைமான்	மதுரை இளம்பாலாசிரியன் சேந்தங்கூத்தனார்	27
அகநானூறு 108	புணர்ந்தோர்	தங்காற் பொற்கொல்லனார்	177
அகநானூறு 122	இரும்பிழி	பரணர்	136
அகநானூறு 128	மன்றுபாடு	கபிலர்	152

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
அகநானூறு 138	இகுளை	எழூஉப்பன்றி நாகன் குமரனார்	337
அகநானூறு 158	உரும்உரறு	கபிலர்	194
அகநானூறு 188	பெருங்கடல்	வீரை வெளியன் தித்தனார்	56
அகநானூறு 210	குறியிறைக்	உலோச்சனார்	99
அகநானூறு 222	வான்உற	பரணர்	96
அகநானூறு 228	பிரசப்	அண்டர்மகன் குறுவழுதியார்	115
அகநானூறு 232	காண்இனி	கொடிமங்கலத்து வாதுளி நற்சேந்தனார்	309
அகநானூறு 242	அரும்புமுதிர்	பேரிசாத்தனார்	347
அகநானூறு 248	நகைநீ	கபிலர்	191
அகநானூறு 252	இடம்படுபு	நக்கண்ணையார்	212
அகநானூறு 260	மண்டிலம்	மோசிக்கரையனார்	80
அகநானூறு 272	இரும்புலி	மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்	223
அகநானூறு 278	குணகடல்	கபிலர்	9
அகநானூறு 290	குடுமிக்	நக்கீரர்	143
அகநானூறு 292	கூறாய்	கபிலர்	318

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
அகநானூறு 302	சிலம்பில்	மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்	245
அகநானூறு 312	நெஞ்சுஉடம்	மதுரை மருதனிளநாகனார்	54
அகநானூறு 328	வழைஅமல்	மதுரைப் பண்ட வாணிகன் இளந்தேவனார்	119
அகநானூறு 332	முளைவளர்	கபிலர்	373
அகநானூறு 348	என்ஆ	மதுரை இளம்பாலாசிரியன் சேந்தன் கூத்தனார்	82
அகநானூறு 358	நீலத்து	மதுரை மருதனிளநாகனார்	197
அகநானூறு 362	பாம்புடை	வெள்ளிவீதியார்	173
அகநானூறு 368	தொடுதோல்	மதுரை மருதனிளநாகனார்	59
அகநானூறு 370	வளைவாய்க்	அம்மூவனார்	217
அகநானூறு 378	நிதியம்	காவட்டனார்	87
அகநானூறு 382	பிறர்உறு	கபிலர்	355
அகநானூறு 388	அம்ம	ஊட்டியார்	351
ஐங்குறுநூறு 93	எருமைநல்	ஓரம்போகியார்	184

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
ஐங்குறுநூறு 111	அம்ம	அம்மூவனார்	241
ஐங்குறுநூறு 113	அம்ம	அம்மூவனார்	182
ஐங்குறுநூறு 114	அம்ம	அம்மூவனார்	158
ஐங்குறுநூறு 115	அம்ம	அம்மூவனார்	281
ஐங்குறுநூறு 116	அம்ம	அம்மூவனார்	146
ஐங்குறுநூறு 118	அம்ம	அம்மூவனார்	92
ஐங்குறுநூறு 166	பெருங்கடற்	அம்மூவனார்	357
ஐங்குறுநூறு 215	கட்டளை	கபிலர்	117
ஐங்குறுநூறு 222	அம்ம	கபிலர்	21
ஐங்குறுநூறு 224	அம்ம	கபிலர்	264
ஐங்குறுநூறு 246	வெறிசெறித்	கபிலர்	221
ஐங்குறுநூறு 261	மென்தினை	கபிலர்	130
ஐங்குறுநூறு 267	சிறுகண்	கபிலர்	85
ஐங்குறுநூறு 269	கேழல்	கபிலர்	50
ஐங்குறுநூறு 272	கருவிரல்	கபிலர்	132
ஐங்குறுநூறு 284	அளிய	கபிலர்	301
ஐந்திணை எழுபது 4	மன்றப்	மூவாதியார்	368
ஐந்திணை எழுபது 5	சான்றவர்	மூவாதியார்	360
ஐந்திணை எழுபது 9	மன்றத்(து)	மூவாதியார்	372

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
ஐந்திணை எழுபது 11	கேழல்	மூவாதியார்	366
ஐந்திணை எழுபது 12	பெருங்கை	மூவாதியார்	362
ஐந்திணை எழுபது 57	ஒழுகு	மூவாதியார்	363
ஐந்திணை எழுபது 59	இடுமணல்	மூவாதியார்	129
ஐந்திணை ஐம்பது 11	பொன்னிணர்	மாறன் பொறையனார்	261
ஐந்திணை ஐம்பது 12	மால்வரை	மாறன் பொறையனார்	287
ஐந்திணை ஐம்பது 13	கானக	மாறன் பொறையனார்	370
ஐந்திணை ஐம்பது 49	கொடுமுள்	மாறன் பொறையனார்	126
ஐந்திணை ஐம்பது 50	அணிகடல்	மாறன் பொறையனார்	125
கலித்தொகை 65	திருந்திழாய்	கபிலர்	139
கலித்தொகை 123	கருங்கோட்டு	நல்லந்துவனார்	208
குறுந்தொகை 3	நிலத்தினும்	தேவகுலத்தார்	359
குறுந்தொகை 57	பூஇடைப்	சிறைக்குடி ஆந்தையார்	215
குறுந்தொகை 89	பாஅடி	பரணர்	35
குறுந்தொகை 109	முட்கால்	நம்பி குட்டுவன்	48
குறுந்தொகை 123	இருள்திணிந்	ஐயூர் முடவன்	76
குறுந்தொகை 138	கொன்ஊர்	கொல்லன் அழிசி	127
குறுந்தொகை 141	வளைவாய்ச்	மதுரைப் பெருங்கொல்லன்	219

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
குறுந்தொகை 158	நெடுவரை	ஔவையார்	123
குறுந்தொகை 159	தழைஅணி	வடம வண்ணக்கன் பேரிசாத்தன்	228
குறுந்தொகை 161	பொழுதும்	நக்கீரர்	204
குறுந்தொகை 166	தண்கடற்	கூடலூர் கிழார்	105
குறுந்தொகை 199	பெறுவது	பரணர்	303
குறுந்தொகை 219	பயப்புஎன்	வெள்ளூர் கிழார் மகனார் வெண்பூதியார்	75
குறுந்தொகை 239	தொடிநெகிழ்ந்	ஆசிரியன் பெருங்கண்ணனார்	64
குறுந்தொகை 261	பழமழை	கழார்க்கீரன் எயிற்றி	104
குறுந்தொகை 263	மறிக்குரல்	பெருஞ்சாத்தனார்	311
குறுந்தொகை 268	சேறீ	கருவூர்ச் சேரமான் சாத்தன்	148
குறுந்தொகை 269	சேயாறு	கல்லாடனார்	73
குறுந்தொகை 292	மண்ணிய	பரணர்	200
குறுந்தொகை 296	அம்ம	பெரும்பாக்கனார்	102
குறுந்தொகை 299	இதுமற்று	வெண்மணிப்பூதியார்	67
குறுந்தொகை 306	மெல்லிய	அம்மூவனார்	93
குறுந்தொகை 311	அலர்யாங்கு	சேந்தன் கீரன்	37

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
குறுந்தொகை 313	பெருங்கடற்	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	369
குறுந்தொகை 318	எறிசுறாக்	அம்மூவனார்	78
குறுந்தொகை 320	பெருங்கடற்	தும்பிசேர்கீரனார்	23
குறுந்தொகை 322	அமர்க்கண்	ஐயூர் முடவன்	364
குறுந்தொகை 326	துணைத்த	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	95
குறுந்தொகை 327	நல்கின்	அம்மூவனார்	11
குறுந்தொகை 357	முனிபடர்	கபிலர்	69
குறுந்தொகை 360	வெறிஎன	மதுரை ஈழத்துப் பூதன் தேவன்	320
குறுந்தொகை 372	பனைத்தலைக்	விற்றூற்று மூதெயினனார்	32
குறுந்தொகை 373	நிலம்புடை	மதுரைக் கொல்லன் புல்லன்	44
குறுந்தொகை 392	அம்ம	தும்பிசேர் கீரனார்	297
குறுந்தொகை 401	அடும்பின்	அம்மூவனார்	279
கைந்நிலை 55	கொக்(கு)ஆர்	புல்லங்காடனார்	63
கைந்நிலை 56	நுரைதரும்	புல்லங்காடனார்	14
கைந்நிலை 59	தாழை	புல்லங்காடனார்	190

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
சிலப்பதிகாரம், கானல்வரி 51	தீத்துழைஇ	இளங்கோவடிகள்	90
சிலப்பதிகாரம், குன்றக்குரவை 2	ஆங்குஒன்று	இளங்கோவடிகள்	2
சிலப்பதிகாரம், குன்றக்குரவை 3	ஆடுதுமே	இளங்கோவடிகள்	3
சிலப்பதிகாரம், குன்றக்குரவை 4	எற்றுஒன்றும்	இளங்கோவடிகள்	5
சிலப்பதிகாரம், குன்றக்குரவை 5	என்ஒன்றும்	இளங்கோவடிகள்	6
சிலப்பதிகாரம், குன்றக்குரவை 6	யாதுஒன்றும்	இளங்கோவடிகள்	7
சிலப்பதிகாரம், குன்றக்குரவை 15	வேலனார்	இளங்கோவடிகள்	329
சிலப்பதிகாரம், குன்றக்குரவை 16	கயிலைநன்	இளங்கோவடிகள்	331
சிலப்பதிகாரம், குன்றக்குரவை 17	மலைமகள்	இளங்கோவடிகள்	332
சிலப்பதிகாரம், குன்றக்குரவை 18	குறமகள்	இளங்கோவடிகள்	333
சிலப்பதிகாரம், குன்றக்குரவை 19	என்றுயாம்	இளங்கோவடிகள்	334
சிலப்பதிகாரம், குன்றக்குரவை 20	கடம்பு	இளங்கோவடிகள்	335

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
திணைமாலை நூற்றைம்பது 3	சாந்தம்	கணிமேதாவியார்	262
திணைமாலை நூற்றைம்பது 4	கோடாப்	கணிமேதாவியார்	304
திணைமாலை நூற்றைம்பது 5	வினைவிளையச்	கணிமேதாவியார்	265
திணைமாலை நூற்றைம்பது 41	உருகுமால்	கணிமேதாவியார்	34
திணைமாலை நூற்றைம்பது 81	கொன்றாய்	கணிமேதாவியார்	293
திணைமொழி ஐம்பது 3	ஓங்கல்	கண்ணஞ்சேந்தனார்	61
திணைமொழி ஐம்பது 41	நெய்தற்	கண்ணஞ்சேந்தனார்	133
திணைமொழி ஐம்பது 43	எறிசுறா	கண்ணஞ்சேந்தனார்	135
திணைமொழி ஐம்பது 47	அணிபூங்	கண்ணஞ்சேந்தனார்	66
நற்றிணை 11	பெய்யாது	உலோச்சனார்	206
நற்றிணை 17	நாள்மழை	நொச்சி நியமங்கிழார்	186
நற்றிணை 27	நீயும்	குடவாயிற்கீரத்தனார்	226
நற்றிணை 36	குறுங்கை	சீத்தலைச் சாத்தனார்	42

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
நற்றிணை 44	பொருஇல்	பெருங்கௌசிகனார்	306
நற்றிணை 47	பெருங்களிறு	நல்வெள்ளியார்	323
நற்றிணை 51	யாங்குச்செய்	மதுரைப் பேராலவாயர்	313
நற்றிணை 60	மலைகண்	தூங்கலோரியார்	299
நற்றிணை 61	கேளாய்	சிறுமோலிகனார்	188
நற்றிணை 63	உரவுக்கடல்	உலோச்சனார்	277
நற்றிணை 68	விளையாடு	பிரான்சாத்தனார்	289
நற்றிணை 72	பேணுப	இளம்போதியார்	13
நற்றிணை 83	எம்ஊர்	பெருந்தேவனார்	121
நற்றிணை 88	யாம்செய்	நல்லந்துவனார்	17
நற்றிணை 94	நோய்அலைக்	இளந்திரையனார்	19
நற்றிணை 114	வெண்கோடு	தொல்கபிலர்	164
நற்றிணை 119	தினைஉண்	பெருங்குன்றூர்கிழார்	285
நற்றிணை 122	இருங்கல்	செங்கண்ணனார்	180
நற்றிணை 123	உரையாய்	காஞ்சிப்புலவனார்	15
நற்றிணை 132	பேரூர்	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	202
நற்றிணை 134	இனிதின்	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	249

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
நற்றிணை 136	திருந்துகோல்	நற்றங்கொற்றனார்	71
நற்றிணை 138	உவர்விளை	அம்மூவனார்	25
நற்றிணை 144	பெருங்களிறு	கச்சிப்பேட்டுப் பெருந்தச்சனார்	168
நற்றிணை 147	யாங்குஆ	கொள்ளம்பாக்கனார்	267
நற்றிணை 151	நன்னுதல்	இளநாகனார்	149
நற்றிணை 158	அம்ம	வெள்ளைக்குடி நாகனார்	166
நற்றிணை 173	சுனைப்பூக்	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	327
நற்றிணை 175	நெடுங்கடல்	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	237
நற்றிணை 178	ஆடுஅமை	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	274
நற்றிணை 191	சிறுவீ	உலோச்சனார்	232
நற்றிணை 194	அம்ம	மதுரை மருதனிளநாகனார்	259
நற்றிணை 228	என்எனப்	முடத்திருமாறனார்	175
நற்றிணை 236	நோயும்	நம்பிகுட்டுவனார்	291
நற்றிணை 239	ஞான்ற	குன்றியனார்	38
நற்றிணை 251	நெடுநீர்	மதுரைப் பெருமருதிளநாகனார்	256

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
நற்றிணை 255	கழுதுகால்	ஆலம்பேரி சாத்தனார்	162
நற்றிணை 258	பல்பூங்	நக்கீரர்	269
நற்றிணை 267	நொச்சி	கபிலர்	282
நற்றிணை 268	சூருடை	வெறிபாடிய காமக்கண்ணியார்	325
நற்றிணை 273	இஃதுஎவன்	மதுரை இளம்பாலாசிரியன் சேந்தன் கூத்தனார்	316
நற்றிணை 285	அரவுஇரை	மதுரைக் கொல்லன் வெண்ணாகனார்	52
நற்றிணை 297	பொன்செய்	மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார்	235
நற்றிணை 299	உருகெழு	வடம வண்ணக்கண் பேரிசாத்தனார்	41
நற்றிணை 306	தந்தை	உரோடோகத்துக் கந்தரத்தனார்	247
நற்றிணை 311	பெயினே	உலோச்சனார்	46
நற்றிணை 313	கருங்கால்	தங்கால் பொற்கொல்லன் வெண்ணாகனார்	251
நற்றிணை 322	ஆங்கனம்	மதுரைப் பாலாசிரியர் சேந்தன் கொற்றனார்	344

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
நற்றிணை 332	இகுளைத்	குன்றூர்கிழார் மகனார் கண்ணத்தனார்	159
நற்றிணை 339	தோலாக்	சீத்தலைச்சாத்தனார்	230
நற்றிணை 344	அணிவரை	மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்	107
நற்றிணை 368	பெரும்புனம்	கபிலர்	239
நற்றிணை 372	அழிதக்	உலோச்சனார்	242
நற்றிணை 373	முன்றில்	கபிலர்	254
நற்றிணை 376	முறஞ்செவி	கபிலர்	295
நற்றிணை 378	யாமமும்	வடமவண்ணக்கன் பேரிசாத்தனார்	30

களஞ்சிய வாயில்

சிலம்பொலி சு. செல்லப்பன்

ஒரு மொழியின் பயன்பாடு உயிர்ப்புடன் இருக்க வேண்டுமெனின் அம்மொழிக்குரிய வேர்களை உயிர்ப்புடன் திகழுமாறு காக்க வேண்டும். மொழிக்கு வேர்கள் என்பவை அதன் இலக்கியங்களே! நூல்களெங்கும் பரந்து கிடக்கும் இலக்கியச்சுவை, ஒரு பூவினடியில் அமைந்திருக்கும் அமிழ்தத்தை ஒத்தது. ஒட்டுமொத்த தமிழ்ச்சமுதாயமும் இலக்கியங்களின் சுவையை அறிந்து மகிழுமாறு செய்ய, ஒவ்வொரு பூவிலும் உறிஞ்சி எடுத்த அமிழ்தத் துளிகளைச் சேகரித்துச் சுவையான தேனடையாக உருவாக்கித் தரும் தேனீயின் உழைப்பினையொத்த அயராத பணி இன்றியமையாததாகிறது. இவ்வாறான பணியை ஒவ்வொரு காலகட்டத்திலும் வெவ்வேறு தமிழறிஞர்கள் மேற் கொண்டுள்ளனர் என்றாலும், 'செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியம்' என்னும் இந்நூலின் தொகுதிகள் உருவாக மேற் கொள்ளப்பட்ட முயற்சி தனித்தன்மை வாய்ந்ததாகும்.

இதுவரை சொல்லப்பட்ட எதையும் தாண்டிச் சொல்லப்படவில்லை என்றாலும், இதுவரை சொல்லப்பட்ட ஒன்றை, இதுவரை யாரும் சொல்லாத முறையில் சொல்ல மேற்கொண்ட முயற்சியால் உருவானதே இக்களஞ்சியமாகும்.

'உரை' என்பதற்கும் 'திரட்டு' என்பதற்கும் உழைப்பு அளவிலேயே வேறுபாடு இருக்கிறது. சிலப்பதிகாரம் உள்ளிட்ட எத்தனையோ நூல்களுக்கு உரை எழுதியிருக்கிறேன். அவை ஒரு நெடுஞ்சாலைப் பயணம்போல் சீராகத் தொடங்கி முடிந்துள்ளன. ஆனால், குறிப்பிட்ட ஒரு பாடுபொருளை, குறித்த ஒரு கால எல்லைக்குள், அது

பாடப்பட்டுள்ள இலக்கிய நூல் ஒன்றுவிடாமல் தேடியெடுத்து, உரிய விளக்கத்துடன் தந்துள்ள இம்முயற்சி, என் வாழ்நாளில், எனக்கு வாழ்க்கை தந்த தமிழுக்கு, என் நன்றிக் கடனைச் செலுத்தக் கிடைத்த ஒரு நல்வாய்ப்பாய் எண்ணி மகிழ்கிறேன்.

'செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியத்தை' உருவாக்க நான் மேற்கொண்ட முயற்சி ஓர் அகழ்வாராய்ச்சிக்கு இணையானது எனலாம். செம்மொழித் தமிழ் இலக்கிய நூல்களிலுள்ள 2586 அகப்பாடல்கள் பதினான்கு தொகுதிகளில் விளக்கம் பெற்றுள்ளன. இக்களஞ்சியம் வெறும் அகத்திரட்டு மட்டுமன்று; ஒரு யுகத்திரட்டு. ஒரு வகையில் இதனைத் தமிழ் அகப்பொருள் கலைக்களஞ்சியம் (Encyclopedia) என்று கூடச் சொல்லலாம்.

நூல் உருவாக்கம்

தமிழ் அகத்திணையில் இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம், குறியிடம், சிறைப்புறம், ஒருவழித்தணத்தல், வரைவு நீட்டிப்பு, வரைவு கடாயது, அறத்தொடு நிற்றல், வரைவிடைப் பிரிவு, வரைவு மலிதல், உடன்போக்கு, ஏறு தழுவுதல், மங்கல மனையறம், பொருள்வயிற் பிரிவு, பரத்தையிற்பிரிவு என்பவற்றோடு இன்னும் பல துறைகள் உள்ளன. ஒவ்வொரு துறை சார்ந்த பாடல்கள் ஒவ்வொரு நூலினின்றும் முதலில் திரட்டப்பட்டன; பின்னர் ஒவ்வொரு துறைக்குமுரிய பாடல்கள் அனைத்தும் ஒன்று சேர்க்கப்பட்டு இக்களஞ்சியம் உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு துறைக்குமுரிய பாடல்கள் அனைத்தையும் ஓரேயிடத்தில், நிகழ்ச்சி நடைபெறும் வரிசை முறையில், தக்க விளக்கத்துடன் இக்களஞ்சியத்தில் காணமுடியும். களவு, கற்பு என்னும் நிலைகளில் ஒவ்வொரு துறைக்குமுரிய பாடல்களைத் தனியே ஓரிடத்தே காண்பதற்கான வாய்ப்பு இக்களஞ்சியத்தில் உள்ளது.

பதிப்பில் பின்பற்றப்பட்டுள்ள நெறிமுறைகள்

மூல பாடம் பலவற்றுள் சிறந்தது என்று கருதப்பட்டது இந்நூலில் எடுத்தாளப்பட்டுள்ளது.

அக்காலப் பாடல் நடையமைப்புச் சற்றுக் கடினமானதுதான். ஆதலின் எளிதில் படித்துப் பொருளறியும் முறையில் சொற்கள் பிரிக்கப்பட்டு அசையும் சீரும் சிதையாவண்ணம் பாடல்கள் தரப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பாடலும் யாருடைய கூற்று என்பது முதலில் தரப்பட்டுள்ளது. அடுத்த அடியில் அப்பாடல் எந்த நூலில் எத்தனையாவது எண்ணில் அமைந்துள்ளது என்பதும், அதனை இயற்றிய ஆசிரியர் எவர் என்பதும் தரப்பட்டுள்ளன. அடுத்துப் பாடல் எத்திணையைச் சார்ந்தது என்பது கொடுக்கப்பட்டுள்ளது. அதனையடுத்துப் பாடலின் கூற்றும், கூற்று விளக்கமும் இடம் பெற்றுள்ளன. இவற்றையடுத்துப் பாடலும், பாடலின் தெளிவுரையும், கருத்துச் சுருக்கமும் உள்ளன.

மேற்கொண்டு விளக்கமும், தேவையான குறிப்புகளும் உள்ளன. சில பாடல்களுக்கு இறைச்சி, உள்ளுறைப் பொருள் ஆகியன தரப்பட்டுள்ளன. இறுதியில் பாடலிலுள்ள இன்றியமையாச் சொற்களுக்குப் பொருள் கொடுக்கப்பட்டுள்ளது. சொல்லுக்கு நேரடிப் பொருளோடு, பாடலைப் புரிந்துகொள்ளும் வகையில் மேலும் தேவைப்படும் சொற்களும் இணைக்கப்பட்டுள்ளன. அதனால், பாடலையும் சொற்பொருளையும் ஒன்றிணைத்துப் படித்தால் பாடலின் பொருள் உரையின்றியே நன்கு விளங்குவதை அறியலாம்.

நன்றி மலர்

களஞ்சியத்தை உருவாக்க எனக்குத் துணை நின்றவர், பலர்.

நான் எழுதியதைச் செப்பனிட்டு வரிசையாக்கி, நூல் முழுவதையும் படித்துத் தக்க திருத்தங்களை வழங்கியவர், என் மருகர் பொறிஞர்

நா. புஷ்பராசு. அவருக்கு வாழ்க்கைத்துணையாக மட்டுமன்றி இப்பணிக்குப் பெரிதும் துணை நின்ற என் மகள் முனைவர் மணிமேகலை, இவர்களுக்கு இனிய ஒத்துழைப்பு நல்கிய பொறிஞர் அ. இரவீந்திரன்,

நூல் முழுமைக்கும் மெய்ப்புப் பார்த்துத் துணை செய்ததோடு 'அகத்திணை அஞ்சிறைத் தும்பி' எனப் பாராட்டுரையையும் தந்துள்ள கவிமாமணி தேனி திருமாவளவன்,

'ஆழங்காற்பட்ட அகப்பொருள் நுணுக்கம்' எனும் நுண்ணிய ஆய்வுரையை வழங்கியுள்ள பேராசிரியர் முனைவர் இராம. குருநாதன்,

உள்ளம் கொள்ளை கொள்ளும் வகையில் அருமையானதோர் அணிந்துரை நல்கியுள்ள பேராசிரியர் முனைவர் மறைமலை இலக்குவனார்,

எத்தனை திருத்தங்கள், மாற்றங்கள் செய்தாலும் சலிப்பின்றி அத்தனையையும் உடனுக்குடன் கணினிமூலம் செம்மையாய்ச் செய்து வெளிவர உதவிய திருமதி இந்திரா காந்தி ரவி,

தரமான இலக்கிய நூல்களைப் பதிப்பிப்போர் என்றதும் முதலில் நினைவில் நிற்பவர் பழனியப்பா பிரதர்ஸ் நிறுவனத்தார் ஆவர். அவர்கள் இக்களஞ்சியத்தைக் காண்பவர் பாராட்டும் வகையில் பதிப்பித்து வெளியிட்டுள்ளனர். அவர்கள் தந்துள்ள பதிப்புரை என் நெஞ்சில் என்றென்றும் பதிந்திருக்கும். அத்தகைய பதிப்பக உரிமையாளர் திரு. ப. செல்லப்பன், பதிப்பில் எனக்கு எல்லா வகையிலும் துணை நிற்கும் சுப்பு என்கிற திரு. இராம. சுப்பையா, களஞ்சியம் சிறந்த முறையில் உருவாக முன்னின்று முழு மூச்சுடன் பாடுபட்ட முனைவர் ப. முத்துக்குமாரசாமி,

முகப்போவியத்தை அழகுற வடிவமைத்துத் தந்துள்ள ஓவியர் ஜீவா,

கடின உழைப்பில் என் உடல் நலம் கெட்டுவிடாதவாறு பேணி வந்ததோடு, களஞ்சியம் வெளிவருவதில் பெரிதும் ஆர்வம் காட்டிய

என் மகன் செ. கொங்குவேள், மருமகள் மருத்துவர் ஈஸ்வரி மற்றும் குடும்பத்தினர் ஆகிய

அனைவரையும் பாராட்டிப் புகழ ஏற்ற சொற்கள் எனக்குக் கிட்டவில்லை என்பதால், 'நன்றி' என்னும் ஒரு சொல்லை என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து வெளிப்படுத்தி வணங்குகின்றேன்.

களஞ்சியப் பொருளைப் பாதுகாத்தல் மட்டும் போதாது; அதனை நாமும் துய்த்து அனைவர்க்கும் வாரிவாரி வழங்க வேண்டும். களஞ்சியத்தைத் துய்த்தால், தமிழரின் வீரம் செறிந்த, அறஞ்சார்ந்த காதல் வாழ்க்கை முறையினைச் சற்றே வாழ்ந்துவிட்ட நுகர்வும், இவ்வளவு மென்மையும் உயர்வும் அரியதும் ஆனதா தமிழ்க்காதல் என்னும் உள்ளுணர்வும் மேலோங்கி நிற்கும் என்பது உறுதி.

களஞ்சியத்தைப் பயன்படுத்துங்கள்; மேலும் மேலும் விரிவடையச் செய்யுங்கள்.

என்றும் உங்கள்

மதிப்புரை

அகத்திணை அஞ்சிறைத் தும்பி

கவிமாமணி தேனி **திருமாவளவன்**

தனி ஒருவராய், இருபது ஆண்டுகள் இடைவிடாது முயன்று, பல மணி நேர உழைப்பை நல்கி, வெற்றிகரமாய் முடித்துள்ளார், சிலம்பொலி. இந்த இமாலயச் சாதனையை எவ்வாறு போற்றிப் புகழ்வது? சிலம்பொலியின் இந்நூல் தமிழறிவைத் தழைத்திடச் செய்யும். பேச்சாற்றலைப் பெருக்கிடப் பயன்படும். ஆராய்ச்சியாளர்க்கு அருந்துணையாகும். மாணவர்க்கு மாங்கனியாகும். ஆசிரியருக்கு உரை நூல் ஆகும். இந்நூலை ஒவ்வொருவரும் பயின்று, "பெருமை கொள்வாய் தமிழா – தமிழ்நாட்டில் பிறந்ததனால் மிகச் சிறந்தவன் நான் என்று" மகிழ்ந்திட வேண்டுகிறேன்...

ஆழங்காற்பட்ட அகப்பொருள் நுணுக்கம்

பேராசிரியர் முனைவர் **இராம. குருநாதன்**

அகப்பொருள் சார்ந்த இப்பெருநூலினைத் தமிழுலகம் நன்கறிந்த முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பனார் இலக்கிய இன்பம் தோய இதனைப் படைத் துள்ளார். இந்நூல் செல்லப்பனாரின் சொற்சிற்பச்சிகரம் என்று செப்புவது மிகையான கூற்றன்று. அகப்பொருள் கருத்தாக்கத்தை இவர் போல் சொல்லு வதற்கு இனி ஒருவர் உண்டோ என்று சொல்லும் அளவிற்கு இந்நூல் சிறந்து விளங்குகிறது. இஃது இவரது வாழ்நாள் சாதனை என்று நவின்று, இதற்கு வரவேற்பு வளையம் வைத்துக் கொண்டாடலாம். இந்நூலினை உருவாக்கி உலவ விட்டமைக்குத் தமிழுலகம் நன்றி சொல்லும். கொண்டாடும்...

தமிழ்க்களஞ்சியத்திற்கு ஒரு தங்கத் திறவுகோல்

பேராசிரியர் முனைவர் **மறைமலை இலக்குவனார்**

மிக எளிமையாகவும், இனிய எளிய நடையிலும், பாடல்களில் கருத்து களையும் சிறப்புகளையும் சுவைபடவும், பயன்பாடு மிக்கதாகவும் சிலம்பொலி செல்லப்பனார் வழங்கியுள்ள அகப்பொருள் களஞ்சியம் தமிழ்கூறும் நல்லுலகத் திற்கு ஒரு மகத்தான கொடை என உறுதியாகக் கூறலாம். மிகவும் அரிதின் முயன்று, நீண்ட காலம் அயராது உழைத்து, சங்க இலக்கியம் எனும் கடலில் மூழ்கிச் சிறந்த முத்துகளைத் தேடியெடுத்தது போன்று மிகச் சிறந்த படைப்பு களுள் ஒன்றாகவும், தமிழிலக்கியச் செவ்வியற்கால அகப்பொருள் செய்திகளை நிரல்படக் கூறும் கருத்துப்பெட்டகமாகவும் விளங்குகின்றது. தமிழ்க்களஞ்சியத் திற்கு ஒரு தங்கத் திறவுகோலை இதோ சிலம்பொலி செல்லப்பனார் வழங்கி யுள்ளார். களஞ்சியப் பொருளைக் கைக்கொள்க! பயன் பெறுக!

பதிப்புரை

சொல்வேந்தர் சிலம்பொலிக்குச் சூட்டுகின்றோம் மணிமகுடம்

பழனியப்பா பிரதர்ஸ்

பொன்னொளியே! பூமழையே!
பூவணியும் காவிரியே!
தண்ணமுதே! தாமரையே!
தாழம்பூ நறுமணமே!
தென்பொதிகைச் சந்தனமே!
தேனிழைக்கும் வண்டினமே!
கன்மலையின் நறுஞ்சுனையே!
கண்ணகலா ஆழ்கடலே!
செண்பகமே! கற்பகமே!
சிலம்பொலியே! வலம்புரியே!

பண்டையநல் புலவர்களும்
பாராட்டும் வகையினிலே
கண்டுகண்டு பாடல்களைக்
காட்சிவழி நீதொகுத்துச்
செண்டெனவே தந்தனையே
செந்தமிழர் கரங்களிலே!
இன்தமிழும் புதியதொரு
ஏற்றமுற வழியமைத்தாய்!
குன்றெனவே இமயமலை
குன்றிடவே நீஉயர்ந்தாய்!

என்னபணி! இரவுபகல்
எத்தனைநாள் பேருழைப்பு!
என்னுமொரு சிந்தனையில்
எம்இதயம் கனக்கிறது!
உன்நூல்கள் பலதொகுப்பாய்
நன்னூலாய் யாம்அளித்தோம்!

உன்கழுத்தில் இன்றணியும்
ஒவ்வொருபூ மாலையிலும்
நன்மலரை ஒன்றிணைக்கும்
நாரெனவே யாம்அமைந்தோம்!

கங்குகரை காணாத
கடல்மூழ்கி எழுவோரே
சங்கொடுநல் முத்துகளைத்
தாம்வாரிக் கொணர்ந்திடுவார்!
பொங்கியெழும் நறுமணத்தைப்
பூங்காவில் நுழையாமல்
எங்ஙனந்தான் பெறக்கூடும்
இயம்பிடுக தோழர்களே!
அங்ஙனமே நீர்விரும்பி
இந்நூலின் தொகுதிகளை

வாங்கிடுக! படித்திடுக!
வரிவரியாய்ப் பொருளறிந்தே
ஓங்கிடுக! உணர்ந்திடுக
உள்ளூறும் கலைநயத்தை!
தேங்கிநின்று மறைபொருளாய்த்
திரட்டுப்பால் போலினிக்கும்
பாங்கான உவமைநலம்
பலர்போற்றும் 'இறைச்சி'யுமே!
வீங்கிடுமே உம்முடலும்
விள்ளரிய பெருமிதத்தால்!

பல்கலையின் கூடமன்றோ
பழனியப்பா பிரதர்ஸும்!
நல்லறிஞர், கவிவல்லார்,
நாடறிந்த பேச்சாளர்,
துள்ளுநடை சிறுவர்க்குச்
சுவைக்கதைகள் படைத்திடுவோர்,
வல்லமையால் எழுத்துலகில்
வந்தமர்ந்தோர் நடுவினிலே
சொல்வேந்தர் சிலம்பொலிக்குச்
சூட்டுகின்றோம் மணிமகுடம்!

அகத்திணை

பொழிலிலோ புனத்திலோ எழிலார்ந்த வேறோர் இடத்திலோ ஆண்மகன் ஒருவன், பெண்மகள் ஒருத்தி, தன் விளையாட்டுத் தோழியர் எவருமின்றித் தனித்து நிற்பதைக் காண்கிறான். எல்லா வகையிலும் தன்னை ஒத்திருக்கும் அவள்பால் அவனையுமறியாமல் ஓர் இயற்கை ஈர்ப்பால் அவள் ஒருத்திமீது மட்டுமே அவன் உள்ளம் செல்லுகிறது. அவளும் அவனை மட்டுமே விரும்புபவளாய் இருக்கிறாள். எதிர்ப்படும் எல்லாரிடமும் ஆண், பெண் உள்ளம் சென்றுவிடாது. அவளது அழகு கண்டு, 'இவள் தெய்வ மகளோ', 'உண்மையிலேயே மானிடப் பெண்தானோ' என ஐயுறுகிறான்; சில செய்கைகளால் அவள் மானிடப் பெண்ணே என்று தெளிவடைகின்றான். தன்னைப்போல அவளும் தன்னை விரும்புகிறாளா என்பதைக் குறிப்புகளால் உணர்கிறான். இருவரும் ஒருவரையொருவர் காண்கின்றனரெனினும், பெண்ணை ஆண் கண்டான் என்று சொல்வதே செய்யுள் வழக்கம். அவ்வாறு காதல் கொள்பவருள் ஆண்மகனைக் 'காதலன்' என்றோ, 'தலைவன்' என்றோ, 'கிழவன்' என்றோ, பெண்மகளைக் 'காதலி' என்றோ, 'தலைவி' என்றோ, 'கிழத்தி' என்றோ இலக்கியங்கள் வழங்குகின்றன.

தலைவனும் தலைவியும் ஒரு நிலத்தைச் சார்ந்தவராகவோ, வெவ்வேறு நிலத்தைச் சார்ந்தவராகவோ இருக்கக்கூடும். ஐவகை

நிலங்களுள் எந்நிலத்தவராயும் இருக்கலாம். எனினும், காதலனும் காதலியும் குறிஞ்சி நிலத்தில் ஒருவரை ஒருவர் கண்டு காதல் கொள்கின்றனர் என்று சொல்வதே அக இலக்கிய வழக்கம். எல்லா நிலங்களிலும் காதல் தோன்றத்தான் செய்யும்! 'பின்புலம் இயற்கை யழகு வாய்ந்ததாய் இருந்தால்தான் காதல் காட்சி சிறப்புறும்.' பாலைநிலத்திலும் கடுமையாய் வெயில் வீசும் பசுமையற்ற பின்புலத் திலும் காதல் காட்சியைக் காண எவரும் விரும்பார். எனவேதான், குறிஞ்சி நிலத்தைப் பின்புலமாய்க்கொண்டு, அங்கு ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்டுக் காதல் கொள்வதாய் அமைக்கின்றனர். இவ்வாறே காதல் கொள்ளும்போது ஏற்படும் மாறுபட்ட நிலைகளுக் கேற்பப் பின்புலங்களாய் முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியன அமையும்.

ஒருவனும் ஒருத்தியும் கண்டுகொள்வதைக் 'காட்சி' என்பர். தான் கண்ட பெண் எவ்விடத்தினளோ, யார் மகளோ, நம் காதலுக்கு இசைவளோ என்றெல்லாம் ஆண்மகன் ஐயுறுவான். இஃது 'ஐயம்' எனப்படும்.

அணிகலன்கள் அணிந்திருத்தல், காமப் பார்வை பார்த்தல், புதிதாய்த் தன்னைக் கண்டதால் உடலில் நடுக்கம் தோன்றுதல், தான் நோக்கும்போது அவள் தன்னைப் பார்க்காது நிலத்தைப் பார்த்தல், தான் காணாதிருக்கும்போது அவள் தன்னை நோக்குதல் போன்ற குறிப்புகளால் ஆண்மகன் ஐயம் நீங்கி அவள் தன்மீது காதல் கொண்டுள்ளாள் எனத் தெளிவடைகிறான்.

தலைவி அணிந்துள்ள பூக்களில் வண்டுகள் மொய்த்திருத்தல், சிறந்த அணிகலன்களை அவள் அணிந்திருத்தல், அவள் மார்பு மற்றும் உடலில் ஓவியம் எழுதப்பட்டிருத்தல், அணிந்துள்ள மலர்மாலையில் மலர் வாடியிருத்தல், மருண்ட பார்வை கொண்டிருத்தல், கண்களை இமைத்தல், முகத்தில் அச்சம் தோன்றுதல் போன்றவற்றாலும் இன்ன பிறவற்றாலும் காதலன் தன் ஐயம் நீங்கி அவள் மானிடப் பெண்ணே என முடிவு செய்வான்.

"வண்டே இழையே வள்ளி பூவே
கண்ணே அலமரல் இமைப்பே அச்சம் என்(று)
அன்னவை பிறவும் ஆங்கவண் நிகழ
நின்றவை களையும் கருவி என்ப" (தொல். கள. 4)

என்பது தொல்காப்பிய நூற்பா.

இயற்கைப் புணர்ச்சி

தலைவி தன்மீது காதல் கொண்டுள்ளாள் எனத் தெளிந்த தலைவன், தன் காதலை உணர்த்தத் துணிவான்; தலைவியும் தன் காதற்குறிப்பை உணர்த்துவாள். நாணத்தால் தலைவி, தன் காதலை வெளிப்படையாய் உணர்த்தாது குறிப்பினாலேயே உணர்த்துவாள்.

தன்னை அவள் விரும்புவதுணர்ந்த பின்னரே அவன் அவளைத் தனிமையில் சென்றடைந்து, ஒன்றுகூடி இன்புறுவான். இவ்வாறு தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் கண்டு முதல்நாளில் கூடியிருத்தலை 'இயற்கைப் புணர்ச்சி' என்பர்.

தலைவிக்கு முதன்மைத்தோழி ஒருத்தியும், உடன் விளையாடும் மகளிரும் (ஆயத்தார்) இருப்பர். ஆண்மகனின் பாங்கறிந்தொழுகும் உயிர்த்தோழன் பாங்கன் என்று வழங்கப்படுவான்.

இடந்தலைப்பாடு

தற்செயலாய்க் கண்ட ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் விரும்பி, முதல் நாள் ஒன்றுபட்டுக் காதலராயினர். இவ்வாறு இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைவன், தன் காதலியை முதல் நாள் கண்ட அதே இடத்தில் மறுநாளும் காணலாம் எனச் செல்கிறான்; காதல் மிக்க தலைவியும் அங்கு வந்து நிற்பாள். தோழியரோடு விளையாடாது, பூப்பறித்து மாலை தொடுத்திடாது தனித்திருக்கும் தலைவியிடம் தலைவன், "தனித்து நிற்கும் நீ யாரோ? உன்னைத் தொழுது கேட்கிறேன்" என்று தன் காதல் உள்ளத்தை வெளிப்படுத்துவான். அது கேட்டுத் தலைவி நாணி நிற்பாளேயன்றி மறுமொழி எதுவும் கூறமாட்டாள். தலைவன் அவளை நெருங்கித் தன் காதலை உறுதிப்

படுத்திக்கொள்வான். யாருமறியாதவாறு தலைவன் தனியே வந்து, தலைவியை முதல்நாள் கண்ட அதே இடத்திலேயே இரண்டாம் நாளும் கண்டு, கூடிக் களிப்பது 'இடந்தலைப்பாடு' எனப்படும்.

பாங்கற்கூட்டம்

தலைவியைக் கண்டது முதற்கொண்டு தலைவன் மனஞ்சோர்ந்து, உடல் தளர்ந்து உயிர்க்களையற்றிருப்பான். ஆண்மை மிக்க அவன் அவ்வாறு சோர்ந்திருப்பது எதனால் எனப் பாங்கன் கேட்பான். அது பெண் ஒருத்தியால் நிகழ்ந்ததென்பான், தலைவன். பகைவரும் கண்டஞ்சும் வீரமிக்க அவன், பெண் ஒருத்தியால் இடிந்துபோய் இருத்தல் கூடாதெனப் பாங்கன் இடித்துரைப்பான். இதனைப் பாங்கன் கழறுதல் (இடித்துரைத்தல்) என்பர். பாங்கன் இடித்துரைத்ததை மறுத்துத் தலைவன், 'நீ அவளைக் கண்டாயானால் என்னை இவ்வாறு இழிவாய்ப் பேசமாட்டாய்' என்று கூறுவான். தோழனின் கூற்றினைத் தலைவன் மறுத்துப் பேசுவதைக் 'கழற்றெதிர் மறை' என்பர்.

தலைவனின் காதற்பெருக்கையும், அதை அவன் தாங்க இயலாது தவிப்பதையும் கண்டு, "அப்பெண் யார்? எவ்விடத்துள்ளாள்? எத்தன்மையள்?" என்று பாங்கன் கேட்டறிந்து, அவ்விடம் சென்று, தலைவன் குறிப்பிட்ட அவளைக் கண்டு, தலைவன் அவளை விரும்பியது சரியெனத் தெளிவான்; தலைவனுக்கு எல்லா வகையிலும் துணை நிற்கவும் உறுதி பூணுவான்; தலைவனைத் தலைவி இருக்கு மிடத்திற்கு அழைத்துச் செல்வான். தலைவி இருக்கும் இடத்தைப் பாங்கன் காட்டத் தலைவனோடு தலைவிக்கு ஒருநாள் கூட்டம் நிகழும். இது 'பாங்கற்கூட்டம்' எனப்படும்.

பாங்கியிற்கூட்டம் (தோழியிற்புணர்ச்சி)

தலைவிக்கு விளையாட்டுத்தோழியர் பலராய் இருப்பர். தலைவி அவர்களை விட்டுப்பிரிந்து எப்பொழுதும் மறைந்து செல்லல் அரிது. அவர்களைத் தனியே விட்டுப் பிரிந்து சென்றால் திடீரென்று வந்து தலைவியை அடைவர், தோழியர். இது போன்ற இடையூறுகளை

யெல்லாம் கடந்து, தலைவியைத் தன்னிடம் கொண்டுவந்து விடத் தலைவிக்குத் தோழியராய் உள்ளவருள் முக்கியமான ஒருத்தியை அறியத் தலைவன் முற்படுவான்.

தலைவியைப் பெற்றெடுத்தவள், நற்றாய்; வளர்த்தவள், செவிலித் தாய். நற்றாய், செவிலிக்குத் தலைவியும் தோழியும் ஆவாள். அதே போலவே, செவிலிக்கு மகள், நற்றாய் பெற்ற மகளான தலைவிக்கு உயிர்த்தோழியாய் இருப்பாள். இருவரும் ஈருடலும் ஒருயிருமாயிருப்பர். அத்தகைய தோழியை அறிந்து, அவளிடம் தன் குறையைக் கூறி, அவள் வழிநடத்துதலின்படி தலைவியைக் கூடிடத் தலைவன் விரும்புவான்.

தலைவியைச் சூழ ஒரு படைபோலக் கூட்டமாய்த் தோழியர் வருகின்றனர். அவர்களுள் யார் முதன்மையானவள் என்பதை எவ்வாறு அறிவது? தோழியர் கூட்டத்தை நன்கு கவனித்துப் பார்க்கிறான், தலைவன். அவர்களுள் ஒருத்தி எதைச் சொன்னாலும் தலைவி அதை ஏற்பதையும், அவள் செய்வதுபோலவே தலைவி செய்வதையும் கண்டு, அவள்தான் தலைவிக்கு உயிர்த்தோழி என்றறிகிறான்.

குறையிரத்தல்

அத்தோழியின் தோழமையைப் பெற்றாலன்றித் தலைவியின் நட்பைப் பெறுதல் அரிது என்றுணர்ந்தான், தலைவன். அவன், தான் தலைவி மீது கொண்டுள்ள காதலை அத்தோழியிடம் தெரிவிப்பான். தலைவியைத் தனியே சந்திக்க இயலாதிருப்பதைக் கூறி, அக் குறையை நீக்கித் தான் தலைவியை அடையத் துணை நிற்குமாறு மிகவும் இரங்கிக் கேட்பான். இது 'குறையிரத்தல்' எனப்படும்.

தோழியும் தலைவியும் ஒருங்கே இருக்கும்போது சென்று, வெளிப் படையாகவோ குறிப்பாகவோ தன் நிலையைத் தலைவன் நயமாய்ப் புலப்படுத்துவான். முதலில் தோழி தலைவனுக்குத் துணை நிற்க மறுப்பாள்.

மதியுடம்பாடு

தலைவன் தன்னிடம் கூறியவற்றையும், தலைவியின் செயல் களையும் தனித்தனியாகவும், சேர்த்தும் ஆராய்ந்து, அவர்கள் இருவரும் ஒரே வகையான இன்பதுன்பங்களைக் கொண்டிருத் தலையும், இருவர் அறிவும் ஒன்றாய் இருத்தலையும் தோழி உணர்ந்தறிவாள். தலைவன் தலைவியர் உணர்வோடு தோழியின் உணர்வும் ஒத்துச்செல்லும் நிலை உண்டாதலை, 'மதியுடம்பாடு' என்பர்.

மதியுடம்பட்ட தோழி, தலைவியின் குறிப்பறிய முற்படுவாள். தலைவி, தான் ஒருவனைக் கண்டு காதலுற்றிருப்பதை நாண மிகுதியால் தோழியிடம் கூறமாட்டாள். தலைவி ஆயத்தோடு கூடாது தனித் திருத்தல், ஏதோ ஒன்றை நினைந்து வருந்தியிருத்தல் போன்ற நிகழ்வுகளால், அவள் காதலைத் தான் அறிந்திருந்தும் அறியாதவள் போலத் தலைவியிடம் மறைமுகமாய்க் கூறி, தலைவியின் நாணம் ஊறுபடாதவாறு, தோழி அவள் நெஞ்சக்கருத்தை அறிவாள்.

சேட்படை

தோழியைக் குறையிரந்து வரும் தலைவன், காணிக்கை (கையுறை)யாய் அரிய தழை, முத்து முதலியவற்றைக் கொண்டுவந்து அவற்றைத் தலைவியிடம் தந்து, அவளை எவ்வாறாயினும் தன்னுடன் கூட்டி வைத்திடுமாறு தோழியிடம் வேண்டுவான்.

'நாம் விரும்பியபடி இவள் எளிதிலே நமக்குக் கிடைக்கக் கூடியவள் அல்லள்' என்று கருதும் தலைவன், தழையும் கண்ணியும் கொண்டு வந்து தோழிக்குப் பின்னின்று குறையிரப்பான். அவன் உணரும்படியாகத் தோழி அவனைச் சேட்படுத்துவள் – அஃதாவது, தலைவனைத் தலைவியுடன் நெருக்கமாய்ப் பழக விடாது சற்று அகற்றி வைப்பாள் (சேட்படுத்தல் – அகற்றுதல்).

மடலேறுதல்

தலைவன் தலைவியரின் ஆழமான காதலை அறிந்த பின்னும் தோழி, அவர்கள் எளிதில் சந்திக்க இடமளிக்க மாட்டாள்; காதலன் அரிதின்

முயன்று ஆர்வத்தோடு கொண்டுவரும் கையுறையை ஏற்க மறுப்பாள்; பல்வேறு தடைகளை ஏற்படுத்துவாள். தலைவன் தலைவிமீது கொண்டுள்ள காதல் உறுதியானதுதானா என்பதை அறிவதற்கே இத்தகு செயல்களைத் தோழி செய்வதற்கான நோக்கமாகும்.

தோழி வேண்டுமென்றே தன் குறைக்குச் செவிசாய்க்காது காலங் கடத்துவதைக் காணும் தலைவன், தன் எண்ணம் ஈடேறுவதற்காகத் தான் மடலேற உறுதி பூண்டுள்ளதைத் தோழியிடம் தெரிவிப்பான்.

மடல் மா என்பது பனங்கருக்கினால் செய்யப்பட்ட குதிரையைக் குறிக்கும். தான் காதலித்த பெண்ணை எய்தப்பெறாதவன் தன் உடல் முழுவதிலும் திருநீற்றைப் பூசிக்கொண்டு, ஆவிரம் பூ மாலையை மார்பிலும், எருக்கம்பூ மாலையைத் தலையிலும் அணிந்துகொண்டு பனங்கருக்கால் செய்யப்பட்ட குதிரைமேல் ஏறிக்கொள்வான்; தான் விரும்பும் காதலியின் படத்தைத் துணியில் எழுதிக் கையில் பிடித்திருப்பான். அக்குதிரையைச் சிலர் வீதியில் இழுத்துச் செல்வர். இது மடலேறுதல் எனப்படும். இதனால் அவன் உறுதியான காதல் வெளிப்படும்; மேலும், அரம் போன்ற பனங்கருக்கு உடலினை அறுத்தலால் வெளிப்படும் குருதிப்பெருக்கும் இரக்கத்தை ஏற்படுத்தும். ஊரார், இவ்வளவு காதல் கொண்டுள்ளவனுக்கு மகளைக் கொடுக்க மறுக்கலாமா எனப் பெண்ணைப் பெற்றோரைக் குறை கூறுவர்; அவர்களை அணுகி, எடுத்துரைத்து, அவளை அவனுக்கு மணம் முடித்து வைப்பர். மடல் ஏறுவேன் என வாயளவில் சொல்லுவது ஐந்திணையின்பாற்படும்; சொன்னபடி மடலேறிக் காட்டுவது பெருந்திணையின்பாற்படும். சங்க இலக்கியங்களில் மடலேறுவதாய்ச் சொல்லும் நிலை மட்டுமே உள்ளது; மடல் ஏறியதாய்ப் பாடல் எதுவும் இல்லை.

மடலேறுவேன் என்று தலைவன் சொன்னதும், அவனது காதல் திட்பத்தினைக் கண்ட தோழி, அவனுக்குத் துணை செய்ய முற்படுவாள்.

குறியிடம்

தலைவன் தந்த கையுறையைத் தலைவியிடம் கொடுத்து, அவள் குறிப்பினை உணர்ந்துகொள்வாள், தோழி. தலைவன் குறையைத்

தலைவி நயக்கவே, அவ்விருவரும் ஒருவரை ஒருவர் சந்திப்பதற்கேற்ற வகையில் 'இன்ன இடத்திற்கு வந்தால் தலைவியைக் களவிற் கூடலாம்' என்று தோழி குறியிடங் கூறுவாள்.

தலைவியைத் தலைவன் பகலில் கூடுதற்கு ஓர் இடத்தை வரையறுத்துத் தோழி குறிப்பிடுவாள். இது 'பகற்குறி' எனப்படும்.

அடுக்காய் உள்ள மலைப்பக்கமாகவோ, அழகிய மலர்ச் சோலையாகவோ, காதலுணர்வை மிகுவிக்கும் இன்ன பிற இடங்களாகவோ பகற்குறி அமையும். அவ்விடங்கள் பலவகைப்பட்ட மரங்களால் பொலிவு பெற்றனவாயும், வெளியிலிருப்போர் உள்ளிருப்போரை எளிதில் காண்பதற்கு இயலாதனவாயும், ஆனால், உள்ளே இருப்போர் வெளியிலிருப்பவரை எளிதில் கண்டு கொள்ளத்தக்கனவாயும், ஆசைகளை விட்டொழித்தோரையும் ஆசை கொள்ளத் தூண்டும் தன்மையனவாயும் இருக்கும். பகலில் கூடுமிடம் வீட்டிற்குப் புறத்தே, தலைவி வழியறிந்து வரக்கூடியதாயும், அவளுக்குப் பழக்கமான இடமாயும் அமைந்திருக்கும்.

பகற்குறி நாடி வந்த தலைவன், அக்குறிக்கண் செல்ல இயலாதவாறு தடைகள் சில நேர்வதுமுண்டு. (பகற்குறி இடையீடு)

அந்நிலையில், தலைவன் விருப்பத்தை ஈடேற்றுதலை அறமாய்க் கருதும் தலைவி, அவன் விரும்பியவாறே இரவில் வந்து தன்னைச் சந்திப்பதற்கு வரையறுத்துரைக்குமிடம் 'இரவுக்குறி' எனப்படும். அவ்விடம் தலைவியின் இல்லத்து மதில் எல்லைக்குள் இருக்கும்; இல்லத்தவர் பேசும் பேச்சினை வெளியிலிருந்து கேட்குமளவிற்கு அண்மையில் அகமனைக்கும் புறமனைக்கும் நடுவே அமைந்திருக்கும். அது, தலைவியின் வீட்டு எல்லைக்கு உட்பட்டிருக்கும் செய்குன்று, இளமரக்கா, பூப்பந்தர், விளையாட்டிடம் போல்வனவற்றுள் ஏதேனும் ஒன்றாயிருக்கும். தலைவன், தான் இரவுக்குறியிடத்துக்கு வந்திருப் பதைத் தெரிவிக்க அங்குள்ள நீர்நிலையில் கல்லெறிந்து ஒலி எழுப்பல், மரங்களில் தங்கியிருக்கும் பறவைகளை எழுப்பிவிடல் போன்ற

அடையாளக்குறிகளைச் செய்வான். அவ்வொலி கேட்டுத் தலைவி அங்கு வந்து சேர்வாள்.

சில சமயம், தலைவன் செய்ய வேண்டிய குறி காற்றசைவு போன்றவற்றால் இயற்கையாய் நிகழ்ந்துவிடும். அதை அவன் செய்ததாய் எண்ணி வந்து தலைவி ஏமாந்து திரும்புவாள். பிறகு அங்கு வந்த தலைவன் குறி எழுப்ப, அதைக் கேட்கும் தலைவி, அது தலைவன் எழுப்பிய குறியன்று என்று கருதி வாராதிருப்பாள். அதனால் தலைவன் சந்திப்பு நேராமலே திரும்புவான். இஃது 'அல்ல குறிப்படுதல்' ஆகும்.

சிறைப்புறம்

ஒருவரை ஒருவர் கண்ணால் பார்க்க வாய்ப்பு இல்லாததாயும், ஆனால், ஒருவர் கூறியதை மற்றவர் காதால் கேட்கும் தொலைவில் உள்ளதாயும் இருக்கும் பகுதி 'சிறைப்புறம்' எனப்படும். அதை வீட்டருகே உள்ள ஓர் இடம்; பச்சை உயிர்வேலி எனலாம்.

தோழிக்கும் தலைவிக்கும் இடையே நிகழும் உரையாடல்களைத் தலைவன் மறைந்திருந்து கேட்டு அறிதற்கு வசதியாய் மனைக்குப் புறமாய்க் காவலாய் அமைக்கப்பட்டுள்ள வேலி அமைப்பினைச் சிறைப்புறம் எனலாம்.

இற்செறிப்பு

தலைவன் தலைவியரிடையே ஏற்பட்டுள்ள களவுறவை ஊரார் அறிந்து பழிச்சொல் கூற முற்படுவர். இப்பழிச்சொல் 'அலர்' எனப்படும். ஊரெங்கும் பழிச்சொல் ஏற்பட்டிடவே தலைவி வீட்டார் அவளை வீட்டை விட்டு எங்கும் வெளிச் செல்லாதவாறு வீட்டுக்காவலில் வைப்பர். இஃது 'இற்செறிப்பு' எனப்படும்.

தலைவியின் தோற்ற மாறுபாட்டைக் கண்டும், ஊரவர் குறிப்பாய்ப் பேசிக்கொள்வதைக் கேட்டும், விளையாடல் முதலியவற்றிற்குத் தன் இல்லத்தைவிட்டுத் தலைவி வெளியே செல்ல இயலாதவாறு செவிலி அவளை இல்லத்திற்குள்ளேயே தங்கச்செய்வாள்.

ஒருவழித்தணத்தல்

அலர் அடங்குமாறு தலைவன் தலைவியைக் காண வாராது, தன் ஊரிலேயே சில காலம் தங்கி இருப்பான். இதனை 'ஒருவழித்தணத்தல்' என்பர்.

வரைவு கடாயது

தலைவன் சிறைப்புறத்தானாயிருக்க, ஊரார் அலர் கூறுவதையோ, தலைவிக்கு இற்செறிப்பு ஏற்பட்டிருப்பதையோ, அயலவர் மணம் பேசி வருகின்றனர் என்பதை அறிவித்தோ, இனியும் களவொழுக்கம் நீட இடந்தரலாகாது என்றும், உடனே அவன் வரைவு மேற்கொள்ள வேண்டும் என்றும் தலைவியும் தோழியும் வற்புறுத்திக் கூறுவர். தலைவன் சிறைப்புறமிருக்க, தலைவியும் தோழியும் அவன் கேட்குமாறு தம்முள் பேசி, அவனை உடனடியாக வரைந்துகொள்ளவும் தூண்டுவர்.

வெறியாட்டு

தலைவனோடு களவொழுக்கம் மேற்கொண்டுள்ள தலைவி, அவன் பிரிவைப் பொறுக்க இயலாது உடல் மெலிவாள். தன் மகளின் உடல், நாள்தோறும் மெலிவதற்கான காரணத்தை அறியாது அவள் தாய் கலங்குவாள். உடல் மெலிவு முருகனால் ஏற்பட்டது என நம்பி, செவிலி முருக பூசை செய்ய முனைவாள். முருக பூசை செய்வதற்குரிய பூசாரி, வேலன் எனப்படுவான். அவன் முருகனைக் கூவி அழைத்தும், வெறி யாட்டுக் கூத்தாடியும், கழற்சிக்காயிட்டும் தலைவியின் நோய்க்குக் காரணம் முருகனே என்பான்.

தெய்வம் மக்கள்மீது ஏறி ஆடுவதை 'வெறியாட்டு' என்பர். வெறியாடுபவன் தன் கையில் வேலைத் தாங்கி ஆடுவான். ஆதலின், இவன் வேலன் என்று வழங்கப்பட்டான்.

வெறியாடும் இடத்தில் பல்வகை மலர்களையும் பரப்பி, அழகுறச் செய்து முருகனை வழிபட்டு வேலன் வெறியாட்டயர்வான். அவ் விடத்தை 'வெறியாடு களம்' என்பர். அங்கு வேலன், ஆட்டுக்குட்டியை வெட்டிப் பலி கொடுத்துப் பூசை செய்வான்.

கட்டுவிச்சியை அழைத்து மகளின் நோய்க்குக் காரணம் யாது என வினவுவதும் உண்டு. முறத்தில் நெற்களைப் பரப்பி, எண்ணிக் குறி சொல்வது கட்டுவிச்சியின் வழக்கம்.

அறத்தொடு நிற்றல்

வெறியாட்டு நடத்தச் செவிலி முற்படும்போது தலைவி தோழியிடம், தன் காதலைத் தக்கவாறு செவிலியிடம் கூறி வெறியாட்டினை நிறுத்துமாறு வேண்டுவாள். இஃது 'அறத்தொடு நிற்றல்' எனப்படும்.

செவிலித்தாய் தோழியிடம் 'தலைவிக்கு இவ்வேறுபாடு எதனால் ஏற்பட்டது?' என்று கேட்பாள். தோழி மிக்க கவனத்தோடும் விழிப்போடும், எவர்க்கும் கெடுதியும் துன்பமும் நேராதபடி செவிலியிடம் உரைப்பாள். கற்பு அழியாதவாறு, தலைவி தலைவனொடு ஒழுகிவந்த களவொழுக்கத்தைப்பற்றிச் செவிலியிடம் வெளிப் படுத்துவாள். இது, 'தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றல்' எனப்படும். தலைவி தோழியிடமும், தோழி, தன் தாயாகிய செவிலியிடமும் அறத்தொடு நிற்பர். செவிலி, தன் தோழியும், தலைவியைப் பெற்றெடுத்தவளுமாய நற்றாய்க்கு அறத்தொடு நிற்பாள். நற்றாய் தலைவியின் தமையன்மார்க்கும் தந்தைக்கும் அறத்தொடு நிற்பாள். தலைவியின் ஆழ்ந்த காதலை அறிந்த அவள் பெற்றோர் திருமணத் திற்கு உடன்படுவர்.

வரைவிடைப்பிரிவு

அறத்தொடு நின்ற நிலையில், பெற்றோர் வரைவுக்கு உடன்படு வராயின், மகட்கொடையாகவும் மண நிகழ்வுக்காகவும் தலைவியைப் பெற்றோர்க்குத் தலைவன் பொருள் தரவேண்டும். இவ்வாறு அளிக்கப்படும் பொருள், மகட்கொடை, முலை விலை என்னும் பெயர்களால் வழங்கப்படும். இப்பொருளைத் தேடி வரத் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்வான். இது 'வரைவிடைப்பிரிவு' எனப்படும். வரைவிடைப்பிரிவால், தலைவி ஆற்றாது வருந்தத் தோழி அவளைத் தேற்றுவிப்பாள்.

தலைவன் வரைபொருட்டாகப் பிரிந்து சென்று, பொருள் திரட்டி மீண்டதும் தன் சுற்றத்தவர்களை முற்கொண்டு, தலைவியில்லம் போந்து, பெண் தருமாறு வேண்டுவான்; சுற்றத்தவர் அல்லாமல் அறநிலை சான்ற வேறு சான்றோர்களை முற்கொண்டும் பெண் தருமாறு வேண்டுதலுமுண்டு; பின்னர், முறைப்படி திருமணம் நிறைவேறும். (வதுவை அயர்தல்)

உடன்போக்கு

பெற்றோர் சிலர் தம் மகளின் களவொழுக்கத்தை அறியாத நிலையிலும் அறிந்த நிலையிலும் தலைவியை வீட்டை விட்டு வெளிப் போகாதவாறு வீட்டினுள் வைத்துக் காத்து வருவர். அந்நிலையில் தலைவியின் வருத்த மிகுதியைக் காணும் தோழி, தலைவி, தலைவன் ஆகிய இருவர் ஒப்புதலையும் பெற்று, எவருமறியாதவாறு தலைவியைத் தலைவனுடன் அவன் ஊர் செல்ல அனுப்பி வைப்பாள். அவ்வாறு தலைவனுடன் தலைவி செல்லுதல் 'உடன்போக்கு' என்றும், 'கொண்டுதலைக் கழிதல்' என்றும் வழங்கப்பெறும். ஏதமிக்க காட்டு வழியில் தன்னுடன் வரும் தலைவிக்குத் துன்பம் எதுவும் தோன்றா வண்ணம் தலைவன் அவளிடம் இன்மொழி பேசியும் நற்செயல்களைச் செய்தும் அழைத்துச் செல்வான்.

உடன்போகும் காதலர்களை வழியிடையே காண்பவர் அவர்கட்கு ஆதரவாய் இருப்பர். 'பொழுது சென்று இருள் வந்தது; வழி துன்பமானது. இந்நேரத்தில் தனியே செல்லுதல் தகாது. இரவு எம்மூரில் தங்கிச் செல்லுங்கள்' என்று அன்போடு வேண்டுவர்.

தலைவி தம் வீட்டை விட்டு வெளியே சென்றதை அறிந்த நற்றாயும் செவிலியும் மிகவும் வருந்துவர். 'காதலனிடம் மகள் கொண்ட அன்பு இவ்வளவினது என யாம் அறிந்திருந்தால் எம் வீட்டிலேயே திருமணத்தை முடித்து வைத்திருப்போமே' என்பர். உடன்போக்குச் சென்ற மகளைச் செவிலித்தாய் தேடியும் செல்வாள். அவளை எதிர்ப் படும் ஆன்றோர், அவள் நிலை கண்டு இரங்கி, "உன் மகள் அறவழி

யினையே மேற்கொண்டுள்ளாள். அவளைத் தடுக்க வேண்டா; அவளை அவள்வழிச் செல்ல விடுங்கள்'' என ஆறுதல் கூறி அனுப்பி வைப்பர்.

தலைவன் தலைவியைத் தன்னூர் அழைத்துச் சென்றதும் அங்கு அவளை மணந்துகொள்வான். களவொழுக்கத்தைத் தலைவியைப் பெற்றோர் ஏற்றனரென்றால் திருமணம் அவர்கள் வீட்டிலும், அவ்வாறன்றித் தலைவனுடன் தலைவி உடன்போக்கில் சென்றால் திருமணம் தலைவன் இல்லத்திலும் நடைபெறும். திருமணம் எங்கு நடைபெற்றாலும் திருமணத்திற்குப் பின்பு இருவீட்டாரும் ஒன்று பட்டிருப்பர்.

மங்கல மனையறம்

திருமணத்தின் பயனாய்த் தலைவன் தலைவியர் இல்வாழ்க்கை யினை மேற்கொள்ளத் தலைப்படுவர். இல்வாழ்க்கை மேற்கொள்ளும் தலைவனுக்குத் தன்னைச் சார்ந்த மனைவி, மக்கள், பெற்றோர், உற்றார், ஏனை உறவின் முறையினர், ஆன்றோர், விருந்தினர் ஆகியோரை உண்டி, உடை, உறையுள் முதலியவற்றால் பாதுகாக்கும் கடமையும், இவையொழிய இன்னும் ஏனையவாயமைந்துள்ள இல்வாழ்க்கைக் கடமைகளும் உண்டாகின்றன. அவ்வெல்லாக் கடமைகளையும் முறைப்படி அவ்வக் காலங்களில் செய்வதற்குப் பொருள் இன்றியமையாததாகும்.

பொருள்வயிற் பிரிவு

தலைவன் திருமணம் செய்துகொள்ளுதற்கு முன் வரைதற் பொருட்டுப் பொருள் தேடியது, திருமணக் கடமைகளுக்காக மட்டுமே. திருமணத்திற்குப் பின்னர்த் தனது இல்வாழ்க்கைக்குரிய கடமைகளை நிறைவேற்றும்பொருட்டும் பொருளைத் தேட வேண்டியவனாகிறான்.

முன்னோர் தேடிய பொருள் தன்னிடம் மிகுதியாய் இருக்குமாயினும் தலைவன் தன் முயற்சியால் பெற்ற பொருள் கொண்டு இல்வாழ்க்கை யினை நடத்துவதையே பெருமையாகவும் சிறப்பாகவும் கருதுவான்.

பொருள் தேடி வரச் செல்லக் கருதும் தலைவன், தலைவி தன் பிரிவை ஆற்றியிராள் என்பதுணர்ந்து சில காலம் பயணத்தைத் தவிர்ப்பான். பின்னர்த் தோழியிடம் கூறித் தலைவியிடம் தன் பிரிவை அறிவிக்கச் சொல்வான். முதலில் தோழியே செலவினை மறுப்பாள்; நீண்ட பிரிவாய் இருக்குமென்பதால் தலைவியும் ஒருப்படாள்; ஆயினும், அறங்கருதித் தலைவி இசைவாள். நாடுகளை நீங்கியும் காடுகளைக் கடந்தும் தொலைவில் சென்று, பொருளீட்ட வேண்டும். இச்செயலைச் செய்து முடிக்க வேனிற்காலமே ஏற்றதாகும். வேனிற்பருவத்தே பிரிந்து செல்லும் தலைவன் கார்காலத் தொடக்கத்தில் திரும்பி வருவதாய்க் கூறிச் செல்வான்.

தலைவன் சென்றதும் தலைவி துயர் தாளாது மிகவும் வருந்தி யிருப்பாள்; தோழி அவளை ஆற்றுவிப்பாள். தான் புறப்படும்போது சொல்லிச் சென்றவண்ணம் கார்காலத் தொடக்கத்தே தலைவன் வாராதிருப்பின் தலைவியின் துயரம் மிகுதியாகும். கார்காலத்திற்குரிய அறிகுறிகள் தென்பட்டாலும் அவை கார்காலத்திற்குரியவை அன்று என்று கூறித் தலைவியைத் தோழி தேற்றுவிப்பாள்.

பொருள் தேடப் பிரிந்த தலைவனும், தலைவியைப் பிரிந்திருக்க இயலாதவனாய்த் தவிப்பான்; இடைவழியிலேயே திரும்பிவிடலாமா என்றுகூட எண்ணுவான்; ஆயினும், கடமையில் கருத்தூன்றி, பொருள் தேடி முடித்த பின்னரே திரும்புவான். திரும்புங்கால், விரைந்து சென்று தலைவியை அடைய வேண்டும் என்னும் வேட்கையில் தேரினை விரைவாய்ச் செலுத்துமாறு பாகனிடம் கூறுவான். அவ்வாறே பாகனும் செலுத்தத் தலைவன் தன் இல்லமடைந்து தலைவியைக் கூடி மகிழ்ந்து இனிதே நல்வாழ்க்கை நடத்துவான். இனிய மக்கட்பேறும் வாய்க்க அவர்கள் இல்லறம் மேலும் சிறப்புறும். காதலர் அன்புடையராய், விருந்தோம்பி, நடுவுநிலைமை மேற்கொண்டு, ஒப்புரவறிந்து, ஈகை மேற்கொண்டு புகழ் வாழ்வு வாழ்வர்.

தலைவன் பொருள் தேடுவதற்காக மட்டுமன்றி, உயர்கல்வி கற்பதற்காகவும், அரசனுக்காகப் போர்மேற்செல்வதற்காகவும் பிரிந்து செல்வதுண்டு.

களவுக்காலத்தில் ஒருவழித்தணத்தல், வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் எனத் தலைவன் பிரியும் நிலைகள் உண்டு.

கற்புக்காலத்தில் ஓதல், காவல், தூது, பொருள் தேடல், வேந்தற்கு உற்றுழி உதவல் முதலியன கருதித் தலைவியை விடுத்துப் பிரிதல் உண்டு.

தலைவன் பிரிந்திருக்கும் காலங்களில் தோழி தலைவியைத் தேற்றுவித்துத் துணை நிற்பாள்.

பரத்தையிற்பிரிவு

இல்லற வாழ்வில் தலைவனோடு தொடர்பு கொள்வதைத் தன் வாழ்க்கைநெறியாய்க் கொண்டிருப்பவள் மனைவி. அவ்வாறு அல்லாது ஆடவர் பலரோடு தொடர்பு கொள்ள விரும்பும் மகளிர் பரத்தையர் எனப்படுவர். இவர்கள் திருமணம் என்னும் வரையறைக்கு உட்பட்டவர் அல்லர். தம்மை நாடி வருபவர்க்கு இன்பமளிப்பதே இவர் தொழில். அதனால் இவரை, 'வரைவின் மகளிர்', 'பொருள்விலைப் பெண்டிர்' என்றும் கூறுவர்.

தலைவன் தலைவியைப் பிரிந்து சென்று, பரத்தையர் இல்லத்தில் தங்கி இன்பம் பெறுவதுண்டு.

தலைவன் தன்னைப் பிரிந்து பரத்தையிடம் சென்றதால் தலைவி வெகுண்டு ஊடியிருப்பாள். தலைவனது இல்வாழ்க்கையில் நிகழும் ஊடல் முதலியவற்றைப் போக்கும் வழிகளாய் இருப்பவர் 'வாயில்கள்' எனப்படுவர்.

பரத்தையிற்பிரிவுக்குப்பின் தன் இல்லத்திற்கு வரும் தலைவன், ஊடிய தலைவியை நேர்விக்கத் தோழியை வாயிலாக வேண்டுவான். வாயிலாக வந்தவர்க்கு முகங்கொடுக்க மறுத்தல் 'வாயில்' மறுத்தலாம். தோழியே தலைவனைக் கண்டித்து வாயில் மறுப்பாள். பாணன், விறலியர் முதலியோரையும் தலைவன் வாயிலாக அனுப்புவதுண்டு. தோழியும் தலைவியும் அவர்களைக் கடிந்து திருப்புவர்.

தலைவன் பல முறை பணிந்து வேண்டியதால், தோழி மனமிரங்கித் தலைவியிடம் உரையாடி, தலைவனை ஏற்று ஊடல் தணியுமாறு செய்து வாயில் நேர்விப்பாள்.

வாயிலை ஏற்று, தலைவனுக்கு இடங்கொடுத்து அவனைத் தலைவி சேர்த்துக்கொள்வாள். ஊடலும் கூடலுமாய் அவர்கள் வாழ்க்கை இன்பமாய் அமையும்.

வாழ்க்கை, காதல் ஒழுக்கத்தால் அமைவது. தமிழ் மக்களின் காதல் வாழ்க்கை களவு, கற்பு என இரு வகைப்படும். தலைவன், தலைவியைக் கண்டு காதல் கொண்டது முதல் அவளைத் திருமணம் செய்து கொள்ளும்வரை உள்ள பகுதி களவு எனப்படும். இது களவியல், களவு நெறி, களவொழுக்கம் என்றும் வழங்கப்பெறும்.

திருமணம் முடிந்த பின் தொடங்கும் இல்லற வாழ்க்கை, கற்பொழுக்கம் என்று வழங்கப்படும்.

நாகரிகத்தில் மேம்பட்டிருந்த பண்டைக் காலத்தில் தமிழர் மேற்கொண்டிருந்த இனிய இல்லற நெறிகளே களவும் கற்புமாகும்.

சிறைப்புறம்

பக். 1 முதல் 376 வரை

சிறைப்புறம்

ஒருவரை ஒருவர் கண்ணால் பார்க்க வாய்ப்பு இல்லாமல் ஒருவர் கூறியதை மற்றவர் காதால் கேட்கலாம் அணிமைக்கண் உள்ள பகுதி.

தோழி தலைவியரிடையே நிகழும் உரையாடல்களைத் தலைவன் மறைந்திருந்து கேட்பதற்கு உதவியாய் மனையோரமாய் உள்ள சுற்றுச்சுவர் அல்லது மனைவேலி போன்று ஓர் இடம்.

தலைவி கூற்று

சிலப்பதிகாரம், குன்றக்குரவை 2 **இளங்கோவடிகள்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் சிறைப்புறமாகத் தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

" 'அஞ்சாமல் இரு! உன்னைப் பிரியேன்' என்று பொய் கூறி, நம் பெண்மை நலத்தையெல்லாம் நுகர்ந்ததற்குப் பிறகு நம் தலைவன் நம்மை மறந்து பிரிந்தான். நமக்கு அருள் செய்யாத, மேகம் சூழ்ந்த சோலைகள் நிறைந்த அவனது இம்மலையருவியில் நீராடுவோம், வாராய் தோழீ!" எனத் தோழியுடன் நீராடச் சென்ற தலைவி, தலைவன் கேட்குமாறு கூறியது.

ஆங்குஒன்று காணாய் அணிஇழாய்! ஈங்குஇதுகாண்
அஞ்சனப் பூழி அரிதாரத்து இன்இடியல்
சிந்துரச் சுண்ணம் செறியத்தூய்த் தேம்கமழ்ந்து
இந்திர வில்லின் எழில்கொண்டு இழும்என்று
வந்துஈங்கு இழியும் மலைஅருவி ஆடுதுமே;

தெளிவுரை

"அஞ்சனத்தின் துகளும், கத்தூரியின் பொடியும், சிந்துரத்தின் பொடியும் கலந்து பரவிட, தேன் மணங்கமழ, வானவில்லின் எழில் பெற்று 'இழும்' எனும் ஒலியுடன் வீழ்கின்ற இம்மலை அருவியில், 'தோழீ, நீராடி மகிழ்வோம், வாராய்.'

கருத்து

தலைவன் மலையருவியில் நீராடுவோம் வாராய்.

குறிப்பு

மலைபடுபொருள்களாகிய அஞ்சனம், அரிதாரம், சிந்துரம் முதலிய பல நிறங்கொண்ட பொருள்களைப் பொடியாக்கித் தூவிக்கொண்டு வருவதால் அருவி வானவில்லைப் போலக் காட்சி தந்தது.

சொற்பொருள்

1. அணிஇழாய்! - அணிகலன்களை அணிந்தவளே!
2. அஞ்சனம் - மை; பூழி - துகள்; அரிதாரம் - கத்தூரி; இடியல் - பொடி.
3. சிந்துரம் - செந்நிறப்பொடி (அஞ்சனம், அரிதாரம், சிந்துரம் ஆகியவை மூன்றும் மணப்பொருள்கள்); சுண்ணம் - பொடி; தேம் - தேன்.
4. இழும் - ஒலிக்குறிப்பு.
5. இழியும் - இறங்கும்.

தலைவி கூற்று

சிலப்பதிகாரம், குன்றக்குரவை 3 **இளங்கோவடிகள்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் சிறைப்புறமாகத் தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

தோழியுடன் நீராடச் சென்ற தலைவி, தலைவன் கேட்குமாறு கூறியது.

ஆடுதுமே தோழி ஆடுதுமே தோழி
அஞ்சல்ஓம்பு என்னு நலனுண்டு நல்காதான்
மஞ்சுசூழ் சோலை மலையருவி ஆடுதுமே

தெளிவுரை

" 'அஞ்சாமல் இரு! உன்னைப் பிரியேன்' என்று பொய் கூறி, நம் பெண்மை நலத்தையெல்லாம் நுகர்ந்ததற்குப் பிறகு நம் தலைவன் நம்மை மறந்து பிரிந்தான். நமக்கு அருள் செய்யாத, மேகம் சூழ்ந்த சோலைகள் நிறைந்த அவனது இம்மலை யருவியில் நீராடுவோம், வாராய் தோழீ!"

கருத்து

தலைவன் மலையருவியில் நீராடுவோம் வா!

விளக்கம்

பகற்குறியிடத்தும் இரவுக்குறியிடத்துமாகத் தலைவியை இடைவிடாது கூடி வந்த தலைவன் பிரிந்திருந்தான். அதனால் வருத்தமுற்ற தலைவி, தலைவன் அருள் செய்யாவிடினும் அவன் மலையிலிருந்து விழும் அருவியில் நீராடியாவது வருத்தத்தைப் போக்கிக் கொள்ள நினைக்கிறாள்.

அவன் மலையருவியில் நீராடுதல் அவனையே தழுவியதாய் நினைக்கச் செய்கிறது.

சொற்பொருள்

1. ஆடுதுமே - நீராடுவோம்.
2. அஞ்சல் ஓம்பு - அஞ்சாமல் இரு; நலனுண்டு - (நம் பெண்மை) நலத்தையெல்லாம் நுகர்ந்து; நல்காதான் - அருள் செய்யாதவன்.
3. மஞ்சு - மேகம்; ஆடுதுமே - நீராடுவோம்.

தலைவி கூற்று

சிலப்பதிகாரம், குன்றக்குரவை 4 **இளங்கோவடிகள்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் சிறைப்புறமாகத் தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் மலையருவியில் தோழியுடன் நீராடச் சென்ற தலைவி, தலைவன் கேட்குமாறு கூறியது.

எற்றுஒன்றும் காணேம் புலத்தல், அவர்மலைக்
கல்தீண்டி வந்த புதுப்புனல்;
கல்தீண்டி வந்த புதுப்புனல் மற்றையார்
உற்றுஆடின் நோம்தோழி! நெஞ்சன்றே.

தெளிவுரை

"தோழியே! நமக்குக் கொடுமை செய்தவன், நம் காதலன். அவனது மலையின் கற்பாறைகளில் படிந்து வருவதுதான் இப் புதுப்புனல் நீர். இருந்தபோதிலும் இவ்வருவிநீர்மீது வெறுப்புக் கொள்வதற்கு யாதொரு காரணத்தையும் நம்மால் காண இயலவில்லையே! என்றாலும், கற்பாறைகளில் படிந்து வந்த இப்புதுப்புனல்நீரில் நாம் ஆடாமல் பிற மகளிர் ஆடும்போது அது பொறாமல் நம் உள்ளம் வருந்துகிறதே, அஃது ஏன் தோழீ? அவ்வருத்தத்திற்கு இடமின்றி நாம் முன்னே சென்று அந்நீரில் ஆடுவோம், வா!"

கருத்து

'இது நம் தலைவனது மலைநீர்; இதில் பிற மகளிர் ஆடுவதைக் காண நெஞ்சு பொறுக்கவில்லை.'

குறிப்பு

தலைவனுக்கு உரிய ஒன்றைத் தன்னைத் தவிரப் பிறர் பயன்படுத்து வதைத் தலைவியின் நெஞ்சால் பொறுத்துக்கொள்ள இயலவில்லை.

சொற்பொருள்

1. எற்று - யாது?; புலத்தல் - வெறுத்தல்; அவர் - தலைவன்.
2. கல் - கற்பாறை; தீண்டி - படிந்து.
3. மற்றையார் - பிற மகளிர்.
4. உற்றுஆடின் - படிந்து ஆடினால்; நோதல் - வருந்துதல்.

தலைவி கூற்று

சிலப்பதிகாரம், குன்றக்குரவை 5 **இளங்கோவடிகள்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் சிறைப்புறமாகத் தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் மலையருவியில் தோழியுடன் நீராடச் சென்ற தலைவி, தலைவன் கேட்குமாறு கூறியது.

என்ஒன்றும் காணேம் புலத்தல், அவர்மலைப்
பொன்ஆடி வந்த புதுப்புனல்;
பொன்ஆடி வந்த புதுப்புனல், மற்றையார்
முன்ஆடின் நோம்தோழி! நெஞ்சன்றே.

தெளிவுரை

தோழியே! நமக்குக் கொடுமை செய்தவன், நம் காதலன். அவன் மலையிலிருந்து பொன்துகளோடு கலந்து வருவதுதான் இப்புதுப்புனல்நீர்! ஆயினும், இவ்வருவிநீர்மீது வெறுப்புக் கொள்வதற்கு யாதொரு காரணத்தையும் நம்மால் காண இயலவில்லையே! என்றாலும் பொன்துகளோடு கலந்து வந்த இப்புதுப்புனல்நீரில் நாம் ஆடாமல் ஏனைய மகளிர் ஆடும்

போது அது பொறாமல் நம் உள்ளம் வருந்துகிறதே, அஃது ஏன் தோழீ? அவ்வருத்தத்திற்கு இடமின்றி நாம் முன்னே சென்று அந்நீரில் ஆடுவோம், வா!

கருத்து

'இது நம் தலைவனது மலைநீர்; இதில் பிற மகளிர் ஆடுவதைக் காண நெஞ்சு பொறுக்கவில்லை.'

சொற்பொருள்

1. என் ஒன்றும் - யாதொரு காரணமும்; புலத்தல் - வெறுத்தல்.
2. பொன் ஆடி - பொன்துகளில் தோய்ந்து.
3. மற்றையார் - பிற மகளிர்.
4. ஆடின் - நீராடினால்; நோம் - வருந்துதல்.

தலைவி கூற்று

சிலப்பதிகாரம், குன்றக்குரவை 6 **இளங்கோவடிகள்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் சிறைப்புறமாகத் தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் மலையருவியில் தோழியுடன் நீராடச் சென்ற தலைவி, தலைவன் கேட்குமாறு கூறியது.

யாதுஒன்றும் காணேம் புலத்தல், அவர்மலைப்
போதுஆடி வந்த புதுப்புனல்;
போதுஆடி வந்த புதுப்புனல், மற்றையார்
மீதுஆடின் நோம்தோழி! நெஞ்சன்றே.

தெளிவுரை

தோழியே! நமக்குக் கொடுமை செய்தவன், நம் காதலன். அவன் மலையிலிருந்து மலர்களைச் சுமந்து வருவதுதான் இப் புதுப்புனல்நீர்! ஆயினும், இவ்வருவிநீர்மீது வெறுப்புக்கொள் வதற்கு யாதொரு காரணத்தையும் நம்மால் காண இயல வில்லையே! என்றாலும் மலர்களைச் சுமந்து வரும் இப்புதுப் புனல்நீரில் நாம் ஆடாமல், மற்றைய மகளிர் ஆடும்போது அது பொறாமல் நம் உள்ளம் வருந்துகிறதே, அஃது ஏன் தோழீ? அவ்வருத்தத்திற்கு இடமின்றி நாம் முன்னே சென்று அந்நீரில் ஆடுவோம், வா!

கருத்து

'இது நம் தலைவனது மலைநீர்; இதில் பிற மகளிர் ஆடுவதைக் காண நெஞ்சு பொறுக்கவில்லை.'

சொற்பொருள்

1. யாது ஒன்றும் - எந்த ஒரு காரணமும்; புலத்தல் - வெறுப்புக் கொள்ளுதல்.
2. போது - மலர்; ஆடி - சுமந்து, அசைந்து.
3. மற்றையார் - மற்றைய மகளிர்.
4. மீது ஆடின் - அந்நீரில் ஆடினால்.

தோழி கூற்று

அகநானூறு 278 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறிக்கண், தலைமகன் சிறைப்புறமாகத் தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியை மணந்துகொள்வதில் கருத்தின்றி இரவில் வந்து போயினான். ஒருநாள் தலைவன் இரவுக்குறியில் வேலிக்கு வெளியே நிற்பதறிந்த தோழி, அவன் வருகையை அறியாதவள்போல, அவன் கேட்கும்படியாகத் தலைவியிடம் கூறியது.

குணகடல் முகந்த கொள்ளை வானம்
பணைகெழு வேந்தர் பல்படைத் தானைத்
தோல்நிரைத் தனைய ஆகி வலன்ஏர்பு,
கோல்நிமிர் கொடியின் வசிபட மின்னி,
உரும்உரறு அதிர்குரல் தலைஇ, பானாள்,
பெருமலை மீமிசை முற்றின ஆயின்,
வாள்இலங்கு அருவி தாஅய், நாளை,
இருவெதிர் அம்கழை ஒசியத் தீண்டி,
வருவது மாதோ, வண்பரி உந்தி,
நனிபெரும் பரப்பின் நம்ஊர் முன்துறை,
பனிபொரு மழைக்கண் சிவப்பப் பானாள்
முனிபடர் அகல மூழ்குவம் கொல்லோ –
மணிமருள் மேனி ஆய்நலம் தொலையத்
தணிவுஅருந் துயரம் செய்தோன்
அணிகிளர் நெடுவரை ஆடிய நீரே.

தெளிவுரை

“*தலைவியே! கீழ்த்திசைக் கடலில் நீரை முகந்த மிகுதியான மேகங்கள், அரசர்களின் படையில் முரசு முழங்க நடக்கும் யானைகளின் அணிவகுப்புப் போலத் தோன்றின. அவை*

வானில் வலமாய் எழுந்து, வானப்பரப்பே பிளந்து போகுமாறு ஒரு கொடியைப் போல மின்னி, இடிஇடித்து முழங்கி, நடுநாள் இரவில் பெரிய மலையின் உச்சியில் சூழ்ந்தன.

"ஆதலால், (அங்குப் பெய்யும் பெருமழையால்) ஒளி பொருந்தத் தோன்றிய அருவி, பெரிய மூங்கிலின் அழகிய தண்டு முரியும்படி தாக்கி, வளவிய குதிரைமரங்களைச் சாய்த்து, மிக அகன்ற இடத்தினைக் கொண்ட நம் ஊரின் நீர்த்துறைக்கு நாளைக்கு வந்து சேரும்.

"அவ்வாறு வந்து சேர்ந்ததும், மணியைப் போன்ற உன் மேனியின் அழகு கெடுமாறு தணித்தற்கரிய துன்பத்தைச் செய்த நம் தலைவனுடைய நீண்ட மலையிலே படிந்துவரும் வெள்ள நீரிலே, குளிர்ச்சி பொருந்திய நம் கண்கள் சிவக்குமாறும், நம் துன்பம் நீங்குமாறும் மூழ்கித் திளைப்போமா?" என்று தோழி தலைவியிடம் கூறுகிறாள்.

கருத்து

'கடலில் நீர் முகந்த முகில் கூட்டம் மலைமேல் சூழ்ந்துள்ளது. எனவே, நாளை நம்மூர்த் துறைக்கு அருவிநீர் வந்து சேரும். நமக்கு ஆற்றாமை தந்தோனுடைய உயர்ந்த மலையிலிருந்து வருகின்ற நீரில் நம் துன்பம் அகல முழுகுவோமா?' என்றாள், தோழி.

குறிப்பு

1. வானத்தில் மேகம் இருண்டு இடித்து மின்னலிட்டு விளங்கும் நள்ளிருள் வேளை; தலைவனின் வருகையை இரவுக்குறியிடத்து எதிர்பார்த்திருக் கிறாள், தலைவி. அவன் கேட்குமாறு தோழி தலைவியிடம் பேசுகிறாள்.
2. தலைவனைத் தழுவாமையால் ஏற்பட்ட துயரத்தை அவன் மலையிலிருந்து வரும் நீரில் மூழ்கி நீக்குவோம் என்பது, நுட்பமான காதலுணர்வைப் புலப்படுத்துகிறது.

சொற்பொருள்

1. குணகடல் - கீழ்த்திசையில் உள்ள கடல்; கொள்ளை - மிகுதி; வானம் - மேகம்.
2. பணைகெழு - முரசம் பொருந்திய; பல்படை - பல வகையான படைக்கலங்கள்.

3. தோல் - யானை; வலன்ஏர்பு - வலமாய் எழுந்து.
4. வசிபட - பிளக்கும்படி.
5. உரும் - இடி; உரறு - முழங்கும்; தலைஇ - பொருந்தி; பானாள் - நடு இரவு.
6. முற்றின - சூழ்ந்தன.
7. வாள் இலங்கு - ஒளி விளங்கும்; தாஅய் - பரந்து.
8. வெதிர் - மூங்கில்; ஒசிய - முரியும்படி.
9. வண்பரி - அழகிய குதிரைமரம்.
11. பனிபொரு - பனியை ஒக்கும் குளிர்ந்த.
12. முனிபடர் - வெறுக்கும் துன்பம்.
13. மணிமருள் - நீலமணியை ஒக்கும்; ஆய்நலம் - அழகிய நலம்.
15. அணிகிளர் - அழகு விளங்குகின்ற; நெடுவரை - நீண்ட மலை.

தலைவி கூற்று

குறுந்தொகை 327 **அம்மூவனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

கிழவன் கேட்கும் அண்மையனாக, அவன் மலையினின்றும் வரும் யாற்றோடு உரைப்பாளாய்க் கிழத்தி உரைத்தது. (யாறு - ஆறு).

கூற்று விளக்கம்

தலைவன் தன்னை மணந்துகொள்ளாது களவு வாழ்க்கையையே நீட்டித்துக் கொண்டிருப்பதை எண்ணி வருந்திய தலைவி, ஒரு நாள் அவன் வருகைக்காகக் காத்து நிற்கிறாள். அவன் வருவதைக் கண்டு, அவன் மலையிலிருந்து வரும் ஆற்றை நோக்கி அவள் கூறியது.

'நல்கின் வாழும் நல்கூர்ந் தோர்வயின்
நயன்இலர் ஆகுதல் நன்று'என உணர்ந்த
குன்ற நாடன் தன்னினும், நன்றும்
நின்நிலை கொடிதால் தீம்கலுழ் உந்தி!
நம்மனை மடமகள், 'இன்ன மென்மைச்
சாயலள்; அளியள்' என்னாய்,
வாழைதந் தனையால், சிலம்புபுல் லெனவே.

தெளிவுரை

"இனிய வெள்ளமாய் வரும் ஆறே! நமக்கு அருகில் உள்ள வீட்டில் வாழும் மகள் போன்று திகழும் இந்த வாழை இளமை யானது; மென்மையான சாயலைக் கொண்டது; மிகவும் இரங்கத்தக்கது என்று நீ கருதாமல், மலையின் அழகு அழிந்து விடுமாறு பெயர்த்துத் தள்ளி வருகின்றனையே! அதனால், தான் இரக்கங்காட்டினால் மட்டுமே வாழக்கூடிய எளியவரிடத்தில் அன்பில்லாமல் நடந்துகொள்ளுதலே நல்ல செயல் என்றுணர்ந் துள்ள குன்ற நாடனின் கொடுமையினும் உன் செயல் மிகவும் கொடியதாயுள்ளதே!

கருத்து

தலைவன் நாட்டு ஆறே! நீ அவனினும் கொடியை.

விளக்கம்

தலைவன் எதிர்பார்ப்போரிடம் அன்பில்லாதவனாய் மட்டும் இருக்கின்றான். ஆனால் ஆறே! நீ உன்னை எதிர்பார்த்திருக்கும் வாழையிடம் அன்பில்லாததோடு மட்டுமன்றி அதனை அடி யோடு பெயர்த்தும் செல்கின்றாய்! ஆதலின், நீ தலைவனினும் கொடியை.

குறிப்பு

ஆறு, தன் பிறப்புக்கு இடமாகி, தனக்கு நன்மை செய்யும் மலைப்பக்கத்தின் வளம் அழியும்படி வாழைமரங்களைப் பறித்து இழுத்துக்கொண்டு செல்கிறது. தலைவனும் தனக்கு இன்பம் தந்து, தன்னையே நம்பியிருக்கும் தலைவியின் அழகினை அழியச் செய்கிறான்.

சொற்பொருள்

1. நல்கின் வாழும் - தான் இரக்கம் காட்டினால்தான் வாழும் நிலையிலுள்ள; நல்கூர்ந்தோர் வயின் - வறுமையுற்றவர்களிடம்.
2. நயன்இலர் ஆகுதல் - அன்பில்லாமல் நடந்துகொள்வதே; நன்று - நல்லது.

3. தன்னினும் - (அவனை)விட; நன்றும் - மிகுதியும்.
4. கொடிதால் - மிகவும் கொடுமையானது; தீம் கலுழ் உந்தி - இனிய வெள்ளமாய் வரும் ஆறே!
5. மடமகள் - இளைய மகள்.
6. அளியள் - இரங்கத்தக்கவள்; என்னாய் - என்று கருதாய்.
7. தந்தனை - பறித்து இழுத்துக்கொண்டு வந்துள்ளாய்; சிலம்பு - மலைப்பக்கம்; புல்லென - பொலிவழியும்படி.

தோழி கூற்று

நற்றிணை 72 **இளம்போதியார்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி, சிறைப்புறமாகத் தலைமகளுக்குரைப்பாளாய்ச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் சிறைப்புறமாக, அவன் கேட்குமாறு தோழி தலைவியிடம் கூறியது.

'பேணுப பேணார் பெரியோர்' என்பது
நாணுத்தக் கன்று,அது காணுங் காலை,
உயிர்ஓ ரன்ன செயிர்தீர் நட்பின்
நினக்குயான் மறைத்தல் யாவது? மிகப்பெரிது
அழிதக் கன்றால் தானே; கொண்கன்
'யான்யாய் அஞ்சுவல் எனினும்; தான்எற்
பிரிதல் சூழான்' மன்னே; இனியே
கானல் ஆயம் அறியினும், ஆனாது,
அலர்வது அன்றுகொல் என்னும்; அதனால்,
'புலர்வது கொல்அவன் நட்பு'எனா
அஞ்சுவல் தோழி!என் நெஞ்சத் தானே!

தெளிவுரை

தலைவியே! பேணப்பட வேண்டுவனவற்றைப் பேணுவது பெரியோர்க்குப் பெருமை. அவ்வாறன்றி, அவர் அவற்றைப் பேணார் என்று சொல்வதை ஆராயுமிடத்து அஃது எனக்கே நாணத்தைத் தருவதாய் உள்ளது. இருவரும் ஓர் உயிராய் அமைந்துள்ளோம் என்று கூறத்தக்க குற்றமற்ற செறிந்த நட்பினளாய உன்னிடம் நான் ஒன்றைச் சொல்லாமல் மறைப்பது எத்துணைக் குற்றமாகும்! முன்பு, நான், 'அன்னை அறிவாள் என்று அஞ்சுகிறேன்; நீ அகன்று செல்' என்று கூறினாலும் நம் தலைவன் நம்மை விட்டுப் பிரியக் கருத மாட்டான். அந்நிலை இப்போது இல்லை. இப்பொழுதோ நம் ஆயம் அறியின் ஏதம் வருமோ என்று அஞ்சி அவன் அகன்று சென்றுவிடுகின்றான். ஆதலின், இனி அவன் நட்பு இல்லாமல் போய்விடுமோ என்று கருதி மிகவும் அஞ்சுகின்றேன்."

கருத்து

முன்பு, 'அன்னை அறியின் துன்பம் உண்டாம்; அகன்று செல்' என்று சொன்னபோதும் நீங்காதவன், இப்பொழுதோ, ஆயத்தார் அறிந்தால் துன்பம் வருமோ என்றஞ்சி அகன்றுவிடுகிறான். இந்நிலையில் இனி அவனது நட்பு இல்லாமல் போய்விடுமோ?

குறிப்பு

இதனைக் கேட்கும் தலைவன் திடுக்குற்று, இந்த அச்சம் நீங்கவும், சூளுரைத்த சொற்பேணவும், தலைவியைக் காணவும் உடனே முற்படுவான்.

சொற்பொருள்

1. பெரியோர் - பெருந்தகுதி வாய்ந்தவர் (தலைவனைக் குறித்தது).
2. காணும்காலை - ஆராயுமிடத்து.
3. செயிர்தீர் - குற்றமற்ற.
5. அழிதக்கன்று - அழிவு தருவது; கொண்கன் - தலைவன்.
6. யாய் - அன்னை; தான் - தலைவன்.
7. சூழான் - எண்ணியும் பாரான், கருத மாட்டான்.
8. ஆயம் - தோழியர்.

9. அலர்வது அன்று - அடங்காமல் வெளிப்படுமோ.

10. புலர்தல் - வாடுதல், இல்லையாதல்.

தோழி கூற்று

நற்றிணை 123 **காஞ்சிப்புலவனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தலைமகளுக்கு உரைப்பாளாய்ச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் சிறைப்புறமாய் இருக்க, அவன் கேட்கும்படியாகத் தோழி தலைவியிடம், 'முன்பு, மலர்களை அணிந்து, ஓடியும் ஆடியும் நீ விளையாடியனவெல்லாம் இப்போது இல்லாது போயினவே, ஏன்?' என வினவியது.

உரையாய் வாழி, தோழி! இருங்கழி
இரைஆர் குருகின் நிரைப்பறைத் தொழுதி
வாங்குமடல் குடம்பை, தூங்குஇருள் துவன்றும்
பெண்ணை ஓங்கிய வெண்மணல் படப்பை,
கானல் ஆயமொடு காலைக் குற்ற
கள்கமழ் அலர தண்நறுங் காவி
அம்பகை நெறித்தழை அணிபெறத் தைஇ,
வரிபுனை சிற்றில் பரிசிறந்து ஓடி,
புலவுத்திரை உதைத்த கொடுந்தாள் கண்டல்
சேர்ப்புஏர் ஈர்அளை அலவன் பார்க்கும்
சிறுவிளை யாடலும் அழுங்க
நினக்குப் பெருந்துயரம் ஆகிய நோயே.

தெளிவுரை

தலைவியே! வாழ்க! கரிய கழியிடத்தே இரை தேடி உண்பன வாகிய நாரைகளின் வரிசைவரிசையான கூட்டம், வளைந்த பனைமடல்களில் கட்டப்பட்டுள்ள கூடுகளில் இரவில் சென்று தங்கியிருக்கும். அத்தகைய பனைமரங்கள் உயரமாய் வளர்ந் திருக்கும் மணற்கொல்லையைக் கொண்ட கடற்கரைச்சோலைக்கு முன்பெல்லாம் உன் விளையாட்டுத் தோழியரோடு சென்று தேன் கமழும் இதழ்களைக் கொண்ட குளிர்ந்த இனிய காவி மலர்களைக் காலையில் கொய்து வருவாய்; அவற்றை மாறு பட்ட நிறம் கொண்ட சுருள்களைக் கொண்ட தழைகளுடன் அழகுபெறத் தொடுத்து உடுத்திக்கொள்வாய்; சிற்றில் புனைந்து, விரைந்தோடி விளையாடியுமிருப்பாய்; அலைகள் மோதுகின்ற வளைந்த அடிப்புறத்தைக் கொண்ட தாழை மர வேருக்குக் கீழே செல்லுகின்ற ஆணும் பெண்ணுமாகிய இரட்டை நண்டுகளைக் கண்டு மகிழ்ந்தும் இருப்பாய்! இத்தகைய செயல்கள் அனைத்தும் இப்போது இல்லை என்னும்படி உனக்கு வருத்தத்தை ஏற் படுத்திய நோய்தான் யாதெனக் கூறு?

கருத்து

'தலைவியே! உன் செயலில் பல மாற்றங்கள் தோன்றியுள்ளன; மகிழ்ச்சியோடு விளையாடிக்கொண்டிருந்த நீ இன்று வருந்தியிருக் கின்றனையே, ஏன்?' என்று தலைவியிடம் தோழி கேட்கிறாள்.

விளக்கம்

தலைவியிடம் இவ்வாறு கேட்பதன்வழி தோழி, தலைவனைக் குறியிடத்தில் காணாது தலைவி வருந்தியிருப்பதை அவனுக்கு உணர்த்துகிறாள்.

குறிப்பு

'இரை மேய்ந்துண்ட குருகினம் ஒன்றாய்க் கூட்டில் இனிது நெருங்கி உறங்கும்' என்று கூறுவதன்மூலம், 'உனது அன்பை நிரம்பப்பெற்ற தலைவி உன்னுடன் வீட்டில் இனிதிருக்க விரும்புகிறாளாதலின் அதற்கேற்ப

அவளை வரைந்துகொள்க' எனத் தோழி குறிப்பாய்த் தலைவனிடம் கூறுகிறாள்.

சொற்பொருள்

2. இரைஆர் - இரையை மேய்ந்துண்ணும்; குருகு - நாரை; நிரை பறை - நிரை நிரையாய்ப் பறந்து செல்லும்; தொழுதி - கூட்டம்.
3. வாங்கு - வளைந்த; குடம்பை - கூடு; துவன்றும் - நெருங்கி உறையும்.
4. பெண்ணை - பனைமரம்; படப்பை - கொல்லை.
5. காலைக் குற்ற - காலைப்பொழுதில் பறித்த.
6. கள்கமழ் – தேன் மணக்கும்; அலர் – மலர்; காவி – செங்கழுநீர் மலர்.
7. நெறித் தழை - சுருண்ட தழை; தைஇ - உடுத்தி.
8. பரி சிறந்து ஓடி - விரைவாய் ஓடிச் சென்று; பரி - விரைவு.
9. கொடுந்தாள் - வளைந்த அடிமரத்தைக் கொண்ட; கண்டல் - கண்டல் மரம் (தாழை).
10. சேர்ப்பு - கடல் நிலம்; ஈர்அளை - குளிர்ந்த வளை; அலவன் - நண்டு.
11. அழுங்க - இல்லையாக.

தோழி கூற்று

நற்றிணை 88 **நல்லந்துவனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

சிறைப்புறமாகத் தோழி தலைமகளுக்குரைப்பாளாய்ச் சொல்லியது.

கூற்று விளக்கம்

மணம் புரியாது காலம் தாழ்த்தும் தலைவன் சிறைப்புறத்தானாய் நிற்கத் தலைவியின் துயரை அவன் கேட்குமாறு தோழி தலைவிக்குக் கூறியது.

யாம்செய் தொல்வினைக்கு எவன்பேது உற்றனை?
வருந்தல்; வாழி! தோழி! – யாம்சென்று
உரைத்தனம் வருகம்; எழுமதி; புணர்திரைக்

கடல்விளை அமுதம் பெயற்குஎற் றாஅங்கு
உருகி உகுதல் அஞ்சுவல்; உதுக்காண்
தம்மோன் கொடுமை நம்வயின் ஏற்றி
நயம்பெரிது உடைமையின் தாங்கல் செல்லாது
கண்ணீர் அருவி யாக
அழுமே, தோழி!அவர் பழம்உதிர் குன்றே.

தெளிவுரை

தலைவியே! நாம் இப்போது படும் துன்பங்களெல்லாம் நம் முன்வினைகளின் பயனே. அங்ஙனமாக, நீ எதற்கு மயங்கு கின்றனை? வருத்தம் கொள்ளாதிரு! நம் துன்பத்தினை நாமே சென்று தலைவனிடம் எடுத்துக்கூறி வருவோம்! என்னுடன் புறப்படு! அலைகளைக் கொண்ட கடல்நீரால் விளையும் உப்புக் குவியல், மழை பெய்கையில் கரைந்து போவதுபோல, உன் மேனி நலம் தலைவனது காதல் தொடர்பால் உருகி அழிவதனைக் கண்டு அஞ்சுகின்றேன். பழங்களை உதிர்க்கின்ற அவன் குன்றும் நம்மிடம் மிகவும் அன்புடையதாயிருக்கிறது. நம் தலைவன் நமக்குச் செய்த கொடுமையை நினைந்து அக்குன்று, தன் வருத்தத்தை அடக்கிக்கொள்ள இயலாமல் கண்ணீரை அருவி யாகச் சொரிந்து அழுதுகொண்டிருப்பதை, அதோ காண்க!

கருத்து

'நம் துன்பங்கள் முன்வினையால் நேர்ந்தவை; நீ மயங்கி வருந்தாதே; உன் துன்பம் கண்டு நானும் வருந்துகிறேன். நம் துன்பம் கண்டு அவர் மலையும் அழுகிறது. நம் துன்பத்தை நாமே அவனிடம் சென்று உரைப்போம்' என்று தோழி தலைவியிடம் கூறுகிறாள்.

குறிப்பு

'குன்றம் அருவியாய் அழும்' என்றது, அவர் குன்று நம்மீது கொண்டுள்ள அன்புகூட அவரிடம் இல்லையே என்று வருந்திக் கூறியதாகும்.

தோழி சொல்வதைக் கேட்கும் தலைவன் விரைவாய் மணந்துகொள்ள முயல்வான் என்பது தெளிவு.

'நம் துயரம் கண்டு அவர் குன்றமும் அழும்போது அவர் மட்டும் இரங்காது இருப்பவர் அல்லர்' என்று தோழி தலைவியைத் தேற்றியதாகவும் கொள்ளலாம்.

சொற்பொருள்

1. தொல்வினை - பழவினை; பேதுறுதல் - மயங்கி அழிதல்.
2. யாம் சென்று - நாமே சென்று.
3. எழுமதி - புறப்படு; புணர்திரை - பொருந்திய அலை.
4. கடல் விளை அமுதம் - உப்பு; பெயல் - மழை; ஏற்றாங்கு - ஏற்றது போல.
5. உதுக்காண் - அதோ பார்.
6. தம்மோன் - அக்குன்றினை உடையவனாகிய தலைவன்; கொடுமை - நமக்குச் செய்த கொடுமையை; ஏற்றி - தனக்குச் செய்ததாய் ஏற்று.
7. நயம் - அன்பு; தாங்கல் செல்லாது - அடக்க இயலாமல்.
9. உதிர் - உதிர்க்கின்ற.

தலைவி கூற்று

நற்றிணை 94 **இளந்திரையனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் சிறைப்புறமாகத் தலைமகள் தோழிக்கு உரைப்பாளாய்க் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் சிறைப்புறமாக, அவன் விரைவில் மணந்துகொள்ள வேண்டும் என்னும் கருத்தில், 'என் மெய்வேறுபாட்டை அறியாத தலைவன் என்ன மகனோ?' என்று தோழியிடம் வருந்திக் கூறியது.

நோய்அலைக் கலங்கிய மதன்அழி பொழுதில்,
காமம் செப்பல் ஆண்மகற்கு அமையும்;
யான்என், பெண்மை தட்ப நுண்ணிதில் தாங்கிக்
கைவல் கம்மியன் கவின்பெறக் கழாஅ

மண்ணாப் பசுமுத்து ஏய்ப்பக் குவிஇணர்ப்
புன்னை அரும்பிய புலவுநீர்ச் சேர்ப்பன்
என்னை மகன்கொல் தோழி! தன்வயின்
ஆர்வம் உடையர் ஆகி,
மார்புஅணங் குறுநரை அறியா தோனே.

தெளிவுரை

"தோழியே! காமநோய் வருத்தலால் கலக்கமுற்று வலியழி கின்ற பொழுதிலே தான் கொண்ட வருத்தத்தைத் தக்காரிடம் வாய் விட்டுக் கூறுவது தலைமையும் தகைமையும் வாய்ந்த ஆண் மகனுக்குப் பொருந்துவதாகும். ஆனால், பெண்மைக்குரிய நாணப் பண்பு தடுத்தலால் நான் கொண்டுள்ள காமநோயினை வெளிப்படுத்த இயலாது தாங்கி நலிகின்றேன்.

"கைத்தொழில் வல்ல கம்மியனால், கழுவித் தூய்மை செய்யப் படாத அழகு பொருந்திய பசிய முத்து தன் ஒளியினை மறைத்துக் காட்டியதுபோல நானும் புணர்ச்சியால் ஏற்பட்ட மிகுந்த நலனைப் பிறருக்குப் புலப்படாமல் தாங்கி என் பெண்மைத் தன்மையால் மறைத்துக்கொள்கிறேன். பூங்கொத்துகளைக் கொண்ட புன்னை மரத்திலே புலவு நாற்றம் கொண்ட நீர் தெறித்ததால் மலர்ந்திருக்கும் கடற்கரை நாட்டுக்குரியவன், சேர்ப்பனாகிய நம் தலைவன். அவன் மார்பு தரும் வேட்கையால் வருந்தும் என் இயல்பை உணராமல் ஒழுகும் அவன் என்ன மகனோ? நான் எப்படிச் சொல்வேன்?"

கருத்து

"என் காம நோயினைத் தலைவனிடம் எவ்வாறு வாய்விட்டுக் கூறுவேன்? தலைவன் இதனை அறிய வேண்டாவா?"

உள்ளுறை

புன்னையின் அரும்பு விரிந்து மணம் பரப்பத் தொடங்கின் கடற்கரையின் புலால் நாற்றம் மறையும் என்னும் தொடர்மூலம், தலைவன் தலைவியை மணந்துகொண்டால் களவும், அதனால் ஏற்பட்ட அலரால் வரும் துயரமும் அகன்றுபோம் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது. .

சொற்பொருள்

1. நோய் - காம நோய்; அலை - பற்றி அலைப்ப; மதன் - வலிமை.
2. காமம் - காம நோயை; செப்பல் - (வாய்விட்டு வெளிப்படச்) சொல்லுதல்.
3. தட்ப - தடை செய்ய; நுண்ணிதின் - நுண்ணியதாய்.
4. கைவல் - கைத்தொழில் வல்ல; கம்மியன் - பொற்கொல்லன்.
5. மண்ணா - கழுவாத; பசுமுத்து - பசியமுத்து; குவிஇணர் - குவிந்த பூங்கொத்து.
6. புலவுநீர்ச் சேர்ப்பன் - புலால் நாற்றம் கொண்ட கடற்கரை நாட்டுக்குத் தலைவன்.
7. என்னை மகன்? - என்ன தன்மை கொண்டவன்? (என்ன மகனோ?); தன்வயின் - தன்னிடம்.
8. ஆர்வம் - அன்பு.
9. மார்பு அணங்குறுநர் - தன் மார்பைத் தழுவ விரும்பி வருத்த முற்றிருக்கும் மகளிர்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 222 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

குறியிரண்டன்கண்ணும் வந்தொழுகுந் தலைமகன் இடையிட்டு வந்து, சிறைப்புறத்து நின்றுழி, 'நின் நுதல் பசத்தற்குக் காரணம் என்னை?' என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது. (பசப்பு - பசலை; மகளிர்க்குப் பிரிவாற்றாமையால் உண்டாகும் நிற வேறுபாடு.)

கூற்று விளக்கம்

தலைவன், களவொழுக்கத்தில் பகற்குறி, இரவுக்குறி ஆகிய இரண்டிலும் தலைவியைக் கூடினான். சிறிது காலம் இடைவெளிவிட்டு மறுபடியும் வந்து மனைக்குப் பக்கத்தில் மறைந்து நின்றான். அப்போது தோழி, தலைவியை நோக்கி, 'உன் நெற்றி பசலை அடைந்ததற்குக் காரணம் என்ன?' என்று கேட்டாள். அதற்குத் தலைவி சிறைப்புறமிருக்கும் தலைவனுக்கும் கேட்கும்வண்ணம் தோழியிடம் மறுமொழி கூறியது.

அம்ம; வாழி! தோழி! நம்மூர்
நளிந்துவந்து உறையும் நறுந்தண் மார்பன்
இன்னினி வாரா மாறுகொல்
சில்நிரை ஓதிஎன் நுதல்பசப் பதுவே.

தெளிவுரை

"தோழியே! மணங்கமழும் குளிர்ந்த மார்பினைக் கொண்ட தலைவன் அடிக்கடி வந்து நம்மூரில் தங்குவான். இப்போதோ அவ்வாறு வாராது மாறியிருக்கிறான். அதனால், ஒழுங்குறுத்தப் பட்டிருக்கும் கூந்தலைக் கொண்ட என் நெற்றியில் பசலை படர்ந்துள்ளது" என்று தலைவி கூறினாள்.

கருத்து

தலைவன் முன்புபோல் தொடர்ந்து வருவதில்லை; அதனால் என் நுதல் பசந்தது.

குறிப்பு

தலைவியின் பேச்சைக் கேட்கும் தலைவன், இனித் தொடர்ந்து வரவேண்டும் என்று உறுதி கொள்வதோடு, விரைவில் திருமணம் செய்து கொள்ள வேண்டும் எனவும் உறுதி கொள்வான்.

சொற்பொருள்

2. நளிந்து - செறிந்து, அடிக்கடி, தொடர்ந்து; உறையும் - தங்கும்; நறுந்தண் - மணம் கமழும் குளிர்ந்த.
3. இன்னினி - இப்பொழுதோ; வாரா - அவ்வாறு வாராது; மாறுகொல் - மாறுபட்டிருக்கிறான்.
4. சில்நிரை ஓதி - ஒழுங்குறுத்தப்பட்டிருக்கும் கூந்தல்; நுதல் - நெற்றி; பசப்பது - பசலை படர்ந்திருப்பது.

தலைவி கூற்று

குறுந்தொகை 320 **தும்பிசேர்கீரனார்**

திணை : நெய்தல்

கூற்று

அலர் அஞ்சி ஆற்றாளாகிய தலைமகள், தலைமகன் கேட்பானாகத் தோழிக்குச் சொல்லியது. (அலர் - பழி தூற்றுதல்; ஊர் மக்கள் இன்னானோடு இன்னவள் ஆகியோர் இடையே இத்தகைய உறவு ஏற்பட்டுள்ளது எனப் பிறரும் கேட்க உரத்த குரலில் தமக்குள் பேசிக்கொள்வது.)

கூற்று விளக்கம்

தலைவன் சிறைப்புறத்தானாக, 'ஊரினர் கூறும் பழிச்சொற்கள் மிகுதி யாயிற்று; தலைவன் விரைவில் மணந்துகொள்ள வேண்டும்' என்பதை அவன் கேட்குமாறு தலைவி தோழியிடம் கூறியது.

பெருங்கடற் பரதவர் கோள்மீன் உணங்கலின்
இருங்கழிக் கொண்ட இறவின் வாடலொடு,
நிலவுநிற வெண்மணல் புலவ, பலஉடன்,
எக்கர்தொறும் பரிக்கும் துறைவனொடு ஒருநாள்,
நக்கதோர் பழியும் இலமே; போதுஅவிழ்
பொன்இணர் மரீஇய புள்இமிழ் பொங்கர்ப்
புன்னைஅம் சேரி இவ்ஊர்
கொன்அலர் தூற்றும்தன் கொடுமை யானே.

தெளிவுரை

பரதவர் கடலில் பிடித்துக்கொண்டுவந்த மீன்களை உலர்த்தியமையால் ஆன வற்றலுடன் கழியிலிருந்து கொண்டுவந்த இறால் மீனை உலர்த்தியமையால் ஆன வற்றலும் நிலவு நிறங் கொண்ட வெண்மையான மணலிடத்தே பரவிக் கிடக்கும் கடற் றுறையை உடையவன், தலைவன். அவனோடு ஒரே ஒருநாள் சிரித்துப் பேசிய பழிகூட இல்லாதவர் நாம். அவ்வாறிருந்தும், முற்றிய அரும்பு மலர்ந்த பொன்போலும் பூங்கொத்துகளைக் கொண்ட கிளைகளில் பறவைகள் ஆரவாரித்துக்கொண்டிருக்கும் புன்னை மரங்கள் நிறைந்த சேரியில் வாழும் இவ்வூர்

மக்கள், தம்மிடமுள்ள கொடுமைக்குணத்தினாலே வீணாக நம்மேற் பழிச்சொற்களைக் கூறுகின்றனர்!

கருத்து

தலைவன் என்னிடம் ஒருநாள்கூடச் சிரித்துப் பேசியதில்லை; இருப்பினும், பழிச்சொற்களோ எங்கும் பரவிவிட்டன.

குறிப்பு

மீன்வற்றலின் நாற்றம் கடற்கரை முழுவதும் வீசுவதுபோல, அவனுக்கும் எனக்குமுள்ள தொடர்பு ஊர் முழுவதும் பரவிவிட்டது.

'ஒருநாள்கூடக் கூடி மகிழ்ந்திலோம்; அதற்குள் இத்துணை அலர் மொழிகளா?' என்பது, 'கூடிய நாள் மிகச் சில; அலர் மொழிகளோ மிகப் பல' என்னும் குறிப்பைத் தருகிறது.

தன் களவொழுக்கம் நாற்றிசையும் பரவியும் தலைவன் அதனைப் பொருட்படுத்திலன். அதனையுணர்ந்து அவன் பழிதுடைக்க முற்பட வேண்டும் என உணர்த்துகிறாள், தலைவி.

சொற்பொருள்

1. பரதவர் - மீன் பிடிப்போர்; கோள்மீன் - கொண்டுவந்த மீன்; உணங்கலின் - வற்றலுடன்.
2. இருங்கழி - கரிய உப்பங்கழி; இறவு - இறால் மீன்; வாடலொடு - வற்றலொடு.
3. புலவ - நாறும்படி; பல உடன் - பல ஒருங்கே.
4. எக்கர் - மணல்மேடு; பரிக்கும் - பரவிக் கிடக்கும்.
5. நக்கதோர் - மகிழ்ந்து (சிரித்துப்) பேசியதாகிய; போது அவிழ் - முற்றிய அரும்பு மலர்ந்த.

6-7.பொன்இணர் - பொன் போன்ற பூங்கொத்து; மரீஇய - பொருந்திய; புள்இமிழ் - பறவைகள் ஒலிக்கின்ற; பொங்கர்ப் புன்னை - கிளைகளைக் கொண்ட புன்னை.

7. அம்சேரி - அழகிய குடியிருப்பு.
8. கொன் - வீணே; கொடுமையானே - கொடிய தன்மையினால்.

தோழி கூற்று

நற்றிணை 138 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

'அலர் ஆயிற்று' என ஆற்றாளாய தலைமகட்குத் தலைமகன் சிறைப் புறமாகத் தோழி சொல்லியது. (அலர் - ஊர் மகளிர் வெளிப்படையாகப் பேசுவது.)

கூற்று விளக்கம்

'ஊரார் அலர் கூறத் தொடங்கிவிட்டனர். தலைவி அதனைத் தாங்காள். அவள் துயர் நீங்குமாறு தலைவன் உடனே அவளை மணந்துகொள்ள வேண்டும்' எனச் சிறைப்புறத்தே நிற்கும் தலைவன் கேட்குமாறு தோழி தலைவியிடம் கூறியது.

உவர்விளை உப்பின் குன்றுபோல் குப்பை
மலைஉய்த்துப் பகரும், நிலையா வாழ்க்கை,
கணம்கொள் உமணர் உயங்குவயின் ஒழித்த
பண்அழி பழம்பார் வெண்குருகு ஈனும்
தண்ணம் துறைவன், முன்நாள் நம்மொடு
பாசடைக் கலித்த கணைக்கால் நெய்தல்
பூவுடன் நெறிதரு தொடலை தைஇ,
கண்அறிவு உடைமை அல்லது நுண்வினை
இழைஅணி அல்குல் விழவுஆடு மகளிர்
முழங்குதிரை இன்சீர் தூங்கும்
அழுங்கல் மூதூர் அறிந்தன்றோ இன்றே.

தெளிவுரை

உவர் நிலத்து விளையும் உப்பானது குன்றுபோல் குவிந்திருக்கும். அக்குவியலைப் பெற்று உப்பு வாணிகர் மலை நாட்டு ஊர்களில் சென்று விற்பர். ஓரிடத்தில் நிலைத்திராது கூட்டமாய்ச் சென்றுகொண்டே இருக்கும் அவ்வாணிகர், தங்கள் வண்டிகளுள் ஏதேனும் ஒன்று பழுதுபட்டால் அதை அவ்விடத்திலேயே விட்டுச் செல்வர். அங்ஙனம் விட்டுச் சென்ற, கட்டுத் தளர்ந்த பழைய வண்டிப் பார்மரத்தின்மீது வெண்மையான நாரைகள் கூடுகட்டி முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும்.

அத்தகைய காட்சிக்கு இடனான குளிர்ந்த நீர்த்துறையை உடையவன், நம் தலைவன்.

முன்பு ஒருநாள் அவன், பசிய இலை தழைத்த, திரண்ட தண்டுடைய நெய்தல் மலருடன் இலையை இடை இடையே இட்டுத் தொடுத்த மாலையை உனக்குச் சூட்டினான்.

நுண்ணிய வேலைப்பாடு அமைந்த அணிகளை அணிந்த மகளிர், விழா நாளில் துணங்கை ஆடுவர். அவ்வாறு ஆடும் போது, அக்கூத்தின் இனிய தாளத்திற்கு ஏற்ப முழங்கும் கடலலைகளைக் கொண்டது, இவ்வூர். இவ்வூரார், துணங்கைக் கூத்து ஆடிய உனக்குத் தலைவன் மாலை சூட்டியதைத் தவிர வேறு எதனையும் அறிந்ததில்லையே! அவ்வாறாக இவ்வூர் அலர் உரைத்தற்குக் காரணம் யாதோ?

கருத்து

துணங்கைக் கூத்தாடும்போது தலைவன் தலைவிக்கு மாலை சூட்டியதை அன்றி ஊரார் வேறெதையும் அறியார்; ஆயினும், ஊரில் அலர் எழுந்து விட்டது.

குறிப்பு

'களவொழுக்கத்தில் நிகழ்ந்த மறைந்த ஒழுக்கம் புலப்பட்ட அளவிலேயே ஊரார் அலர் கூறத் தொடங்கிவிட்டனர். இனி விரைந்து வரைந்துகொள்ளுதலே தக்கது' எனத் தலைவன் உணருமாறு தோழி உரைக்கின்றாள்.

சொற்பொருள்

1. உவர் - உவர் நிலம்; குப்பை - குவியல்.
2. பகரும் - விலை கூறும்; நிலையா வாழ்க்கை - ஓரிடத்தும் நிலைபெற நில்லாத வாழ்க்கை.
3. கணம் - கூட்டம்; உயங்குவயின் - (வண்டி) முரிந்ததனால்; ஒழித்த - விட்டுச் சென்ற.
4. பண் அழி - கட்டுத் தளர்ந்த; பழம் பார் - பழைய பார் மரம்; ஈனும் - முட்டையிடும்.
5. தண்ணம் துறைவன் - குளிர்ந்த நீர்த்துறையையுடைய தலைவன்.
6. பாசடை - பசிய இலை; கலித்த - தழைத்த; கணைக்கால் - திரண்ட தண்டு.

7. நெறிப்பு - சுருளுதல்; தொடலை - மாலை; தைஇய - சூட்டியதை.
8. கண் அறிவு - கண்ணால் கண்டது; நுண்வினை - நுண்மையான வேலைப்பாடு.
9. விழவு - துணங்கை.
10. இன்சீர் - இனிமையான தாள ஒலி; தூங்கும் - முழங்கும்.
11. அழுங்கல் - ஆரவாரம்; மூதூர் - பழமையான ஊர்; இன்றே - இல்லை.

தலைவி கூற்று

அகநானூறு 102 **மதுரை இளம்பாலாசிரியன் சேந்தங்கூத்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறிக்கண் சிறைப்புறமாகத் தோழிக்குச் சொல்லுவாளாய்த் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்திலேயே ஒழுகிவரும் தலைவன் ஒருநாள், தலைவியின் வீட்டிற்குப் பின்புறமாய் வந்து நின்றபோது, அவன் வருகையை அறியாதவள்போல, அவன் கேட்குமாறு, தலைவி தோழியிடம் கூறியது.

உளைமான் துப்பின், ஓங்குதினைப் பெரும்புனத்துக்
கழுதில், கானவன் பிழிமகிழ்ந்து வதிந்தென;
உரைத்த சந்தின் ஊரல் இருங்கதுப்பு
ஐதுவரல் அசைவளி ஆற்ற, கைபெயரா,
ஒலியல் வார்மயிர் உளரினள், கொடிச்சி
பெருவரை மருங்கில் குறிஞ்சி பாட;
குரலும் கொள்ளாது, நிலையினும் பெயராது,
படாஅப் பைங்கண் பாடுபெற்று, ஓய்யென
மறம்புகல் மழகளிறு உறங்கும் நாடன்;
ஆர மார்பின் அரிஞிமிறு ஆர்ப்ப,
தாரன், கண்ணியன், எஃகுடை வலத்தன்,
காவலர் அறிதல் ஓம்பி, பையென

வீழாக் கதவம் அசையினன் புகுதந்து,
உயங்குபடர் அகலம் முயங்கி, தோள்மணந்து,
இன்சொல் அளைஇப் பெயர்ந்தனன் – தோழி!–
இன்றுஎவன் கொல்லோ கண்டிகும் – மற்றுஅவன்
நல்கா மையின் அம்பல் ஆகி,
ஒருங்குவந்து உவக்கும் பண்பின்
இருஞ்சூழ் ஓதி ஒண்நுதல் பசப்பே.

தெளிவுரை

"சிங்கம் போன்ற வலிமை கொண்ட கானவன், பெரிய தினைப் புனத்தில் உயரமாக அமைக்கப்பட்ட காவல் பரணில் கள்ளுண்டு களித்திருந்தனன். மயிர்ச்சாந்து தடவப்பெற்ற பரந்த கரிய கூந்தலைக் கொண்ட அவன் மனைவி, தன் கூந்தலைக் கையினால் கோதியவாறு, மலைப்பக்கத்தே நின்று குறிஞ்சிப் பண்ணைப் பாடிக்கொண்டிருந்தாள். தினைக்கதிரை உண்ண வந்த வீரமிக்க இளைய ஆண்யானை, கொடிச்சியின் இசையிலே மயங்கித் தினைக்கதிரையும் உண்ணாது, நின்ற இடத்தை விட்டும் அகலாது, விரைவிலே தூங்கியும் விட்டது. தோழி! அத்தகைய காட்சி கொண்ட நாட்டினையுடையவன், நம் தலைவன்.

"அவன் தன் மார்பிலே சந்தனத்தைப் பூசிக்கொள்வான்; வண்டுகளும் மிஞிறுகளும் ஆரவாரிக்கும் மாலையினை மார்பிலே அணிந்துகொள்வான்; கண்ணியைத் தலையிலே சூடிக் கொள்வான்; வலக்கையில் வாளேந்தியவனாய்க் காவலர் காணாது மறைந்து வந்து, தாழிடாத கதவினைத் திறந்து நம் வீட்டினுள்ளும் புகுவான்; துன்பம் நீங்குமாறு என்னை அணைப்பான்; தோளினைத் தழுவிக் கூடி மகிழ்வான்; இனிய சொற்களைப் பேசிப் பிரிந்து செல்வான்.

"(அங்ஙனமிருப்ப) இன்று ஒரு நாள் வந்து அவன் அருள் செய்யாமையால் ஊரெங்கும் அலர் உண்டாகியது; மகிழ்ச்சியை விளைவிக்கும் கரிய கூந்தல் சூழ்ந்து ஒளிரும் என் நெற்றியில் பசலையும் வந்து சேர்ந்துவிட்டது. இதன் காரணம் என்னவோ?" என்று தலைவி தோழியிடம் கூறினாள். (தலைவனும் அதனைக் கேட்டு நின்றான்.)

கருத்து

தலைவனை ஒருநாள் பிரிந்தாலும் தலைவியின் நெற்றியில் பசலை படர்ந்துவிடுகிறது; அதனால் ஊரெல்லாம் பழிச்சொல் பரவிவிடுகிறது.

விளக்கம்

தினைப்புனத்தைக் காவல் செய்யும் கானவன் கள்ளுண்டு களித்துப் பரண்மீது தூங்கிவிட்டான். அவன் மனைவி தன் அழகிய கூந்தலைக் கோதியவாறு இனிய இசை பாடிக்கொண் டிருந்தாள். தினையைக் கவர வந்த யானை, அவள் பாட்டைக் கேட்டு, தினைப்புனத்தில் நின்ற நிலையிலிருந்து அடிபெய ராமல், இசையின்பத்தில் ஈடுபட்டுத் தூங்கத் தொடங்கியது. இத்தகைய காட்சி கொண்ட நாட்டினையுடைய தலைவன், காவலையெல்லாம் கடந்து வந்து, என்னை நாள்தோறும் கூடிக் களிப்பான். இன்று ஒருநாள் அவன் அருளாமையால் நுதல் ஒளி கெட்டு ஊரெல்லாம் பழிச்சொல் பரவிவிட்டது. இது ஏனோ? (அம்பல் - ஊர் மகளிர் வாய்க்குள் பேசிக் கொள்வது.)

குறிப்பு

பசலை - தலைவனின் பிரிவால் தலைவியின் மாமை நிறம் மாற அந்த இடத்தில் வந்து சேரும் பீர்க்கம் பூவை ஒத்த சோகையைக் காட்டும் நிறம்.

உள்ளுறை

கொடிச்சி தன் கணவனுக்கு இன்பம் உண்டாகப் பாடிய குறிஞ்சிப்பாடல், தினையை நுகரச் சென்ற யானையின் பசியை மறக்கச்செய்து அதனைத் தூங்குமாறு செய்துவிட்டது. அது போல, பெண்டிர் தாய்க்கு உணர்த்திய அலரானது தலைவியைக் களவில் நுகர வந்த தலைவனை நுகரவொட்டாமல் தடுத்த தோடு, அவனைச் சிறைப்புறத்தே நிற்கச் செய்துவிட்டது.

சொற்பொருள்

1. உளைமான் - சிங்கம் (உளை - பிடரி மயிர்); துப்பு - வலிமை.
2. கழுது - காவற்பரண்; பிழி - கள்; வதிதல் - தங்குதல்.
3. சந்து - சந்தனம்; ஊரல் - பரந்த; கதுப்பு - கூந்தல்.
4. ஐதுவரல் - மெல்ல வரும்; கைபெயரா - கையால் பெயர்த்து.
5. ஒலியல் - தழைத்த; வார் - நீண்ட; உளரினள் - கோதினள்; கொடிச்சி - குறமகள்.

6. குறிஞ்சி - குறிஞ்சிப்பண்.
7. குரல் - தினைக்கதிர்; நிலையினும் - நின்ற இடத்திலிருந்தும்.
8. படாஅ - மூடாத, துயிலாத; பாடுபெற்று - துயில் வரப்பெற்று; ஒய்யென - விரைவாய்.
9. மறம்புகல் - வீரத்தை விரும்பும்; மழ - இளைய.
10. அரி, ஞிமிறு - வண்டு வகைகள் (அரி - வண்டு).
11. கண்ணி - தலைமாலை; எஃகு - வேல்; வலத்தன் - வலக்கையைக் கொண்டவன்.
12. ஓம்பி - நீக்கி, பரிகரித்து.
13. வீழா - தாழ் வீழ்த்தாத, தாளிடப்படாத; கதவம் - கதவு.
14. உயங்குதல் - வருந்துதல்; அகலம் - மார்பு; முயங்கி - தழுவி; மணந்து - புணர்ந்து.
15. அளைஇ - பேசி; பெயர்ந்தனன் - சென்றான்.
16. கண்டிகும் - கண்டோம்.
17. நல்குதல் - அருளுதல் (இன்று ஒருநாள் வந்து அருளாமை யால் நெற்றியில் பசலை தோன்றியது); அம்பல் - பழிச்சொல், முணுமுணுத்துப் பேசுவது.
18. பண்பு - இயல்பு.
19. சூழ் - சூழப்பட்ட.

தோழி கூற்று

நற்றிணை 378 **வடமவண்ணக்கன் பேரிசாத்தனார்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி சிறைப்புறமாகச் சொல்லியது.

கூற்று விளக்கம்

வரையாதொழுகும் தலைவன் சிறைப்புறத்தானாகத் தோழி, அவன் கேட்கும்படியாகத் தலைவியிடம், "தலைவன்பால் நாம் கொண்ட அன்பு அயற்பெண்டிர் அலர் தூற்றுமாறு ஆயிற்று" என்று நெஞ்சழிந்து கூறியது.

யாமமும் நெடிய கழியும்; காமமும்
கண்படல் ஈயாது பெருகும்; தெண்கடல்
முழங்குதிரை, முழவின் பாணியின், பைபயப்
பழம்புண் உறுநரின், பரவையின் ஆலும்;

ஆங்குஅவை நலியவும், நீங்கி யாங்கும்,
இரவுஇறந்து, எல்லை தோன்றலது; அலர்வாய்
அயல்இல் பெண்டிர் பசலை பாட,
ஈங்குஆ கின்றால் தோழி! ஓங்குமணல்
வரிஆர் சிறுமனை சிதைஇ வந்து,
பரிவுதரத் தொட்ட பணிமொழி நம்பிப்
பாடுஇமிழ் பனிநீர்ச் சேர்ப்பனொடு
நாடாது இயைந்த நண்பினது அளவே.

தெளிவுரை

"தலைவியே! நள்ளிரவும் நெடிதாய் வளர்ந்துகொண்டேயிருக்கிறது; காதல் வேட்கையும் கண்ணுறங்க விடாது பெருகுகிறது. தெளிந்த கடலில் அலைகளும் முழவோசைபோல மெல்ல மெல்ல ஒலித்து, பழம்புண்ணுற்றுப் படுக்கையில் அப்படியும் இப்படியும் அசைந்து கிடப்பார்போல மெல்ல மெல்லப் புரண்டு புரண்டு கடலில் இயங்கியவாறிருக்கின்றன. இவை நம்மை இவ்வாறு வருத்தி நிற்கவும் இரவு நீங்கிக் கதிரவனும் தோன்றின பாடில்லை.

"நாம் முன்பு, ஓங்கிய மணலில் அழகுறச் சிறுவீடு கட்டி விளையாடியபோது அதனைக் கலைத்து, நம்மிடம் வந்து அதற்கு வருந்தினாற்போலக் கூறிய பணிவான மொழிகளை நம்பி ஆராய்ந்து பாராமலேயே தலைவனோடு நட்புப் பூண்டோம். அதன் பயன் என்ன? அலர் கூறும் வாயைக் கொண்ட அயல் வீட்டுப் பெண்டிர் நம் நெற்றியிலுண்டாகிய பசலையைக் குறிப்பிட்டு இழிவாய்ப் பேசுவதுதான்!"

கருத்து

தலைவன் உறவால் நாம் பெற்றது ஊராரின் பழிப்பேச்சையே.

குறிப்பு

அன்று சிற்றில் சிதைத்தான்; இன்று அயல்மனை மகளிர் கூறும் பழிக்கு ஆளாக்கினான். அவனது நட்பின் பயன் இதுவே.

சொற்பொருள்

1. யாமம் - நள்ளிரவு; நெடிய - நெடிதாய் வளர்ந்து.
2. கண்படல் ஈயாது - கண்ணுறங்க விடாமல்.
3. முழவின் பாணி - முழவின் ஓசை; பைபய - மெல்ல மெல்ல.
4. பழம்புண் உறுநரின் - பழம்புண் உற்றுக் கிடப்பார் இப்படியும் அப்படியும் அசைதல் போல; பரவையின் - கடற்பரப்பில்; ஆலும் - அசைந்துகொண் டிருக்கும்.
5. நலியவும் - வருத்தவும்.
6. இறந்து - நீங்கி; எல்லை - சூரியன்.
7. அயல் இல் - அயல் வீடு; பசலை பாட - பசலையானது பொருளாக வாயில் வந்தபடி பேச.
8. ஈங்கு ஆகின்று - இவ்வாறு உளது.
9. வரி ஆர் - கோலம் பொருந்திய, அழகிய; சிறுமனை - சிறிய மணல் வீடு; சிதைஇ - அழித்து.
10. பரிவு தரத் தொட்ட - அன்புண்டாக நம்மிடம் கூறிய; பணிமொழி - பணிவான பேச்சு.
11. பாடு இமிழ் - ஒலி முழங்கும்; பனி நீர் - குளிர்ந்த நீர்; சேர்ப்பன் - கடல்நிலத் தலைவன்.
12. நாடாது - ஆராயாது; இயைந்த - செய்துகொண்ட; அளவு - இயல்பு.

தோழி கூற்று

குறுந்தொகை 372 **விற்றூற்று மூதெயினனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறி வந்து ஒழுகாநின்ற தலைமகன் கேட்பத் தோழி, தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.

கூற்று விளக்கம்

இரவுக்குறியிலே வந்து நிற்கும் தலைவன் கேட்டு உணருமாறு தோழி, தலைவியிடம் கூறியது.

பனைத்தலைக்
கருக்குடை நெடுமடல் குருத்தொடு மாய,
கடுவளி தொகுத்த நெடுவெண் குப்பைக்

கணம்கொள் சிமைய அணங்கும் கானல்,
ஆழிதலை வீசிய அயிர்ச்சேற்று அருவிக்
கூழைபெய் எக்கர்க் குழீஇய பதுக்கை
புலர்பதம் கொள்ளா அளவை,
அலர்எழுந் தன்றுஇவ் அழுங்கல் ஊரே.

தெளிவுரை

பனைமரத்தின் உச்சியிலுள்ள கருக்குடன் கூடிய நீண்ட மடல் குருத்தோடு மறையும்படி கடுங்காற்று வீசி, மணற்குவியல்களை மலைகள்போலக் குவித்திருக்கிறது. காற்று வருத்தும் அக் கடற்கரையில் கடல்அலை வீசிக் கருமணல் சேற்றினை அருவி போல் பொழிகின்றது. கூந்தலுக்கு இட்டுக் குளிக்கும் அக்கருஞ் சேற்று எருமண் உலரும் முன்பே, ஆரவாரத்தைக் கொண்ட இவ்வூரில் நம்மைப்பற்றிய பழிச்சொற்கள் எழுந்துவிட்டன.

கருத்து

தலைவன் வந்து சென்ற சுவடு மறைவதற்குள்ளாகவே ஊரில் அலர் எழுந்துவிட்டது.

குறிப்பு

கடற்கரையில் உள்ளவர்கள் கடல்அலையால் குவிக்கப்படும் கருமணல் சேற்றைத் தலைமயிரிலே தேய்த்துக் குளிப்பர். அக்கருமணற்சேறு வெகு விரைவில் உலர்ந்துவிடும். அச்சேறு காய்வதற்கு முன்னே பழி எழுந்தது என்பது, தலைவன் வந்து சென்ற சுவடு மறைவதற்குள்ளாகவே ஊரினர் பழிக்கத் தொடங்கிவிட்டனர் என்னும் கருத்தைக் கொண்டது.

சொற்பொருள்

1. பனைத்தலை - பனைமரத்தின் உச்சி; கருக்கு - பனைமடலின் ஓரத்தில் உள்ள முள்; நெடுமடல் - நீண்ட மடல்; மாய - மறைய.
2. கடுவளி - விரைந்து வீசும் காற்று; வெண்குப்பை - வெண்மணற் குவியல்.
3. கணம் கொள் - தொகுதியைக் கொண்ட; சிமையம் - சிகரம்; அணங்கும் - வருத்தும்.
4. ஆழி தலை - கடல் அலை; அயிர்ச்சேறு - கருமணல், எருமண்.
5. கூழை - கூந்தல்; எக்கர் - மணல்மேடு; பதுக்கை - குவியல்.

6. புலர் பதம் - உலரும் தன்மை; கொள்ளா அளவை - எய்தா முன்பு.
7. அலர் - பழிச்சொல்; அழுங்கல் ஊர் - ஆரவாரத்தைக் கொண்ட ஊர்.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 41 **கணிமேதாவியார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகள் சிறைப்புறத்தானாகத் தோழியால் சொல்லெடுக்கப்பட்டுத் தலைமகள் தனது ஆற்றாமையால் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் சிறைப்புறமாய் இருக்க, அது சமயம் தோழி, 'நம் வருத்தத்தைத் தலைவனுக்குத் தெரிவி' எனக் கூறத் தலைவி மொழிந்தது.

உருகுமால் உள்ளம் ஒருநாளும் அன்றால்
பெருகுமால் நம்அலர் பேணப் – பெருகா
ஒருங்குவால் மின்னோ(டு) உரும்உடைத்தாய்ப் பெய்வான்
நெருங்குவான் போல நெகிழ்ந்து.

தெளிவுரை

அயலவர் நம்மீது கூறும் பழிச்சொற்கள், ஒன்றாய்க் கூடி வெள்ளிய மின்னலுடன் இடிகளையும் கொண்டு நாற்புறமும் நெருங்கிப் பெய்கின்ற மழையைப் போலப் பெருகுகின்றன. ஆதலான், ஒரு நாள் மட்டுமன்றிப் பல நாளும் நம் உள்ளம் கசிந்து வருந்தும்.

கருத்து

ஊரார் பழிச்சொற்கள் உள்ளத்தை வருத்துகின்றன.

குறிப்பு

தோழி தலைவியிடம், 'குறியிடத்திலிருந்து அவர் புறப்படு முன்னர் நம் வருத்தத்தை வெளிப்படக் கூறு' என்று சொல்ல, சிறைப்புறத்துள்ள தலைவன் கேட்குமாறு தலைவி தன் ஆற்றாமையை வெளிப்படுத்தினாள்.

சொற்பொருள்

1. ஒரு நாளும் அன்று - ஒரு நாள் மட்டுமன்றி (பல நாளும்).
2. அலர் - பழிச்சொற்கள் (புறங்கூறுதல்); பேண - மற்றவர் விரும்பிக் கேட்கும் வண்ணம்; பெருகா - பெருகுகின்றன.
3. ஒருங்கு - ஒன்றாய்; வால் - வெள்ளிய; மின்னோடு - மின்னலோடு; உரும் - இடி; பெய்வான் - பெய்தற்காக.
4. நெருங்கு - நாற்புறமும் சூழ்கின்ற; வான் - மழை; நெகிழ்ந்து - கசிந்து (உள்ளம் நெகிழ்ந்து உருகும்).

தோழி கூற்று

குறுந்தொகை 89 **பரணர்**

திணை : மருதம்

கூற்று

தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தன்னுள்ளே சொல்லுவாளாய்ச் சொல்லியது.

கூற்று விளக்கம்

கேட்கும் தொலைவில் தலைவன் நின்றபோது, தோழி தனக்குள் சொல்லிக்கொள்வதுபோல, ஊரில் அலர் எழுந்தமையை அவன் கேட்குமாறு கூறியது.

பாஅடி உரல பகுவாய் வள்ளை
ஏதில் மாக்கள் நுவறலும் நுவல்ப;
அழிவது எவன்கொல், இப்பேதை ஊர்க்கே?
பெரும்பூண் பொறையன் பேஎம்முதிர் கொல்லிக்
கருங்கண் தெய்வம் குடவரை எழுதிய
நல்இயல் பாவை அன்னஇம்
மெல்இயல் குறுமகள் பாடினள் குறினே.

தெளிவுரை

பெரிய அணிகளைப் பூண்ட சேரனுக்குரியதும், அச்சம் மிக்கதுமான கொல்லிமலையில், கரிய கண்களைக் கொண்ட தெய்வம் (கொல்லிப்பாவை) மேற்குப்பக்கத்திலே சிலையாய்

வடிக்கப்பட்டுள்ளது. அக்கொல்லிப்பாவை போன்ற அழகினையும் மெல்லிய இயல்பினையும் கொண்ட இளையவள், தலைவி. இவள் பரந்த அடிப்பாகத்தைக் கொண்ட உரலில் நெல்லைக் குற்றும்போது தலைவன் பெயரைச் சுட்டி வள்ளைப்பாட்டுப் பாடினாள். அதனைக் கேட்ட அயல் மகளிர் அலர் தூற்றிப் பேசவும் கூடும். இத்தகைய அறியாமையைக் கொண்ட இவ்வூரின் பொருட்டாக நாம் எதற்காக வருந்த வேண்டும்?

கருத்து

'தலைவன் பெயரைக் கூறி நாம் வள்ளைப்பாட்டுப் பாடினால் இவ்வூருக்கு இழப்பு என்ன ஏற்பட்டது? ஏன் அலர் தூற்றுகின்றனர்?'

குறிப்பு

வள்ளை - வள்ளைப்பாட்டு. மகளிர் உரலில் நெல் முதலியவற்றை இடிக்கும்போது, அதனால் உண்டாகும் களைப்புத் தோன்றாமலிருக்கும் பொருட்டுப் பாட்டுப் பாடி அவ்வேலையைச் செய்வர். இங்ஙனம் பாடும் பாட்டு வள்ளைப்பாட்டு எனப்படும்.

சொற்பொருள்

1. பா அடி - பரந்த அடி; உரல - உரலின்; பகுவாய் - திறந்த வாய்; வள்ளை - வள்ளைப்பாட்டு (குறித்து).
2. ஏதில் மாக்கள் - தொடர்பில்லாத அயலார்; நுவறலும் - (அலர் தூற்றிப்) பேசினும்; நுவல்ப - பேசுவர்.
3. அழிவது - வருந்துவது; எவன்? - எதற்காக; இப் பேதை ஊர்க்கே - இத்தகைய அறிவின்மையைக் கொண்ட ஊரினர் கூறும் சொற்களின் பொருட்டு.
4. பெரும் பூண் பொறையன் - பெரிய அணிகளைப் பூண்ட சேர மன்னன்; பேஎம் - அச்சம்; முதிர் - மிக்க; கொல்லி - கொல்லிமலை.
5. குடவரை - மேற்குப்பக்கம்; எழுதிய - சிலையாய் வடிக்கப்பட்டுள்ள.
6. நல் இயல் - நல்ல இயல்பினைக் கொண்ட; பாவை - கொல்லிப்பாவை.
7. மெல் இயல் - மெல்லிய இயல்பு வாய்ந்த; குறுமகள் - இளைய தலைவி; பாடினள் - பாடிக்கொண்டே; குறினே - குற்றினாளாயின்.

தலைவி கூற்று

குறுந்தொகை 311 **சேந்தன் கீரன்**

திணை : நெய்தல்

கூற்று

அலரஞ்சிய தலைமகள், தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.

கூற்று விளக்கம்

'தலைவன் வந்து செல்வதை ஆய மகளிர் எல்லோரும் அறிந்தனர்; அதனால் அலர் பெருகியது' என்று தலைவி, சிறைப்புறமாய் இருக்கும் தலைவன் கேட்பத் தோழியிடம் சொல்லியது.

அலர்யாங்கு ஒழிவ தோழி! பெருங்கடல்
புலவுநாறு அகன்துறை வலவன் தாங்கவும்,
நில்லாது கழிந்த கல்லென் நெடுந்தேர்
யான்கண் டனனோ, இலனோ? பானாள்
ஓங்கல் வெண்மணல் தாழ்ந்த புன்னைத்
தாதுசேர் நிகர்மலர் கொய்யும்
ஆயம் எல்லாம் உடன்கண் டன்றே.

தெளிவுரை

தோழியே! பெருங்கடலில் புலால் நாற்றம் வீசும் அகன்ற துறையிடத்தே பாகன் தடுக்கவும் குதிரைகள் நிற்காது ஓடிய, 'கல்' என்னும் ஓசையை எழுப்பிய தலைவனது நெடிய தேரினை நான் பார்த்தேனோ, இல்லையோ? ஆனால், நடு இரவில் உயர்ந்த வெண்மையான மணல்மேட்டில் தாழ்ந்து வளர்ந்துள்ள புன்னை மரத்தின் மகரந்தம் பொருந்திய, ஒளி பொருந்திய மலர்களைக் கொய்யும் தோழியர் கூட்டத்தினர் அனைவரும் ஒருசேரக் கண்டுள்ளனரே! அதனால் ஊரார் கூறும் பழிச்சொல் எவ்வாறு நீங்கும்?

குறிப்பு

தலைவன் தேரை நான் பார்த்தேனோ இல்லையோ, தோழியர் பார்த்துள்ளனர். அதனால் ஊரெல்லாம் அலர் மிகுதியாயிற்று.

சொற்பொருள்

1. அலர் - பழிச்சொற்கள்; யாங்கு - எவ்வாறு?; ஒழிவ - நீங்குவது.
2. புலவு நாறு - புலால் நாற்றம் வீசும்; அகன்துறை - அகன்ற துறை; வலவன் - தேர்ப்பாகன்; தாங்கவும் - தாங்கிப் பிடிக்கவும், தடுக்கவும்.
3. கழிந்த - ஓடிய; கல்லென் - 'கல்' என்னும் ஒலியுடன்.
4. யான் கண்டனனோ, இலனோ - யான் கண்டேனோ இல்லையோ?; பானாள் - நடு இரவில்.
5. ஓங்கல் வெண்மணல் - உயர்ச்சி பொருந்திய வெண்மையான மணல்; தாழ்ந்த - தாழ்ந்து வளர்ந்த; புன்னை - புன்னை மரத்தின்.
6. தாது சேர் - மகரந்தம் சேர்ந்த; நிகர்மலர் - ஒளியைக் கொண்ட மலர்கள்; ஆயம் - மகளிர் கூட்டம்; உடன் கண்டன்று - ஒருங்கே கண்டது.

தோழி கூற்று

நற்றிணை 239 **குன்றியனார்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி தலைமகன் சிறைப்புறமாகச் சொல்லியது.

கூற்று விளக்கம்

களவில் வந்தொழுகும் தலைவன் சிறைப்புறத்தானாய் இருப்பதறிந்த தோழி, ஊரில் எழுந்துள்ள அலரை உணர்த்தி, விரைந்து மணம் முடிக்கத் தூண்டுவாளாய் அவன் கேட்குமாறு உரைத்தது.

ஞான்ற ஞாயிறு குடமலை மறைய
மான்ற மாலை மகிழ்ந்த பரதவர்
இனிதுபெறு பெருமீன் எளிதினின் மாறி
அலவன் ஆடிய புலவுமணல் முன்றில்
காமர் சிறுகுடிச் செல்நெறி வழியின்
ஆய்மணி பொதியவிழ்ந் தாங்கு, நெய்தல்
புல்லிதழ் பொதிந்த பூத்தப மிதிக்கும்
மல்லல் இருங்கழி மலிநீர்ச் சேர்ப்பற்கு

அமைந்துதொழில் கேட்டன்றோ இலமே; 'முன்கை
வார்கோல் எல்வளை உடைய வாங்கி
முயங்கு'எனக் கலுழ்ந்த இவ்வூர்
எற்றுஆ வதுகொல்,யாம் மற்றொன்று செயினே?

தெளிவுரை

"மேற்றிசையில் ஞாயிறு மறைந்தது. இருள் மயங்கிய மாலையில் கள் குடித்து மயக்கங்கொண்ட பரதவர்கள், பகற் போதில் தாம் இனிதாய்ப் பிடித்துவந்த பெரிய மீன்களை எளிதாய் விற்றனர்; பின்னர், நண்டுகள் விளையாடும் புலால் நாற்றம் வீசும் மணல் பரந்த முற்றங்களைக் கொண்டதும், காண்பார்க்கு விருப்பத்தைத் தருவதுமான தங்கள் குடியிருப்புக்குச் சென்றனர். செல்லும் வழியில், அழகிய நீலமணிகளின் குவியலை விரித்துப் பரப்பி வைத்தாற்போல, புற இதழால் மூடப்பெற்ற நெய்தற்பூக்களை மிதித்துச் சென்றனர். அத்தகைய காட்சி கொண்டுள்ள பரந்த கடல்நிலத்திற்கு உரியவனான தலைவன் போக்குக்கு உடன்பட்டு நாம் இதுகாறும் நடந்த தில்லை. அவ்வாறு இருக்க, நமது வளையல் உடையுமாறு அவனைத் தழுவினோம் என இவ்வூரார் பழி கூறுகின்றனர். நாம் ஒருகால் அவன் விரும்பியவாறு செயல்களைச் செய்திருப்போ மென்றால் இவ்வூர் என்ன பேசுமோ, அறியேன்" என்று தோழி தலைவியிடம், சிறைப்புறத்திலிருக்கும் தலைவன் கேட்கும்படி யாய்க் கூறினாள்.

கருத்து

"நாம் தலைவனுடன் உறவு கொள்ளாதிருக்கும்போதே ஊரார் அலர் தூற்றுகின்றனரே; இனி மெய்யாகவே உறவு கொண்டு அவனோடு கூடுவோ மாயின் இவ்வூர் என்னென்ன கூறுமோ?"

குறிப்பு

'ஒன்று நிகழாமுன்பே நிகழ்ந்ததாய்ப் பழிச்சொல் கூறும் இவ்வூர், அது நிகழ்ந்துவிடின் என்ன கூறுமோ?' என்று தோழி கூறுவதன் நோக்கம், தான் கூறுவதைக் கேட்கும் தலைவன் விரைந்து வரைவொடு வருவான் என எதிர்பார்ப்பதனாலாகும்.

உள்ளுறை

“பரதவர் தாம் இனிது பெற்ற மீனை எளிதில் விற்றுக் கள் குடித்து மயங்கியவராய் வழியிலுள்ள நீல மலரை மிதித்தவாறு வீடு நோக்கிச் செல்வர் என்னும் இத்தொடர்மூலம், காம மயக்கம் கொண்ட காதலன் அரிய பொருளைத் தலைவியின் தமரிடத்துக் கொடுத்துத் தலைவியை மணந்து, ஊரார் கூறிய அலரினை அடக்கித் தன்னூர்க்கு அவளைக் கொண்டுசெல்ல வேண்டும்” என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. ஞான்ற - சாய்ந்த; குடமலை - மேற்றிசை மலை.
2. மான்ற - மயக்கம் தருகின்ற; மகிழ்ந்த - கள் குடித்து மயக்கம் கொண்ட.
3. எளிதினின் - எளிதாய்; மாறி - விற்றுவிட்டு.
4. அலவன் - நண்டு; புலவு - புலால் நாறும்.
5. காமர் - (காண்பவர்) விரும்பும்; சிறுகுடி - குடியிருப்பு.
6. ஆய்மணி - அழகிய மணிகள்; பொதி - குவியல்; அவிழ்ந்தாங்கு - விரித்தாற்போல.
7. புல்லிதழ் - புற இதழ்; தப - கெட.
8. மல்லல் - வளப்பம்; மலி - நிறைந்த; சேர்ப்பன் - கடல்நிலத் தலைவன்.
10. வார்கோல் - நீண்டு திரண்ட; எல்வளை - ஒளி பொருந்திய வளையல்; வாங்கி - வளைத்து.
11. முயங்கு - இறுகத் தழுவினோம்; கலுழ்ந்த - கலங்கிப் புலம்பிய.
12. எற்றுஆவது கொல் - எத்தன்மையுடையவர் ஆவரோ?; யாம் மற்றொன்று செயினே - ஒருவேளை நாம் தலைவர் போக்குக்கு உடன்பட்டு இசைந்திருந்தால்.

தோழி கூற்று

நற்றிணை 299 **வடம வண்ணக்கண் பேரிசாத்தனார்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி தலைமகன் சிறைப்புறமாகச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் சிறைப்புறத்தில் இருப்பதை அறிந்து தலைவியிடம், "நம் களவொழுக்கம் குறித்து இச்சிறுகுடி என்ன சொன்னாலும் சொல்லட்டும். அவரை மகிழ்ந்து கூடா நாள் நாம் உயிர் வாழா நாளாகும்" எனத் தலைவன் கேட்குமாறு தோழி கூறியது.

உருகெழு யானை உடைகோடு அன்ன,
ததர்பிணி அவிழ்ந்த தாழை வான்பூ,
தயங்குஇருங் கோடை தாக்கலின், நுண்தாது
வயங்குஇழை மகளிர் வண்டல் தாஅம்
காமர் சிறுகுடி புலம்பினும், அவர்காண்;
நாம்இலம் ஆகுதல் அறிதும் மன்னோ –
வில்எறி பஞ்சி போல, மல்குதிரை
வளிபொரு வயங்குபிசிர் பொங்கும்
நளிகடற் சேர்ப்பனொடு நகாஅ ஊங்கே.

தெளிவுரை

"அச்சம் பொருந்திய யானையின் முரிந்த கொம்பு போன்று, கட்டவிழ்ந்த தாழையின் மலர் தோன்றும்; அதன்மேல், மேல்காற்று மோதுதலால் நுண்ணிய தாதுகள் மகளிர் வண்டலாட்டயரும் இடங்களில் பரவிக் கிடக்கும். இத்தகைய அழகுமிக்க கடற்கரையில் உள்ள சிறிய குடியிருப்புகள் நம்மைத் தனிமைப்படுத்துமேயாயினும், அவரே நம் தலைவராவார். வில்லால் அடிக்கப்பட்ட பஞ்சுபோல, நிறைந்த அலைகள் ஒன்றோடொன்று மோதி உடைபட்டுப் பிசிர் பிசிராய்த் தோன்றும் பெரிய கடற்கரைக்குரியவனான தலைவனோடு நாம் மகிழ்ந்து கூடாத நாள், நாம் வாழ்ந்தும் வாழாத நாளே என்று உறுதியாய் அறிந்துகொண்டோம்."

கருத்து

'ஊரார் கூறும் அலர் நம்மை அழிப்பதேயாயினும், அவரே நம் தலைவர் என்பதில் மாற்றமில்லை.'

குறிப்பு

காற்று மோதுதலினாலே அலைகள் உடைந்து பிசிர் பிசிராய்ச் சிதறுவதைப் போல், வேட்கைநோய் வருத்துதலினால் ஏற்பட்ட உடல் மாறுபாடுபற்றிய அலரும் எழுந்து, ஊர் முழுவதும் பரவிவிட்டது.

சொற்பொருள்

1. உருகெழு - அச்சம் பொருந்திய; உடைகோடு - முரிந்த கொம்பு.
2. ததர் பிணி - நெருங்கிய இதழ்ப்பிணிப்பு; வான்பூ - அழகான பூ.
3. கோடை - மேல்காற்று; தாக்கலின் - மோதுதலால்.
4. வண்டல் - மகளிர் விளையாட்டு (இடங்களில்); தாஅம் - பரவும்.
5. காமர் - விருப்பம்; புலம்பினும் - தனிமைப்படுத்தினும்.
6. நாம் இலம் ஆகுதல் - (அவரில்லாமல்) நாம் இல்லை ஆதலை.
7. பஞ்சி - பஞ்சு; மல்குதிரை - நிறைந்த அலைகள்.
8. வளி - காற்று; பொரு - தாக்குதலால்; பிசிர் பொங்கும் - பிசிர் பிசிராய் உடைந்து தோன்றும்.
9. நளி - அகன்ற; நகாஅ ஊங்கே - மகிழ்ந்து கூடாதபோது.

தோழி கூற்று

நற்றிணை 36 **சீத்தலைச் சாத்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறிச் சிறைப்புறமாகத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் இரவுக்குறிச் சிறைப்புறமாக நிற்பதறிந்த தோழி, தங்கள் நிலையைக் குறிப்பாய் அறிவிக்கும் முறையில், 'நாங்கள்தாம் நலம் இழந்தோம்; அலர் பரப்பிய இவ்வூர் எதை இழந்தது? இன்னும் துயில வில்லையே' என்று கூறியது.

குறுங்கை இரும்புலிக் கோள்வல் ஏற்றை,
பூநுதல் இரும்பிடி புலம்பத் தாக்கி,
தாழ்நீர் நனந்தலைப் பெருங்களிறு அடூஉம்
கல்லக வெற்பன் சொல்லில் தேறி
யாம்எம் நலன்இழந் தனமே, யாமத்து
அலர்வாய்ப் பெண்டிர் அம்பலொடு ஒன்றிப்
புரைஇல் தீமொழி பயிற்றிய உரையெடுத்து
ஆனாக் கௌவைத் தாகத்
தான்என் இழந்ததுஇவ் அழுங்கல் ஊரே.

தெளிவுரை

குறுகிய முன்னங்காலைக் கொண்ட, கொல்லவல்ல பெரிய ஆண்புலி ஒன்று, பொலிவு பெற்ற நெற்றியினைக் கொண்ட கரிய பெண்யானை புலம்புமாறு, நீரற்ற அகன்ற காட்டினிடத்துப் பெரிய களிற்றியானையைத் தாக்கிக் கொல்லும். அத்தகைய மலைநாட்டுக்குத் தலைவன் சொல்லியதை உண்மையென்று நம்பி, நாம் நம் நலத்தை இழந்துவிட்டோம். ஆதலின், இந்த நடுயாமத்திலும் துயிலாதிருக்கின்றோம். பழிதூற்றுதலைத் தொழிலாய்க் கொண்ட பெண்களுடன் ஒன்றுபட்டு, இவ்வூரும் ஆரவாரமுள்ளதாய் உள்ளது. நான்தான் நலனிழந்து தூங்கா திருக்கிறேன் என்றால், இந்த ஊருக்கு என்ன வந்தது? இதுவும் எதனையாவது இழந்துவிட்டதோ? இதுவும் தூங்காதிருக் கின்றதே, ஏன்?

கருத்து

'நான்தான் தலைவனின் மொழியினை உண்மையென்று நம்பி நலனிழந்து துயிலாதிருக்கின்றேன். இந்த ஊருக்கு என்ன வந்தது? இதுவும் தூங்காது பழிச்சொல் பேசியபடியிருக்கிறது.

குறிப்பு

வழியின் கொடுமை, அலர் பேசும் ஊரார், இரவிலும் தூங்காதிருத்தல் ஆகியவற்றால் இரவுக்குறி வாய்ப்பது அரிது என்பதைத் தோழி தலைவனுக்குக் குறிப்பிடுகிறாள்.

சொற்பொருள்

1. குறுங்கை - குறுகிய முன்கால்; இரும்புலி - பெரிய புலி; கோள்வல் - கொல்ல வல்ல; ஏற்றை - ஆண் (புலி).
2. பூ நுதல் - பொலிவு பெற்ற நெற்றி; இரும்பிடி - பெரிய பெண்யானை; புலம்ப - தனித்து வருந்தும்படி; தாக்கி - அடித்து.
3. தாழ்நீர் - நீரற்ற; நனந்தலை - அகன்ற இடம்; அடூஉம் - கொல்லும்.
4. வெற்பன் - குறிஞ்சிநிலத் தலைவன்; தேறி - உண்மையென்று நம்பி.
5. நலன் - பெண்மை நலன்; யாமம் - நள்ளிரவு.
6. அலர்வாய் - பழிதூற்றும் வாய்; ஒன்றி - ஒன்றுபட்டு, சேர்ந்து.
7. புரைஇல் - மேன்மை இல்லாத; தீமொழி - தீய சொற்கள்; பயிற்றிய - சொல்லிய; உரை - சொல்.
8. ஆனா - அமையாத; கௌவை - பழிச்சொல்.
9. தான் - இவ்வூர்; என் இழந்தது - எதனை இழந்தது?; அழுங்கல் ஊர் - ஆரவாரமுள்ள ஊர்.

தோழி கூற்று

குறுந்தொகை 373 **மதுரைக் கொல்லன் புல்லன்**

திணை : குறிஞ்சி

கூற்று

அலர் மிக்கவழி ஆற்றாளாகிய தலைமகட்குத் தோழி சொல்லியது. (அலர் - பழிச்சொல்.)

கூற்று விளக்கம்

தலைவியின் களவு ஒழுக்கம் குறித்து ஊரிலே பழிச்சொற்கள் மிகுதியாயின. அதனால் தலைவியின் ஆற்றாமை மிகுந்தது. அவளைத் தேற்றுவிக்கும் முறையில் தோழி கூறியது.

நிலம்புடை பெயரினும் நீர்தீப் பிறழினும்,
இலங்குதிரைப் பெருங்கடற்கு எல்லை தோன்றினும்,
வெவ்வாய்ப் பெண்டிர் கௌவை அஞ்சிக்
கேடுஎவன் உடைத்தோ, தோழி! நீடுமயிர்க்
கடும்பல் ஊகக் கறைவிரல் ஏற்றை
புடைத்தொடுபு உடையூப் பூநாறு பலவுக்கனி

காந்தள்அம் சிறுகுடிக் கமழும்
ஓங்குமலை நாடனொடு அமைந்தநம் தொடர்பே?

தெளிவுரை

தலைவியே! நீண்ட மயிரையும் கூரிய பற்களையும் கரிய விரலையும் கொண்ட ஆண் கருங்குரங்கு, பக்கத்திலிருந்த பலாப் பழத்தைத் தோண்டியது. அதனால் அங்குப் பூப்போல மணம் வீசியது. அம்மணம் காந்தள் மலர்ந்திருக்கும் சிறிய ஊர்களிலும் பரவிக் கமழ்கிறது. இத்தகைய உயர்ந்த மலைநாட்டிற்கு உரியவனொடு நாம் கொண்ட நட்புக்கு என்றும் அழிவில்லை.

இந்த உலகமே இடம் பெயர்ந்து அமைந்தாலும், தண்ணீர், தீயாய் மாறினாலும், அலைகளைக் கொண்ட பெரிய கடலுக்கு எல்லை தோன்றினாலும், நாம் தலைவனுடன் கொண்ட நட்பு, மாறாத் தன்மையது. அவ்வாறிருக்கக் கொடிய வாய்களைக் கொண்ட இவ்வூர்ப்பெண்களின் பழிச்சொற்களுக்கு அஞ்சியா தலைவனோடு நாம் கொண்ட நட்பு மாறிவிடப்போகிறது? (ஒரு நாளும் மாறாது; நீ அஞ்சாதே; கவலைப்படாதே.)

கருத்து

'தலைவியே! ஊரார் கூறும் அலர் மொழிகளால் உள்ளம் உடைய வேண்டா.'

விளக்கம்

தலைவனோடு தலைவி கொண்ட களவொழுக்கத்தை அறிந்த ஊரார் பழி தூற்றினர். அதனால் தலைவி பெரிதும் வருந்தினாள். அவளுக்குத் தோழி, 'நாம் மலைநாட்டுத் தலைவனுடன் கொண்டுள்ள நட்பு என்றும் எந்நிலையிலும் மாறாதது; பிரிக்க இயலாதது. பழிச்சொல் எழுந்ததே என்பதற்காக மனம் உடைய வேண்டா' என ஆறுதல் கூறினாள்.

சொற்பொருள்

1. நிலம் - உலகம்; புடை பெயரினும் - இடம் பெயர்ந்து அமைந்தாலும்; நீர் தீப் பிறழினும் - நீர் தீயாய்ப் பிறழ்ந்தாலும் (மாறினாலும்).
2. இலங்குதிரை - அலைகள் பொருந்திய; எல்லை - கரை.

3. வெவ்வாய் - கொடிய வாய்; கௌவை - பழிச்சொல்.
4. கேடு - கெடுதல்; எவன் உடைத்து - எப்படி உண்டாகும்?; நீடு மயிர் - நீண்ட மயிர்.
5. கடும்பல் - கூர்மையான பல்; ஊகம் - கருங்குரங்கு; கறை - கறுப்பு; ஏற்றை - ஆண்.
6. புடை - பக்கத்தில் (தொங்கும் பலாப்பழம்); தொடுபு - தொட்டதும், தோண்டியதும்; உடையூ - உடைந்து, பிளந்து; பலவுக் கனி - பலாப் பழம்.
7. காந்தள் - காந்தள் மலர்; அம் - அழகிய; சிறுகுடி - சிறிய ஊர்; கமழும் - மணக்கும்.
8. ஓங்கு - உயர்ந்த; தொடர்பு - நட்பு.

தோழி கூற்று

நற்றிணை 311 **உலோச்சனார்**

திணை : நெய்தல்

கூற்று

அலர் கூறப்பட்டு ஆற்றாளாகிய தலைமகளைத் தோழி ஆற்றுவித்தது.

கூற்று விளக்கம்

கானற்சோலையில் கலந்து பிரிந்த தலைவனை மீண்டும் வரக் காணாத தலைவி சோர்கிறாள்; ஊரில் பழிச்சொற்கள் எழுகின்றன. அதனால் வாட்டமுற்ற தலைவியைத் தேற்றுதற்காகத் தோழி கூறியது.

பெயினே, விரிமான் உளையின் வெறுப்பத் தோன்றும்
இருங்கதிர் நெல்லின் யாணர் அஃதே;
வறப்பின், மாநீர் முண்டகம் தாஅய்ச் சேறுபுலர்ந்து,
இருங்கழிச் செறுவின் வெள்உப்பு விளையும்
அழியா மரபின்நம் மூதூர் நன்றே
கொழுமீன் சுடுபுகை மறுகினுள் மயங்கிச்
சிறுவீ ஞாழல் துறையுமார் இனிதே;
ஒன்றே தோழி!நம் கானலது பழியே;
கருங்கோட்டுப் புன்னை மலர்த்தாது அருந்தி
இருங்களிப் பிரசம் ஊத,அவர்
நெடுந்தேர் இன்ஒலி கேட்டலோ அரிதே.

தெளிவுரை

தலைவியே! நம் ஊர், மழை பெய்தால், குதிரையின் விரிந்த பிடரி மயிரைப் போன்று கதிர்கள் செறிந்து தலைசாய்ந்து தோன்றும் நெல்லின் புது வருவாயைக் கொண்டிருக்கும்; மழை பெய்யாது வறக்குமாயின் கடற்கரையில் வளரும் நீர்முள்ளி படர்ந்து சேறு சிறிதுமின்றிக் காய்ந்துவிடுதலால், கரிய உப்பங்கழிகளில் வெண்மையான உப்பு விளைந்திருக்கும்; இவ்வாறு வளத்தில் குன்றாப் பெருமை வாய்ந்ததாய் நம்மூர் விளங்குகின்றது. இவற்றோடல்லாமல், கொழுத்த மீன்களைச் சுடுகின்ற புகை நம்மூர்த்தெரு எங்கும் பரவி நிற்கும்; சிறிய பூக்கள் நிறைந்து ஞாழல் மரங்களைக் கொண்ட கடற்றுறையும் இனிதாயிருக்கிறது. நம் கானற்சோலை ஒன்றில் மட்டுமே சிறு குற்றம் உள்ளது. அங்குள்ள கரிய கிளைகளைக் கொண்ட புன்னையில் பூத்த பூக்களின் தேனையுண்டு மிகுதியாய்க் களிப் புற்று வண்டினம் ஒலித்தலால், நம் தலைவர் வருகின்ற தேரில் கட்டிய மணியின் ஓசையைக் கேட்பதுதான் அரிதாய் உள்ளது.

(அதுகொண்டு நீ ஆற்றாதிருத்தல் நன்றன்று.)

கருத்து

தலைவியே! ஊரார் அலரைப் பொருட்படுத்தாது நீ ஆற்றியிருத்தல் வேண்டும்.

விளக்கம்

“மழை பெய்யினும் பெய்யாவிடினும் எல்லாக் காலங்களிலும் இனிமை வாய்ந்தது, நம் ஊர். ஒரே ஒரு குறை மட்டும் உண்டு. கானற்சோலையில் வண்டினம் தேனுண்டு முரன்றுகொண் டிருத்தலால் அங்கு வரும் நம் காதலனின் தேரின் மணியொலி கேட்பது அரிதாகின்றது. வண்டுகளின் ஒலி கேட்டு, அஃது ஊரவர் எடுக்கும் அலர் என மயங்கி நீ ஆற்றாதிருத்தல் நன்றன்று” எனத் தோழி தலைவியிடம் கூறுகிறாள்.

குறிப்பு

‘புன்னை மலரில் தாதுண்டு மயங்கிய வண்டினம் செய்யும் ஓசையால் தலைவனின் தேரில் கட்டப்பட்ட மணியொலி கேளாது. இத்தொடர்மூலம்,

தலைவனின் அருள் பெற்று இன்பமுறும் தலைவி, அலரை ஒரு பொருட்டாய்க் கருதாமலும், களவொழுக்கம் புறத்தார்க்குப் புலனாகாமலும் ஆற்றியிருத்தல் வேண்டும்' என்னும் குறிப்புப் பொருள் வெளிப்படுகிறது.

சொற்பொருள்

1. பெயினே - மழை பெய்தால்; மான் - குதிரை; விரி உளை - படர்ந்த பிடரி மயிர்; வெறுப்ப - செறிந்து.
2. இருங்கதிர் - பெரிய நெற்கதிர்; யாணர் - புது வருவாய்.
3. வறப்பின் - மழை பெய்யாது வறண்டுவிட்டால்; மாநீர் - கடற்கழி; முண்டகம் - நீர்முள்ளிச்செடி; தாஅய் - பரவி; புலர்ந்து - வறண்டு, காய்ந்து.
4. செறு - வயல், உப்புப் பாத்தி.
5. அழியா - நலன்கள் குன்றாத.
6. கொழுமீன் - கொழுவிய மீன்; மறுகு - வீதி; மயங்கி - பரந்து.
7. சிறுவீ - சிறிய பூ; ஞாழல் - ஒருவகை மரம்; ஆர் - மிகவும்.
8. பழி - குற்றம்.
9. கருங்கோட்டு - கரிய கிளைகளைக் கொண்ட.
10. இருங்களி - கரிய வண்டு; பிரசம் - தேன்.
11. அரிதே - அரிதாயிருக்கிறது.

தோழி கூற்று

குறுந்தொகை 109 **நம்பி குட்டுவன்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் சிறைப்புறமாக, தலைமகள் வேறுபாடு கண்ட புறத்தார் அலர் கூறுகின்றமை தோன்ற, தோழி தலைமகட்குக் கூறுவாளாய்க் கூறியது.

கூற்று விளக்கம்

அருகில் தலைவன் இருக்கையில் அவன் கேட்டறியுமாறு தோழி தலைவியிடம், 'உன் உடல் வேறுபாடு கண்டு ஊரிலுள்ளவர் பழி கூறு கின்றனரே' எனச் சொல்லியது.

முட்கால் இறவின் முடங்குபுறப் பெருங்கிளை
புணரி இகுதிரை தரூஉம் துறைவன்
புணரிய இருந்த ஞான்றும்,
இன்னது மன்னோ, நல்நுதற் கவினே!

தெளிவுரை

தலைவியே! கடலிலே வீசுகின்ற அலைகள் முள்ளைப் போன்ற கால்களையும் வளைந்த முதுகினையும் கொண்ட இறால் மீனின் பெருந்திரளைத் தாமே கரையில் கொண்டுவந்து சேர்க்கின்ற துறைக்குரியவன், நம் தலைவன். நீ அவனோடு கூடி மகிழ்ந்திருக்கும் இப்போதும், உனது நல்ல நெற்றியின் அழகு அவன் பிரிந்திருக்கும்பொழுது போன்றே அழிந்திருக்கின்றதே! இந்நிலை வருந்தத்தக்கது.

கருத்து

'தலைவியின் நெற்றி அழகிழந்திருப்பதைக் காணும் ஊரார் அலர் தூற்றுகின்றனர். அலர் பெருகினால் தலைவி உயிர் வாழாள்' எனத் தலைவனுக்குத் தோழி குறிப்பாய் உணர்த்தினாள்.

குறிப்பு

தலைவனோடு புணர்ந்திருந்த காலத்து, 'தலைவன் பிரிவானோ?' எனத் தலைவி அஞ்சியிருந்தமையால், 'புணரிய இருந்த ஞான்றும் இன்னதுமன்' என்றாள் தோழி.

வலை போட்டுப் பிடிக்க வேண்டிய இறாலை அலை தானே கரைக்குக் கொண்டுவந்து சேர்க்கும் என்னும் தொடர்மூலம், தலைவன் வரைவொடு வரின் தலைவிக்குத் தமர் தாமே முன்வந்து அதனை ஏற்பர் என்னும் கருத்துப் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. முட்கால் - முள் பொருந்திய காலைக் கொண்ட; இறவின் - இறால் மீனின்; முடங்கு புறம் - வளைந்த முதுகு; கிளை - இனம்.
2. புணரி - கடல்; இகு திரை - மோதும் திரை; தரூஉம் - கொண்டுவந்து சேர்க்கும்.
3. புணரிய ஞான்றும் - சேர்ந்திருக்கும் இப்பொழுதும்.
4. இன்னது - (அழகிழந்து) இத்தகையதாய்; கவின் - அழகு.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 269 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

குறை நயப்பக் கூறித் தலைமகனைக் கூட்டிய தோழி, அவன் இடையிட்டு வந்து சிறைப்புறத்து நின்றுழித் தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன், தன்னைத் தலைவியோடு கூட்டுவிக்குமாறு வேண்டியதை ஏற்று, தோழி அதனைத் தலைவியிடம் சொல்லி, அவனைத் தலைவியோடு கூட்டுவித்தாள். தலைவன் இடைவெளி விட்டு வந்தான். அவன் ஒருநாள் சிறைப்புறத்து நின்றபோது, அவன் காதில் விழுமாறு தோழி தலைவியிடம் சொல்லியது:

கேழல் உழுதெனக் கிளர்ந்த எருவை
விளைந்த செறுவில் தோன்றும் நாடன்
வாராது அவண்உறை நீடின் ஏர்வளை
இணைஈர் ஓதி நீஅழத்
துணைநனி இழக்குவென், மடமை யானே.

தெளிவுரை

அழகிய வளையல்கள் இணைந்த கையினையும், நெய் பூசிய கூந்தலையும் கொண்ட தலைவியே! தலைவனுடைய மலை நாட்டில் பன்றிகள் கிழங்குகளைத் தோண்ட, அதனால் உழுதது போன்று புன்செய் நிலங்கள் தோன்றுகின்றன. அந்நிலத்தில் முளைத்து மண்டிய பஞ்சாய்க் கோரைப்புல் நெல் விளையும் நன்செய் நிலம்போலத் தோன்றும். அத்தகைய மலைநாடனை என் அறியாமையால் உன்னோடு சேர்த்து வைத்தேன். அவன் இங்கு வாராது, நீ அழுது புலம்பி ஊரிலேயே தங்கும் நாள் நீடிக்குமாயின் நான் உனக்குத் துணையாகும் தன்மையை இழப்பேன். (நான் இறந்துபடுவேன்.)

கருத்து

தலைவன் வாரான் ஆயின், நீ அழுது புலம்புவாய். உன்னை இந்நிலைக்கு ஆளாக்கிய நான் இருந்து என்ன பயன்? இறப்பேன்.

விளக்கம்

தலைவன் வாராது நீட்டித்தலின், நீ அழுது புலம்புகின்றாய். உன்னை அவனோடு சேர்த்துவைத்தவள், நான். இப்போது உன் வருத்தத்தைப் பார்த்துக்கொண்டு நான் இங்கு இருப்பதில் என்ன பயன்? நான் இறந்துபடுவேன்.

உள்ளுறை

பன்றி தோண்டிய புன்செய் நிலத்தில் வளர்ந்த கோரைப் புல்லால் அந்நிலம் நன்செய்போலத் தோற்றமளிக்கிறது. அதுபோல, அவன் கூறிய பசப்புரைகளை மெய்யெனக் கொண்டு நான் மயங்கி விட்டேன் எனத் தோழி சொல்வதை உள்ளுறை உவமாய்க் கொள்ளலாம்.

குறிப்பு

தோழியின் பேச்சைக் கேட்ட தலைவன், இனி இடையீடின்றி வந்து தலைவியைச் சந்திப்பான் என்பது உறுதி.

சொற்பொருள்

1. கேழல் - பன்றி; உழுதென - (முகத்தால்) கிளறியதாக; கிளர்ந்த - மண்டி வளர்ந்த; எருவை - பஞ்சாய்க் கோரை.
2. செறு- வயல்.
3. அவண் உறை நீடின் - தன் ஊரில் தங்குதல் நீடினால்.
4. ஈர் - நெய் பூசிய; ஓதி - கூந்தல்; நீ - தலைவியாகி நீ.
5. துணை - நீ எனக்குத் துணையாதலை; இழக்குவென் - இழப்பேன், இறப்பேன்.

தோழி கூற்று

நற்றிணை 285 **மதுரைக் கொல்லன் வெண்ணாகனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி, சிறைப்புறமாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தலைமகன் கேட்ப அம்பலும் அலருமாயிற்று என்று சொல்லியது (வாய்க்குள் பேசிக் கொள்வது அம்பல்; வெளிப்படையாகப் பேசுவது அலர்.)

கூற்று விளக்கம்

தலைவன் சிறைப்புறத்தே நிற்பதறிந்த தோழி அவன் கேட்கும்வண்ணம் ஊரில் அலரும் அம்பலும் மிகுதியாயிற்று என்று தலைவியிடம் உரைத்து, அவை தீர்தற்பொருட்டுத் தலைவியைத் தலைவன் விரைவில் மணந்து கொள்ள வேண்டும் என்று குறிப்பாய் உணர்த்தியது.

அரவுஇரை தேரும் ஆர்இருள் நடுநாள்
இரவின் வருதல் அன்றியும் உரவுக்கணை
வன்கைக் கானவன் வெஞ்சிலை வணக்கி,
உளமிசைத் தவிர்த்த முளவுமான் ஏற்றையொடு,
மனைவாய் ஞமலி ஒருங்குபுடை ஆட,
வேட்டுவலம் படுத்த உவகையன், காட்ட
நடுகாற் குரம்பைத்தன் குடிவயின் பெயரும்
குன்ற நாடன் கேண்மை நமக்கே
நன்றால் வாழி தோழி! என்றும்
அயலோர் அம்பலின் அகலான்,
பகலின் வரூஉம், எறிபுனத் தானே.

தெளிவுரை

வன்மை பொருந்திய கைகளைக் கொண்ட கானவன் வெவ்விய வில்லை வளைத்து, வலிமையான அம்புகளை ஆண் பன்றியின் நெஞ்சிலே பாய்ச்சிக் கொன்று வீழ்த்தினான்; அப்பன்றியைத் தூக்கிக்கொண்டு, வளைந்த வாயைக் கொண்ட நாய்கள் சூழ்ந்து வர, வேட்டையிலே வென்ற மகிழ்ச்சியுடன் கால்களை நட்டுக் கட்டப்பட்ட குச்சு வீடுகளைக் கொண்ட தன் ஊர்க்குச் செல்வான். தலைவியே! அத்தகைய குன்ற நாட்டிற்கு உரிய வனோடு கொண்ட உறவு நமக்கு நலம் தருவதாகும்! நீயும் வாழ்க!

பாம்புகள் இரை தேடித் திரிந்தபடியிருக்கும் மிக்க இருள் பரந்த நள்ளிரவில் அவன் நம்மைக் காண வந்துகொண் டிருந்தான். இப்போது, அயலவர் உரைக்கும் அம்பலைக் கேட்டும், அதனைப் பொருட்படுத்தாதவனாய்ப் பகற்போதிலும் தினைப்புனக் குறியிடத்திற்கு வருவானாயினன்.

கருத்து

ஊரில் அலரும் அம்பலும் எழுந்துள்ள நிலையில், இதுவரை இரவில் வந்துகொண்டிருந்த தலைவன் இப்பொழுது பகலிலும் வருவானாயினனே! என் செய்ய?

குறிப்பு

பாம்புகள் இரை தேடி ஊரும் இரவு என்றதால் தலைவன் இரவில் வருதலை அறிந்து அஞ்சுவதாய்த் தோழி கூறுகிறாள்; கானவர்கள் பகலில் வேட்டையாடிக்கொண்டிருப்பர் என்பதால் பகலில் வந்தாலும் இடருண் டாகும் என்றும் கூறி, இரு குறியிடத்தும் அவன் வருதலை விலக்கினாள்; இரவிலும் பகலிலும் வர அஞ்சாதவன் வரைவு கொள்ளத் தயங்குவதேன் என்றும் உணர்த்துகிறாள்.

உள்ளுறை

வேட்டுவனாலே புண்பட்டு வீழ்ந்த முள்ளம்பன்றியை நாய்கள் சுற்றிச் சூழ்ந்து நின்று குரைக்கும் என்னும் தொடர் மூலம், தலைவன் அருளாமையாலே நெஞ்சம் புண்பட்ட தலைவியைச் சேரியிடத்திலுள்ள அயல் பெண்டிர் குழுமி நின்று அலருரைப்பர் என்னும் கருத்துப் பெறப்படுகிறது.

கானவன், தான் எய்து பெற்ற முள்ளம்பன்றியோடு நாய்கள் சூழத் தன் குடிசையை அடைவான் என்னும் தொடர்மூலம், தலைவன் தலைவியைத் தன் ஊர்க்குக் கொண்டுசென்று, தமர் மகிழ மணம் புரிய வேண்டும் என்னும் கருத்துப் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. அரவு - பாம்பு; ஆர் இருள் - மிக்க இருள்.
2. உரவுக்கணை - வலிய அம்பு.
3. வன்கை - வலிய கை; வெஞ்சிலை - வெவ்விய வில்லை; வணக்கி - வளைத்து.

4. உளமிசைத் தவிர்த்த - நெஞ்சிலே தைக்குமாறு அம்பு செலுத்தி வீழ்த்திய; முளவுமான் - முள்ளம்பன்றி; ஏற்றை - ஆண்.
5. ஞமலி - நாய்; ஒருங்கு புடை ஆட - பக்கத்தே கூடிக் குரைத்து வர.
6. வேட்டு வலம் படுத்த - வேட்டையில் வென்ற வெற்றி மகிழ்ச்சியுடன்; காட்ட - காட்டிலுள்ள.
7. குரம்பை - குடிசை; தன் குடிவயின் - தன் ஊருக்கு; பெயரும் - செல்லும்.
10. அம்பல் - ஆரவாரம்.
11. எறிபுனம் - காட்டினை வெட்டி உண்டாக்கிய தினைப்புனம்.

தோழி கூற்று

அகநானூறு 312 **மதுரை மருதனிளநாகனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் சிறைப்புறமாகத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியை மணந்துகொள்ளும் கருத்தின்றித் தலைவன் இரவுக்குறி வந்து வந்து மீண்டான். ஒரு நாள் இரவுக்குறியிடத்து அவன் சிறைப்புறமாய் நின்றபோது, அதனை அறிந்த தோழி, அவன் வருகையை அறியாள்போல, அவன் கேட்குமாறு தலைவியிடம் கூறியது.

நெஞ்சுஉடம் படுதலின் ஒன்றுபுரிந்து அடங்கி,
இரவின் வரூஉம் இடும்பை நீங்க,
வரையக் கருதும் ஆயின், பெரிதுஉவந்து,
ஓங்குவரை இழிதரும் வீங்குபெயல் நீத்தம்,
காந்தள்அம் சிறுகுடிக் கௌவை பேணாது,
அரிமதர் மழைக்கண் சிவப்ப, நாளைப்
பெருமலை நாடன் மார்புபுணை ஆக,
ஆடுகம் வம்மோ– காதல்அம் தோழி!
வேய்பயில் அடுக்கம் புதையக் கால்வீழ்த்து,
இன்இசை முரசின் இரங்கி, ஒன்னார்
ஓடுபுறம் கண்ட, தாள்தோய் தடக்கை,
வெல்போர் வழுதி செல்சமத்து உயர்த்த

அடுபுகழ் எஃகம் போல,
கொடிபட மின்னிப் பாயின்றால், மழையே!

தெளிவுரை

“அன்புக்குரிய தலைவியே! நம் தலைவன் பெரிய மலைநாட்டிற் குரியவன். அவன், உம் இருவர் உள்ளங்களும் ஒன்றுபடுதலால், இரவில் வரும் துன்பம் நீங்க விரைவில் மணம் புரிந்து கொள்ளக் கருதியுள்ளான். அதனால், காந்தள் மலர்ந்து அழகு செய்யும் இச்சிற்றூரில் வாழ்வோர் கூறும் பழிச்சொற்களை இனிப் பொருட்படுத்தத் தேவையில்லை. உயர்ந்த மலையிலிருந்து இறங்கிவரும் மிக்க மழைநீரால் உண்டான அருவிநீரில், நாளை நம் தலைவன் மார்பே தெப்பமாய், செவ்வரி படர்ந்து செருக்குற்ற கண்கள் குளிர்ந்து சிவக்கும்படி மிகவும் மகிழ்ந்து விளையாடு வோம், வா.

“பகைவரைப் புறமுதுகிட்டோடச்செய்து வெற்றியே காணும் பாண்டியன், முழந்தாளளவு நீண்ட கைகளைக் கொண்டவன். போர்க்களத்தே அவன் முரசுகள் முழங்குவனபோல, மூங்கில் செறிந்த பக்கமலை மறையுமாறு மேகம் கால் இறங்கி இடி இடித்தும், அப்போர்க்களத்தே தூக்கிப் பிடிக்கும் புகழ் வாய்ந்த வேலினைப் போல மின்னல் மின்னியும் மழை பொழிவதைப் பார்.”

கருத்து

தலைவியே! மலைநாடன் உன்னை மணந்துகொள்ளக் கருதியுள்ளான். ஆதலின், ஊரில் எழும் பழிச்சொற்களைப் புறந்தள்ளி, அருவிநீரில் அவன் மார்பு தெப்பமாக நாளை ஆடுவோம், வா!

விளக்கம்

மலை மறையக் கால் இறங்கி, இடி முழங்கி, மின்னல் மின்னி, மேகம் பரவியுள்ளதைப் பார். (மழை பொழியும். அது நாளை அருவியாய் இறங்கும்; அதில் நாம் ஆடுவோம்.)

சொற்பொருள்

1. ஒன்று புரிந்து - (மணந்துகொள்ளும்) ஒன்றையே விரும்பி.

2. இடும்பை - துன்பம்.
3. வரைதல் - மணத்தல்.
4. இழிதரும் - கீழிறங்கும்; வீங்குபெயல் - மிக்க மழை; நீத்தம் - நீர்.
5. கௌவை - அலர், பழிச்சொல்; பேணாது - போற்றாது, கருதாது.
6. அரி - செவ்வரி; மதர் - செருக்கு; மழைக்கண் - குளிர்ந்த கண்.
7. புணை - தெப்பம்.
8. ஆடுகம் - ஆடுவோம்.
9. பயில் - நிறைந்த, நெருங்கிய; அடுக்கம் - பக்கமலை; புதைய - மறைய; கால் வீழ்த்து - (மழைக்) காலிறங்கி.
10. இரங்கி - ஒலித்து; ஒன்னார் - பகைவர்.
11. ஓடுபுறம் - (போரில்) புறமுதுகிட்டு ஓடுதல்; தாள் தோய் - முழந்தாளைத் தொடுகின்ற.
12. வழுதி - பாண்டியன்; சமத்து - போரில்; உயர்த்த - தூக்கிப் பிடித்த.
13. அடு புகழ் - கொல்லும் புகழினைக் கொண்ட; எஃகம் - வேல்.
14. பாயின்று - பரவியது.

தோழி கூற்று

அகநானூறு 188 **வீரை வெளியன் தித்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவில் சிறைப்புறமாகத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

மணக்கும் கருத்தின்றிக் களவொழுக்கத்திலேயே ஈடுபட்டிருந்த தலைவன், ஒரு நாள் இரவுக்குறியில் வேலி ஓரமாய் வந்து நிற்க, அவன் கேட்குமாறு மேகத்திடம் தோழி கூறியது.

பெருங்கடல் முகந்த இருங்கிளைக் கொண்மூ!
இருண்டுஉயர் விசும்பின் வலன்ஏர்பு வளைஇ,
போர்ப்புஉறு முரசின் இரங்கி, முறைபுரிந்து
அறன்நெறி பிழையாத் திறன்அறி மன்னர்
அருஞ்சமத்து எதிர்ந்த பெருஞ்செய் ஆடவர்
கழித்துஎறி வாளின், நளிப்பன விளங்கும்

மின்னுடைக் கருவியை ஆகி, நாளும்
கொன்னே செய்தியோ, அரவம்? பொன்என
மலர்ந்த வேங்கை மலிதொடர் அடைச்சி,
பொலிந்த ஆயமொடு காண்தக இயலி,
தழலை வாங்கியும் தட்டை ஓப்பியும்,
அழல்ஏர் செயலை அம்தழை அசைஇயும்,
குறமகள் காக்கும் ஏனல்
புறமும் தருதியோ? வாழிய, மழையே!

தெளிவுரை

பெருங்கடலில் தண்ணீரை முகந்து பெருங்கூட்டமாய் வரும் மேகமே!

வானத்திலே உயர்ந்தெழுந்து, இருண்டு, வலப்புறமாய் வளைந்து வருகிறாய். தோற்போர்வை போர்த்தப்பட்ட முரசினைப் போல் முழங்குகிறாய். அறநெறி வழுவாது, செயல் திறத்தோடு ஆட்சி செய்யும் மன்னர்க்காக, கடுமையான பகைவரை எதிர்த்துப் போர் செய்யும் வீரர்கள், உறையிலிருந்து உருவி வீசும் வாளைப் போன்று மின்னி, நாள்தோறும் ஆரவாரம் செய்கிறாய்! இது வெறும் ஆரவாரந்தானோ?

குறமகளாகிய எம் தலைவி தினைப்புனம் காக்கிறாள். பொன் போல் மலர்ந்த வேங்கைப்பூ மாலையை அணிந்து, தோழியரோடு அழகுற நடந்து செல்கிறாள்; நெருப்புப்பந்தத்தைச் சுழற்றியும், தட்டையைத் தட்டியும் கிளிகளை ஓட்டுகிறாள்; தீயின் கொழுந்து போன்ற அசோகந்தளிரால் ஆகிய தழை உடையை உடுத்தியிருக்கிறாள். (ஆரவாரம் செய்யும் மேகமே, நீ) அத்தலைவி பாதுகாக்கும் புனத்தில் மழையும் பொழிவாயோ? நீ வாழ்க!

கருத்து

"மேகமே! இருண்டு, வானைச் சுற்றி வளைத்து, இடி மின்னலோடு நாள் தோறும் பயனில்லாமல் ஆரவாரம் மட்டும் செய்து நீங்குவாயா? அல்லது குறமகள் ஆகிய தலைவி காக்கும் தினைப்புனத்தில் மழையும் பொழி வாயோ? நீ வாழ்க" என்கிறாள், தோழி.

குறிப்பு

இங்கு மேகம் என்பது தலைவனைச் சுட்டியது. "தலைவ! குறியிடை வந்து எமக்கு இன்பம் தருவதுபோலத் தோன்றி, ஊரார் பழிச்சொல் எழுப்பும் ஆரவாரத்தை உண்டாக்கி அத்தோடு அமைவாயா? அல்லது வரைந்து இல்லறம் நிகழ்த்தி யாம் பயன் பெறச் செய்வையோ?" என்று பொருள் படுமாறு தலைவன் அறியத் தோழி கூறினாள்.

(இரவில் நீ வந்து செல்வதால் ஊரெல்லாம் பழிச்சொல் உண்டாகிறது. நீ இவ்வாறு வருவதைக் கைவிட்டுத் தலைவியை மணந்துகொண்டால் அவள் வாழ்வு தழைக்கும்.)

சொற்பொருள்

1. இருங்கிளை - பெரிய கூட்டமான; கொண்மூ - மேகம்.
2. விசும்பு - ஆகாயம்; வலன்ஏர்பு - வலமாய் எழுந்து; வளைஇ - சுற்றி.
3. போர்ப்பு உறு - தோல் போர்த்தப்பட்ட; இரங்கி - ஒலித்து, முழங்கி.
4. பிழையா - தவறா.
5. சமம் - போர்; எதிர்ந்த - எதிர்த்த; பெருஞ்செய் ஆடவர் - போர் புரியும் ஆண்மை கொண்ட வீரர்கள்.
6. கழித்தல் - நீக்குதல்; நளிப்பு - செறிவு.
7. மின் - மின்னல்; கருவி - தொகுதி.
8. கொன்னே - வீணே; அரவம் - ஒலி.
9. தொடர் - மாலை; அடைச்சி - அணிந்து.
10. காண்தக - காணத்தக்க அழகுடன்; இயலி - நடந்து.
11. தழல் - எரிகின்ற தீப்பந்தம்; வாங்கியும் - சுழற்றியும்; தட்டை - தட்டிக் கிளியை ஓட்டும் கருவி; ஓப்பியும் - ஓட்டியும்.
12. அழல் - தீக்கொழுந்து; செயலை - அசோகு; அசைஇயும் - உடுத்தும்.
14. புறந்தருதல் - பாதுகாத்தல்; தருதியோ - பெய்வாயோ?

தோழி கூற்று

அகநானூறு 368 **மதுரை மருதனிளநாகனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

பகலே சிறைப்புறமாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

களவொழுக்கமே மேற்கொண்டொழுகும் தலைவன் திருமணம் செய்து கொள்ள எவ்வித முயற்சியும் மேற்கொள்ளவில்லை. அவன் உள்ளத்தில் அந்த எண்ணத்தை ஏற்படுத்த, அவனுக்கும் கேட்குமாறு தோழி தலைவியிடம் கூறியது.

தொடுதோல் கானவன் சூடுறு வியன்புனம்,
கரிபுறம் கழீஇய பெரும்பாட்டு ஈரத்து,
தோடுவளர் பைந்தினை நீடுகுரல் காக்கும்
ஒண்தொடி மகளிர்க்கு ஊசலாக,
ஆடுசினை ஒழித்த கோடுஇணர் கஞலிய,
குறும்பொறை அயலது நெடுந்தாள் வேங்கை,
மடமயில் குடுமியின் தோன்றும் நாடன்
உயர்வரை மருங்கின் காந்தளம் சோலைக்
குரங்குஅறி வாரா மரம்பயில் இறும்பில்,
கடிசுனைத் தெளிந்த மணிமருள் தீம்நீர்
பிடிபுணர் களிற்றின் எம்மொடு ஆடி,
பல்நாள் உம்பர்ப் பெயர்ந்து, சில்நாள்
கழியா மையே வழிவழிப் பெருகி,
அம்பணை விளைந்த தேக்கள் தேறல்
வண்டுபடு கண்ணியர் மகிழும் சீறூர்,
எவன்கொல்– வாழி, தோழி!– கொங்கர்
மணிஅரை யாத்து மறுகின் ஆடும்
உள்ளி விழவின் அன்ன,
அலர்ஆ கின்றுஅது பலர்வாய்ப் பட்டே.

தெளிவுரை

தலைவியே! வாழி! காலிலே செருப்பணிந்த வேடன் சுட்டெரித்த அகன்ற கொல்லையில் பெய்த மழைநீர், கரிந்த இடங்களைக் கழுவிச் சென்றது. அம்மழைஈரத்தில், இதழ்கள் வளர்ந்த பசிய தினையின் நீண்ட கதிர்களை ஒளி பொருந்திய வளையல் அணிந்த மகளிர் காத்திருந்தனர். அம்மகளிர் ஊசல் ஆடும் பொருட்டுப் பாறைக்கு அயலிலிருந்த நீண்ட அடியினைக் கொண்ட வேங்கை மரத்தின் கொம்புகளை வெட்டினர்; பூங்கொத்துகள் நிரம்பிய அக்கொம்புகள் இளமயிலின் தலை யுச்சியில் உள்ள குடுமியைப் போலத் தோன்றும். அத்தகைய நாட்டிற்குரியவன், நம் தலைவன்.

அம்மலைப்பக்கத்தே காந்தள் மலர்கள் நிறைந்த அழகிய சோலைகளிலும், மந்திகளும் ஏறியறியாத மரங்கள் நெருங்கிய கானகத்திலும் தலைவன் நம்முடன் பல நாளும் கூடியும் பளிங்கினை ஒத்த தெளிந்த சுனைநீரில் பிடியுடன் கூடிய களிறு போல நீராடியும் மகிழ்ந்தான். அவன் பிரிந்து வேறிடம் சென்று சில நாள்களே ஆயின. அந்நிகழ்ச்சி, வழிவழியாய்ப் பலர் வாய்ப்பட்டுப் பரவியது. ஆனால் இப்போதோ அது, அழகிய மூங்கிற் குழாயிலே உள்ள முற்றிய தேனாகிய முதிர்ந்த கள்ளின் தெளிவை, வண்டுகள் மொய்க்கும் மாலையை அணிந்தவர் உண்டு மகிழும் சிற்றூரில் பலராலும் பேசப்பட்டு, கொங்கு நாட்டுக் கூத்தர் இடுப்பிலே மணிகளைக் கட்டிக்கொண்டு தெருவில் ஆடும் 'உள்ளி' விழாவின் ஆரவாரம்போலப் பெரும் பழிச்சொல்லாய்ப் பெருகிவிட்டது.

இதற்கு என்ன காரணமோ?

கருத்து

"தலைவியே! தலைவன் பெரிய சுனையில் நம்மோடு நீராடினான். அது நிகழ்ந்து சில நாள்கள் ஆகும் முன்பே, அந்நிகழ்ச்சி வழிவழியாய்ப் பலர் வாய்ப்பட்டு, 'உள்ளி விழா'வில் தோன்றும் ஆரவாரம்போல ஊரெல்லாம் அலராகிவிட்டது. இஃது எவ்வாறோ?"

சொற்பொருள்

1. தொடுதோல் - செருப்பு; சூடுறு - சுட்டெரித்த; வியன்புனம் - அகன்ற கொல்லை.
2. கரிபுறம் - கரிந்த இடங்கள்; பெரும்பாட்டு ஈரம் - பெரிய மழையினால் ஏற்பட்ட ஈரம்.
3. தோடு - இதழ்; நீடு குரல் - நீண்ட கதிர்.
5. ஆடுசினை - ஆடும் கிளை; ஒழித்த - வெட்டிய, போக்கிய; கஞலிய - தழைத்த.
6. குறும்பொறை - சிறிய பாறை; நெடுந்தாள் - நீண்ட அடி.
7. மடமயில் - இள மயில்.
9. வாரா - ஏறி அறியாத; பயில் - நெருங்கிய; இறும்பு - காடு.
10. கடி - விளக்கமான; மணிமருள் - பளிங்கினை ஒத்த; தீம் - இனிய.
11. பிடி - பெண்யானை.
12. உம்பர்ப் பெயர்ந்து - வேற்றிடம் சென்று.
12-13. சில்நாள் கழியா - சில நாள் கழியும் முன்பே; வழிவழி - முறை முறையாய்.
14. அம்பணை - அழகிய மூங்கில்; தேக்கள் தேறல் - தேனாகிய கள்ளின் தெளிவு.
17. அரை யாத்து - இடுப்பிலே கட்டி; மறுகு - தெரு.
18. உள்ளி - ஒரு விழா. (கொங்கு நாட்டினர் தம் இடையில் மணியைக் கட்டிக்கொண்டு ஆரவாரம் எழத் தெருவிலே கூத்தாடுவர்.)
19. பலர் வாய்ப்பட்டு - பலர் வாயிலும் பேசப்பட்டது.

தோழி கூற்று

திணைமொழி ஐம்பது 3 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தோழி கூறியது.

கூற்று விளக்கம்

காவல் மிகுதியால் தலைவியைத் தலைவனுடன் குறியிடத்தில் கொண்டு வந்து சேர்க்க இயலாது வருந்திய தோழி, தலைவன் கேட்பத் தலைவிக்குச் சொல்லியது.

ஓங்கல் இறுவரைமேல் காந்தள் கடிகவினப்
பாம்பென ஓடி உரும்இடிப்பக் கண்டிரங்கும்
பூங்குன்ற நாடன் புணர்ந்தஅந் நாள்போலா
ஈங்கு நெகிழ்ந்த வளை.

தெளிவுரை

உயர்ந்திருக்கும் மலைப்பக்கங்களில் காந்தள் மலர்கள் புதிய அழகுடன் பூத்துள்ளன. வானத்தில் மின்னும் மின்னல், நீண்ட பாம்புபோல ஓடுகிறது; இடி இடிக்கிறது. கார் கால வரவைக் குறிக்கும் இவற்றைக் கண்டு பிரிந்திருக்கும் காதலர் வருந்துவர். அழகிய மலைகள் சூழ்ந்த நாட்டிற்குரிய நம் தலைவன், களவொழுக்கத்தில் நம்மைப் புணர்ந்த அக்காலம்போல இல்லாது இப்போது பிரிந்திருப்பதால் நம் வளைகள் நெகிழ் கின்றன.

கருத்து

'தலைவன் பிரிந்திருப்பதால் தலைவியின் கை வளைகள் நெகிழ் கின்றன.'

குறிப்பு

'காவல் மிகுதியாய் உள்ளது. முன்போல் உன்னைக் காண இயலவில்லை. வளைகள் நெகிழ்கின்றன. விரைவில் மணந்துகொள்' எனத் தலைவனுக் குணர்த்துதலே தோழியின் நோக்கம்.

சொற்பொருள்

1. ஓங்கல் - மலை; இறுவரை - பக்க மலை; காந்தள் - காந்தள் மலர்; கடி கவின - மிகவும் அழகுடன் பூத்துள்ளன. (கவின் - அழகு).
2. ஓடி - (மேகத்திடையே மின்னல்) பாம்புபோல ஓடுகிறது; உரும் - இடி; கண்டிரங்கும் - (பிரிந்திருக்கும் காதலர்) இவற்றைக் கண்டு வருந்துவர்.
3. புணர்ந்த - களவொழுக்கத்தில் புணர்ந்த; போலா - இல்லாது.
4. ஈங்கு - இப்பொழுது; நெகிழ்ந்த - கழன்றன.

தலைவி கூற்று

கைந்நிலை 55 **புல்லங்காடனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகள் தோழியிடம் கூறியது.

கூற்று விளக்கம்

“தலைவன் அன்று என்னைத் தழுவாதிருந்தனனாயின் இன்று என் வளையல்கள் கழன்று விழ வாய்ப்பில்லை” என்று தலைவி கூறியது.

கொக்(கு)ஆர் கொடுங்கழிக் கூடுநீர்த் தண்சேர்ப்பன்
நக்காங்(கு) அசதி நனியாடி – தக்க
பொருகயல் கண்ணினாய் புல்லான் விடினே
இருகையும் நில்லா வளை.

தெளிவுரை

“கயல்மீன் போன்ற கண்களைக் கொண்டவளே! கொக்குகள் நிறைந்த, வளைந்த உப்பங்கழிகள் பொருந்திய நீர்த்துறையை யுடைய கடற்கரைத்தலைவன், அன்று என்னைப் பார்த்து நகைத்து விளையாட்டாய்ப் பேசி என்னைத் தழுவாதிருந் திருந்தால் இன்று என் இரு கைகளிலும் உள்ள வளையல்கள் கழலாது நின்றிருக்கும். அன்று என்னைத் தழுவியதால் இன்று பிரிவுத்துன்பத்தினால் என்னிரு கைவளையல்களும் நில்லாமல் கழன்றுவிழுகின்றன” என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

‘தலைவன் அன்று என்னைத் தழுவாதிருந்திருந்தால் இன்று என் வளையல்கள் கழன்று விழா.’

விளக்கம்

இதன்மூலம் பிரிவுத்துன்பத்தைச் சுட்டி, வரைந்துகொள்ள வேண்டுகிறாள், தலைவி.

சொற்பொருள்

1. கொக்குஆர் - கொக்குகள் நிறைந்த; கொடுங்கழி - வளைந்த உப்பங்கழி; சேர்ப்பன் - கடல்நிலத்திற்குத் தலைவன்.

2. அசதி ஆடல் - நகைத்துப் பேசுதல்.
3. பொருகயல் - ஒன்றையொன்று மோதும் கயல்; புல்லுதல் - தழுவுதல்;
4. வளை - வளையல்.

தலைவி கூற்று

குறுந்தொகை 239 **ஆசிரியன் பெருங்கண்ணனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

சிறைப்புறம்.

கூற்று விளக்கம்

தலைவன் குறியிடத்தே வந்து ஒரு பக்கம் ஒதுங்கியிருத்தலைக் கண்ட தலைவி, அவன் தன்னை விரைவாய் வரைந்துகொள்ளுதலை விரும்பி, அவன் கேட்டுணருமாறு தன் தோழியிடம் கூறியது.

தொடிநெகிழ்ந் தனவே; தோள்சா யினவே;
விடும்நாண் உண்டோ? தோழி! விடர்முகைச்
சிலம்புடன் கமழும் அலங்குகுலைக் காந்தள்
நறுந்தாது ஊதும் குறுஞ்சிறைத் தும்பி
பாம்புஉமிழ் மணியின் தோன்றும்
முந்தூழ் வேலிய மலைகிழ வோற்கே.

தெளிவுரை

பிளவுகளையும் குகைகளையும் கொண்ட மலைச்சாரல் முழுவதிலும் காந்தள் மலரின் மணம் கமழும்; அக்காந்தள் பூக்களின் நறிய பூந்தாதினை ஊதுகின்ற வண்டு, பாம்பால் உமிழப்படுகின்ற மணியைப் போலத் தோற்றமளிக்கும். மூங்கிலை வேலியாய்க் கொண்ட அத்தகைய மலைகளைக் கொண்டுள்ள நம் தலைவன்பொருட்டு என் வளைகள் நெகிழ்ந்தன; தோள்களும் மெலிந்தன; இனி நான் துறத்தற்கு நாணமும் இல்லை; அது முன்பே தொலைந்துவிட்டது.

கருத்து

‘தலைவன் பிரிவால் என் கை வளைகள் நெகிழ்ந்தன; தோள்கள் மெலிந்தன.’

குறிப்பு

தொடி நெகிழ்தலாலும் தோள் மெலிந்திருப்பதனாலும் தன் களவுறவை அறிந்து பெற்றோர் இற்செறிப்பர்; அலவற்பெண்டிரின் அலருரையும் மிகும் என்பதைத் தலைவி உணர்த்தினாள்.

மலரை ஊதி அதன் மணத்தை எங்கும் பரவச்செய்யும் தும்பிபோலத் தலைவன் தலைவியின் நலத்தை நுகர்ந்து பழியை எங்கும் பரவச்செய்து விட்டான்.

காந்தளில் தும்பி பொருந்தியிருப்பது பாம்பும் மணியும்போலத் தோன்றி அஞ்சத்தக்க தோற்றத்தைத் தந்தது. ஆதலால், தலைவனோடு தலைவி கொண்டுள்ள ஒன்றிய நட்பும் அஞ்சுதற்குரியதாயிற்று.

‘முந்தூழ் வேலி’ என்னும் தொடர், தலைவி புகற்கரிய காவலைக் கொண்டவள் என்பதைப் புலப்படுத்துகிறது.

நீல நிறமுள்ள மணி மலர்த்தாது பட்டுப் பொன்நிறமாய்த் தோன்றுதல் போலத் தலைவியும் தலைவனை வரைந்துகொண்டு பொலிவு பெற வேண்டும் என்பதாம்.

சொற்பொருள்

1. தொடி - வளையல்; நெகிழ்ந்தன - நழுவின; சாயின - மெலிந்தன.
2. விடும் நாண் - இனிமேலும் விடுவதற்குரிய நாணம்; விடர் - பிளவு; முகை - குகை.
3. சிலம்புடன் - மலைச்சாரல் முழுவதிலுமே; கமழும் - மணக்கும்; அலங்குதல் - அசைதல்.
4. நறுந்தாது - நல்ல பூந்தாது; குறுஞ்சிறை - சிறிய சிறகு.
5. பாம்பு உமிழ் - பாம்பால் உமிழப்படுகின்ற; மணியின் - நீல மணி போலும்.
6. முந்தூழ் - மூங்கில்.

தலைவி கூற்று

திணைமொழி ஐம்பது 47 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழியால் சொல்லெடுக்கப்பட்டுத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியைக் காணச் சிறைப்புறமாய் வந்து நின்றபொழுது, தோழி, தலைவியிடம் ‘உன் குறையினைத் தலைவனிடம் கூறு’ என்றபோது, தலைவன் கேட்குமாறு தோழியிடம் தலைவி கூறியது.

(சொல்லெடுக்கப்படல் - ‘உன் குறையை நீயே சொல்’ எனத் தோழி கூற, தலைவி கூறியது.)

அணிபூங் கழிக்கானல் அற்றைநாள் போலான்
மணிஎழில் மேனி மலர்பசப்(பு) ஊரத்
துணிகடல் சேர்ப்பன் துறந்தான்கொல் தோழி!
தணியும்என் மென்தோள் வளை.

தெளிவுரை

“தோழியே! அழகிய பூக்கள் தெளிவுடன் கூடிய கடற் கரைக்குத் தலைவன், கழிகளை அடுத்த கடற்கரைச்சோலையில் களவுப் புணர்ச்சி நடந்த அந்தக் காலத்தில் நம்மிடம் அன்புடன் நடந்துகொண்டான். இப்போது அவ்வாறிலன். செம்மணி போன்ற அழகுள்ள என் உடலில் பீர்க்கம் பூவைப் போன்ற பசலை நிறம் பரவுமாறு பிரிந்து சென்றுள்ளான். அதனால் என் தோள்களில் உள்ள வளையல்களும் கழன்று விழுந்தன” எனத் தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

‘தலைவன் அன்றுபோல இன்று அன்புடன் இலன்; அதனால் உடலிளைத்து வளைகள் கழன்றன.’

குறிப்பு

தலைவியின் உரை கேட்டு, அவள் குறை தீரத் தலைவன் மணம் பேசி வருவான்.

சொற்பொருள்

1. அணிபூ - அழகிய பூக்கள்; அற்றை நாள் - களவுப்புணர்ச்சி நடந்த அந்த நாள்.
2. மணி எழில் - செம்மணி போன்ற அழகுள்ள; மலர் - பீர்க்கம் பூப்போல; பசப்பு ஊர - பசலை நிறம் படர.
3. துணி கடல் - தெளிந்த கடல்; துறந்தான் - பிரிந்து சென்றான்.
4. தணியும் - கழன்று விழும்; வளை - வளையல்.

தலைவி கூற்று

குறுந்தொகை 299 **வெண்மணிப்பூதியார்**

திணை : நெய்தல்

கூற்று

சிறைப்புறமாகத் தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் வந்து குறியிடத்தே ஒரு பக்கமாய் ஒதுங்கி நிற்பதறிந்த தலைவி, தன் தோள் மெலிவினை அவனுக்கு உணர்த்தி, அவன் எப்போதும் பிரியாது தன்னுடன் இருக்க வேண்டும் என்பதனை அவன் கேட்கும் வண்ணம் தோழியிடம் கூறியது.

இதுமற்று எவனோ தோழி! முதுநீர்ப்
புணரி திளைக்கும் புள்இமிழ் கானல்,
இணர்அவிழ் புன்னை எக்கர் நீழல்,
புணர்குறி வாய்த்த ஞான்றைக் கொண்கற்
கண்டன மன்எம் கண்ணே; அவன்சொல்
கேட்டன மன்எம் செவியே; மற்றுஅவன்
மணப்பின் மாண்நலம் எய்தி,
தணப்பின் ஞெகிழ்ப,என் தடமென் தோளே.

தெளிவுரை

தோழியே! பழமையான நீரினைக் கொண்ட கடலலைகள் வந்து மோதிச் செல்வதும், பறவைகள் ஒலி செய்துகொண் டிருப்பதுமாகிய கடற்கரைச்சோலையில், கொத்தாய் மலரும் புன்னை மரங்களுள்ள மணல்மேட்டு நிழலில், இருவரும் கூடி மகிழும் குறி வாய்க்கப்பெற்றபோது, தலைவனை என் கண்கள் கண்டன; என் செவிகள் அவன் சொற்களைக் கேட்டு இன்புற்றன. ஆனால், மென்மைத்தன்மை கொண்ட என் தோள்களோ அவன் கூடினால் சிறந்த அழகினையும், பிரிந்தால் சோர்வினை யும் பெற்று விடுகின்றனவே! இஃது என்ன வியப்பு?

கருத்து

'என் தோள்கள் தலைவனுடன் கூடினால் நலனையும், பிரிந்தால் தோள் வளை கழலுமாறு சோர்வினையும் பெற்றுவிடுகின்றனவே! அஃது ஏன்?'

விளக்கம்

அவனைக் கண்ட கண்களும், அவன் சொற்களைக் கேட்ட செவிகளும் வாளாவிருப்ப, தலைவனைக் கூடின தோள்கள் மட்டும் நலத்தைப் பெறுவதும் பிரிந்தால் சோர்வினைப் பெறுவதும் எதனால்?

அவனைக் கண்டவை தலைவியின் கண்கள்; அவன் சொற் களைக் கேட்டவை அவள் செவிகள்; அவ்வாறிருக்க, தன் தோள் களுக்குத் தண்டனை ஏன் என்று தலைவி கேட்பது, தலைவன் தன்னைப் பிரியலாகாது என்பதை வற்புறுத்துவதற்கே.

சொற்பொருள்

1. இஃது எவன்? - இஃது என்ன வியப்பு; முதுநீர் - கடல்.
2. புணரி - அலை; திளைக்கும் - மோதி விளையாடும்; புள் - பறவை; இமிழ் - ஒலிக்கின்ற.
3. இணர்அவிழ் - பூங்கொத்துகள் மலர்ந்த; எக்கர் - மணல்மேடு.
4. புணர்குறி - கூடி மகிழும் குறி; ஞான்றை - பொழுது; கொண்கன் - தலைவன்.
7. மணப்பின் - கூடினால்; மாண் நலம் - சிறந்த அழகு.
8. தணப்பின் - பிரிந்தால்; ஞெகிழ்ப - சோர்வுறுகின்றன; தடமென் - பரந்த மெல்லிய.

தோழி கூற்று

குறுந்தொகை 357 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி, கிழவன் கேட்கும் அண்மையனாகக் கிழத்திக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் சிறைப்புறத்தே கேட்கும் தொலைவில் நிற்பதறிந்த தோழி, தலைவியிடம், 'உன் தோள்கள் தலைவனுடன் நட்புக்கொள்வதற்கு முன் நல்லனவாய் இருந்தன' என்று கூறியது.

முனிபடர் உழந்த பாடுஇல் உண்கண்
பனிகால் போழ்ந்து, பணைஎழில் ஞெகிழ்தோள்
மெல்லிய ஆகலின் மேவரத் திரண்டு,
நல்ல என்னும் சொல்லை மன்னிய
ஏனல்அம் சிறுதினை காக்கும் சேணோன்
ஞெகிழியில் பெயர்ந்த நெடுநல் யானை
மீன்படு சுடர்ஒளி வெரூஉம்
வான்தோய் வெற்பன் மணவா ஊங்கே.

தெளிவுரை

"தினைப்புனத்தில் சிறுதினையைக் காக்கப் பரண்மேலிருந்து வீசிய கொள்ளிக்கட்டையைக் கண்டு அஞ்சி ஓடிய பெரிய யானை, விண்ணிலிருந்து விழும் எரி நட்சத்திரத்தின் ஒளியைக் கண்டு அஞ்சும் வானளாவிய மலையையுடையவன், தலைவன். அவன் உன்னைக் கூடி மகிழ்வதற்கு முன்பு, மூங்கில் போன்று திரண்ட உன் தோள்கள், 'நல்ல அழகிய தோள்கள்' என்று அனைவரும் பாராட்டும்படி இருந்தன. இப்போது வெறுத்தற் குரிய துன்பத்தால் வருந்தி, உறக்கமின்றி, மையுண்ட உன் கண்கள் சிந்தும் நீர்த்துளிகள் தோள்களின் குறுக்கே வீழ்ந்து ஓடுவதால் அவை மெலிந்து விட்டன" என்று தோழி தலைவி யிடம் கூறினாள்.

கருத்து

"தலைவனைக் காணா முன்பு 'நல்லன' என்று சொல்லப்பட்ட தலைவியின் தோள்கள் இப்போது தலைவி துயருழந்து அழுதலால் மெலிந்து, தோள் வளைகள் கழன்று விழுகின்றன."

விளக்கம்

ஒருமுறை ஒரு பொருளைக் கண்டு அச்சமுற்ற ஒருவர், அப் பொருளைப் போன்ற வேறு எதைக் கண்டாலும் அஞ்சுதல் இயல்பு. ஆதலின், முதலில் கொள்ளிக்கட்டையைக் கண்டு அஞ்சிய யானை, அடுத்து விண்ணிலிருந்து விழும் எரிநட்சத் திரத்தைக் கண்டும் அஞ்சியது.

குறிப்பு

தலைவி தோள் நலம் இழந்தாள் எனக் கேட்கும் தலைவன், அதற்குக் காரணம் தான் வரைந்துகொள்ளாததே என்பதை உணர்ந்து, அவளை வரைதற்கு விரைவான்.

சொற்பொருள்

1. முனிபடர் - வெறுத்தற்குரிய துன்பத்தால்; உழந்த - வருந்திய; பாடு இல் - துயிலுதல் இல்லாத; உண்கண் - மையுண்ட கண்.
2. பனி - நீர்த்துளி; கால் போழ்ந்து - குறுக்கே சென்று; பணை எழில் - மூங்கில் போன்று அழகிய; ஞெகிழ் தோள் - அழகு சோம்பிய தோள்.
3. மெல்லிய ஆகலின் - (இப்பொழுது) மெலிந்து இளைத்துவிட்டன; மேவரத் திரண்டு - பிறர் விரும்பும்படி பருத்து.
4. நல்ல - அழகாய் இருக்கின்றன; என்னும் சொல்லை மன்னிய - என்னும் சொற்களை அடைந்தன.
5. ஏனல் - தினைப்புனத்தில்; அம் சிறுதினை - அழகிய சிறிய தினை; காக்கும் - காவல் புரிகின்ற; சேணோன் - பரண்மேல் உள்ளவன்.
6. ஞெகிழியில் - கொள்ளிக்கட்டை(யினால்); பெயர்ந்த - அஞ்சிப்போன.
7. மீன்படு - மீன் விழுகின்ற; சுடர் ஒளி - மிகுந்த ஒளி; வெரூஉம் - அஞ்சும்.
8. வான்தோய் - வானளாவிய; வெற்பன் - மலைநாடன்; மணவா ஊங்கு - (உன்னோடு) பொருந்துதற்கு முன்பு.

தலைவி கூற்று

நற்றிணை 136 **நற்றங்கொற்றனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

சிறைப்புறமாகத் தலைமகள் தோழிக்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் சிறைப்புறத்தில் வந்து நிற்பதையறிந்த தலைவி, அவனும் கேட்டுணருமாறு தன் தோழியிடத்துக் கூறியது.

திருந்துகோல் எல்வளை வேண்டியான் அழவும்,
அரும்பிணி உறுநர்க்கு, வேட்டது கொடாஅது,
மருந்துஆய்ந்து கொடுத்த அறவோன் போல,
என்ஐ வாழிய, பலவே! பன்னிய
மலைகெழு நாடனொடு நம்மிடைச் சிறிய
தலைப்பிரிவு உண்மை அறிவான் போல,
நீப்பநீங் காது வரின்வரை அமைந்து,
தோள்பழி மறைக்கும் உதவிப்
போக்குஇல் பொலந்தொடி செறீஇ யோனே.

தெளிவுரை

"தோழியே! திருத்தமாய்ச் செய்யப்பெற்றனவும் ஒளி பொருந்தியனவுமான தோள்வளைகளை அணிய விரும்பி அவை கிடைக்காமையால் அழுதேன்.

"தீர்த்தற்கரிதான நோயுற்றவர்க்கு அவர் விரும்பியதனைக் கொடாது, அந்நோய் தீர்த்தற்குரிய மருந்தினையே ஆராய்ந்து கொடுத்து நோயினைப் போக்குகின்ற அற உள்ளம் கொண்ட மருத்துவனைப் போன்றவர், நம் தந்தை.

"யாவராலும் புகழப்படுகின்ற மலைநாடனாகிய நம் காதலனும் நாமும் சில காலம் பிரிந்திருப்பதைத் தந்தையும் அறிந்தனர் போலும்!

"ஆதலால், தலைவன் பிரிந்த காலத்து நம் தோள்மெலிவால் கழன்று விழாமல் இருக்கும்படியான தன்மை கொண்ட

வளையல்களைச் செய்து அணிவித்துத் தோளுக்கு நேரும் பழியையும் என் துயரையும் மாற்றினார். அவர் பன்னெடுங் காலம் வாழ்க!"

கருத்து

'நான் தோள்வளை வேண்டுமெனத் தந்தையிடம் கூறினேன். அவர் காதலர் பிரிவினால் என் உடம்பு நன்கு இளைத்தாலும் கழன்றுவிழாத வண்ணம் சிறிய வளையாகச் செய்து தந்தார். அவர் வாழ்க!'

குறிப்பு

தலைவன் பிரிந்த காலத்தில் தோள் மெலிந்து வளைகள் கழன்று விழுவது இயல்பு. அங்ஙனம் பிரிந்தபோதும் புறத்தார், மேனி வேறுபாட்டினை உணராவகையில் தோளை விட்டுப் பிரியாதவாறு சிறிய வளையல்களாகத் தந்தை தந்தவை அமைந்துவிட்டன எனக் காதல் நோயினால் தன் தோள்கள் வாடி மெலிந்திருப்பதை நுண்ணிதாய்ப் புலப்படுத்திக் காட்டுகிறாள், தலைவி.

(தோள்மெலிவு நேராதிருக்க விரைவில் மணம் புரிந்துகொள்ள வேண்டும் என்பதையும், அதற்கு அவள் தந்தையும் உடன்படுவார் என்பதையும் தலைவி குறிப்பாய்ப் புலப்படுத்தினாள்.)

சொற்பொருள்

1. திருந்துகோல் - அழகுறத் திரண்டு விளங்கும் (திருத்தமாய்ச் செய்யப் பெற்ற); எல்வளை - ஒளி பொருந்திய தோள்வளை.
2. அரும்பிணி - தீர்த்தற்கு அரிதான நோய்; வேட்டது - அவர் விரும்பியது.
3. ஆய்ந்து - தேர்ந்தெடுத்து; அறவோன் - அற உள்ளம் கொண்டவன் (மருத்துவன்).
4. ஐ - தந்தை; பலவே - பன்னெடுங்காலம்; பன்னிய - புகழ்ந்து பேசப்படுகின்ற.
5. சிறிய - சில காலம்.
6. தலைப்பிரிவு - விட்டுப் பிரிந்திருத்தல்; உண்மை - உண்மையினை.
7. நீப்ப - நீக்கவும்; நீங்காது - கழலாது; வரின் வரை - அவன் வரும் எல்லை வரை; அமைந்து - கழலாதிருந்து.
8. தோள் பழி - தோள்களால் நமக்கு உண்டாகும் பழியினை; மறைக்கும் உதவி - மறைக்கும் உதவியைச் செய்யும் வகையில்.

9. போக்குஇல் - எக் காலத்தும் கழன்றுவிடாத; பொலந்தொடி - பொன்னாற்செய்த தோள்வளையல்; செறீஇயோன் - செறிவாய் அணிவித்தவன்.

தலைவி கூற்று

குறுந்தொகை 269 **கல்லாடனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் சிறைப்புறத்தானாகத் தலைவி, 'எந்தையும் யாயும் இப்போது இலராதலின் என்னைக் காணுதற்கு இதுவே ஏற்ற நேரம் என யாரேனும் அவனிடம் சென்று சொன்னால் நன்றாம்' எனத் தோழியிடம் கூறியது.

சேயாறு சென்று, துனைபரி அசாவாது,
உசாவுநர்ப் பெறினே நன்றுமன் தில்ல
வயச்சுறா எறிந்த புண்தணிந்து, எந்தையும்,
நீல்நிறப் பெருங்கடல் புக்கனன்; யாயும்
உப்பை மாறி வெண்ணெல் தரீஇய
உப்புவிளை கழனிச் சென்றனள்; அதனால்,
பனிஇரும் பரப்பின் சேர்ப்பற்கு,
'இனிவரின் எளியள்' என்னும் தூதே.

தெளிவுரை

தோழியே! சுறாமீன் தாக்கியதால் ஏற்பட்ட புண் ஆறித் தந்தை நீல நிறக் கடலில் மீன் வேட்டைக்குச் சென்றுவிட்டார். என் அன்னையும் உப்பை விற்று நெல்லை வாங்குவதற்காக உப்பினைச் சேகரித்து வர உப்பளம் சென்றுள்ளாள். ஆதலின், குளிர்ந்த நீர்ப்பரப்பினையுடைய தலைவனிடத்தில், 'இப்பொழுது வந்தால் எளிதில் தலைவியினைக் கூடலாம்' என்னும் தூது மொழியினைச் சேய்மையில் தலைவனிருக்கும் இடத்திற்குச்

சோர்வுறாது விரைந்து நடந்துபோய்க் கூறுவார் எவரேனும் உளர் எனில் மிகவும் நல்லது.

கருத்து

'தந்தையும் தாயும் வீட்டில் இலர். தலைவன் என்னைக் கண்டு மகிழ்தற்கு ஏற்ற வேளை இதுவே.'

விளக்கம்

தலைவியைப் பெற்ற தந்தையைச் சுறாமீன் தாக்கியதால் புண்பட்டுப் பல நாள் வீட்டில் இருந்தார். அவருக்கு ஆவன செய்யும் கடப்பாட்டினால் தாயும் வீட்டிலிருந்தாள். அதனால் சில நாள்கள் தலைவியால் குறித்தபடி குறியிடத்திற்கு வர இயலவில்லை. இப்போது அத்தகைய சூழ்நிலை இல்லை என்பதைத் தலைவி தோழியிடம் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. சேய்ஆறு சென்று - நீண்ட வழியிலே நடந்து சென்று; துனைபரி - விரைந்து சென்றதனால்; அசாவாது - சோர்வுறாது.
2. உசாவுநர் - (தலைவனிடம்) விவரம் கூறுவோர்; பெறின் - பெற்றால்.
3. வயச்சுறா - வலிமை மிக்க சுறா மீன்; எறிந்த - தாக்கியதால்; தணிந்து - ஆறி.
4. கடல் புக்கனன் - கடலுக்குள் சென்றுவிட்டான்.
5. மாறி - விற்று; தரீஇய - வாங்கி வருவதற்காக.
6. உப்புவிளை கழனி - உப்பளம்.
7. பனி இரும் பரப்பு - குளிர்ந்த பெரிய கடல் பரப்பிற்கு; சேர்ப்பன் - தலைவன்.
8. இனி வரின் - இப்பொழுது வந்தால்; எளியள் - எளிதில் தலைவியைக் கூடலாம்; தூது - தூதுச்செய்தி.

தலைவி கூற்று

குறுந்தொகை 219 **வெள்ளூர் கிழார் மகனார் வெண்பூதியார்**

திணை : நெய்தல்

கூற்று

சிறைப்புறம்.

கூற்று விளக்கம்

தலைவன் சிறைப்புறத்தில் இருப்பத் தலைவியின் துயர மிகுதியை அவன் உணரும்பொருட்டு, 'தலைவன் நம் துயர் நீக்க இதுவே தக்க நேரம்' என்று தோழியிடம் சொல்லியது.

பயப்புஎன் மேனி யதுவே; நயப்புஅவர்
நார்இல் நெஞ்சத்து ஆர்இடை யதுவே;
செறிவும் சேண்இகந் தன்றே; அறிவே,
'ஆங்கண் செல்கம் எழுக'என, ஈங்கே,
வல்லா கூறி இருக்கும்; முள்இலைத்
தடவுநிலைத் தாழைச் சேர்ப்பற்கு
இடம்மன் தோழி!'எந் நீரிரோ' எனினே.

தெளிவுரை

தோழியே! பசலை நிறம் என் உடலிடத்தில் உள்ளது. எனது காதலோ அன்பற்ற தலைவன் நெஞ்சத்தில் செல்லுதற்கரிய இடத்தில் உள்ளது. எனது உள்ளச்செறிவாகிய நாணமும் நெடுந்தொலைவுக்கு நீங்கிப் போய்விட்டது. என் அறிவோ, 'தலைவன் இருக்கும் இடத்திற்குச் செல்வோம், புறப்படு' என்று செய்ய இயலாத ஒன்றைக் கூறியபடியே இருக்கிறது.

முள் அமைந்த மடல்களையும் பருத்த அடியையும் பெற்ற தாழை மரங்களைக் கொண்ட கடற்றுறைத் தலைவனுக்கு, 'நீவிர் எந்நிலையில் இருக்கின்றீர்?' எனக் கேட்டு நம் குறை தீர்க்க இதுவே தக்க சமயம் ஆகும்.

கருத்து

'தலைவன் நம் குறையைத் தீர்த்தற்கு ஏற்ற காலம் இதுவே!'

குறிப்பு

தாழை மலர்ந்தமையறிந்து பயன்கொள்வாரைப்போல, தலைவியை நுகர்தற்கு ஏற்ற செவ்வியறிந்து தலைவன் செயல்பட வேண்டும் எனக் குறிக்கப்பட்டது.

தாழைக்கு முள் காவலாய் இருப்பினும் அதற்கஞ்சாது பறித்துச் சூடுவாரைப் போல, தலைவிக்குக் காவல் மிகுந்துள்ள போதிலும் செவ்வி யறிந்து அவளை மணமுடித்துக்கொள்ள வேண்டும் என்னும் குறிப்புப் பொருள் காண்க.

சொற்பொருள்

1. பயப்பு - பசப்பு; நயப்பு - காதல்.
2 நார்இல் - அன்பு இல்லாத; ஆர்இடை - செல்லுதற்கரிய இடம்.
3. செறிவு - உள்ளச்செறிவு, நாணம்; சேண் - நெடுந்தொலைவு; இகந்தன்று - நீங்கிப் போயிற்று.
4. ஆங்கண் - அவரிருக்கும் இடம்; செல்கம் - செல்வோம்; எழுக - புறப்படு; ஈங்கே - இங்கு.
5. வல்லா - செய்ய இயலாத ஒன்றை.
6. தடவு நிலை - அகன்ற அடிப்பாகம்.
7. இடம் - இது தக்க சமயம்; எந் நீரிரோ - எந் நிலையில் இருக்கின்றீரோ? (நீர்மை - நிலை).

தோழி கூற்று

குறுந்தொகை 123 **ஐயூர் முடவன்**

திணை : நெய்தல்

கூற்று

பகற்குறியிடத்து வந்த தலைமகனைக் காணாத தோழி, அவன் சிறைப்புறத்தானாதல் அறிந்து தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பகற்குறியிடமாகிய புன்னை மர நிழலுக்குத் தலைவியும் தோழியும் வந்தனர்; தலைவன் அப்போது வந்து சேரவில்லை. சற்று நேரத்தில் அவன் வந்து அயலே மறைந்திருப்பதைக் கண்ட தோழி, அவன் கேட்கும்படியாய்த் தலைவியிடம் கூறியது.

இருள்திணிந் தன்ன ஈர்ந்தண் கொழுநிழல்,
நிலவுக்குவிந் தன்ன வெண்மணல் ஒருசிறை,
கருங்கோட்டுப் புன்னைப் பூம்பொழில் புலம்ப,
இன்னும் வாரார்; வரூஉம்,
பல்மீன் வேட்டத்து என்ஐயர் திமிலே.

தெளிவுரை

தலைவியே! நிலவொளியைத் திரட்டி ஓரிடத்திலே வைத்தது போன்ற வெண்மணற்பரப்பு; அதன் ஒரு பக்கத்தே இருளைச் செறித்து வைத்தது போன்று ஈரமும் குளிர்ச்சியும் மிக்க கொழுவிய நிழல்; அந்நிழலைத் தந்த கரிய கிளைகளைக் கொண்ட புன்னை மரங்கள் மிகுந்துள்ள பூஞ்சோலையாகிய இக்குறியிடத்தில் நம்மைத் தனித்து நிற்குமாறு செய்துவிட்டு நம் தலைவர் இன்னும் வந்து சேர்ந்தாரிலர். பல வகையான மீன்களை அகப்படுத்திக்கொண்டு நம் தமையன்மாருடைய படகுகள் அதோ, கடலில் வந்துகொண்டிருக்கின்றன.

கருத்து

தலைவன் இப்பொழுதே வந்தால்தான் நம்மைக் காண இயலும்.

விளக்கம்

"தலைவியே! நம் தலைவர் நாம் குறித்தபடி புன்னை மரத்தின் நிழலாகிய பகற்குறியிடத்திற்கு இன்னும் வரவில்லை; அவர் இப்பொழுதே வருவாராயின், அவரோடு நாம் அளவளாவுதல் எளிதாம். அதோ, கடலில் நம் தமையன்மார் படகுகள் தோன்று கின்றன; தலைவன் இன்னும் சற்று நேரம் தாழ்ந்து வருவாராயின் அவர் நம்மைக் காண்டல் அரிது" எனத் தோழி, சிறைப்புறத்தே நிற்கும் தலைவன் கேட்கும்படியாய்க் கூறினாள்.

சொற்பொருள்

1. இருள் – இருட்டு; திணிந்தன்ன – செறிந்திருப்பது போன்ற, திணித்து வைத்திருப்பது போன்ற; ஈர்ந்தண் - ஈரமும் குளிர்ச்சியும்; கொழு நிழல் – வளமான நிழல்.
2. ஒரு சிறை – ஒரு பக்கம்.

3. கருங்கோடு - கரிய கிளை; புன்னை - புன்னை மரம்; புலம்ப - (நாம்) தனித்து நிற்க.
4. வரூஉம் - வந்துகொண்டிருக்கின்றன.
5. வேட்டத்து - வேட்டையாட; ஐயர் - தமையன்மார்; திமில் - படகு.

தலைவி கூற்று

குறுந்தொகை 318 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

கிழவன் கேட்கும் அண்மையனாகத் தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவியை மணந்துகொள்ளாது களவிலே பெறுகின்ற இன்பத்தை விரும்பியவனாகவே தலைவன் இருப்பதறிந்த தலைவி பெரிதும் கவலை கொள்கிறாள். ஒரு நாள், அவன் சிறைப்புறத்தே இருப்பதையறிந்து, தலைவி தோழியிடம் தன் கவலையை அவனும் கேட்டுத் தெளிவுகொள்ளுமாறு கூறியது.

எறிசுறாக் கலித்த இலங்குநீர்ப் பரப்பின்,
நறுவீ ஞாழலொடு புன்னை தாஅய்,
வெறிஅயர் களத்தினில் தோன்றும் துறைவன்
குறியான் ஆயினும், குறிப்பினும், பிறிதுஒன்று
அறியாற்கு உரைப்பலோ, யானே? எய்த்தஇப்
பணைஎழில் மென்தோள் அணைஇய அந்நாள்
பிழையா வஞ்சினம் செய்த
கள்வனும், கடவனும், புணைவனும், தானே.

தெளிவுரை

எதிர்ப்பட்டவரைத் தாக்கும் சுறாமீன்கள் மிகுந்துள்ள ஒளி பொருந்திய கடல்பரப்பில் நறுமணம் கமழும் ஞாழற் பூக்களுடன் புன்னை மலர்களும் பரவிக் கிடந்து, வெறியாட்டு எடுக்கும் இடத்தினைப் போன்று தோன்றுகின்ற துறையை யுடையவன், நம் தலைவன். அவன் என்னை மணந்து

கொள்ளுதலைக் கருதாதவனாகவோ கருதியவனாகவோ இருக்கட்டும். என்னை மணம் பேசுதற்குப் பிறர் ஒருவர் வருகின்ற செய்தியை அறியாத அத்தலைவனுக்கு அதனை நானே எடுத்துச் சொல்லவேண்டுமா? இப்போது இளைத்துள்ள, மூங்கிலைப் போன்ற அழகிய மெல்லிய இந்தத் தோள்களைத் தழுவி மகிழ்ந்த முதல் நாளிலே, 'இனிப் பிரியேன்; பிரியின் உயிர் வாழேன்' என்று சூளுரைத்த கள்வன் அவன்தானே! தான் உரைத்த உறுதிமொழியை நிறைவேற்றும் கடப்பாட்டினைக் கொண்டிருப்பவனும், துன்பக்கடலைக் கடக்க நமக்கொரு தெப்பமாய் இருக்க வேண்டியவனும் அவனேதானே! (எனத் தலைவனுக்குத் தலைவி உணர்த்துகிறாள்; சொல்லிப் பயனில்லை; தானே அவன் அறிய வேண்டும் என்பதையும் குறிப்பிடுகிறாள்.)

கருத்து

தலைவன், தான் பிரியேன் என்று சொன்ன உறுதிமொழியைத் தவறாது நிறைவேற்ற வேண்டும்.

விளக்கம்

அந்நாளில் சூளுரைத்தவனும், அதனை நிறைவேற்றும் கடப்பாடு கொண்டவனும், நமக்குப் புணை போன்றவனும் அவனே. ஆதலான், வரைந்துகொண்டு இல்லறம் நடத்த முற்பட வேண்டியவன் அவனே! அவ்வாறிருக்க, நான் என்ன கூற இயலும்?

சொற்பொருள்

1. எறிசுறா - எதிர்ப்பட்டவரைத் தாக்கவல்ல சுறா மீன்கள்; கலித்த - மிகுந்த; இலங்கு நீர்ப்பரப்பு - விளங்குகின்ற கடற்பரப்பு.
2. நறுவீ - நறுமணம் கமழும் மலர்; ஞாழல் - ஞாழல் பூவோடு; புன்னை - புன்னை மலர்களும்; தாஅய் - பரவிக் கிடந்து.
3. வெறிஅயர் களம் - வெறியாட்டு எடுக்கும் இடம்.
4. குறியான் - என்னை மணந்துகொள்ளுதலைக் கருதானாயினும்; குறிப்பினும் - என்னை மணந்துகொள்ளுதலைக் கருதுபவனாயினும்; பிறிது ஒன்று - பிறர் ஒருவர் மணம் பேச வருகிறார் என்னும் செய்தியை.
5. உரைப்பலோ யானே - நானே எடுத்துச் சொல்ல வேண்டுமோ?; எய்த்த - இளைத்துள்ள.

6. பணை எழில் - மூங்கில் போலும் அழகினைப் பெற்ற; அணைஇய - தழுவிய.
7. பிழையா வஞ்சினம் - சொன்ன சொல் தவற மாட்டேன் என்று கூறிய சூளுரை.
8. கடவன் - கடப்பாடுள்ளவன்; புணைவன் - தெப்பமாய் இருக்க வேண்டியவன்.

தலைவி கூற்று

அகநானூறு 260 **மோசிக்கரையனார்**

திணை : நெய்தல்

கூற்று

இரவுக்குறிக்கண் தலைமகன் சிறைப்புறமாகத் தோழியாற் சொல் லெடுக்கப்பட்டுத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியை மணந்துகொள்வதில் கருத்தில்லாத தலைவன், இரவுக்குறியில் வந்து போனான். அவன் தலைவியை மணந்துகொள்ள வேண்டும் என்று வற்புறுத்தக் கருதிய தோழி, அவன் சிறைப்புறத்தானாக வந்து நிற்க, அதனை அறியாதவள்போல் தலைவியிடம் கூற, அது கேட்ட தலைவி, தானும் சில சொல்லி முடித்தது.

மண்டிலம் மழுக, மலைநிறம் கிளர,
வண்டினம் மலர்பாய்ந்து ஊத, மீமிசைக்
கண்டல் கானல் குருகினம் ஒலிப்ப,
கரைஆடு அலவன் அளைவயின் செறிய,
திரைபாடு அவிய, திமில்தொழில் மறப்ப,
செக்கர் தோன்ற, துணைபுணர் அன்றில்
எக்கர்ப் பெண்ணை அகமடல் சேர,
கழிமலர் கமழ்முகம் கரப்ப, பொழில்மனைப்
புன்னை நறுவீ பொன்நிறம் கொளாஅ
எல்லை பைப்பயக் கழிப்பி, எல்உற,
யாங்கு ஆகுவள்கொல் தானே? நீங்காது,
முதுமரத்து உறையும் முரவுவாய் முதுபுள்

கதுமெனக் குழறும், கழுதுவழங்கு அரைநாள்,
நெஞ்சுநெகிழ் பருவரல் செய்த
அன்பி லாளன் அறிவுநயந் தேனே.

தெளிவுரை

“ஞாயிறு ஒளி குறைந்தது; மலைகள் செவ்வொளி பெற்றன; வண்டுகள் மலர்களில் தேனுண்டு இசைத்தன; தாழைச்சோலையின் மேலே பறந்து நாரைகள் ஒலித்தன; அலை ஒலியடங்கியது; கடற்கரையில் விளையாடிய நண்டுகள் வளைகளுக்குள் புகுந்து கொண்டன; படகுகள் கடலுக்குள் மீன் பிடிக்கச் செல்லாவாறு கரையில் கட்டப்பட்டுக் கிடக்கின்றன; செவ்வானம் தோன்றுகிறது. துணையொடு இணைந்திருந்த அன்றில் பறவை பனைமரத்தின் உள்மடலில் தங்கியது. பெருங்கழியில் பூத்திருந்த மலர்களின் மணம் கமழும் இதழ்கள் குவிந்தன. சோலை சூழ்ந்த வீட்டு முற்றத்தில் உள்ள புன்னைமரத்தின் மணமுள்ள மலர்கள் பொன்னிறம் கொண்டன. பகல் மெல்ல மெல்ல மறைய இரவும் வந்து சேர்ந்தது. தலைவனைப் பிரிந்துள்ள தலைவி அப்போது என்ன நிலை அடைவாளோ?” என்று சொல்லிக்கொண்டிருந்தாள், தோழி.

இதைக் கேட்ட தலைவி, “முதிய மரத்தில் எப்பொழுதும் நீங்காதிருக்கும் பெரிய ஆந்தை குரலெடுத்துக் குழறுவதும், பேய்கள் நடமாடுவதுமாகிய நள்ளிரவில் மனமுருகும் துன்பம் செய்த அன்பற்றவன் சொன்ன மொழியை உண்மையென நம்பிவிட்டேன். எனக்கு இது வேண்டியதுதான்; இப்போது வருந்தி என்ன பயன்?” என்றாள்.

கருத்து

‘அன்பற்ற தலைவனது சொல்லை உண்மை என்று நம்பினேன். இப்போது வருந்துகிறேன்.’

விளக்கம்

“பகற்பொழுது கழிந்தது; பரிதி மறைந்தது; இரவு வந்தடைந்ததே! இத்தலைவி தலைவனைப் பிரிந்து என்ன ஆவளோ?” (என்று தோழி சொல்லிக்கொண்டிருக்கும்போதே),

"பேய்கள் நடமாடும் நள்ளிரவில் தலைவன் சொன்ன சொல்லை அப்போது உண்மையென நம்பினேன்; (அது என் தவறு!) இதற்கு நீ வருந்தி என்ன பயன்?" என்று தலைவி தோழியை நோக்கிக் கூறினாள்.

சொற்பொருள்

1. மண்டிலம் - ஞாயிற்று மண்டிலம்; மழுக - மழுங்க, வெம்மை மறைய.
2. மீமிசை - மேலே.
3. கண்டல் - தாழை.
4. அலவன் - நண்டு; அளை - வளை.
5. திரை - அலை; பாடு அவிய - ஒலி அடங்க; திமில் - படகு; தொழில் மறப்ப - மீன் வேட்டையாடுதலை நீங்க.
6. செக்கர் - செவ்வானம்; அன்றில் - ஒருவகைப் பறவை.
7. எக்கர் - மணல்மேடு; பெண்ணை - பனைமரம்; அகமடல் - மடல் உள்ளே.
8. கழி - உப்பங்கழி; கமழ் முகம் - மணம் கமழும் இதழ்கள்; கரப்ப - குவிய.
9. நறுவீ - மணமுள்ள மலர்.
10. எல்லை - பகற்பொழுது; பைபய - மெல்ல மெல்ல; கழிப்பி - போக்கி; எல் - இரவு.
11. தான் - தலைவி; நீங்காது - எப்பொழுதும்.
12. முதுமரம் - முதிர்ச்சியுற்ற மரம்; முரவுவாய் - முழங்கும் வாய்; முதுபுள் - பேராந்தை.
13. கதுமென - விரைந்து; கழுது - பேய்; அரைநாள் - நடு யாமம்.
14. பருவரல் - துன்பம்.
15. அறிவு நயந்தேன் - மொழியை மெய்யென நம்பினேன்.

தலைவி கூற்று

அகநானூறு 348 — **மதுரை இளம்பாலாசிரியன் சேந்தன் கூத்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி சொல்லெடுப்பத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

மணந்துகொள்ளும் கருத்தில்லாமல் இருக்கும் தலைவன், ஒருநாள் சிறைப்புறத்தில் வந்து நிற்கையில், அவன் வருகையை உணராதவள் போல, அவன் தன் கடமையை உணர்ந்து மணந்துகொள்ள வேண்டுமெனத் தோழி தலைவியிடம் சொல்லத் தொடங்கினாள். அவ்வாறு சொல்லத் தொடங்கிச் சில சொல்ல, அது கேட்ட தலைவி, தோழியின் சொல்லைத் தொடர்ந்து சில சொல்லி முடித்தாள்.

என்ஆ வதுகொல் தானே– முன்றில்
தேன்தேர் சுவைய, திரள்அரை, மாஅத்து,
கோடைக்கு ஊழ்த்த, கமழ்நறுந் தீம்கனி,
பயிர்ப்புறு பலவின் எதிர்ச்சுளை அளைஇ,
இறாலொடு கலந்த வண்டுமூசு, அரியல்
நெடுங்கண் ஆடுஅமைப் பழுநி, கடுந்திறல்
பாப்புக்கடுப்பு அன்ன தோப்பி வான்கோட்டுக்
கடவுள்ஓங்கு வரைக்கு ஒக்கி, குறவர்
முறித்தழை மகளிர் மடுப்ப, மாந்தி,
அடுக்கல் ஏனல் இரும்புனம் மறந்துழி,
யானை வவ்வின தினை,என நோனாது,
இளையரும் முதியரும் கிளையுடன் குழீஇ,
சிலைஆய்ந்து திரிதரும் நாடன்
நிலையா நல்மொழி தேறிய நெஞ்சே.

தெளிவுரை

வீட்டு முற்றத்திலே, திரண்ட அடியினைக் கொண்ட மாமரம் உள்ளது. அம்மாமரத்தில், கோடைக்காலத்தில், தேன் என்று சொல்லும்படியான சுவை மிக்க முதிர்ந்த நன்மணம் கமழும் இனிய கனிகள் பழுத்திருக்கும். அப்பழச்சாற்றுடன் பிசினைக் கொண்டிருக்கும் பலா மரத்தின் ஒளி பொருந்திய சுளைகளை இட்டுத் தேனுடன் கலந்து வடித்தெடுப்பர். அவ்வாறு எடுக்கப் பட்ட வண்டு மொய்க்கும் கள்ளை நீண்ட கணுக்களைக் கொண்ட மூங்கில் குழாயில் நீண்ட நாள் வைத்திருப்பர். அது முதிர்ந்தமையால் கடிய வேகமுள்ள பாம்பின் சீற்றத்தை ஒத்த வெறியினைத் தருவதாய் இருக்கும். அதை முதலில், உயர்ந்த

உச்சியைக் கொண்ட கடவுள் வாழும் மலைக்குப் படைப்பர். பின்பு, தளிரால் ஆகிய தழையுடை அணிந்த மகளிர் ஊற்றித்தர, தினைப்புனங் காக்கும் குறவர்கள் உண்டு, பக்கமலையில் உள்ள பெரிய தினைப்புனங் காவலை மறந்திருப்பர்.

அதனால், யானைகள் தினைப்புனத்தைக் கவர்ந்து உண்டன. அதனைப் பொறுக்கவியலாத இளையவரும் முதியவரும் ஆகிய சுற்றமெல்லாம் ஒன்றுகூடி, வில்லை ஆராய்ந்து எடுத்துத் திரிவர். அத்தகைய நாட்டை உடையவனாகிய நம் தலைவனின் உறுதியற்ற இனிய சொல்லை உண்மை என நம்பித் தெளிந்த நெஞ்சமே,

இனி நமக்கு என்ன தீங்கு உண்டாகுமோ?

கருத்து

தலைவனின் உறுதியற்ற இனிய சொல்லை உண்மை என நம்பிய நமக்கு இனி என்ன தீங்கு நேருமோ?

விளக்கம்

புனம் காக்கும் குறவர் வெறியினைத் தரும் கள்ளை உண்டு, பக்கமலையிலுள்ள பெரிய தினைப்புனங் காவலை மறந்தனர். அதனால் யானைகள் தினைப்புனத்தைக் கவர்ந்துண்ண, இளையவரும் முதியவரும் கூடி, வில்லை எடுத்து, யானைகளை ஓட்ட முயலும் நாட்டையுடையவன், நம் தலைவன். உறுதியற்ற அவனது இனிய சொற்களை மெய்யெனத் தெளிந்தோம்! இனி நமக்கு என்ன தீங்கு நேருமோ?

குறிப்பு

குறவர் 'தோப்பி' கள் பருகிய மயக்கத்தால் தம் கடமையான தினைப்புனங் காவலை மறந்தனர். அதுபோல, தலைவனும் களவுப் புணர்ச்சியில் நம்மிடம் அனுபவிக்கும் இன்பத்தில் மயங்கி, மணந்து கொண்டு இல்லறம் நடத்தும் கடமையை மறந்துவிட்டான்.

சொற்பொருள்

1. என்ஆவதுகொல் - என்ன தீங்கு நேருமோ?

2. தேன்தேர் சுவை - தேனோ என ஆராயும் சுவை; திரள்அரை - திரண்ட அடி; மா - மா மரம்.
3. கோடைக்கு - கோடைக் காலத்தே; ஊழ்த்த - முதிர்ந்த; கமழ் - மணம் வீசும்.
4. பயிர்ப்பு - பிசின்; உறு - பொருந்திய; பலவின் - பலா மரத்தின்; எதிர் - நேர், ஒன்றுக்கொன்று சமமான; அளைஇ - கலந்து.
5. இறால் - தேனடை; மூசு - மொய்க்கும்; அரியல் - கள்.
6. நெடுங்கண் - நீண்ட கணு; ஆடுஅமை - அசையும் மூங்கில்; பழுநி - முதிர்ந்த கள்; கடுந்திறல் - கடிய வேகம் கொண்ட.
7. பாப்பு - பாம்பு; கடுப்பு - (நஞ்சின்) வேகம்; தோப்பி - கள்; வான் கோடு - உயர்ந்த உச்சி.
8. கடவுள் ஓங்கு வரைக்கு - தெய்வம் உறையும் உயர்ந்த மலைக்கு; ஓக்கி - படைத்து.
9. முறித்தழை மகளிர் - தளிராலாகிய தழையுடை அணிந்த மகளிர் (முறி - தளிர்); மடுப்ப - உண்பிக்க; மாந்தி - உண்டு, குடித்து.
10. அடுக்கல் - மலைப்பக்கம்; ஏனல் - தினை; இரும்புனம் - பெரிய தினைப்புனம்; மறந்துழி - காவலை மறந்திருந்தபொழுது.
11. வவ்வின என - கவர்ந்து உண்டனவாக; நோனாது - பொறாது.
12. கிளையுடன் - சுற்றத்தினருடன்; குழீஇ - கூடி, குழுமி.
13. சிலை ஆய்ந்து - வில்லை ஆராய்ந்து.
14. நிலையா - உறுதியில்லாத; நல்மொழி - இனிய மொழி; தேறிய - உண்மை எனத் தெளிந்த.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 267 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகளைத் தலைமகன் 'வரைவல்' எனத் தெளித்தான் என்று அவள் கூறக்கேட்ட தோழி, அவன் சிறைப்புறத்தானாகச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியை 'வரைந்துகொள்வேன்' என்று தலைவன் உறுதி கூறினான். அதைத் தலைவி தோழியிடம் கூறினாள். அதுகேட்ட தோழி, அவன் சிறைப்புறமாய் இருந்தபோது கூறியது.

சிறுகண் பன்றிப் பெருஞ்சின ஒருத்தல்
துறுகல் அடுக்கத்து வில்லோர் மாற்றி,
ஐவனம் கவரும் குன்ற நாடன்
வண்டுபடு கூந்தலைப் பேணிப்
பண்புஇல சொல்லும், தேறுதல் செத்தே.

தெளிவுரை

தலைவியே! ஆண்பன்றி சிறுத்த கண்களையும், மிகுந்த சினத்தையும் கொண்டது. அது குண்டுக்கற்கள் நிறைந்த மலைச் சாரலுக்குப் பக்கத்தே, வில்லேந்திக் காக்கும் கானவரை ஏமாற்றி மலைநெல்லினைத் திருடித் தின்னும். இத்தகைய குன்றினைக் கொண்டவன், நம் தலைவன். அவன், வண்டுகள் மொய்க்கும் உன் கூந்தலைப் பாயலாய்க் கொண்டு உன்னைச் சேர்தலை விரும்பி, 'இவள் நாம் சொல்வனவற்றையெல்லாம் உண்மை என்று கொள்வாள்' என்று கருதிப் பண்பிற்குப் புறம்பான பல சொற்களையும் சொல்கிறான். (அதனை நம்பி நீ மகிழ்ந்து விடாதே.)

கருத்து

'தலைவியே! தலைவன், 'உன்னை வரைந்துகொள்வேன்' என்று கூறிய பேச்சினை உண்மையென நம்பி மகிழ்ச்சி கொள்ளாதே.'

குறிப்பு

காவலரை ஏமாற்றி ஐவன நெல்லை ஆண்பன்றி கவருமென்பது, தலைவன், தலைவியின் இல்லத்தில் உள்ள காவலை வென்று களவொழுக் கத்தில் பெறும் இன்பத்தையே விரும்புகின்றான் என்பதைக் குறிக்கும்.

தலைவன் 'வரைவேன்' என்று சொல்லி, வரையாது ஒழுகுகின்றா னாதலின் அவனைப் 'பண்பில சொல்லும்' என்கிறாள், தோழி.

சொற்பொருள்

1. சிறுகண் - சிறிய கண்; பெருஞ்சினம் - மிகுந்த கோபம்; ஒருத்தல் - ஆண்பன்றி.
2. துறுகல் - குண்டுக்கல்; அடுக்கம் - மலைப்பக்கம்; வில்லோர் - வில்லேந்திக் காவல் செய்யும் கானவர்; மாற்றி - ஏமாற்றி.

3. ஐவனம் - மலைநெல்; கவரும் - திருடித் தின்னும்.
4. வண்டுபடு - வண்டு மொய்க்கும்; பேணி - விரும்பி.
5. பண்பு இல - வாய்மை இல்லாத; சொல்லும் - சொற்களைப் பேசும்; தேறுதல் - தெளிதல்; செத்து - கருதி (நாம் சொல்வனவற்றையெல்லாம் உண்மை என்று கொள்வாள் என்று கருதி).

தலைவி கூற்று

அகநானூறு 378 **காவட்டனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறிச் சிறைப்புறமாகத் தோழி சொல்லெடுப்பத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் மணந்துகொள்ளும் கருத்தின்றி இருந்தான். ஒரு நாள் இரவுக்குறியிடத்திற்கு வந்து தலைவன் நிற்க, அவன் கேட்குமாறு தோழி தலைவியின் ஆற்றாமையைக் கூறி, அவன் அவளை உடனே மணந்து கொள்ள வேண்டும் என்ற கருத்தில் கூற, அது கேட்ட தலைவி தோழியிடம் கூறியது.

'நிதியம் துஞ்சும் நிவந்துஓங்கும் வரைப்பின்,
வதுவை மகளிர் கூந்தல் கமழ்கொள,
வங்கூழ் ஆட்டிய அம்குழை வேங்கை,
நன்பொன் அன்ன நறுந்தாது உதிர,
காமர் பீலி ஆய்மயில் தோகை
வேறுவேறு இனத்த வரைவாழ் வருடைக்
கோடுமுற்று இளந்தகர்ப் பாடுவிறந்து, இயல
ஆடுகள வயிரின் இனிய ஆலி,
பசும்புற மென்சீர் ஒசிய, விசும்புஉகந்து,
இருங்கண் ஆடுஅமைத் தயங்க இருக்கும்
பெருங்கல் நாடன் பிரிந்த புலம்பும்,
உடன்ற அன்னை அமரா நோக்கமும்,
வடந்தை தூக்கும் வருபனி அற்சிரம்
சுடர்கெழு மண்டிலம் மழுங்க, ஞாயிறு

குடகடல் சேரும் படர்கூர் மாலையும்,
அனைத்தும், அடூஉநின்று நலிய, உஞற்றி,
யாங்ஙனம் வாழ்தி?' என்றி– தோழி!–
நீங்கா வஞ்சினம் செய்து,நத் துறந்தோர்
உள்ளார் ஆயினும், உளனே– அவர்நாட்டு
அள்இலைப் பலவின் கனிகவர் கைய,
கல்லா மந்தி கடுவனோடு உகளும்
கடுந்திறல் அணங்கின் நெடும்பெருங் குன்றத்து,
பாடுஇன் அருவி சூடி,
வான்தோய் சிமையம் தோன்ற லானே.

தெளிவுரை

"காற்று அசைத்தலால் அழகிய தளிர்களைக் கொண்ட வேங்கை மரத்தின் பொன் நிறம் கொண்ட நறுமணம் மிக்க பூந்துகள், மயில்களின் விருப்பம் தரும் தோகைமீது உதிர்ந்தன. அதனால் அம்மயில்கள், பெருஞ்செல்வம் நிலைத்திருக்கும் உயர்ந்தோங்கிய இல்லத்தில் திருமணம் செய்துகொண்ட மகளிரின் கூந்தல் மலர்களால் சூடப்பெற்று மணம் பெற்றிருப்பதுபோலத் தோற்றமளித்தன. அங்கு, வெவ்வேறு வகைப்பட்ட கொம்பினைக் கொண்ட மலைவாழ் இளைய ஆட்டுக்கடாக்களின் ஒலியைக் கேட்டு, அம்மயில்கள் அஞ்சிப் பறக்கும். அவ்வாறு ஓடும் மயில்கள், ஆடுகளத்தில் ஒலிக்கும் கொம்பு போன்று ஒலித்தவாறு வானில் பறந்து சென்று அருகிலுள்ள மூங்கிலின் பகுதியில் தங்கும். அதனால், நீண்ட கணுக்களுடன் அசையும் மூங்கிலின் மெல்லிய பசிய புறப்பகுதி வளையும். இத்தகைய காட்சி கொண்டதான பெரிய மலை நாட்டிற்குரிய தலைவன் பிரிந்தமையால் உண்டான தனிமைத் துயரம் வாட்டுகிறது.

"ஐயத்தோடு பார்க்கும் அன்னையின் மாறுபட்ட பார்வையும் வருத்துகின்றது.

"வாடைக்காற்று வீசும் பனிக்காலத்தில், ஒளி பொருந்திய ஞாயிறு, ஒளி மழுங்கி மேலைக்கடலில் சேரும் துயர் மிகுந்த மாலைப்பொழுதும் துன்புறுத்துகிறது.

" 'இவை அனைத்தும் ஒன்றாய்க் கூடி நின்று வருத்தவும், இவற்றையெல்லாம் பொறுத்துக்கொண்டு உன்னால் எவ்வாறு வாழ இயல்கிறது' என்று தோழியே நீ என்னைக் கேட்கிறாய்.

"தலைவனது நாட்டில் இலைகளோடு கூடிய பலாப்பழத்தைக் கவர்ந்து கைகளில் வைத்திருக்கும் அறியாமை மிக்க பெண் குரங்கு ஆண்குரங்கோடு துள்ளித் திரியும்; வலிமைமிக்க தெய்வம் உறையும் பெரிய மலையின் உச்சியிலிருந்து அருவிகள் விழும். 'பிரியேன்' என உறுதிமொழியாகிய சூளுரை செய்து பிரிந்த தலைவன் நம்மை நினைக்கவில்லை என்றாலும், வானளாவிய அம்மலையுச்சியைக் காண்பதால் நான் உயிர் வாழ்கிறேன்" என்று தலைவி கூறினாள்.

கருத்து

"தோழியே! 'மலைநாடன் பிரிந்ததால் ஏற்பட்ட தனிமைத் துயரும், தாயின் பொருந்தாப் பார்வையும், துன்பமிக்க மாலைப்பொழுதும் கூடி வருத்தவும் அவற்றையெல்லாம் பொறுத்துக்கொண்டு உன்னால் எவ்வாறு வாழ இயல்கிறது?' என்று கேட்கிறாய். 'உன்னைப் பிரியேன்' என்று சூளுரைத்துப் பிரிந்த தலைவன் இப்போது நம்மை நினைக்கவில்லை என்றாலும், இதோ நம் முன்னே அவனுடைய பெரிய மலையின் உச்சி தெரிவதால் அதைக் கண்டு ஆறுதல் பெறுகிறேன்" என்று தன் ஆற்றாத் தன்மையைப் புலப்படுத்தித் தலைவி கூறினாள்.

குறிப்பு

1. வருடை - ஒரு வகை விலங்கு (இப்பொழுது அவ்வினம் இல்லை). அது முதுகில் காலினைக் கொண்டது, எட்டுக்காலினைக் கொண்டது எனப் பலவகையாகக் கூறப்படுவதுண்டு. ஆதலின், 'வேறு வேறு இனத்த வருடை (பாடல் அடி 6)' என்று கூறப்பெற்றது.
2. 'மந்தி கடுவனோடு துள்ளித் திரியும் அவர் மலை கண்டு நானும் அவருடன் கூடுதலை எதிர்பார்த்து ஆற்றியுள்ளேன்' என்பது குறிப்பு.

சொற்பொருள்

1. நிதியம் - செல்வம்; துஞ்சும் - நிலைத்திருக்கும்; நிவந்து - உயர்ந்து; வரைப்பு - வீடு.
2. வதுவை - திருமணம்.
3. வங்கூழ் - காற்று; குழை - தளிர்.

4. தாது - பூந்துகள்.
5. காமர் - விருப்பம்; ஆய்மயில் - அழகிய மயில்.
6. வேறு வேறு இனத்த - வெவ்வேறு வகைப்பட்ட; வருடை - மலை ஆடு.
7. இளந்தகர் - இளைய கடா; இயல - ஆட.
8. வயிர் - ஊதுகொம்பு; ஆலி - ஒலித்து.
9. மென்சீர் - மென்மைத் தன்மை; ஒசிய - வளைய.
10. இருங்கண் - பெரிய கணுக்கள்; ஆடு அமை - அசையும் மூங்கில்.
11. புலம்பு - தனிமை.
12. உடன்ற - மாறுபட்ட; அமரா - விரும்பாத; நோக்கம் - பார்வை.
13. வடந்தை - வாடைக்காற்று; அற்சிரம் - பனிக்காலம்.
14. சுடர் கெழு - ஒளி பொருந்திய; மழுங்க - ஒளி குறைந்து.
15. குடகடல் - மேலைக்கடல்; படர்கூர் - துன்பம் மிக்க.
16. அடூஉ நின்று - கூடி நின்று; நலிய - வருத்த; உஞற்றி - பொறுத்து.
17. என்றி - என்று கேட்கிறாய்.
18. வஞ்சினம் - சூளுரை, உறுதிமொழி.
19. உள்ளார் - நினையார்.
20. அள் இலை - நெருங்கிய இலை; கைய - கைகளைக் கொண்ட.
21. கடுவன் - ஆண் குரங்கு; உகள்தல் - துள்ளித் திரிதல்.
22. கடுந்திறல் - மிக்க வலிமை; அணங்கு - வருத்தும் தெய்வம்.
23. பாடுஇன் - இனிய ஒலி எழுப்பும்.
24. சிமையம் - உச்சி; தோன்றலான் - காணப்பெறுதலால்.

தோழி கூற்று

சிலப்பதிகாரம், கானல்வரி 51 **இளங்கோவடிகள்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி கூறியது.

கூற்று விளக்கம்

தலைவியை என்றும் பிரிய மாட்டேன் என்று சூளுரைத்திருந்த தலைவன் தலைவியைப் பிரிந்திருந்தான். அவன் ஒருநாள் தலைவியின் வீட்டோரம் இருந்தபோது, அவன் கேட்குமாறு தோழி, தலைவியிடம் கூறியது.

தீத்துழைஇ வந்தஇச் செல்லல் மருள்மாலை
தூக்காது துணிந்தஇத் துயர்எஞ்சு கிளவியால்
பூக்கமழ் கானலில் பொய்ச்சூள் பொறுக்கென்று
மாக்கடல் தெய்வம்நின் மலர்அடி வணங்குதும்.

தெளிவுரை

"மயக்கத்தைத் தரும் இம்மாலை நேரம் தீயைப் பரப்பியது போன்று எமக்குத் துன்பத்தைத் தருகின்றதே! இஃது இவ்வாறு நம்மை வருத்தும் என்று அறியாது, தலைவன் உரைத்த சூளுரைகளை உண்மையென்று கருதினோமே! 'பூக்கமழும் கானற்சோலையில் உறையும் பெரிய கடல்தெய்வமே! அவன் கூறிய பொய்ச் சூளுரைகளைப் பொறுப்பாயாக!' என்று உன் மலரடியை வணங்குகின்றோம்!"

கருத்து

'கடல் தெய்வமே! பிரியேன் என்று சூள் உரைத்த தலைவன் பிரிந்தனன். என்றாலும், அவனைத் தண்டித்துவிடாதே!'

விளக்கம்

தலைவன் இயற்கைப் புணர்ச்சிக் காலத்தில் தலைவியைக் கூடியபோது, 'இவன் பிரிவனோ' என்றஞ்சிய தலைவியை நோக்கி, 'நான் உன்னைப் பிரியேன்; பிரியின் உயிர் வாழேன்' எனத் தெய்வப் பெயர் சொல்லிச் சூளுரைத்தான். அச்சூளுரை இப்போது பொய்க்குமாறு நடந்துகொண்டான். சூளுரை தவறியதற்காக அவனைத் தண்டித்துவிட வேண்டா எனத் தோழி தெய்வத்தை வேண்டுகிறாள்.

சொற்பொருள்

1. துழைஇ - பரப்பி; செல்லல் - துன்பம்; மருள் - மயக்கம்.
2. தூக்காது - ஆராயாது, கருதாது; கிளவி - பேச்சு (சூளுரை செய்து கூறிய) சொல்.
3. கானல் - கடற்கரைச்சோலை; சூள் - உறுதி.
4. மா - பெரிய.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 118 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

சிறைப்புறமாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் மறைவாய்ச் சிறைப்புறத்தே நிற்க, தலைவி தோழியிடம் கூறியது.

அம்ம வாழி, தோழி! யான்இன்று,
அறனி லாளற் கண்ட பொழுதில்,
சினவுவென் தகைக்குவென் சென்றனென்;
பின்நினைந்து இரங்கிப் பெயர்தந் தேனே.

தெளிவுரை

தோழியே! நான் சொல்வதைக் கேள்! நம் தலைவன் அறநெறியில் ஒழுகாதவன். நான் இன்று அவனைக் கண்டபொழுது சினந்து, இனி 'இங்கு வரவேண்டா' எனத் தடுத்தல் வேண்டுமென அருகில் சென்றேன். ஆனால், அவனைக் கண்ட மாத்திரத்தில் உலகியலை நினைந்து ஒன்றும் செய்யாது (அவனுடன் இசைந்து ஒழுகி) மீண்டேன்.

கருத்து

'தலைவனைக் காணும்போது சினம் கொள்ள வேண்டும் என்று கருதுகிறேன்; ஆனால், நேரில் கண்டதும் சினம் கொள்ள இயலாதவளாகிறேன்! என் செய்வேன்?'

குறிப்பு

தன் துயரைத் தீர்க்காமையால் தலைவனை 'அறனிலாளன்' என்றும், அவன் செய்த சூளுறவு பொய்த்துவிட்டமையால் 'சினவுவென்' என்றும் தலைவி கூறினாள்.

சொற்பொருள்

2. அறனிலாளன் - அற வழியில் நடவாத தலைவன்.

3. சினவுவென் - சினம் கொள்வேன்; தகைக்குவென் - வாராமல் தடுப்பேன்; சென்றனென் - (என்று கருதிச்) சென்றேன்.
4. பெயர் தந்தேன் - மீண்டேன்.

தலைவி கூற்று

குறுந்தொகை 306 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

காப்புமிகுதியால், நெஞ்சு மிக்கது வாய் சோர்ந்து, கிழத்தி உரைத்தது. (காப்பு - காவல்).

கூற்று விளக்கம்

தலைவியைத் தாய் மிகுந்த காவலோடு வைத்திருந்ததால், அவளுக்குத் தலைவனைக் காணும் வாய்ப்புக் கிட்டவில்லை. திருமணத்திற்கான ஏற்பாடுகளைத் தலைவனும் செய்யவில்லை என்பதால் 'அவனிடம் இனி நான் இனிய மொழிகளைப் பேசேன்' என்று தலைவி உறுதி கொண்டிருந்தாள். ஆனால், அவனைக் காண நேரிடும்போது, தன் உறுதியை மறந்து, இனிய மொழி பேசி மகிழ்வாள். 'நெஞ்சே! உறுதிப் பாட்டினை மறந்தது ஏன்?' என அதனிடம் கேட்பதுபோலத் தலைவி தனக்குள் சொல்லிக்கொண்டது.

'மெல்லிய, இனிய, மேவரு தகுந,
இவைமொழி யாம்'எனச் சொல்லினும், அவைநீ,
மறத்தியோ வாழி,என் நெஞ்சே! பலஉடன்
காமர் மாஅத்துத் தாதுஅமர் பூவின்
வண்டுவீழ்பு அயரும் கானல்
தண்கடற் சேர்ப்பனைக் கண்ட பின்னே?

தெளிவுரை

"என் நெஞ்சமே! வாழ்க! தலைவனைக் காணும்போது ஓசையால் மெல்லியனவும், பொருளால் இனிமை நிறைந்தனவும், விரும்பத் தகுந்தவையுமான மொழிகளைப் பேசமாட்டேன் என்று உன்னிடம் சொல்லியிருந்தேன். அவ்வாறிருந்தும், அழகிய மாமரத்தின் தாது பொருந்திய பூவில், பல வண்டுகள் ஒருங்கே

படிந்து தேனை அருந்தி விளையாடும் சோலையினைக் கொண்ட குளிர்ச்சி பொருந்திய கடல் துறையை உடைய தலைவனை நேரே கண்ட பிறகு, முன்பு நான் உன்னிடம் சொல்லியிருந்த அச்சொற்களை நீ மறந்துவிட்டாயோ?" என்று தலைவி தன் நெஞ்சினைக் கேட்கிறாள்.

கருத்து

தலைவனைக் காணும்போது அவன்மீது கொண்டிருந்த வெறுப்பு மறைந்துவிடுகிறது.

விளக்கம்

தலைவன் திருமணம் செய்துகொள்ளாது இருப்பதை விரும்பாத தலைவி, 'அவன் வந்தால் இனிய மொழி பேசேன்' என முடிவு செய்திருந்தாள். ஆனால், அவனைக் கண்டவுடன் தான் கொண்டிருந்த உறுதியை மறந்து அவனிடம் இன்மொழி பேசி அளவளாவினாள். 'நெஞ்சே! உன் உறுதி இவ்வாறு தளர்வடைந்தது ஏன்?' எனத் தன் நெஞ்சினைக் கேட்பதுபோல் தலைவி தனக்குள் பேசிக்கொள்கிறாள்.

குறிப்பு

காதல் கொண்டவரைக் காணாதபோது அவர்மீது கொண்டிருந்த சினம், அவரைக் கண்டவுடன், இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடுவது உண்மைக் காதலின் அடையாளம் ஆகும்.

சொற்பொருள்

1. மேவரு தகுந - விரும்பத் தகுந்தவையான.
2. இவை - இவை போன்ற இனிமையானவற்றை; மொழியாம் - பேச மாட்டோம்.
3. மறத்தியோ - மறந்துவிட்டாயோ?
4. காமர் - அழகிய; மாஅத்து - மாமரத்தில்; தாது - பூந்துகள்; அமர் - பொருந்திய.
5. வீழ்தல் - படிதல்; அயரும் - (தேனை) அருந்தி; கானல் - சோலை.
6. சேர்ப்பன் - கடல்நிலத் தலைவன்; கண்ட பின் - நேரே கண்ட பிறகு.

தலைவி கூற்று

குறுந்தொகை 326 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : நெய்தல்

கூற்று

சிறைப்புறம்.

கூற்று விளக்கம்

தலைவன் சிறைப்புறத்தே நிற்ப, அவன் கேட்குமாறு தலைவி தோழியிடம், 'தலைவன் ஒருநாள் பிரியினும் பிரிந்து பல நாள் ஆனது போன்ற துன்பத்தைத் தருகிறது' என்றாள்.

துணைத்த கோதைப் பணைப்பெரும் தோளினர்
கடல்ஆடு மகளிர் கானல் இழைத்த
சிறுமனைப் புணர்ந்த நட்பே தோழி!
ஒருநாள் துறைவன் துறப்பின்,
பன்னாள் வரூஉம் இன்னா மைத்தே.

தெளிவுரை

சேர்த்துக் கட்டிய மாலையை அணிந்த மூங்கில் போன்ற பெருத்த தோளினைக் கொண்ட தலைவனோடு நாம் கொண்ட நட்பு, கடலோரக் கானற்சோலையில் கடலில் நீர்விளையாடும் இள மகளிருடன் சேர்ந்து சிறுவீடு கட்டி விளையாடிய அந்தக் காலத்தில் தோன்றியது. அந்நட்பு, அத்தலைவன் ஒரு நாள் நம்மைப் பிரிந்தாலும் பிரிந்து பல நாள் ஆனது போன்ற துன்பத்தைத் தருகின்றது.

கருத்து

தலைவன் ஒரு நாள் பிரிந்தாலும் பல நாள் பிரிந்தது போன்ற துன்பத்தைத் தருகின்றது.

குறிப்பு

சிற்றில் இழைத்து விளையாடிய பருவத்திலேயே அவள் அவனுடன் நட்புக்கொண்டனள் என்பதையும், அந்நட்பு ஒருநாள் பிரியினும் பிரிந்து பல நாள் ஆனது போன்ற துன்பத்தைத் தருவதனையும், அத்துன்பம் நீங்க

அவன் தன்னை மணந்துகொள்ள வேண்டும் என்பதனையும் தலைவி உணர்த்துகின்றனள்.

சொற்பொருள்

1. துணைத்த - சேர்த்துக் கட்டிய; கோதை - மாலை; பணை - மூங்கில்.
2. கானல் - கடற்கரைச்சோலை; இழைத்த - கட்டிய.
3. சிறுமனை - சிறு வீடு; புணர்ந்த - பொருந்திய.
4. துறப்பின் - பிரிந்தால்.
5. பன்னாள் - பல நாள்; இன்னாமை - துன்பம்.

தோழி கூற்று

அகநானூறு 222 — **பரணர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தையே விரும்பி ஒழுகிய தலைவனிடம் தலைவியை மணந்துகொள்ளுமாறு அறிவுறுத்த விரும்பிய தோழி, தலைவன் சிறைப் புறத்தே வந்து நிற்பதை அறியாதாள்போல அவன் கேட்பத் தலைவியிடம் கூறியது.

வான்உற நிவந்த நீல்நிறப் பெருமலைக்
கான நாடன் உறீஇய நோய்க்கு,உன்
மேனி ஆய்நலம் தொலைதலின், மொழிவென்;
முழவுமுகம் புலராக் கலிகொள் ஆங்கண்,
கழாஅர்ப் பெருந்துறை விழவின் ஆடும்,
ஈட்டுஎழில் பொலிந்த ஏந்துகுவவு மொய்ம்பின்,
ஆட்டன் அத்தி நலன்நயந்து உரைஇ,
தாழ்இருங் கதுப்பின் காவிரி வவ்வலின்,
மாதிரம் துழைஇ, மதிமருண்டு அலந்த
ஆதி மந்தி காதலற் காட்டிப்
படுகடல் புக்க பாடல்சால் சிறப்பின்

மருதி அன்ன மாண்புகழ் பெறீஇயர்,
சென்மோ– வாழி, தோழி!– பல்நாள்,
உரவுஉரும் ஏறொடு மயங்கி,
இரவுப்பெயல் பொழிந்த ஈர்ந்தண் ஆறே.

தெளிவுரை

“தலைவியே! வாழி! நம் தலைவன் வானோங்கிய நீல நிறம் கொண்ட மலையின் ஒரு காட்டுப்பகுதியில் வாழ்பவன். அவன் தந்த நோயால் உன் மேனி அழகு அழிந்துபடுதலால் நான் இதனைக் கூறுகிறேன்.

“விடாது முழவு ஒலி கேட்கும் ஆரவாரம் மிக்க கழாஅர் என்னும் ஊரில் உள்ள பெரிய நீர்த்துறையில் ஒரு விழா நிகழ்ந்தது. அதில் அழகெல்லாம் திரண்டது போன்ற நிமிர்ந்த தோள் படைத்த ஆட்டனத்தி நடனம் ஆடினான். தாழ்ந்து தொங்கும் கரிய கூந்தலைக் கொண்ட காவிரிப்பெண்ணாள் அவன் அழகினை விரும்பி அவனைக் கவர்ந்து சென்றாள். அவன் காதலி ஆதிமந்தி அவனைக் காணாது திசையெல்லாம் தேடி, மதி மயங்கி வருந்தினாள். மருதி என்பவள், கடலினுள் சென்று, அவள் கணவனைக் கொண்டு வந்து ஆதிமந்திக்குக் காட்டிய பிறகு கடலில் மூழ்கி உயிர் துறந்தாள்.

“மருதியைப் போன்று பெரும் புகழ் பெறுவதற்காக, நாமும் தலைவனைத் தேடிப் பல நாளும், இடியுடன் கூடிய பெருமழை பெய்யும் ஈரம்மிக்க சேற்று வழியில் செல்வோம்.”

கருத்து

வாராதிருக்கும் தலைவனை நாம் காணச் செல்வோமா?

விளக்கம்

தலைவன் சிறைப்புறத்தே இருப்ப, தான் சொல்வதைக் கேட்டு விரைந்து மணந்துகொள்வான் எனக் கருதித் தலைவியிடம் தோழி கூறுகிறாள்; ‘தலைவியே! வாழி! தலைவன் உண்டாக்கிய நோயால் உன் மேனி அழகெல்லாம் அழிந்ததாதலின் இதனைக் கூறுகிறேன்; கேள். இரவெல்லாம் மழை பொழிதலால் ஈரம் மிக்க சேற்றுவழியில் நாம் நம் தலைவனைத் தேடிச்

செல்வோமா? அவனைக் காணாது உயிர் துறந்தாலும் அதனால் (மருதியைப் போலப்) புகழையாவது அடைவோம்' என்று கூறிக் குறிப்பால் தலைவனிடம் தம் ஆற்றாத் தன்மையைப் புலப் படுத்தினாள்.

குறிப்பு

ஆட்டனத்தியைக் காவிரி கவர்ந்தது. அவன் மனைவி ஆதிமந்தி அவனைத் தேடித் துன்புற்று இறுதியில் பெற்றாள். சோழன் கரிகால் வளவன் மகள் ஆதிமந்தி என்பர்.

சொற்பொருள்

1. நிவந்த - உயர்ந்த; நீல்நிறம் - நீல நிறம்.
2. உறீஇய - உண்டாக்கிய; நோய் - துன்பம்.
3. ஆய்நலம் - ஆராய்ச்சிக்குரிய அழகு; தொலைதல் - அழிதல்; மொழிவென் - கூறுவேன்.
4. முழவு - முரசம்; முகம்புலரா - முழக்கம் ஓயாத; கலிகொள் - ஆரவாரம் மிக்க.
5. கழாஅர் - காவிரியாற்றில் உள்ள ஒரு நீர்த்துறை.
6. ஈட்டு எழில் - திரண்ட அழகு; ஏந்து - நிமிர்ந்த; குவவு - திரட்சி; மொய்ம்பு - வலிமை.
7. நலன் - அழகு; நயந்து - விரும்பி; உரைஇ - பரவி.
8. கதுப்பு - கூந்தல்; வெளவல் - கவர்ந்துகொள்ளல்.
9. மாதிரம் - திசை; துழைஇ - தேடி; மருள் - மயக்கம்; அலந்த - வருந்திய.
10. காதலற் காட்டி - காதலனைச் சுட்டிக்காட்டி.
11. படுகடல் புக்க - ஒலிக்கும் கடலில் புகுந்து.
12. பெறீஇயர் - பெறும்பொருட்டு.
13. சென்மோ - செல்வோம்.
14. உரவு - வலிமை; உரு - இடி.
15. ஈர்ந்தண் ஆறு - ஈரமிக்க சேற்று வழி.

தோழி கூற்று

அகநானூறு 210 **உலோச்சனார்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி, தலைமகன் சிறைப்புறமாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியுடன் களவொழுக்கத்தில் ஈடுபட்ட தலைவன் ஒரு நாள் இரவுக் குறியிடத்தில் சிறைப்புறமாய் வந்து நின்றான். அவன் கேட்குமாறு தோழி, தலைவியிடம் கூறியது.

குறியிறைக் குரம்பைக் கொலைவெம் பரதவர்
எறிஉளி பொருத ஏமுறு பெருமீன்
புண்உமிழ் குருதி புலவுக்கடல் மறுப்பட,
விசும்புஅணி வில்லின் போகி, பசும்பிசிர்த்
திரைபயில் அழுவம் உழக்கி, உரன்அழிந்து,
நிரைதிமில் மருங்கில் படர்தரும் துறைவன்,
பானாள் இரவில்,நம் பணைத்தோள் உள்ளி,
தான்இவண் வந்த காலை, நம்ஊர்க்
கானல்அம் பெருந்துறை, கவின்பா ராட்டி,
ஆனாது புகழ்ந்திசி னோனே; இனி,தன்
சாயல் மார்பின் பாயல் மாற்றி,
கைதைஅம் படுசினைக் கடுந்தேர் விலங்கச்
செலவுஅரிது என்னும், என்பது
பலகேட் டனமால்– தோழி!– நாமே.

தெளிவுரை

“தலைவியே! குறுகிய இறப்பினைக் கொண்ட சிறிய குடிசையில் வாழும் பரதவர், மீன்களைக் கொல்லும் கொடிய தொழிலினை மேற்கொண்டவர்; அவர்களால் எறியப்பட்ட உளியால் தாக்கப்பட்ட களிப்பு மிகுந்த பெரிய சுறாமீன், புண்பட்ட தன் உடலினின்றும் ஒழுகிய குருதியினால், புலால்

நாறும் கடல்நீரின் நிறம் வேறுபடுமாறு செய்தது; ஆகாயத்தை அழகு செய்யும் வானவில்லைப் போன்று உயரே தாவிக் குதித்துக் கடலில் வீழ்ந்த அம்மீன், திவலைகளைக் கொண்ட அலைகள் நெருங்கிய கடற்பரப்பைக் கலக்கி, பின் தன் வலிமை குன்றியதால் வரிசையாய் நின்றிருந்த படகுகளின் பக்கத்திலே வந்து சேர்ந்தது. இத்தகைய துறைக்குரியவன், நம் தலைவன்.

"(முன்பெல்லாம்) நடு இரவில் மூங்கிலைப் போன்ற உன் தோளினை நினைத்துத் தலைவன் இங்கு வருவான். நம் ஊரில் உள்ள சோலையைக் கொண்ட பெரிய துறையின் அழகினைப் பலபடப் பாராட்டுவான்; இடைவிடாது புகழ்ந்து பேசுவான்; இப்பொழுதோ, தன் மென்மையான மார்பில் நீ கண் துயில்வதை அகற்றிவிட்டான்; 'விரைந்த செலவினைக் கொண்ட தன் தேரினைத் தாழையின் தாழ்ந்த கிளைகள் தடுத்து நிறுத்துவதால் அத்துறையிடத்துச் செல்லுதல் அரிதாயுள்ளது' என்று அவன் பலமுறை கூறுவதை நாம் கேட்டிருக்கின்றோம்."

கருத்து

தலைவன் சிறைப்புறமாய் இருப்ப, அவன் கேட்கத் தோழி, "தலைவியே! தலைவன் உன் தோள் நினைந்து முதல் முறை வந்தபோது, நம்மூர்க் கடற்கரைச்சோலையின் அழகைப் பாராட்டி ஓயாமல் புகழ்ந்தான். இப்பொழுதோ, தன் மார்பில் நீ தூங்குதலை அகற்றிவிட்டான். தாழையின் தாழ்ந்த கிளைகள் தன் தேரைத் தடுப்பதால் இங்கு வருவது இயலாதா யிருக்கிறது என்று அவன் கூறுவதை நாம் பலமுறையும் கேட்டிருக் கிறோம்" என்று தலைவியிடம் தலைவனின் அன்பின்மையைக் கூறினாள்.

குறிப்பு

முன்பு இக்கடற்கரைச்சோலையிலிருந்து செல்ல அவனுக்கு மனமில்லை; இப்பொழுதோ இங்கு வர மனமில்லை.

உள்ளுறை

பரதவரின் உளியால் புண்பட்ட சுறா மீன், கடல்நீர் நிறம் மாறுபடக் கலக்கிய பின் தன் வலிமை குன்றிவிடப் படகின் ஓரம்

ஒதுங்கியது; இத்தொடர்மூலம், தலைவனால் அனுபவித்து விடப்பட்ட தலைவி, அவன் பிரிவினால் ஏற்பட்ட துன்பத்தால் அழகை இழந்தாள்; அதனால் ஊர் அலர் தூற்றியது; முடிவில் வலிமையிழந்து இறக்கும் நிலையை அடைந்தனள் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. குறியிறை - குறுகிய வீட்டின் இறப்பு; குரம்பை - குடிசை.
2. ஏமுறு - களிப்பு மிகுந்த; பெருமீன் - பெரிய (சுறா) மீன்.
3. புலவுக்கடல் - புலால் நாற்றம் கொண்ட கடல்; மறுப்பட - நிறம் மாறுபட.
4. வில் - வானவில்; பசும்பிசிர் - பசிய நீர்த்துளி, திவலை.
5. திரை பயில் - அலைகள் நெருங்கிய; அழுவம் - கடற்பரப்பு; உரன் - வலிமை.
6. நிரை - வரிசை; திமில் - படகு; மருங்கு - பக்கம்; படர்தரும் - வந்து சேரும்.
7. பானாள் - நடு இரவு; உள்ளி - நினைந்து.
8. வந்தகாலை - வந்தபொழுது.
9. கவின் - அழகு.
10. ஆனாது - இடைவிடாது.
11. சாயல் - மென்மை, அழகு; பாயல் - உறக்கம்.
12. கைதை - தாழை; அம்படுசினை - அழகிய தாழ்ந்த கிளை; விலங்க - தடுக்க, குறுக்கிட.
13. நாம் பல கேட்டனம் - நாம் பலமுறை கேட்டிருக்கிறோம்.

தலைவி கூற்று

குறுந்தொகை 296 **பெரும்பாக்கனார்**

திணை : நெய்தல்

கூற்று

காணும் பொழுதிற் காணாப் பொழுது பெரிதாகலான் ஆற்றாளாய தலைமகள், தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பகற்குறியிடத்துத் தலைவனுடன் கலந்து மகிழ்கின்ற காலம் சிறிதளவினதாகவும், பிரிந்திருக்கும் பொழுது பெரிதளவினதாகவும் இருத்தலால் தலைவியின் ஆற்றாமை மிகுதியாகின்றது. அதனைத் தலைவனுக்கு உணர்த்தக் கருதிய தலைவி, அவன் சிறைப்புறத்தானாயிருக்க, தோழியிடம் கூறியது.

'அம்ம வாழி தோழி! புன்னை
அலங்குசினை இருந்த அஞ்சிறை நாரை,
உறுகழிச் சிறுமீன் முனையின், செறுவில்
கள்நாறு நெய்தல் கதிரொடு நயக்கும்
தண்ணம் துறைவன் காணின், முன்நின்று
கடிய கழறல் ஓம்புமதி! 'தொடியோள்
இன்னள் ஆகத் துறத்தல்
நும்மின் தகுமோ?' என்றனை துணிந்தே.

தெளிவுரை

"*தோழியே! ஒன்று சொல்வேன், கேள்! புன்னை மரத்தில் அசைகின்ற கிளையிலே இருக்கின்ற அழகிய சிறகினைக் கொண்ட நாரை, உப்பங்கழியிலுள்ள சிறுமீன்களைத் தின்றது; அதில் சலிப்புத் தோன்றியதும், வயலிலுள்ள தேன் மணக்கும் நெய்தல் மலர்களை நெற்கதிரோடும் சேர்த்து உண்ணுதலை விரும்பியது. இத்தகைய குளிர்ச்சியான துறைக்கு உரியவன், நம் தலைவன். அவனைக் கண்டால் முன்னே நின்று, கடிய சொற்களைக் கூறாதே. ஆனால், 'தோள் வளையணிந்த உம் தலைவி இத்தன்மையளாகும்படி அவளை நீ பிரிந்து செல்லுதல்*

தகுமோ?' என்று துணிந்து கேள்" என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

'தலைவியைப் பிரிந்து செல்லுதல் தகுமா என்று தலைவனைத் துணிந்து கேள்' எனத் தோழியிடம் தலைவி கூறுகிறாள்.

குறிப்பு

தன் துயர் நிலையை அறிந்து, சிறைப்புறத்தானாகிய தலைவன் தன்னைப் பிரியாதுறைய மணவாழ்க்கையினைப் பெறுதற்கு முயல வேண்டும் என்பதே தலைவியின் கருத்து.

உள்ளுறை

புன்னைக்கிளையிலிருந்த நாரை, கழிச்சிறுமீனைத் தின்பதில் சலிப்புற்றபோது செறுவில் நெய்தலை நெற்கதிர்களோடு சேர்த்துண்ண விரும்பும். இத்தொடர்மூலம், இடையூறுமிக்க களவுப் புணர்ச்சியில் எய்தும் இன்பத்தினும் துன்பமே மிகுந்ததாகும். எனவே அதனை வெறுத்து, வரைந்துகொண்டு மனையிலிருந்து இன்புறுதலே தகுவது என்னும் உள்ளுறைப் பொருள் பெறப் படுகிறது.

சொற்பொருள்

1. புன்னை - புன்னை மரம்.
2. அலங்குசினை - அசைகின்ற கிளை; அஞ்சிறை - அழகிய சிறகு.
3. முனைதல் - வெறுத்தல்; செறு - வயல்.
4. கள் நாறு - தேன் மணக்கும்; கதிர் - நெற்கதிர்; நயக்கும் - விரும்பும்.
5. தண்ணம் துறைவன் - குளிர்ச்சியான துறையையுடையவன்; முன் நின்று - அவன் முன்னாலே நின்று.
6. கடிய கழறல் - கடுமையான சொற்களால் இடித்துரைத்தல்; ஓம்பு - தவிர்; தொடியோள் - தொடியணிந்த தலைவி.
7. இன்னள் ஆக - இவ்வாறு துன்பப்படும்படியாக; துறத்தல் - நீங்குதல்.
8. நும்மின் - உமக்கு; தகுமோ? - தகுவதோ?; என்றனை - என்று கேள்.

தலைவி கூற்று

குறுந்தொகை 261 **கழார்க்கீரன் எயிற்றி**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறிக்கண் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.

கூற்று விளக்கம்

இரவுக்குறியிடம் வந்த தலைவன் சிறைப்புறத்தே நிற்பதறிந்த தலைவி தோழியிடம், 'தலைவன் வரவை எதிர்நோக்கி வருந்தி இரவெல்லாம் உறங்காதிருந்தேன்' என்று கூறியது.

பழமழை பொழிந்தெனப் பதன்அழிந்து உருகிய
சிதட்டுக்காய் எண்ணின் சில்பெயற் கடைநாள்,
சேற்றுநிலை முனைஇய செங்கட் காரான்,
நள்ளென் யாமத்து 'ஐ'எனக் கரையும்
அஞ்சுவரு பொழுதி னானும், என்கண்
துஞ்சா வாழி தோழி! காவலர்
கணக்குஆய் வகையின் வருந்தி,என்
நெஞ்சுபுண் உற்ற விழுமத் தானே.

தெளிவுரை

பெய்ய வேண்டிய காலத்தில் பெய்யாத மழை, பின்பு பெய்த தால், எள் பயிர்கள் பதம் அழிந்து, உள்ளீடற்ற வெறுங்காய்கள் ஆயின. சிறிய அளவில் மழை பெய்யும் இக்கார்ப்பருவத்தின் கடைசி நாள்களிலே சேற்றிலே நிற்றலை வெறுத்த, சிவந்த கண்களைக் கொண்ட எருமை, நள்ளிரவில் 'ஐ' எனக் கத்திக் கொண்டிருக்கும். இத்தகைய அச்சம் தரும் இரவு வேளையிலும் நாழிகைக் கணக்கர்கள் இரவு முழுவதும் விழித்துக் காலக் கணக்கை ஆராய்ந்து வருவதைப்போல, என் நெஞ்சம் புண் பட்டுத் துன்பத்தால் உழன்று கண்கள் உறக்கமின்றி இருந்தன.

கருத்து

தலைவனின் பிரிவுத் துயரால் தலைவியின் நெஞ்சம் புண்பட்டுக் கண்கள் உறக்கம் இழந்தன.

குறிப்பு

நாழிகைக்கணக்கர் இரவிலே உறங்க மாட்டார்கள். நாழிகையையறிந்து அதனை மணியோசை மூலம் ஊர்க்கு அறிவிப்பர். அவர்கள் துயிலா திருப்பதைப் போல நானும் உறக்கம் அற்றேன். அவர்கள் உறங்கிவிட்டால் நாழிகையின் கணக்கு அறிவிப்பது தவறிவிடும். அதுபோல, நான் உறங்கி விட்டால் தலைவன் வந்த நேரத்தை அறிய இயலாமல் அவனைச் சந்திக்கும் வாய்ப்பை இழக்க நேரிடும்.

சொற்பொருள்

1. பழ மழை - முன்பு பெய்ய வேண்டிய மழை; பொழிந்தென - காலங் கடந்து இப்போது பெய்தலால்; பதன் அழிந்து - பதம் கெட்டு; உருகிய - ஒழுகிய.
2. சிதட்டுக்காய் - உள்ளீடு இல்லாத வெறுமையான காய்; எண்ணின் - எள்ளின்; சில்பெயல் - சிறியஅளவு மழையைக் கொண்ட; கடை நாள் - கார்ப்பருவத்தின் இறுதிக் காலம்.
3. சேற்று நிலை - சேற்றில் நிற்றலை; முனைஇய - வெறுத்த; செங்கண் - சிவந்த கண்; கார்ஆன் - கரிய எருமை.
4. நள்ளென் யாமம் - நடு இரவில்; 'ஐ' - ஐ என்னும் ஒலியுடன்; கரையும் - கத்தும்.
5. அஞ்சு வரு - அச்சம் தரும்; பொழுதினானும் - பொழுதிலேயும்.
6. துஞ்சா - உறங்கா; காவலர் - நாழிகைக்கணக்கர்; கணக்கு ஆய் வகையின் - கணக்கை ஆராயும் திறத்தைப் போல ஆராய்ந்து வருந்தி.
8. விழுமம் - துன்பம்.

தோழி கூற்று

குறுந்தொகை 166 **கூடலூர் கிழார்**

திணை : நெய்தல்

கூற்று

காப்பு மிகுதிக்கண் தோழி தலைமகட்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

காவல் மிகுதியாலே தலைவனைக் காணப்பெறாமல் கலங்கியிருக்கிறாள், தலைவி. அவளது துயர் மிகுதியைக் கண்ட தோழி கூறியது.

தண்கடற் படுதிரை பெயர்த்தலின் வெண்பறை
நாரை நிரைபெயர்ந்து அயிரை ஆரும்,
ஊரோ நன்றுமன், மாந்தை;
ஒருதனி வைகின், புலம்பு ஆகின்றே.

தெளிவுரை

தலைவியே! குளிர்ச்சியான அலைகள் கரையில் கொண்டு வந்து குவிக்கின்ற அயிரை மீன்களை வெண்மையான சிறகு களைக் கொண்ட நாரைகள் தாம் இருந்த இடத்தைவிட்டு வந்து உண்ணும் இயற்கையழகு மிக்கது, மாந்தை நகரம். தலைவன் உடனிருக்கும்போது மிகவும் இனியதாய்த் தோன்றிய இந்நகரம், அவனில்லாது நாம் தனித்திருக்கும்போது மிகவும் துன்பத்தை அளிப்பதாய்த் தோன்றுகின்றது.

கருத்து

தலைவன் இல்லாத தனிமை பெரிய வருத்தத்தைத் தருகிறது.

இறைச்சி

'அயிரை மீன்கள் இருக்கும் இடத்திற்கு வந்து, அந்த அயிரை மீன்களை நாரை உண்ணும். இத்தொடர்மூலம், காப்பு மிகுதியால் தலைவி தனித்திருக்கும் இடத்திற்குத் தலைவன் வந்து இன்புறுத்துவான்' என்னும் இறைச்சிப் பொருள் பெறப்படு கிறது.

சொற்பொருள்

1. தண்கடல் - குளிர்ந்த கடல்; படுதிரை - உண்டாகும் அலைகள்; பெயர்த்தலின் - (மீன்களைப்) பெயரச்செய்வதால்; வெண்பறை - வெள்ளிய சிறகுகளைக் கொண்ட.
2. நிரைபெயர்ந்து - கூட்டம் தமது இடத்தை விட்டுப் பெயர்ந்து; அயிரை - அயிரை மீன்களை; ஆரும் - உண்ணும்.
3. மாந்தை - ஒரு கடற்கரைப் பட்டினம். (அஃது இக்காலத்தே மாதை என வழங்கப்படுகிறது. மரந்தை எனச் சொல்வாரும் உளர்).
4. ஒரு தனி - தனியே; வைகின் - தங்கினால்; புலம்பு - வருத்தம்.

தோழி கூற்று

நற்றிணை 344 **மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி சிறைப்புறமாகத் தலைமகன் கேட்பச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பகற்குறியில் சிறைப்புறமாய்த் தலைவன் நிற்க, அவன் கேட்குமாறு தோழி தலைவியிடம் கூறியது.

அணிவரை மருங்கின் ஐதுவளர்ந் திட்ட
மணிஏர் தோட்ட மைஆர் ஏனல்
இரும்பிடித் தடக்கையில் தடைஇய பெரும்புனம்
காவல் கண்ணினம் ஆயின், ஆயிழை!
நம்நிலை இடைதெரிந்து உணரான் தன்மலை
ஆரம் நீவிய அணிகிளர் ஆகம்
சாரல் நீள்இடைச் சாலவண்டு ஆர்ப்ப,
செல்வன் செல்லும்கொல் தானே, உயர்வரைப்
பெருங்கல் விடரகம் சிலம்ப, இரும்புலி
களிறுதொலைத்து உரறும் கடிஇடி மழைசெத்துச்
செந்தினை உணங்கல் தொகுக்கும்,
இன்கல் யாணர்த்தம் உறைவின் ஊர்க்கே?

தெளிவுரை

“ஆராய்ந்தணிந்த அணிகலன்களைக் கொண்ட தலைவியே! மலைப்புறத்தே சிறப்பாய்ச் செழித்தும் நீலமணி போன்ற தோடுகளைக் கொண்டதுமாய்த் தினை வளர்ந்துள்ளது; கதிர்கள் எல்லாம் யானையின் கரிய கையைப் போன்று வளைந்து தொங்கிக்கொண்டிருக்கின்றன. தினைப்புனத்தை நாம் காவல் செய்யக் கருதியுள்ளனம். நம் காதலனோ, நம் நிலையை ஆய்ந்து அறிந்தானில்லை.

“உயர்ந்த மூங்கிலைக் கொண்ட மலைப்பிளப்புகள் உள்ள இடங்களிலெல்லாம் எதிரொலிக்கும்படியாகப் பெரிய புலி,

களிற்றியானையைக் கொன்று முழங்கும். அப்பெரிய சத்தத்தைக் கேட்டு, அது முகிலின் இடி முழக்கமோ என்று எண்ணி முற்றத்திலே உலர வைத்துள்ள தினையைக் கூட்டிக் குவிக்கும் இனிய வருவாயைக் கொண்ட ஊரில் தலைவன் உறைகின்றான்.

"நம் நிலையை ஆய்ந்தறியாது தன் மலையிலுள்ள சந்தனத்தை மார்பிலே பூசி, வண்டுகள் மொய்த்து ஆரவாரிக்கும்படி தன் ஊருக்கு மீண்டும் சென்றுவிடுவானோ?"

கருத்து

'நாம் தலைவனிடம் அன்புடையவராய்த் தினைப்புனங் காக்கக் கருதுகின்றோம்; அவனோ அஃதுணராது, தன்னூர்க்குச் செல்ல விழை கின்றான் போலும்.'

விளக்கம்

தலைவியே! நமது தினைப்புனத்தில் கதிர்கள் முற்றியுள்ளன. அவற்றைக் காக்க வேண்டி நாம் அங்கே செல்லக் கருதி யுள்ளோம். நம்மைக் காணவரும் தலைவன், நாம் வர இருப்பதை அறியாது மீண்டும் தன் ஊர்க்கே சென்றுவிடுவானோ? அவன் குறிப்பு என்னவோ?

குறிப்பு

தலைவியின் மனமுணர்ந்து தலைவன் மணம் புரியக் கருதிலன் என்பதைத் 'தன்னூர் செல்ல விழைகிறான்' என்பதன்வழி, தோழி புலப்படுத்துகிறாள்.

உள்ளுறை

தலைவன் வாழுகின்ற ஊரில் வாழ்வோர், புலியின் முழக்கத்தை இடி முழக்கமெனக் கருதி, மழை வந்துவிடுமோ என அஞ்சி, காய வைத்த தினையைக் கூட்டிக் குவிப்பர் என்னும் தொடர்மூலம், தலைவன் வர இயலாதவாறு எழுந்த ஊரலரினைத் திரிய உணர்ந்து தாய், கட்டும் கழங்கும் காணற் பொருட்டுத் தலைவியைப் புனங்காவலிலிருந்து விலக்கி இல்லத்திற்கு அழைத்துச் சென்றுவிடுவாள் என்னும் உள்ளுறைப் பொருள் வெளிப்படுகிறது.

சொற்பொருள்

1. அணி வரை - அழகிய மலை; மருங்கின் - பக்கம்; ஐது வளர்தல் - சிறப்பாய்ச் செழித்து வளர்தல்.
2. தோடு - ஓலை; ஏனல் - தினை.
3. தடைஇய - வளைந்துள்ள.
4. கண்ணினம் - கருதினம்.
5. தெரிந்து - ஆராய்ந்து.
6. ஆரம் - சந்தனம்; நீவிய - பூசிய; அணிகிளர் - அழகு பொலியும்; ஆகம் - மார்பு.
7. சால - மிகுதியாய்; ஆர்ப்ப - ஒலிக்க.
8. செல்வன் - தலைவன்.
9. விடரகம் - மலைப்பிளப்பு; சிலம்ப - எதிரொலிக்க; இரும்புலி - பெரிய புலி.
10. தொலைத்து - கொன்று; உரறும் - முழங்கும்; கடி இடி - அச்சம் பயக்கும் முழக்கம்; மழை - மழை முகில் (முழக்கம்); செத்து - என்று நினைத்து.
11. தினை உணங்கல் - உலர்ந்த தினை; தொகுக்கும் - குவிக்கும்.
12. இன்கல் - இனிய மலை; யாணர் - புது வருவாய்; உறைவின் ஊர் - தங்குதற்கு இனிய ஊர்.

தோழி கூற்று

அகநானூறு 28 **பாண்டியன் அறிவுடைநம்பி**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

பகற்குறிக்கண் வந்த தலைவன் வீட்டிற்குப் புறத்தே நின்றான். அப்போது தலைவியிடம் சொல்வதுபோலத் தோழி, ‘தினையறுக்கும் காலம் வந்தமையால் தாய் தினைப்புனக் காவலை நீக்கினாள். எனவே, தலைவியை இனிப் பகலில் காண்பது அரிது’ என்று தலைவனுக்குக் குறிப்பாய் உணர்த்தியது.

மெய்யின் தீரா மேவரு காமமொடு
எய்யாய் ஆயினும், உரைப்பல்– தோழி!
கொய்யா முன்னும், குரல்வார்பு, தினையே
அருவி ஆன்ற பைங்கால் தோறும்
இருவி தோன்றின பலவே, நீயே!
முருகுமுரண் கொள்ளும் தேம்பாய் கண்ணி,
பரியல் நாயொடு பல்மலைப் படரும்
வேட்டுவற் பெறலொடு அமைந்தனை; யாழநின்,
பூக்கெழு தொடலை நுடங்க, எழுந்துஎழுந்து,
கிள்ளைத் தெள்விளி இடைஇடை பயிற்றி,
ஆங்குஆங்கு ஒழுகாய் ஆயின், அன்னை,
சிறுகிளி கடிதல் தேற்றாள், இவள்என,
பிறர்த்தந்து நிறுக்குவள் ஆயின்,
உறற்குஅரிது ஆகும்அவன் மலர்ந்த மார்பே.

தெளிவுரை

"தலைவியே! ஒருவர் உடம்பிலிருந்து ஒருவர் உடம்பு அகலாமைக்குக் காரணமாகிய காமத்தால் ஏற்படும் துன்பத்தினை நீ அறியாயாயினும் நான் கூறுகின்றேன், கேள்.

"அருவிநீர் பாய்ந்து பசிய தண்டுதோறும் தினைக்கதிர்கள் முதிரப்பெற்றன. நம் தமர் கொய்யுமுன்பே, கதிர்கள் கிளிகளால் கொய்யப்பெற்று, தாள் பலவும் தட்டைகளாய் நிற்கின்றன. நீயோ, பல்வேறு மணம் கமழத் தேன் சிந்தும் மாலை சூடி, விரைந்தோடும் நாய்களுடன் பற்பல மலைகளையும் கடந்து செல்லும் வேட்டுவனையே எப்போதும் நினைத்தவாறு உள்ளாய். பூக்கள் பொருந்திய உன் மாலை அசைய அடிக்கடி எழுந்து சென்று, கிளிகளை ஓட்டும் தெளிந்த ஒலிகளை இடையிடையே எழுப்பி ஆங்காங்கே சென்று வருதல் வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் அன்னை, 'சிறு கிளிகளை ஓட்டும் தன்மையை நீ அறியாய்' என்று கருதி, தினைக்கொல்லையைக் காக்கப் பிறரைக் கொண்டுவந்து நிறுத்திவிடுவாள். அவ்வாறு செய்வாளாயின் நீ உன் தலைவனது அகன்ற மார்பினை அடைதல் அரிதாய்விடும்" என்று தோழி தலைவியிடம் தலைவனும் கேட்குமாறு கூறினாள்.

கருத்து

தலைவியே! தினையைக் கிளிகள் கொய்கின்றன. நீ உன் தலைவனான வேட்டுவனையே நினைத்து நிற்கிறாய். எழுந்து சென்று அடிக்கடி ஒலி எழுப்பிக் கிளிகளை நீ ஓட்டாவிட்டால், அன்னை உன்னிடத்தில் வேறொரு வரை நிறுத்திவிடுவாள். நீ உன் தலைவன் மார்பை அடைதல் அரிதாய் விடும்.

குறிப்பு

தினை முதிர்ந்து அறுவடை செய்ய இருப்பதால் இனித் தலைவியைப் பகற்குறியில் காண இயலாது என்பதைத் தோழி தலைவனுக்கு உணர்த்து கிறாள்.

சொற்பொருள்

1. மெய்யில் தீரா - ஒருவர் உடம்பிலிருந்து ஒருவர் உடம்பை அகற்ற இயலாத; மேவரு - மேம்பட்டு எழும் (காமம்).
2. எய்யாய் ஆயினும் - நீ அறியாய் என்றாலும்.
3. குரல் வார்பு - கதிர் முற்றப்பெற்று.
5. இருவி - தானிய மணிகள் இன்றி வறிதே நிற்கும் தட்டை.
6. முருகு - மணம்; கண்ணி - மாலை.
7. பரியல் - விரைந்தோடும்; படரும் - செல்லும்.
8. பெறலொடு - உள்ளே நினைத்தலொடு.
9. கெழு - நிறைந்த; தொடலை - மாலை; நுடங்க - அசைய.
10. கிள்ளை - கிளி; தெள்விளி - தெளிந்த ஓசை; பயிற்றி - எழுப்பி.
11. ஒழுகாய் - சென்று வர.
12. தேற்றாள் - அறியாதவள்.
13. பிறர் தந்து - பிறரைக் கொண்டுவந்து; நிறுக்குவள் - நிறுத்தி விடுவாள்.
14. உறற்கு - பெறுவதற்கு; மலர்ந்த - அகன்ற.

தோழி கூற்று

அகநானூறு 38 **வடம வண்ணக்கன் பேரிசாத்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி, தலைமகன் குறை கூறியது.

கூற்று விளக்கம்

தலைவியை மணந்துகொள்ளும் கருத்தின்றித் தலைவன் களவொழுக்கமே ஒழுகினான்; அதுகாறும் மணந்துகொள்ளாதுள்ள தலைவன் குறையை அவன் உணர்ந்துகொள்ளும்பொருட்டு, அவன் கேட்பத் தோழி கூறியது.

விரிஇணர் வேங்கை வண்டுபடு கண்ணியன்,
தெரிஇதழ்க் குவளைத் தேம்பாய் தாரன்,
அம்சிலை இடவது ஆக, வெஞ்செலல்
கணைவலம் தெரிந்து, துணைபடர்ந்து உள்ளி,
வருதல் வாய்வது, வான்தோய் வெற்பன்,
வந்தனன் ஆயின், அம்தளிர்ச் செயலைத்
தாழ்வுஇல் ஓங்குசினைத் தொடுத்த வீழ்கயிற்று
ஊசல் மாறிய மருங்கும், பாய்புஉடன்
ஆடா மையின் கலுழ்புஇல தேறி,
நீடுஇதழ் தலைஇய கவின்பெறு நீலம்
கண்என மலர்ந்த சுனையும், வண்பறை
மடக்கிளி எடுத்தல் செல்லாத் தடக்குரல்
குலவுப்பொறை இறுத்த கோல்தலை இருவி
கொய்துஒழி புனமும், நோக்கி– நெடிதுநினைந்து,
பைதலன் பெயரலன் கொல்லோ? ஐதேய்கு
அயவெள் அருவி சூடிய உயர்வரைக்
கூஉம்கண் அஃதுஎம் ஊர்என,
ஆங்குஅதை அறிவுறல் மறந்திசின், யானே.

தெளிவுரை

“விண்ணைத் தோய்ந்து நிற்கும் மலையைக் கொண்டவன், நம் தலைவன். அவன் விரிந்த கொத்துகளைக் கொண்ட வேங்கை மரத்தின் மலர்களினாலான வண்டுகள் மொய்க்கும் கண்ணியை

அணிந்தவன். தேர்ந்தெடுத்த இதழ்களைக் கொண்ட குவளை மலரினாலான தேன் துளிக்கும் மாலையை அணிந்தவன்; அழகிய வில்லினை இடப்பக்கமும், விரைந்து பாயும் அம்புகளை வலப்பக்கமும் கொண்டு தலைவியை நினைந்து அவன் இங்கு வருதல் உறுதி.

"அங்ஙனம் வருவானாயின், அழகிய தளிர்களைக் கொண்ட அசோக மரத்தின் உயர்ந்த கிளைகளில் கட்டப்பட்டுத் தொங்கும் கயிற்றினைக் கொண்ட ஊஞ்சல் இல்லாத இடத்தைக் கண்டு வருந்துவான்.

"(நாம் இருவரும்) இணைந்து நீராடாததால் கலங்காது தெளிந்துள்ள சுனையையும், அதில் நீண்ட இதழ்களைக் கொண்ட நீல மலர்கள் கண்கள் போன்று மலர்ந்திருப்பதையும் அவன் காண்பான். அழகான சிறகுகளைக் கொண்ட இளைய கிளிகள் தூக்கிச் செல்ல முடியாத பெரிய கதிர்களைக் கொய்து விட்டதால், வெறும் தட்டைகள் மட்டும் நிற்கும் தினைப் புனத்தையும் நோக்குவான்.

"இவற்றையெல்லாம் கண்டு, நீள நினைந்து துன்பமுற்ற வனாய்த் திரும்பிச் செல்ல இயலாது வருந்தியிருப்பன் அல்லனோ?

" 'சுனையிலிருந்து தாழ்ந்து விழுகின்ற வெண்மையான அருவி களைத் தன் உச்சியில் கொண்டிருக்கும் உயர்ந்த மலையில் கூப்பிடு தூரத்தில் உள்ளதே எம் ஊர்' என்று தலைவனிடம் இறுதியாய்க் கூடிப் பிரிந்த அன்று அவனுக்குத் தெரிவிக்க மறந்துவிட்டேன். அத்தகைய தவற்றினால் அவன் வாராது போயினான். அதனால் என் அழகு கெடுக!" என்று தோழி தலைவியிடம் சொல்வதுபோல் தலைவன் கேட்குமாறு கூறினாள்.

கருத்து

"தலைவன் நம்மைத் தேடி வரும்போது, தினையரியப்பட்டு நாம் சென்று விடுவோம். ஆதலால், அவன் நம்மைக் காணாது வருந்தியவனாய்த் திரும்பிச் செல்வான். 'அருவி விழும் இந்த உயர்ந்த மலையில் எம் ஊர்

உள்ளது' என்று அவனுக்குத் தெரிவிக்க நான் மறந்துவிட்டேன். இஃது என் தவறு'' என்று இனிப் பகற்குறி இயலாது என்பதைத் தோழி தலைவனுக்குப் புலப்படுத்தினாள்.

சொற்பொருள்

1. இணர் - பூங்கொத்து; கண்ணி - தலைமாலை.
2. தெரி - தேர்ந்தெடுத்த; தேம் - தேன்; தார் - மாலை.
3. இடவது - இடப்பக்கம்; வெஞ்செலல் - விரைந்து செல்லும்.
4. கணை - அம்பு; வலம் - வலப்பக்கம்; துணை படர்ந்து - தலைவியை நினைந்து.
5. வாய்வது - உறுதி, உண்மை.
6. செயலை - அசோக மரம்.
7. தொடுத்தல் - கட்டுதல்; வீழ் - தொங்கும்.

8-9.பாய்பு ஆடா - (நீரில்) பாய்ந்து ஆடாத; கலுழ்பு இல - கலங்குதல் இல்லாது.

10. தலைஇய - பொருந்திய; நீலம் - நீலமலர்.
11. வண்பறை - அழகிய சிறகு.
12. மடக்கிளி - இளைய கிளிகள்; தடக்குரல் - பெரிய கதிர்.
13. குலவுப் பொறை - வளைந்த பாரம்; இறுத்த - முரித்த; இருவி - தட்டை.
14. புனம் - தினைப்புனம்.
15. பைதல் - துன்பம்; பெயரலன் - திரும்பிச் செல்ல இயலாதவனாய்; ஐ தேய்கு - அழகு கெடுக.
16. அயம் - சுனை; வரை - மலை.
17. கூஉம்கண் - கூப்பிடு தொலைவில்.
18. அறிவுறல் - தெரிவித்தல்; மறந்திசின் - மறந்துவிட்டேன்.

தோழி கூற்று

அகநானூறு 228 **அண்டர்மகன் குறுவழுதியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் இரவுக்குறியிடத்தே வந்து ஒரு பக்கத்தே மறைந்து நின்றான்; அதனைக் கண்ட தோழி, இரவில் வருதலால் உண்டாகும் துன்பங்களைக் குறிப்பாய் எடுத்துக் கூறிப் பகற்பொழுது வருதல் நல்லது என்பதுபடத் தலைவன் கேட்குமாறு, அவன் வரவினை அறியாதாள்போலத் தலைவியிடம் கூறியது.

பிரசப் பல்கிளை ஆர்ப்ப, கல்லென
வரைஇழி அருவி ஆரம் தீண்டித்
தண்என நனைக்கும் நளிர்மலைச் சிலம்பில்,
கண்என மலர்ந்த மாஇதழ்க் குவளைக்
கல்முகை நெடுஞ்சுனை நம்மொடு ஆடி,
பகலே இனிதுஉடன் கழிப்பி, இரவே
செல்வர், ஆயினும்– நன்றுமன் தில்ல;
வான்கண் விரிந்த பகல்மருள் நிலவின்
சூரல் மிளைஇய சாரல் ஆர்ஆற்று,
ஓங்கல் மிசைய வேங்கை ஒள்வீப்
புலிப்பொறி கடுப்பத் தோன்றலின், கயவாய்
இரும்பிடி இரியும் சோலைப்
பெருங்கல் யாணர்த்தம் சிறுகுடி யானே.

தெளிவுரை

தேன் உண்ணும் வண்டினங்கள் ஆரவாரிக்கும்படி, 'கல்' என்னும் ஒலியுடன் மலையினின்றும் ஓடிவரும் அருவி, சந்தன மரத்தில் வீழ்ந்து அதனைக் குளிர்ச்சி பெறச்செய்யும். அத்தகைய குளிர்ச்சி பொருந்திய மலைச்சாரலில், மகளிர் கண் போன்ற கரிய இதழினைக் கொண்ட குவளை மலர்கள்

பூத்திருக்கும் மலைக்குகையில் உள்ள நீண்ட சுனையில், தலைவன் நம்முடன் நீர் விளையாடிப் பகற்பொழுதை இனிதே கழிக்கட்டும்!

வானமெலாம் விரிந்திருக்கும் பகல் போன்ற நிலவொளியில், பிரப்பங்கொடிகள் படர்ந்த காவற்காட்டினைக் கொண்ட மலைச்சாரல் வழியில், வேங்கை மரத்தின் ஒளி பொருந்திய பூக்கள், புலியின் உடல்மேல் உள்ள புள்ளிகள்போல் தோற்றம் தருகின்றன; அவற்றினைக் காணும் பெரிய வாயினைக் கொண்ட பெண்யானைகள் அஞ்சி ஓடும் சோலைகளைக் கொண்ட பெரிய மலையில் உள்ள தனது அழகிய ஊருக்குத் தலைவன் இரவிலே செல்வான் என்றாலும் நன்றே.

கருத்து

“தலைவியே! நம் தலைவன் நெடுஞ்சுனையில் நம்மொடு ஆடி, பகல் முழுதும் இனிது கழித்து, தன் சிற்றூர்க்கு இரவே செல்வானாயினும் நன்றே.”

குறிப்பு

“தலைவியே! தலைவன் நம்மைக் காண இப்பொழுதெல்லாம் இரவு வேளையில் வருகிறான். அப்போது இடர்ப்பாடுகள் ஏற்பட மிகுந்த வாய்ப்புகள் உண்டு. ஆதலால், அவன் நம் மலை அருவிக்கரைச் சுனையில் நம்மோடு பகல் நேரமெல்லாம் இனிதாய்க் கழிக்கலாம்” எனச் சொல்வதன்வழி, இரவுக்குறியை நீக்கிப் பகற்குறி நேர்ந்ததாகவும் கொள்ளலாம்.

சொற்பொருள்

1. பிரசம் – தேன்; பல்கிளை - (தேனுண்ணும்) பல்வகை வண்டினங்கள்.
2. ஆரம் - சந்தன மரம்.
3. நளிர் - குளிர்ச்சி; சிலம்பு - சாரல்.
4. மாஇதழ் - பெரிய இதழ்.
5. கல்முகை - மலைக்குகை.
6. கழிப்பி - கழித்து.
8. பகல் மருள் - பகல் போன்ற.
9. சூரல் - பிரம்பு; மிளை - காவற்காடு; ஆர் - பொருந்திய.
10. ஓங்கல் - மலை; மிசை - மேலே; ஒள்வீ - ஒளி பொருந்திய பூ.
11. பொறி - புள்ளி, கோடு; கயவாய் - பெரிய வாய்.

12. இரும்பிடி - கரிய பெண்யானை; இரியும் - ஓடும்.
13. பெருங்கல் - மலை; யாணர் - அழகு; சிறுகுடி - சிற்றூர்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 215 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறி நயந்த தலைமகள், பகற்குறிக்கண் வந்து நீங்கும் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் இரவு நேரத்தில் கூடுவதற்குக் குறித்த இடத்திற்கு வருவதைத் தலைவி விரும்புகிறாள். ஆனால், தலைவன் பகல் குறியிடத்திற்கே வந்து போய்க்கொண்டிருக்கிறான். அவன் சிறைப்புறமாக வந்து மறைந்து நிற்கத் தலைவி தோழியிடம் கூறியது.

கட்டளை அன்ன மணிநிறத் தும்பி,
இட்டிய குயின்ற துளைவயின் செலீஇயர்,
தட்டைத் தண்ணுமைப் பின்னர் இயவர்
தீங்குழல் ஆம்பலின், இனிய இமிரும்
புதல்மலர் மாலையும் பிரிவோர்
அதனினும் கொடிய செய்குவர் அன்னாய்!

தெளிவுரை

தோழியே! குறுகலாய் அமைந்த நீர்த்துறை வழியாய்ச் செல்லும் போது இசைக்கருவியாளர்கள் தட்டை, தண்ணுமை ஆகிய கருவிகளையும் ஆம்பற்குழலையும் இசைத்துச் செல்வர். கட்டளைக்கல் (பொன் உரைக்கும் கல்) போலவும் நீலமணி போலவும் விளங்குகின்ற வண்டுகள், வாச்சிய இசைக்காரரின் இனிய ஆம்பற்குழலின் ஓசையைவிட இனிமையாய் முரலும். அவ்வண்டுகள் ஒலிக்கும் மாலை நேரத்தில் பொலிவு பெற்ற புதர்களில் மலர்கள் விரியும். இம்மாலைக் காலத்திலும் நம் நிலை

கருதாது பிரியத் துணிந்த நம் காதலர், அப்பிரிவினைக் காட்டிலும் கொடுஞ்செயல் செய்யக்கூடியவர்தாம்.

கருத்து

'இரவில் வாராது தலைவர் பகலிலேயே வந்து சென்றுவிடுகிறார்' எனத் தலைவி வருந்துகிறாள்.

விளக்கம்

மலரை நுகர்தற்கு முன்னர் வண்டு நயமிகப் பாடி, நுகர்ந்த பின்னர் அம்மலர் வாடி நலனழியுமாறு நீங்கிவிடுதல்போல, காதலரும் நுகர்ந்தபின் ஆற்றாமையால் நம்மை நலிவெய்த விட்டுச் செல்லும் கொடிய இயல்பினராயினார்.

குறிப்பு

பகற்குறிக்கண் வந்து நீங்குவானாயின் இரவெல்லாம் துயிலிழந்து, நினைந்து நினைந்து நலியும் துயர் அடைய நேரிடும் என இரவுக்குறி நயந்து தலைவி கூறியதாய்ப் பாடற்கூற்றுக் குறிப்பு இருக்கிறது. என்றாலும், அதனினும் எவ்வாறேனும் திருமண முயற்சியைத் தலைவன் மேற்கொள்ள வேண்டும் எனும் ஆர்வத்தால் இவ்வாறு கூறினள் என்று கொள்ளுதலே பொருத்தமாம்.

சொற்பொருள்

1. கட்டளை - பொன்னுரைக்கும் கல்; மணிநிறம் - நீல நிறம்.
2. இட்டிய - குறுகிய; குயின்ற - செய்யப்பட்ட; துளைவயின் - குறுகலாய் அமைந்த வழி.
3. தட்டை, தண்ணுமை - வாச்சியங்கள் (இசைப்போர்); இயவர் - அவர் பின் செல்வோர்.
4. தீங்குழல் ஆம்பலின் - இனிய குழலாகிய ஆம்பலினும் இனியவாய்; இமிரும் - ஒலிக்கும்.
5. புதல் மலர் மாலையும் பிரிவோர் - புதர்களில் மலர் மலரும் மாலைக்காலத்தில் பிரிவாற்றாமையைக் கருதாது பிரிவோர்.
6. அதனினும் கொடிய செய்குவர் அன்னாய் - அப்பிரிவினும் கொடுஞ் செயல்களைக்கூடச் செய்குவர்.

தலைவி கூற்று

அகநானூறு 328 **மதுரைப் பண்ட வாணிகன் இளந்தேவனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறிச் சிறைப்புறமாகத் தோழி சொல் எடுப்பத் தலைமகள் சொல்லியது.

(சொல் எடுப்ப - பேசத் தொடங்கிச் சில சொல்ல.)

கூற்று விளக்கம்

தலைவன் இரவுக்குறியிடம் வந்து சிறைப்புறமாய் நின்றான்; அவன் வரவினை அறியாதாள் போன்று தோழி அவன் பிரிவினை ஆற்றாது வருந்தி இருக்கும் தலைவியின் வருத்தமிகுதியை எடுத்துக் கூறி, அவளை மணந்து செல்லும்பொருட்டு, அவன் கேட்பத் தலைவியிடம் கூறத் தொடங்கிச் சில சொல்ல, எஞ்சியவற்றைத் தலைவி கூறியது.

வழைஅமல் அடுக்கத்து, வலன்ஏர்பு வயிரியர்,
முழவுஅதிர்ந் தன்ன முழக்கத்து ஏறோடு,
உரவுப் பெயல்பொழிந்த நள்ளென் யாமத்து,
அரவின் பைந்தலை இடறி, பானாள்
இரவின் வந்து,எம் இடைமுலை முயங்கி,
துனிகண் அகல வளைஇ, கங்குலின்
இனிதின் இயைந்த நண்பு,அவர் முனிதல்,
தெற்றுஆ குதல்நற்கு அறிந்தனம் ஆயின்,
இலங்குவளை நெகிழ, பரந்துபடர் அலைப்ப,யாம்
முயங்குதொறும் முயங்குதொறும் உயங்க முகந்துகொண்டு,
அடக்குவம் மன்னோ– தோழி!– மடப்பிடி
மழைதவழ் சிலம்பில் கடுஞ்சூல் ஈன்று,
கழைதின் யாக்கை விழைகளிறு தைவர,
வாழைஅம் சிலம்பில் துஞ்சும்
சாரல் நாடன் சாயல் மார்பே!

தெளிவுரை

"*சுரபுன்னை மரங்கள் நெருங்கி வளர்ந்த மலைச்சாரலில் மேகம் வலப்பக்கமாய் எழுந்தது; கூத்தரது முழவு அதிர்ந்தாற்*

போன்ற இடி முழக்கத்துடன் கூடிய இனிய மழையினைச் சொரிந்தது. மழை பெய்து, இருள் செறிந்த அந்த நள்ளிரவில் பாம்பின் தலையினை இடறியவாறு தலைவர் வந்தார்; இத்தகைய இரவு நேரத்து இடர்ப்பாட்டிற்கு அஞ்சாது வந்து என் முலையிடைப் பொருந்தி என் வருத்தத்தைப் போக்கினார்; என் ஆகத்தை ஆரத்தழுவி அகமகிழ்ந்தார்; இன்பம் பொங்க அவர் முயங்கிய முயக்கம், பின்னர் அவர் என் வளைகள் நெகிழவும், துன்பம் பரவி வருத்தவும் பிரிய இருக்கிறார் என்பதைத் தெளிவாக்கியது.

"மேகம் தவழ்கின்ற பக்கமலையில் தன் முதற்சூலினை ஈன்று, மூங்கிலைத் தின்னும் பெண்யானையின் முதுகினை, விருப்பமிக்க அதன் ஆண்யானை தடவிக்கொண்டிருக்கும்; வாழைத் தோப்புகள் அதிகம் உள்ள அவ்விடத்தில் பெண்யானை தன் கன்றுடன் இனிதே துயில்கொள்ளும். அத்தகைய சாரலை யுடைய மலைநாட்டிற்கு உரியவன், நம் தலைவன்; அவனது அழகிய மார்பினை, அவன் என்னைத் தழுவுந்தோறும் தழுவுந் தோறும் அவன் வருந்துமளவு என் இரு கைகளாலும் அள்ளிக் கொண்டு, என் முலைத்தடத்தே அடக்கிக்கொண்டிருப்பேன். இப்பொழுது அது இயலாமற் போயிற்றே! என்ன செய்வேன்?"

கருத்து

'தோழியே! நடுநாள் இரவில் தலைவன் என்னிடம் காட்டிய அன்பு, பின்னர் என் வளை நெகிழ, துயர் வருத்த என்னைப் பிரிய இருக்கிறான் என்பதைத் தெளிவாய்க் காட்டிற்று. ஆயினும், அவனது அழகிய மார்பினை அவன் வருந்துமளவுக்குத் தழுவி, என் மார்பினுள்ளே அடக்கி யிருந்தேன். அது கழிந்துவிட்டதே' எனத் தலைவி தன் ஆற்றாமையைப் புலப்படுத்தித் தலைவன் கேட்குமாறு தோழியிடம் கூறினாள்.

குறிப்பு

பிரிவிற்கு இடமின்றி இணைந்திருக்க உடனே இல்லறம் ஏற்க வேண்டும் என்பதைத் தலைவி குறிப்பால் உணர்த்துகிறாள்.

உள்ளுறை

இளைய பெண்யானை, முதற்சூலில் கன்றினை ஈன்று தன் உடலை ஆண்யானை தடவ, மலைச்சாரலில் தூங்கும் என்னும்

தொடர்மூலம், தலைவி, தலைவனின் செல்வம் மிக்க வீட்டில் மகப் பெற்று, தலைவன் அன்பு பாராட்ட இல்லறம் நடத்து தலைத் தலைவி விரும்புகிறாள் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. வழை - சுரபுன்னை; அமல் - நிறைந்த; வலன் ஏர்பு - வலமாய் எழுந்து; வயிரியர் - கூத்தர்.
2. ஏறு - இடி.
3. உரவுப் பெயல் - மிக்க மழை.
4. அரவு - பாம்பு; பானாள் - நள்ளிரவு.
5. இடைமுலை - முலை இடையே.
6. துனி - வருத்தம்; கண் அகல - நீங்க; வளைஇ - ஆகத்தைத் தழுவி.
7. முனிதல் - வெறுத்தல்.
8. தெற்று - தெளிவு; நற்கு - நன்றாய்.
9. அலைப்ப - வருத்த.
10. உயங்க - வருந்த.
11. அடக்குவம் - என் மார்பில் அடக்கியிருப்பேன்.
12. கடுஞ்சூல் - முதல் கரு.
13. விழை - விரும்பும்.
14. துஞ்சும் - தூங்கும்.
15. சாயல் - அழகு.

தோழி கூற்று

நற்றிணை 83 **பெருந்தேவனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறி வந்த தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் இரவுக்குறியிடத்தில் சிறைப்புறத்தானாக இருப்பதையறிந்த தோழி, கூகை குழறிச் சேரியில் வாழ்வாரைத் துயிலெழுப்புதலையும், அதனால் நேரும் இடையீடுகளையும் குறித்துக் கூறியது.

எம்ஊர் வாயில் உண்துறைத் தடைஇய
கடவுள் முதுமரத்து, உடன்உறை பழகிய,
தேயா வளைவாய், தெண்கண் கூர்உகிர்,
வாய்ப்பறை அசாஅம் வலிமுந்து கூகை!
மைஊன் தெரிந்த நெய்வெண் புழுக்கல்,
எலிவான் சூட்டொடு மலியப் பேணுதும்;
எஞ்சாக் கொள்கைஎம் காதலர் வரல்நசைஇத்
துஞ்சாது அலமரு பொழுதின்,
அஞ்சுவரக் கடுங்குரல் பயிற்றா தீமே.

தெளிவுரை

"என் ஊருக்கு முன்புறத்தேயுள்ள நீருண்ணும் துறையில் கடவுள் தங்கியிருக்கும் முதிய மரத்தில் வாழுகின்ற கூகையே! தேயாத வளைந்த வாயும், தெளிந்த கண்ணும், கூரிய நகமும் கொண்டு வலிமை மிகுந்துள்ள நீ, உன் வாயிலிருந்து பறை போன்ற குரல் எழுப்பிப் பிறரை வருத்துகின்றாய்! ஆட்டிறைச்சி யுடன் நெய் கலந்த வெண்மையான சோற்றோடு, எலியின் வெள்ளிய சூட்டிறைச்சியையும் கலந்து நீ உண்ணுமாறு உனக்கு மிகுதியாய்க் கொடுப்போம். எம்மீது அன்பு குறையாத எம் காதலர் எம்மை நாடி வருதலை விரும்பி, நாங்கள் தூங்காது உளத்தடுமாற்றத்துடன் இருக்கிறோம். நீ உன் கடுமையான குரலால் குழறி, தூங்குவார் அஞ்சி விழிக்கும்படி செய்து விடாதே!"

கருத்து

கூகையே! உனக்கு ஊனுணவு தருவோம். தலைவன் வருகையை நோக்கி நாங்கள் காத்திருக்கும் இப்போது நீ குழறி ஊரை எழுப்பிவிடாதே!

குறிப்பு

கூகை குழற இல்லத்தார் விழிப்பர்; களவு வெளிப்படும்; தலைவிக்கு இற்செறிப்பும் நேரலாம் எனக் கூகைக்குக் கூறுவதுபோல இவ்விடர்ப்பாடுக ளெல்லாம் இல்லாது இனிதே இன்பம் துய்க்கத் தலைவியை மணந்து கொள்வதே வழி எனத் தோழி, தலைவன் உணரும்படியாய்க் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. வாயில் - முன்புறம்; உண்துறை - நீருண்ணும் துறை; தடைஇய - பருத்த.
2. கடவுள் முதுமரம் - கடவுள் தங்கியிருக்கும் முதிய மரம்.
3. தெண்கண் - தெளிந்த கண்; கூர்உகிர் - கூரிய நகம்.
4. வாய்ப்பறை - பறை அறைவது போன்ற குரலால்; அசாஅம் - வருத்தும்; வலிமுந்து - வலிமை மிக்க; கூகை - கோட்டான்.
5. மை - ஆட்டுக்கிடாய்; ஊன் - இறைச்சி; புழுக்கல் - சோறு.
6. எலிவான் - எலியின் வெண்மையான; சூடு - சுடப்பட்ட இறைச்சி; மலிய - மிகுதியாய்; பேணுதும் - உண்ணக் கொடுப்போம்.
7. எஞ்சா - அன்பிற்குறையாத; நசைஇ - விரும்பி.
8. துஞ்சாது - தூங்காது; அலமருதல் - உள்ளத் தடுமாற்றத்துடன் இருத்தல்.
9. அஞ்சுவர - அஞ்சும்படியாய்; பயிற்றாதீமே - குழறாதே!

தலைவி கூற்று

குறுந்தொகை 158 **ஔவையார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் இரவுக்குறி வந்துழி அவன் கேட்பத் தோழிக்குச் சொல்லு வாளாய்ச் சொல்லியது.

கூற்று விளக்கம்

இரவுக்குறியில் தலைவனும் தலைவியும் தம்முட்கூடி இன்புற்று வருங் காலத்து, ஒரு நாளிரவு பெருமழை பெய்ததால், தலைவன் அன்றிரவு வர மாட்டானெனக் கருதித் தலைவி அஞ்சுகிறாள். அவனோ பெருமழைக்கும் அஞ்சாதவனாய் வந்து ஒரு பக்கம் ஒதுங்கியிருக்க, அதனையறிந்த தலைவி மழையை நோக்கிக் கூறியது.

நெடுவரை மருங்கின் பாம்புபட இடிக்கும்
கடுவிசை உருமின் கழறுகுரல் அளைஇக்
காலொடு வந்த கமஞ்சூல் மாமழை!
ஆர்அளி இலையோ நீயே? பேர்இசை
இமையமும் துளக்கும் பண்பினை;
துணைஇலர், அளியர், பெண்டிர்;இஃது எவனோ?

தெளிவுரை

உயர்ந்த மலைப்பக்கங்களில் உள்ள பாம்புகள் இறக்குமாறு மிக்க வேகத்துடன் இடிகள் ஒலிக்கின்றன; அவற்றின் முழக்கொடு கலந்து, காற்றொடும் கூடி வந்த, நிறைந்த நீர்க்கருவினைக் கொண்ட பெரிய மழையே! நீ அரிய இரக்கத்தைக் கைவிட்டு விட்டனையோ? நீ பெரும் புகழ் வாய்ந்த இமயமலையையும் அசைக்கும் வலிமை பெற்றுள்ளாய். துணையற்ற மகளிர் இரங்கத்தக்கவராவர்; இருந்தும் இங்ஙனம் பெய்து அலைப்பது ஏனோ?

கருத்து

மழையே! தலைவர் வரவுக்குத் தடையாய்ப் பெய்யும் உன் செயலைக் கைவிடு.

குறிப்பு

பெருமழை பெய்வதால் தலைவன் வாரானோ என்று தான் அஞ்சிய தனைத் தலைவி தலைவனுக்கு உணர்த்தினாள். இவ்வாறு அஞ்சுதற்குரிய நிலை ஏற்படாதிருக்க வரைந்துகொண்டு எப்பொழுதும் உடனுறைவதே நன்று என்பதைத் தலைவனுக்குத் தலைவி குறிப்பால் உணர்த்துகிறாள்.

சொற்பொருள்

1. நெடுவரை - உயர்ந்த மலை; பாம்பு பட - பாம்புகளும் இறக்கும்படியாய்.
2. கடுவிசை - மிக்க வேகம்; உரும் - இடி; கழறு குரல் - முழங்கும் குரல்; அளைஇ - கலந்து.
3. கால் - காற்று; கமஞ்சூல் - நிறைந்த (நீராகிய) கரு.
4. ஆர் அளி - நிறைந்த இரக்கம்; பேர் இசை - பெரிய புகழ்.
5. இமையம் - இமயமலை; துளக்கும் - அசைக்கும்.
6. அளியர் - இரங்கத்தக்கவர்.

தோழி கூற்று

ஐந்திணை ஐம்பது 50 **மாறன் பொறையனார்**

திணை : நெய்தல்

கூற்று

அல்லகுறிப்பட்டுப் பெயர்ந்தமை அறிய, தலைமகன் சிறைப் புறத்தானாக, தோழி தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

இயற்கையால் உண்டான குறியால் தலைவன் வந்துள்ளான் என்று எண்ணித் தலைவியும் தோழியும் சென்றனர்; அங்குத் தலைவன் இல்லாததால் அது தவறான குறி என்று உணர்ந்து திரும்பினர். அதற்குப் பின் தலைவன் அங்கு வந்து தலைவியைக் காணாமல் சென்றான். மறுநாள் தலைவியின் வீட்டு வேலிக்கு அருகில் நின்ற தலைவனுக்குக் கேட்கும்படி தாங்கள் அல்லகுறிப்பட்டுத் திரும்பியதைத் தோழி கூறியது.

அணிகடல் தண்சேர்ப்பன் தேர்ப்பரிமாப் பூண்ட
மணியரவம் என்றெழுந்து போந்தேன் – கனிவிரும்பும்
புள்ளரவம் கேட்டுப் பெயர்ந்தேன், ஒளியிழாய்!
உள்ளுருகு நெஞ்சினே னாய்.

தெளிவுரை

"ஒளிவீசும் அணிகலன்களை அணிந்த தலைவியே! கடலோடு கூடிய குளிர்ந்த நீர்த்துறையையுடைய தலைவனின் தேரில் பூட்டப்பெற்ற குதிரைகள் அணிந்திருக்கும் மணியோசை கேட்கிறது என்று கருதி வீட்டை விட்டு வெளியே வந்து பார்த்தேன். ஆனால், அது தேர்மணியோசை அன்று; பழங் களை விரும்பி உண்ண வந்த பறவைகளின் ஒலி என்றறிந்து வருந்திய மனத்தோடு திரும்பினேன்" எனத் தோழி தலைவியிடம் கூறினாள்.

கருத்து

பறவைகளின் ஒலியைத் தேரின் மணியோசை என்றெண்ணியதால் அல்லகுறி நேரிட்டுவிட்டது.

சொற்பொருள்

1. பரிமா - குதிரைகள்.

2. அரவம் - ஒலி; போந்தேன் - இல்லினை விட்டு வெளிவந்து பார்த்தேன்.
3. புள் - பறவை; அரவம் - ஒலி; பெயர்ந்தேன் - திரும்பினேன்.

3-2 புள்அரவம் கேட்டு, மணிஅரவம் என்று எழுந்து போனேன்.

4-3 உள்ளுருகு நெஞ்சினேனாய்ப் பெயர்ந்தேன் என்று கூட்டுக.

தோழி கூற்று

ஐந்திணை ஐம்பது 49 **மாறன் பொறையனார்**

திணை : நெய்தல்

கூற்று

அல்லகுறிப்பட்டுப் பெயர்ந்தமை அறியத் தலைமகன் சிறைப்புறத் தானாகத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியும் தோழியும் அல்லகுறிப்பட்டுப் பெயர்ந்தபின், தலைவன் வழக்கம்போல் வந்து தலைவியைக் காணாது சிறைப்புறத்து மயங்கி நின்றான். அதனையறிந்த தோழி, தலைவனுக்குக் கேட்கும்படியாய்த் தலைவியிடம் கூறியது.

கொடுமுள் மடல்தாழைக் கூம்பவிழ்ந்த ஒண்பூ
இடையுள் இழுதுஒப்பத் தோன்றிப் - புடையெலாம்
தெய்வம் கமழும் தெளிகடல் தண்சேர்ப்பன்
செய்தான் தெளியாக் குறி.

தெளிவுரை

"வளைந்த முள்களுள்ள மடல்களைக் கொண்ட தாழையின் மொட்டவிழ்ந்த பூக்களுக்கு நடுவே எழுந்த சோறு வெண்ணெய் போல் வெளிப்பட்டுப் பக்கங்களிலெல்லாம் மணம் வீசும் தெளிந்த குளிர்ந்த கடல் துறையையுடைய நம் தலைவன், நம்மால் அறிந்துகொள்ள இயலாத குறியினைச் செய்துவிட்டான். ஆதலால், நாம் அல்லகுறிப்பட்டோம்" என்று தோழி கூறினாள்.

கருத்து

அறிந்துகொள்ள இயலாத குறியைத் தலைவன் செய்ததால் அல்ல குறிப்பட நேரிட்டது.

குறிப்பு

தவறு தலைவியினது அன்று. தெளிய முடியாத குறியைச் செய்த தலைவனதுவே ஆகும் எனத் தொனிப்பொருள் தோன்றுவதைக் காணலாம்.

சொற்பொருள்

1. கொடு - வளைந்த; கூம்பவிழ்ந்த - குவிதல் நீங்கி மலர்ந்த.
2. இடையுள் - நடுவே; இழுது - வெண்ணெய்; புடையெலாம் - பக்கங்களிலெல்லாம்.
3. தெய்வம் - தெய்வ மணம் போல்; கமழும் - மணம் வீசும்.
4. தெளியா - தெளிவில்லாத, அறிந்துகொள்ள இயலாத.

3-4 தண்சேர்ப்பன், தெளியாக் குறி செய்தான்.

தோழி கூற்று

குறுந்தொகை 138 — **கொல்லன் அழிசி**

திணை : குறிஞ்சி

கூற்று

குறிபிழைத்த தலைமகன், பிற்றைஞான்று இரவுக்குறி வந்துழித் தோழி சிறைப்புறமாகக் கூறியது.

கூற்று விளக்கம்

முதல் நாள் உரிய இடத்தே வந்து தலைவியைக் காணாத தலைவன், மறுநாள் கேட்கும் அண்மையில் நிற்பதை அறிந்த தோழி, 'நேற்றிரவு தலைவனது வரவை எதிர்நோக்கிக் காத்திருந்தோம்; ஆயினும் அவன் வரவில்லை' எனக் கூறியது.

கொன்ஊர் துஞ்சினும், யாம்துஞ் சலமே;
எம்இல் அயலது ஏழில் உம்பர்,
மயில்அடி இலைய மாக்குரல் நொச்சி
அணிமிகு மென்கொம்பு ஊழ்த்த
மணிமருள் பூவின் பாடுநனி கேட்டே.

தெளிவுரை

இவ்வூரிலுள்ள அனைவருமே தூங்கிக்கொண்டிருந்தனர்; நாங்கள் மட்டும் தூங்கவில்லை. எம் வீட்டுக்கு அருகில் ஏழில் குன்றம் உள்ளது. அதன் உச்சியில் மயிலின் கால்விரல் போன்ற இலைகளையும், கரிய பூங்கொத்துகளையும் கொண்ட நொச்சி மரங்கள் உள்ளன. அவற்றின் அழகுமிக்க மெல்லிய கொம்பு களிலிருந்து இரவெல்லாம் நீலமணிபோலும் பூக்கள் உதிர்ந்த வண்ணம் இருந்தன. அம்மலர்கள் விழுந்த மெல்லிய ஓசையைக் கேட்டவாறே விழித்திருந்தும் நீ வரவில்லை" எனத் தோழி தலைவனைக் குறை கூறினாள்.

கருத்து

தலைவ! உன் வருகையை எதிர்நோக்கி யாம் துஞ்சாதிருந்தோம்; நீ வரவில்லை.

குறிப்பு

'பூ விழும் ஒலிகூடக் காதில் விழுந்தது. தலைவன் வந்திருந்தால் நாங்கள் அதை உணராமல் இருந்திருக்க மாட்டோம்; ஆதலின், அவன் வரவில்லை' எனத் தோழி கூறினாள்.

சொற்பொருள்

1. கொன் - பெருமை; துஞ்சினும் - தூங்கியிருந்தாலும்; துஞ்சலம் - தூங்கவில்லை.
2. இல் - வீடு; அயலது - அருகிலுள்ள; ஏழில் - ஏழில் மலை; உம்பர் - உச்சி, மேலே.
3. மாக்குரல் - கரிய பூங்கொத்து; நொச்சி - நொச்சி மரம்.
4. அணி - அழகு; மென் - மெல்லிய; ஊழ்த்த - வளர்ந்து முதிர்ந்த.
5. மணி மருள் - நீலமணி போன்ற; பாடு - ஓசை; நனி கேட்டே - மிகவும் நன்றாய்க் கேட்டுக்கொண்டே.

தோழி கூற்று

ஐந்திணை எழுபது 59 **மூவாதியார்**

திணை : நெய்தல்

கூற்று

இரவுக்குறி வேண்டி வந்த தலைமகன், தலைமகளைக் காணாது சிறைப் புறத்தானாக, தோழி தலைமகள் அல்லகுறிப்பட்டமையினை அவனுக்குக் கூறியது.

கூற்று விளக்கம்

இயற்கையால் உண்டான குறியால் தலைவன் வந்தனன் என்று எண்ணித் தலைவியும் தோழியும் சென்று, அங்குத் தலைவன் இல்லாததால், அது தவறான குறி என்று உணர்ந்து திரும்பினர். அதன்பின் தலைவன் அங்கு வந்து தலைவியைக் காணாமல் சென்றான். மறுநாள் தலைவியின் வீட்டு வேலி அருகில் நின்ற தலைவனுக்குக் கேட்கும்படி தாங்கள் அல்ல குறிப்பட்டுத் திரும்பியதைத் தோழி கூறியது.

இடுமணல் எக்கர் அகன்கானல் சேர்ப்பன்
கடுமான் மணியரவம் என்று – கொடுங்குழை
புள்ளரவம் கேட்டுப் பெயர்ந்தாள், சிறுகுடியர்
உள்ளரவம் நாணுவர் என்று.

தெளிவுரை

“வளைந்த காதணிகளைக் கொண்ட தலைவி, கடற்கரைச் சோலைகளை உடைய கடல்நிலத்திற்கு உரியவனான தலைவனைக் காண இரவில் குறியிடம் வந்தாள். அவள், அப்போது எழுந்த பறவைகளின் ஒலியைக் கடல்நிலத் தலைவன் விரைவாய்ச் செலுத்தும் குதிரைகளின் கழுத்தில் கட்டப்பட்டுள்ள மணி களின் ஒலி என்று கருதினாள். ஆனால், அவ்வொலி கேட்டு நம் ஊரிலுள்ளோர் ஐயங்கொள்வரோ எனக் கருதி, இரவுக்குறி யிடம்வரை சென்ற அவள், தலைவனைப் பார்க்காமலேயே திரும்பிவிட்டாள்” என்று அல்லகுறிப்பட்டமையினைத் தோழி, சிறைப்புறமிருந்த தலைவன் கேட்குமாறு கூறினாள்.

கருத்து

"பறவைகள் ஒலியெழுப்பின; அவ்வொலி தலைவனது தேரின் மணியோசை என ஊரிலுள்ளோர் ஐயுறுவரோ என்ற எண்ணத்தால் இரவுக்குறியிடம்வரை சென்ற தலைவி திரும்பிவிட்டாள்" என முந்நாள் நிகழ்ந்ததைத் தோழி, தலைவன் கேட்குமாறு கூறினாள்.

சொற்பொருள்

1. எக்கர் - மணல்மேடு; அகன் - அகன்ற; சேர்ப்பன் - கடல்நிலத் தலைவன்.
2. கடுமான் - விரைவாய்ச் செல்லும் குதிரை; அரவம் - ஒலி; கொடுங் குழை - வளைந்த காதணி அணிந்த தலைவி.
3. புள் - பறவை; அரவம் - ஒலி; பெயர்ந்தாள் - இரவுக்குறியிடம்வரை சென்று அவனைக் காணாது திரும்பினாள்; சிறுகுடியர் - சிறிய ஊரில் உள்ளோர்.
4. நாணுவர் - மதித்து அறிவர்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 261 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

அல்லகுறிப்பட்டுத் தலைமகன் நீங்கினமை அறியாதாள் போன்று தோழி, பிற்றை ஞான்று அவன் சிறப்புறத்தானாய் நிற்பத் தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் குறியிடம் தவறித் தலைவியைக் காண இயலாமல் சென்றான். ஒரு நாள் அவன் வந்து வீட்டோரம் நிற்பதறிந்த தோழி, அவன் வந்து திரும்பியதை அறியாதவள்போல் தலைவியிடம் கூறியது.

மென்தினை மேய்ந்த தறுகண் பன்றி
வன்கல் அடுக்கத்துத் துஞ்சும் நாடன்
எந்தை அறிதல் அஞ்சிக்கொல்?
அதுவே மன்ற வாரா மையே.

தெளிவுரை

தலைவியே! மென்மையான தினையை மேய்ந்த அஞ்சாமை மிக்க பன்றி, வலிய கற்கள் மிகுந்த மலைப்பக்கத்தே உறங்குகின்ற மலை நாட்டைச் சார்ந்தவனாகிய தலைவன் நேற்றுக் குறிப் பிட்டபடி வரவில்லையே, காரணம் என்னவாக இருக்கும்? நம் தந்தைக்குத் தெரிந்துவிடுமோ என்று அஞ்சியிருப்பானோ? உறுதியாய் அப்படித்தான் இருக்கும்.

கருத்து

'நம் தந்தைக்கு அஞ்சி இரவுக்குறி வாராது இருந்துவிட்டானோ' எனத் தோழி தானே ஒரு காரணம் படைத்துக்கொண்டு தலைவியிடம் கூறுகிறாள்.

உள்ளுறை

தினைப்புனத்தைக் காப்பவருக்கு அஞ்சாது, தான் விரும்பிய தினையை வயிறார மேய்ந்த பன்றி, மலைப்பக்கத்தே உறங்குதற்கு இடனான நாட்டைச் சார்ந்தவன், தலைவன். ஆயினும், அவன் தலைவியின் தந்தைக்கு அஞ்சித் தான் நினைத்தபடி தலைவியைக் கூடாமல் தன் வீட்டிலேயே தங்கிவிட்டான் என்பது உள்ளுறை.

விளக்கம்

தலைவன் அஞ்சினான் எனக் கூறுதல் வழுவேயாயினும் தோழி அவ்வாறு கூறியது, தலைவியின் ஆற்றாமையை உணர்த்தி, அவன் இடையறாது வருதல் வேண்டும் என்று வேண்டிக் கொள்ளும்பொருட்டேயாகும்.

குறிப்பு

பன்றி கவலையற்றுக் கல்லடுக்கத்தில் தூங்குவதுபோலத் தலைவனும் தலைவியை மணந்துகொண்டு தன் இல்லிலே இடையீடின்றித் துயில வேண்டும் என்பது குறிப்புப் பொருள்.

சொற்பொருள்

1. தறுகண் - அஞ்சாமை மிக்க.
2. வன்கல் - வலிய கற்கள்; அடுக்கம் - மலைப்பக்கம்; துஞ்சும் - தூங்கும்.
3. எந்தை - எம் தந்தை.
4. அதுவே மன்ற - உறுதியாய் அதுவேயாம்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 272 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

அல்லகுறிப்பட்டு நீங்கும் தலைமகன் சிறைப்புறத்தானாக, முன்னை நாள் நிகழ்ந்ததனைத் தோழிக்குச் சொல்லுவாள் போன்று தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தவறான குறியிடத்திற்கு வந்து, தலைவியைக் காணாமல் நீங்கினான்; மறுநாள் வந்து மனையின் ஓரத்தில் மறைந்து நின்றான். அவன் காதில்பட, முந்நாளில் நடந்ததைத் தோழியிடம் தலைவி கூறியது.

கருவிரல் மந்திக் கல்லா வன்பறழ்
அருவரைத் தீந்தேன் எடுப்பி, அயலது
உருகெழு நெடுஞ்சினைப் பாயும் நாடன்
இரவின் வருதல் அறியான்
'வரும்வரும்' என்ப தோழி! யாயே.

தெளிவுரை

மந்தியின் குட்டி ஒன்று, மரமேறும் தன் தொழிலை நன்கு அறியாத மடமைக் குணம் கொண்டது; கூரிய விரல்களைக் கொண்ட அக்குட்டி ஏறுதற்கரிய மலைமீது கட்டப்பட்டுள்ள தேன்கூட்டிலுள்ள தேனைப் பருக விரும்பி அதன் ஈக்களை எழுப்பிவிட்டது. ஈக்கள் அதனைக் கொட்ட, அதற்கஞ்சிப் பக்கத்தே உயரமாயிருந்த மரத்தின் உச்சிக்கிளை நோக்கிக் குதித்தது. அத்தகைய மலைநாட்டையுடைய நம் தலைவன், இவ்விடத்திற்கு வருவதற்கான வகை தெரியாமையால் வரவில்லை. ஆனால், நம் தாயோ அவன் வருகிறான் என்று கூறிக்கொண்டிருக்கிறாள்.

கருத்து

'தலைவன் இரவுக்குறிக்கண் வந்திருந்ததனைத் தாய் அறிந்து ஆரவாரம் செய்ய, அதனால் தலைவன் அஞ்சி அகன்று போயினனோ' எனத் தலைவி, தோழியிடம் கூறுவதுபோலத் தலைவனுக்கு உணர்த்தினாள்.

உள்ளுறை

மந்தியின் குட்டி மலைமீது கட்டப்பட்ட தேன்கூட்டில் உள்ள ஈக்களை எழுப்பியது; பின், அவற்றின் கடிக்கு அஞ்சி, அருகே உயர்ந்திருந்த மரத்தின் உச்சியை நோக்கிக் குதித்தது. இத் தொடர்மூலம், தலைவன் தான் இன்பம் நுகரக் கருதி வந்து, தன் வருகையை உணர்த்தி, தலைவியின் சுற்றத்தார் பலரும் அதை அறிந்ததனால் அவன் அஞ்சி நீங்கினன் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

ஈக்களை ஒதுக்கிவிட்டுத் தேன் உண்ணத் தெரியாத குட்டி போல, இரவுக்குறிக்கண் வரும் வழியறியாது அல்லகுறிப்பட்டுத் தாய் முதலாயினோர் அரவம் கேட்டுத் தலைவன் அகன்று போயினான் என்கிறாள், தலைவி.

சொற்பொருள்

1. மந்தி - பெண்குரங்கு; கல்லா - தன் தொழிலை நன்கு கற்றறியாத; வன்பறழ் - மடமைத் தன்மை வாய்ந்த குட்டி.
2. அருவரை - ஏறுதற்கரிய மலை; தேன் எடுப்பி - தேனீக்களை எழுப்பிவிட்டு; அயல - அருகிலுள்ள.
3. உருகெழு - அச்சம் பொருந்திய; நெடுஞ்சினை - உயர்ந்த மரக்கிளை.
4. வருதல் அறியான் - வருவதற்கான வகை தெரியான்.
5. வரும் - வருகின்றான்; யாய் - தாய்.

தோழி கூற்று

திணைமொழி ஐம்பது 41 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : நெய்தல்

கூற்று

அல்லகுறிப்பட்டுப் பெயர்ந்த தோழி, தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியும் தோழியும் இயற்கையால் உண்டான குறியால் தலைவன் வந்தனன் என்று கருதிச் சென்று, அங்குத் தலைவன் இல்லாததால் அது தவறான குறி என்று உணர்ந்து திரும்பினர். அதன்பின் தலைவன் அங்கு

வந்து தலைவியைக் காணாமல் சென்றான். மறுநாள் தலைவியின் வீட்டு வேலி அருகில் நின்ற தலைவனுக்குக் கேட்கும்படி, தாங்கள் அல்லகுறிப்பட்டுத் திரும்பியதைத் தோழி தலைவியிடம் கூறியது.

நெய்தற் படப்பை நிறைகழித் தண்சேர்ப்பன்
கைதைசூழ் கானலுள் கண்டநாள் போலானான்
செய்த குறியும்பொய் யாயின ஆயிழையாய்!
ஐயகொல் ஆன்றார் தொடர்பு.

தெளிவுரை

"ஆராய்ந்து செய்யப்பட்ட அணிகலன்களை அணிந்த தலைவியே! நெய்தல் மலர்கள் நிறைந்த கொல்லைகளையும் உப்பங்கழிகளையும் கொண்ட குளிர்ந்த கடற்கரைக்குரியவன், நம் தலைவன். தாழை மரங்கள் சூழ்ந்துள்ள கடற்கரைச்சோலை யிடத்தில் முன்பு அவன் நம்மைக் கண்ட நாளில், நீ அவனுக்கு அரியவளாய்க் காணப்பட்டாய். ஆனால், இன்று நமக்கு அவன் அரியவனாய் விளங்குகின்றான். அவனால் குறிக்கப்பட்ட பகல்குறியும் இரவுக்குறியும் பொய்யாயின. அவனது நட்பு ஐயத்திற்கு உள்ளாகிவிட்டதே" என்று தோழி, சிறைப்புறத் திருந்த தலைவன் கேட்குமாறு, தலைவியிடம் கூறினாள்.

கருத்து

அன்று நாம் தலைவர்க்கு அரியராய் இருந்தோம்; இன்று அவர் நமக்கு அரியராய் உள்ளார்.

சொற்பொருள்

1. படப்பை - கொல்லை; நிறைகழி - நிறைந்த உப்பங்கழிகளையும்.
2. கைதை - தாழை; கண்ட நாள் - முன்பு நாம் அவரைக் கண்ட நாளில் (நாம் அவர்க்கு அரியராய்க் காணப்பட்டோம்); போல் ஆனான் - அது போன்று அவன் நமக்கு இன்று அரியனாய்க் காணப்படுகின்றான்.
3. குறி - பகல் குறியும் இரவுக்குறியும்; பொய்யாயின - பொய்த்து நம்மை ஏமாற்றிவிட்டன.
4. ஐயகொல் - ஐயத்திற்கு உள்ளதாய்விட்டது; ஆன்றார் - அத் தலைவர்; தொடர்பு - நட்பு.

தோழி கூற்று

திணைமொழி ஐம்பது 43 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : நெய்தல்

கூற்று

அல்லகுறிப்பட்டுப் பெயர்ந்த தோழி, தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியும் தோழியும் தவறாக உண்டான குறியால் தலைவன் வந்தனன் என்று கருதிச் சென்று, அங்குத் தலைவன் இல்லாததால் அது தவறான குறி என்று உணர்ந்து திரும்பினர். அதன்பின் தலைவன் அங்கு வந்து தலைவியைக் காணாமல் சென்றான். மறுநாள் தலைவியின் வீட்டு வேலி அருகில் நின்ற தலைவனுக்குக் கேட்கும்படி தாங்கள் அல்லகுறிப்பட்டுத் திரும்பியதைத் தோழி தலைவியிடம் கூறியது.

எறிசுறா நீள்கடல் ஓதம் உலாவ
நெறிஇறாக் கொட்கும் நிமிர்கழிச் சேர்ப்பன்
அறிவுஅறா இன்சொல் அணியிழையாய்! நின்னில்
செறி(வு)அறா செய்த குறி.

தெளிவுரை

“அறிவு நிறைந்த இனிய சொற்களைப் பேசும் அழகிய அணிகலன்கள் அணிந்த தலைவியே! சுறா மீன்கள் துள்ளி விளையாடுகின்ற பெரிய கடலில் எழும் அலைகள் முன்னும் பின்னுமாய் அலைய, அவற்றில் வரிவரியான நெளிவுகளைக் கொண்ட இறால் மீன்கள் சுழன்று திரியும். அத்தகைய உப்பங்கழிகளைக் கொண்ட நீண்ட கடற்கரைக்குரியவன், நம் தலைவன். அவன் உன் மனைக்குப் புறத்தே நின்று தன் வருகையைத் தெரிவிப்பதற்காகச் செய்த இரவுக்குறி அடையாளங்கள் தெளிவாய்ப் புரிந்து கொள்ள இயலாதனவாய் இருந்தமையால் அவை தவறிப் போயின” என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

கருத்து

தலைவன் செய்த குறிகள் தெளிவின்மையால் அவன் வந்ததை அறிந்து கொள்ள இயலாததாயிற்று.

சொற்பொருள்

1. சுறா - சுறாமீன்; ஓதம் - அலை.
2. நெறி இறா - நெளிவுகளைக் கொண்ட இறால் மீன்; கொட்கும் - சுழன்று திரியும்.
3. அறிவுஅறா - அறிவு நிறைந்த; நின்இல் - உன் மனையில்.
4. செறிவுஅறா - தெளிவில்லாமல்; செய்த குறி - செய்த இரவுக்குறி அடையாளங்கள்.

தலைவி கூற்று

அகநானூறு 122 **பரணர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லுவாளாய், தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனை அவன் கூறிய குறியிடத்தில் தலைவி சந்திக்கவில்லை. மீண்டும் தலைவன் சிறைப்புறத்தானாக, தலைவி அவன் கேட்குமாறு, தான் அடைந்த துன்பங்களைத் தோழியிடம் கூறியது.

இரும்பிழி மாரிஇவ் அழுங்கல் மூதூர்
விழவுஇன்று ஆயினும் துஞ்சாது ஆகும்;
மல்லல் ஆவணம் மறுகுஉடன் மடியின்,
வல்உரைக் கடுஞ்சொல் அன்னை துஞ்சாள்;
பிணிகோள் அருஞ்சிறை அன்னை துஞ்சின்,
துஞ்சாக் கண்ணர் காவலர் கடுகுவர்;
இலங்குவேல் இளையர் துஞ்சின், வைஎயிற்று
வலஞ்சுரித் தோகை ஞாளி மகிழும்;
அரவவாய் ஞமலி மகிழாது மடியின்
பகல்உரு உறழ நிலவுக்கான்று விசும்பின்
அகல்வாய் மண்டிலம் நின்றுவிரி யும்மே;
திங்கள் கல்சேர்பு கனைஇருள் மடியின்;
இல்எலி வல்சி வல்வாய்க் கூகை
கழுதுவழங்கு யாமத்து அழிதகக் குழறும்;

வளைக்கண் சேவல் வாளாது மடியின்,
மனைச்செறி கோழி மாண்குரல் இயம்பும்;
எல்லாம் மடிந்த காலை, ஒருநாள்
நில்லா நெஞ்சத்து அவர்வா ரலரே; அதனால்
அரிபெய் புட்டில் ஆர்ப்பப் பரிசிறந்து,
ஆதி போகிய பாய்பரி நன்மா
நொச்சி வேலித் தித்தன் உறந்தைக்
கல்முதிர் புறங்காட்டு அன்ன,
பல்முட் டின்றால் – தோழி!நம் களவே.

தெளிவுரை

பழமை வாய்ந்த இந்த ஊர், விழா நடைபெறவில்லை யாயினும் உறக்கம் கொள்ளாது; மிகுதியான கள்ளினைப் பருகிக் களித்தாடும் மக்கள் இங்கு இருக்கிறார்கள். ஊரில் உள்ள வளமிக்க கடைத்தெருவும், பிற தெருக்களும் ஒருசேர ஒலி அடங்கி உறங்கினாலும் நம் அன்னை உறங்க மாட்டாள். நம்மை வெளியே போக விடாது சிறையினைப் போன்று காவல் செய்யும் அன்னை தூங்கினாலும், ஊர்க்காவலர் உறங்காது சுற்றி வருவர்.

ஒளி பொருந்திய வேலைக் கொண்ட அக்காவலர்கள் உறங்கி னாலும் வலப்பக்கம் சுருளும் தன்மை கொண்ட வாலினைக் கொண்ட நாய் குரைக்கும். நாய் குரைக்காது தூங்கினாலும் அகன்ற வானத்தில் திங்கள் தோன்றிப் பகல்போல நிலவினைச் சொரிந்து எங்கும் ஒளி செய்யும்; அத்திங்களும் மேற்கு மலையில் மறைந்து இருள் பரவினாலும், இல்லத்து எலியை இரை யாகக் கொள்ளும் வலிய வாயினைக் கொண்ட கூகைச்சேவல் (கோட்டான்) கூவும். கோட்டான் குழறாது உறங்கினாலும், வீட்டில் வாழும் கோழிச்சேவல் குரல் எழுப்பிக் கூவும். இவை யெல்லாம் ஒருநாள் உறங்கிக் கிடந்தாலும் என் நெஞ்சிலிருந்து பிரியாது நிற்கும் என் தலைவன் அன்று என்னைக் காண வர மாட்டான்.

தித்தன் என்பான் பாய்ந்து செல்லும் குதிரைகளை உடையவன். அக்குதிரைகள் பரல்கற்கள் நிறைந்த பாதையிலும் காற்சதங்கைகள் ஒலிக்க, வேக நடையில், ஆதி என்னும் நேரோட் டத்தில் ஓடும் தேர்ச்சி பெற்றவை. அத்தித்தனுடைய உறையூர்,

மதில் சூழ்ந்தது. அவ்வூரைச் சுற்றிலும் காவற்காடு போன்ற பல்வேறு இடையூறுகள் உள்ளன. நான் மேற்கொண்டொழுகும் களவொழுக்கமும் இத்தகைய இடையூறுகளைக் கொண்டுள்ளது.

கருத்து

தாய் உறங்காமை, நாய் உறங்காமை, ஊர் உறங்காமை, காவலர் கடுகி வருதல், நிலவு வெளிப்படுதல், கூகை குழறுதல், கோழி கூவுதல் போன்ற இடையூறுகளால் இரவின் தொடக்கம்முதல் இறுதிவரை தலைவனை, அவன் கூறிய குறியிடத்தில் சந்திக்க இயலவில்லை.

குறிப்பு

இவ்விடையூறுகளை எல்லாம் எண்ணிப் பார்த்துத் தலைவன் விரைவில் மணம் மேற்கொள்ள வேண்டும் என்னும் கருத்தைத் தலைவி புலப்படுத்துகிறாள்.

வரலாறு

தித்தன், உறையூரிலிருந்து ஆட்சி செய்த சோழன்; சிறந்த குதிரைப்படை கொண்டவன்; போராற்றல் மிக்கவன்; வறியார்க்கு வழங்கும் வள்ளலாயும் விளங்கினான்.

சொற்பொருள்

1. இரும் பிழி மாரி - பிழிந்தெடுக்கப்பட்ட மழை போன்ற மிகுதியான கள் (பிழி - கள்); அழுங்கல் - ஆரவாரம்.
2. விழவு - விழா; துஞ்சாது - தூங்காது.
3. மல்லல் - வளப்பம்; ஆவணம் - கடைத்தெரு; மறுகு - தெரு; மடியின் - துயின்றால்.
4. வல்உரை - வலிய ஒலியுடன் கூடிய.
5. பிணிகோள் - (வெளியே செல்லவிடாது) பிணித்துக்கொள்ளும்.
6. கண்ணர் - கண்களைக் கொண்டவர்; கடுகுவர் - சுழல்வர்.
7. இளையர் - காவலர்.
8. வலஞ்சுரி - வலமாய்ச் சுருளுதல்; தோகை - இங்கு வாலைக் குறிக்கிறது; ஞாளி - நாய்; மகிழும் - மகிழ்ந்து குரைக்கும்.
9. அரவ வாய் - ஒலிமிக்க வாய்; ஞமலி - நாய்.
10. பகல் உரு உறழ - பகலின் ஒளியினை ஒத்த; கான்று - சொரிதல், வீசுதல்.

12. கல் சேர்தல் - மலையைச் சென்றடைதல்; கனை - மிகுதி.
13. வல்சி - உணவு; வல் - வலிய; கூகை - கோட்டான்.
14. கழுது - பேய்; அழிதக - அழிவுண்டாக; குழறும் - கூவும்.
15. வளை - பொந்து; வாளாது - வறிதே.
16. மனைச் செறி - வீட்டில் வாழும்.
17. மடிந்த காலை - ஒழிந்தபோது.
18. அவர் - தலைவர்; வாரலர் - வருதல் இல்லை.
19. அரி - பரல்; புட்டில் - கெச்சை; பரி - வேகம்.
20. ஆதிபோகிய - ஆதி நடையில் செல்ல (ஆதி - குதிரை நடக்கும் நடைவகை (கதி)களுள் ஒன்று); மா - குதிரை.
21. நொச்சி - மதில்; தித்தன் - சோழ மன்னருள் ஒருவன்; உறந்தை - உறையூர், சோழர் தலைநகர்.
22. புறங்காடு - (மதிலுக்கு வெளியே உள்ள) காவற்காடு.
23. முட்டு - தடை; களவு - களவொழுக்கம்.

தோழி கூற்று

கலித்தொகை 65 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறி அலராமென்றஞ்சித் தலைமகனை நீக்கி நிறுத்தக் கருதிய தோழி, "அல்லகுறிப்படுதலும் அவள்வயின் உரித்தே, அவன் குறி மயங்கிய அமைவொடு வரினே" என்னும் சூத்திரத்தான் அல்லகுறிப்படுதல் தனக்கும் உரித்தாகலின் அவன் செய்த குறியறிதற்குப் புறத்துச் சென்றவழி, ஆண்டுப் பிறந்ததொரு செய்தியாக ஒரு பொய்யை நாடக வழக்கும் உலகியல் வழக்குமாகப் புனைந்துரை வகையால் படைத்துக்கொண்டு, பிற்றை ஞான்று தலைமகன் சிறைப்புறமாகத் தலைமகளுக்குக் கூறியது. இதனை "இரந்து குறையுற்ற கிழவனைத் தோழி, நிரம்ப நீக்கி நிறுத்தலன்றியும், வாய்மை கூறலும், பொய்தலைப் பெய்தலும், நல்வகையுடைய நலத்திற் கூறியும், பல்வகையானும் படைக்கவும் பெறுமே" எனப் பொருளியற் சூத்திரத்துப் (தொல். பொருள். 134) பொய்தலைப் பெய்தலையும் படைக்கவும் பெறுமென வழுவமைத்த வாற்றால் கொள்க.

கூற்று விளக்கம்

இரவுக்குறியிடத்தில் தலைவனைத் தலைவி சந்தித்தால் ஊரில் பழிச்சொல் பரவும் என்றஞ்சும் தோழி, வேண்டுமென்றே வேறோர் இடத்தைச் சந்திக்குமிடமாய்த் தலைவியிடம் குறிப்பிடுகிறாள். அங்குத் தலைவன் இருப்பான் என்று எண்ணித் தவறான இடத்துக்குச் செல்கிறாள், தலைவி. 'தலைவன் பகல், இரவு ஆகிய இரு வேளைகளிலும் மாறி மாறி வந்ததால், தலைவியும் அல்லகுறிப்படுதல் - சந்திப்பு இடம், நேரம் ஆகியவற்றைத் தப்ப விடுதல் உண்டு' என்னும் நூற்பாவில் உள்ளவாறு, தோழி, சென்ற இடத்தில் நடந்ததாய் ஒரு நிகழ்ச்சியைப் பொய்யாய்க் கற்பித்துத் தலைவிக்குக் கூறியது. (அப்படித் தலைவியிடம் தோழி சொல்வதைச் சிறைப்புறமாய் நின்று தலைவன் கேட்டுக்கொண்டிருக்கிறான்).

திருந்திழாய்! கேளாய்,நம் ஊர்க்கெல்லாம் சாலும்
பெருநகை, அல்கல் நிகழ்ந்தது; ஒருநிலையே;
மன்பதை எல்லாம் மடிந்த இருங்கங்குல்,
அந்துகில் போர்வை அணிபெறத் தைஇ,நம்
இன்சாயல் மார்பன் குறிநின்றேன் யான்ஆகத்
தீரத் தறைந்த தலையும்,தன் கம்பலும்,
காரக் குறைந்து, கறைப்பட்டு வந்து,நம்
சேரியின் போகா முடமுதிர் பார்ப்பானைத்
தோழிநீ போற்றுதி என்றி – அவன்ஆங்கே,
பாரா, குறழா, பணிபா, 'பொழுதன்றி,
யார்,இவண் நின்றீர்? எனக்கூறிப் பையென,
வைகாண் முதுபகட்டின், பக்கத்திற் போகாது,
தையால் தம்பலம் தின்றியோ என்றுதன்
பக்குஅழித்துக் கொண்ட – எனத்தரலும் யாதுஒன்றும்
வாய்வாளேன் நிற்பக் கடிதுஅகன்று கைமாறிக்
கைப்படுக்கப் பட்டாய், சிறுமிநீ – மற்றுயான்
ஏனைப் பிசாசு;அருள்; என்னை நலிதரின்,
இவ்வூர்ப் பலிநீ பெறாஅமல்கொள் வேன்'எனப்
பலவும் தாங்காது வாய்பாடி நிற்ப–
முதுபார்ப்பான் அஞ்சின னாதல் அறிந்து,யான்,
எஞ்சாது ஒருகை மணற்கொண்டு, மேல்தூவக்
கண்டே, கடிதுஅரற்றிப் பூசல்தொடங் கினன்ஆங்கே,

ஒடுங்கா வயத்தின் கொடும்கேழ், கடுங்கண்,
இரும்புலி கொண்மார் நிறுத்த வலையுள்ஓர்
ஏதில் குறுநரி பட்டற்றால்! காதலன்
காட்சி அழுங்க, நம்ஊர்க் கெலாஅம்
ஆகுலம் ஆகி விளைந்ததை – என்றும்தன்
வாழ்க்கை அதுவாகக் கொண்ட முதுபார்ப்பான்
விழ்க்கைப் பெருங்கருங் கூத்து.

தெளிவுரை

“திருத்தமான அணிகலன்களை அணிந்துள்ள தலைவியே! கேள்! நேற்று ஒரு வேடிக்கை நடந்தது. அது நம் ஊர் முழுவதற்கும் நாளெல்லாம் பெருஞ்சிரிப்பை ஊட்டுகின்ற ஒன்று.

“மக்கள் அனைவரும் தூங்கும் இரவு நேரத்தில், அழகிய ஒரு போர்வையை அழகு பெறப் போர்த்திக்கொண்டு, இனிமையும் மென்மையும் வாய்ந்த மார்பைக் கொண்ட நம் அன்பனைச் சந்திக்க வேண்டிய இடத்தில் சென்று நான் நின்றேன்.

“மொட்டைத்தலையும் முக்காடும் போட்ட, அழுக்கேறிய ஆடையுடன் கருங்குட்டத்தால் கையும் காலும் குறைந்துள்ள கிழட்டுக் கூனல் பார்ப்பான் ஒருவன் - இந்த ஊரில் சுற்றித் திரிவானே, அந்தப் பார்ப்பான் - ‘இரக்கம் கொண்டு பேணு’ என்று நீகூடக் கூறுவாயே, அந்தப் பார்ப்பான் - அப்போது அங்கு வந்தான்; அந்த இருட்டில் அடையாளம் தெரியாமல், குனிந்து வளைந்து என்னைப் பார்த்து, ‘வேளையற்ற நேரத்தில் இங்கு நிற்கும் நீ யார்?’ என்று கேட்டான். நான் வாய் திறக்கவில்லை.

“வைக்கோலைக் கண்ட கிழட்டு மாட்டைப்போல் அங்கிருந்து போகாமல் நின்று, ‘பெண்ணே! நீ வெற்றிலை தின்கின்றாயா?’ என்று கேட்டுத் தனது கைப்பையை அவிழ்த்து நீட்டினான். நான் பதில் சொல்லாது நிற்கவே, அவன் அச்சங்கொண்டு, மனம் மாறி, விரைந்து அப்பாற்சென்று, ‘சிறுக்கியே! நீ என்னிடம் அகப்பட்டுக்கொண்டாய். நீ பெண் பிசாசு; இந்த வடிவத்தில் வந்திருக்கிறாய். நான் ஆண் பிசாசு; உன்னிடம் காதல் கொண்டேன். மனம் இரங்கு. அவ்வாறில்லாமல் துன்புறுத்தினால் இவ்வூரில்

உனக்குப் பலியிடும் பொருளை நான் பறித்துக்கொள்வேன்" என்று பேசிப் புலம்பினான்.

கிழட்டுப் பார்ப்பான் பயந்தான் என்பதை அறிந்து நான் தாமதம் செய்யாமல் அவன் மேல் கைநிறைய மணலை அள்ளித் தூவினேன். அவன் கதறிக்கொண்டு ஊரெல்லாம் கேட்குமாறு கூச்சலிடத் தொடங்கினான்.

அவன் செய்த வேடிக்கைக் கூத்து வலிமைமிக்க புலிக்கு விரித்த வலையில் நரி அகப்பட்டதுபோல ஆகிவிட்டது; நான் தலைவனைச் சந்திக்க இயலாமல் செய்துவிட்டது. தலைவனைச் சந்திக்கப் போன இடத்தில் குட்டரோகியான கிழட்டுப் பார்ப்பான் வந்து அலறினான். ஊரெல்லாம் இது பேச்சாயிற்று.

கருத்து

தலைவியிடம், தோழி சொல்லிய இந்தக் கூத்துக் கதை இட்டுக் கட்டப்பட்டதுதான். ஆனால், சிறைப்புறமாய் நின்று இதைக் கேட்கும் தலைவன் உண்மை என்று நம்பும்படியாக இருக்கிறது. இதன்வழி, இரவுக்குறியால் ஏற்படும் துன்பத்தைப் புலப்படுத்தித் திருமண முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்னும் எண்ணம் தலைவன் உள்ளத்திலே எழச் செய்யவேண்டும் என்பதே தோழியின் கருத்து.

உவமைச் சிறப்பு

காமநோய் கொண்டு கன்னி ஒருத்தியை நெருங்குபவனுக்கு, வைக்கோலைக் கண்டதும் அதைத் தின்ன முற்படும் காளையை உவமித்திருப்பது மிகவும் நயம் வாய்ந்தது.

சொற்பொருள்

1. திருந்திழாய் - திருத்தமான அணிகலன்களை அணிந்தவளே! சாலும் - போதும்.
2. அல்கல் - இரவு வேளை; ஒருநிலை - ஒரு நிகழ்ச்சி.
3. மன்பதை - உயிரினம்; மடிந்த - தூங்கும்.
4. தைஇ - உடுத்தி.
5. சாயல் - அழகு; குறி - குறித்த குறியிடம்.
6. தீர - முற்றிலும்; தறைந்த - மயிர் நீங்கிய; கம்பல் - கம்பளி.
7. காரக் குறைந்து - கருங்குட்டத்தால் கை, கால் குறைபட்டு; கறைபட்டு - குல ஒழுக்கம் கெட்டு.

8. போகா - சுற்றித் திரியும்; முடம் - நொண்டி; முதிர் - முதுமையுற்ற, கிழம்.
9. போற்றுதி - இரக்கம் கொண்டு பேணு.
10. பணியா - வளைந்து; பொழுதன்றி - வேளையற்ற நேரம்.
12. வை - வைக்கோல்; முதுபகடு - கிழ எருது.
13. தம்பலம் - வெற்றிலை பாக்கு.
14. பக்கு - சிறு பை (சுருக்குப்பை); அழித்து - திறந்து காட்டி; கொண்டீ - கொள்க.
15. வாய்வாளேன் - வாய் பேசாது; கடிது - விரைந்து.
16. சிறுமி நீ - சிறுக்கி நீ (பெண் பிசாசு).
17. ஏனைப் பிசாசு - (நின்) ஆண் பிசாசு; நலிதரின் - துன்புறுத்தினால்.
18. அமல் கொள்வேன் - நடைமுறைப்படுத்துவேன் (உனக்குக் கிடைக்கும் பலியை நான் பறித்துக்கொள்வேன்).
19. வாய்பாடி - புலம்பி.
21. எஞ்சாது - மறையாமல்.
22. அரற்றுதல் - கதறுதல்; பூசல் - பெரிதாய் ஒலித்தல்.
23. ஒடுங்கா - குறையா; வயம் - வலிமை; கொடும் - வளைந்த; கேழ் - நிறம்.
24. கொண்மார் - கொள்வதற்காக, பிடிப்பதற்காக; நிறுத்த - பரப்பிய.
26. அழுங்க - வருந்த.
27. ஆகுலம் - மனக்கலக்கம்.
29. கருங்கூத்து - கேலிக்கூத்து.

தலைவி கூற்று

அகநானூறு 290 **நக்கீரர்**

திணை : நெய்தல்

கூற்று

இரவுக்குறிக்கண் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லுவாளாய்த் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

களவுக்காலத்தில் தலைவனும் தலைவியும் சேர்ந்திருக்கும் காலத்தை விடப் பிரிந்திருக்கும் காலமே அதிகமானது. ஆதலால், பிரிவுத் துன்பத்தைப் பொறுக்க இயலாத தலைவி, தன் உணர்வை, இரவுக்குறியில் வந்து நின்ற தலைவனுக்குக் கேட்குமாறு தோழியிடம் கூறியது.

குடுமிக் கொக்கின் பைங்கால் பேடை,
இருஞ்சேற்று அள்ளல் நாட்புலம் போகிய,
கொழுமீன் வல்சிப் புன்தலைச் சிறாஅர்,
நுண்ஞாண் அவ்வலைச் சேவல் பட்டென,
அல்குறு பொழுதின் மெல்குஇரை மிசையாது,
பைதல் பிள்ளை தழீஇ ஒய்யென,
அம்கண் பெண்ணை அன்புற நரலும்,
சிறுபல் தொல்குடிப் பெருநீர்ச் சேர்ப்பன்,
கழிசேர் புன்னை அழிபூங் கானல்,
தணவா நெஞ்சமொடு தமியன் வந்து,நம்,
மணவா முன்னும், எவனோ – தோழி!–
வெண்கோட்டு யானை விறல்போர்க் குட்டுவன்
தெண்திரைப் பரப்பின் தொண்டி முன்துறை,
சுரும்புஉண மலர்ந்த பெருந்தண் நெய்தல்
மணிஏர் மாண்நலம் ஒரீஇ,
பொன்நேர் வண்ணம் கொண்டஎன் கண்ணே.

தெளிவுரை

தோழியே! காலை வேளையில் கொழுவிய மீன் உணவை உண்ட சிறிய தலையைக் கொண்ட சிறுவர்கள், மீன் வேட்டைக்குச் சென்றனர். சேறுள்ள வயலில் அவர்கள் வைத்த நுண்ணிய கயிற்றுவலையில் (கண்ணியில்) ஆண்கொக்கு ஒன்று அகப்பட்டது. தலையில் கொண்டையைக் கொண்ட அதன் பேடை பனைமரத்தில் தனித்துத் தங்கியிருந்தது; இரையையும் தின்னவில்லை; துன்புறும் தன் குஞ்சை அணைத்துக்கொண்டு அன்பு தோன்ற ஒலியெழுப்பியது. இத்தகைய காட்சி கொண்டதும், சிறிய பலவாய பழைய குடிகள் நிறைந்ததுமான கடற்கரை ஊரில் வாழ்பவன், நம் தலைவன்.

கழியைச் சார்ந்துள்ள சோலையில் பூக்கள் மிகக் கொண்ட புன்னைமரச்சோலையில் நம்மைச் சந்திக்க, அன்பு மறவாத நெஞ்சத்தோடு தலைவன் இரவில் தனியே வருகின்றான்.

வெண்ணிறத் தந்தங்கள் கொண்ட யானைகளையுடைய சேர மன்னன் போர் வெற்றியினைப் பெற்றவன்; அலைகள் பொருந்திய

தொண்டி, அம்மன்னனது துறைமுகம். அங்கு வண்டுகள் உண்ணும்படியாகப் பெரிய, குளிர்ந்த நெய்தல் மலர்கள் மலர்ந்துள்ளன. அப்பூவின் நீலமணியை ஒத்த அழகிய நிறத்தைக் கொண்டிருந்த என் கண்கள், தலைவன் என்னைக் கூடுதற்கு முன்னேயே, அழகிய நிறம் நீங்கி, பொன்போலும் பசலை நிறத்தைப் பெற்றுவிட்டன. இஃது ஏன்?

கருத்து

தோழியே! தலைவன் கடற்கரைச்சோலையில் தனியனாய் வந்து என்னைக் கூடுதற்கு முன்பே என் கண்கள் அழகிழந்து நிறம் மாறின. இதற்கு என்ன காரணம்?

குறிப்பு

'தலைவன் கூடிப் பிரிந்த பின், பிரிவுத் துன்பத்தால் கண்களில் படர்வதாகிய பசலை, இரவுக்குறியிடத்திற்கு வரும் வழியில் அவனுக்கு இடையூறு நேரிட்டுக் கூடுவதற்கு வாய்ப்பில்லாது போய்விடுமோ என்னும் அச்சத்தால், இப்பொழுதே படர்கிறதோ' என்கிறாள், தலைவி.

'தலைவி நம்மைப் பிரிந்து ஒரு நாளும் வாழ்வாள் அல்லள். ஆதலின், நாம் விரைந்து அவளை மணந்துகொள்ளுதல் வேண்டும்' என்று தலைவன் உணர வேண்டும் என்பதே தலைவியின் கருத்து.

சொற்பொருள்

1. குடுமி - உச்சிக்கொண்டை.
2. அள்ளல் - சேற்றுக்குழம்பு.
3. கொழு மீன் - கொழுவிய மீன்; வல்சி - உணவு.
4. ஞாண் - கயிறு.
5. அல்குதல் - தங்குதல்; மெல்கு இரை - மெல்லும் இரை; மிசையாது - உண்ணாது.
6. பைதல் - துன்பம்; பிள்ளை - குஞ்சு; ஒய்யென - விரைவாய்.
7. பெண்ணை - பனை மரம்; நரலும் - ஒலிக்கும்.
8. சேர்ப்பன் - கடற்கரைத் தலைவன்.
9. அழி பூ - குறையாத பூ, எப்போதும் நிறைந்துள்ள பூ.
10. தணவா நெஞ்சம் - காதல் நீங்காத நெஞ்சம்.
11. மணவா முன்னும் - நம்மைக் கூடுதற்கு முன்னரே.
12. விறல் - வெற்றி; குட்டுவன் - சேர மன்னன்.

13. தொண்டி - சேரர் துறைமுகம்.
14. சுரும்பு - வண்டு.
15. மணி ஏர் மாண் நலம் - நீலமணியைப் போன்ற சிறந்த அழகு; ஒரீஇ - நீங்கி.
16. பொன்நேர் வண்ணம் - பொன் நிறம் போன்ற பசலை.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 116 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

எற்பாட்டின்கண் தலைமகன் சிறைப்புறத்து நின்று கேட்பத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது. (எற்பாடு - பொழுது சாயும் நேரம்.)

கூற்று விளக்கம்

பொழுது சாயும் நேரத்தில் தலைவன் சிறைப்புறமாய் வந்து நிற்க, அவன் கேட்குமாறு தலைவி தோழியிடம் கூறியது.

அம்ம வாழி, தோழி! நாம்அழ,
நீல இருங்கழி நீலம் கூம்பும்
மாலை வந்தன்று, மன்ற
காலை அன்ன காலைமுந் துறுத்தே.

தெளிவுரை

தோழியே! வாழி! நாம் காம நோயினாலுண்டாகிய வருத்தம் தாங்க இயலாது அழுதுகொண்டிருக்கும்படியும், நீல நிறம் கொண்ட பெரிய உப்பங்கழிகளில் வளரும் நீல மலர் குவியுமாறும் மாலைக்காலம் வந்தது. தன் போன்ற பொழுதை (எற்பாட்டை) முன்னே அனுப்பிவைத்துவிட்டு அதன் பின்னாலேயே இதோ இப்போது மாலைப்பொழுதும் வந்து விட்டது. (யான் எங்ஙனம் பொறுப்பேன்?)

கருத்து

நாம் அழும்படியாக எற்பாட்டினை (ஒளியும் இருளும் விரவி நிற்கும் அந்திமாலைப்பொழுதினை) முன் அனுப்பிவிட்டுப் பின்னாலேயே மாலையும் வந்துவிட்டது.

குறிப்பு

'குளிர்ந்த கழனிகளிலேயுள்ள நீல மலரே அஞ்சிக் கண் மூடும் என்றால், பிரிவென்னும் வெப்பத்தேயிருக்கும் நம் நிலை என்னாம்?' என்கிறாள், தலைவி.

கொடியோன் ஒருவன் தன் வரவினை அறிவிக்கத் தன் பணியாளன் ஒருவனை முன்னரே அனுப்பிவைப்பதுபோல, மாலைப்பொழுதும் அந்திமாலைப்பொழுதை (எற்பாட்டினை) முன்னே அனுப்பி வைத் திருக்கிறது.

'மாலையில் நீலம் குவிவது இயல்பு. ஆயினும், தலைவி வருத்தம் தாங்க இயலாது அழ, அதைப் பொறுக்கவியலாது நீல மலர் இதழ்களை மூடிக் கொள்கின்றது' எனக் குறிப்பிட்டதைத் தற்குறிப்பேற்றமாய்க் கொள்ளலாம்.

சொற்பொருள்

1. அழ - அழும்படியாக.
2. நீல - நீல நிறமுள்ள; இருங்கழி - பெரிய உப்பங்கழி; நீலம் - நீல மலர்; கூம்பும் - குவியும்.
3. வந்தன்று - வந்தது.
4. காலை அன்ன காலை - விடியற்காலை போன்ற காலம்; முந்துறுத்து - முற்பட விடுத்து. (இளங்காலைப்பொழுதினைப் போன்ற குளிர்ச்சி பொருந்திய தென்றல் காற்றினை முன்னே அனுப்பிவிட்டுப் பின்னே மாலைப்பொழுது வந்தது என்றும் கொள்ளலாம். (காலை - காலைப்பொழுது; காலை - கால் + ஐ - தென்றல் காற்றை.)

தோழி கூற்று

குறுந்தொகை 268 **கருவூர்ச் சேரமான் சாத்தன்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் சிறைப்புறத்தே இருப்ப, அவன் கேட்குமாறு தோழி, இரவுக் குறியிடத்திற்கு வரும் வழித்துன்பத்திற்கு அஞ்சியும், தலைவனது வருகையின் இன்றியமையாமையையும் தலைவியிடம் கூறியது.

'சேறி ரோ?'எனச் செப்பலும் ஆற்றாம்;
'வருவி ரோ?'என வினவலும் வினவாம்;
யாங்குச் செய்வாம்கொல்? தோழி! பாம்பின்
பையுடை இருந்தலை துமிக்கும் ஏற்றொடு
நடுநாள் என்னார், வந்து,
நெடுமென் பணைத்தோள் அடைந்திசி னோரே.

தெளிவுரை

"தலைவியே! படம் கொண்ட பெரிய பாம்புகளின் தலை துணிபடுமாறு இடியோசை முழங்கும் நடு இரவில், வழியில் நேரிடும் துன்பத்தைக் கருதாராய்த் தலைவர் இங்கு வந்து சேர்கின்றார்; நெடிய மென்மை வாய்ந்த உன் தோளினைத் தழுவி இன்புறுகின்றார். அவரிடம், 'எம்மைப் பிரிந்து செல் கின்றீரோ' என்று சொல்லவும் வல்லமையற்றவராயிருக்கிறோம்; 'சென்றால் எப்போது திரும்புவீர்' என்று கேட்கவும் இயலா நிலையிலிருக்கிறோம். என்ன செய்வது எனத் தெரியவில்லை" என்று சிறைப்புறத்தில் நிற்கும் தலைவன் கேட்குமாறு தலைவி யிடம் தோழி கூறினாள்.

கருத்து

வழியச்சம் கருதாது தலைவன் இரவில் வந்துகொண்டிருக்கிறான்; அவன் பிரியும்போது, 'எப்போது திரும்புவீர் என்று கேட்கவும் இயலாத

நிலையில் இருக்கிறோம். என் செய்வது?' என்று தோழி தலைவியிடம் கூறுகிறாள்.

குறிப்பு

'செல்வீரோ' என்றது பிரிய விருப்பம் இல்லாமையையும், 'வருவீரோ' என்றது வழியிடை அவனுக்கு ஊறு உண்டாகுமோ என அஞ்சுவதையும் காட்டுகின்றன.

சொற்பொருள்

1. சேறீரோ - பிரிந்து செல்கின்றீரோ?; செப்பலும் - சொல்லவும்; ஆற்றாம் - வல்லமையற்றிருக்கிறோம்.
2. வருவிரோ என - சென்று மீண்டு வருவீரோ?
3. யாங்குச் செய்வாம் - என்ன செய்வது?
4. பையுடை - படம் கொண்ட; இருந்தலை - பெரிய தலை; துமிக்கும் - துணிக்கும்; ஏறு - இடி.
5. என்னார் - என்று கருதாதவராய்.
6. நெடு - நெடிய; மென் - மென்மை வாய்ந்த; பணை - பெரிய; அடைந்திசினோர் - தழுவி அடைந்தவர்.

தோழி கூற்று

நற்றிணை 151 **இளநாகனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறிச் சிறைப்புறமாகத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

இரவுக்குறிக்கண் தலைவன் வந்து நிற்கிறான்; அவன் வரைந்துகொள்ள வேண்டும் என்பதை உணர்த்த விரும்பிய தோழி, அவன் கேட்குமாறு தலைவியிடம் கூறியது.

நன்னுதல் பசப்பினும், பெருந்தோள் நெகிழினும்
கொல்முரண் இரும்புலி அரும்புழைத் தாக்கிச்
செம்மறுக் கொண்ட வெண்கோட்டு யானை
கல்மிசை அருவியில் கழூஉம் சாரல்
வாரற்க தில்ல – தோழி! – கடுவன்,

முறிஆர் பெருங்கிளை அறிதல் அஞ்சி,
கறிவளர் அடுக்கத்துக் களவினில் புணர்ந்த
செம்முக மந்தி செய்குறி, கருங்கால்
பொன்இணர் வேங்கைப் பூஞ்சினைச் செலீஇயர்,
குண்டுநீர் நெடுஞ்சுனை நோக்கிக் கவிழ்ந்துதன்
புன்தலைப் பாறுமயிர் திருத்தும்
குன்ற நாடன் இரவி னானே!

தெளிவுரை

தலைவியே! மிளகுக்கொடி வளர்ந்து படருகின்ற மலைப் பக்கத்தில், தான் காதலித்த கடுவனைக் குறியிடத்தில் கூடியது, சிவந்த முகத்தினைக் கொண்ட ஒரு பெண் குரங்கு. அப் புணர்ச்சியால் வேறுபட்ட தன் கோலத்தைத் (தோன்றிய வேறுபாடுகளைத்) தளிர்களைத் தின்னும் இயல்பு வாய்ந்த தன் சுற்றம் அறியுமோ என்றஞ்சியது. அதனால் பொன்போன்ற பூங்கொத்தினைக் கொண்ட அழகிய வேங்கைமரத்தின் கிளை மீது சென்று அமர்ந்து, ஆழமான சுனைநீரை நோக்கித் தலை கவிழ்ந்திருந்து, தன் மெல்லிய தலையில் புணர்ச்சியின்போது கலைந்த உச்சிமயிரைத் திருத்திக்கொள்ளுகின்றது. அத்தகைய மலைநாட்டினையுடைய நம் தலைவன் அழகான உன் நெற்றியில் பசலை படர்ந்ததாயினும், பெரிய தோள்வளைகள் நெகிழப் பெற்றனவாயினும் இரவுப்பொழுதில் உன்னிடம் வருவதை நீக்குவானாக! எதிர்ப்பட்டாரைக் கொல்லுகின்ற வலிய கரிய புலியை, புகுதற்கு அரிதான அதன் குகையருகே தாக்கிக் கொன்றதால் சிவந்த குருதிக்கறை படிந்த வெண்மையான கொம்புகளைக் கொண்ட ஆண்யானை, மலைமேலிருந்து வீழும் அருவிக்குச் சென்று அக்கறையினைக் கழுவிக்கொள்ளும் காட்சியினைக் கொண்ட காட்டுவழியில் இரவில் இனி அவன் வாராதிருப்பானாக!

கருத்து

காட்டுவழி கொடுமையானது; தலைவன் உன்னைக் காண இனி இரவில் வாராதிருக்கட்டும்.

உள்ளுறை

களவினில் புணரப்பட்ட மந்தி, அப்புணர்ச்சியைத் தன் சுற்றம் அறியக்கூடுமென்று அஞ்சி, கலைந்த மயிரைத் திருத்தும் என்னும் தொடர், களவொழுக்கத்தின்போது புணரப்பட்ட தலைவி, அப்புணர்ச்சியால் ஏற்பட்ட வேறுபாட்டைத் தன் சுற்றத்தார் அறிவரென்றஞ்சி நாள்தோறும் தன் உடை முதலான வற்றைத் திருத்திக்கொள்ள வேண்டியவளாகின்றாள் (தலைவி, தன் களவொழுக்கத்தால் உண்டாகும் புதுப்பொலிவுகளை மறைக்க வேண்டிய இக்கட்டான நிலையில் உள்ளாள்) என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது. எனவே, தலைவியின் அச்சம் தீரத் தலைவன் அவளை உடனே வரைந்துகொள்ள வேண்டும் என்பதாம்.

சொற்பொருள்

1. நுதல் - நெற்றி; நெகிழ்தல் - மெலிதல்.
2. கொல் முரண் - அச்சம் தரும் மாறுபாடு; அரும்புழை - அரிய குகை.
3. செம்மறு - சிவந்த குருதிக்கறை; வெண்கோடு - வெண்மையான கொம்பு.
4. கல்மிசை - மலைமீதுள்ள; கழூஉம் - நீக்கிக்கொள்ளும்.
5. வாரற்க - வாராதிருக்கட்டும்; கடுவன் - ஆண்குரங்கு.
6. முறி - தளிர்; பெருங்கிளை - பெரிய சுற்றமாகிய குரங்குகள்.
7. கறி - மிளகுக்கொடி; அடுக்கம் - மலைப்பக்கம்.
8. மந்தி - பெண்குரங்கு; செய்குறி - செய்த புணர்ச்சியின் அடையாளம்; கருங்கால் - கரிய அடிமரம்.
9. இணர் - பூங்கொத்து; பூஞ்சினை - பூக்களைக் கொண்ட கிளை; செலீஇயர் - செல்லும்.
10. குண்டு நீர் - மிகுந்த ஆழம் கொண்ட நீர்; நெடுஞ்சுனை - நீண்ட நீர்ச்சுனை; கவிழ்ந்து - குனிந்து.
11. புன்தலை - மெல்லிய தலை; பாறுமயிர் - கலைந்துள்ள மயிர்; திருத்தும் - சரி செய்யும்.

தலைவி கூற்று

அகநானூறு 128 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறி வந்த தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தின் போது தலைவியைக் காண இரவுக்குறியிடத்திற்கு வருகின்ற தலைவன் ஒரு நாள் சிறைப்புறத்தே வந்து நின்றான்; இரவு நேரத்தில் வருவதால் நேரும் துன்பத்திற்குத் தாம் அஞ்சுவதைக் குறிப்பால் உணர்த்த விரும்பிய தலைவி, தலைவன் கேட்பத் தோழியிடம் கூறியது.

மன்றுபாடு அவிந்து மனைமடிந் தன்றே;
கொன்றோர் அன்ன கொடுமையோடு இன்றே
யாமம் கொளவரின் கனைஇ, காமம்
கடலினும் உரைஇ, கரைபொழி யும்மே.
எவன்கொல் – வாழி, தோழி! – மயங்கி,
இன்னம் ஆகவும், நன்னர் நெஞ்சம்
என்னொடும் நின்னொடும் சூழாது, கைம்மிக்கு,
இறும்புபட்டு இருளிய இட்டுஅருஞ் சிலம்பில்
குறுஞ்சுனைக் குவளை வண்டுபடச் சூடிக்
கான நாடன் வரூஉம், யானைக்
கயிற்றுப்புறத் தன்ன கல்மிசைச் சிறுநெறி,
மாரி வானம் தலைஇ நீர்வார்பு,
இட்டுஅருங் கண்ண படுகுழி இயவின்,
இருளிடை மிதிப்புழி நோக்கி,அவர்
தளர்அடி தாங்கிய சென்றது, இன்றே.

தெளிவுரை

"*தோழியே! ஊரம்பலத்தில் ஓசை அடங்கிவிட்டது; வீடுகளிலும் ஒலியில்லை. இன்றைய இந்த நள்ளிரவிலே, கொல்லும் தன்மையான கொடுமையுடன் காமம் தோன்றுமே! அக்காமம் கடலைக் காட்டிலும் பெருகிக் கரை கடக்குமே! இரங்கத்தக்க*

இந்த நிலையில் நாம் இருக்கவும், நமது நல்ல நெஞ்சம் என்னுடனோ உன்னுடனோ ஆராயாமல் தனது வரம்பை மீறிச் சென்றுவிட்டது. அது எங்கே சென்றிருக்கிறது என அறிவாயா?

"மலைநாட்டைச் சார்ந்த நம் தலைவன், இருண்ட சிறிய காட்டில் சுனையில் உள்ள குவளைப்பூவைக் கொய்து, வண்டு மொய்க்கும்படி தன் தலையில் சூடிக்கொண்டு, யானை முதுகில் உள்ள கயிற்றுத்தழும்பைப் போன்றிருக்கும் ஒற்றையடிப் பாதையில் வந்துகொண்டிருக்கிறான். செல்லுதற்கரிய அவ் வழியில் ஆங்காங்கே படுகுழிகள் இருக்கும். வானம், மழை பொழிவதால் அக்குழிகளில் மழைநீர் நிறைந்து மறைத்திருக்கும். அதனால், பாதை எது, குழி எது என்பது தெரியாது. எனவே, தலைவன் நடுங்கும் கால்களுடன் பார்த்துப் பார்த்து அடியெடுத்து வைப்பான். அவன் குழியில் கால் வைத்துவிடுவானோ என்று அஞ்சி, அவன் அடியைத் தாங்கிப் பிடித்துக்கொள்வதற்காகவே நம் நெஞ்சு அங்கே சென்றுவிட்டது. என்ன செய்வது?"

கருத்து

'தோழியே! மழைநீர் நிறைந்துள்ள பள்ளங்களைக் கொண்ட வழியறிய இயலாது தடுமாறும் தலைவனின் கால்களைத் தாங்கிப் பிடிக்க, நம் நெஞ்சம் தலைவனிடம் சென்றுவிட்டது.'

விளக்கம்

தோழியே! அம்பலத்தில் உள்ளாரின் ஆரவாரம் அடங்கியது; மனைகளில் உள்ளாரும் உறங்கினர். இந்நள்ளிராப்பொழுதில் காமம் மிகுந்து கடலினும் பெரிதாய் உள்ளது. நாம் இந் நிலையில் இருக்கவும், நம் நல்ல நெஞ்சமோ என்னோடும் உன்னோடும் ஆலோசிக்காமல் சென்றுவிட்டது. எங்கு, எதற்கு என அறிவாயா? நம் தலைவன் வரும் காட்டுவழியில் மழை பெய்து, வழியில் மேடு பள்ளம் தெரியாதளவு நீர் நிறைந் திருக்கிறது. அவன் வரும்போது, வழியில் படுகுழி தெரியாது தளர்ந்து தடுமாறும் கால்களைத் தாங்கிப் பிடிப்பதற்காகச் சென்றுவிட்டது. இஃது என்ன நன்றியோ?

உவமை

யானை மலைக்கும், அதன் முதுகுப்புறத்துக் கயிற்றுத்தழும்பு மலைமீது செல்லும் சிறுபாதைக்கும் உவமைகள்.

சொற்பொருள்

1. மன்று - அம்பலம், பொது இடம்; பாடு அவிதல் - ஒலி அடங்குதல்; மனை - வீட்டிலுள்ளோர்; மடிதல் - தூங்குதல்.
3. கனைஇ - செறிந்து.
4. உரைஇ - பரவி; கரை பொழியும் - கரை கடக்கும்.
6. இன்னம் ஆகவும் - நாம் இவ்வாறு ஆகவும்.
7. சூழாது - ஆராயாது; கைம்மிகல் - அளவு கடத்தல்.
8. இறும்பு - சிறு காடு; இட்டுஅரும் - செல்லுதற்கரிய.
10-11. யானைக் கயிற்றுப் புறத்தன்ன - யானையின் முதுகிலுள்ள கயிற்றுத் தழும்பை ஒத்த; மிசை - மீது.
12. மாரி வானம் தலைஇ - மேகம் மழை பெய்தலால்; வார்தல் - ஒழுகுதல்.
13. இட்டு அருங் கண்ண - செல்லுதற்கரிய சிறிய இடங்களிலுள்ள; இயவின் - படுகுழிகளைக் கொண்ட வழியில்.
14. இருளிடை மிதிப்புழி - இருளில் மிதிக்கும்போது.
15. தளர் அடி - தளருகின்ற அடியை; தாங்கிய - தாங்குவதற்கு.

தலைவி கூற்று

அகநானூறு 8 **பெருங்குன்றூர் கிழார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லுவாளாய்த் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

ஒருநாள் தலைவன் குறியிடத்திற்கு வந்து இருப்ப, அவன் வந்ததை அறிந்து, தலைவி தன் வருத்தம் தோன்ற, அவன் கேட்குமாறு தோழியிடம் கூறியது.

ஈயல் புற்றத்து ஈர்ம்புறத்து இறுத்த
குரும்பி வல்சிப் பெருங்கை ஏற்றை
தூங்குதோல் துதிய வள்உகிர் கதுவலின்,
பாம்புமதன் அழியும் பால்நாள் கங்குலும்,
அரிய அல்லமன் இகுளை! பெரிய
கேழல் அட்ட பேழ்வாய் ஏற்றை,
பலாஅமல் அடுக்கம் புலவ ஈர்க்கும்
கழைநரல் சிலம்பின் ஆங்கண், வழையொடு
வாழை ஓங்கிய தாழ்கண் அசும்பில்,
படுகடுங் களிற்றின் வருத்தம் சொலிய,
பிடிபடி முறுக்கிய பெருமரப் பூசல்
விண்தோய் விடரகத்து இயம்பும் அவர்நாட்டு
எண்அரும் பிறங்கல் மான்அதர், மயங்காது,
மின்னுவிடச் சிறிய ஒதுங்கி, மென்மெல,
துளிதலைத் தலைஇய மணிஏர் ஐம்பால்
சிறுபுறம் புதைய வாரி, குரல்பிழியூஉ,
நெறிகெட விலங்கிய, நீயிர், இச்சுரம்,
அறிதலும் அறிதிரோ?' என்னுநர்ப் பெறினே.

தெளிவுரை

"தோழியே! பிளந்த வாயினைக் கொண்ட பெரிய ஆண்புலி தான் கொன்ற பெரிய பன்றியைப் பலா மரங்கள் செறிந்த பக்க மலையில் புலால் நாற்றம் உண்டாக இழுத்துச் செல்லும். அங்கு மூங்கில்களும், சுரபுன்னை மரங்களும், வாழை மரங்களும் ஓங்கி வளர்ந்த நீர் நீங்காத ஆழமான நீர்த்தேக்கம் ஒன்றுள்ளது. அதில் ஆண்யானை ஒன்று அகப்பட்டுக்கொண்டது. அதன் துன்பத்தை நீக்கப் பெண்யானை, ஆண்யானை ஏறுதற்குப் படிகளாய் அமைய, பெரிய மரங்களை முரித்துப் போட்டது. அப்பொழுது எழுந்த ஓசை விண்ணைத் தழுவி நிற்கும் மலையில் அமைந்துள்ள குகைகளிலும் சென்று எதிரொலித்தது. இத்தகைய காட்டிற்குரிய தலைவன் நாள்தோறும் இரவுக் குறியிடத்திற்கு என்னை நோக்கி வருகிறான். காட்டில் உள்ள மின்மினி ஒளியில்தான் விலங்குகளே அங்குச் செல்ல இயலும். அங்கு, ஈசல் பொருந்திய புற்றாஞ்சோற்றைத் தன் உணவாய்க்

கொள்ளும் கரடியின் கூரிய நகம் பட்டுப் பாம்பு தன் வலிமை இழக்கும். அத்தகைய காட்டுவழியில் செல்லும்பொழுது மழைத்துளி வீழ்ந்து, பிடரியை மறைக்கும் நீலமணி நிறம் போன்ற கூந்தலை வாரியெடுத்து, முறுக்கி நீரைப் பிழிந்து விட்டு வருகின்ற 'மகளிராகிய நீங்கள் வந்த இந்த அரிய வழியை அறிந்துள்ளீரோ?' என்று அன்புடன் கேட்போர் எவரும் இலரே. இருப்பின், இவ்வழி நாம் செல்வதற்கு அரியது அன்று" என்று கூறித் தலைவி ஏங்குகிறாள்.

கருத்து

"தோழியே! 'அவர் நாட்டுக்குச் செல்ல இக்காட்டுவழியைக் கடத்தற்கு நீர் அறிந்துள்ளீரா' என்று கேட்பவர் எவரேனும் இருப்பின் இந்த இராக் காலம் நமக்கு அரியதன்று. நாமே துணிந்து அவனூர்க்குச் சென்று விடலாம்" எனத் தலைவி தோழியிடம் ஏங்கிக் கூறுகிறாள்.

இறைச்சி

"கரடிக்குப் பாம்பை வருத்த வேண்டும் என்னும் கருத்து இல்லை; என்றாலும், அது தன் இரையை அகழ்ந்தெடுக்கும் போது அதன் கூரிய நகம் பட்ட அளவிலேயே பாம்பு தன் வலிமையை இழக்கிறது. இத்தொடர்மூலம், தலைவனுக்குத் தலைவியை வருத்த வேண்டும் என்னும் கருத்து இல்லை யாயினும், அவன் தொடர்ந்து களவின்பத்தையே நாடுவதால் அது காரணமாய்த் தலைவி வருந்தும்படி நேரிட்டது என்னும் இறைச்சிப் பொருள் பெறப்படுகிறது.

உள்ளுறை

"ஆண்புலி தான் நுகரும்பொருட்டுப் பன்றியினைக் கொன்று, பழ நாற்றமுள்ள பலா மரங்கள் செறிந்த பக்க மலையில் புலால் நாறும்படி இழுத்துச் சென்றது. அதுபோல, தலைவன் இன்பம் துய்த்தற்பொருட்டு வந்து தலைவியைக் கூடுவதால், புகழ் கொண்ட தலைவியின் குடி இகழ்ச்சியுறுமாறு செய்துவிட்டான்" என்னும் கருத்து உள்ளுறைப் பொருளாய்ப் பெறப் படுகிறது.

சொற்பொருள்

1. ஈயல் - ஈசல்; புற்றம் - புற்று; ஈர்ம்புறம் - குளிர்ந்த மேற்புறம்; இறுத்த - தங்கிய.
2. குரும்பி - புற்றாஞ்சோறு; வல்சி - உணவு; ஏற்றை - (ஆண்) கரடி.
3. தூங்கு தோல் - தொங்கும் தோல்; தோல் துதிய வள் உகிர் - தோல் துளையில் அடங்கிய கூரிய நகம்; கதுவல் - பற்றிக்கொள்ளுதல்.
4. மதன் - வலிமை; பால்நாள் - நடு நாள்.
5. இகுளை - தோழி.
6. கேழல் - பன்றி; பேழ்வாய் - பிளந்த வாய்; ஏற்றை - ஆண்புலி.
7. அமல் - செறிந்த; புலவ - நாற; ஈர்க்கும் - இழுத்துச் செல்லும்.
8. கழை - மூங்கில்; நரல் - ஒலிக்கும்; வழை - சுரபுன்னை மரம்.
9. அசும்பு - நீர் அறாக் குழி.
10. படு - அகப்பட்ட; கடும் - கடிய; சொலிய - நீக்குதற்கு.
11. பிடி - பெண்யானை; படி - படியாய்; முறுக்கிய - முரித்திட்ட; பூசல் - ஓசை.
12. விடரகம் - மலைப்பிளப்பு.
13. எண்ணரும் - எண்ணுதற்கு அரிய; பிறங்கல் - மலை; அதர் - வழி.
14. மின்னு - மின்மினிப்பூச்சி; விட - விடும் (ஒளி).
15. துளி - மழைத்துளி; தலைஇய - தன்னகத்தே கொண்ட; மணி ஏர் - நீலமணி ஒத்த.
16. சிறுபுறம்- பிடரி; புதைய - மறைய; வாரி - கோதி; குரல் - மயிர்க்கொத்து; பிழியூஉ - பிழிந்துவிட்டு.
17. நெறி கெட - வழிகள் செல்ல முடியாதபடி; விலங்கிய - பின்னிக் கிடக்கும்.
18. அறிதலும் அறிதிரோ - முன்னரே அறிவீரோ; என்னுநர் - என்று சொல்லுவார்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 114 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

இடைவிட்டொழுகும் தலைமகன் வந்து சிறைப்புறத்தானானமையறிந்த தலைமகள் அவன் கேட்குமாற்றால் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தே, கூடியிருக்கும் காலத்தைவிடப் பிரிந்துறையும் காலமே பெரிதாதலோடு, தலைவன் காலம் நீட்டித்து வருதலாலே, ஆற்றாளாகிய தலைவி, தனது ஆற்றாமையைத் தலைவனுக்கு உணர்த்தும் பொருட்டு, அவன் சிறைப்புறத்தே வந்து நின்றபோது, அவன் வரவறியாள் போன்று, ஆனால் அவன் கேட்கும் வகையில் தோழியை நோக்கிச் சொல்லியது.

அம்ம வாழி தோழி கொண்கன்
நேரேம் ஆயினும் செல்குவம் கொல்லோ!
கடலின் நாரை இரற்றும்
மடலம் பெண்ணை அவனுடை நாடே!

தெளிவுரை

தோழி! கேட்பாயாக! நாம் தலைவனை எதிர்ப்பட்டிலேம். (அவன் வாரானாயினும் அவன் உள்ள இடம் சென்று காண்பதற்கு நமக்கு உரிமையில்லை.) ஆயினும், கடல்நாரை வந்து தங்கி ஆரவாரிக்கும் மடல் அமைந்த அழகிய பனைமரம் நிறைந்த அவன் நாட்டிற்கு நாம் சென்று வருவோமா, கூறுக.

கருத்து

தோழி! தலைவன் நம்மைக் காண வரவில்லை. ஆதலின், நாம் அவன் நாட்டிற்குச் சென்று காண்போமா?

குறிப்பு

தலைவி, தலைவன் இருக்குமிடத்திற்குச் செல்லாமையே இயல்பு. (கிழவோன் சேர்தல் கிழத்திக்கு இல்லை - தொல்.பொருள். 203). எனினும்

ஒரோவழி, 'செல்வோமா' என்று சொல்லுதல் உண்டு. சொல்வது மட்டுமே உண்டு, செல்வதில்லை. இது பிரிவினை ஆற்றாமை உணர்த்தி வரைவுகடாவுதல் பொருட்டுச் சொல்லியது எனலாம்.

உள்ளுறை

கடலிலுள்ள நாரை சென்று ஆரவாரிக்கும் பனையைக் கொண்ட நாடு என்பதில், நாமும் அந்த நாரை போன்று, அவனிருக்குமிடம் சென்று நம் குறையைக் கூறுவோமா? என்னும் உள்ளுறைப் பொருள் அமைந்துள்ளது.

சொற்பொருள்

1. கொண்கன் - தலைவன்.
2. நேரேம் - எதிர்ப்பட்டிலேம்; ஆயினும் - அவன் வரவில்லை என்றாலும்; செல்வேம் கொல் - நாம் சென்று அவனைக் காண்போமா?
3. இரற்றும் - ஆரவாரிக்கும்.
4. மடலம் - மடல் அமைந்த; அம் - அழகிய; பெண்ணை - பனைமரம்.

தலைவி கூற்று

நற்றிணை 332 **குன்றூர்கிழார் மகனார் கண்ணத்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

பிரிவிடை மெலிந்த தலைமகளைத் தோழி களவுக்காலத்து வற்புறுப்பத் தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் களவில் வந்தொழுகிப் பிரிந்து செல்லும்போது தலைவி மிகவும் வருந்தி மேனி வேறுபடுகிறாள். அதனைக் காணும் தோழி தலைவியை ஆற்றியிருக்குமாறு வற்புறுத்திக் கூற, அதற்குத் தலைவி, 'தலைவன் கொடிய இருளில் துன்பம் நிறைந்த வழியில் வரும்பொழுது நான் எவ்வாறு ஆற்றியிருக்க இயலும்' என்று கூறியது.

இகுளைத் தோழி!இஃது என்எனப் படுமோ
'குவளை குறுநர் நீர்வேட் டாங்கு',
நாளும் நாளும் கெழீஇய தோளே

தொல்நிலை வழீஇயநின் தொடிஎனப் பல்மாண்
உரைத்தல் ஆன்றிசின், நீயே; விடர்முகை,
ஈன்பிணவு ஒடுக்கிய இருங்கேழ் வயப்புலி
இரைநசைஇப் பரிக்கும் மலைமுதல் சிறுநெறி,
தலைநாள் அன்ன பேணலன், பலநாள்,
ஆர்இருள் வருதல் காண்பேற்கு,
யாங்குஆ கும்மே இலங்குஇழை செறிப்பே?

தெளிவுரை

"தோழியே! 'நீரில் இறங்கி நின்று குவளை மலரைப் பறிப்பவர் நீர் வேட்கையால் வருந்தினாற்போல, நாள்தோறும் காதலன் தழுவுதலைப் பெற்றும் உன் தோள்கள் பழைய பூரிப்பை இழந்து, வளையல்கள் கழன்று விழும்படி மெலிந்தனவே, ஏன்?' என்று பல முறையும் கேட்கின்றாய். பாறைகளைக் கொண்ட மலைப் பிளவில் பெண்புலி ஒன்று குட்டிகளை ஈன்று படுத்துள்ளது. அதன் பசியைப் போக்க, கரிய நிறமுள்ள வலிமையான ஆண்புலி இரையைத் தேடி மலையடிவாரத்தில் பதுங்கியிருக்கும். அங்கு அமைந்துள்ள குறுகிய வழியில் புலியைப்பற்றி எண்ணாத வனாய் என்னைக் காண்பதற்கு, என்னைக் கண்ட முதல்நாள் போன்ற அதே விருப்பமுள்ளவனாய்ப் பல நாளும் கரிய இருளில் தலைவன் வந்துகொண்டிருக்கிறான். இவ்வாறு வருபவனைக் கண்டு என் உடல் மெலிந்து என் வளை முதலான கலன்கள் நெகிழாமல் எவ்வாறு செறிந்திருக்கும்?" என்று கூறினாள், தலைவி.

கருத்து

அவன் இரவிலே வருகின்ற வழியின் கொடுமை என்னை மிகவும் வருத்துவதால் யான் மெலிவடைகிறேன்.

விளக்கம்

"நீர்நிலைக்குள் நின்று குவளை பறிப்போர் நீர் வேட்கையால் வருந்தினாற்போல, இரவில் தவறாது தலைவனின் கூட்டத்தை இனிது பெற்றும் பெறாதவள்போல வருந்துவதால் உன் மேனி வேறுபட்டிருக்கிறது. 'இழைகள் நெகிழும்வண்ணம் நீ வருந்தி

மெலிவது சரியன்று' என்று தோழி பலமுறை கூறினாள். அதற்குத் தலைவி, 'தன் உயிரைக் காத்துக்கொள்ள வேண்டும் என்றும் கருதாது, புலி பதுங்கியிருக்கும் வழியில் நாள்தோறும் செறிந்த இருளில் நம் காதலர் வருவதைக் கண்டும், வளை நெகிழும்வண்ணம் என் உடல் மெலியாது எப்படியிருக்கும்?' " என ஆற்றாளாய்க் கூறினாள்.

உள்ளுறை

பெண்புலியின் பசியைப் போக்க இரை தேடிப் பதுங்கி யிருக்கும் ஆண்புலியைப் பார்த்திருந்தும், என் துன்பம் நீங்குமாறு காதலன் பொருளீட்டி வந்து மணமுடிக்கக் கருதவில்லையே எனத் தலைவி இரங்கியதாம்.

சொற்பொருள்

1. இகுளை - இளம் பருவத்தினள்; இஃது என் எனப்படுமோ - இது யாதாய்க் கருதப்பட்டு எவ்வாறு முடியுமோ?
2. குறுநர் - (நீர்நிலைக்குள் நின்று குவளை மலரைக்) கொய்வோர்; நீர் வேட்டாங்கு - நீர் வேட்கையால் வருந்தினாற்போல.
3. கெழீஇய - பொருந்திய.
4. தொல் நிலை - பழைய தன்மை (இழந்து); வழீஇய - கழல்கின்றன; தொடி - வளையல்; பல்மாண் - பல முறையும்.
5. ஆன்றிசின் - கேட்கின்றாய்; விடர்முகை - மலைப்பிளவில்.
6. ஈன் பிணவு - குட்டி ஈன்ற பெண்புலி; ஒடுக்கிய - இருத்திய; இருங்கேழ் - கரிய நிறமுள்ள; வயப்புலி - வலிமையான ஆண்புலி.
7. இரை நசைஇ - இரை பெற விரும்பி; பரிக்கும் - பதுங்கியிருக்கும்; மலைமுதல் - மலைப்பக்கத்து; சிறு வழி - சிறிய வழியில்.
8. தலைநாள் அன்ன - (இரவுக்குறியில்) முதல்நாள் வந்தாற்போல; பல நாள் - பல நாளும்.
9. ஆர் இருள் - மிக்க இருளில்; காண்பேற்கு - காணும் எனக்கு.
10. இலங்கு இழை - விளங்குகின்ற வளையல் முதலிய அணிகலன்கள்; செறிப்பு - செறிப்புண்டிருத்தல்; யாங்கு ஆகும்? - எவ்வாறு இயலும்?

தலைவி கூற்று

நற்றிணை 255 **ஆலம்பேரி சாத்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

ஆறுபார்த்துற்றது. (இரவுக்குறிக் காலத்துக் கடந்துவரும் வழியிடையுள்ள துன்பங்களை நினைந்து பார்த்துக் கூறுதல்.)

கூற்று விளக்கம்

தலைவன் தன்னை விரைந்து வரைந்துகொள்ள வேண்டும் என்று கருதிய தலைவி, தலைவன் சிறைப்புறமாக வந்து நிற்க, அவன் செவியில் படுமாறு, அவன் காட்டுவழியைக் கடந்து வருவது குறித்துத் தான் அஞ்சுவதைத் தோழியிடம் கூறியது.

கழுதுகால் கிளர ஊர்மடிந் தன்றே;
உருகெழு மரபின் குறிஞ்சி பாடிக்
கடியுடை வியல்நகர்க் கானவர் துஞ்சார்;
வயக்களிறு பொருத வாள்வரி வேங்கை
கல்முகைச் சிலம்பில் குழுமும், அன்னோ!
மென்தோள் நெகிழ்ந்துநாம் வருந்தினும், இன்றுஅவர்
வாரார் ஆயினோ நன்றுமன் தில்ல
உயர்வரை அடுக்கத்து ஒளிறுபு மின்னிப்
பெயல்கால் மயங்கிய பொழுதுகழி பானாள்,
திருமணி அரவுத்தேர்ந்து உழல,
உருமுச்சிவந்து எறியும் ஓங்குவரை ஆறே!

தெளிவுரை

பேயினங்கள் காற்றில் கலந்து உலவும் இரவுப்பொழுதில் ஊரார் அனைவரும் செயலிழந்து துயில் கொண்டனர்; ஆயினும், கேட்போர்க்கு அச்சத்தை விளைவிக்கும்படி குறிஞ்சிப் பண்ணைப் பாடியபடியே ஊர்க்காவலர் தூங்காதிருப்பர். வலிமை வாய்ந்த களிற்றினோடு போரிட்ட வாள்போலும் வரிகளைக் கொண்ட வேங்கைப்புலியும் மலைப்பிளவிலுள்ள குகையிலிருந்து முழங்கும். ஓங்கிய மலைச்சாரலில் மின்னல் மின்னிட நள்ளிரவுப்பொழுதில் காற்றோடு கலந்து மழையும்

பொழியும். அந்நள்ளிரவில், தான் இழந்த மணியைத் தேடி அலையும் பாம்பு அச்சங்கொள்ளுமாறு இடிகள் மிகவும் முழங்கி அதிரும். தோள் மெலிந்து நாம் மிகவும் வருந்தித் துன்புறுவோமாயினும், இத்தகைய மலைவழியில் இராப்போதில் அவர் இங்கு வாராதிருப்பதே நலம்.

கருத்து

கடுமையான மலைவழியில் தலைவன் இரவுப்பொழுதில் இங்கு வரவேண்டா.

விளக்கம்

"அவன் நள்ளிரவில் வருவதால் பேய்கள் தாக்கும் என அஞ்சுகிறோம். ஊரார் துயின்று ஊரரவம் ஓய்ந்த நிலையில் அவன் வருவதைக் காவலர் எளிதில் கண்டுகொள்வர் எனக் கலங்குகிறோம். காவலர் தூங்காது சுற்றி வருவர் என்பதால் அவர்களாலும் அவனுக்குத் துன்பம் ஏற்படலாம் என நடுங்குகிறோம். வழியிடையே யானையிடம் தோற்ற வேங்கையாலும், மணி தேடி உழலும் அரவாலும் துன்பம் நேருமெனத் துடித்திருப்போம். இடியும் மழையும் காற்றும் கூடிய இந்நள்ளிரவில் உயர்ந்த மலையில் வழியும் தெளிவாய்த் தெரியாது எனத் திகைப்போம். ஆதலின், அவன் இவ்விராப்போதில் வாராதிருப்பதே நன்று. அவன் நினைவால் வருந்தி என் தோள்கள் நலியினும் நலியட்டும்" என மனம் நொந்து கூறுகிறாள், தலைவி.

குறிப்பு

தலைவன் தனக்கு இன்றியமையாதவன் என்பதையும், அவனுக்கு ஊறு நேருமெனில் தான் உயிர் துறக்க நேரும் என்பதையும், தன் துயர் நீங்க அவன் தன்னை விரைந்து மணந்துகொள்ள வேண்டும் என்பதையும் தலைவி புலப்படுத்துகிறாள்.

சொற்பொருள்

1. கழுது - பேய்; கால் - காற்று; கிளர - எழுந்து உலவ; மடிதல் - உறங்குதல்.
2. உருகெழு மரபின் - கேட்போர்க்கு அச்சமுண்டாகும்படி; குறிஞ்சி - குறிஞ்சிப்பண்.

3. வியல் - அகன்ற; கானவர் - காவலர்; துஞ்சார் - உறங்க மாட்டார்.
4. வாள் வரி - வாள் போலும் வரிகளைக் கொண்ட; வேங்கை - வேங்கைப்புலி.
5. கல் முகை - மலைப்பிளவு; குழுமும் - முழங்கும்.
6. நெகிழ்ந்து - தளர்ந்து.
7. நன்றுமன் - மிகவும் நல்லது.
8. அடுக்கம் - மலைச்சாரல்; ஒளிறுபு - ஒளிவிட்டு.
9. பெயல் - மழை; கால் - காற்று; மயங்கி - கலந்து; பானாள் - நள்ளிரவு.
10. திருமணி - அழகிய மணி (பாம்பு இரவில் தன்னிடமுள்ள மணியை உமிழ்ந்து அதன் வெளிச்சத்தில் இரை தேடும் என்பர்.); அரவு - பாம்பு; தேர்ந்து - தேடி.
11. உரும் - இடி; சிவந்து - சினந்து; எறியும் - இடிக்கும்.

தோழி கூற்று

நற்றிணை 114 **தொல்கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

ஆறுபார்த்துற்ற அச்சத்தால் தோழி தலைமகளுக்குரைப்பாளாய்ச் சிறைப்புறமாகச் சொல்லியது.

கூற்று விளக்கம்

இரவுக்குறி வந்தொழுகும் தலைவன் சிறைப்புறத்தே நிற்க, வழியின் கொடுமை கூறி, இரவுக்குறி மறுத்து, வரைவொடு வருமாறு அவன் கேட்கும் வகையில் தோழி தலைவியிடம் பேசியது.

வெண்கோடு கொண்டு வியலறை வைப்பவும்
பச்சூன் கெண்டி வள்ளுகிர் முணக்கவும்
மறுகுதொறு புலாவஞ் சிறுகுடி அரவம்
வைகிக் கேட்டுப் பையாந் திசினே
அளிதோ தானே தோழி அல்கல்
வந்தோன் மன்ற குன்ற நாடன்
துளிபெயல் பொறித்த புள்ளித் தொல்கரை

பொருதிரை நிவப்பின் வரும்யாறு அஞ்சுவல்
ஈர்ங்குரல் உருமின் ஆர்கலி நல்லேறு
பாம்புகவின் அழிக்கும் ஓங்குவரை பொத்தி
மையின் மடப்பிடி இனையக்
கையூன்றுபு, இழிதரு களிறெறிந் தன்றே.

தெளிவுரை

தலைவியே! குளிர்ச்சி பொருந்திய மழை ஒலியுடன் சேர்ந்து தோன்றிய மிக்க ஓசை கொண்ட இடி, பாம்பின் அழகினை அழித்து மலைமேல் மோதியது. அந்த இடியானது, கரிய நிறம் கொண்ட பெண்யானை புலம்பி வருந்துவது கண்டு, அதனைக் காப்பாற்றத் தன் துதிக்கையை ஊன்றி இறங்கிய ஆண்யானை யைக் கொன்றது. இவ்வாறு இறந்த யானையின் வெண்மையான தந்தங்களை ஒடித்து எடுத்துப் பாறையிடத்துப் பரப்பியதாலும், அதன் இறைச்சியை வெட்டிப் பிரித்தெடுத்த வலிமையான நகங்களைப் புதைத்ததனாலும், புலால் நாறும் சிறுகுடியின் தெருக்கள்தோறும் உண்டாகிய ஆரவாரத்தை இரவு முழுவதும் உறங்காதிருந்து கேட்டு வருந்தியுள்ளேன். இத்தகைய இரவிலே குன்ற நாடனாகிய நம் தலைவனும் குறியிடத்துக்கு வந்து சேர்ந் துள்ளான். அவன் வரும் வழியில் மழைத்துளி பெய்தலாலே பொறிக்கப்பட்ட புள்ளிகளைக் கொண்டுள்ள பழமை மிகுந்த கரையை மோதும் அலைகளோடு வரும் காட்டாற்றினைக் கருதியும் நான் அஞ்சியிருக்கின்றேன். ஆகையால், தலைவன் இரவுக்குறிக்கண் வருதல் இரங்கத்தக்கதாயிருக்கிறது.

கருத்து

கொடுமையான வழியில் தலைவன் இரவுக்குறி வருவது இரங்கத்தக்கது.

குறிப்பு

'இரவுக்குறியில் இனிச் சந்திக்க இயலாது. எனவே விரைந்து திருமண ஏற்பாடுகளோடு வருக' என்னும் தலைவியின் கூற்றைத் தன் கூற்றாய்க் கொண்டு தோழி கூறியது இது.

சொற்பொருள்

1. வெண்கோடு - வெள்ளைத் தந்தம்; வியலறை - அகன்ற பாறை.

2. ஊன் - இறைச்சி; கெண்டுதல் - வெட்டுதல்; வள்ளுகிர் - வலிமையான நகம் (உகிர் - நகம்); முணக்குதல் - புதைத்தல்.
3. மறுகு - தெரு; புலாவும் - புலால் நாறும்; அரவம் - ஆரவாரம் (பேரிரைச்சல்).
4. வைகி கேட்டு - இரவு முழுவதும் கேட்டு; பையாந்தல் - வருந்துதல்.
5. அளிது - இரங்கத்தக்கது; அல்கல் - இரவு.
6. குன்ற நாடன் - இங்குத் தலைவனைக் குறிக்கிறது.
7. துளி - மழைத் துளி; தொல்கரை - பழமை மிகுந்த கரை.
8. நிவப்பு - உயர்ச்சி.
9. உரும் - இடி; ஆர்கலி - மிக்க ஓசை.
10. கவின் - அழகு; வரை - மலை; பொத்தி - மோதி.
11. மையின் - மை போன்ற கரிய நிறமுடைய; மடப்பிடி - இளமையான பெண்யானை; இனைய - வருந்த.
12. கையூன்றுபு - துதிக்கையை ஊன்றி; இழிதரு - இறங்கிய; களிறு - ஆண்யானை; எறிந்தன்று - கொன்றது.

தோழி கூற்று

நற்றிணை 158 **வெள்ளைக்குடி நாகனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

ஆறுபார்த்துற்ற அச்சத்தால் சிறைப்புறமாகச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் இரவு நேரத்தில் தலைவியைச் சந்திப்பதற்காகக் கொடுமையான மலைக்காட்டின் வழியே வருவதை வழக்கமாய்க் கொண்டிருக்கிறான். அவ்வாறு அவன் ஒருநாள் வந்து, தலைவியின் வீட்டிற்கு ஓரமாய் நின்றதைக் கண்ட தோழி, அவனுக்குக் கேட்குமாறு தலைவியிடம், அவனாலே தாங்கள் படும் துயரத்தைக் கூறி, அதனைப் போக்க விரைந்து அவன் திருமணம் செய்துகொள்ள வேண்டும் எனும் கருத்தைப் புலப்படுத்தியது.

அம்ம வாழி, தோழி! நம்வயின்,
யானோ காணேன் அதுதான் கரந்தே,
கல்அதர் மன்னும் கால்கொல் லும்மே;
கனைஇருள் மன்னும் கண்கொல் லும்மே;
விடர்முகைச் செறிந்த வெஞ்சின இரும்புலி
புகர்முக வேழம் புலம்பத் தாக்கிக்
குருதி பருகிய கொழுங்கவுள் கயவாய்
வேங்கை முதலொடு துடைக்கும்
ஓங்குமலை நாடன் வரூஉம் ஆறே.

தெளிவுரை

"தலைவியே வாழ்க! நான் கூறுவதைக் கேள்! பெரிய மலைப் பிளவில் உள்ள குகையில் கொடிய சினம் கொண்ட பெரிய புலி பதுங்கியிருக்கும். அது, புள்ளிகள் அமைந்த முகத்தைக் கொண்ட யானை வருந்தும்படி அதனைத் தாக்கிக் கொன்று, அதன் குருதியைப் பருகும்; பின்னர்க் கொழுமையான கன்னத்தைக் கொண்ட தன் பெரிய வாயினை வேங்கைமரத்தின் அடிப் பாகத்தில் துடைத்துக்கொள்ளும். அத்தகைய காட்சி கொண்ட உயர்ந்த மலைக்குரிய நாடனாகிய தலைவன் வருகின்ற வழியை நான் கண்ணால் கண்டதே இல்லை. ஆனால், அது தானாகவே மறைந்து வந்து என் மனக்கண்முன் தோன்றி, 'இதுதான் அவன் வருகின்ற வழி' என்று கூறி என்னைக் கொல்லுகிறது. அவன் வருகின்ற இருள் செறிந்த வழி, கள்ளும் முள்ளும் நிறைந்து நடப்பவர் காலைச் சிதைப்பதாய் உள்ளது. அங்கே பரவியுள்ள செறிந்த இருள், காண்பார் கண்களை அழிப்பதாயுள்ளது. இந்த இரவுப் பொழுதில் அவன் வருவதைத் தடுத்தற்கு நான் என்ன செய்வேன்?"

கருத்து

'தலைவன் இரவு நேரத்தில் கொடுமையான வழியில் வருவதைத் தடுப்பது எவ்வாறு என்று அறியாது வருந்துகிறேன்.'

விளக்கம்

"காட்டில் புலி வாழ்கிறது; வழியில் கற்களும் முள்களும் பொருந்தியுள்ளன. அவை நடப்போர் கால்களைச் சிதைக்கும்;

அவன் வரும் நேரத்திலோ கண் கொல்லும் இருள் செறிந் திருக்கும். அவன் அவ்வழி வருவதை நினைத்து நாங்கள் வருந்து கிறோம்; அவன் வாராதிருப்பது நன்று" என்று தோழி கூறுவதன் பயன், அவள் கூறுவதைக் கேட்டுத் தலைவன் வரைவு வேட்டலில் மனம் செலுத்துவான் என்பதேயாம்.

உள்ளுறை

புலி, வேழத்தின் குருதி பருகி, வேங்கைமரத்தில் சென்று வாயைத் துடைக்கும் என்றது, ஊரார் உரைக்கும் பழிச்சொற்கள் எம்மை வருத்தியதோடு அன்னை காதையும் எட்டிவிட்டன என்பதைக் குறிக்கும்.

சொற்பொருள்

1. நம் வயின் - நம்மிடம்.
2. கரந்தே - மறைவாய் (வந்து என் முன் நிற்கும்).
3. அதர் - வழி; மன்னும் - மிகவும்; கொல்லும் - சிதைக்கும்.
4. கனை இருள் - செறிந்த இருள்; கண் - கண்களை.
5. விடர் - மலைப்பிளவு, குகை; செறிந்த - பதுங்கியிருந்த; வெஞ் சினம் - கொடிய சினம்.
6. புகர் - புள்ளி; புலம்ப - வருந்தும்படி,
7. கவுள் - கன்னம்; கயவாய் - பெரிய வாய்.
8. வேங்கை - வேங்கைமரம்; முதலொடு - அடிப்பாகத்தில்.
9. வரூஉம் - வருகின்ற; ஆறு - வழி.

தலைவி கூற்று

நற்றிணை 144 **கச்சிப்பேட்டுப் பெருந்தச்சனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

ஆற்றது ஏதத்திற்குக் கவன்று சிறைப்புறமாய்த் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் மழைக்காலத்து இரவிலும் களவொழுக்கத்தை விரும்பி வருதலைக் கண்டு வருந்திய தலைவி, அவன் வரும் வழியை எண்ணி மிகவும் கவலை கொண்டாள். அவன் சிறைப்புறத்தானாக அவன் செவியில் படுமாறு தோழியை நோக்கித் தலைவி உரைப்பது.

பெருங்களிறு உழுவை தாக்கலின், இரும்பிடி,
கருவிமா மழையின் அரவம் அஞ்சுபு,
போதுஏர் உண்கண் கலுழவும், ஏதில
பேதை நெஞ்சம் கவலை கவற்ற
ஈங்கு ஆகின்றால் தோழி! பகுவாய்ப்
பிணவுப்புலி வழங்கும் அணங்குஅருங் கவலை,
அவிர்அறல் ஒழுகும்; விரைசெலல் கான்யாற்றுக்
கரைஅருங் குட்டம் தமியர் நீந்தி,
விரவுமலர் பொறித்த தோளர்
இரவின் வருதல் அறியா தேற்கே.

தெளிவுரை

பல வகையாய்ப் பிரிந்து செல்லும் காட்டுவழியில் பிளந்த வாய் கொண்ட பெண்புலி இரை தேடி இயங்கும்; துயரம் தரும் அவ்வழியில் கரை காண்பதற்கு அரிதான, ஆழமான காட்டாறு உள்ளது. விரைந்து செல்லும் நீரினைக் கொண்ட அக்காட்டாற்றிலே தனியராய் நீந்திக் கடந்து, நீரிலே மிதந்துவரும் பல வகையான மலர்கள் படிந்த தோளினனாய் நம் காதலன் இரவில் வருகின்றான்.

வரும் வழியில் புலி, பெரிய ஆண்யானையினைத் தாக்கிக் கொல்லும். அதனையறிந்த கரிய பெண்யானை, மின்னல் நீங்கிய கரிய மேகம் முழங்குவதுபோலப் பெருங்குரலெடுத்துப் பிளிறும். அந்த ஒலி கேட்டு அஞ்சி நடுங்கினேன்; நீல மலர் போன்ற மையுண்ட என் கண்கள் அழுது நீரைப் பெருக்கின. மேலும், என் பேதை நெஞ்சம் கவலையால் வருந்தி நிற்கும். இவ்வாறு என் நிலை, தலைவனை எண்ணி வருந்தும்படி ஆயிற்றே!

கருத்து

அவன் வரும் வழியில் ஏற்படும் கொடுமைக்கு அஞ்சிக் கலங்குகிறேன்.

விளக்கம்

தலைவன் தோளில் பல வகை மலர்கள் விரவிப் படிந் திருந்ததால் தலைவன் நீந்தி வந்தமையைத் தலைவி உணர்ந்தாள். குறிஞ்சி நிலமாதலின் பிடியின் முழக்கத்தை அருகிலே

கேட்டனள்; ஆற்றுநீர்ப் பெருக்கமும் விலங்கின இயக்கமும் தலைவியை அச்சுறுத்தின. இதனால் தலைவனுக்கு எத்தகைய துன்பங்கள் நேரிடுமோ என்று அஞ்சியவளாய்த் தலைவி இருந்தாள்.

உள்ளுறை

புலியால் களிறு கொல்லப்பட்டதையறிந்த பிடி புலம்பும் என்றது, வழியில் ஏற்படும் தொல்லைகட்குத் தலைவன் என்ன ஆவானோ எனத் தலைவி புலம்பி நிற்றலைக் குறித்தது.

சொற்பொருள்

1. உழுவை - புலி; இரும்பிடி - கரிய பெண்யானை.
2. கருவி மாமழை - மின்னல், இடி முதலான தொகுதியைக் கொண்ட மேகம்; அரவம் - ஒலி.
3. போது - மலர்; ஏர் - அழகு; கலுழ்தல் - அழுதல்; ஏதில - தான் செய்தற்குரியது என்ன என்பதை அறிய இயலாத.
4. கவற்ற - சுழற்சி கொள்ள.
5. பகுவாய் - பிளந்த வாய்.
6. பிணவுப்புலி - பெண்புலி; வழங்கும் - இயங்கும்; அணங்குதல் - வருத்துதல்; கவலை - கவர்த்த வழி.
7. அவிர்அறல் - அறல் விளங்கும்; விரை செலல் - விரைந்து ஓடும்; கான்யாறு - காட்டாறு.
8. கரை அரும் - கரை காண்பதற்கு அரிய; குட்டம் - ஆழம்; தமியர் - தனியே.
9. விரவுமலர் - பல வகை மலர்கள்; தோளர் - தோளினைக் கொண்டவர்.

தோழி கூற்று

அகநானூறு 88 **ஈழத்துப் பூதன் தேவனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறி வந்த தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியை மணந்துகொள்ளாமல் களவொழுக்கத்திலேயே ஒழுகி வந்தான். ஒருநாள் அவன் சிறைப்புறத்தே வந்து நின்றான். அதனை யறிந்த தோழி, அவன் கேட்குமாறு தலைவியை நோக்கிக் கூறியது.

முதைச்சுவல் கலித்த மூரிச் செந்தினை
ஒங்குவணர்ப் பெருங்குரல் உணீஇய, பாங்கர்ப்
பகுவாய்ப் பல்லி பாடுஓர்த்து, குறுகும்
புருவைப் பன்றி வருதிறம் நோக்கிக்
கடுங்கைக் கானவன் கழுதுமிசைக் கொளீஇய
நெடுஞ்சுடர் விளக்கம் நோக்கி, வந்து,நம்
நடுங்குதுயர் களைந்த நன்ன ராளன்,
சென்றனன் கொல்லோ தானே– குன்றத்து
இரும்புலி தொலைத்த பெருங்கை யானைக்
கவுள்மலிபு இழிதரும் காமர் கடாஅம்
இருஞ்சிறைத் தொழுதி ஆர்ப்ப, யாழ்செத்து,
இருங்கல் விடர்அளை அசுணம் ஓர்க்கும்
காம்புஅமல் இறும்பில் பாம்புபடத் துவன்றிக்
கொடுவிரல் உளியம் கெண்டும்
வடுஆழ் புற்றின வழக்குஅரு நெறியே.

தெளிவுரை

"*பழங்கொல்லையாகிய மேட்டுநிலத்தில், பெரிய சிவந்த தினைப்பயிர் தழைத்து வளர்ந்திருக்கும். மேல்நோக்கி உயர்ந்து வளைந்த அதன் பெரிய கதிர்களைத் தின்னுவதற்கு, இளமை பொருந்திய காட்டுப்பன்றி, பிளந்த வாயைக் கொண்ட பல்லி ஒலிக்கும் ஓசையினைச் (நல்ல சகுனத்தினைச்) செவி சாய்த்துக் கேட்டுக் கொல்லையினை அணுகும்; அந்தப் பன்றி வரும் வழியை நோக்கியிருக்கும் வலிய கையினைக் கொண்ட கானவன், அதனை ஓட்டுதற்குக் காவற்பரண்மீது நீண்ட சுடர் விளக்கைக் கொளுத்தி வைப்பான். நம் தலைவனும் அச்சுடரையே அடையாளமாய்க்கொண்டு வந்து, நடுக்கம் தரும் நம் துயரினைப் போக்கினான்.*

"*குன்றில் கரிய புலியைக் கொன்ற நீண்ட கையைக் கொண்ட யானையின் கன்னத்தில் பெருகி வழியும் மதநீரில், கரிய சிறகினைக் கொண்ட வண்டின் கூட்டம் ஒலி எழுப்பும். அவ்வொலியினை யாழின் இசையென்று கருதி, பெரிய மலைப்பிளவுகளில் உள்ள அசுணங்கள் காது கொடுத்துக் கேட்கும். மூங்கில் நிறைந்த குறுங்காட்டில், நெருங்கி வளைந்த விரல்களைக் கொண்ட கரடி, வடுக்கள் பொருந்திய புற்றினைத்*

தோண்டி, அதனுள் இருக்கும் பாம்பினைக் கொன்று புற்றாஞ் சோற்றினை எடுக்கும்; அத்தகைய ஆள் நடமாட்டமில்லாத அரிய வழியில் நம் தலைவன் சென்றனனோ?" என்று தன் கவலைக் குறிப்பினைத் தோழி வெளியிட்டாள்.

கருத்து

'புலியைக் கொன்ற யானையும், பாம்பு உறையும் கொடும் புற்றும், கொல்லுதல் வல்ல கரடியும் உள்ள கொடிய வழியில் தலைவன் சென்றனனோ' என்று தோழி வருந்தினாள்.

குறிப்பு

கொடிய வழியில் தலைவன் வந்து போகிறான் என்பதை அறிந்து தாங்கள் வருந்துவதை அவன் உணர வேண்டும் என்பது தோழியின் கருத்து. அதன் பயன் அவன் தலைவியை மணந்துகொள்ள வேண்டும் என்பதாகும்.

சொற்பொருள்

1. முதை - பழைமை; சுவல் - மேட்டுநிலம்; கலித்த - தழைத்த; மூரி - பெருமை.
2. வணர் - வளைந்த; குரல் - கதிர்; உணீஇய - உண்ணும்பொருட்டு; பாங்கர் - பக்கம்.
3. பகு - பிளந்த; பாடு - ஓசை; ஓர்த்து - காது கொடுத்துக் கேட்டு.
4. புருவை - இளமை.
5. கழுது - காவற்பரண்; கொளீஇய - கொளுத்திய.
6. விளக்கம் - ஒளி.
7. நன்னராளன் - நன்மையினையே நினைப்பவன், தலைவன்.
9. தொலைத்த - கொன்ற.
10. கவுள் - கன்னம்; மலிபு - பெருகி; காமர் - அழகிய; கடாஅம் - மதநீர்.
11. இரு - கரிய; சிறை - சிறகு; தொழுதி - (வண்டுக்) கூட்டம்; யாழ் செத்து - யாழிசை என்று கருதி.
12. விடர் அளை - மலைப்பிளவு; அசுணம் - இசையறியும் ஒரு விலங்கு.
13. காம்பு - மூங்கில்; அமல் - நிறைந்த; இறும்பு - குறுங்காடு; துவன்றி - நெருங்கி.
14. கொடு - வளைந்த; உளியம் - கரடி; கெண்டும் - தோண்டும்.
15. வடுஆழ் - வடுக்கள் பதிந்த; வழக்குஅரு - செல்லுதற்கு அரிய.

தோழி கூற்று

அகநானூறு 362 **வெள்ளிவீதியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறிச் சிறைப்புறமாகத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் வரைந்துகொள்வதில் கருத்தின்றி நாள்தோறும் இரவுக்குறியில் வந்து வந்து மீண்டான். ஒருநாள் அவன் சிறைப்புறமாக வந்து நிற்பதைக் கண்ட தோழி, இரவு நேரத்தில் அவன் வருவதால் உண்டாகும் துன்பத்தையும், வாராது போனால் தலைவி அடையும் துன்பத்தையும் அவன் கேட்பத் தலைவியிடம் கூறியது.

பாம்புடை விடர பனிநீர் இட்டுத்துறைத்
தேம்கலந்து ஒழுக, யாறுநிறைந் தனவே;
வெண்கோட்டு யானை பொருதபுண் கூர்ந்து,
பைங்கண் வல்லியம் கல்அளைச் செறிய,
முருக்குஅரும்பு அன்ன வள்உகிர் வயப்பிணவு
கடிகொள, வழங்கார் ஆறே; ஆயிடை
எல்லிற்று என்னான், வென்வேல் ஏந்தி,
நசைதர வந்த நன்ன ராளன்
நெஞ்சுபழு தாக, வறுவியன் பெயரின்
இன்றுஇப் பொழுதும் யான்வா ழலனே;
எவன்கொல்?– வாழி, தோழி!–நம் இடைமுலைச்
சுணங்குஅணி முற்றத்து ஆரம் போலவும்,
சிலம்புநீடு சோலைச் சிதர்தூங்கு நளிர்ப்பின்
இலங்குவெள் அருவி போலவும்,
நிலம்கொண் டனவால், திங்கள்அம் கதிரே!

தெளிவுரை

தலைவியே! பாம்புகள் நிறைந்த மலைப்பிளவுகளிலிருந்து, குறுகலான துறைகளின் வழியாய்க் குளிர்ந்த நீர் தேனுடன் கலந்து பாய்வதால் ஆறுகள் அனைத்தும் நிறைந்தன. வெள்ளிய தந்தங்களைக் கொண்ட ஆண்யானைகள் பாய்ந்து குத்தியதால்,

புண் மிகுந்து, பசிய கண்ணினைக் கொண்ட ஆண்புலி குகைக் குள்ளே ஒடுங்கியிருக்கும். செம்முருக்கம் பூவின் அரும்பு போன்ற நகத்தைக் கொண்ட வலிமையான பெண்புலி அக்குகைக்குக் காவலாய் இருந்ததால் யாவரும் அவ்வழியில் செல்ல மாட்டார்.

அந்நிலையில் இருள் சூழ்ந்தது. தலைவன் இருளைக் கருதாத வனாய் வேலைக் கையில் கொண்டு நம்மீது கொண்டுள்ள காதல் மிகுதியால் இங்கு வருகின்றான். தன் எண்ணம் பயனிலதாக நம்மைக் கூடாது அவன் வறிதே மீண்டால் நான் இன்றிரவுகூட உயிருடன் வாழ மாட்டேன். தேமல் பொருந்திய நம் முலைப் பரப்பில் கிடக்கும் முத்துமாலை போலவும், மலையின் நீண்ட சோலைகளில் துளிகளைச் சிதறும் குளிர்ச்சி பொருந்திய வெள்ளிய அருவியைப் போன்றும் நிலவின் கதிர் நிலமெங்கும் பரவியுள்ளது. இனி நாம் என்ன செய்வோம்?

கருத்து

'வரும் வழி தீமை பலவற்றைக் கொண்டது; நிலவும் வெளிப்பட்டது; இரவுக்குறி இனி இயலாது; நாம் என்ன செய்வது?'

விளக்கம்

'ஆறுகள் பெருகின; யானையோடு போரிட்டுப் புண்பட்ட ஆண்புலியைப் பெண்புலி காத்து நிற்கிறது. அதனால் வழிச் செல்வோர் எவருமிலர். தலைவன் இரவில் வந்து நம்மைக் கூடாது பயனின்றித் திரும்புவானாயின் இன்றிரவுகூட நான் உயிர் வாழேன். திங்களின் கதிர்கள் எவ்விடத்தும் பரவியுள்ளன. இனி நாம் என் செய்வோம்' எனத் தோழி தலைவன் அறியுமாறு தலைவியிடம் கூறினாள்.

சொற்பொருள்

1. விடர் - மலைப்பிளவு; இட்டுத்துறை - குறுகிய துறை.
2. தேம் - தேன்; ஒழுக - பாய.
3. புண்கூர்ந்து - புண்மிக்கு.
4. வல்லியம் - ஆண்புலி; அளை - குகை.
5. முருக்கு - முருக்க மரம்; வள் உகிர் - கூரிய நகம்; வயப்பிணவு - வலிமையுள்ள பெண்புலி.
6. கடி - காவல்; வழங்கார் - (வழிச்) செல்லார்.

7. எல் - இரவு.
8. நசைதர - காதல்மிக; நன்னராளன் - நன்மையே நினைப்பவன், தலைவன்.
9. பழுதாக - (எண்ணம்) பயனிலதாக; வறுவியன் பெயரின் - நம்மைக் கூடாது வறிதே மீண்டால்.
10. இப்பொழுது - இன்று இரவும்.
13. நீடு - நீண்ட; சிதர் - (நீர்த்) துளி; தூங்கும் - சிதறும்; நளிர்ப்பு - குளிர்ச்சி.
15. நிலம் கொண்டன - நிலமெங்கும் பரவிக் கிடக்கின்றன.

தோழி கூற்று

நற்றிணை 228 **முடத்திருமாறனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி சிறைப்புறமாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தலைமகன் கேட்பச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் சிறைப்புறமாய் வந்திருப்பதுணர்ந்த தோழி, அவன் கேட்கும் படியாக, 'மலைகிழவோன் இன்னும் அருளாதது ஏனோ?' எனத் தலைவியிடம் கூறியது.

என்எனப் படுமோ தோழி! மின்னுவசிபு
அதிர்குரல் எழிலி, முதிர்கடன் தீரக்
கண்தூர்பு விரிந்த கனைஇருள் நடுநாள்,
பண்புஇல் ஆர்இடை வரூஉம் நம்திறத்து
அருளான் கொல்லோ தானே, கானவன்
சிறுபுறம் கடுக்கும் பெருங்கை வேழம்,
வெறிகொள் சாபத்து எறிகணை வெரீஇ,
அழுந்துபட விடரகத்து இயம்பும்
எழுந்துவீழ் அருவிய மலைகிழ வோனே.

தெளிவுரை

காட்டில் வாழும் வேட்டுவனின் முதுகுபோலத் தோன்றும் பெரிய துதிக்கையைக் கொண்ட ஆண்யானை, அச்சம் கொள்ளும்படியான வில்லிலிருந்து எறியப்படும் அம்புக்கு அஞ்சி, மலைப்பிளவினிடத்தே மறைவாய்ச் சென்று நின்றபடி பிளிறும். அந்த ஓசையுடன் மலையின் மேலிருந்து வீழும் அருவியின் ஓசையும் இணையும். இத்தகைய மலைநாட்டுக்கு உரிமை கொண்டவன், நம் தலைவன்.

மின்னலாலே இருளைப் பிளந்துகொண்டு மேகங்கள் முழக்க மிடுகின்றன. சூலுற்ற கருமேகங்கள் நம் கண்களைத் தூர்க்குமாறு நிலப்பரப்பு முழுவதிலும் திண்ணிய இருளைப் பரப்பியிருக் கின்றன. வழியும் பெருந்துயர் விளைவிக்கும் விலங்குகள் திரியும் கொடுமைமிக்கதாயுள்ளது. இவற்றிற்கு அஞ்சாது வந்து, தலைவன் நமக்கு அருள் செய்வானோ, அஞ்சி வாராதிருப் பானோ? இஃது என்ன ஆகுமோ?

கருத்து

'கொடுமை நிறைந்த இந்த இருளில் தலைவன் வருவானோ மாட்டானோ? அறிய இயலவில்லையே!'

குறிப்பு

மழை தன் கடமையை மறவாது மேற்கொள்கிறது. ஆனால், தலைவனோ நம்மை மணந்துகொள்ளும் கடமையை மறந்தவனாய் உள்ளானே என்னும் குறிப்புப்பொருளும் தோழியின் பேச்சில் தென்படுகிறது.

உள்ளுறை

வேட்டுவனின் கணைக்கு யானை வெருவி, விடரகத்துச் சென்று முழங்கும். இத்தொடர்மூலம், தலைவியும் இனி அயலார் உரைக்கின்ற பழிச்சொற்களுக்கு அஞ்சித் தன் மனை யிடத்துத் தனித்திருந்து புலம்பி வருந்துவள் என்னும் உள்ளுறைப் பொருள் வெளிப்படுகிறது.

சொற்பொருள்

1. மின்னு - மின்னல்; வசிபு - பிளந்து.

2. அதிர்குரல் - இடிமுழக்கம்; எழிலி - மேகம்; முதிர்கடன் - சூல் முதிர்ந்ததனாலே உண்டாகிய கடமை.
3. கண் தூர்பு - கண்ணொளி மறையுமாறு; கனை இருள் - செறிந்த இருள்.
4. ஆர்இடை - கடத்தற்கரிய காட்டுவழி.
5. கானவன் - வேட்டுவன்.
6. சிறுபுறம் - முதுகு.
7. வெறிகொள் - அச்சம் கொள்ளும்படியான; சாபம் - வில்; கணை - அம்பு; வெரீஇ - அஞ்சி.
8. அழுந்து - பள்ளம்; விடரகம் - மலைப்பிளவிடம்.
9. எழுந்து வீழ் - மேலெழுந்து விழுகின்ற.

தோழி கூற்று

அகநானூறு 108 **தங்காற் பொற்கொல்லனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியை மணந்துகொள்வதில் கருத்தின்றி இரவுக்குறியின்கண் வந்து வந்து மீள்பவனாய் இருந்தான், தலைவன். ஒருநாள், அவன் இரவுக் குறியிடத்துச் சிறைப்புறமாய் வந்து நின்றான். அதனை அறிந்த தோழி அவன் வருகையை அறியாதாள்போல அவன் கேட்பத் தலைவியிடம் கூறியது.

புணர்ந்தோர் புன்கண் அருளலும் உணர்ந்தோர்க்கு
ஒத்தன்று மன்னால்! எவன்கொல்? முத்தம்
வரைமுதல் சிதறிய வைபோல், யானைப்
புகர்முகம் பொருத புதுநீர் ஆலி
பளிங்குசொரி வதுபோல் பாறை வரிப்ப,
கார்கதம் பட்ட கண்அகல் விசும்பின்
விடுபொறி ஞெகிழியின் கொடிபட மின்னி,

படுமழை பொழிந்த பானாட் கங்குல்,
ஆர்உயிர்த் துப்பின் கோள்மா வழங்கும்
இருளிடைத் தமியன் வருதல் யாவதும்
அருளான்–வாழி, தோழி!– அல்கல்
விரவுப்பொறி மஞ்ஞை வெரீஇ, அரவின்
அணங்குடை அருந்தலை பைவிரிப் பவைபோல்
காயா மென்சினை தோய நீடிப்
பல்துடுப்பு எடுத்த அலங்குகுலைக் காந்தள்
அணிமலர் நறுந்தாது ஊதும் தும்பி
கைஆடு வட்டின் தோன்றும்
மைஆடு சென்னிய மலைகிழ வோனே.

தெளிவுரை

"தலைவியே! புள்ளிகள் விரவிய மயிலைக் கண்டஞ்சிப் பாம்புகள் ஒன்றாய்ப் படம் விரித்தனபோல, காயாவின் கொம்பினைத் தோய்ந்துள்ள நீண்ட அரும்பிய காந்தள் மலர்களில் வண்டுகள் தாவித் தாவித் தாதினை நுகரும். அவ்வண்டுகள் மகளிர் தம் கையில் வைத்தாடும் வட்டுகளைப் போன்றனவாய்த் தோன்றும்; மேகம் தழுவும் மலை உச்சிகளைக் கொண்ட இத்தகைய மலைநாட்டுக்குரியவன், நம் தலைவன்.

"மலைமேல் முத்துகள் சிதறிக் கிடப்பனபோலப் புள்ளிகளைக் கொண்ட யானையின் முகத்திற்பட்டு விழும் புதிய ஆலங் கட்டிகள், பளிங்கினைச் சொரிந்து வைத்தாற்போலப் பாறைகள் மீது விழுந்து அழகு செய்யும். இடம் அகன்ற விண்ணில் சினந்து எழும் மேகங்கள், பொறி விடுகின்ற கொள்ளிக்கட்டைபோல வரிசையாய் மின்னி, நடுயாமத்து இரவில் மிக்க மழையைப் பொழியும்; அரிய பல உயிர்களை உணவாய்க் கொள்ளும் கோள்மா என்னும் விலங்கு திரிகின்ற வழியில் தலைவன் தனியாய் வருகின்றான். இதைக் கண்டு நாம் படுகின்ற அச்சம் நீங்க, தலைவியை மணந்து அருள்செய்ய மாட்டானா?

"தம்மைச் சேர்ந்தோர் துயர் துடைத்து அருளுவது அறிவுடையார்க்குப் பொருந்திய செயலாகும்; தலைவன் அவ்வாறு

செய்திலன்; என்ன காரணமோ?" என்று தலைவியிடம் தோழி கேட்கிறாள்.

கருத்து

கொடிய விலங்குகள் திரியும் காட்டுவழியில் தலைவன் வருவதால் அஞ்சுகிறோம். இவ்வச்சம் நீங்க அவன் நமக்கு அருள் செய்யானோ?

விளக்கம்

"தலைவியே! மயிலுக்கு அஞ்சிப் பாம்பு படமெடுத்தது போலக் காயாவின் கிளையைத் தோய்ந்திருக்கும் காந்தள் மலர் விரியும். அம்மலர்களிலுள்ள தாதினை ஊதும் வண்டு, பெண்டிர் தம் கையில் வைத்து விளையாடும் வட்டினைப் போலத் தோன்றும் மலைக்கு உரியவன், நம் தலைவன். மழை பெய்யும் போது யானையின் முகத்தில் மோதி விழும் ஆலங்கட்டி, பாறைமீது பளிங்கு சொரிந்ததுபோல அழகு செய்யும். கார்ப்பருவமாதலால் விசும்பில் மின்னி மழை பொழியும் நள்ளிரவில் தலைவன், அரிய பல உயிர்களை உணவாய்க் கொள்ளும் கோள்மா என்னும் விலங்கு திரிகின்ற வழியில் தனியே வருகிறான். அவ்வாறு வருவதைத் தவிர்த்து நமக்கு அவன் அருள் செய்யாதது ஏனோ? தம்மைச் சார்ந்தவர் துன்பத்தைப் போக்குவது அறிவறிந்த சான்றோர் செயல். அவ்வாறிருந்தும் தலைவன் அவ்வாறு செய்யவில்லையே, ஏன்?" எனத் தோழி தன் துன்பத்தைத் தலைவியிடம் சொல்லி, தன் வருத்தத்தை வெளிப்படுத்துகிறாள்.

குறிப்பு

சிங்கம், புலி போன்று உயிரினங்களை உணவாய்க் கொள்ளும் ஒரு வகை விலங்கு, 'கோள்மா' என்று வழங்கப்பட்டது.

உள்ளுறை

யாவரும் விரும்புதற்குரிய அழகிய காந்தளின் விரிந்த மடல், அஞ்சத்தக்க பாம்பின் படம் போலும் தோன்றி அச்சம் தரும் என்னும் தொடர்மூலம், தலைவியால் விரும்பப்படும் தலைவன் வருகின்ற வழி தீமை விளைத்தலால் அவ்வழி தலைவிக்கு அச்சத்தைத் தரும் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. புணர்ந்தோர் - நம்மைச் சார்ந்தோர்; புன்கண் - துன்பம்; அருளுதல் - நீக்கி அருளுதல்; உணர்ந்தோர் - அறிவுடையோர்.
2. ஒத்தன்று - ஒத்தது; முத்தம் - முத்து.
4. புகர் - புள்ளி; ஆலி - மழை பெய்யும்போது பனித்துண்டுகள்போல விழும் நீர்க்கட்டி (ஆலங்கட்டி).
5. வரிப்ப - அழகு செய்ய.
6. கார் கதம் படுதல் - மேகம் குமுமி எழுதல்; கண்அகல் - இடம் அகன்ற.
7. விடு பொறி - தீப்பொறி விடுகின்ற; ஞெகிழி - கொள்ளிக்கட்டை.
8. படு - மிகுதியான; பானாள் - நடு நாள், நடு யாமம்.
9. துப்பு - உணவு; கோள்மா - சிங்கம், புலி போன்று அரிய பல உயிர்களை உண்ணும் ஒரு கொடிய விலங்கு.
10. தமியன் - தனியனாய்.
11. அல்கல் - நாள்தோறும்.
12. விரவுப்பொறி - புள்ளிகள் விரவிய; மஞ்ஞை - மயில்; அரவம் - பாம்பு.
13. அணங்குதல் - வருத்துதல்.
14. காயா - காயா மரம்.
15. துடுப்பு - பூவிதழ்; அலங்குதல் - அசைதல்.
17. கைஆடு - கையில் வைத்து விளையாடும்.
18. மை - மேகம்; ஆடு - சூழ்ந்த; சென்னி - (மலை) உச்சி; கிழவோன் - உரியவன்.

தோழி கூற்று

நற்றிணை 122 **செங்கண்ணனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

சிறைப்புறமாகத் தோழி தலைமகளுக்கு உரைப்பாளாய்த் தலைமகன் கேட்பச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் சிறைப்புறமாய் நிற்க அவன் கேட்குமாறு தோழி தலைவியிடம், “இனிப் பகற்குறியும் இரவுக்குறியும் வாய்க்குமா என்பதை நீயே ஆராய்ந்து அறிய வேண்டும்” என்று கூறியது.

இருங்கல் அடுக்கத்து என்னையர் உழுத
கருங்கால் செந்தினை கடியும் உண்டன;
கல்லக வரைப்பின் கான்கெழு சிறுகுடி
மல்லல் மருங்கின் மௌவலும் அரும்பின;
நரைஉரும் உரறும் நாம நள்இருள்
வரையக நாடன் வரூஉம் என்பது
உண்டுகொல், அன்றுகொல், யாதுகொல் மற்று?என்று
மதிவல் உள்ளமொடு மறைந்தவை நாடி,
அன்னையும் அமரா முகத்தினள்; நின்னொடு
நீயே சூழ்தல் வேண்டும்
பூஎய் கண்ணி!அது பொருந்து மாறே.

தெளிவுரை

"நீல மலர்போலும் கண்ணினைக் கொண்ட தலைவியே! பெரிய மலைச்சாரலில் நம் தமையன்மார் உழுது விளைவித்த கரிய அடித் தண்டினைக் கொண்ட செவ்விய தினைக்கதிர்கள் அனைத்தும் கொய்யப்பட்டுவிட்டன. மலைநாட்டுக் காடுகளில் உள்ள சிறுகுடியினரின் வளமிக்க பகுதிகளில் மல்லிகை அரும்புகள் தோன்றியுள்ளன. வெள்ளிய மின்னல்களோடு இடி முழங்கும் அச்சம் பொருந்திய நள்ளிருளில் மலைநாடன் வருவான் என அயலவர் கூறும் அலர்மொழி கேட்டுத் தாய் ஐயுற்றுள்ளாள். அவன் வருவது உண்மையா பொய்யா, வேறு யாதோ என்று ஆராயும் உள்ளத்துடனே, அயலார் அறியாதபடி நம்மிடை நிகழ்ந்தவற்றை அறிய முயலும் அன்னை வெகுண்ட முகத்தினளாயுள்ளாள். அதனால் தலைவனோடு உண்டான களவொழுக்கம் இனி நிகழுமா என்பதை நீயே ஆராய்ந்து அறிய வேண்டும்."

கருத்து

'உன் களவுறவை அன்னை ஆராயத் தொடங்கிவிட்டாள்; இனி அக் களவொழுக்கம் நிகழுமா என்பதை நீயே ஆராய்ந்து அறிதல் வேண்டும்' என்று தலைவியிடம் உரைப்பதுபோலத் தோழி சிறைப்புறத்தானாய் இருக்கும் தலைவனுக்கு உணர்த்தினாள்.

குறிப்பு

'தினை அறுக்கப்பட்டதால் இனிப் பகற்குறிக் கூட்டத்திற்கு வாய்ப் பில்லை; மின்னலோடு இடி முழங்கும் இருள் என்பதால் வழியில் நேரிடும் இடர் கருதி இரவு நேரத்திலும் வர இயலாது; அன்னை வெகுண்டுள்ளாள் என்பதால் தலைவியை இல்லத்தில் காவலில் வைப்பாள்' என இவ்வனைத் தினையும் கூறி, இனிப் பகற்குறியோ இரவுக்குறியோ வாய்க்க வாய்ப்பில்லை யாதலின் வரைந்துகொள்ளுதலே செய்யத் தக்கது என்பதைக் குறிப்பாய்த் தோழி தலைவனுக்கு உணர்த்துகிறாள்.

சொற்பொருள்

1. இருங்கல் - பெரிய மலை; அடுக்கம் - சாரல்; ஐயர் - தமையன்மார்.
2. கடியும் உண்டன - கொய்யப்பட்டுவிட்டன.
3. கான்கெழு - காடுகளில் பொருந்தியுள்ள.
4. மல்லல் - வளப்பம்; மௌவல் - மல்லிகை.
5. நரை - வெள்ளிய (மின்னல்); உரும் - இடி; உரறும் - முழங்கும்; நாமம் - அச்சம்.
6. வரூஉம் - வருவான்.
7. யாது கொல் மற்று? - வேறு யாதோ?
8. மதிவல் - மதிவன்மை; மறைந்து - பிறர் அறியாமல்; நாடி - ஆராய்ந்து.
9. அமரா முகத்தினள் - வெகுண்ட முகத்தைக் கொண்டவளாய் உள்ளாள்.
10. சூழ்தல் - ஆராய்தல்.
11. பூஎய் கண்ணி - நீலமலர்போலும் கண்களைக் கொண்ட தலைவி; பொருந்தும் ஆறு - (அது அல்லது) பொருந்திய வழி (வேறு இல்லை).

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 113 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரையாது வந்தொழுகும் தலைமகன் சிறைப்புறத்து நின்று கேட்ப, நெருநல் இல்லத்து நிகழ்ந்தது இதுவெனத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

வரையாது களவொழுக்கமே மேற்கொண்டொழுகும் தலைவன் சிறைப்புறமாய் நிற்க, அவன் காதில் விழுமாறு, 'நேற்று வீட்டில் நடந்தது இது' என்று தலைவி தோழியிடம் கூறியது.

அம்ம வாழி, தோழி! நென்னல்
ஓங்குதிரை வெண்மணல் உடைக்கும் துறைவற்கு,
ஊரார், பெண்டுஎன மொழிய, என்னை,
அதுகேட்டு 'அன்னாய்' என்றனள், அன்னை;
5 பையய 'எம்மை' என்றனென், யானே.

தெளிவுரை

"உயர்ந்துவரும் அலைகள் வெண்மணலைச் சிதைக்கும் தன்மையினைக் கொண்ட கடல்துறையினை உடையவன், நம் தலைவன். நான் அவனுக்குப் 'பெண்டு' என்று ஊரார் நேற்று அலர்மொழி கூறினர். அது கேட்ட அன்னை சினந்தவளாய் என்னை நோக்கி, 'நீ அத்தன்மையளா?' என்று கேட்டனள். நானும், ஊரார் கூறுவது, 'எம்மைத்தான்' என்று மிகவும் மெதுவாய்க் கூறினேன். இதுதான் நேற்று வீட்டில் நடந்தது" எனத் தலைவி, தோழியிடம் கூறினாள்.

கருத்து

என் களவொழுக்கத்தை ஊரார் அறிந்திருப்பதைப் போல அன்னையும் அறிந்துகொண்டனள்.

குறிப்பு

களவை அறிந்த ஊரார் அலர் கூறுவதைத் தாயும் அறிந்துவிட்டாள். இனி வீட்டுக்காவலில் வைப்பாள் என்பதையும், மறைக்க இயலாமல் தானும் மெல்ல உண்மையை ஒப்புக்கொண்டதனையும் தலைவி, தலைவன் அறியுமாறு உணர்த்துகிறாள்.

உயர்ந்துவரும் அலை, மணலைச் சிதைக்கும் என்பதன்மூலம், ஊரார் கூறும் அலர் களவொழுக்கத்தைச் சிதைத்தது என்னும் குறிப்புப் பொருள் கிட்டுகிறது.

தன் இக்கட்டான சூழ்நிலையைத் தலைவி தலைவனிடம் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. நென்னல் - நேற்று.
2. ஓங்கு திரை - உயர்ந்த அலைகள்; உடைக்கும் - சிதைக்கும்.
3. ஊரார் - இவ்வூரில் உள்ளவர்; பெண்டு என - தலைவனுக்கு இவள் பெண்டாயினள் என்று; மொழிய - கூற.
4. அன்னாய் - அத்தன்மை உடையவளா?
5. பைபய - மெல்ல மெல்ல, மெதுவாய்; எம்மை - (ஊரார் கூறுவது) எம்மைத்தான்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 93 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

முயக்கம் பெற்றவழிப் பிறந்த வெறி நாற்றத்தால் பண்டையனவன்றி வண்டுகள் மொய்த்தனவாக, 'இதற்குக் காரணம் என்?' என்று வினாவிய செவிலித்தாய்க்குக் கூறுவாள் போன்று தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியின் கூந்தலில் களவுப்புணர்ச்சியால் மணம்மிகுந்து என்றுமில்லா அளவில் வண்டுகள் மொய்த்ததனால் ஐயுற்று வினவிய செவிலியிடம் தோழி கூறியது.

எருமைநல் ஏற்றினம் மேயல் அருந்தெனப்
பசுமோ ரோடமோடு ஆம்பல் ஒல்லா,
செய்த வினைய மன்ற பல்பொழில்
தாதுஉண வெறுக்கைய ஆகி இவள்
போதுஅவிழ் முச்சி ஊதும் வண்டே.

தெளிவுரை

"அன்னையே! எருமைக்கடாக்கள் பசுமையான செங்கருங் காலிப் பூக்களையும் பொய்கையிலுள்ள ஆம்பல் மலர்களையும் மேய்ந்துவிட்டன. ஆதலின், வண்டினங்கள் பொழில்கள் பலவற்றிற்குச் சென்று உண்ணுவதற்கு வெறுப்படைந்தனவாகி

ஒரே இடத்தில் உண்ண விரும்பி மணம் விரிந்து கிடக்கும் இவள் கூந்தலில் மொய்க்கின்றன.”

கருத்து

‘களவுறவை அன்னை அறிந்தாள்; இனி என்ன ஆகுமோ?’

விளக்கம்

களவொழுக்கத்தைத் தலைவனும் தலைவியும் மேற்கொண் டிருந்தனர். தலைவன் முயக்கத்தால் தலைவியின் கூந்தலில் புதுமணம் ஏற்பட்டது; அதனால் வண்டினம் அதிகமாய் மொய்த்தது. அதனைக் கண்ட செவிலிக்கு ஐயம் உண்டாயிற்று; காரணம் கேட்டாள். “எல்லாப் பூக்களிலும் கிடைக்கும் மணத்தினைத் தலைவி கூந்தலிலேயே பெறலாம் என்பதால் வண்டுகள் இவள் தலையில் மொய்க்கின்றன” என்று கூறித் தோழி அவளை அமைதிப்படுத்தினாள்.

குறிப்பு

சிறைப்புறம் இருக்கும் தலைவனிடம், “களவு, பெற்றோருக்குத் தெரிந்து விட்டது; தலைவி இனி இற்செறிக்கப்படுவாள். ஆதலின், விரைவில் மணந்துகொள்” என்று தோழி குறிப்புணர்த்துகிறாள்.

வண்டுகள் பொழில்களில் தேனுண்ணாது தலைவியின் தலையில் மொய்க்கின்றன என்பதிலிருந்து, ஊரார் தம் வேலையைச் செய்யாது தலைவியின் வேறுபாட்டையே பேசி அலர் தூற்றுகின்றனர் என்னும் குறிப்புப் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. ஏற்றினம் - ஆண் இனம் (கடா); மேயல் - மேய்ச்சல்; அருந்தென - மேய்ந்து முடிந்துவிட்டபடியால்.
2. மோரோடம் - செங்கருங்காலி மலர்.

2-3. ஒல்லா செய்த வினைய - பொருந்ாதனவாய்ச் (வண்டுகள்) செய்துவிட்டன.

3. பல்பொழில் - பல பொழில்கள் (சென்று).
4. தாது - பூந்தாது; உண - உண்ணுவதற்கு; வெறுக்கைய ஆகி - வெறுப்படைந்தன ஆகி.
5. போது அவிழ் - மணம் விரிந்து (கிடக்கும்); முச்சி - உச்சந்தலை; ஊதும் - மொய்க்கும்.

தலைவி கூற்று

நற்றிணை 17 **நொச்சி நியமங்கிழார்**

திணை : குறிஞ்சி

கூற்று

முன்னிலைப் புறமொழியாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

(முன்னிலைப் புறமொழி - முன் நின்றாரிடம் நேராய்ப் பேசாமல், பிறரொருவரிடம் கூறுவது போலப் பேசுதல்.)

கூற்று விளக்கம்

மணம் செய்துகொள்ளாமல் பகற்குறியிடம் வந்தொழுகும் தலைவன் வாராதிருத்தலால் தலைவி வருந்துகிறாள். பின்னர் ஒருநாள் அவன் மறைவிடத்தில் வந்து நிற்கிறான். அந்நிலையில் தலைவி, "நான் அவனை எதிர்ப்பட்ட இடம் கண்டு அழுது நின்றேன். அன்னை யாதெனக் கேட்டாள். நான் என்னை மறந்து, 'தலைவன் மார்பைப் பெறாமல் வருந்து கிறேன்' எனச் சொல்லத் தொடங்கி, பின் சொல்லாது நிறுத்திவிட்டேன்" என்று தலைவனுக்குக் கேட்கும்வண்ணம் தோழியிடம் கூறியது.

நாள்மழை தலைஇய நல்நெடுங் குன்றத்து,
மால்கடல் திரையின் இழிதரும் அருவி
அகல்இருங் கானத்து அல்குஅணி நோக்கி,
தாங்கவும், தகைவரை நில்லா நீர்சுழல்பு
ஏந்துஎழில் மழைக்கண் கலுழ்தலின், அன்னை,
'எவன்செய் தனையோ?நின் இலங்குஎயிறு உண்க'என,
மெல்லிய இனிய கூறலின், வல்விரைந்து,
உயிரினும் சிறந்த நாணும் நனிமறந்து,
உரைத்தல்உய்ந் தனனே தோழி! சாரல்,
காந்தள் ஊதிய மணிநிறத் தும்பி
தீம்தொடை நரம்பின் இமிரும்
வான்தோய் வெற்பன் மார்புஅணங்கு எனவே.

தெளிவுரை

"தோழியே! விடியற்காலத்தில் பெய்த மழையால் உயர்ந்த குன்றிலிருந்து கரிய கடலலைபோலப் பெருகி இறங்கும் அருவி, அகன்ற பெரிய காட்டில் பரந்து ஓடியடங்கும் அழகினை நோக்கி நின்றேன். தலைவனை எதிர்ப்பட்ட இடம் அதுவாதலின்,

அடக்கவும் நில்லாமல் என் குளிர்ந்த கண்கள் கலங்கி அழுதன. அருகிருந்த அன்னை, 'ஏன் அழுகிறாய்?' என்று கேட்டு என்னைத் தேற்றுதற்காக, 'இதோ உனக்கு முத்தம் தருகிறேன்' என மென்மையான இனிய சொற்களைக் கூறினாள். அதனைக் கேட்டதும் மிகவும் விரைவாய், உயிரினும் சிறந்ததாய் நாம் போற்றும் நாணத்தையும் மறந்தேன்! 'இச்சாரலில், காந்தளின் தேனையுண்டு, யாழின் இசைபோல வண்டு முரலுகின்ற உயர்ந்த மலைநாட்டுக்குரியவன் மார்பைப் பிரிந்தமையால் நேர்ந்த வருத்தத்திற்காக அழுகிறேன்' என்று சொல்ல வாயெடுத்தேன். நல்லவேளை! அவ்வளவில் தெளிவு வர அவ்வாறு சொல்வதைத் தவிர்த்தேன்" என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

களவுறவை அன்னை அறிந்தமையால் இனி, பகலில் தலைவனைச் சந்திக்க இயலாது.

சொற்பொருள்

1. நாள்மழை - விடியற்காலத்தில் பெய்த மழை; தலைஇய - பொருந்திய.
2. மால் கடல் - கரிய கடல்; இழிதரும் - கீழிறங்கும்.
3. அகல் இருங்கானம் - அகன்ற பெரிய காடு; அல்கு அணி - தங்கும் அழகு.
4. தாங்கவும் - தடுக்கவும்; தகைவரை நில்லா - தடைப்பட்டு நில்லாது; நீர் சுழல்பு - நீர் நிறைந்து.
5. கலுழ்தல் - அழுதல், கலங்குதல்.
6. நின் இலங்கு எயிறு உண்க - உனக்கு முத்தம் தருகிறேன்.
7. வல் விரைந்து - மிக்க விரைவுடன்.
8. நனி மறந்து - அறவே மறந்து.
9. உரைத்தல் உய்ந்தனன் - (சொல்ல நாவெடுத்து) சொல்லு தலினின்றும் தப்பினேன்.
10. ஊதிய - தேன் உண்ட; மணி நிறம் - நீலமணி போன்ற நிறம்.
11. தீம்தொடை நரம்பின் - யாழில் கட்டிய இனிய நரம்புபோல; இமிரும் - இசைக்கும்.
12. வெற்பன் - மலைநாட்டுக்குத்தலைவன்; மார்பு அணங்கு - மார்பைப் பிரிந்ததனால் உண்டாகிய வருத்தம்.

தோழி கூற்று

நற்றிணை 61 **சிறுமோலிகனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் வரவு உணர்ந்து, தலைமகளுக்குச் சொல்லுவாளாய்த் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன், தலைவியை மணந்துகொள்ள முற்படாது களவுறவையே விரும்பி வந்தான். அவன் ஒரு நாள் சிறைப்புறமாய் நிற்க, தோழி, தலைவன் காதில் விழும்வண்ணம் தலைவியிடம் கூறியது.

கேளாய், எல்ல தோழி! அல்கல்
வேணவா நலிய, வெய்ய உயிரா,
ஏமான் பிணையின் வருந்தினே னாக,
துயர்மருங்கு அறிந்தனள் போல, அன்னை
'துஞ்சா யோ,என் குறுமகள்' என்றலின்,
சொல்வெளிப் படாமை மெல்லஎன் நெஞ்சில்,
'படுமழை பொழிந்த பாறை மருங்கில்
சிரல்வாய் உற்ற தளவின், பரல்அவல்,
கான்கெழு நாடன் படர்ந்தோர்க்குக்
கண்ணும் படுமோ' என்றிசின் யானே.

தெளிவுரை

"தோழியே! நான் சொல்வதைக் கேள். நேற்றிரவு ஆசை மிகுதியால், பெருமூச்செறிந்து, அம்பு பட்ட மான்போல வருத்த முற்றேன். அப்பொழுது என் துன்பமிகுதியை அறிந்தவள்போல அன்னை, 'இளமை பொருந்திய என் மகளே! நீ தூங்க வில்லையா?' என்று கேட்டாள். அதற்கு நான் மறுமொழி எதுவும் சொல்லாமல், என் மனத்திற்குள்ளேயே, 'மிக்க மழை பொழிந்த பாறைக்கு அருகில் சிச்சிலிப் பறவையின் மூக்கு போன்ற முல்லை அரும்புகளையும் பரல்கற்களையும் கொண்ட காடு சூழ்ந்த நாட்டிற்குரிய தலைவனை நெஞ்சிலேயே வைத்திருப்பவர்களுக்குத் தூக்கமும் வருமோ?' " என்று சொல்லிக் கொண்டேன்.

கருத்து

தலைவியின் தூக்கமின்மையைக் கண்டு அன்னை ஐயுறலானாள்.

விளக்கம்

இரவில் பெருமூச்செறிந்து அம்பு பட்ட மான்போல வருந்தினேன் என்றது, பகற்குறி பெற்று இன்புறும் தலைவி, இரவு முற்றவும் தலைவனை நினைந்து வருந்தியிருக்கிறாள் என்பதை உணர்த்துகிறது.

குறிப்பு

ஐயுற்ற அன்னை முற்றவும் அறியின் தலைவியை இல்லத்தை விட்டு வெளியே செல்ல அனுமதிக்க மாட்டாள்; அதனால் தலைவன் அவளைச் சந்திக்க இயலாததாகிவிடும் என்பதைத் தோழி தலைவனுக்கு உணர்த்துகிறாள்.

சிறப்புக் குறிப்பு

இது, தோழி தன்னைத் தலைவியாகவே கொண்டு கூறியது. தலைவி வேறு, தான் வேறு என்னும் வேற்றுமையில்லாதவள், தோழி. ஆதலின், தோழி இவ்வாறு கூறினாள். 'ஒன்றித் தோன்றும் தோழி மேன' (தொல். பொருள். 39) என்னும் தொல்காப்பிய விதியின்படி தோழி கூற்றும் தலைவி கூற்றாகும் எனக் கூறுவர், பேராசிரியர்.

சொற்பொருள்

1. எல்ல - ஏடீ; அல்கல் - இரவு.
2. வேணவா - மிகுதியாய் எழுந்த ஆசை; நலிய - வருத்த; வெய்ய உயிரா - வெப்பப் பெருமூச்சு விட்டு.
3. ஏ - அம்பு.
4. துயர் மருங்கு - துயரத்தின் நிலை.
5. துஞ்சுதல் - உறங்குதல்; குறுமகள் - இளைய மகள்.
6. என் நெஞ்சில் - என் மனத்துக்குள்ளேயே.
7. படுமழை - பெருமழை; மருங்கு - பக்கம்.
8. சிரல் - சிச்சிலிப்பறவை; தளவு - முல்லை அரும்பு; பரல் அவல் - பரற்கற்கள் நிறைந்த நிலம்.
9. கெழு - பொருந்திய; படர்தல் - நினைத்தல்.
10. படுமோ? - உறங்குமோ, மூடுமோ?; என்றிசின் - என்று சொல்லிக் கொண்டேன்.

தோழி கூற்று

கைந்நிலை 59 **புல்லங்காடனார்**

திணை : நெய்தல்

கூற்று

இரவுக்குறிக்கண் தலைமகன் சிறைப்புறத்தானாக, தலைமகட்குத் தோழி படைத்து மொழிந்தது.

கூற்று விளக்கம்

தலைவன் சிறைப்புறத்தானாய் இருக்கத் தோழி, 'தலைவன் தலைவியரின் களவொழுக்கத்தை அன்னை அறிந்தாள்' என்பதைத் தலைவன் அறியும்வண்ணம் கூறியது.

தாழை குரு(கு)ஈனும் தண்ணம் துறைவனை
மாழை மான்நோக்கின் மடமொழி – நூழை
நுழையும் மடமகன் யார்கொல்? என்(று)அன்னை
புழையும் அடைத்தாள் கதவு.

தெளிவுரை

மாம்பிஞ்சுகளையும் மான் பார்வையையும் போன்ற கண்களையும், இனிய மொழிகளையும் கொண்ட தலைவியே! நம் காதலன் கொக்கைப் போன்று வெண்மையான மலரைத் தோற்றுவிக்கும் நீர்த்துறைக்குத் தலைவன். நாள்தோறும் வீட்டிற்குள் புறக்கடை வழியே நுழையும் அவனை யார் என அறியாது, 'அறிவற்ற இவன் யார்?' என்று கதவையும், அதில் உள்ள ஒட்டையையும் தாய் அடைத்துவிட்டாள். இனி என் செய்வது?

கருத்து

தலைவன் நாள்தோறும் வந்து செல்வதை அன்னை அறிந்துள்ளாள்.

குறிப்பு

திருட்டுத்தனமாய் வீட்டிற்குள் நுழையும் தலைவன்மீது செவிலி கொண்டுள்ள வெறுப்பினை 'நூழை நுழையும் மடமகன்' என்னும் தொடர் சுட்டுகிறது.

சொற்பொருள்

1. தாழை - தாழை மரம்; குருகு - கொக்கு (ப் போன்ற); ஈனும் - மலரைத் தோற்றுவிக்கும்.
2. மாழை - மாவடு; நோக்கு - பார்வை; மடமொழி - இனிய மொழி; நூழை - ஓட்டை.
3. மடமகன் - அறிவற்றவன்.
4. புழை - வாயில்.

தோழி கூற்று

அகநானூறு 248 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறிச் சிறைப்புறமாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தலைமகன் கேட்பத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் இரவுக்குறியில் வேலி ஓரம் வந்து நின்றான். அதனை அறிந்த தோழி, அவன் வந்திருப்பதை அறியாதவள்போல, ஆனால், அவனுக்குக் கேட்குமாறு தலைவியிடம் கூறியது.

நகைநீ கேளாய்– தோழி!– அல்கல்;
வயநாய் எறிந்து, வன்பறழ் தழீஇ,
இளையர் எய்துதல் மடக்கிக் கிளையொடு
நால்முலைப் பிணவல் சொலியக் கான்ஒழிந்து,
அரும்புழை முடுக்கர் ஆள்குறித்து நின்ற
தறுகண் பன்றி நோக்கி, கானவன்
குறுகினன் தொடுத்த கூர்வாய்ப் பகழி
மடைசெலல் முன்பின்தன் படைசெலச் செல்லாது,
அருவழி விலக்கும்எம் பெருவிறல் போன்ம்;என,
எய்யாது பெயரும் குன்ற நாடன்
செறிஅரில் துடக்கலின், பரீஇப் புரிஅவிழ்ந்து,
ஏந்துகுவவு மொய்ம்பின் பூச்சோர் மாலை,
ஏற்றுஇமில் கயிற்றின், எழில்வந்து துயல்வர,

இல்வந்து நின்றோன் கண்டனள், அன்னை;
வல்லே என்முகம் நோக்கி,
'நல்லை மன்',என நகூஉப்பெயர்ந் தோளே.

தெளிவுரை

தலைவியே! நேற்று இரவு நடந்த ஒரு நிகழ்ச்சியை நினைத்தால் சிரிப்புத்தான் ஏற்படுகிறது. அச்சம் அறியாத ஆண்பன்றி ஒன்று, வலிமை மிக்க வேட்டைநாய்களைக் கடித்து விலக்கியது; வேட்டுவர் நெருங்குவதைத் தடுத்தது; வலிமை யுள்ள தன் குட்டிகளைத் தழுவிக்கொண்டது; தொங்கும் முலை கொண்ட பெண்பன்றியோடு தப்பிக் காட்டை விட்டு வெளிவந்தது. காட்டுப்புறத்தின் வாயிலாயுள்ள ஒரு முடுக்கில், வேட்டையாட வருபவர்களை எதிர்பார்த்து நின்றது, அச்சம் அறியாத அப்பன்றி. வேடன் ஒருவன் அதனை நெருங்கினான்; அவனுடைய அம்பு, கூரிய முனை கொண்டது; குத்திச் செல்லும் வலிமை மிக்கது. அந்த அம்பு பாயுமென்பதுபற்றிய அச்சமின்றிப் பெயராது நின்றது, அப்பன்றி. 'தனக்குத் துணையாய் வந்த வலிமையான படை சிதறி ஓடினாலும் தான் மட்டும் பெயராமல் நின்று, பகைவர் வரும் வழியில் அவர்களைத் தடுத்து நிறுத்தும் வில்லாளன் போன்றது இப்பன்றி' என (அதன் வீரத்தை வியந்து) அதன்மீது அம்பு எய்யாமல் சென்றான், வேடன். வீரம் போற்றும் இத்தகையோர் வாழும் மலைநாட்டிற்குரியவனாகிய நம் தலைவன் நம் வீட்டுப்பக்கம் வந்து நின்றான். வரும் வழியிலே செறிந்துள்ள புதர்கள் பற்றி இழுத்ததால் அவன் தோளிலே அணிந்திருந்த மாலை அறுபட்டுப் புரியவிழ்ந்து பூக்கள் உதிர்ந் திருந்தன. பூக்கள் உதிர்ந்த அம்மாலை அவன் கழுத்தில், காளை யின் கழுத்தில் அசையும் கயிற்றைப் போல அழகாய்த்தான் இருந்தது. அவனை நம் தாய் பார்த்துவிட்டாள். தற்செயலாய் அங்குச் சென்ற என் முகத்தையும் உடனே பார்த்து, 'நீ மிகவும் நல்லவள்' என்று கூறிவிட்டுச் சென்றாள்" என்று தலைவி தன்னிடம் கூறியதைத் தலைவன் கேட்டறியுமாறு தோழி கூறினாள்.

கருத்து

'களவுப்புணர்ச்சியை அன்னை அறிய நேர்ந்தது. இனிச் செய்ய வேண்டியது என்ன' என்று தலைவன் உணர வேண்டும்.

உள்ளுறை

தன் குட்டிகளுக்கு ஏற்படக்கூடிய துன்பங்களைத் தவிர்க்கும் எண்ணத்துடன் வேடனின் அம்புக்கும் அஞ்சாமல் நின்றது, பன்றி. இதன் உட்குறிப்பு, வீட்டில் அடைபட்டுக் கிடக்கின்ற தலைவியின் துன்பத்தை நீக்கித் தலைவன் காக்க வேண்டும் என்பதாகும்.

குறிப்பு

1. செவிலி சிரித்தாள் என்றாலும் அவள் தலைவனைக் கண்டுவிட்டதால் இனித் தலைவி இற்செறிக்கப்படுவது உறுதி.
2. பன்றியின் அஞ்சாமையையும் வீரத்தையும் கண்டு வியந்த வேட்டுவன் அதன்மீது அம்பு எய்யாது திரும்பினான். வீரம் வீரத்தை மதித்த பண்டைய பண்பாடு போற்றத்தக்கது.

சொற்பொருள்

1. நகை - நகைப்பை உண்டாக்குகிறது; அல்கல் - இரவு.
2. வயநாய் - வலிய (வேட்டை) நாய்; எறிந்து - விலக்கி; வன்பறழ் - வலிய குட்டிகள்.
3. இளையர் - வேடுவர்; எய்துதல் - நெருங்குதல்; மடக்கி - தவிர்த்து.
4. நால்முலை - தொங்கும் முலை; பிணவல் - பெண்பன்றி; சொலிய - தப்பிச் செல்ல.
5. புழை - வாயில்; முடுக்கர் - முடுக்கு.
6. தறுகண் - அஞ்சாமை, பேராண்மை.
7. குறுகினன் - நெருங்கிச் சென்றான்; கூர்வாய் - கூரிய நுனி; பகழி - அம்பு.
8. மடைசெலல் - குத்துதல் அமைந்த; முன்பு - வலிமை; செல - சிதறி ஓட; செல்லாது - தான் பெயராது நின்ற.
9. விலக்கும் - (பகைவர்களைத்) தடுக்கும்; பெருவிறல் - பெரிய வல்லாளன்.
10. எய்யாது - அம்பு விடுக்காது.
11. அரில் - புதர்; துடக்கலின் - இழுத்தலால்; பரீஇ - அறுபட்டு.

12. ஏந்து குவவு மொய்ம்பின் - உயர்ந்து திரண்ட தோளில்.
13. ஏறு - காளை; இமில் - திமில்.
14. இல் வந்து - வீட்டுப்பக்கம் வந்து.
15. வல்லே - விரைய.
16. நல்லை - நல்லவள்; நகூஉ - சிரித்து.

தோழி கூற்று

அகநானூறு 158 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி செவிலித்தாய்க்குச் சொல்லு வாளாய்த் தலைமகன் கேட்பச் சொல்லியது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தினால் தலைவியின் தோற்றப்பொலிவில் மாற்றம் கண்ட செவிலித்தாய் ஐயுற்றாள்; தோழியை அழைத்து வினவவும் செய்தாள். இச்செய்தி இரவுக்குறி வந்த தலைவன் செவியில் விழுமாறு, தோழி செவிலித் தாயிடம் கூறினாள்.

உரும்உரறு கருவிய பெருமழை தலைஇ,
பெயல்ஆன்று அவிந்த தூங்குஇருள் நடுநாள்,
மின்னுநிமிர்ந் தன்ன கனங்குழை இமைப்ப,
பின்னுவிடு நெறியின் கிளைஇய கூந்தலள்,
வரைஇழி மயிலின் ஒல்குவனள் ஒதுங்கி,
மிடைஊர்பு இழிய, கண்டனென், இவள்என
அலையல்– வாழி!வேண்டு, அன்னை!நம் படப்பைச்
சூருடைச் சிலம்பில், சுடர்ப்பூ வேய்ந்து,
தாம்வேண்டு உருவின் அணங்குமார் வருமே;
நனவின் வாயே போலத் துஞ்சுநர்க்
கனவுஆண்டு மருட்டலும் உண்டே; இவள்தான்
சுடர்இன்று தமியளும் பனிக்கும்; வெருவர
மன்ற மராஅத்த கூகை குழறினும்,
நெஞ்சுஅழிந்து அரணம் சேரும்; அதன்தலைப்

புலிக்கணத்து அன்ன, நாய்தொடர் விட்டு,
முருகன் அன்ன, சீற்றத்துக் கடுந்திறல்
எந்தையும் இல்லன் ஆக,
அஞ்சுவள் அல்லளோ, இவள்இது செயலே.

தெளிவுரை

(ஒருமுறை தலைவன் வந்ததைப் பார்த்துவிட்ட செவிலித் தாய்க்கு ஐயம் ஏற்பட்டது; தோழியிடம் தன் ஐயத்தைப் புலப்படுத்தி விவரம் கேட்டாள். அந்த வேளை தலைவன் ஒருபுறமாய் நின்றிருந்தான். செவிலித்தாயின் ஐயமும் தீர வேண்டும்; சூழ்நிலைகளைப் புரிந்துகொண்டு தலைவனைத் திருமணத்துக்காக முயற்சி மேற்கொள்ளும்படி தூண்டவும் வேண்டும். இந்நிலையில் தோழி கூறியதாய் அமைந்திருக்கிறது, இப்பாடல்.)

"அன்னையே வாழ்க! இடி முழங்கியது; மின்னல் முதலாகிய தொகுதியினைக் கொண்ட பெருமழை பெய்தது; மழை பெய்து ஓய்ந்த நடுயாமத்தில் மின்னல் பளிச்சிட்டாற்போலக் காதிலே குழைகள் பளிச்சிடச் சடை நெகிழ்ந்து, நெளி கொண்ட கூந்தலைக் கொண்ட ஒருத்தி, மலையிலிருந்து இறங்கும் மயில் போலத் தளர்ந்து நடந்து, பரணில் ஏறி இறங்கிவரக் கண்டேன்; அவள் இவள்தான் என்று கூறித் தலைவியை வீணே துன்புறுத் தாதே! (அப்படி வந்தவள் இவள் அல்லள்.) நான் சொல்வதைக் கேள்.

"நம் தோட்டத்திற்கு அருகில் உள்ள மலையிலிருந்து தெய்வங்கள் வந்து செல்லும். அவற்றுள் ஒரு தெய்வம் ஒளி வீசும் மலர்களை அணிந்துகொண்டு தான் விரும்பிய பெண்ணின் வடிவத்துடன் வரும். உண்மையான நனவு நிலையிலே காண்பதுபோலவே கனவிலே வந்து அந்தத் தெய்வம் மருட்டுவது உண்டு. (அப்படி வந்த ஒரு தெய்வத்தை நீ கண்டிருக்கக்கூடும்; அல்லது கனவில்கூடக் கண்டிருக்கலாம்.)

"(தலைவி எப்படிப்பட்டவள் என்று நீ அறிவாய்!) விளக்கு இல்லையென்றால், இருட்டில் தனியாய் இருப்பதற்கே நடுங்கு வாள். மன்றத்தில் உள்ள வெண்கடம்ப மரத்தில் கூகை ஒலி

செய்தாற்கூட அதைக் கேட்டு நெஞ்சம் கலங்கிப் பாதுகாப்பான இடத்திற்கு வந்துவிடுவாள்.

"புலிக்கூட்டம்போலப் பின்தொடரும் நாய்களை அவிழ்த்து விட்டுவிட்டு நம் தந்தையும் வீட்டில் இருக்கிறார். முருகப் பெருமான்போலச் சினமும் பெருவலிமையும் கொண்ட அவர் வீட்டில் இருக்கும்போது அவர் அறியாமல் யாரும் வெளியே செல்ல இயலுமா? தலைவி வெளியே செல்ல அஞ்ச மாட்டாளோ?"

(ஒரு பக்கத்தில் ஒதுங்கி நிற்கும் தலைவன் கேட்கும்படி இப்படிச் செவிலியிடம் தோழி கூறினாள்.)

கருத்து

தலைவன், தலைவி களவொழுக்கத்தினைத் தாய் அறிந்தாள்.

விளக்கம்

"அன்னையே! நான் சொல்வதை விருப்புடன் கேள். 'மழை அடங்கிய, இருள் நிறைந்த நள்ளிருளில், காதணி மின்னல்போல் ஒளிவிட, பின்னிவிட்ட நெளிந்த கூந்தலுடன் பரணிலிருந்து இவள் இறங்குவதைக் கண்டேன்' என்று இவளைத் துன்புறுத் தாதே! நம் தோட்டத்திற்கு அருகிலுள்ள மலையில் ஒரு தெய்வம் ஒளி வீசும் பூ அணிந்து, தான் விரும்பும் உருவில் வரும். நனவு நிகழ்ச்சிபோலக் கனவு நம்மை மயக்குதலும் உண்டு. தலைவியோ, விளக்கில்லாமல் தனியே இருக்கவே அஞ்சுவாள்; கடம்ப மரத்தில் உள்ள கூகை குழறினாலும் மனம் நடுங்கிப் பாதுகாப்புத் தேடுவாள். எல்லாவற்றுக்கும் மேலாய்த் தந்தையும் வீட்டில் இருக்கிறார். இந்நிலையில் வீட்டை விட்டு வெளிச் செல்ல அஞ்சுவாள் அன்றோ?" என்று செவிலியிடம் கூறுவதன்மூலம் தோழி, களவொழுக்கத்தினைத் தாயறிந்தாள் என்பதைத் தலைவனுக்கு உணர்த்தினாள்.

சொற்பொருள்

1. உரும் - இடி; உரறுதல் - முழங்குதல்; கருவிய - மின்னல் முதலான தொகுதியைக் கொண்ட.

2. பெயல் ஆன்று அவிந்த - மழை பெய்து அடங்கிய; தூங்கு இருள் - செறிந்த இருள்.
3. மின்னு - மின்னல்; குழை - காதணி; இமைப்ப - ஒளி விட.
4. கிளைஇய - பிரிந்து அகன்ற.
5. ஒல்குதல் - தளர்தல்.
6. மிடை - பரண்; ஊர்பு இழிய - ஏறி இறங்கி; இவள் - தலைவி.
7. அலையல் - துன்புறுத்தாதே; படப்பை - தோட்டம்.
8. சூர் - தெய்வம்.
9. அணங்குதல் - வருத்துதல்.
10. வாயே போல - உண்மையே போல.
11. மருட்டல் - மயக்குதல்.
12. சுடர் - விளக்கு; பனிக்கும் - நடுங்குவாள்; வெருவர - அச்சம் தோன்ற.
13. மராஅம் - வெண் கடப்ப மரம்; கூகை - கோட்டான்.
14. அரணம் - பாதுகாப்பு.
15. கணம் - கூட்டம்; தொடர் விட்டு - அவிழ்த்துவிட்டு.
16. சீற்றம் - சினம்; கடுந்திறல் - பெரும் வலிமை.
17. இல்லன் - வீட்டில் இருப்பவன்.
18. இது செயலே - இச்செயலைச் செய்வதற்கு.

தோழி கூற்று

அகநானூறு 358 **மதுரை மருதனிளநாகனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

பகலே சிறைப்புறமாகத் தோழி தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தில் ஒருநாள் தலைவன் பகற்குறியில் ஓரிடத்தில் நிற்க, அதனை அறிந்த தோழி, அவன் வருகையை உணராததுபோல, தலைவியின் பிரிவாற்றாமையை அவனுக்கு உணர்த்தும் வகையில், அவன் கேட்கும் வகையில் தலைவியிடம் கூறியது.

நீலத்து அன்ன நிறம்கிளர் எருத்தின்,
காமர் பீலி ஆய்மயில் தோகை
இன்தீம் குரல துவன்றி, மென்சீர்
ஆடுதகை எழில்நலம் கடுப்பக் கூடி,
கண்நேர் இதழ, தண்நறுங் குவளைக்,
குறுந்தொடர் அடைச்சிய நறும்பல் கூழை
நீடுநீர் நெடுஞ்சுனை ஆயமொடு ஆடாய்,
உயங்கிய மனத்தை யாகி, புலம்புகொண்டு,
இன்னை ஆகிய நின்நிறம் நோக்கி,
அன்னை வினவினள் ஆயின், அன்னோ!
என்என உரைக்கோ யானே– துன்னிய
பெருவரை இழிதரு நெடுவெள் அருவி,
ஓடை யானை உயர்மிசை எடுத்த
ஆடுகொடி கடுப்பத் தோன்றும்
கோடுஉயர் வெற்பன் உறீஇய நோயே?

தெளிவுரை

தலைவியே! நீலமணி போன்ற நிறமுள்ள கழுத்தினையும், அழகிய தோகையினையும் கொண்ட மயில்கள் இனிய குரல் கொண்டனவாய் மெல்லிய தாளத்திற்கு ஏற்ப ஆடும் தன்மை கொண்டுள்ளன. அவை ஆடும் சிறப்பினைப் போல், நீயும் கண் போலும் இதழ்களைக் கொண்ட குவளை மாலையைக் கூந்தலில் செருகிக்கொண்டு நறுமணத்துடன் உன் கூந்தல் பரக்க நீர் கொண்ட ஆழமான நீண்ட சுனையில் ஆடியிருப்பாய் என்று கருதினேன். ஆனால், நீ நீராடாதே தலைவனைப் பிரிந்து தனிமையில் அழகிழந்து வாடியிருக்கிறாய். அவ்வருத்தம் காரணமாய் உன் மேனியும் வேறுபாடு கொண்டுள்ளது.

நெருக்கமாயுள்ள பெரிய மலையிலிருந்து வழியும் நீண்ட வெண்ணிற அருவி, நெற்றிப்பட்டம் கொண்ட யானையின்மேல் தூக்கிக் கட்டப்பட்டு அசைகின்ற துகிற்கொடியைப் போலத் தோன்றும் உயர்ந்த மலைநாட்டிற்குரியவன், நம் தலைவன். அவனால் உன் மேனியில் ஏற்பட்டுள்ள வேறுபாடு எதனால்

நிகழ்ந்தது என்று அன்னை கேட்டால், நான் என்னென்று சொல்வேன்?

கருத்து

"தலைவி! நீ வருந்திய மனத்தளாய் மேனி வேறுபாட்டுடன் விளங்குவது கண்டு, 'இஃது எதனால் ஏற்பட்டது' என்று நம் தாய் கேட்டால், எதனால் நிகழ்ந்தது என்று நான் சொல்வேன்?" என்கிறாள், தோழி.

குறிப்பு

தலைவியின் வருத்தமும் அச்சமும் உணர்ந்து தலைவன் திருமண முயற்சி மேற்கொள்வான் என்பது தோழி கூற்றின் பயன்.

சொற்பொருள்

1. நீலம் - நீலமணி; கிளர் - விளங்கும்; எருத்து - கழுத்து.
2. காமர் - அழகிய, விருப்பம்; ஆய்மயில் - அழகிய மயில்.
3. இன்தீம் - மிக்க இனிய; துவன்றி - நெருங்கி; மென்சீர் - மெல்லிய தாள அறுதி.
4. ஆடுதகை - ஆடும் தகுதியான அழகு.
5. கண் நேர் இதழ - கண்ணையொத்த இதழ்களைக் கொண்ட.
6. குறுந்தொடர் - குறுகிய மாலைகள்; அடைச்சிய - செருகிய; கூழை - கூந்தல்.
7. நீடுநீர் - ஆழமான நீரினைக் கொண்ட.
8. உயங்கிய - வருந்திய; புலம்பு - தனிமை.
9. இன்னை ஆகிய - இவ்வாறு ஆகிய; நின் நிறம் - உன் மேனி வேறுபாடு.
11. துன்னிய - நெருங்கிய.
13. ஓடை - யானையின் நெற்றிப்பட்டம்.
15. உறீஇய - உண்டாக்கிய.

தோழி கூற்று

குறுந்தொகை 292 **பரணர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி, இரவுக்குறிக்கண் சிறைப்புறமாகக் காப்பு மிகுதி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் இரவுக்குறிக்கண் வந்து சிறைப்புறத்தானாக, அதனையறிந்த தோழி தலைவியிடம், "நம் தாய் ஒருநாள் தலைவன் வந்ததை அறிந்தாள்; அறிந்த அன்றுமுதல் முன்னையிலும் மிகக் காவலாய் இருக்கிறாள்" என்று கூறி, தலைவன் விரைந்து வந்து மணத்தலே நன்று என்பதைப் புலப் படுத்தியது.

மண்ணிய சென்ற ஒள்நுதல் அரிவை
புனல்தரு பசுங்காய் தின்றதன் தப்பற்கு
ஒன்பதிற்று ஒன்பது களிற்றொடு அவள்நிறை
பொன்செய் பாவை கொடுப்பவும், கொள்ளான்,
பெண்கொலை புரிந்த நன்னன் போல,
வரையா நிரையத்துச் செலீஇயரோ, அன்னை!
ஒருநாள்,
நகைமுக விருந்தினன் வந்தென,
பகைமுக ஊரில் துஞ்சலோ இலளே.

தெளிவுரை

ஒரு நாள், மலர்ந்த முகத்துடன் விருந்தினனாய்த் தலைவன் நம் வீட்டிற்கு வந்தான். அவனைக் கண்ட அன்னை, பகைவரது போர் முனையில் இருக்கும் ஊரினரைப் போலக் கலங்கித் துயில் ஒழிந்தாள். நீராடச் சென்ற ஒளிபொருந்திய பெண்ணொருத்தி ஆற்றுநீரில் அடித்து வரப்பட்ட பசிய மாங்காய் ஒன்றைத் தின்று விட்டாள். அந்தக் குற்றத்திற்கு ஈடாய் அப்பெண்ணின் தந்தை எண்பத்தொரு ஆண்யானைகளையும் அப்பெண்ணின் எடைக்கு நிகரான பொன்னால் செய்யப்பட்ட பாவையையும் கொடுப்ப தாய்க் கூறியும் அவற்றை ஏற்காது அப்பெண்ணைக் கொலை புரிந்த அந்த நன்னனைப் போல, நம் அன்னையும் நீங்குதலில்லா நரகத்தில் சென்று துன்புறட்டும்!

கருத்து

'தலைவன் வருவதை அறிந்து அன்னை விழிப்புடன் நம்மைக் காக்கிறாள்; காதலனுடன் சேரவிடாது தலைவியைத் தடுக்கும் அவ்வன்னை, நரகத்தில் சேரட்டும்' எனத் தோழி தலைவன் கேட்கும்வண்ணம் தலைவியிடம் கூறுகிறாள்.

விளக்கம்

நன்னன் சிற்றரசனாவான். ஆற்றங்கரையிலிருந்த அவன் தோட்டத்தில் அரிதின் வளர்த்த மாமரத்தின் காயொன்று அவ்வாற்றிலே வீழ்ந்து மிதந்து வந்தது. ஆற்றுக்கு நீராடச் சென்ற பெண் ஒருத்தி அதனை உண்ணக்கூடாது என அறியாது எடுத்து உண்டனள். அதைக் கண்ட காவலர் அவளை நன்னன்முன் கொண்டு நிறுத்தினர். அவன் அவளுக்குக் கொலைத்தண்டனை விதித்தான். அதனை அறிந்த அவள் தந்தை, அவளது நிறை யளவுக்குப் பொன்னால் செய்த பாவையையும், எண்பத்தொரு களிற்றினையும் தண்டனைக்கு ஈடாய்க் கொடுப்பதாய்க் கூறியும் நன்னன் உடன்படாமல் அப்பெண்ணைக் கொல்வித்தான்.

சொற்பொருள்

1. மண்ணிய - நீராடும்பொருட்டு; ஒள்நுதல் - ஒளி வீசும் நெற்றி; அரிவை - பெண்.
2. புனல் தரு - நீரிலே மிதந்து வந்த; பசுங்காய் - பசுமையான மாங்காய்; தப்பற்கு - குற்றத்திற்கு.
3. ஒன்பதிற்று ஒன்பது - எண்பத்து ஒன்று; களிறு - ஆண்யானை.
4. கொடுப்பவும் - கொடுப்பதாய்க் கூறியும் (அதனை); கொள்ளான் - ஏற்றுக்கொள்ளாதவனாய்.
5. நன்னன் - சிற்றரசருள் ஒருவன்.
6. வரையா - நீங்குதல் இல்லாத; நிரையம் - நரகம்; செலீஇயர் - செல்லட்டும்.
7. நகைமுக விருந்தினன் - சிரித்த முகத்துடன் விருந்தினனாய் வந்த தலைவன்.
8. பகைமுக - பகைவரது போர்முனையில் இருக்கும்; ஊரின் - ஊரில் உள்ளவர்களைப்போல; துஞ்சல் - தூங்குதல்.

தோழி கூற்று

நற்றிணை 132 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : நெய்தல்

கூற்று

காப்பு மிகுதிக்கண் ஆற்றாளாகிய தலைமகளுக்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவி இல்லக்காவலில் இருப்பதால் அவள் தலைவனைச் சந்திக்க இயலாததாயிற்று; அதனால் ஆற்றாமை மிகுதியாயிற்று. அவள் துயரத்தை மாற்றக் கருதிய தோழி கூறியது.

பேரூர் துஞ்சும்; யாரும் இல்லை;
திருந்துவாய்ச் சுறவம் நீர்கான்று ஒய்யெனப்
பெருந்தெரு உதிர்தரு பெயல்உறு தண்வளி
போர்ப்புஅமை கதவப் புரைதொறும் தூவக்
கூர்எயிற்று எகினம் நடுங்கும் நன்னகர்ப்
பயில்படை நிவந்த பல்பூஞ் சேக்கை
அயலும் மாண்சிறை யதுவே; அதன்தலைக்
காப்புடை வாயில் போற்று,ஓ என்னும்
யாமம் கொள்பவர் நெடுநா ஒண்மணி
ஒன்றுஎறி பாணியின் இரட்டும்
இன்றுகொல், அளியேன் பொன்றும் நாளே.

தெளிவுரை

"இப்பேரூரில் உள்ள யாவரும் துயில்கின்றனர். நமது களவொழுக்கத்திற்கு இடையூறு செய்வார் எவரும் இலர். மழை பொழிந்தமையால் திருத்திய மனைக்கூரையின்மேல் சுறாமீன் வாய்போல் செய்தமைத்த தூம்பின்வழி நீர் சொரிந்து பெரிய தெருவிடமெங்கும் பரந்து ஓடியது. மழையுடன் குளிர்ச்சி பொருந்திய காற்றும் சேர்ந்துகொண்டு கதவுகளின் பொருத்து வாய் வழியாய் நீரைத் தூவுகிறது. அத்தூறல் படுவதால் கூரிய பற்களைக் கொண்ட காவல்நாய்களும் நடுங்கும். இத்தகைய இராப்பொழுதில், நமது நல்ல மாளிகையிடத்தில் துயிலுவதற்காக அமைக்கப்பட்ட பலவடுக்கு மலர்ப்படுக்கையின்

பக்கத்திலும் மற்ற இடங்களிலும் நமக்குக் காவலாய்ப் பலர் நிற்கின்றனர். அதற்கும் மேலாய் 'முன்புற, பின்புற வாயில்களைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள்' என்று கூறி யாமந்தோறும் காவல் செய்பவர் மணியை ஒலித்துக்கொண்டு செல்கின்றனர். இரங்கத் தக்கவளான நான் இறந்துபடும் நாளும் இன்றுதானோ?" (தலைவியின் கூற்றாய்த் தோழி இவ்வாறு சொல்கிறாள்.)

கருத்து

படுக்கை அறையிலும் நமக்குக் காவல் மிகுதியிருப்பதால் தலைவனைக் காண இயலாது போயிற்று.

விளக்கம்

"ஊரவர் அனைவரும் இனிது உறங்குகின்றனர். நமது களவொழுக்கத்துக்கு இடையூறு செய்பவரும் எவருமிலர். காற்றும் மழையும் கலந்து பெய்தலால் குளிரால் நடுங்கி நாய்களும் வாயடங்கி ஒடுங்கிக் கிடக்கின்றன. தலைவனைச் சந்திக்கச் சரியான வாய்ப்பு என எண்ணி மகிழ்ந்திருந்தேன். ஆனால், படுக்கையறையின் பக்கமெலாம் செறிந்த காவல் செய்யப்பட்டுள்ளது. மேலும், நடு யாமத்தில் காவலர் வருகை தந்து, காவலில் கண்காணிப்புடன் இருக்குமாறு மணி யொலித்துச் செல்கின்றனர். ஆகவே, நான் குறியிடம் சென்று தலைவனது தண்ணளியைப் பெறுதல் அரிதாகிவிட்டது. அதனால் என் நெஞ்சம் ஆற்றாது மெலிகின்றது. ஆதலால், நான் இறந்துபடும் நாள் இன்றுபோலும்; நான் என் செய்வேன்" எனத் தலைவியின் கூற்றுப்போலத் தோழி பேசுகிறாள்.

குறிப்பு

தோழியின் பேச்சைக் கேட்ட தலைவி, அவள் கண்ணீரைத் துடைத்து, 'நீ இனி வருந்தாதே! இன்று தலைவரது கூட்டம் பெறேனாயினும் ஆற்றி யிருப்பேன்' எனத் தோழிக்குக் கூறினாள்.

சொற்பொருள்

1. பேரூர் - பெரிய ஊர்; துஞ்சும் - உறங்கும்.
2. சுறவம் - சுறா மீன் (வாய் போன்றமைந்த தூம்பு); (தூம்பு - நீர் விழும் குழாய்); கான்று - சொரிந்து; ஒய்யென - விரைவாய்.

3. உதிர்தரு - பரந்து ஓடுமாறு; பெயல் - மழை; தண்வளி - குளிர்ந்த காற்று.
4. போர்ப்பு அமை கதவம் - ஒன்றோடொன்று பொருந்த நிறுத்தப்பட்ட இரட்டைக்கதவு; புரை - பொருத்துவாய்.
5. எகினம் - நாய்; நன்னகர் - நல்ல வீடு.
6. பயில்படை - கிடந்து உறங்குமாறு பண்படுத்தப்பட்ட; நிவந்த - உயர்ந்த; சேக்கை - படுக்கை.
7. மாண் சிறையது - பெரிய காப்புடையது; அதன் தலை - அதற்கும் மேலாய்.
8. போற்றுஓ - காத்துக்கொள்வீர்.
9. ஒண்மணி - ஒள்ளிய மணி.
10. ஒன்று எறி பாணியின் இரட்டும் - ஒற்றுமைப்பட்ட தாளம்போல இசைக்கும்.
11. அளியேன் - இரங்கத்தக்கவள்; பொன்றும் நாள் - இறக்கும் நாள்.

தலைவி கூற்று

குறுந்தொகை 161 **நக்கீரர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறிக்கண் வந்த தலைமகனைக் காப்புமிகுதியான் எதிர்ப்படப் பெறாத தலைமகள், பிற்றைஞான்று தலைமகன் சிறைப்புறத்தானாக, தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது. (காப்பு மிகுதி - பெற்றோர் வெளிவிடாமல் காத்தல்.)

கூற்று விளக்கம்

முதல் நாள் இரவு தலைவனைக் குறியிடத்தில் சந்திக்கவியலாத தலைவி, அடுத்த நாள் அவன் வந்தபோது, அவன் கேட்கும்படியாக, முதல் நாள் தான் சந்திக்க இயலாமற்போனதற்கான காரணத்தைத் தோழியிடம் கூறியது.

பொழுதும் எல்லின்று; பெயலும் ஓவாது,
கழுதுகண் பனிப்ப வீசும்; அதன்தலைப்
புலிப்பல் தாலிப் புதல்வற் புல்லி,
'அன்னா!' என்னும், அன்னையும், அன்னோ!

என்மலைந் தனன்கொல் தானே தன்மலை
ஆரம் நாறும் மார்பினன்
மாரி யானையின் வந்துநின் றனனே!

தெளிவுரை

“பொழுதும் ஒளி குறைந்து மங்கியது; மழையும் சிறிதும் விடாமல் பேய்களும் கண்ணிமைத்து நடுங்கும்படி ஓங்கிப் பெய்தது; அதற்கு மேலாய், புலிப்பல்லால் செய்யப்பட்ட தாலியை அணிந்த மகனைத் தழுவிக்கொண்டு, என் தாயும் ‘அம்மா! தூங்கு’ என்று சொல்லிக்கொண்டிருந்தாள். அவ்வேளை, தலைவன் தன் மலையிற்பிறந்த சந்தனம் மணக்கும் மார்பினனாய், மழையில் நனைந்த யானையைப் போல நம் வீட்டருகே வந்து நின்றனன். (என்னால் எழுந்து சென்று அவனைச் சந்திக்க இயலாததாயிற்று.) தலைவன் என்னைக் காணாது எவ்வாறு திகைத்தனனோ?” எனத் தலைவி, தோழியிடம் கூறினாள்.

கருத்து

நேற்று இரவு கடுமையான மழை பெய்தது; அன்னையும் விழித்திருந்தாள். ஆதலால், தலைவனைச் சந்திக்க இயாலாததாகிவிட்டது.

விளக்கம்

இரவு நேரத்தில் வழக்கம்போல் சந்திக்கும் இடத்திற்குத் தலைவன் வந்தான். அவன் வந்ததைத் தலைவி அறிவாள். அறிந்தும் அவள் சென்று அவனைக் காண இயலாததாயிற்று; காரணம், குழந்தை அழுதமையால், தலைவிக்குத் தாய் உறங்காதிருந்தாள். மறுநாள் இரவில் தலைவன் வழக்கம்போல் வந்து நின்றபோது, அவன் கேட்குமாறு, தலைவி தன் தோழியிடம், முதல் நாள் தலைவனைச் சந்திக்க இயலாததற்கான காரணத்தைக் கூறினாள்.

குறிப்பு

‘தாலி’ என்பது குழந்தைகள் கழுத்தில் அணியும் ஓர் அணி. புலிப்பல் கோத்து அவ்வணி செய்யப்பட்டதால் அது ‘புலிப்பல் தாலி’ என்று

வழங்கப்பட்டது. பின்னாளில்தான், திருமணத்தின்போது மணமகன் மணமகளின் கழுத்தில் அணிவிப்பது 'தாலி' என்னும் பெயருடன் வழங்கலாயிற்று. திருமணத்தின்போது தாலி கட்டும் வழக்கம் சங்க காலத்தில் இல்லை.

சொற்பொருள்

1. எல் இன்று - ஒளியற்றதாயிற்று; பெயல் - மழை; ஓவாது - இடைவிடாமல்.
2. கழுது - பேய்; கண் பனிப்ப - கண் இமைத்து நடுங்கும்படி; வீசும் - ஓங்கிப் பெய்யும்; அதன் தலை - அதற்கும் மேலாய்.
3. புலிப்பல் தாலி - புலிப்பல் கோத்துச் செய்யப்பெற்றுக் குழந்தைகள் கழுத்தில் அணிவிக்கப்படும் ஓர் அணி; புல்லி - தழுவி.
4. அன்னா - அம்மா; அன்னோ - ஐயோ.
5. என் - எவ்வாறு; மலைந்தனன் - திகைத்தனனோ?; தன் மலை - தன் மலையில் விளையும்.
6. ஆரம் - சந்தனம்; நாறும் - மணக்கும்.
7. மாரி யானையின் - மழையில் நனைந்த யானைபோல.

தோழி கூற்று

நற்றிணை 11 **உலோச்சனார்**

திணை : நெய்தல்

கூற்று

காப்புமிகுதிக்கண் இடையீடுபட்டு ஆற்றாளாய தலைமகட்குத் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

காவல் மிகுதியினால் தலைவனைக் கூடப்பெறாமல் ஆற்றாது வருந்திய தலைவியிடம் தோழி, 'நீ வருந்தாதே! நிலவு விரிந்ததனால் அவர் இப்போதே வருவார்' என, காவல் மிகுதியால் இரவுக்குறி பிறழ்ந்ததையும், அதனாலே தலைவி படும் துன்பத்தையும்பற்றிச் சிறைப்புறத்திருந்த தலைவன் கேட்குமாறு கூறியது.

பெய்யாது வைகிய கோதை போல
மெய்சா யினைஅவர் செய்குறி பிழைப்ப;
உள்ளி நொதுமலர் நேர்புரை தெள்ளிதின்
வாரார் என்னும் புலவி உட்கொளல்
ஒழிக மாளநின் நெஞ்சத் தானே;
புணரி பொருத பூமணல் அடைகரை,
ஆழி மருங்கின் அலவன் ஓம்பி,
வலவன் வள்புஆய்ந்து ஊர,
நிலவுவிரிந் தன்றால், கான லானே.

தெளிவுரை

தலைவியே! காதலர் செய்த குறியீடு இடையீடுபட்டுத் தவறி விட்டமையால் சூடாமல் வறிதே எறியப்பட்ட பூமாலைபோல உடல் வாடியுள்ளாய். அயலார் கூறும் பழிச்சொல்லால் இனித் தலைவர் வரமாட்டார் எனும் மனவேறுபாடு கொள்ளாதே!

அலை வந்து மோதும் மென்மையான இளமணலை அடுத் திருக்கும் கடற்கரையில், தலைவன் ஊர்ந்துவரும் தேர்ச்சக்கரத் தில் பட்டு நண்டுகள் செத்துவிடாதவாறு பாகன் வாரைப் பிடித்து ஆராய்ந்து செலுத்தி வருவதற்கு ஏதுவாய் நிலவொளி யும் பரவியுள்ளது; அதனையும் பார்!

கருத்து

ஊரவர் கூறும் அலருரை கேட்டுத் தலைவன் வாரான் என வருந்தி மெலிகின்றாய்; வருந்தாதே! அவர் வருவார்.

குறிப்பு

'நீ இரவுக்குறியிடத்திற்குத் தேரூர்ந்து வந்தாலும், தாய் முதலியோர் அறியாவண்ணம் நாங்கள் அக்குறியிடம் சேர்தற்கு இடையூறாய் நிலவு வெளிப்பட்டுள்ளமையை அறிக' எனத் தலைவனுக்குத் தோழி குறிப்பால் உணர்த்தினாள்.

இறைச்சி

நண்டுகட்கு ஊறு ஏற்படாதவாறு பாகன் தேர் செலுத்து கிறான். இத்தொடர்மூலம், பழிச்சொல்லால் வருந்தாவண்ணம்

தலைவன் தலைவியை வரைந்துகொள்வான் என்னும் இறைச்சிப் பொருள் வெளிப்படுகிறது.

சொற்பொருள்

1. பெய்யாது வைகிய - கூந்தலில் சூடாமல் வறிதே எறியப்பட்ட; கோதை - பூமாலை.
2. மெய் - உடல்; சாயினை - வாடினை; பிழைப்ப - தவறிவிட.
3. உள்ளி - நினைத்து; நொதுமலர் - அயலார்; நேர்புரை - நேர்பு உரை - எடுத்துரைக்கும் பழிமொழியை; தெள்ளிதின் - தெளிவாய்.
4. புலவி - வெறுப்பு, வேறுபாடு.

4-5. உட்கொளல் ஒழிக - கொள்வதை நீக்கு.

6. புணரி - அலை; பொருத - அலைக்கழிக்கப்பட்ட; பூ மணல் - மென்மையான மணல்; அடை கரை - கடலையடுத்த கரைப்பகுதி.
7. ஆழி - கடல்; மருங்கு - அருகே; அலவன் - நண்டு; ஓம்பி - பாதுகாத்து.
8. வலவன் - தேர்ப்பாகன்; வள்பு - (குதிரையின்) வார்; ஆய்ந்து - ஆராய்ந்து; ஊர - செலுத்துதற்கேற்ப.
9. நிலவு விரிந்தது - நிலவொளி பரவியுள்ளது.

தலைவி கூற்று

கலித்தொகை 123 **நல்லந்துவனார்**

திணை : நெய்தல்

கூற்று

காப்பு மிகுதிக்கண் ஆற்றாத தலைமகள், தலைமகன்பாற் சென்ற நெஞ்சினை நோக்கி அழிந்து கூறியது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தில் தலைவி தலைவனைச் சந்திக்க இயலாதவாறு காவல் மிகுதியாயிற்று. அப்பொழுது தலைவி அவனை நினைந்து வருந்தித் தன் நெஞ்சோடு மொழிந்தது.

தரவு

கருங்கோட்டு நறும்புன்னை மலர்சினை மிசைதொறும்
சுரும்புஆர்க்கும் குரலினோடு, இருந்தும்பி இயைபுஊத,
ஒருங்குடன் இம்மென இமிர்தலின், பாடலோடு

அரும்பொருள் மரபின்மால் யாழ்கேளாக் கிடந்தான்போல்
பெருங்கடல் துயில்கொள்ளும் வண்டுஇமிர் நறுங்கானல்—

தாழிசை

காணாமை இருள்பரப்பிக் கையற்ற கங்குலான்,
மாணாநோய் செய்தான்கண் சென்றாய்;மற்று அவனைநீ
காணவும் பெற்றாயோ? காணாயோ? – மடநெஞ்சே!

கொல்ஏற்றுச் சுறவினம் கடிகொண்ட மருள்மாலை,
அல்லல்நோய் செய்தான்கண் சென்றாய்;மற்று அவனைநீ
புல்லவும் பெற்றாயோ? புல்லாயோ? – மடநெஞ்சே!

வெறிகொண்ட புள்ளினம் வதிசேரும் பொழுதினான்,
செறிவளை நெகிழ்த்தான்கண் சென்றாய்;மற்று அவனைநீ
அறியவும் பெற்றாயோ? அறியாயோ? – மடநெஞ்சே!

எனவாங்கு—

சுரிதகம்

எல்லையும் இரவும் துயில்துறந்து, பல்லூழ்
அரும்படர் அவலநோய் செய்தான்கண் பெறல்நசைஇ,
இருங்கழி ஓதம்போல் தடுமாறி,
வருந்தினை – அளியஎன் மடங்கெழு நெஞ்சே!

தெளிவுரை

"அறியாமை கொண்ட என் நெஞ்சமே! கருமையான பெரிய கிளைகளைக் கொண்ட புன்னை மரத்தில் மலர்ந்து விளங்கும் கொம்புதோறும் சுரும்புகளும் தும்பிகளும் ஒரே சுருதியில் 'இம்' என ஒலிக்கின்றன. அந்த வண்டினங்களின் ஒலி யாழிசைபோல் இருந்தது. இக்காட்சி, சிந்தைக்கும் சொல்லுக்கும் அரிய திருமால், பாடலோடு யாழிசை கேட்டுப் பள்ளி கொண்டிருப்பதுபோல, அவ்விசையைக் கேட்டு எப்பொழுதும் ஒலித்துக்கொண் டிருக்கும் பெரிய கடலும் ஒலியடங்கி உறங்குவது போன்றி ருந்தது.

"அறிவில்லாத என் நெஞ்சமே! வண்டுகள் ஒலிக்கும் அத்தகைய கடற்கரைச்சோலையிடத்து மக்கள் எதையும் காண

இயலாதவாறு, இரவு இருளைப் பரப்பி உயிர்கள் யாவும் செயலற்றுவிடச் செய்துள்ளதை நீ அறியாயா? இந்த நேரத்தில் எந்த மருந்தாலும் தீர்க்கவியலாத என் காமநோயைத் தந்த தலைவனைத் தேடிச் சென்றுள்ளாய். நீ அவனைக் காணப் பெற்றாயா, காண இயலவில்லையா?

"அறிவில்லாத என் நெஞ்சமே! கொல்லும் தன்மை வாய்ந்த ஆண் சுறாமீன்கள் கடற்கரையெங்கும் நிறைந்து, எவரும் அங்கே இயங்க இயலாதவாறு தடுக்கும் என்பதை நீ அறியாயா? மயக்கும் மாலை நேரத்தில் தீராத வருத்தம் தரும் காமநோயைத் தந்த தலைவனிடம் நீ சென்றாய். நீ அவனைத் தழுவினாயா? தழுவ இயலவில்லையா?

"அறிவில்லாத என் நெஞ்சமே! ஓர் ஒழுங்கு கொண்டு பறக்கும் பறவையினம் தத்தம் கூடுகளை அடையும் மாலை நேரத்தில் என்னுடைய வளைகள் கழலுமாறு காமநோயைத் தந்த தலைவனிடத்து நீ சென்றாய். நீ அவன் மனத்தினை அறியப் பெற்றாயா? அறிய இயலவில்லையா?

"இரங்கத்தக்க அறியாமை கொண்ட என் நெஞ்சமே! இவ்வாறு கவலையும், துன்பமும், காம மிகுதியும் தந்த தலைவனிடத்து நீ கொண்ட மிகுந்த விருப்பத்தால் இரவும் பகலும் உறங்காமல் எண்ணி எண்ணி வருந்தி, உப்பங்கழியில் கடல்நீர் வந்து சேர்வதும் பின்பு திரும்புவதுமாய் இருப்பது போல், பலமுறை மாறி மாறிச் சென்று அவன் அருள் பெறலாம் என்று எண்ணி வருந்துகின்றாய்!

"அலைந்து வருந்தும் துன்பத்தையன்றி, ஏ நெஞ்சமே! நீ வேறெதைப் பெற்றாய்? நீ மிகவும் இரங்கத்தக்காய்" என்று தலைவி தன் நெஞ்சை நோக்கிக் கூறினாள்.

கருத்து

'தலைவனை மறக்கவும் இயலவில்லை; இரவில் உறக்கம் கொள்ளவும் இயலவில்லை; அவனைக் காண என் நெஞ்சத்தாலும் இயலவில்லை' என்று காப்புமிகுதிக்கண் ஆற்றாத தலைவி வருந்திக் கூறுகிறாள்.

விளக்கம்

கடற்கரைக்குப் பக்கமாய் அமைந்த தோட்டப்பகுதியைக் கடற்கானல் என்பர்; அப்பகுதியில் புன்னை மரங்கள் பூத்துக் குலுங்கின. அப்பகுதியில் கன்னி ஒருத்தி நெய்தல் நிலத் தலைவனைக் காதலித்து மனத்தைப் பறி கொடுத்தாள். மீண்டும் அவ்விடம் சென்று, அவனைக் கண்டு மகிழ இயலாதவாறு அவள் பெற்றோர் அவளைப் புறம் செல்ல அனுமதிக்காமல் காவல் செய்தனர். எனினும், அவளால் அவனை மறக்க இயல வில்லை; இரவில் உறக்கம் கொள்ளவும் இயலவில்லை. அவள் நெஞ்சம் அவனையே சுற்றிக்கொண்டிருந்தது. உறக்கம் கொள்ள இயலாத நிலையில் வருந்திக்கொண்டிருந்த அவள், தலைவனைத் தன் நெஞ்சம் தேடி அலைவதாகவும், அஃது அவனைத் தழுவ முனைந்ததாகவும், அவனைக் காண அந்நெஞ்சத்தாலும் இயல வில்லை என்றும் கூறி அவள் மயங்கும் நிலையை எடுத்துரைக் கிறது, இப்பாடல்.

குறிப்பு

புன்னை மலர்கள் மலரும் சமயம் பார்த்து வண்டுகள் தேனுண்டு களிப்பதுபோலத் தலைவனிடம் தான் இன்பம் நுகர இயலாதிருப்பதையும், பாடலும் இசையும் கேட்டுத் திருமால் உறங்குவதுபோல, தலைவனோடு கலந்து தானும் உறங்க இயலவில்லையே என்றும் தலைவி வருந்துகிறாள்.

சொற்பொருள்

1. கோடு - கொம்பு; மலர்சினை - மலர்ந்து விளங்கும் கொம்பு.
2. சுரும்பு, தும்பி - வண்டினங்கள்; ஆர்க்கும் - ஒலிக்கும்; இயைபு ஊத - ஒத்து இசைக்க.
3. இம்மென - 'இம்' என்னும் ஒலியுடன்; இமிர்தலின் - ஒலித்தலின்.
4. மால் - திருமால்; யாழ் கேளா - யாழ் இசை கேட்டு.
6. கையறுதல் - செயலற்று விடுதல்; கங்குல் - இரவு.
7. மாணா நோய் - பெருமையற்ற (பொறுக்கவியலாத) காம நோய்.
8. மடநெஞ்சே - அறிவில்லாத நெஞ்சமே!
9. ஏறு - ஆண்; சுறவு - சுறாமீன்; கடி - காவல்; மருள் - மயக்கும்.
10. அல்லல் நோய் - துன்பம் தரும் காமநோய்.
11. புல்லுதல் - தழுவுதல்.

12. வெறி - ஒழுங்கு; வதி - தங்குமிடம் (கூடு).
13. செறி - இறுகிய; நெகிழ்த்தான் - கழன்றோடச் செய்தவன்.
14. அறியவும் - மனத்தினை அறியவும்.
16. எல்லை - பகல்; துயில் துறந்து - தூக்கம் மறந்து; பல்லூழ் - பல முறை.
17. படர் - துன்பம்; அவலநோய் - துன்பம் தரும் காமநோய்; நசைஇ - விரும்பி.
18. இருங்கழி - கரிய உப்பங்கழி; ஓதம் - அலை.
19. அளிய - இரங்கத்தக்கது.

தலைவி கூற்று

அகநானூறு 252 **நக்கண்ணையார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லுவாளாய்த் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியை மணந்துகொள்ளும் கருத்தில்லாத தலைவன் களவொழுக்கத்தையே விரும்பி ஒழுகினான்; ஒருநாள் இரவுக்குறியில் வந்து நின்றான். அவன் வருகையை அறியாதவள் போன்று, அவனுக்குக் கேட்கும்படி காவல் மிகுதியையும், அன்னை அறிந்ததையும் புலப்படுத்தித் தலைவி, தோழியிடம் கூறியது.

இடம்படுபு அறியா வலம்படு வேட்டத்து,
வாள்வரி நடுங்கப் புகல்வந்து, ஆளி
உயர்நுதல் யானைப் புகர்முகத்து ஒற்றி,
வெண்கோடு புய்க்கும் தண்கமழ் சோலைப்
பெருவரை அடுக்கத்து ஒருவேல் ஏந்தி,
தனியன் வருதல் அவனும் அஞ்சான்;
பனிவார் கண்ணேன் ஆகி, நோய்அட,
எமியேன் இருத்தலை யானும் ஆற்றேன்;
யாங்குச் செய்வாம்கொல்— தோழி! ஈங்கைத்—

துய்அவிழ் பனிமலர் உதிர வீசித்
தொழில்மழை பொழிந்த பானாள் கங்குல்,
எறிதிரைத் திவலை தூஉம் சிறுகோட்டுப்
பெருங்குளம் காவலன் போல,
அருங்கடி அன்னையும் துயில்மறந் தனளே.

தெளிவுரை

"தோழியே! புலி ஒன்று வேட்டைக்குப் புறப்பட்டது. அஃது எப்பொழுதும் விலங்குகளைத் தன் வலப்பக்கத்தில் விழும் படிதான் வீழ்த்தும். இடப்பக்கத்தில் வீழ்ந்தால் அவற்றை உண்ணாது. அந்தப் புலியும் நடுங்குமாறு ஒரு யாளி அதன்மீது பாய்ந்தது. அந்த யாளி, மேலும் ஒரு யானையின்மீது பாய்ந்து அதன் தந்தத்தைப் பறித்தது. அத்தகைய காடு உள்ள மலைச் சாரலில் வேல் ஒன்றை ஏந்தியவாறு தனியே வருவதற்குத் தலைவன் அஞ்சுவதில்லை. அவனைக் காணாது இருப்பதால் கண்ணீரோடு வருந்தித் தனியே இருத்தலை என்னாலும் பொறுத்துக் கொள்ள இயலவில்லை.

"ஈங்கைச்செடியின் குவிந்த குளிர்ச்சி பொருந்திய பூக்கள் உதிரும்படியாய் நள்ளிரவில் பெருமழை பெய்தலால் தண்ணீர் நிரம்பி, அலை வீசித் துளிகள் தெறிக்கும் வலிமையற்ற கரையைக் கொண்ட பெருங்குளத்தைக் காவல் செய்பவன்போல அன்னையும் உறக்கத்தை மறந்துவிட்டாள். இந்நிலையில் இரவு வேளையில் அவன் இங்கு வருவதுபற்றியும், அவனை இனி நாம் சந்திப்பது பற்றியும் என்ன செய்ய இயலும்?"

கருத்து

நாம் வெளியில் செல்ல இயலாதவாறு தாய் துயில் மறந்து விழிப்புடன் காவலிருக்கிறாள். இரவில் தலைவன் கொடிய வழியே வந்தாலும் என்னைக் காண இயலாது.

விளக்கம்

"தோழி! பெருமலைப்பக்கத்தில் தலைவனும் ஒற்றை வேல் ஏந்தித் தனியனாய் வருவதற்கு அஞ்சான்; நானும் காமநோய் வருத்தத்தால் தனியளாய் இருக்கவும் இயலாதுள்ளேன். பெரிய

குளத்துநீரின் அலைகள் கரைகளிலே மோதிக்கொண்டிருக்கும் மழைக்காலத்தில் கரை உடைந்துவிடாது விழிப்புடன் காத் திருக்கும் குளக்கரைக் காவலன்போலத் தாயும் துயில மறந்தாள். நாம் எவ்வாறு தலைவனைச் சந்திக்க இயலும்?" எனத் தலைவன் அறியுமாறு தோழியிடம் தலைவி கூறுகிறாள். (தலைவன் வரைந்துகொள்ளுதலே இத்துன்பங்கள் நீங்க வழியாகும்.)

சொற்பொருள்

1. இடம்படுபு அறியா - (தன்னால் கொல்லப்படுவது) தன் இடப்பக்கம் வீழ்வதை அறியாத.
2. வாள்வரி - வாள் போன்ற வரிகளைக் கொண்ட புலி; புகல்வரல் - விரும்புதல்; ஆளி - சிங்கம், புலி போன்ற ஒரு விலங்கு.
3. புகர் - புள்ளி; ஒற்றி - தாக்கி.
4. புய்க்கும் - பறித்தெடுக்கும்.
5. அடுக்கம் - பக்க மலை.
6. தனியன் - தனியனாய்.
7. பனிவார் - நீர் ஒழுகும்; நோய் அட - காம நோய் வருத்த.
8. எமியேன் இருத்தலை - தனித்து இருத்தலை.
9. ஈங்கை - நுண்ணிய முள்ளினைக் கொண்ட ஒருவகைச் செடி, இண்டஞ்செடி.
10. துய் - பூவிதழ்.
11. தொழில் மழை - பெய்யும் தொழிலைக் கொண்ட மழை.
12. திவலை - நீர்த்துளி; சிறுகோட்டு - சிறிய கரையைக் கொண்ட.
13. காவலன் - குளக்கரையைக் காவல் செய்பவன்.
14. அருங்கடி - அரிய காவல்; துயில் - தூக்கம்.

தலைவி கூற்று

குறுந்தொகை 57 **சிறைக்குடி ஆந்தையார்**

திணை : நெய்தல்

கூற்று

காப்பு மிகுதிக்கண் ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

வீட்டிலே காவல் மிகுதியாகிவிட அதனால் தலைவனைப் பிரிந்திருக்க நேர்ந்த தலைவி, தன் ஆற்றாமை மிகுதியால் தோழியிடம் கூறியது.

பூஇடைப் படினும் யாண்டுகழிந் தன்ன
நீர்உறை மகன்றில் புணர்ச்சி போலப்
பிரிவுஅரிது ஆகிய தண்டாக் காமமொடு,
உடன்உயிர் போகுக தில்ல,கடன் அறிந்து,
இருவேம் ஆகிய உலகத்து,
ஒருவேம் ஆகிய புன்மைநாம் உயற்கே.

தெளிவுரை

தோழியே! இல்லறக்கடமைகளை ஆற்றும்பொருட்டும், கூடி இன்புறற்பொருட்டுமே ஆண், பெண் என மக்கள் இரு பிரிவினராய்ப் பிறந்தனர். தலைவன் பிரிவு காரணமாய் நான் இப்போது ஒருத்தியாய் ஆகி அக்கடமைகளை ஆற்ற இயலாத பழியினின்றும் தப்புதல் வேண்டும். அதற்காக, நீரில் சேர்ந்து செல்லும்போது தங்களிடையே ஒரு பூ இடைப்பட்டு ஒரு கண நேரமே பிரிய நேர்ந்தாலும் ஆண்டுப் பல கழிந்ததுபோல வருந்துகின்ற மகன்றில் என்னும் பறவைகள் ஒன்றுபட்டு வாழ்வதுபோலத் தலைவனுடன் நீங்காத அன்புடன் ஒன்றி வாழ வேண்டும். அவன் பிரிந்தவுடன் என் உயிரும் என் உடலை விட்டு நீங்கட்டும்.

கருத்து

தலைவனைப் பிரிந்து இக்காவலிடத்தே உயிரோடு வாழ்ந்து துயரப்படுதலினும், அவனைப் பிரிந்தபோதே என் உயிரும் நீங்கியிருக்க வேண்டும்.

விளக்கம்

"நானும் என் காதலனும் மகன்றில் பறவை போல் ஒருவர்மீது மற்றவர் காதல் கொண்டுள்ளோம். எம் காதல் உணர்ச்சியைப் பிரிக்க இயலாது. ஆதலால், இப்பொழுது நான் தனித்திருந்து வருந்துவதைவிட நானும் அவனும் ஒன்றாய் இருக்கும்போது என் உயிர் போய்விட வேண்டும். இதைத்தான் நான் விரும்புகிறேன்" என்பது தலைவியின் கருத்து.

குறிப்பு

மகன்றில் என்பது நீர்வாழ் பறவை; ஆண் மகன்றிலும் பெண் மகன்றிலும் பிரியாது இருக்கும்; பிரிந்தால் உயிர் வாழா. இப்பறவைகள் போலக் காதலரிருவரும் நெஞ்சாலும் உயிராலும் ஒன்றாகவே பிறந்தனராம்; ஆயினும், இல்லறக் கடமைகளை ஆற்றுதற்பொருட்டும், கூடி இன்புறுதற் பொருட்டும் ஆண், பெண் என இருவராய்ப் பிரிந்தனராம். 'கடன் அறிந்து' எனும் தொடர் இதனைக் குறிப்பதாய்க் கொள்ளலாம்.

சொற்பொருள்

1. பூ இடைப்படினும் - பூ இடைப்பட்டு (ஒரு கணமே பிரிந்தாலும்); யாண்டு - ஆண்டு.
2. மகன்றில் - மகன்றில் பறவைகள்; புணர்ச்சி - ஒன்றுபட்ட தன்மை.
3. தண்டா - நீங்காத.
4. கடன் அறிந்து - இல்லறக்கடமைகளை அறிந்து; இருவேம் - இருவராய்.
5. ஒருவேம் ஆகிய - ஒருத்தியாய் உள்ள; புன்மை - துன்பம்; உயற்கே - தப்புவதற்கு.

தோழி கூற்று

அகநானூறு 370 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

பகலே சிறைப்புறமாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியை மணந்துகொள்வதில் கருத்தின்றிக் களவின்பமே காமுற்று ஒழுகி வந்தான்; ஒரு நாள் பகற்குறியிடத்தில் சிறைப்புறமாய்த் தலைவன் வந்து நின்றான்; அது கண்ட தோழி, அவன் வரவினை அறியாதாள் போன்று தலைவியின் பிரிவுத் துன்பத்தையும், அவள் காவலுக்கு உட்படுத்தப்படுவாள் என்பதையும் குறிப்பிற் புலப்படுத்தித் தலைவன் கேட்பத் தலைவியிடம் கூறியது.

'வளைவாய்க் கோதையர் வண்டல் தைஇ,
இளையோர் செல்ப, எல்லும் எல்லின்று;
அகல்இலைப் புன்னைப் புகர்இல் நீழல்,
பகலே எம்மொடு ஆடி, இரவே,
காயல் வேய்ந்த தேயா நல்இல்
நோயொடு வைகுதி ஆயின், நுந்தை
அருங்கடிப் படுவலும் என்றி; மற்று,'நீ
செல்லல்' என்றலும் ஆற்றாய்; செலினே,
வாழலென் என்றி, ஆயின்; ஞாழல்
வண்டுபடத் ததைந்த கண்ணி, நெய்தல்,
தண்அரும் பைந்தார் துயல்வர, அந்தி,
கடல்கெழு செல்வி கரைநின் றாங்கு
நீயே கானல் ஒழிய, யானே
வெறிகொள் பாவையின் பொலிந்தஎன் அணிதுறந்து,
ஆடுமகள் போலப் பெயர்தல்
ஆற்றேன் தெய்ய; அலர்க,இவ் ஊரே!

தெளிவுரை

"தலைவியே! வளைந்த மாலையணிந்த இளமகளிர் சிற்றில் இழைத்து விளையாடிவிட்டுத் தத்தம் வீடு திரும்பினர்; பகலும்

ஒளி குறைந்தது; அகன்ற இலைகளைக் கொண்ட புன்னை மரத்தின் செறிந்த நிழலில் பகற்பொழுதில் எங்களுடன் விளை யாடிய பிறகு, காய்ந்த புல்லால் வேயப்பட்ட வளங்குன்றாத நல்ல நம் வீடு சென்று இரவில் வருத்தத்துடன் இருந்தால், 'தந்தையின் அரிய காவலுக்கு உட்படுவேன்' என்கிறாய். நீ இல்லத்திற்குச் செல்' என்று நான் சொல்வதையும் பொறாது, 'நான் வீட்டிற்குச் சென்றால் இறந்துபடுவேன்' என்றும் கூறுகிறாய்.

"வண்டு மொய்க்கும் கொன்றை மாலையுடன் நெய்தல் மாலையும் அசையும்படி, அந்திப்பொழுதில் கடல் தெய்வம் கரை நிற்பதுபோல நீ இக்கடற்கரைச்சோலையில் தனித்து நிற்க, வெறியாடும் மகள் தான் செய்துகொண்ட அழகினைத் துறந்து தனித்து மீண்டு சென்றாள்போல நான் உன்னைப் பிரிந்து தனித்துச் செல்ல மாட்டேன். உன்னோடு நானும் இங்கே நிற்பேன்; இவ்வூர் அலர் தூற்றினால் தூற்றிக்கொள்ளட்டும்."

கருத்து

" 'தலைவியே! கடற்கரையில் விளையாடிய இளமகளிர் வீடு திரும்பி விட்டனர்; பகல் ஒளியும் குறைந்தது. நீயும் இல்லத்திற்குச் செல்ல வேண்டும்' என்று கூறுகிறேன். நீயோ, 'நான் வீட்டுக்குச் சென்றால் துன்புற்றிருப்பதோடு தந்தையின் காவலுக்கும் உட்படுவேன்' என்றும் சொல்கிறாய். நீ வீடு செல்லாது இங்கேயே இருப்பாய் என்றால் நானும் இங்கேயே இருப்பேன். ஊர் என்ன சொன்னாலும் சொல்லட்டும்" என்று தோழி, தலைவன் கேட்குமாறு, தலைவியின் துன்பத்தை எடுத்துரைக்கிறாள்.

குறிப்பு

தலைவியிடம் கூறுவதுபோலத் தோழி தலைவியின் பிரிவுத் துன்பத் தினையும், காவல் மிகுதியையும் தலைவன் கேட்குமாறு கூறினாள்.

சொற்பொருள்

1. வண்டல் - சிற்றில் கட்டி விளையாடுதல்; தைஇ - செய்து, விளையாடி.
2. இளையோர் - இளமாதர்; எல் - பகல்; எல்லின்று - ஒளி குறைந்தது.
3. புகர்இல் நீழல் - புள்ளி இல்லாத (செறிந்த) நிழல்.
5. காயல் - காய்ந்த புல்; தேயா - வளம் குன்றாத.
6. நோய் - வருத்தம், துன்பம்; வைகுதி - பொருந்தியிருப்பாய்.

7. கடி - காவல்.
8. செலினே - சென்றால்.
9. என்றி - என்று சொல்கிறாய்; ஞாழல் - புலிநகக் கொன்றை (மலர்).
10. ததைந்த - மலர்ந்த.
11. துயல்வர - அசைய; அந்தி - மாலைப்பொழுது.
12. கடல் கெழு செல்வி - கடல் தெய்வம்.
13. ஒழிய - தனித்து நிற்க.
14. வெறிகொள் பாவை - வெறியாட்டம் மேவிய மகள்.
15. ஆடுமகள் - (அழகினைத் துறந்து வறிதே செல்லும்) மகள்.
16. அலர்க - அலர் கூறினும் கூறுக.

தலைவி கூற்று

குறுந்தொகை 141 **மதுரைப் பெருங்கொல்லன்**

திணை : குறிஞ்சி

கூற்று

இற்செறிக்கப்பட்டுழி இரவுக்குறி வந்தொழுகும் தலைமகற்கு வரும் ஏதம் அஞ்சி, பகற்குறி நேர்ந்த வாய்பாட்டால் அதுவும் மறுத்துச் சிறைப்புறமாகத் தோழிக்குத் தலைமகள் சொல்லியது. (இற்செறித்தல் - தலைவியை வீட்டினுள் வைத்து வெளிச்செல்லாதவாறு காத்தல்.)

கூற்று விளக்கம்

தலைவி, வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளாள். அவளைக் காணத் தலைவன் இரவுக்குறி வந்து நிற்கிறான். தலைவி, தாய் தன்னைத் தினைப் புனங் காக்கக் கூறியுள்ளாளாதலின் தலைவன் இனித் தன்னைப் பகற்குறியில் காணலாம் என்று அவன் கேட்குமாறு தோழியிடம் கூறியது.

'வளைவாய்ச் சிறுகிளி விளைதினைக் கடீஇயர்
செல்க'என் றோளே, அன்னை' எனநீ
சொல்லின் எவனோ? தோழி! 'கொல்லை
நெடுங்கை வன்மான் கடும்பகை உழந்த
குறுங்கை இரும்புலிக் கொலைவல் ஏற்றைப்
பைங்கண் செந்நாய் படுபதம் பார்க்கும்
ஆர்இருள் நடுநாள் வருதி;
சாரல் நாட, வாரலோ' எனவே.

தெளிவுரை

“தோழியே! தினைப்புனத்தில் உள்ள நீண்ட துதிக்கையைக் கொண்ட வலிமை மிக்க யானையுடன் கடும்பகை கொண்டு போரிட்டு வருந்திய, குறிய கால்களைக் கொண்ட கொல்லுதல் வல்ல பெரிய ஆண்புலி, பசிய கண்களைக் கொண்ட செந்நாய் தன்னிடம் வந்து அகப்படுகின்ற நேரத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் மலைநாட்டையுடையவனே! புலி காத்திருக்கும் அவ்வழியில் நீயும் செறிந்த இருளைக் கொண்ட நடுயாமத்தில் வந்துகொண்டிருக்கிறாய். இனி அவ்வாறு வாராதே! ‘விளைந்த தினைக்கதிரில் வளைந்த வாயைக் கொண்ட சிறிய கிளிகள் வந்து படியாமல் விரட்டச் செல்’ என்று அன்னையும் என்னிடம் கூறியுள்ளாள்; இச்செய்தியை நீ தலைவனிடத்தில் சொன்னால் என்ன?” என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

‘தலைவன் இருள் செறிந்த இரவில் வருவதை விடுத்து, இனிப் புனத்தருகே பகற்பொழுதிலேயே என்னைக் காணலாம் என்று தோழியே, நீ அவனிடம் சொல்லக்கூடாதா?’

விளக்கம்

தினை காக்கச் செல்லுமாறு அன்னை எம்மிடம் சொல்லி யுள்ளாள் என்பதன் குறிப்பு, தலைவன் இனி இரவில் வாராது பகலிலே தினைப்புனத்திற்கு வரலாம் என்பதாம்.

சொற்பொருள்

1. விளை தினை - விளைந்த தினைக்கதிர்; கடீஇயர் - விரட்டு வதற்காக.
3. கொல்லை - தினைப்புனம்.
4. நெடுங்கை - நீண்ட துதிக்கை; வன்மான் - வலிய யானை; உழந்த - வருந்திய.
5. குறுங்கை - குறுகிய கை (கால்); இரும்புலி - பெரிய புலி; கொலை வல் - கொல்லுதலில் வல்ல; ஏறு - ஆண் (புலி).
6. பைங்கண் - பசிய கண்களைக் கொண்ட; படுபதம் - அகப்படும் சமயம்.

7. ஆர் இருள் - நிறைந்த இருள்; நடுநாள் - நள்ளிரவு.
8. வாரல் - வர வேண்டா.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 246 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரையாது வந்தொழுகும் தலைமகன் சிறைப்புறத்தானாய் நின்றுழி அவன் கேட்குமாற்றான் வெறிநிகழா நின்றமை தோழி தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் திருமணம் செய்து கொள்ளாமல் களவொழுக்கமே மேற்கொண்டிருக்கிறான். அவன் தலைவியின் மனையின் ஒருபுறத்தே மறைந்து நிற்கும்போது அவன் காதில் விழுமாறு, தலைவியிடம் சொல்லுவதுபோல் வெறியாடல் நிகழ்வதைத் தோழி சொல்லியது:

வெறிசெறித் தனனே, வேலன் கறிய
கல்முகை வயப்புலி கழங்குமெய்ப் படூஉம்
புன்புலம் வித்திய புனவர் புணர்த்த
மெய்ம்மை அன்ன பெண்பாற் புணர்ந்து
மன்றில் பையுள் தீரும்
குன்ற நாடன் உறீஇய நோயே.

தெளிவுரை

மலையிலுள்ள புன்செய்க் கொல்லையில் தினையை விதைத்துள்ள குறவர்கள், தினைப் பயிரை விலங்குகள் அழித்துவிடாமல் பாதுகாப்பதற்காகக் கழங்குக் காயைக் கண்ணாகப் பொருத்திப் பொய்ப்புலிப் பொம்மை ஒன்றைச் செய்து வைத்துள்ளனர். மிளகுக் கொடி படர்ந்த கற்குகையில் வாழும் ஆண் புலி வெளியே வந்து, தினைப்புனத்தில் உள்ள பொய்ப் புலியைப் பெட்டைப் புலி என்று கருதிப் புணர்ந்து தன் வேட்கையைத் தீர்த்து அங்குள்ள மன்றத்திலே புரண்டு கிடக்கும். அத்தகைய மலைநாடனால் தலைவிக்கு இந்நோய் உண்டாகியுள்ளது

என்று தெரியாமல் தெய்வக் கோளாறாகக் கருதி வேலன் வெறியயர்தற்கு உரியவற்றை ஒழுங்காகச் செய்யலுற்றான் (இஃது என்னாகுமோ?) என்று தோழி தலைவியிடம் கூறியது.

கருத்து

வேலன் வெறியாடலுக்கு ஆவன செய்கின்றான்; விளைவு என்னாகுமோ?

விளக்கம்

ஆண்புலி பொய்ப் புலியைப் புணர்ந்து வேட்கை தீர்ந்தது என்றது, தலைவன் வாய்மையான காதலாலன்றிக் காமத்தால் மட்டும் நம்மை விரும்பி இக்களவுறவில் நம்மை மருவி இன்புறுகின்றான் என்பதைக் குறிக்கும்.

தலைவன் மணந்து கொள்வனோ அலனோ என்று தலைவனுடைய அன்பின்மையைத் தோழி உணர்த்துகிறாள்.

தோழி கூறியதைக் கேட்கும் தலைவன் உடனே வரைந்து கொள்ள முற்படுவான்.

இப்பாடலில் வரும் புலியின் செயல், கழிகாமச் செயல்; இது போன்ற காட்சி சங்க இலக்கியத்துள் வேறு இல்லை. நாகரிக உணர்வுக்கு ஏற்புடையதன்று. புலியின் உணர்வைப் போலத் தலைவனின் காம உணர்வு நாகரிகப் பாங்குடையதன்று.

சொற்பொருள்

1. வெறி செறித்தனன் - வேலன் வெறியாடற்குரிய பொருள்களைக் களத்திலே நிரப்பினன்.
2. கல்முகை - மலைக் குகையில் (உறையும்); வயப்புலி - வலிமையான புலி; கழங்கு மெய்ப்படூஉம் - கழற்சிக்காயைக் கண்களாய் பொருத்தி.
3. புன்புலம் - புன்செய் நிலம்; வித்திய - விதைத்த; புனவர் - குறவர்; புணர்த்த - உண்டாக்கிய.
4. மெய்ம்மை அன்ன பெண்பால் - மெய்ப்புலி போன்ற பொய்யான பொம்மைப் புலியை; புணர்ந்து - கூடி.
5. மன்றில் - கொல்லை நடுவேயுள்ள மன்றத்தில்; பையுள் - தன் காம வருத்தம்.
6. குன்ற நாடன் உறீஇய நோய் - குன்ற நாடனாகிய தலைவன் செய்த நோய்.

தோழி கூற்று

அகநானூறு 272 **மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறி வந்த தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

இரவுக்குறியில் வந்த தலைவன் சிறைப்புறமாய் நிற்க, அவன் கேட்குமாறு, தாய் அவர்தம் களவொழுக்கத்தை அறிந்ததையும், அதனால் காவல் மிகுந்ததையும் உணர்த்திடத் தலைவியிடம் தோழி கூறியது.

இரும்புலி தொலைத்த பெருங்கை வேழத்துப்
புலவுநாறு புகர்நுதல் கழுவ, கங்குல்
அருவி தந்த அணங்குடை நெடுங்கோட்டு
அஞ்சுவரு விடர்முகை ஆர்இருள் அகற்றி,
மின்ஒளிர் எஃகம் செல்நெறி விளக்க,
தனியன் வந்து, பனிஅலை முனியான்,
நீர்இழி மருங்கின் ஆர்இடத்து அமன்ற
குளவியொடு மிடைந்த கூதளங் கண்ணி
அசையா நாற்றம் அசைவளி பகர,
துறுகல் நண்ணிய கறிஇவர் படப்பைக்
குறிஇறைக் குரம்பைநம் மனைவயின் புகுதரும்,
மெய்ம்மலி உவகையன்; அந்நிலை கண்டு,
முருகுஎன உணர்ந்து முகமன் கூறி,
உருவச் செந்தினை நீரொடு தூஉய்,
நெடுவேள் பரவும் அன்னை; அன்னோ!
என்ஆ வதுகொல் தானே– பொன்என
மலர்ந்த வேங்கை அலங்குசினை பொலிய
மணிநிற மஞ்ஞை அகவும்
அணிமலை நாடனொடு அமைந்தநம் தொடர்பே.

தெளிவுரை

"*தலைவியே! தலைவன் உன்னைக் காண்பதற்கு ஒரு நாள் நம் வீட்டுக்கு வந்தான். அவன் வந்த வழியில் பெரிய புலி ஒன்று, நீண்ட துதிக்கையைக் கொண்ட ஆண்யானையைக் கொன்றது. புள்ளிகள் அமைந்த புலால் நாறும் புலியின் முகத்தை மலை யருவி கழுவியது. தெய்வம் உறையும் அந்த உயர்ந்த மலையின் அஞ்சத்தக்க பிளவில் இருள் செறிந்திருந்தது. தலைவன் கையில் இருக்கும் வேல் மின்னொளி பரப்பி அவ்விருளை நீக்கி அவனுக்கு வழி காட்டியது; அவன் தனியே வந்தான்; பனி வீசித் துன்புறுத்தலை அவன் பொருட்படுத்தவில்லை. அருவி விழும் இடத்தில் மலர்ந்த காட்டுமல்லிகையையும் கூதளம் பூவையும் சேர்த்துத் தொடுத்த மாலையைத் தலையில் சூடியிருந்தான். அதன் நீங்கா மணம் காற்றில் பரவியது. உருண்டைக்கல் உள்ள மிளகுக்கொடி பரவிய தோட்டத்தில் அமைந்துள்ள குறுகிய இறப்பினைக் கொண்ட நம் குடிசைக்கு அருகே வந்தான்; உடல் பூரிக்கும் மகிழ்ச்சியோடு நின்றான். அவனை அந்நிலையில் பார்த்த நம் அன்னை, அவனை முருகன் என்று கருதி, புகழுரை கூறிப் புகழ்ந்துரைத்தாள்; நல்ல நிறம் வாய்ந்த செந்தினையை நீரொடு தூவி வழிபட்டாள்.*

"*பொன் போல மலர்ந்துள்ள வேங்கை மரத்தின் அசையும் கிளை அழகு பெற, அதிலிருந்து நீலமணியொத்த நிறமுள்ள மயில் அகவும் மலைநாட்டுக்குரியவனாகிய தலைவனோடு நாம் கொண்டுள்ள தொடர்பு என்ன நிலையினை அடையுமோ?*"

கருத்து

'தலைவன் வருவதைச் செவிலி அறிந்தனள். இனி நம் நிலை என்னாகுமோ?' என்று, தலைவன் கேட்குமாறு தோழி தலைவியிடம் கூறினாள்.

விளக்கம்

நம் தலைவன் இரவில் தன் கையில் உள்ள வேலிலிருந்து எழுந்த ஒளியில் பாதையில் தனித்து வந்தான்; பனி வீசித் துன்புறுத்தியதையும் அவன் பொருட்படுத்தவில்லை; அவன்

அணிந்திருந்த தலைமாலையின் மணத்தைக் காற்று எங்கும் பரப்பியது; மணம் நிறைந்த மகிழ்ச்சியோடு நம் மனைத் தோட்டத்தில் புகுந்தான்; அவனைக் கண்ட அன்னை, அவனை முருகன் என நம்பிப் புகழ்மொழி கூறி, தினையை நீரொடு தூவி வழிபட்டாள்.

குறிப்பு

'அன்னை, முருகனால் நமக்குத் தீங்குண்டாகும் என்று கருதி, நம்மை இற்செறித்துக் கவனமாய்ப் பாதுகாப்பாள். ஆதலால், நம் நிலை என்னாகுமோ?' என்று கூறி, மறைமுகமாய், விரைவில் மணஞ்செய்து கொள்ளுமாறு தலைவனைத் தோழி தூண்டுகிறாள்.

சொற்பொருள்

1. தொலைத்தல் - கொல்லுதல்.
2. புகர் - புள்ளி.
3. அணங்கு - வருத்தும் தெய்வம்.
4. விடர் - மலைப்பிளவு; முகை - குகை.
5. எஃகம் - வேல்.
6. பனி அலை - பனி நடுக்குதலை; முனிதல் - வெறுத்தல்.
7. மருங்கு - பக்கம்; அமன்ற - நெருங்கிய.
8. குளவி - காட்டுமல்லிகை; கூதளம் - கூதாளி.
9. அசையா - நெருங்கிய; பகர - வெளிப்படுத்த.
10. துறுகல் - உருண்டைக்கல்; கறி - மிளகு; இவர்தல் - படர்தல்; படப்பை - தோட்டம்.
11. குறிஇறை - குறுகிய இறப்பு; குரம்பை - குடிசை.
12. மெய்ம்மலி உவகையன் - உடல் பூரிக்கும் மகிழ்ச்சி.
13. முருகு - முருகன்; முகமன் - புகழுரை.
14. உருவச் செந்தினை - நல்ல நிறம் வாய்ந்த செம்மையான தினை.
15. நெடுவேள் - முருகன்; பரவுதல் - வணங்குதல்.
16. என் ஆவது - என்ன ஆகுமோ?
17. அலங்குசினை - அசையும் கிளை.
18. அகவும் - அழைக்கும்.

தோழி கூற்று

நற்றிணை 27 **குடவாயிற்கீரத்தனார்**

திணை : நெய்தல்

கூற்று

சிறைப்புறமாகத் தோழி செறிப்பறிவுறீஇயது.

கூற்று விளக்கம்

பகற்குறியில் தலைவன் தலைவியின் வீட்டு வேலி ஓரமாய் வர, அதுகண்டு தோழி, தலைவன் கேட்குமாறு, தலைவி இற்செறிக்கப்படுவாள் எனத் தலைவியிடம் கூறியது.

நீயும் யானும், நெருநல், பூவின்
நுண்தாது உறைக்கும் வண்டினம் ஓப்பி,
ஒழிதிரை வரித்த வெண்மணல் அடைகரைக்
கழிசூழ் கானல் ஆடியது அன்றிக்,
கரந்துநாம் செய்ததுஒன்று இல்லை; உண்டுஎனின்,
பரந்துபிறர் அறிந்தன்றும் இலரே! நன்றும்
எவன்குறித் தனள்கொல் அன்னை? கயந்தோறும்
இறவுஆர் இனக்குருகு ஒலிப்பச் சுறவம்
கழிசேர் மருங்கின் கணைக்கால் நீடிக்
கண்போல் பூத்தமை கண்டும் நுண்பல
சிறுபா சடைய நெய்தல்,
குறுமோ, சென்றுஎனக் கூறா தோளே.

தெளிவுரை

"தலைவியே! நேற்று நீயும் நானும் பூக்களின் நுண்ணிய தாதிலே படிந்து திளைக்கும் வண்டினங்களை ஓட்டியபடியே, அலைகள் குவித்த வெள்ளிய மணற்பரப்பில் உப்பங்கழி சூழ்ந்த கடற்கரைச் சோலையில் விளையாடிக்கொண்டிருந்தோம். அதைத் தவிர மறைத்துச் செய்தது வேறொன்றுமில்லை. அவ்வாறு ஏதேனும் செய்திருந்தாலும் அதனை அறிந்தாரும் எவருமிலர். குளந்தோறும் இறால் மீனைப் பற்றித் தின்னும் கொக்கு, நாரை முதலிய குருகுகளின் கூட்டம் ஆரவாரிக்கின்றது. சுறாமீன்கள் மிக்க உப்பங்கழிகளில் திரண்ட, தண்டு நீண்டு நுண்ணிய சிறிய பல இலைகளைக் கொண்ட நெய்தல்பூக்கள் நம்

கண்களைப் போலப் பூத்திருக்கின்றன. அவற்றைக் கண்டும் 'அப்பூக்களைப் பறித்து வாருங்கள்' என்று நம் அன்னை கூறவில்லை. அவள் என்ன கருதியிருக்கிறாளோ?"

கருத்து

அன்னை களவை அறிந்தனள். இனி இற்செறிப்பு நிகழும். (தலைவ! ஆதலின் இவளை விரைவில் மணந்துகொள்.)

விளக்கம்

"தலைவியே! கடற்கரையருகே பூத்திருக்கும் பூக்களின் நுண்ணிய தாதினை வண்டினம் உதிர்ப்பது கண்டு, அவற்றை ஓட்டி விளையாடினோமேயன்றிப் பிறர் குற்றம் கூறக்கூடிய செயல் யாதும் மறைவாய்ச் செய்ததில்லை. அவ்வாறிருக்கக் குளந்தோறும் நெய்தல் பூக்கள் மிகுதியாய்ப் பூத்திருப்பது கண்டு, அவற்றைக் கொய்து விளையாடி வாருங்கள் என்று அன்னை சொல்லவில்லையே! எதனால்?" எனத் தோழி சொல்வதைக் கேட்டு, இனித் தலைவி இற்செறிக்கப்படுவாள் என்பதைத் தலைவன் உணர்ந்து விரைவிலேயே தலைவியை வரைந்து கொள்வதிலே மனம் செலுத்துவான்.

குறிப்பு

இறால் மீன்களை உண்ணக் குருகினம் ஆரவாரிக்கும் என்பது, தலைவன் வருகையால் அலர் தூற்றும் மகளிர் ஆரவாரிப்பர் என்னும் உட்பொருளைக் கொண்டது.

சொற்பொருள்

1. நெருநல் - நேற்று.
2. நுண்தாது - நுண்ணிய மகரந்தத்தூள்; உறைக்கும் - படியும்; ஓப்பி - போக்கி.
3. வரித்த - கொழித்த; அடைகரை - கடற்கரை.
4. கழி - உப்பங்கழி; கானல் - கடற்கரைச்சோலை; ஆடியது - விளையாடியது.
5. கரந்து - மறைத்து.
6. அறிந்தன்றும் இலரே - அறிந்தாரும் எவரும் இலர்.
7. எவன் - என்ன?; குறித்தனள் - கருதியிருக்கின்றனள்; கயம் - குளம்.

8. இறவுஆர் - இறால் மீனை உண்ணுகின்ற; சுறவம் - சுறாமீன்.
9. மருங்கின் - பக்கத்தே; கணைக்கால் - திரண்ட தண்டு.
10. நுண்பல - நுண்ணிய பல.
11. சிறுபாசடை - சிறிய பசிய இலை.
12. குறுமோ - பறிப்பீர்; கூறாதோள் - கூறவில்லை.

தோழி கூற்று

குறுந்தொகை 159 **வடம வண்ணக்கன் பேரிசாத்தன்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் சிறைப்புறமாகத் தோழி செறிப்பறிவுறுத்தது.

கூற்று விளக்கம்

தலைவியின் இல்லத்தார் அவளது பருவ வளர்ச்சி கண்டு இற்செறிக்கக் கருதியுள்ள செய்தியைச் சிறைப்புறமாய் இருக்கும் தலைவன் கேட்குமாறு தோழி தலைவியிடம் கூறியது.

'தழைஅணி அல்குல் தாங்கல் செல்லா
நுழைசிறு நுசுப்பிற்கு எவ்வம் ஆக,
அம்மெல் ஆகம் நிறைய வீங்கிக்
கொம்மை வரிமுலை செப்புடன் எதிரின;
யாங்குஆ குவள்கொல் பூங்குழை?' என்னும்
அவல நெஞ்சமொடு உசாவாக்
கவலை மாக்கட்டுஇப் பேதை ஊரே.

தெளிவுரை

தழையுடையையே தாங்க இயலாத நுண்ணிய இடை கொண்டவள், தலைவி. அந்த இடை துன்பம் கொள்ளுமாறு இவளது மெல்லிய, பருத்துத் திரண்ட, தேமலைக் கொண்ட முலைகள், குவிந்த செப்புப் பாத்திரம்போலத் தோற்றம் கொண்டன. மேலும், பூத்தொழிலைக் கொண்ட குண்டலங் களையும் அணிந்திருக்கிறாள். இவற்றையெல்லாம் தாங்க இயலாது இவள் என்ன துன்பத்தை அடைவாளோ எனக்

கவலையுடன் ஆராயாத மக்களைக் கொண்டிருக்கிறது, பேதைமைத் தன்மை கொண்ட இவ்வூர்.

கருத்து

தலைவியின் பருவ வளர்ச்சி கண்டு பெற்றோர் அவளை இற்செறிக்கக் கருதியுள்ளனர்.

குறிப்பு

தலைவியின் பருவ வளர்ச்சி கண்டு அவள் பெற்றோர் அவளை இற்செறிக்கக் கருதியுள்ளனர். இனி அவளை நீ சந்திக்க இயலாது. ஆகவே, அவளை மணந்துகொள்வதுதான் நல்லது எனும் செய்தியைத் தோழி, தலைவன் அறியக் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. அல்குல் - வயிற்றுக்குக் கீழ்ப்பகுதி முழுவதும்; தாங்கல் செல்லா - தாங்க இயலாத.
2. நுழை சிறு நுசுப்பு - நுணுகிய சிறிய இடை; எவ்வம் - துன்பம்.
3. அம் - அழகிய; மெல்ஆகம் - மெல்லிய மார்பகம்; வீங்கி - பருத்து.
4. கொம்மை - திரண்டு பருத்த; வரி - தேமல்; செப்பு - குவிந்த வடிவு கொண்ட மூடியுடன் கூடிய பாத்திரம்; எதிரின - போன்ற தோற்றம் கொண்டன.
5. யாங்கு ஆகுவள் கொல்? - என்ன துன்பத்தை அடைவாளோ?; பூங்குழை - பூத்தொழில் அமைந்த காதணி (அணிந்த தலைவி).
6. அவலம் - கவலை; உசாவா - ஏனென்று கேளாத; கவலை மாக்கட்டு - கவலையைக் கொண்ட மக்களைப் பெற்றது; பேதை ஊர் - பேதைமைத் தன்மை கொண்ட ஊர்.

தோழி கூற்று

நற்றிணை 339 **சீத்தலைச்சாத்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

சிறைப்புறமாகத் தலைமகன் கேட்பச் சொல்லியது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தில் கூடி மகிழும் தலைவன் சிறைப்புறமாய் நிற்கும் போது, அவன் கேட்கும் வகையில் தோழி தலைவியிடம் கூறியது.

'தோலாக் காதலர் துறந்துநம் அருளார்;
அலர்வது அன்றுகொல் இது?'என்று நன்றும்
புலரா நெஞ்சமொடு புதுவ கூறி,
இருவேம் நீந்தும் பருவரல் வெள்ளம்
அறிந்தனள் போலும், அன்னை சிறந்த
சீர்கெழு வியல்நகர் வருவனள் முயங்கி,
நீர்அலைக் கலைஇய ஈர்இதழ்த் தொடையல்
ஒள்நுதல் பெதும்பை நல்நலம் பெறீஇ,
மின்நேர் ஓதி இவளொடு, நாளைப்
பல்மலர் கஞலிய வெறிகமழ் வேலித்
தெள்நீர் மணிச்சுனை ஆடின்,
என்னோ மகளிர்தம் பண்புஎன் றோளே.

தெளிவுரை

"தலைவியே! நம் அன்னை இன்று நம் அகன்ற மாளிகையில் என்னருகே வந்து என்னை அன்போடு தழுவிக்கொண்டு, 'உன் தலைவியின் சூடிய மாலை கலைந்து அவள் தோற்றமும் பொலிவும் வேறுபட்டுள்ளனவே, ஏன்?' என்றாள். 'என்னொடு அவள் சுனையாடியதால் இவ்வேறுபாடுகள் உண்டாயின' என்றேன், நான். அது கேட்டு, 'நாளைக்கும் சென்று பல்வகை மலர்களும் வேலியாய் விளங்கி மணம் வீசும் அழகிய நீர்ச் சுனையில் நீங்கள் நீராடுவீராயின் ஒப்பனை கலைந்த மாலையும், ஒள்ளிய நுதலும், பெதும்பைப்பருவ நலமும் இன்னும் எப்படி யாகுமோ?' என்று நம் அன்னை கூறினாள்.

"போர்க்களத்தில் தோல்வியே காணாத நம் தலைவரோ, நம்மை மறந்து கைவிட்டுச் சிறிதும் கருணையின்றித் திரும்பிப் பாராதவராய் உள்ளார்.

" 'நமது நிலையைக் கண்டால் நம்மூர் மக்கள் பழி சொல்லத் தொடங்குவர் அல்லரோ?' என்று மிகவும் வருந்தி நமக்கு நாமே பேசி, நாமிருவரும் வெள்ளத்தில் நீந்தியிருந்ததை அன்னை அறிந்தனள்போலும்" என்று தோழி தலைவியிடம் சிறைப் புறத்தே நிற்கும் தலைவன் கேட்குமாறு கூறினாள்.

கருத்து

அன்னை அறிந்தால் இற்செறிப்பு நிகழும்; ஆதலின், இனிக் களவு வாய்க்காது.

விளக்கம்

"அன்னை உன் மேனியில் உண்டாய வேறுபாடு கண்டு, 'இஃது எதனால்?' என்றாள். 'சுனையாடியதால்' என்று நான் கூறினேன். அவளோ, 'நாளை இவ்வாறு ஆடினால் இன்னும் எவ்வாறாகுமோ?' என்றனள். தலைவன் பிரிந்ததால் நாம் வருந்துகிறோம் என்பதை அன்னை அறிந்தனள்போலும்" எனத் தலைவன் காதில் படுமாறு தலைவியிடம் தோழி கூறினாள்.

குறிப்பு

அன்னை அறிந்தனள் எனச் சொல்வதன்மூலம் இனி, தலைவி இற்செறிக்கப்படுவாள். ஆகவே, அவளை மணங்கொண்டாலன்றிக் கூடி இன்புறுதல் அரிது என்பதைத் தலைவனுக்குத் தோழி உணர்த்தினாள் என்பதாம்.

சொற்பொருள்

1. தோலா - தோல்வி கண்டறியாத.
2. அலர்வது அன்றுகொல் இது - பிறரால் தூற்றப்படுவது அன்றோ இந்த உறவு?
3. புலரா நெஞ்சமொடு - தீமை வருவதையே நினைத்து நலியும் நெஞ்சுடன்; புதுவ - புதிய பேச்சுகள்.
4. இருவேம் - நாம் இருவரும்; பருவரல் - துன்பம்.
6. சீர்கெழு - சிறப்புப் பொருந்திய; வியல்நகர் - அகன்ற மாளிகை; வருவனள் - வந்தவள்; முயங்கி - (என்னைத்) தழுவி.

7. நீர்அலை - நீர் அலைத்தலால்; ஈர்இதழ் - ஈரமான இதழ்களைக் கொண்ட; தொடையல் - மாலை.
8. பெதும்பை - பெதும்பைப் பருவத்தவளாகிய (இவள்); நல் நலம் - நல்ல அழகு; பெறீஇ - பெறுவதற்கு.
9. மின்நேர் - மின்னலைப் போன்று வகிடு எடுத்த; ஓதி - கூந்தல்.
10. கஞலிய - கலந்து நிறைந்த; வெறி - மணம்; வேலி - எல்லை.
11. தெள்நீர் - தெளிந்த நீர்; மணிச்சுனை - கருமணிபோலத் தோன்றும் சுனை; ஆடின் - நீராடினால்.
12. பண்பு - உடல் வனப்பு; என்னோ - என்ன ஆகுமோ?

தோழி கூற்று

நற்றிணை 191 **உலோச்சனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் சிறைப்புறமாகத் தோழி செறிப்பறிவுறுப்பான் வேண்டிச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியொடு களவொழுக்கத்தில் கூடி மகிழ்தலையே விரும்பிய தலைவன் சிறைப்புறத்தில் நிற்க, அவன் கேட்குமாறு, விரைவில் மணம் செய்துகொள்ளவில்லையாயின் தலைவி இற்செறிப்புக்கு ஆளாவாள் என்று தோழி கூறியது.

சிறுவீ ஞாழல் தேன்தோய் ஒள்இணர்
நேர்இழை மகளிர் வார்மணல் இழைத்த
வண்டல் பாவை வனமுலை முற்றத்து
ஒண்பொறிச் சுணங்கின் ஐதுபடத் தாஅம்
கண்டல் வேலிக் காமர் சிறுகுடி
எல்லிவந் தன்றுஓர் தேர்எனச் சொல்லி
அலர்எழுந் தன்றுஇவ் ஊரே, பலருளும்
என்நோக் கினளே அன்னை; நாளை
மணிப்பூ முண்டகம் கொய்யேன் ஆயின்

10. அணிக்கவின் உண்மையோ அரிதே; மணிக்கழி
நறும்பூங் கானல் வந்துஅவர்
வறுந்தேர் போதல் அதனினும் அரிதே.

தெளிவுரை

நெடிய கடற்கரையில் அழகிய அணிகலன்களைக் கொண்ட இள மகளிர் வண்டல் பாவை (மணலால் செய்யப்பெறும் பொம்மை) செய்து விளையாடினர். ஞாழல் மரத்தின் தேன் பொருந்திய ஒளி மிக்க பூங்கொத்துகள் அப்பாவையின் மார்பில் பொற்சுண்ணத்தைப் போல மென்மையாய்ப் பரவிக் கிடக்கும். அந்தக் கடற்கரையில், தாழை மரங்களை வேலியாய்க் கொண்ட சிற்றூரிலே, 'நேற்று இரவு ஒரு தேர் இங்கு வந்து சென்றது' என்னும் பழிச்சொல் உண்டாயிற்று. அது கேட்ட அன்னை, இங்குள்ள மகளிர் பலருள்ளும் என்னையே குறிப்பாய் நோக்கினாள். (அன்னைக்கு ஐயம் ஏற்பட்டுவிட்டது; ஆதலின், நம்மை வீட்டுக்காவலில் வைப்பாள்.) அதனால் நாளைக்கு நான் கடற்கரைக்குச் சென்று நீலமணி போன்ற முண்டக மலர்களைக் கொய்ய இயலாது. அதனால் என் மேனி எழில் அழியும் என்பது உறுதி. (அந்த வருத்தத்தைவிட) நீலமணிபோல் தோன்றும் உப்பங்கழியின் கரையில் அமைந்த நறிய பூக்களைக் கொண்ட சோலைக்கு வந்து நம்மைக் காணாது தலைவனுடைய தேர் வறிதே செல்லுவதால் ஏற்படும் வருத்தம் இன்னும் பெரிதா கின்றது.

கருத்து

வீட்டுக்காவலில் தலைவி வைக்கப்படுவாள்; ஆதலின், அவளைக் காண வரும் தலைவன் காண இயலாது வீணே திரும்பும் நிலை நேரிடும்.

விளக்கம்

நேற்றிரவு தலைவன் இங்குத் தேரில் வந்து சென்றதை அறிந்து ஊரார் பழி தூற்றலாயினர். அதனைக் கேட்ட அன்னை, மகளிர் பலரிருக்க என்னையே உற்று நோக்கினாள். அவள் ஐயங்கொண்டுவிட்டதால் இனிமேல் நம்மை வெளியே செல்லவிடாது வீட்டினுள்ளேயே வைத்திருப்பாள். ஆதலின்,

நாளைக்குப் பூக்கொய்யக் கடற்கரைச்சோலைக்குச் செல்ல இயலாது வருத்தமுறுவோம். இஃதொரு புறம் இருக்க, நாம் இற்செறிப்புண்டதை அறியாது தலைவன் நாளைக்குத் தேரில் வந்து நம்மைக் காண இயலாமல் வறிதே செல்வான் என்பதை நினைக்கும்போது நம் வருத்தம் இன்னும் பெரிதாகின்றது.

உள்ளுறை

ஞாழலின் ஒள்ளிய பூங்கொத்து, பூக்களை உதிர்த்து வண்டற் பாவையை அழகு செய்யும் என்னும் தொடர்மூலம், தலைவிக்குத் தலைவன் காட்டும் அருள் புதுப்பொலிவினைத் தரும் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. சிறு வீ - சிறிய பூ; ஞாழல் - ஒரு வகை மரம்; ஒள் - ஒளி பொருந்திய; இணர் - பூங்கொத்து.
2. நேர்இழை மகளிர் - அழகிய கலன்களை அணிந்த இளமகளிர்; வார் மணல் - நெடிய மணல்
3. வண்டல்பாவை - விளையாடுவதற்காக மணலில் செய்த பெண் பொம்மை; வனமுலை - அழகிய மார்பகம்.
4. ஒண்பொறி - ஒள்ளிய புள்ளி; சுணங்கு - தேமல்; ஐதுபட - அழகுபட; தாஅம் - பரவும்.
5. கண்டல் - தாழை; காமர் - விருப்பம்.
6. எல்லி - இரவு.
7. அலர் - பழிச்சொல்.
8. என் நோக்கினள் - என்னையே குறிப்பாய் நோக்கினாள்.
9. மணிப் பூ - நீலமணி போன்ற பூ; முண்டகம் - கடல் முள்ளி.
10. கவின் - அழகு; உண்மையோ - இருக்குமோ?; அரிதே - அரிதாகும்.
11. கானல் - கடற்கரைச்சோலை.
12. வறுந்தேர் - வறிதே செல்லும் தேர்.

தோழி கூற்று

நற்றிணை 297 **மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி சிறைப்புறமாகத் தலைமகட்குரைப்பாளாய்த் தலைமகன் கேட்பச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் சிறைப்புறத்தே நிற்க, அவன் கேட்குமாறு தோழி தலைவியிடம், 'உன் மேனி வேறுபாடுகளால் தாய் உன் களவொழுக்கத்தை உணர்ந்தாள். அதனால் உன்னை வீட்டுக்காவலில் வைப்பாள்' என்று கூறியது.

பொன்செய் வள்ளத்துப் பால்கிழக் கிருப்ப,
நின்ஒளி எறியச் சேவடி ஒதுங்காய்;
பல்மாண் சேக்கைப் பகைகொள நினைஇ,
மகிழா நோக்கம் மகிழ்ந்தனை போன்றனை;
எவன்கொல் என்று நினைக்கலும் நினைத்திலை;
நின்னுள் தோன்றும் குறிப்புநனி பெரிதே,
சிதர்நனை முணைஇய சிதர்கால் வாரணம்
முதிர்கறி யாப்பில் துஞ்சும் நாடன்
மெல்ல வந்து, நல்அகம் பெற்றமை
மையல் உறுகுவள் அன்னை,
ஐயம் இன்றிக் கடுங்கூ வினளே.

தெளிவுரை

தலைவியே! பொன்கிண்ணத்திலே தந்த பாலை உண்ணாமல் கீழே வைத்துவிட்டாய். உன் உடம்பில் ஒளிமிகுந்து அழகு வேறுபட்டுத் தோன்றுகிறது. சிவந்த உன் அடியெடுத்து நீ நடப்பதுவும் இல்லை. பல வகையாலும் மாட்சிமைப்பட்ட படுக்கையையும் நீ பகையாய்க் கருதிக்கொண்டு, எழுந்து உட்கார்ந்து, கள்ளுண்டவர்போல மயக்கமுற்றவளாய்த் தோன்று கின்றாய். இவ்வாறு நீ இருப்பதற்கான காரணத்தை நீ எண்ணிப் பார்க்கவும் இல்லை. ஆதலினால், உன் மனத்திற்குள் தோன்றிய

குறிப்பு மிகவும் பெரிதாகியுள்ளது. மலர்கின்ற பருவத்தினைக் கொண்ட மலரை வெறுத்த மெல்லிய காலைக் கொண்ட கோழி, முதிர்ந்த மிளகுக்கொடிகள் பின்னிக் கிடக்கும் இடத்திற்குச் சென்று தூங்கும். இத்தகைய காட்சி கொண்டுள்ள மலைக்குரிய நாடன், மெல்ல வந்து உன் நெஞ்சில் இடம் பெற்றிருக்கின்றான். அதனால் உன்னிடம் ஏற்பட்டுள்ள மாறுபாடுகளை நோக்கி ஐயமுற்று அன்னையும் மயக்கம் அடைந்துள்ளாள். உன்னை உரத்த குரலில் அழைக்கவும் செய்கிறாள். (அதனால் தாய் உன்னை வீட்டுக்காவலில் வைப்பாள்.)

கருத்து

'உன் மயக்கத்தால் உன் களவொழுக்கத்தை அறிந்த அன்னை உன்னை வீட்டுக்காவலில் வைப்பாள்' என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

உள்ளுறை

கோழி, மலரை வெறுத்து மிளகுக்கொடியில் துயிலும் என்றது, தலைவன் தலைவியை விடுத்துத் தன்னூரில் மறைந்துறை கின்றான் என்பதை உணர்த்திற்று.

சொற்பொருள்

1. வள்ளம் - கிண்ணம்; கிழக்கிருத்தல் - கீழே வைத்திருத்தல்.
2. எறிய - ஒளி மிகுந்து; சேவடி - சிவந்த அடி; ஒதுங்காய் - நடப்பது இல்லை.
3. பல்மாண் - பலவகையிலும் பெருமை பெற்ற; சேக்கை - படுக்கை; நினைஇ - நினைத்து.
4. மகிழ்தல் - கள் குடித்தலால் உண்டாகும் மயக்கம் (கள்ளுண்டவர் போல மயக்கமுற்றனை).
5. எவன்கொல் - என்ன காரணம்?
6. நனி பெரிது - மிகவும் பெரிதாயுள்ளது.
7. சிதர்நனை - மலர்கின்ற பருவத்தைக் கொண்ட மலர்; முணைஇய - வெறுத்த; சிதர் கால் - மென்கால்; வாரணம் - கோழி.
8. முதிர் - முதிர்ந்த; கறி - மிளகுக்கொடி; யாப்பில் - பின்னிக் கிடக்கும் இடத்தில்; துஞ்சும் - தூங்கும்.
9. நல் அகம் - நல்ல உன் நெஞ்சத்தில்; பெற்றமை - இடம் பெற்றிருப்பதை.

10. மையல் - மயக்கம்.
11. ஐயம் இன்றி - ஐயக்குறிப்பு எதுவுமில்லாமல்; கடுங்கூவினள் - உரத்த குரலெடுத்து அழைக்கின்றாள்.

தோழி கூற்று

நற்றிணை 175 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : நெய்தல்

கூற்று

தோழி சிறைப்புறமாகச் சொல்லியது.

கூற்று விளக்கம்

சிறைப்புறமாய்த் தலைவன் நிற்ப, அவன் கேட்குமாறு, 'நம் களவொழுக்கத்தைத் தாய் அறிந்துகொண்டனள்; இனி இற்செறிப்பு நிகழுமாதலால் களவுப் புணர்ச்சி இராது' என்று தோழி தலைவியிடம் கூறியது.

நெடுங்கடல் அலைத்த கொடுந்திமில் பரதவர்
கொழுமீன் கொள்ளை அழிமணல் குவைஇ,
மீன்நெய் அட்டிக் கிளிஞ்சில் பொத்திய
சிறுதீ விளக்கில் துஞ்சும், நறுமலர்ப்
புன்னை ஓங்கிய துறைவனொடு அன்னை
தான்அறிந் தன்றோ இலளே; பானாள்
சேரியம் பெண்டிர் சிறுசொல் நம்பிச்
சுடுவான் போல நோக்கும்,
அடுபால் அன்னஎன் பசலை மெய்யே.

தெளிவுரை

"பரந்த கடல்மேல் சென்று, வலை வீசி மீன்களை வருத்திப் பிடித்து வந்த பரதவர், தாம் கொண்டுவந்த மீன்களைக் கரையில் குவிப்பர்; பிறகு, மீன் கொழுப்பாலாக்கிய நெய்யைக் கிளிஞ்சலில் ஊற்றி ஏற்றிய விளக்கின் ஒளியில் உறங்குவர். நறிய மலர்களைக் கொண்ட புன்னை மரங்கள் ஓங்கி வளர்ந்திருக்கும் துறைக்கு உரியவனாகிய தலைவனோடு நாம் கொண்டுள்ள தொடர்பினை அன்னை முன்பு அறியாள். ஆனால், நள்ளிரவில்

சேரிப்பெண்டிர் நம்மைப்பற்றித் தமக்குள்ளே பேசிக்கொண்ட பழிச்சொற்களை அவள் கேட்டிருப்பாள்போலும்! மனைக்குள் புகுந்த அவள், என் உடலில் பரவிய பசலையை உற்று நோக்கி, என்னைத் தன் கண்ணாலே எரித்துவிடுபவள்போல நோக்கினாள். நான் நடுங்கிச் செய்வதறியாது திகைப்புற்றேன். இனி இஃது என்னாகுமோ, அறியேன்" என்று தலைவியிடம் தோழி எடுத்துரைத்தாள்.

கருத்து

தலைவியின் களவொழுக்கத்தை அன்னை அறிந்தனள்; ஆதலின், இற்செறிக்கப்படுவாள். (இனித் தலைவன் தலைவியை மணந்தாலன்றிப் பெறுதல் இயலாது.)

உள்ளுறை

கடலில் வேட்டையாடிக் கொண்டுவந்த மீனைக் குவித்து விட்டு விளக்கொளியில் பரதவர் தூங்குவர். இத்தொடர்மூலம், தலைவனும் பெரும் பொருள் ஈட்டிக் கொணர்ந்து, தலைவியின் இல்லத்தில் குவித்துவிட்டுத் தலைவியை மணந்து மகிழ்ந்திருக்கலாம் என்னும் உள்ளுறைப் பொருள் வெளிப்படுகிறது.

குறிப்பு

தலைவி கூற்றைத் தோழி தன் கூற்றாய் உரைத்தாள்.

சொற்பொருள்

1. அலைத்த - வருத்திய; கொடுந்திமில் - வளைந்த படகு.
2. கொள்ளை - கூட்டம்; குவைஇ - குவித்து.
3. அட்டி - சொரிந்து; பொத்திய - ஏற்றிய.
4. துஞ்சும் - உறங்குவர்.
5. துறைவனொடு - தலைவனுடன் (நமக்கு உளதாகிய நட்பினை).
6. அறிந்தன்றோ இலள் - (சிறிதும்) அறிந்திலள்; பானாள் - நள்ளிரவில்.
7. சிறுசொல் - பழிச்சொல்.
8. சுடுவான் - தன் கண்ணாலே எரித்துவிடுபவள் போல.
9. அடுபால் - காய்ச்சப்பட்டுக் கொதிக்கும் பால். (அப்பாலில் தோன்றும் ஆடையின் நிறம்போலத் தலைவியின் மேனியில் பசலை படர்ந்துள்ளது.)

தோழி கூற்று

நற்றிணை 368 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி தலைமகற்குச் செறிப்பறிவுறீஇயது.

கூற்று விளக்கம்

திருமணம் செய்துகொள்ளாமலே நெடுங்காலம் களவொழுக்கத்தையே நாடித் தலைவன் நாள் கடத்துகிறான். தலைவியின் தோற்றம், நாற்றம் முதலியவற்றைக் கண்ட தாய் அவளை இற்செறித்துவிடுகிறாள். இதனைத் தோழி தலைவனிடம் தெரிவித்தாள்.

பெரும்புனம் கவரும் சிறுகிளி ஓப்பிக்
கருங்கால் வேங்கை ஊசல் தூங்கிக்
கோடுஏந்து அல்குல் தழைஅணிந்து, உம்மோடு
ஆடினம் வருதலின் இனியதும் உண்டோ?
நெறிபடு கூழைக் கார்முதிர்பு இருந்த
வெறிகமழ் கொண்ட நாற்றமும், சிறிய
பசலை பாய்தரு நுதலும், நோக்கி,
வறிதுஉகு நெஞ்சினள், பிறிதுஒன்று சுட்டி,
வெய்ய உயிர்த்தனள் யாயே
ஐய! அஞ்சினம், அளியம் யாமே!

தெளிவுரை

தலைவ! பெரிய தினைப்புனத்தில் கதிர்களைக் கவர வரும் சிறிய கிளிகளை விரட்டுதல்; கருமையான அடிப்பகுதியைக் கொண்ட வேங்கைமரத்தில் கட்டியுள்ள கயிற்று ஊசலில் அமர்ந்து ஆடுதல்; பக்கம் உயர்ந்த அல்குலில் (அடிவயிற்றில்) பசிய தழையாடையை அணிந்து, உம்மோடு அருவியில் ஆடுதல் ஆகிய இவற்றைவிட எமக்கு இனிமையானவை வேறு உண்டா? ஆனால், நெறிப்பமைந்த என் கருங்கூந்தலில் புதுமணம் கமழ் வதையும், நெற்றியில் பசலை படர்ந்திருப்பதையும் அறிந்த தாய், தளரும் நெஞ்சினளாய், அதைச் சொல்லாமல், வேறு ஏதோ காரணம் சொல்லிப் பெருமூச்சு விட்டனள். அதனால், நாங்கள்

வீட்டுக்காவலில் வைக்கப்படுவோம் என்று அஞ்சுகிறோம். எங்கள் நிலை இரங்கத்தக்கது.

கருத்து

தலைவி இற்செறிப்புக்கு ஆளாவாள். தலைவன் வரைந்துகொண்டால் அல்லது இனி அவளைக் காண இயலாது.

விளக்கம்

ஐயனே! உம்மோடு கிளி கடிந்து, ஊசல் ஆடி, தழையுடை உடுத்தி, அருவியாடி மகிழ்வதினும் எமக்கு இனியதொன் றில்லை. அதனால் எமக்குண்டான புதுமணம், பசப்பு ஊர்தல் முதலியவற்றை அன்னை அறிந்து வேறு ஒன்றனைச் சுட்டிக் காட்டிப் பெருமூச்சு விடுகிறாள். அதனால் வீட்டுக்காவலில் வைக்கப்படும் இரங்கத்தக்க நிலையினை எய்தியவர் ஆயினோம்!

குறிப்பு

"தலைவியின் கூந்தலில் ஏற்பட்டுள்ள புதுமணத்திற்கும், நெற்றியில் பசலை படர்ந்திருப்பதற்கும் காரணம் அறியாத தாய் மிகவும் சினம் கொண்டுள்ளாள்; அதனால் அவளை இல்லக்காவலில் வைப்பாள்" என்று தலைவனிடம் சொல்லி, அவன் விரைவில் தலைவியைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்னும் கருத்தைத் தோழி வலியுறுத்துகிறாள்.

சொற்பொருள்

1. ஓப்பி - விரட்டி.
2. தூங்கி - ஆடி.
3. கோடுஏந்து - பக்கம் உயர்ந்த; தழை அணிந்து - தழையாடை உடுத்து.
4. ஆடினம் - ஆடி.
5. கூழை - கூந்தல்; கார் முதிர்பு - கருமை மிக்க (கூந்தல்).
6. வெறி கமழ் - நறுமணம் வீசுகின்ற; நாற்றமும் - புது நாற்றத்தையும்.
7. பாய்தரு - பரவியுள்ள.
8. வறிதுஉகு - தளர்ந்த; பிறிது ஒன்று சுட்டி - வேறு ஏதோ காரணம் சொல்லி.
9. வெய்ய - வெப்பமுள்ள; உயிர்த்தனள் - பெருமூச்சு விட்டனள்; யாய் - அன்னை.
10. அளியம் - இரங்கத்தக்கவர்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 111 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

இற்செறிப்பாரெனக் கேட்ட தலைமகள், வரையாது வந்தொழுகும் தலைமகன் சிறைப்புறத்தானாகச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தன் மேனி வேறுபாட்டினைக் கண்டும், ஊர் அலர் மொழிந்ததைக் கேட்டும் தன் பெற்றோர் தன்னை இற்செறிக்க முயல்வதை அறியும் தலைவி, தன்னைத் திருமணம் செய்துகொள்ள முயலாத தலைவன் தன் வீட்டருகே நிற்றலை அறிந்து, அவன் கேட்கும் வகையில் தோழியிடம் கூறியது.

அம்ம வாழி, தோழி! பாணன்
சூழ்கழி மருங்கின் நாணிரைக் கொளீஇச்
சினைக்கயல் மாய்க்கும் துறைவன் கேண்மை
பிரிந்தும் வாழ்துமோ நாமே
அருந்தவம் முயறல் ஆற்றா தேமே.

தெளிவுரை

தோழியே! இதனைக் கேள்! மீன் பிடிக்கும் பாணன், தூண்டில் கயிற்றில் இரையை மாட்டி வைத்து, அதுகொண்டு கழியில் வாழும் கருக்கொண்ட பெரிய கயல்மீன்களைப் பிடிக்கும் துறைக்குரியவன், நம் தலைவன். அவன் நட்பினைப் பிரியாது பெறுதற்கு அரிய தவத்தினை நாம் செய்திலேம். ஆதலின், அவன் பிரிவுத்துன்பத்தைத் தாங்கி உயிர் வாழும் சிறுமையுடையவர் ஆயினோம்.

கருத்து

அன்னை தன்னை இற்செறிப்பாள் என்பதறிந்த தலைவி, 'இனி, தலைவனை இடையீடின்றிக் கூடியிருக்க நாம் தவம் செய்தோமில்லை' என்று கூறுகிறாள்.

குறிப்பு

பாணன், இரையைக் கொடுத்துச் சினைக்கயலை மாய்ப்பான். அது போலத் தலைவனும் தன் கேண்மையால் இன்பம் நுகர்ந்து, வரைந்து கொள்ளாது தலைவியை வருத்துகின்றான்.

தலைவி இவ்வாறு வருத்தத்துடன் கூறித் தன்னை விரைவில் வீட்டுக் காவலில் வைப்பர் என்பது கூறக் கேட்ட தலைவன், விரைந்து மண ஏற்பாடுகளைச் செய்வான் என்பதாம்.

சொற்பொருள்

1. பாணன் - மீன் பிடிப்பவன்.
2. சூழ் கழி - ஊரைச் சூழ்ந்துள்ள கழி; மருங்கு - பக்கம்; நாணிரை - நாண் + இரை - தூண்டில் கயிற்றில் உள்ள இரை (நாண் - கயிறு); கொளீஇ - மாட்டி வைத்து.
3. சினைக்கயல் - கருவுற்றுள்ள கயல்மீன்; மாய்க்கும் - பிடித்துக் கொல்லும்; கேண்மை - நட்பு.
4. பிரிந்தும் - (ஒரோவழி) பிரிந்தும்; வாழ்துமோ? - உயிர் வாழும் சிறுமையும் உடையேம்.
5. அருந்தவம் - செயற்கரிய தவம்; முயறல் - முயல்தல்; ஆற்றாதேம் - செய்யாதவரானோம்.

தோழி கூற்று

நற்றிணை 372 **உலோச்சனார்**

திணை : நெய்தல்

கூற்று

மேல் இற்செறிப்பான் அறிந்து ஆற்றாளாகின்ற தலைமகள் ஆற்ற வேண்டி, உலகியல்மேல் வைத்துச் சிறைப்புறமாகச் செறியார் எனச் சொல்லியது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தில் தலைவனோடு கூடி மகிழ்தலால், தான் இற்செறிப்புக்கு ஆளாக நேரிடும் என்று தலைவி வருந்த, தோழி தேற்றிக் கூறியது.

அழிதக் கன்றே தோழி! – கழிசேர்பு
கானல் பெண்ணைத் தேனுடை அழிபழம்,
வள்இதழ் நெய்தல் வருந்த, மூக்குஇறுபு,
அள்ளல் இருஞ்சேற்று ஆழப் பட்டென,
கிளைக்குருகு இரியும் துறைவன், வளைக்கோட்டு

அன்னவெண் மணற்று அகவயின், வேட்ட
அண்ணல் உள்ளமொடு அமர்ந்துஇனிது நோக்கி,
அன்னை தந்த அலங்கல் வான்கோடு
உலைந்தாங்கு நோதல் அஞ்சி, ‘அடைந்ததற்கு
இனையல் என்னும்’ என்ப மனைஇருந்து,
இருங்கழி துழவும் பனித்தலைப் பரதவர்
திண்திமில் விளக்கம் எண்ணும்
கண்டல் வேலிக் கழிநல் ஊரே.

தெளிவுரை

“தலைவியே! உப்பங்கழியைச் சேர்ந்துள்ள கடற்கரைச் சோலையில் பனைமரத்தின் சுவையான சாற்றினைக் கொண்ட முற்றிய பழம் ஒன்று மூக்கு இற்று, பெரிய இதழைக் கொண்ட நெய்தல் வருந்துமாறு கரிய சேற்றிலே விழுந்து ஆழமாய்ப் புதைந்து விட்டது. அது விழுந்த ஒலி கேட்டு நாரைக்கூட்டம் அஞ்சி விலகி ஓடும் காட்சி கொண்ட நீர்த் துறைக்கு உரியவன், நம் தலைவன்.

“சங்குவளை போன்ற வெண்மையான மணற்கரையில் அவன் உன்னைத் தழுவி மகிழ வேண்டுமென்று விரும்புகிறாய்; பெருந்தகைமை மிக்க உன் உள்ளத்திற்குப் பொருந்துமாறு இவ்வூரும் அதனையே எண்ணியுள்ளது. கரிய உப்பங்கழியில் மீனைத் தேடிச் செல்லும் பரதவர் பனியால் நடுங்கியவாறு தம் உறுதியான படகுகளில் விளக்குகளை ஏற்றி வைத்திருப்பர். ஊரிலுள்ள பரதவப் பெண்கள் அவ்விளக்குகளை வீட்டிலிருந்தே எண்ணிக் கொண்டிருப்பர். அத்தகைய பரதவர்களைக் கொண் டுள்ளதோடு தாழை மரங்களை வேலியாய்க் கொண்டது, நமது நல்ல ஊர்.

“மீன்வற்றலைக் கவர வரும் பறவைகளை ஓட்டுதற்காக அன்னை தந்த மெல்லிய கோல் ஒடிந்துவிட்டதற்காக (அன்னை என்ன சொல்வாளோ? என்று) நீ வருத்தத்தோடு இருக்கின்றாய் என்று கருதி, இவ்வூரார் உன்னை இனிமையோடு பார்த்து, ‘அக்கோல் உடைந்ததற்காக அழாதே’ என்று கூறித் தேற்று கின்றனர். ஆதலின், நீ ஏங்காதிரு; அன்னை உன்னை வீட்டுக் காவலில் வைக்க மாட்டாள்.”

கருத்து

"அலர் கூற வேண்டிய ஊராரே, 'அஞ்சாதிரு' என உன்னைத் தேற்றுவதால் அன்னை உன்னை இற்செறியாள்; வருந்தாதே" என்று கூறித் தலைவியைத் தோழி தேற்றுகிறாள்.

உள்ளுறை

முதிர்ந்து கனிந்த பனம்பழம் சேற்றில் விழுந்த ஒலி கேட்ட நாரையினம் அஞ்சியோடும் என்பது, கனிந்த காதலைக் கொண்டவனாகிய தலைவன் உன்னைத் திருமணம் செய்து கொள்ள வருவானானால், அலர் கூறும் பெண்டிர் அஞ்சி, வாயடங்கிவிடுவர் என்னும் பொருளைத் தருகிறது.

சொற்பொருள்

1. அழிதக்க அன்று - அழியத்தகுந்தது அன்று; கழி சேர்பு - கழியை அடைந்த.
2. பெண்ணை - பனைமரம்; தேனுடை - தேன் போலும் இனிய சாற்றினைக் கொண்ட,

3-2. மூக்குஇறுபு அழிபழம் - மூக்கு இற்று (சேற்றிலே விழுந்து) அழிந்த பழம்.

4. அள்ளல் இருஞ்சேறு - அள்ளுதல் அமைந்த கரிய சேறு; ஆழப் பட்டென - ஆழத்துள் வீழ்ந்து புதையுண்டுவிட.
5. கிளை - இனம், கூட்டம்; குருகு - நாரை; இரியும் - அஞ்சி ஓடும்; வளைக்கோடு - வளையாகிய சங்கு.
6. அகவயின் - இடத்தில்; வேட்ட - (அவன் உன்னைத் தழுவ வேண்டு மென்று) விரும்பிய.
7. அண்ணல் உள்ளம் - பெருந்தகவு வாய்ந்த உள்ளம்.
8. அலங்கல் வான்கோடு - அசைகின்ற பெரிய கோல்.
9. உலைதல் - குலைதல், ஒடிதல்; நோதல் - வருந்துதல்; அடைந்ததற்கு - நிகழ்ந்ததற்கு.
10. இனையல் - வருந்தாதே; என்னும் - என்று கூறுவர்.
11. இருங்கழி துழவும் - கரிய கழியில் (மீனைத்) தேடுகின்ற; பனித்தலை - குளிரால் நடுங்கும்.
12. திண்திமில் - திண்ணிய படகு; விளக்கம் - விளக்கு; எண்ணும் - எண்ணிக்கொண்டிருப்பர்.
13. கண்டல் - தாழை; கழி நல் ஊர் - உப்பங்கழி சூழ்ந்த நல்ல ஊர்.

தோழி கூற்று

அகநானூறு 302 **மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

பகலே சிறைப்புறமாகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தில் தலைவன் பகற்குறியிடத்தே வந்து ஒருபுறத்தே மறைந்து நின்றான். அப்போது தோழி, 'களவொழுக்கத்தை அன்னை அறிவாள்; ஆதலின் இனித் தலைவியைப் புறம் போகாது இற்செறிப்பாள்; அவளைப் பகற்குறியின்கண் காணுதல் இயலாது' என்னும் செய்திகளைத் தலைவன் அறிந்துகொள்ளும்பொருட்டு, அவன் வரவினை அறியாதவள் போல அவன் கேட்பத் தலைவியிடம் கூறியது.

சிலம்பில் போகிய செம்முக வாழை
அலங்கல் அம்தோடு அசைவளி உறுதொறும்,
பள்ளி யானைப் பரூஉப்புறம் தைவரும்
நல்வரை நாடனொடு அருவி ஆடியும்,
பல்இதழ் நீலம் படுசுனைக் குற்றும்,
நறுவீ வேங்கை இனவண்டு ஆர்க்கும்
வெறிகமழ் சோலை நயந்துவிளை யாடலும்
அரிய போலும்– காதல்அம் தோழி–
இருங்கல் அடுக்கத்து என்ஐயர் உழுத
கரும்புஎனக் கவினிய பெருங்குரல் ஏனல்,
கிளிபட விளைந்தமை அறிந்தும், 'செல்க'என,
நம்அவண் விடுநள் போலாள், கைம்மிகச்
சில்சுணங்கு அணிந்த, செறிந்துவீங்கு இளமுலை,
மெல்இயல் ஒலிவரும் கதுப்பொடு,
பல்கால் நோக்கும்– அறன்இல் யாயே.

தெளிவுரை

"*அன்புள்ள தலைவியே! மலையில் நீண்டு வளர்ந்துள்ள செவ்வாழையின் அழகிய இலைகள் தம்மைக் காற்று அசைக்குந்*

தோறும் உறங்குகின்ற யானையின் பருத்த உடம்பினை மெல்லத் தடவிக் கொடுக்கும். அத்தகைய காட்சி கொண்ட மலைநாட்டிற்குரிய நம் தலைவனுடன் அருவி ஆடியும், சுனையில் பூத்த நீலப்பூக்களைப் பறித்தும், வண்டுகள் ஒலிக்கும் நறிய மலர்களைக் கொண்ட வேங்கைமரச் சோலையில் விரும்பி விளையாடியும் இருத்தல் இனி நமக்கு அரியன போலும்!

"பெருங்கற்களைக் கொண்ட பக்கமலையில் நம் தமையன்மார் உழுத இடத்தில் கரும்புபோலத் திரண்டு வளர்ந்த தினைப் பயிரிலுள்ள கதிர்கள் கிளிகள் வந்து படியுமாறு முற்றி விளைந்துள்ளன. இதனை நன்கு அறிந்திருந்தும் அறப்பண்பு இல்லாத நம் அன்னை, கிளிகளை ஓட்டித் தினைப்பயிரைக் காக்க நம்மைப் புனத்துக்கு அனுப்பமாட்டாள் எனத் தெரிகிறது. மாறாய், அழகும் தேமலும் கொண்ட நெருங்கிப் பருத்த உன் இளைய முலைகளையும் மென்மைத் தன்மையுடன் தழைத்து வளர்ந்த கூந்தலையும் பலகாலும் பார்த்து நிற்கின்றாள்."

கருத்து

"தலைவியே! உன் இளமுலையையும் வளர்ந்த கூந்தலையும் அறமில்லாத தாய் பன்முறையும் உற்று நோக்குகிறாள்; அதனால், தினைக் கதிர்கள் முற்றி, அவற்றைக் கிளிகள் கொய்வதை அறிந்தும் நம்மைக் காவலுக்கு அனுப்பமாட்டாள் எனத் தெரிகிறது. இனி, தலைவனோடு அருவியாடி, சுனையில் மலர் கொய்து, சோலையில் விளையாடி இருத்தல் அரிது" என்று தலைவியின் இற்செறிப்பினைத் தலைவன் அறியுமாறு தோழி கூறுகிறாள்.

சொற்பொருள்

1. சிலம்பு - மலை; போகிய - நீண்டு வளர்ந்த; செம்முக வாழை - செவ்வாழை.
2. அலங்கல் - அசையும்; தோடு - இலை; வளி - காற்று.
3. பள்ளி யானை - உறங்கும் யானை; பரூஉ - பருத்த; புறம் - முதுகு; தைவரும் - தடவிக் கொடுக்கும்.
5. குற்றும் - பறித்தும், கொய்தும்.
6. ஆர்க்கும் - ஒலிக்கும்.
7. வெறி - மணம்.
9. அடுக்கம் - பக்க மலை; என் ஐயர் - என் தமையன்மார்.

10. கவினிய பெருங்குரல் ஏனல் - அழகுடன் திரண்ட தினைத்தாள்; குரல் - கதிர்; ஏனல் - தினை.
12. அவண் - அங்கு, தினைப்புனம்; விடுநள் போலாள் - அனுப்ப மாட்டாள் எனத் தெரிகிறது.
13. செறிந்து - நெருங்கி.
14. இயல் ஒலி - தழைத்து வளர்ந்த.
15. அறன்இல் - அறப்பண்பு இல்லாத.

தோழி கூற்று

நற்றிணை 306 **உரோடோகத்துக் கந்தரத்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

புனமடிவு உரைத்துச் செறிப்பு அறிவுறீஇயது.

கூற்று விளக்கம்

தினைக்கொல்லையின் ஒரு பக்கமாய்த் தலைவன் வந்து நிற்பதைக் கண்ட தோழி, "கொல்லையில் தினைக்கதிர்களைக் கொய்யத் தொடங்கி விட்டனர். இனித் தலைவி தினைக்காவலுக்கு வரமாட்டாள்; வீட்டினுள்ளேயே இருக்குமாறு செய்யப்படுவாள்" என்று தலைவன் அறியும்வண்ணம் கூறியது.

தந்தை வித்திய மென்தினை பைபயச்
சிறுகிளி கடிதல் பிறக்குயா வணதோ
குளிர்படு கையள் கொடிச்சி செல்களன,
நல்ல இனிய கூறி, மெல்லக்
கொயல்தொடங் கினரே கானவர்; கொடுங்குரல்
சூல்பொறை இறுத்த கோல்தலை இருவி
விழவுஒழி வியன்களம் கடுப்பத் தெறுவரப்
பைதல் ஒருநிலை காண வைகல்
யாங்கு வருவது கொல்லோ தீம்சொல்
செறிதோட்டு எல்வளைக் குறுமகள்
சிறுபுனத்து அல்கிய பெரும்புற நிலையே.

தெளிவுரை

"கிளியை விரட்டும் கருவியைக் கையில் கொண்டுள்ள கொடிச்சியே! 'நீ வீட்டிற்குச் செல்க' என்று இனிய நல்ல சொற்களைச் சொல்லியவராய்க் கானவர் தினைக்கதிரைக் கொய்யத் தொடங்கிவிட்டனர். நம் தந்தையால் விதைக்கப்பட்டு வளர்ந்துள்ள மெல்லிய தினைப்பயிரில் உள்ள கதிர்களைக் கவர்ந்து போக மெல்ல மெல்ல வருகின்ற கிளிகளை விரட்டும் வேலை இனி இல்லை. கதிர்கள் கொய்யப்பட்டு, மொட்டையாய் உள்ள தினைப்புனம், விழா முடிந்து வெறிச்சென்று காணப்படும் ஊரைப் போன்று பொலிவிழந்து தோன்றி நம்மை வருத்துகின்றது. ஒளி பொருந்திய நெருங்கிய வளையல்களை அணிந்துள்ள இளமையான தலைவி தினைப்புனத்தின் பெரிய பரண் மீதிருந்து காவல் காத்திருப்பதை இனித் தலைவனால் (பகற்போதில்) காண இயலாதே!

கருத்து

தினைக்கதிர் கொய்யப்பெற்றது; இனித் தலைவி, வீட்டிலேயே இருக்குமாறு செய்யப்படுவாள்; ஆதலின், பகற்குறியில் தலைவியைத் தலைவன் காண இயலாது.

விளக்கம்

கிளி ஓட்டுதல் இல்லையாதலின் இனித் தலைவி புனத்திற்கு வரமாட்டாள்; தலைவன் அவளைப் பகற்குறியில் சந்திக்க இயலாது. தலைவி இற்செறிப்புக்கும் ஆளாவாள். தலைவன் தலைவியை விரைந்து மணந்துகொண்டாலன்றி அவளை அடைய இயலாது; ஆகையால், 'மணம் செய்துகொள்வதில் மனம் செலுத்து' எனத் தலைவனுக்குத் தோழி உணர்த்துகிறாள்.

சொற்பொருள்

1. வித்திய - விதைத்த; பைபய - மெல்ல மெல்ல.
2. கடிதல் - ஓட்டுதல்; பிறக்கு - அசைச்சொல்; யாவணதோ? - எவ்வாறு இயலும்? (இயலாது).
3. குளிர் - கிளிகடி கருவிகளுள் ஒன்று (தென்னை மட்டை அல்லது பனை மட்டையால் செய்யப்படுவது).
5. கொடுங்குரல் - வளைந்த தினைக்கதிர்.

6. சூல் - கருப்பம்; பொறை - சுமை; இறுத்த - நீக்கப்பட்ட, கதிர் கொய்யப்பட்ட; கோல்தலை - தண்டின் உச்சிப்பகுதி; இருவி - தினைத்தாள் (உள்ள புனம்).
7. விழவு ஒழி - விழா நிகழ்ந்து முடிந்த; வியன்களம் - அகன்ற விழாக் களம்; கடுப்ப - போல; தெறுவர - பொலிவழிந்து வருத்தமுண்டாக்க.
8. பைதல் - துன்பம்; ஒரு நிலை - ஒரு காட்சியை, ஒரு நிலையை; வைகல் - நாள், பகல்வேளை.
9. தீம் சொல் - இனிய பேச்சு.
10. செறிதோட்டு - நெருங்கிய தொகுதியான; எல்வளை - ஒளி வீசும் வளையல்.
11. அல்கிய - தங்கிய; புறநிலை - புனம் காக்கும் காவல் நிலை.

தோழி கூற்று

நற்றிணை 134 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : குறிஞ்சி

கூற்று

இற்செறிப்பாரென ஆற்றாளாய தலைமகளை அஃதிலரென்பதுபடத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தில் தலைவியோடு மகிழ்ந்த தலைவன் பிரிவை நீட்டித்தான். அதனால் மேனி வேறுபட்ட தலைவி, தான் இற்செறிப்புக்கு ஆளாக நேருமோ என்று அஞ்சினாள். அதனைக் கண்ட தோழி அவ்வாறு ஆகாது என்று தேற்றி மொழிந்தது.

'இனிதின் இனிது தலைப்படும்' என்பது
இதுகொல்? வாழி, தோழி! காதலர்
வருகுறி செய்த வரையகச் சிறுதினைச்
செவ்வாய்ப் பாசினம் கடீஇயர், கொடிச்சி!
அவ்வாய்த் தட்டையொடு, அவணை ஆகு!என,
ஏயள்மன் யாயும்; நுந்தை, 'வாழியர்
அம்மா மேனி நிரைதொடிக் குறுமகள்!
செல்லா யோ;நின் முள்எயிறு உண்கு' என,
மெல்லிய இனிய கூறலின், யான்அஃது
ஒல்லேன் போல உரையா டுவலே!

தெளிவுரை

"தலைவியே! வாழ்க! நம் காதலர் பகற்குறியில் வருகின்ற இடத்திற்குப் பக்கத்திலிருக்கிறது, நம் தினைப்புனம். அங்கே கதிர்களைக் கொத்த வரும் சிவந்த வாயைக் கொண்ட பசிய கிளிகளின் கூட்டத்தை ஓட்டுவதற்காக, 'கொடிச்சியே! நீ கிளிகடி கருவியாகிய தட்டையை எடுத்துக்கொண்டு, தினைப்புனம் செல்' என்று என்னை நோக்கி அன்னையும் பலமுறை ஏவினாள்.

"நம் தந்தையும் வாழ்க! அவரும் என்னை அழைத்து, "அழகிய மாந்தளிர் போன்ற மேனியையும் நிரைத்த வளையல்களையும் கொண்ட இளமங்கையே! நீ இன்னும் புனத்திற்குச் செல்ல வில்லையா? விரைவில் செல்; உன் முள்ளெயிற்றின் முத்தம் பெறுவேன்" என்று மெல்லிய இனிய பல சொற்களைக் கூறினார்.

அவர்கள் இருவரும் அவ்வாறு கூற, நான் காவலுக்குச் செல்ல மறுப்பவள்போலச் சில முறை கூறினேன். தினைப்புனக் காவலுக்குச் சென்று காதலனைக் கூட இயலும் என்பதற்கு இது நல்ல அறிகுறிதானே! இச்செயல் இனியவை எல்லாவற்றினும் இனியது அன்றோ?

கருத்து

'தலைவியே! இற்செறிப்பு நிகழாது; நாம் தினைப்புனக் காவலுக்குச் செல்வோம்' எனத் தோழி தலைவியைத் தேற்றுகிறாள்.

விளக்கம்

'காவலுக்குச் செல்' என்று தாய் பலமுறை ஏவியதால் அவளுக்கு ஐயம் எதுவும் இல்லை. தந்தையும் இனிய சொல் கூறியதால் அவரும் நம்மீது ஐயமுற்றிலர் என்பது தெளிவா கிறது. அவர்கள் கூறியும் நான் செல்லமாட்டேன் என்று கூறியது அவர்கள் ஐயப்படுவதற்கே இடமில்லாமல் செய்துவிட்டது. எனவே, நம் இல்லத்தார் நம்மை இற்செறிப்புச் செய்யார்.

தினைப்புனம் காக்கத் தடையேதுமின்றிச் செல்வோம். தலைவனைப் பகற்குறியிடத்தில் கூடி மகிழ்வோம்! இஃது இனியவை எவற்றினும் மிக இனியது.

சொற்பொருள்

1-2. இனிய ஒன்றைக்காட்டிலும் இன்னொரு இனியதைப் பெறுவோம் என்பது இதுதானோ?; தலைப்படுதல் - பெறுதல்.

3. வருகுறி செய்த - வருவதற்காகச் செய்த குறியிடம்; வரையகம் - மலை இடம்.

4. பாசினம் - பசிய கிளிக்கூட்டம்; கடீஇயர் - ஓட்டும்பொருட்டு.

5. தட்டை - கிளிகடி கருவி, மூங்கிற்பட்டையால் ஆனது, தட்டும் போது பெரிய ஒலி உண்டாகும்; அவணை - அங்கு; ஆகு என - செல்க என்று.

6. யாயும் ஏயள் - அன்னையும் ஏவினாள்; நுந்தை - உம் தந்தை.

7. அம்மா மேனி - அழகிய மாந்தளிர் போன்ற மேனி; நிரைதொடி - நிரையாய் அணிந்த வளையல்.

8. முள் எயிறு - கூரிய பல்; உண்கு - முத்தம் பெறுவேன்.

9-10. யான் அஃது ஒல்லேன் - நான் காவலுக்குச் செல்லமாட்டேன்; உரையாடுவல் - பேசினேன்.

தோழி கூற்று

நற்றிணை 313 **தங்கால் பொற்கொல்லன் வெண்ணாகனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி சிறைப்புறமாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்ப் புனம் அழிவுரைத்துச் செறிப்பறிவுறீஇயது.

கூற்று விளக்கம்

சிறைப்புறமாய்த் தலைவன் வந்திருப்பதை அறிந்த தோழி, அவன் கேட்கும்வண்ணம், 'தலைவி! தினை முற்றி அறுவடை செய்யும் பருவம் வந்துவிட்டது; ஆகையால், நாம் திரும்பி வீட்டிற்குச் சென்றுவிடுவோம். அவ்வாறு சென்ற பின்னர்க் காதலனை எவ்வாறு காண்போம்?' என்று கூறியது.

கருங்கால் வேங்கை நாள்உறு புதுப்பூ,
பொன்செய் கம்மியன் கைவினை கடுப்பத்
தகைவனப் புற்ற, கண்ணழி கட்டழித்து,
ஒலிபல் கூந்தல் அணிபெறப் புனைஇ,
காண்டற் காதல் கைம்மிகக் கடீஇயாற்கு
யாங்கு ஆகுவம்கொல்? தோழி! காந்தள்
கமழ்குலை அவிழ்ந்த நயவருஞ் சாரல்
கூதள நறும்பொழில் புலம்ப, ஊர்வயின்
மீள்குவம் போலத் தோன்றும் தோடுபுலர்ந்து
அருவியின் ஒலித்தல் ஆனா,
கொய்பதம் கொள்ளும்,நாம் கூஉம் தினையே.

தெளிவுரை

"தலைவியே! தினைமுற்றி அறுவடை செய்யும் பருவம் வந்து விட்டது; காய்ந்த தினைத்தோடுகள் அசையும் ஓசை மலையருவி ஒலித்தாற்போல உள்ளது. ஆதலால் நாம், காந்தள் மலரின் குலை மலர்ந்து கமழ்கின்ற விருப்பமிகுந்த மலைச்சாரலில், கூதளம் செடிகள் படர்ந்துள்ள நறிய சோலை தனிமையாகும்படி விட்டுவிட்டு, மீண்டும் நம் ஊர் செல்வோம் எனத் தோன்று கிறது.

"பொன்செய் கொல்லன் தன் கைத்திறம் தோன்றச் செய்த பொன்மலர்க் கண்ணிபோல வேங்கைமரத்தில், நாள்காலையில் பூத்துள்ள மிகவும் அழகு வாய்ந்த புதிய பூக்களைத் தலைவன் அடர்ந்த உன் கூந்தலில் அழகுபெறச் சூடிக் காண்பதற்கு அளவு கடந்த விருப்பம் கொண்டவன்; தினை கவரும் பறவைகளையும், விலங்குகளையும் கடிந்து நமக்குத் துணையாய் ஓட்டுவதற்கு உதவியவன், நம் தலைவன். இந்நிலையில் நம்மை நீங்கிச் சென்றிருக்கிற அவனை இனி எவ்வாறு காண்பது?"

கருத்து

'தினை முற்றி அறுவடைப் பருவம் வந்துவிட்டது; நாம் வீட்டிற்குச் செல்லவிருக்கிறோம். இனித் தலைவனைக் காண்பது எவ்வாறு?'

குறிப்பு

வேங்கை மலரும் காலம் திருமணத்திற்குச் சிறந்த காலம். அதனால், தலைவியை உடனே மணந்துகொள்ள வேண்டும் என்பதைத் தோழி தலைவனுக்குக் குறிப்பாய் உணர்த்தினாள்.

வேங்கை மலர்களைத் தலைவியின் தலையில் அழகுபெறச் சூட்டிக் காண விருப்பமுள்ளவன் என்பதால், அது தடைபெறாமல் நடைபெறத் தலைவியை வரைந்து அழைத்துச் செல்லுமாறு தோழி தலைவனிடம் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. நாள் உறு புதுப் பூ - நாள்காலையில் பூத்த புதுப் பூ.
2. பொன் செய் கம்மியன் - பொற்கொல்லன்; கைவினை - தன் கைத்திறம் தோன்றச் செய்த (பொன்மலர்க் கண்ணிபோல).
3. தகை வனப்புற்ற - மிக்க வனப்பு அமையத் (தொடுத்த கண்ணியை); கண் அழி - தடை; கட்டழித்து - முற்றவும் அழித்து.
4. ஒலிபல் கூந்தல் - அடர்ந்த பலவாகிய கூந்தலில்; புனைஇ - சூடி.
5. காண்டல் - காண்பதற்கு; காதல் - வேட்கை; கைம்மிக - அளவு கடந்து; கடீஇயான் - (தினை கவர வரும் புள்ளினங்களை நமக்குத் துணையாயிருந்து) ஓட்டி உதவிய தலைவன்.
6. யாங்கு ஆகுவம்? - என்ன செய்வோம்?
7. கமழ் - மணக்கும்; குலை அவிழ்ந்த - குலை மலர்ந்த; நயவரும் - விருப்பம் மிகுந்த.
8. கூதளம் - கூதளம் செடிகள்; புலம்ப - தனியாய்; ஊர்வயின் - ஊருக்கு.
9. தோடு - தினைக்கதிரின் தோடு; புலர்ந்து - காய்ந்து.
10. அருவியின் - அருவியைப் போல; ஆனா - அமையாது.
11. கொய் பதம் - அறுவடை செய்யும் பருவம்; நாம் கூஉம் - நாம் கூவிப் புள்ளினங்களை விரட்டி.

தோழி கூற்று

நற்றிணை 373 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

செறிப்பறிவுறீஇயது.

கூற்று விளக்கம்

தலைவியின் தோற்றத்தில் ஏற்பட்டுள்ள மாறுதல்களைக் கவனித்த தாய், அவளைத் தினைப்புனக் காவலிலிருந்து வீட்டுக்கு அழைத்துச் சென்று இல்லக்காவலில் வைக்க எண்ணியுள்ளாள் என்பதையும், இனித் தலைவனைக் காண வாய்ப்பில்லை என்றும் தோழி தலைவனுக்குக் கேட்குமாறு கூறியது.

முன்றில் பலவின் படுசுளை மரீஇ,
புன்தலை மந்தி தூர்ப்ப, தந்தை
மைபடு மால்வரை பாடினள் கொடிச்சி,
ஐவன வெண்ணெல் குறூஉம் நாடனொடு
சூர்உடைச் சிலம்பின் அருவி ஆடி,
கார்அரும்பு அவிழ்ந்த கணிவாய் வேங்கைப்
பாஅமை இதணம் ஏறி, பாசினம்
வணர்குரல் சிறுதினை கடிய,
புணர்வது கொல்லோ? நாளையும் நமக்கே.

தெளிவுரை

"தலைவியே! நம்மைக் கவனித்த அன்னை உன்னை இற்செறிக்கக் கருதியுள்ளாள். மென்மையான தலையைக் கொண்ட பெண்குரங்கு, வீட்டு முற்றத்தில் பலா மரத்திலிருந்த பழுத்த பழத்தைப் பிளந்து, சுளைகளைத் தின்று, கொட்டைகளைக் கீழே உதிர்க்கும். அருகே நின்ற கொடிச்சி, மேகம் தவழும் தன் தந்தையின் பெரிய மலையின் வளத்தைப் பாடிக்கொண்டே ஐவன நெல்லைக் குற்றுவாள். இத்தகைய மலைநாட்டிற்கு உரியவனோடு பக்க மலையில் வீழும் அருவியில் ஆடினோம். கரிய நிறம் கொண்டதும், அரும்புகள் மலரப் பெற்றதும், கணியர் போல விளங்குவதுமாகிய வேங்கைமரத்தில் கட்டப்பட்ட

அகன்ற பரண்மீது ஏறி நின்று, வளர்ந்த கதிர்களைக்கொண்ட சிறு தினையைக் கவர வரும் பசிய கிளியினத்தைக் கடிந்து ஓட்டியபடி இருக்கிறோம். இப்பணி நாளையும் தொடருமா என்பது ஐயத்திற்குரியது."

கருத்து

தலைவியை இற்செறிக்கத் தாய் எண்ணியுள்ளாள். இனித் தலைவி தினைப்புனம் காத்திடவோ, தலைவனோடு அருவியாடிடவோ இயலாது.

உள்ளுறை

முற்றத்துப் பலாப்பழத்தின் சுளைகளைத் தின்ற மந்தி, கொட்டைகளைக் கீழே போடுகிறது; அவற்றைப் பாராது குறமகள், மலைவளத்தைப் பாடி நெல் குற்றுவாள். இத்தொடர் மூலம், மலைநாடன் தலைவியைக் களவிலே கூடி நலனுண்டு, அதனால் ஊரிலே பழிச்சொல் பரவுமாறு செய்து விட்டுச் சென்றுவிட்டான். அதனை அறியாது அன்னை, தெய்வம் அணங்கிற்று எனக் கருதித் தலைவியை இற்செறித்து, வெறியாடலுக்கு ஏற்பாடு செய்கிறாள் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

குறிப்பு

வேங்கை மலர்ந்தது என்று கூறுவதன்மூலம், திருமணத்திற்குரிய நாள் வந்துவிட்டது என்பதைத் தோழி தலைவனுக்கு மறைமுகமாய் உணர்த்துகிறாள்.

வேங்கை மலர்வது திருமணத்திற்குரிய காலமாய்க் கொள்ளப்படுகிறது. அதனாலேயே அம்மரம் கணியர்போல நிற்பதாய்க் கூறப்பட்டுள்ளது.

சொற்பொருள்

1. முன்றில் - வீட்டிற்குமுன்; பலவின் - பலா மரத்தின்; படுசுளை - நிறைந்த சுளைகள்; மரீஇ - கிளறிப் பிளந்து எடுத்து.
2. புன்தலை - மென்மையான தலை; மந்தி - பெண்குரங்கு; தூர்ப்ப - உதிர்க்க.
3. மைபடு - மேகம் தவழும்; மால்வரை - பெரிய மலை; கொடிச்சி - குறிஞ்சிநிலப்பெண்.

4. ஐவனம் - மூங்கில் நெல்; குறூஉம் - குற்றும்.
5. சூர் - அச்சம்; சிலம்பு - மலை.
6. கார் அரும்பு - கரிய அரும்பு; அவிழ்ந்த - மலர்ந்த; கணிவாய் - கணியன் போன்று காலத்தை அறிவிக்கின்ற.
7. பாஅமை - பரப்பமைந்த, அகன்ற; இதணம் - பரண்; பாசினம் - பசிய கிளியினம்.
8. வணர்குரல்- வளைந்த கதிர்; கடிய - விரட்ட.
9. புணர்வது - பொருந்துவது, கை கூடுவது.

8-9.நாளை நமக்குச் சிறுதினை கடியப் புணர்வது கொல்லோ?

தோழி கூற்று

நற்றிணை 251 **மதுரைப் பெருமருதிளநாகனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

சிறைப்புறமாகச் செறிப்பறிவுறீஇயது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தில் தலைவன் சிறைப்புறமாய் இருப்பதுணர்ந்து, தலைவி இற்செறிக்கப்படவும் கூடும் என்பது உணர்ந்தவளாய்த் தினையை நோக்கிக் கூறுவதுபோலத் தலைவன் கேட்குமாறு தோழி கூறியது.

நெடுநீர் அருவிய கடும்பாட்டு ஆங்கண்,
பிணிமுதல் அரைய பெருங்கல் வாழைக்
கொழுமுதல் ஆய்கனி மந்தி கவரும்
நல்மலை நாடனை நயவாய், யாம்அவன்
அளிபேர் அன்பின், இன்குரல் ஒப்பி,
நின்புறம் காத்தலும் காண்போய், நீ,என்
தளிர்ஏர் மேனித் தொல்கவின் அழிய,
பலிபெறும் கடவுள் பேணி, கலிசிறந்து,
தொடங்குநிலைப் பறவை உடங்குகுரல் கவரும்;
தோடுஇடம் கோடாய், கிளர்ந்து,
நீடினை விளைமோ! வாழிய, தினையே!

தெளிவுரை

“தினையே! நீண்ட அருவி விழுந்து பேரொலி எழுப்புகின்ற இடத்தில் நன்றாய்ப் பிடிப்புண்ட அடிமரத்தைக் கொண்ட மலைவாழையின் கொழுத்த பழத்தைப் பெண்குரங்கு உண்ணும். அத்தகைய வளஞ்சார்ந்த மலைநாட்டுக்குத் தலைவனை நீயும் விரும்பியிரு! நாங்கள் அவனது மிகுதியான அன்பின் திறத்தினாலே இனிய குரலெடுத்துப் பாடி (பறவைகளை ஓட்டி) இத்தினைப்புனத்தைக் காத்துக்கொண்டிருக்கிறோம்; அதனை நீயும் பார்த்திருக்கிறாய்! உன்னைக் காக்கும் பணியினால் தலைவனைக் கண்டு இன்புற்று வருகிறோம். அவனைக் காணோமாயின் தளிர் போன்ற தலைவியின் மேனியழகு அழியும். அதனைத் தாய் காணின் அவளை இல்லக்காவலில் வைப்பாள்; மேலும், பலி பெறும் முருகவேளை வழிபட்டு ஆரவாரத்துடன் வெறியாட்டெடுப்பாள்; அப்படி வெறியாட்டு எடுக்கப்பட்டால் தலைவியால் புனம் காக்க வர இயலாது. சிறுதினையே! கதிர்கள் விளையும் பொழுதிலேயே பறவையினம் ஒருங்குசேரக் கவர்ந்து செல்லும். அவ்வாறு அவை கவர்வதற் கின்றித் தோடு பொதிந்த உன் கதிரின் புறமெல்லாம் சாயாது நிமிர்ந்து நின்று, நெடுநாள் கழித்துக் கதிர் ஈன்று விளையச்செய்! அவ்வாறு செய்தால் உன்னை வாழ்த்துவேன்!”

கருத்து

‘தினையே! இப்போது விளையாதே! விளைந்தால், நீ அறுவடை செய்யப்பட்டுப் புனங் காவல் தேவையற்றதாகிவிடும்; தலைவி வீட்டுக்கு அழைத்துச் செல்லப்படுவாள். தலைவனையும் காண இயலாததாகிவிடும். எனவே, நீ நீண்ட நாள் கழித்து விளைந்திடு! உன்னை வாயார வாழ்த்து வேன்.’

குறிப்பு

தினை விரைந்து விளைந்தால் தலைவி வீடு செல்ல நேரிடும். தலைவனோடு சேர இயலாது. அவள் தன் மேனி அழகை இழப்பாள்; அன்னை ஐயுற்று இற்செறிப்பாள்.

தலைவனிடம் தலைவிக்குள்ள அன்பின் பெருக்கினையும், தினை விளைவதற்குள் அவன் அவளை வரைந்துகொள்ள வேண்டிய இன்றியமை யாமையையும் தோழி உணர்த்தினாள்.

தினை விளையும் காலம் திருமணத்திற்குரிய காலமாகலின், அதனைக் கருத்திற்கொண்டு தலைவன் விரைவில் வரைய முயலவேண்டும் என்பதை உய்த்துணர வைக்கிறாள்.

உள்ளுறை

அருவி ஒலிக்கும் மலையில் செழித்த வாழையின் கனிகளை மந்தி உண்ணும் என்றது, தமரெல்லாம் கூடி மகிழுமாறு தலைவன் மணம் புரிய வந்து, தலைவியைப் பெற்றுத் துய்ப்பான் என்னும் கருத்தை உள்ளுறுத்தியது.

சொற்பொருள்

1. கடும்பாட்டு - கடுமையான ஒலி, பேரொலி (எழுப்புகின்ற); ஆங்கண் - அவ்விடத்தில்.
2. பிணி முதல் அரைய - நன்றாய்ப் பிடிப்புண்ட அடிமரத்தைக் கொண்ட; பெருங்கல் வாழை - மலைவாழை.
3. கொழுமுதல் - கொழுத்த; கவரும் - கவர்ந்து (உண்ணும்).
4. நயவாய் - விரும்பியிரு.
5. அளிபேர் அன்பின் - கருணைமிக்க பேரன்பினால்; இன்குரல் - இனிய குரலால்; ஓப்பி - (உன்னிடமுள்ள தினையைக் கவர வரும் கிளிகளை) ஓட்டி.
6. நின்புறம் - உன் வயற்பரப்பை.
7. தளிர் ஏர்மேனி - தளிர் போன்ற அழகுள்ள மேனி; தொல்கவின் - முந்தைய அழகு.
8. பலி பெறும் கடவுள் - பலியேற்று உண்ணும் கடவுள், முருகன்; கலி சிறந்து - ஆரவாரம் மிக்கு.
9. தொடங்கு நிலை - விளையத் தொடங்கும் பொழுதிலேயே; பறவை உடங்கு - பறவையினம் ஒருசேர; குரல் கவரும் - கதிர்களைக் கவர்ந்து செல்லும்.
10. கிளர்ந்து - நிமிர்ந்து நின்று.
11. நீடினை விளைமோ - விளைவதற்கு நீண்ட காலம் எடுத்துக்கொள்.

தோழி கூற்று

நற்றிணை 194 **மதுரை மருதனிளநாகனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

சிறைப்புறமாகச் செறிப்பறிவுறீஇயது.

கூற்று விளக்கம்

தலைவன் வரைதலை மேற்கொள்ளாது களவிலேயே வந்து செல்கிறான். அந்நிலையில் தோழி, ஒரு நாள் சிறைப்புறத்தில் நின்றுகொண்டிருக்கும் தலைவனுக்குக் கேட்குமாறு தாங்கள் இற்செறிக்கப்பட்டிருப்பதைக் கூறியது.

அம்ம வாழி தோழி! கைம்மாறு
யாதுசெய் வாம்கொல் நாமே, கயவாய்க்
கன்றுடை மருங்கின் பிடிபுணர்ந்து இயலும்
வலன்உயர் மருப்பின் நிலம்ஈர் தடக்கை,
அண்ணல் யானைக்கு அன்றியும், கல்மிசைத்
தனிநிலை இதணம் புலம்பப் போகி,
மந்தியும் அறியா மரம்பயில் ஒருசிறை,
குன்ற வெற்பனொடு நாம்விளை யாட
இரும்புகவர் கொண்ட ஏனல்
பெருங்குரல் கொள்ளாச் சிறுபசுங் கிளிக்கே.

தெளிவுரை

"தலைவியே, நீ வாழ்க! நான் சொல்வதைக் கேள். பெரிய வாயையும், வலிமை மிகுந்த தந்தத்தையும், நிலத்திலே தோய்கின்ற கையையும் கொண்ட பெருமை மிக்க ஆண்யானை, கன்றைத் தன் பக்கத்திலே சேர்த்துக்கொண்டு பெண்யானையுடன் சென்றுகொண்டிருந்தது.

"மலைமேல் அமைக்கப்பெற்ற பரணை, ஆள் எவரும் இல்லாது தனித்திருக்குமாறு விட்டுவிட்டு, மரம் ஏறுவதில் வல்ல மந்திகளும் ஏற இயலாத உயரம் கொண்ட மரங்கள் செறிந்திருக்கும் குன்றுகளையுடைய தலைவனோடு நாம் கூடி விளையாடிக்கொண்டிருந்தோம். அந்த நேரத்தில் அக்களிற்றுயானை

தினைப்புனத்தில் புகுந்து தின்றழித்திருக்கலாம்; ஆனால், அஃது அவ்வாறு செய்யவில்லை. அஃதன்றி, அரிவாளால் அரிந்து கொள்ளப்படுவதான பெரிய தினைக்கதிரைச் சிறிய பச்சைக் கிளிகளும் புனத்தில் புகுந்து பறித்துக்கொண்டு செல்லவில்லை. இவ்வாறு உதவிய யானைக்கும் கிளிக்கும் நாம் என்ன கைம்மாறு செய்ய இயலும்?

கருத்து

தினை முற்றிவிட்டது; இனிப் புனங்காவல் இராது.

குறிப்பு

யானையும் கிளியும் உண்ணும் நிலையில் தினைக்கதிர்கள் இருப்பதைக் கூறியதன்வழி தினை முற்றிவிட்டது என்பதையும், அறுவடை மேற் கொள்ளப்பட்டதும் தலைவி இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்படுவா ளாதலின், தலைவன் அவளைக் காண இயலாது என்பதையும் தோழி குறிப்பாய் உணர்த்தினாள்.

விளக்கம்

"நாம் பரணிலிருந்து விலகித் தலைவனோடு விளையாடிக் கொண்டிருந்த வேளையில் யானைகளும் கிளிகளும் புனத்துள் புகுந்து அழித்திருந்தால் அதை அறிந்து அன்னையும் ஐயன் மாரும் நம்மீது சினங்கொண்டிருப்பர். நம்மை உடனே காவலிலிருந்து நீக்கி வீட்டிற்கும் அனுப்பியிருப்பர். அவ்வாறு ஏதும் நிகழாமல் நாம் தலைவனோடு கூடியிருக்கத் துணை செய்த அவற்றிற்கு நாம் என்ன கைம்மாறு செய்யக்கூடும்! நன்றிதான் கூற இயலும்."

உள்ளுறை

களிறு தன் கன்றோடும் பெண்யானையுடனும் செல்லும் என்றது, 'தலைவனே! நீ விரைந்து மணந்து, மகவைப் பயந்து, இல்வாழ்வு மேற்கொள்ள வேண்டும்' என்பதாம்.

சொற்பொருள்

1. கைம்மாறு - எதிர் உதவி.
2. கயவாய் - பெரிய வாய்.
3. மருங்கு - பக்கம்; பிடி - பெண்யானை; இயலும் - இயங்கும்.

4. வலன் - வலிமை; மருப்பு - தந்தம்; நிலம்மாா - நிலத்தில் தோய்கின்ற; தடக்கை - பெரிய கை.
5. அண்ணல் - பெருமை; கல் - மலை; மிசை - மேலே.
6. தனி நிலை - தனியாய் நிற்கின்ற; இதணம் - குடிசை; புலம்ப - தனித்திருப்ப.
7. மந்தியும் அறியா - மந்தியும் ஏற இயலாத உயரமுள்ள; பயில்தல் - நெருங்கியிருத்தல்; ஒருசிறை - ஒரு பக்கம்.
8. வெற்பன் - மலைநாட்டுக்குத்தலைவன்.
9. இரும்பு கவர் கொண்ட - இரும்பாலாகிய அரிவாளால் அரிந்து கொள்ளப்படுவதான (இரும்பு - கருமை); ஏனல் - தினை.
10. குரல் - கதிர்; கொள்ளா - கவர்ந்து செல்லாத.

தோழி கூற்று

ஐந்திணை ஐம்பது 11 **மாறன் பொறையனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

பகற்குறிக்கண் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் செறிப்பறிவுறீஇயது.

கூற்று விளக்கம்

தலைவன் தினைப்புனச் சிறைப்புறத்தில் இருந்தபோது, அவனுக்குக் கேட்குமாறு தோழி, இல்லத்தில் தலைவி இருத்தி வைக்கப்படவிருக்கும் செய்தியினைத் தலைவியிடம் கூறியது.

பொன்னிணர் வேங்கை கவினிய பூம்பொழிலுள்
நன்மலை நாடன் நலம்புனைய – மென்முலையாய்
போயின சின்னாள் புனத்து மறையினால்
ஏயினார் இன்றி இனிது.

தெளிவுரை

“மென்மையான மார்பகங்களைக் கொண்ட தலைவியே! வளமிக்க மலைகள் நிறைந்த நாட்டுக்குத் தலைவன் தினைப் புனத்திற்கு அருகிலுள்ள வேங்கைமரங்கள் நிறைந்துள்ள

அழகிய சோலையில் உன்னோடு இணைந்தபின் எவர் குறுக்கீடு மில்லாமல் இன்பமாய்ச் சில நாள்கள் கழிந்தன. (இனி எவ்வாறு ஆகுமோ? அறியோம்" என்று தலைவியிடம் தோழி கூறுகிறாள்.)

கருத்து

தினைப்புனங் காவல் இருந்ததால் தலைவனும் தலைவியும் இணைந் திருந்தனர். தினை கொய்யப்பட்டுவிட்டது. ஆதலின், தலைவி இற்செறிக் கப்படுவாள்.

குறிப்பு

சிறைப்புறமாய் உள்ள தலைவனிடம், மறைமுகமாய் இற்செறிப்பை அறிவித்ததோடு, இனித் தலைவியைக் காண இயலாது என்பதையும் தோழி குறிப்பாய் எடுத்துக் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. பொன்இணர் - பொன் போன்ற பூங்கொத்து; கவினிய - அழகிய.
2. நலம் புனைய - உன் நலத்தைப் பாராட்டிட.
3. போயின - கடந்தன; மறையினால் - களவுப்புணர்ச்சியால்.
4. ஏயினார் - இடையூறாய்க் குறுக்கிட்டார்; இன்றி - இல்லாமல்.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 3 **கணிமேதாவியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

பகற்குறிக்கண் வந்த தலைமகனைக் கண்டு தோழி செறிப்பறிவுறீஇயது.

கூற்று விளக்கம்

பகற்குறியில் தலைவியைக் காண வந்த தலைவனிடம், தலைவி, வீட்டுக் காவலில் வைக்கப்படவுள்ளாள் எனத் தோழி கூறியது.

சாந்தம் எறிந்துழுத சாரல் சிறுதினைச்
சாந்தம் எறிந்த இதண்மிசைச் – சாந்தம்
கமழக் கிளிகடியும் கார்மயில் அன்னாள்
இமிழக் கிளியெழா ஆர்த்து.

தெளிவுரை

"மலைப்பக்கத்தில் உள்ள சந்தன மரங்களை வெட்டி, அவ்விடத்தில் உழுது பண்படுத்தித் தினை, பயிர் செய்யப் பெற்றது. அத்தினைப்புனத்தில், சந்தன மரக்கட்டைகளைக் கால்களாய்க்கொண்டு பரண் அமைக்கப்பட்டது. அப்பரண்மீது அமர்ந்து, சந்தனக் குழம்பு உடம்பில் மணக்கும்படி கிளிகளைக் கார் கால மயிலைப் போன்ற எம் தலைவி ஓட்டிக்கொண்டிருந்தாள். அவள் வாய் திறந்து 'ஆலோ' என்று கூவியும் (அவள் குரல் கிளிக்குரல் போல இருந்தமையால்) கிளிக்கூட்டம் புனத்தை விட்டு நீங்காமல் ஆர்ப்பரித்துக்கொண்டிருந்தது." (ஆதலால், பிறரைத் தினைப்புனத்திற்குக் காவல் வைத்து, அவளை வீட்டிற்கு அழைத்துக்கொள்ளவிருக்கின்றனர் என்று தோழி தலைவனிடம் கூறி, அவளை அடைய வேண்டுமெனின் திருமணம் செய்துகொள்வதே தக்கது என்று உணர்த்தினாள்.)

கருத்து

தினைப்புனம் காத்திருந்த தலைவி விரைவில் வீட்டுக்கு அழைத்துச் செல்லப்படுவாள். (நீ அவளை அடைய வேண்டுமெனின் திருமணம் செய்து கொள்வதே தக்கது.)

சொற்பொருள்

1. சாந்தம் - சந்தன மரம்; எறிந்து - வெட்டி.
2. சாந்தம் எறிந்த - சந்தனக்கட்டைகளைக்கொண்டு அமைத்த; இதண் - பரண்.
3. கடியும் - ஓட்டும்; கார்மயில் - கார் காலத்தில் தோகையை விரித்துத் தோன்றும் மயில்.
4. இமிழ - வாய் திறந்து கூவியும்; கிளி ஆர்த்து எழா - கிளிகள் (புனத்தை விட்டு எழாமல்) ஆர்ப்பரித்துக்கொண்டிருந்தன.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 224 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இற்செறிப்பு உணர்ந்த தலைமகள் ஆற்றாளாய்த் தலைமகன் சிறைப் புறத்தானாகத் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தாய் தன்னை வீட்டுச்சிறையில் வைக்கவிருப்பதை அறிந்த தலைவி, மனைக்கு அருகில் வந்து நிற்கும் தலைவன் காதில் விழுமாறு தோழியிடம் கூறியது.

அம்ம! வாழி, தோழி! நம்மலை
மணிநிறங் கொண்ட மாமலை வெற்பில்
துணிநீர் அருவி நம்மோடு ஆடல்
எளிய மன்னால், அவர்க்கு;இனி,
அரிய ஆகுதல் மருண்டனென், யானே.

தெளிவுரை

"தோழியே! வாழ்க! நான் கூறுவதைக் கேள். நம் மலைநாட்டில் உள்ள நீலமணிபோல ஒளிவிடும் மலைகளிலிருந்து விழும் தெளிந்த அருவிநீரில் நம்மோடு சேர்ந்து ஆடுவது நம் தலைவர்க்கு இதுவரையில் எளிதாயிருந்தது; இனி அஃது அரிதாயிற்று."

கருத்து

தலைவி இதுவரை தினைப்புனம் காத்ததால் தலைவன் தலைவியோடு அருவியாடி மகிழ முடிந்தது. தினை அறுவடை செய்யப்பெற்றதால், தலைவி இனித் தினைப்புனம் வர இயலாது.

விளக்கம்

"நம்மோடு அருவியாடுதல் தலைவர்க்கு இதுவரை எளிதா யிருந்தது; இற்செறிப்பினால் அஃது இனி அரியதாகும்; ஆதலின், நான் மனம் மயங்குகின்றேன்" என்றாள், தலைவி.

குறிப்பு

தன்னைத் தமர் இற்செறித்ததைத் தலைவி குறிப்பால் உணர்த்துவதோடு, விரைவில் மணந்துகொள்ள வரவேண்டும் என்பதனையும் வற்புறுத்துகிறாள்.

சொற்பொருள்

2. மணி நிறம் - நீலமணியின் நிறம்; மாமலை - பெரிய மலை; வெற்பு - பக்க மலைகள்.
3. துணி - தெளிந்த; ஆடல் - நீராடல்.
4. எளிய - எளிதாயிருந்தது; அவர்க்கு - தலைவற்கு; இனி - இனிமேல்.
5. மருண்டனென் - மனம் மயங்குகின்றேன்.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 5 **கணிமேதாவியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் சிறைப்புறத்தானாக, தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தோழி செறிப்பு அறிவுறீஇயது.

கூற்று விளக்கம்

தலைவியைத் தேடி வந்த தலைவன் வேலிப்புறமாய் நின்றிருக்க, அதை அறிந்த தோழி, தலைவி இனி வீட்டுக்காவலில் வைக்கப்படுவாள் என்பதைத் தலைவன் கேட்கும்படியாய்த் தலைவியிடம் கூறியது.

வினைவிளையச் செல்வம் விளைவதுபோல் நீடாப்
பனைவிளைவு நாமெண்ணப் பாத்தித் – தினைவிளைய
மையார் தடங்கண் மயிலன்னாய் தீத்தீண்டு
கையார் பிரிவித்தல் காண்.

தெளிவுரை

தோழி, தலைவியை நோக்கி, "மை பூசப்பெற்ற கண்களைக் கொண்ட மயில் போன்ற சாயலைப் பெற்ற தலைவியே! களவில் நீ தலைவனைச் சந்தித்துப் பெரிய அளவில் இன்பம் பெறுவது

ஒருபுறமிருக்கட்டும். அதற்கு இடையூறாய், ஒருவனுக்கு நல்வினை வந்து சேர்வதால் செல்வம் பெருகுவதுபோலப் பாத்தியில் தினை விளைந்துவிட்டது. வேங்கை மரம் நெருப்புப் பரவியது போலப் பூப்பூத்து, தினை கொய்ய வேண்டிய நாள் வந்துவிட்டது எனத் தெரிவிக்கிறது. அதனால், தினைப்புனம் காக்கும் பொறுப்பி லிருந்து விடுவித்து உன்னை வீட்டுக்காவலில் வைத்துவிடுவர். வேங்கை பூத்து அது நம்மைத் தலைவனிடமிருந்து பிரிய வைக்கிறது" என்று கூறினாள்.

கருத்து

தினை கொய்யப்படுமாதலால் தலைவனைப் பகற்குறியில் சந்திக்க இயலாது.

விளக்கம்

'தினை விளைந்து கொய்ய வேண்டிய காலம் வந்துவிட்டது என வேங்கை மரம் பூத்துத் தெரிவித்துவிட்டது. இனி, தினைப் புனம் காக்க உன்னை அனுப்பாது, வீட்டுக்காவலில் வைத்து விடுவர். எனவே, முன்னைப் போல் களவில் பகற்குறியிடத்துத் தலைவனை நீ காண இயலாது' எனத் தோழி, தலைவியிடம் தெரிவிக்கிறாள்.

குறிப்பு

தினைப்புனத்துக்கு அருகேயுள்ள வேங்கை மரங்கள் பூக்குமாயின், தினை முதிர்ந்து கொய்யப்பட்டுத் தலைவி இற்செறிக்கப்படுவாள்.

தலைவியைத் தலைவனிடமிருந்து பிரிப்பதால், வேங்கை மரம் 'வேங்கையார்' என்று எள்ளலாய்க் கூறப்பட்டுள்ளது.

சொற்பொருள்

1. வினை விளைய - ஒருவனுக்கு நல்வினை பெருகுதலினால்; செல்வம் - பொருள்; விளைவதுபோல் - பெருகுவது போல; நீடா - நம்மை விட்டு நீங்கிப்போதல் இல்லாத.
2. பனை - பனை என்னும் அளவைப் போன்று மிக்க (பனை என்பது பேரளவினையும், தினை என்பது மிகச்சிறிய அளவினையும் குறிக்கும் சொற்கள்); விளைவு - இன்பமாகிய விளைவினை; நாம்

எண்ண - நாம் (களவுப் புணர்ச்சியில்) எதிர்பார்த்துக்கொண்டிருக்க; பாத்தி - பாத்தியில்; தினை விளைய - தினைப்பயிர் விளைந்து விட்டமையால்.

3. மைஆர் - மை தீட்டப்பெற்ற; தடங்கண் - அகன்ற கண்; மயில் அன்னாய் - மயில் போன்றவளே!; தீத்தீண்டு - நெருப்புத் தீண்டியது போல.

4. கையார் - வேங்கையார் (வேங்கை மரம்); பிரிவித்தல் - நம்மைத் தலைவனிடமிருந்து பிரியச்செய்தலை; காண் - காணுக.

தோழி கூற்று

நற்றிணை 147 **கொள்ளம்பாக்கனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

சிறைப்புறமாகத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தில் வந்தொழுகும் தலைவன் மணம் புரிந்துகொள்ளாமல் காலம் தாழ்த்தினன். சிறைப்புறமாய் இருக்கும் அவன் கேட்குமாறு அவன் விரைந்து மணம் புரிய வேண்டும் என்னும் கருத்தில் தோழி தலைவியிடம் கூறியது.

யாங்குஆ குவமோ, 'அணிநுதல் குறுமகள்!
தேம்படு சாரல் சிறுதினைப் பெருங்குரல்
செவ்வாய்ப் பைங்கிளி கவர, நீமற்று
எவ்வாய்ச் சென்றனை அவண்'எனக் கூறி,
அன்னை ஆனாள் கழற, முன்நின்று,
'அருவி ஆர்க்கும் பெருவரை நாடனை
அறியலும் அறியேன்; காண்டலும் இலனே;
வெதிர்புனை தட்டையேன் மலர்பூக் கொய்து,
சுனைபாய்ந்து ஆடிற்றும் இலன்'என நினைவிலை
பொய்யல், அந்தோ! வாய்த்தனை; அதுகேட்டு,
தலைஇறைஞ் சினளே அன்னை;
செலவுஒழிந் தனையால், அளியைநீ, புனத்தே.

தெளிவுரை

"தலைவியே! அன்னை உன்னிடம், 'அழகிய நெற்றியினைக் கொண்ட பெண்ணே! தேன் மணம் பரவும் மலைச்சாரலில் அமைந்திருப்பது, நம் தினைப்புனம். அங்குச் சிறிய தினைகளைக் கொண்ட பெரிய கதிர்களைச் சிவந்த வாயினைக் கொண்ட பச்சைக்கிளிகள் கவர்ந்து சென்றனவே! கிளியை விரட்டாது நீ எங்கே சென்றிருந்தாய்?' எனச் சினம் தணியாதவளாய்ப் பலமுறை கேட்டாள். நீயோ, அவள்முன் நின்றபடி, 'மலை நாடனாகிய தலைவனை யான் அறிந்ததுமில்லை; அவனைக் கண்டதும் இல்லை; மூங்கிலாலாகிய கிளிகடி தட்டையைக் கையில் ஏந்திக்கொண்டிருந்தேனேயன்றி, அவனொடு பூக் கொய்தும் சுனை பாய்ந்தும் ஆடியதுமில்லை" எனப் பின் விளைவினைக் கருதாது, பொய்யும் புகலாது, உண்மை நன்கு வெளிப்படும்படி உரைத்துவிட்டாய்! நீ கூறியதைக் கேட்டதும் அன்னையும் நாணித் தலையைத் தாழ்த்துச் சென்றனள். ஆதலால், இனித் தினைப்புனத்திற்குச் செல்வதை நீயே போக்கிக் கொண்டாய்! உன் நிலை இரங்கத்தக்கதாயிற்று. இனி நம் காதலொழுக்கம் என்னாகுமோ என்று அஞ்சுகிறேன்" என்று தலைவியிடம் தோழி கூறினாள்.

கருத்து

அன்னையிடமே தலைவி, பின் விளைவறியாது தன் களவொழுக்கத் தினைப்பற்றிக் கூறிவிட்டாள். எனவே, அவள் இற்செறிக்கப்படுவாள்.

குறிப்பு

இது தோழியின் கற்பனை. இதன்மூலம், தலைவியைக் குறியிடத்தே கூடுதல் இனி இயலாதாதலால் அவளை முறையாய் மணந்துகொள்ள முற்படுவதைத் தவிர வேறு வழியில்லை எனத் தலைவன் உணருமாறு செய்கிறாள்.

சொற்பொருள்

1. அணிநுதல் - அழகிய நெற்றி; குறுமகள் - இளைய மகள்.
2. தேம்படு - தேன் மணம் பரந்திருக்கும்; குரல் - கதிர்.
3. கவர - கவர்ந்து செல்ல.
4. எவ்வாய் - எங்கு; அவண் - அங்கு (தினைப்புனத்திலிருந்து).

5. ஆனாள் - அமையாது; கழற - கடிந்து கேட்க.
6. ஆர்க்கும் - ஒலிக்கும்.
8. வெதிர் - மூங்கில்; புனை - புனையப்பட்ட; தட்டை - கிளி கடியும் கருவி.
9. நினைவிலை - (பின்விளைவு என்னாகும் என்பதை) கருதாது.
10. பொய்யல் - பொய் உரையாமல்; வாய்த்தனை - உண்மையை உரைத்துவிட்டாய்.
11. இறைஞ்சினள் - குனிந்தனள்.
12. செலவு - இனித் தினைப்புனத்திற்குச் செல்லுவதை; அளியை - இரங்கத்தக்கவள்.

தோழி கூற்று

நற்றிணை 258 **நக்கீரர்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி செறிப்பறிவுறீஇயது.

கூற்று விளக்கம்

களவொழுக்கம் மேற்கொண்டுள்ள தலைவன் ஒரு நாள் பகற்குறியிடம் வந்தபோது தோழி மட்டும் அவனைத் தனியே எதிர்ப்பட்டுத் தலைவி அங்கு வாராததற்குக் காரணம் அவள், 'இல்லக் காவலில் இருப்பதே' எனக் கூறியது.

பல்பூங் கானல் பகற்குறி மரீஇச்
செல்வல் கொண்க! செறித்தனள் யாயே;
கதிர்கால் வெம்பக் கல்காய் ஞாயிற்றுத்
திருவுடை வியல்நகர் வருவிருந்து அயர்மார்,
பொற்றொடி மகளிர் புறங்கடை உகுத்த
கொக்குஉகிர் நிமிரல் மாந்தி, எல்பட,
அகல்அங் காடி அசைநிழல் குவித்த
பச்சிறாக் கவர்ந்த பசுங்கண் காக்கை
தூங்கல் வங்கத்துக் கூம்பில் சேக்கும்
மருங்கூர்ப் பட்டினத்து அன்ன,இவள்
நெருங்குஏர் எல்வளை ஒடுவ கண்டே.

தெளிவுரை

"தலைவ! கீழ்த்திசை மலையில் தோன்றிய கதிரவனது கதிர் எரித்தலால் மக்கள் முதலாயினோர் கால்கள் வெதும்பும்படி அமைந்துள்ளது, பகற்பொழுது. அப்போது செல்வமிக்க பெரிய மனைகளில், வருகின்ற விருந்தினரை ஓம்புதற்குப் பொன்தொடியினை அணிந்த மகளிர் உணவு சமைத்தனர். முதலில் உணவின் ஒரு கவளத்தை எடுத்து முற்றத்தில் தெய்வத்துக்குப் பலியாய் இட்டனர். கொக்கின் நகம் போன்ற அப்பலிச்சோற்றினை உண்ட காக்கை, பொழுது சாயும் வேளையில் மீன்கடைகளில் அசைகின்ற நிழலில் குவித்து வைத்துள்ள இறாமீனை உண்ணும். அதன் பின்னர்ப் பசுமையான கண்களைக் கொண்ட அக் காக்கை, கடலில் அலையாலே அசைந்துகொண்டிருக்கும் கலத்தின் கூம்பில் சென்று தங்கும்.

"இத்தகைய தோற்றம் கொண்ட மருங்கூர்ப்பட்டினம் போன்ற அழகும் ஒளியும் பொருந்தியவள், தலைவி. உன்னை அடிக்கடி காண இயலாமையால் அவள் உடல் மெலிந்தாள்; கையில் நெருங்க அணிந்திருந்த வளையல்கள் கழன்றன. அதனைக் கண்ட அன்னை இவ்வேறுபாடு முருகு அணங்கியதால் ஏற்பட்டது என்று கருதினாள். தலைவியை வெளியே செல்லவிடாது வீட்டினுள் காவலில் வைத்துவிட்டாள். அதனால் தலைவி வருதற்கு இயலாது இற்செறிக்கப்பட்டிருப்பதைக் கூற, பல்வேறு மலர்களைக் கொண்ட கடற்கரைச் சோலையில் பகற்குறியைத் தேடி வந்துள்ள உன்னிடம் வந்தேன்," என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

கருத்து

தலைவி இற்செறிக்கப்பட்டிருக்கிறாள். அதனை உன்னிடம் கூறவே நான் இங்கு வந்தேன்.

உள்ளுறை

மகளிர் இட்ட பலிச்சோற்றினை உண்ட காக்கை, அங்காடியில் குவிந்து கிடக்கும் மீனைக் கவர்ந்துண்டு, கடலில் உள்ள கலத்தின் உச்சியில் சென்று தங்கும். இத்தொடர்மூலம், தலைவன் பாங்கற் கூட்டத்தால் பகற்குறி பெற்றும், பாங்கியிற்கூட்டத்தால் இரவுக்

குறி பெற்றும் தலைவியின் நலனைத் துய்த்து இன்புற்றவன், அவளை மணந்துகொள்ளக் கருதாமல் தன் ஊரில் சென்று இனிதே தங்கியிருக்கிறான் என்னும் உள்ளுறைப் பொருள் வெளிப்படுகிறது.

சொற்பொருள்

1. மரீஇ - மருவி.
2. செல்வல் - (வந்து) செல்கிறேன்; கொண்க - தலைவ; செறித்தனள் - இல்லத்திற்கு வெளியே செல்ல இயலாதவாறு அடைத்தனள்.
3. கதிர்கால் - கதிர் எரித்தலால்; வெம்ப - வெதும்ப.
4. வியல்நகர் - அகன்ற இல்லம்; அயர்மார் - ஓம்புவதற்காக.
5. பொற்றொடி - பொன் தொடி - பொன் வளையல்; புறங்கடை - வீட்டிற்குப் பின்புறம், வெளி வாயில்; உகுத்த - சொரிந்த.
6. உகிர் - நகம்; நிமிரல் - சோறு; மாந்தி - உண்டு; எல்பட - பொழுது சாய.
7. அகல் - அகன்ற; அங்காடி - (மீன்) கடை; அசை நிழல் - அசைகின்ற நிழல்.
8. பச்சிறா - பசுஇறா - பசிய இறாமீன்; பசுங்கண் - பசுமையான கண்.
9. தூங்கல் - அசைதல்; வங்கம் - மரக்கலம்; சேக்கும் - தங்கும்.
11. நெருங்கு ஏர்எல்வளை - நெருக்கமும் அழகும் ஒளியும் பொருந்திய வளையல்கள்; ஓடுவ - கழல்வன.

தோழி கூற்று

அகநானூறு 20 **உலோச்சனார்**

திணை : நெய்தல்

கூற்று

பகற்குறி வந்த தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தலைமகன் கேட்பச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியொடு களவொழுக்கத்தில் ஈடுபட்ட தலைவன் ஒரு நாள் பகற்குறியிடத்து வந்து அயலே நின்றான். தோழி, அவன் வந்திருப்பதை

அறியாதவள் போன்று, ஊர் தூற்றும் அலர் கேட்டுத் தாய் தலைவியை வீட்டில் காவற்படுத்தியதை அவனுக்கு உணர்த்தும்பொருட்டு, அவன் கேட்பத் தலைவியிடம் கூறியது.

பெருநீர் அழுவத்து எந்தை தந்த
கொழுமீன் உணங்கல் படுபுள் ஓப்பி,
எக்கர்ப் புன்னை இன்நிழல் அசைஇ,
செக்கர் ஞெண்டின் குண்டுஅளை கெண்டி,
ஞாழல் ஓங்குசினைத் தொடுத்த கொடுங்கழித்
தாழை வீழ்கயிற்று ஊசல் தூங்கி,
கொண்டல் இடுமணல் குரவை முனையின்
வெண்தலைப் புணரி ஆயமொடு ஆடி,
மணிப்பூம் பைந்தழை தைஇ, அணித்தகப்
பல்பூங் கானல் அல்கினம் வருதல்
கவ்வைநல் அணங்கு உற்ற இவ்வூர்,
கொடிதுஅறி பெண்டிர் சொற்கொண்டு, அன்னை
கடிகொண் டனளே தோழி, 'பெருந்துறை
எல்லையும் இரவும் என்னாது, கல்லென
வலவன் ஆய்ந்த வண்பரி
நிலவுமணல் கொட்கும்ஓர் தேர்உண்டு' எனவே.

தெளிவுரை

"தலைவியே! நம் தந்தை கொண்டுவந்த கொழுப்பினைக் கொண்ட மீன்களைக் காயவைத்து வற்றலாக்கும்போது அவற்றில் வந்து படியும் பறவைகளை ஓட்டியபடி, கடற்பரப்பில் மணல்மேட்டில் உள்ள புன்னை மரங்களின் நிழலில் தங்கி இருந்தோம்; சிவந்த நண்டின் ஆழமான வளைகளைத் தோண்டி எடுத்தோம். வளைந்த உப்பங்கழியிலுள்ள தாழை விழுதுகளா லான கயிற்றால், ஞாழல் மரத்தின் உயர்ந்த கிளையிற்கட்டப் பட்ட ஊசலில் ஆடினோம்; கீழ்த்திசைக் காற்றுக் கொண்டுவந்து குவித்த மணலில் குரவைக்கூத்தாடினோம். இவற்றில் சலிப்பு ஏற்பட்டதாயின் வெண்மையான உச்சிகளைக் கொண்ட கடல் அலையில் தோழியருடன் விளையாடி, அழகிய மலர்களாலான பசிய தழையாடையை அழகுற அணிந்துகொண்டோம்.

பல்வேறான பூக்களைக் கொண்ட கடற்கரைச்சோலையில் தலைவனுடன் தங்கியிருந்தோம்.

"இவ்வாறு தங்கியிருப்பதைப்பற்றி நம் ஊரில் பழிச்சொல் கூறுவதையே தொழிலாய்க்கொண்ட, பேயால் பற்றப்பட்டவர் போன்ற பெண்கள் சொன்ன சொற்களை நம் தாய் கேட்டாள். அவற்றைக் கேட்டது மட்டுமன்றிப் பெரிய நீர்த்துறைக்கு, இரவு பகல் என்று பாராது நிலவொளி போன்ற வெண்மணலில், பாகனால் தேர்ந்தெடுக்கப்பட்ட நல்ல குதிரைகள் பூட்டப்பட்ட தேர் ஒன்று 'கல்' என்னும் ஒலியுடன் சுழன்று திரிவதையும் அறிந்தாள். அதனால் நம்மை வீட்டுக்காவலில் வைத்து விட்டாள்; நாம் என்ன செய்வோம்?"

கருத்து

ஊரார் பழிமொழி கேட்டும், தேர் ஒன்று வந்து செல்வதையும் அறிந்து ஐயுற்ற அன்னை தலைவியை வீட்டுக்காவலில் வைத்துவிட்டாள்.

விளக்கம்

'நாம் மீன்வற்றலில் படியும் பறவைகளை ஓட்டி, புன்னை நிற நிழலில் தங்கி, நண்டு வளையினைத் தோண்டி, புன்னை மரத்தில் தாழை விழுதுக்கயிற்றால் கட்டப்பட்ட ஊசலில் ஆடி, மணலில் குரவைக் கூத்தாடி, தோழியரோடு கடல்நீராடி, தழை உடை தரித்துத் தலைவனொடு தங்கியிருந்ததை, அலர் கூறும் பெண்டிர் நம் அன்னையிடம் கூறினர். மேலும், நம் அன்னை கடற்கரைத் துறைக்கு ஒரு தேர் வந்து செல்வதையும் அறிந்தாள். உடனே நம்மை இற்செறிப்புச் செய்துவிட்டாள். நாம் என்ன செய்வோம்' என்று தோழி தலைவியிடம் கூறுவதுபோல, பகற்குறியில் வந்து நிற்கும் தலைவன் கேட்குமாறு சொன்னாள்.

சொற்பொருள்

1. பெருநீர் அழுவம் - கடற்பரப்பு.
2. உணங்கல் - (மீன்) வற்றல்; ஓப்பி - விரட்டி.
3. எக்கர் - மணல்மேடு; அசைஇ - தங்கி.
4. செக்கர் ஞெண்டு - சிவந்த நண்டு; குண்டு - ஆழம்; அளை - வளை; கெண்டி - தோண்டி.
5. ஞாழல் - ஒரு வகை மரம்; கொடுங்கழி - வளைந்த உப்பங்கழி.

6. தாழை - தாழை மரம்; வீழ்கயிறு - விழுது; தூங்கி - ஆடி.
7. கொண்டல் - கீழ்த்திசைக்காற்று; குரவை - குரவைக்கூத்து; முனையின் - வெறுப்புண்டானால்.
8. புணரி - அலை; ஆயம் - விளையாட்டுத்தோழியர்.
9. பைந்தழை - பசிய தழை; தைஇ - உடுத்து; அணித்தக - அழகு விளங்க.
10. அல்கினம் - தங்கியிருந்தோம்.
11. கவ்வை - அலர்; அணங்கு உற்ற - பேய் பிடித்த.
12. கொடிது - கொடுமைத்தொழில்.
13. கடிகொண்டனள் - காவற்படுத்தினாள்.
14. எல் - பகல்; என்னாது - என்று கருதாது; கல் என - 'கல்' என்னும் ஒலியுடன்.
15. வலவன் - தேர்ப்பாகன்; பரி - குதிரை.
16. கொட்கும் - சுழன்று திரியும்.

தோழி கூற்று

நற்றிணை 178 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : நெய்தல்

கூற்று

சிறைப்புறமாகத் தோழி செறிப்பறிவுறீஇயது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியைக் களவில் துய்த்து இன்புறுதலையே விரும்பி வந்துகொண்டிருந்தான். ஒரு நாள் அவன் தலைவியைக் காண அவள் வீட்டு வேலி ஓரமாய் வந்து நின்றான். அப்போது, தோழி, தலைவி வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருப்பதைத் தலைவியோடு உரையாடுவதன் வாயிலாய் அவனுக்குத் தெரிவித்தாள்.

ஆடுஅமை ஆக்கம் ஐதுபிசைந்து அன்ன
தோடுஅமை தூவித் தடந்தாள் நாரை
நலன்உணப் பட்ட நல்கூர் பேடை
கழிபெயர் மருங்கில் சிறுமீன் உண்ணாது,
கைதைஅம் படுசினைப் புலம்பொடு வதியும்

தண்ணந் துறைவன் தேரே கண்ணில்
காணவும் இயைந்தன்று மன்னே; நாணி
நள்ளென் யாமத்தும் கண்படை பெறேஎன்
புள்ஒலி மணிச்செத்து ஓர்ப்ப
விளிந்தன்று மாதுஅவர்த் தெளிந்தஎன் நெஞ்சே.

தெளிவுரை

"*அசைகின்ற மூங்கிலின் உட்பகுதியில் உரிக்கப்பெறும் உரியை மென்மையாய்ப் பிசைந்து வைத்தாற்போன்ற தொகுதியைப் பெற்ற சிறகுகளையும் நீண்ட கால்களையும் கொண்ட நாரையால் நலன் நுகரப்பட்டுச் செயலற்ற பெடைநாரை வருத்தத்தினாலே சோர்வுற்றது. அது உப்பங்கழியில் அலை வந்து மோதிச்செல்லும் கரையோரத்தில் கிடந்து பிறழும் சிறு மீன்களையும் உண்ணாது, தாழை மரத்தின் வளைந்த கிளையில் வருத்தத்தோடு தங்கியிருக்கும். இத்தகைய குளிர்ச்சி பொருந்திய நீர்த்துறையினைக் கொண்ட தலைவன் ஏறிவரும் தேரை முன்பு கண்களாலேனும் கண்டோம். இப்போது அவ்வாறு காண இயலாததாயிற்று. இற்செறிப்பால் நாணம் மிகுந்து நள்ளிரவுப்போதிலும் நான் கண் தூங்காது இருக்கிறேன். பறவையினங்கள் செய்யும் ஒலியை அவர் தேரில் கட்டிய மணிகளின் ஒலியெனக் கருதி ஏமாந்தமையால் அவரை உயிர்த் துணையாய்த் தேர்ந்துகொண்ட என் நெஞ்சம் வலிமையிழந்து சோர்ந்துவிட்டது.*"

கருத்து

இற்செறிக்கப்பட்டிருப்பதால் தலைவனுடைய தேரினையுங்கூடக் காண இயலாது தலைவி சோர்வுற்றுள்ளாள்.

விளக்கம்

"*தலைவியே! தலைவன் வரும் தேரினை இப்போது நம்மால் காண இயலவில்லை. இற்செறிப்பினால் பிறர் கண்ணில் படுதலும் நாணத்தைத் தருகிறது. நள்ளிரவிலும் என் கண்கள் உறங்குவதில்லை; புள்ளினங்கள் ஒலியைக் கேட்குந்தோறும் அவன் தேரின் மணியெனக் கருதி ஏமாந்ததால் என் நெஞ்சமும் வலிமையிழந்து சோர்வுற்றது.*"

உள்ளுறை

ஆண்நாரையால் நலன் உணப்பட்ட நாரைப்பேடை சிறுமீன் களையும் உண்ணக் கருதாது தாழைக்கிளையில் வருத்தமுடன் வீற்றிருக்கும் என்பதன் வாயிலாய், தலைவனால் நலன் நுகரப் பட்ட தலைவியும் உணவை வெறுத்து, தன்னுடல் மிகவும் மெலிவுற இல்லத்தே தனித்து வருந்தியிருப்பாள் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

பெடை நாரை ஆண்நாரையின் வரவை எதிர்நோக்கியிருப்பது போலத் தலைவியும் தலைவன் வரைவொடு வருதலை எதிர் பார்த்திருப்பாள்.

தோழி கூறுவதைக் கேட்கும் தலைவன், விரைந்து வரைவு மேற்கொள்வான் என்பது பயன்.

குறிப்பு

தலைவன் நம்மைத் தழுவிக் கூடுதலை இழந்தேம் என்றாலும், அவன் தேரினைக் கண்டாயினும் சற்றே தெளிவு கொள்வோம். இற்செறிப்பு நேர்ந்ததனால் அவ்வாய்ப்பும் கிட்டாமையால் என் நெஞ்சம் மிகவும் அழிகின்றது.

தலைவியின் நலனைத் தலைவன் நுகர்ந்தமையால், அவள் உண்ணாதும் உறங்காதும் உயிர் வாழ்கின்றாள்.

சொற்பொருள்

1. ஆடு - அசைகின்ற; அமை - மூங்கில்; ஆக்கம் - மூங்கிலின் ஆக்கமாகிய நெல்; ஆக்கம் - ஆக்கப்படுவது; ஐது - மெதுவாய்.
2. தோடு அமை - தொகுதியாய் அமைந்த; தூவி - இறகு; தடந்தாள் - நெடிய கால்.
3. நலன் உணப்பட்ட - பெண்மை நலன் துய்க்கப்பட்ட; நல்கூர்தல் - வருந்துதல்; பேடை - பெண் (நாரை).
4. கழிபெயர் மருங்கில் - உப்பங்கழியின் கரையோரத்தில்.
5. கைதை - தாழை; அம்படு சினை - அழகிய வளைந்த கிளை; புலம்பு - வருத்தம்; வதியும் - தங்கியிருக்கும்.
6. தண்அம் துறைவன் - குளிர்ந்த அழகிய துறையை உடையவன்.
7. இயைந்து அன்று - இயலுவது அன்று, இயலாதது.

8. நள்ளென் யாமம் - 'நள்' என்னும் ஒலியைக் கொண்ட நடுயாமம்; கண் படை பெறேஎன் - கண் மூடி உறங்குதலைப் பெறேன், கண் தூங்காது.
9. புள்ஒலி - பறவைகள் ஒலி; மணி - தேர்மணி; ஓர்ப்ப - கேட்க.
10. விளிந்தன்று - அழிவெய்தியது, சோர்வுற்றது.

தோழி கூற்று

நற்றிணை 63 **உலோச்சனார்**

திணை : நெய்தல்

கூற்று

அலர் அச்சத்தால் தோழி சிறைப்புறமாகச் செறிப்பறிவுறீஇயது.

கூற்று விளக்கம்

இற்செறிப்புச் செய்யப்பட்ட நிலையில் தலைவி இருப்ப, தலைவன் சிறைப்புறத்தானாக, அவன் செவியுறுமாறு தோழி தனக்குத்தானே கூறிக் கொண்டது.

உரவுக்கடல் உழந்த பெருவலைப் பரதவர்
மிகுமீன் உணக்கிய புதுமணல் ஆங்கண்,
கல்லென் சேரிப் புலவல் புன்னை
விழவுநாறு விளங்குஇணர் அவிழ்ந்துடன் கமழும்
அழுங்கல் ஊரோ அறன்இன்று; அதனால்,
அறன்இல் அன்னை அருங்கடிப் படுப்பப்
பசலை ஆகி விளிவது கொல்லோ
புள்உற ஒசிந்த பூமயங்கு அள்ளல்
கழிச்சுரம் நிவக்கும் இருஞ்சிறை இவுளி
திரைதரு புணரியின் கழூஉம்
மலிதிரைச் சேர்ப்பனொடு அமைந்தநம் தொடர்பே.

தெளிவுரை

"பெரிய வலையினைக் கையிலே கொண்டு, வலிமை கொண்ட கடலினுள் சென்று, வருந்தி, மீன் பிடிக்கும் பரதவர்கள்

மிகுதியான மீன்களைப் பிடித்துக்கொண்டு திரும்புவர். புதுமணற்பாங்கான இடத்திலே அம்மீன்களை உலர வைத்து நாம் பாதுகாத்திருப்போம். நம் சேரி 'கல்' என்னும் ஆரவாரத்துடன் விளங்கும். அச்சேரியை அடுத்து மீன் நாற்றம் வீசும் இடத்திலுள்ள புன்னை மரத்தில் பூங்கொத்துகள் ஒருசேர இதழ் விரிப்பதால் விழாவுக்குரியதான மணம் கமழ்ந்துகொண்டிருக்கும். ஆயினும், நம் ஊரவரோ ஆரவாரத்துடன் பழிச் சொற்களைப் பேசும் அறனற்றவராயிருப்பர்.

"பறவைகள் மரங்களில் அமர்ந்ததனால் உதிர்ந்த பூக்கள் கலந்த சேற்றினைக் கொண்ட உப்பங்கழிகள் வழியே நம் தலைவன் தேர் ஓடி வரும். அத்தேரில் வாரினால் நன்றாய்ப் பிணிக்கப்பட்டுள்ள குதிரைகள், அலைகள் கொண்டுவரும் கடல்நீராலே கழுவப்பெறும். அத்தன்மையினைக் கொண்ட கடல்நிலத்திற்குரிய தலைவனோடு நாம் நட்புக்கொண்டிருக்கிறோம். அறனில்லாத அன்னை நம்மை இல்லக்காவலில் வைத்திருப்பதால் அந்நட்பு நம்மைப் பசலைநோய் பற்றும்படி செய்துவிட்டது; இந்நோயால் நாம் இறந்துவிடுதலும் கூடும்."

கருத்து

தலைவன் பிரிவால் தலைவி பசலை நோயுற்றாள்; அதனால் இல்லக் காவலில் வைக்கப்பட்டுள்ளாள். (அவள் துயர் தீரத் தலைவன் அவளை மணந்துகொள்ளவேண்டும்; இன்றேல் அவள் இறந்துபடவும் கூடும்.)

இறைச்சி

மீனை உணக்குதலால் எழுகின்ற புலால் நாற்றத்தைப் புன்னையின் புதுமலரிலிருந்து எழும் புதுமணம் போக்கும் என்னும் தொடர்மூலம், சேரியில் தலைவிக்காக அவள் சுற்றத்தார் பெறக் கருதிய பெரும் பொருளினைத் தலைவன் சான்றோரை அனுப்பித் தருகின்ற அருங்கலம் முதலியவற்றால் போக்கி, மணத்தினை மாட்சிமைப்பட முடிப்பன் என்னும் பொருள் வெளிப்படுகிறது.

உள்ளுறை

கழிச்சேற்றில் ஓடும் குதிரைகளின் உடம்பில் பட்ட சேறு கடல் நீரால் கழுவப்படும் என்பதன்வாயிலாய், களவொழுக்கத்தால்

தலைவிக்கு நேர்ந்துள்ள பழியினை, அவளை வரைந்துகொள்வதன்மூலம் தலைவன் தீர்த்தல் வேண்டும் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. உரவுக் கடல் - வலிமையான கடல்; உழந்த - வருந்திய.
2. உணக்கிய - உலர்த்திய, காயப்போட்ட.
3. கல் என் சேரி - 'கல்' எனும் ஆரவாரத்துடன் விளங்கும் பரதவர் பாக்கம்; புலவல் - புலால் நாற்றம்.
4. விழவு நாறு விளங்கு இணர் - விழாவுக்குரிய மணத்தோடு விளங்கும் பூங்கொத்து; கமழும் - மணம் வீசும்.
5. அழுங்கல் ஊர் - ஆரவாரம் கொண்ட ஊர்.
6. அருங்கடி - அரிய காவல், கடுங்காவல்; படுப்ப - வைத்திருப்பதால்.
7. விளிதல் - இறத்தல்.
8. புள் உற - பறவைகள் அமர; ஒசிந்த - உதிர்ந்த; பூ மயங்கு அள்ளல் - பூக்கள் கலந்த சேறு.
9. கழிச்சுரம் - உப்பங்கழி; நிவக்கும் - மேலே ஓடும்; இருஞ்சிறை - வண்டியோடு நன்றாய்ப் பிணிக்கப்பட்ட; இவுளி - குதிரை.
10. திரைதரு - அலையெழுந்து வரும்; புணரி - கடல்.
11. மலிதிரை - அலைகள் மிகுந்த; சேர்ப்பன் - நெய்தல் நிலத் தலைவன்.

தலைவி கூற்று

குறுந்தொகை 401 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

வேறுபாடு கண்டு இற்செறிக்கப்பட்ட தலைமகள் தன்னுள்ளே கூறிக் கொண்டது.

கூற்று விளக்கம்

இற்செறிக்கப்பட்ட தலைவி, 'நாம் தலைவன் மெய்யைத் தழுவி ஏற்படுத்திக்கொண்ட நட்பு அவனோடு நகைத்து விளையாடுதலையும் நீக்கிவிட்டது' என்று தன்னுள் சொல்லிக்கொண்டது.

அடும்பின் ஆய்மலர் விரைஇ, நெய்தல்
நெடுந்தொடை வேய்ந்த நீர்வார் கூந்தல்
ஓரை மகளிர் அஞ்சி, ஈர்ஞெண்டு
கடலில் பரிக்கும் துறைவனொடு, ஒருநாள்,
நக்குவிளை யாடலும் கடிந்தன்று,
ஐதே கம்ம, மெய்தோய் நட்பே!

தெளிவுரை

அடும்பின் அழகிய மலர் கலந்து தொடுத்த நெடிய நெய்தல் மாலையை அணிந்து, நீரொழுகும் கூந்தலுடன் ஓரை விளையாடும் மகளிரைக் கண்டு அஞ்சிய நண்டு கடலுக்குள் விரைந்தோடும் துறையை உடையவன், தலைவன். களவில் ஒருநாள் அத்தலைவன் மெய்யைத் தழுவி ஏற்படுத்திக்கொண்ட நட்பு, இப்பொழுது அவனோடு நகைத்து விளையாடுதலையும் நீக்கி விட்டது. இஃது என்ன வியப்பு!

கருத்து

தலைவனோடு ஒருநாள் கொண்ட உறவு, இனி அவனைக் கண்டு மகிழ்ந்து நகைத்து விளையாடும் இன்பத்தையும் போக்கிவிட்டது.

குறிப்பு

பகற்குறியிடத்தே தலைவனொடு மெய்யுறு புணர்ச்சி நிகழ்த்தியமையால், தலைவியிடம் வேறுபாடுகள் உண்டாயின. அவற்றை நோக்கிய தாய் அவளை இற்செறித்தாள்.

சொற்பொருள்

1. அடும்பின் - அடும்பங்கொடியின்; ஆய்மலர் - அழகிய மலர்; விரைஇ - கலந்து; நெய்தல் - நெய்தல் மலரினாலான.
2. நெடுந்தொடை - நெடிய மாலை; வேய்ந்த - அணிந்த; நீர்வார் கூந்தல் - நீர் ஒழுகும் கூந்தல்.
3. ஓரை - விளையாட்டு; ஈர்ஞெண்டு - ஈரத்தைக் கொண்ட நண்டு.
4. கடலில் - கடலுக்குள்; பரிக்கும் - விரைந்து ஓடும்.
5. நக்கு - சிரித்து; விளையாடலும் - விளையாடுதலையும்; கடிந்தன்று - நீக்கிவிட்டது.
6. ஐதே - வியப்புக்குரியது; மெய்தோய் - உடலைத் தழுவி; நட்பு - ஏற்படுத்திக்கொண்ட நட்பு.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 115 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

இற்செறிப்புண்ட பின்னும் வரைந்துகொள்ள நினையாது தலைமகன் வந்தானாக, அதனையறிந்த தலைமகள் அவன் கேட்குமாற்றால் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தை அறிந்த தலைவியைப் பெற்றோர் அவளை வீட்டை விட்டு வெளியே செல்லாமல் இற்செறிப்புச் செய்துவிட்டனர். அதன் பின்னரும் திருமணம் செய்துகொள்ள முயலாத தலைவன் மனையருகே வந்து நிற்பதையறிந்த தலைவி, அவன் கேட்குமாறு தோழியிடம் கூறியது.

அம்ம வாழி, தோழி! பல்மாண்
நுண்மணல் அடைகரை நம்மோடு ஆடிய
தண்ணம் துறைவன் மறைஇ,
அன்னை அருங்கடி வந்துநின் றோனே.

தெளிவுரை

"தோழியே! வாழ்க! பல வகையான சிறப்புகளைக் கொண்ட கடற்றுறையுடையவன், நம் தலைவன். நுண்ணிய மணல் பொருந்திய கடற்கரையில் அவன் நம்மோடு விளையாடி மகிழ்ந்திருந்தனன். (அதனையறிந்த அன்னை நம்மை இற்செறிப்புச் செய்தனள்.) இப்போது அவன் யாரும் அறியாமல் மறைந்து வந்து, அன்னையின் கடத்தற்கரிய காவலமைந்த இல்லத்திற்குப் புறத்தே நிற்கிறான்."

கருத்து

அன்னை நம்மை வீட்டுக்காவலில் வைத்திருப்பதால் தலைவன் நம்மைக் காண இயலாது நிற்கிறான்.

குறிப்பு

முன்பு நம்மோடு ஆடியவன் இப்போது மறைந்து நிற்கின்றான். முறையாக மணம் செய்துகொண்டிருந்தால், இப்படி மறைந்து நிற்க வேண்டியதில்லையே எனத் தலைவி குறிப்பிடுகின்றாள்.

சொற்பொருள்

1. பல்மாண் - பல வகையான மாண்புகள்.
2. அடைகரை - நீரடைகரை; ஆடிய - விளையாட்டயர்ந்த.
3. மறைஇ - மறைந்து வந்து.
4. அருங்கடி - கடப்பதற்கு இயலாத காவல்.

தோழி கூற்று

நற்றிணை 267 **கபிலர்**

திணை : நெய்தல்

கூற்று

காப்புக் கைம்மிக்குக் காமம் பெருகிய காலத்துத் தோழி சிறைப்புறமாகச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியின் உடல் வேறுபாடுகளைக் கண்டு, அவளைத் தெய்வம் அணங்கிற்று என்று தாய் கருதினாள்; தலைவியை இல்லத்தில் காவல் வைக்கவும் ஏற்பாடுகள் செய்தாள். அதனால் தலைவியின் காமநோய் மிகுதியாயிற்று. அதுகண்டு வருந்தின தோழி, ஒருநாள் தலைவன் சிறைப்புறமாய் நிற்பதறிந்து அவன் கேட்டுணருமாறு தலைவியிடம் கூறியது.

நொச்சி மாஅரும்பு அன்ன கண்ண
எக்கர் ஞெண்டின் இருங்கிளைத் தொழுதி,
இலங்குஎயிற்று ஏஎர் இன்னகை மகளிர்
உணங்குதினை துழவும் கைபோல், ஞாழல்
மணம்கமழ் நறுவீ வரிக்கும் துறைவன்
தன்னொடு புணர்ந்த இன்அமர் கானல்,
தனியே வருதல் நனிபுலம்பு உடைத்து,என,
வாரேன் மன்யான், வந்தனென் தெய்ய;
சிறுநா ஒண்மணித் தெள்ளிசை கடுப்ப,
இனமீன் ஆர்கை ஈண்டுபுள் ஒலிக்குரல்
'இவைமகன்' என்னா அளவை,
வயமான் தோன்றல் வந்துநின் றனனே.

தெளிவுரை

கடல் மணற்குவியலில் நொச்சியின் அரும்பு போன்ற கண்களைக் கொண்ட நண்டுக்கூட்டம், மணம் கமழும் ஞாழல் மலர்களைத் தம் கால்களால் கிளறிக் கோலமிடுகின்றது. அக்காட்சி அழகிய பற்கள் ஒளிரும் இனிய புன்சிரிப்பினைக் கொண்ட குறமகளிர் தாம் காயவைத்த தினையைக் கைகளாலே துழாவிவிடுவது போன்று தோன்றுகின்றது. இத்தகைய காட்சி கொண்ட துறைக்குரியவன், தலைவன். அவனோடு தலைவி கூடிய இனிய கானற்சோலைக்குத் தலைவியின்றி நான் மட்டும் தனியே செல்வது, மிக்க வருத்தம் தரும் என்று கருதி நான் அங்குச் செல்லாதிருந்தேன்; ஆயினும், ஒரு நாள் அங்கே சென்றேன். அவ்வேளையில் சிறிய நாக்கினைக் கொண்ட ஒள்ளிய மணியின் தெளிந்த ஓசையைப்போன்ற மீனினத்தை உண்ண வந்த பறவைகளின் குரலோசையைக் கேட்டேன். 'இவ்வோசை தலைவனின் தேர் மணிகளின் ஓசையைப் போலுள்ளது' என்று நினைத்த அளவிலேயே வலிய குதிரையை யுடைய தலைவனும் அங்கு வந்து நின்றனன்.

(நினைத்த அளவிலேயே தலைவன் வந்து நின்றாலும் அவன் தலைவியைக் காணுதல் அரிதாகும்படி அவள் இற்செறிக்கப்பட் டாள். இனி முறையுடன் மணம் புரிந்துகொள்ளலே தக்கது என்று தோழி அவனுக்கு உணர்த்தினாள்.)

கருத்து

இற்செறிப்பால் தலைவனைத் தலைவி, கூட இயலாதவள் ஆயினாள் எனப் படைத்து மொழியால் தோழி தலைவனுக்கு உணர்த்தினாள்.

விளக்கம்

"தலைவியே! தலைவனோடு உனக்குக் காதல் தொடர்புண் டாக்கிய இடம் கானற்சோலை ஆகும். ஆதலால், அங்கு நீ இன்றி நான் பல நாள் செல்லாதிருந்தேன். ஆயினும், ஒருநாள் அங்கே சென்றேன். தேர்மணிக் குரல் ஒன்று கேட்டது; அது தலைவனின் தேர்மணி ஓசை போன்றிருந்ததால் அங்கே நின்றேன்; அவ்வளவிலேயே அவன் வந்து என் முன்னே

நின்றான். அத்துணைக் காதலன்பு கொண்டவனை உன் இற்செறிப்பு மிகுதலால் நானும் சென்று காண்பது இயலாத தாயிற்று" என்று தலைவியிடம் தோழி கூறுகிறாள்.

தலைவன் தலைவியை வரைந்துகொள்ளக் கருதாது கள வொழுக்கத்தையே மேற்கொண்டிருந்தான். தலைவியின் காதல் நோயை அன்னை அறிந்தனள் என்பதையும், அதனால் தலைவி இற்செறிக்கப்பட்டாள் என்பதையும், தலைவி அவனின்றி வாழாள் என்பதையும் குறிப்பாலுணர்த்தக் கருதி, தோழி இவ்வாறு கூறினாள்.

மேலும், இதைக் கேட்கும் தலைவன் தலைவியிடம் பெருங் காதல் கொண்டவனாதலின் உடனே மணந்துகொள்ள முற்படு வான் என்றும் நம்புகிறாள்.

இறைச்சி

ஞாழலின் உதிர்ந்த பூவை நண்டு துழாவுமென்னும் இறைச்சி யின் வாயிலாய், தலைவனோடு உறவு கொள்ள இயலாதவாறு இற்செறிக்கப்பட்ட தலைவியை அயலவர் அலர் தூற்றி வருத்துவர் என்னும் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. நொச்சி - நொச்சி மரம்; மா அரும்பு - கருமையான பூ அரும்பு; கண்ண - கண்களைக் கொண்ட.
2. எக்கர் - மணல்மேடு; ஞெண்டு - நண்டு; இருங்கிளை - பெரிய சுற்றம்; தொழுதி - கூட்டம்.
3. எயிறு - பல்; ஏர் - அழகு; இன்னகை - இனிய புன்னகை.
4. உணங்கு - உலர வைக்கப்பட்டுள்ள; ஞாழல் - ஞாழல் மலர்.
5. மணம் கமழ் - மணம் வீசும்; நறுவீ - உதிர்ந்த நறுமலர்கள்; வரிக்கும் - கிளறிக் கோலமிடும்.
6. புணர்ந்த - கூடிய; இன்அமர் - இனிது விரும்பத்தக்க.
7. நனி புலம்பு - மிக்க வருத்தம்.
8. தனியே வாராத நான், ஒரு நாள் வந்தேன்.
9. சிறுநா - சிறிய நாக்கு; ஒண்மணி - ஒள்ளிய மணி; தெள்ளிசை - தெளிந்த இசை; கடுப்ப - போல.

10. இனமீன் - மீன் இனத்தை; ஆர்கை - உண்ணுதற்கு; ஈண்டு புள் - கூடுகின்ற பறவைகள்.
11. இவை மகன் - இவ்வோசை தலைமகனின் தேர் மணிகளின் ஓசையைப் போன்றுள்ளது; என்னா அளவை - என்று நினைத்த அளவிலேயே.
12. வயமான் - வலிய குதிரைகள்; தோன்றல் - தலைவன்.

தோழி கூற்று

நற்றிணை 119 **பெருங்குன்றூர்கிழார்**

திணை : குறிஞ்சி

கூற்று

சிறைப்புறமாகத் தோழி செறிப்பு அறிவுறீஇயது.

கூற்று விளக்கம்

தலைவியைக் களவொழுக்கத்தில் கூடி மகிழத் தலைவன் சிறைப் புறமாய் வந்து நின்றான். அது கண்ட தோழி, தலைவி இற்செறிக்கப் பட்டிருப்பதையும், வேற்று வரைவு நேர்ந்திருப்பதையும், அவன் வரைவோடு வருதல் அன்றி இதற்காக வருந்திப் பயனில்லை என்றும் தலைவன் கேட்குமாறு தனக்குள் கூறிக்கொண்டது.

தினைஉண் கேழல் இரியப் புனவன்
சிறுபொறி மாட்டிய பெருங்கல் அடாஅர்
ஒண்கேழ் வயப்புலி படூஉம் நாடன்
ஆர்தர வந்தனன் ஆயினும், படப்பை
இன்முசுப் பெருங்கலை நன்மேயல் ஆரும்
பன்மலர்க் கான்யாற்று உம்பர், கருங்கலை
கடும்புஆட்டு வருடையொடு தாவன உகளும்
பெருவரை நீழல் வருகுவன், குளவியொடு
கூதளம் ததைந்த கண்ணியன், யாவதும்
முயங்கல் பெறுகுவன் அல்லன்;
புலவி கொளீஇயர்தன் மலையினும் பெரிதே.

தெளிவுரை

“தினையை உண்ணவரும் காட்டுப்பன்றிகள் அஞ்சி நீங்கும் பொருட்டுக் குறவன் பெரிய கல்லால் ஆன பொறியைப் புனத்தில் அமைத்திருந்தான். அதனுள் ஒள்ளிய நிறத்தைக் கொண்ட வலிமையான புலி ஒன்று புகுந்து அகப்பட்டு இறந்துவிட்டது. கொல்லையில் இனிய முசு என்னும் பெரிய ஆண்குரங்கு நல்ல உணவை உட்கொள்ளும். பல்வேறு மலர்கள் நிறைந்த காட்டாற்றின் மேலே உள்ள கரையில் பெரிய கலைமான்கள், சுற்றத்தோடு கூடிய மலையாட்டுக்கூட்டத்துடன் துள்ளித் தாவிக் குதித்தோடும். இத்தகைய பெரிய மலைக்குரிய தலைவன் காட்டுமல்லிகையுடன் கூதள மலரையும் சேர்த்துக் கட்டிய மாலையை அணிந்தவனாய் வருவான். அவன் வந்தும் யாது பயன்? தலைவியைத் தழுவி இன்பம் பெற இயலாது. அதனால் அவன் வருத்தம் மிகக் கொள்வான். அவ்வருத்தம் அவன் மலையினும் பெரிதாய் இருந்தாலும் யாது பயன்?”

கருத்து

மலைநாடன் தலைவியைத் தழுவி இன்புற இயலாது. அதற்காக அவன் எவ்வளவு வருந்தினாலும் பயனில்லை. (தலைவி இற்செறிக்கப்பட்டிருக் கிறாள்; அயலவரும் மணம் பேசி வருகின்றனர்.)

இறைச்சி

கலைமான் மலையாட்டுடன் விளையாடுகிறது. அங்ஙனம் விளையாடினாலும் அது தன் பெண்மானுடன் மட்டுமே இணையும் என்பதன் வாயிலாய், வேற்றவர் வரைவு பேசி வரினும் தலைவி தலைவனுடன் மட்டுமே இணைவாள் என்னும் பொருள் பெறப்படுகிறது.

உள்ளுறை

பன்றிக்கு வைக்கப்பட்ட பொறியில் புலி அகப்பட்டது என்பதன் உள்ளுறைப் பொருள், தலைவன் மணக்க விரும்பும் தலைவியை மணம் பேசி முடிக்க வேற்றவர் வருகின்றனர் என்பதாம்.

சொற்பொருள்

1. கேழல் - பன்றி; இரிய - ஓட; புனவன் - புனத்தைக் கொண்டவன், குறவன்.
2. பொறி - எந்திர அமைப்பு; மாட்டிய - அமைந்த; கல்அடாஅர் - கற்பலகையாலான பொறி.
3. கேழ் - நிறம்; படூஉம் - அகப்படும்.
4. ஆர்தர - யாரால் அழைக்கப்பட்டு; படப்பை - கொல்லை, தோட்டம்.
5. முசு - ஒரு வகைக் குரங்கு; கலை - ஆண்குரங்கு; மேயல் - மேய்ச்சல்; ஆரும் - உண்ணும்.
6. கான்யாறு - காட்டுஆறு; உம்பர் - மேலே.
7. கடும்பு - கூட்டம், இனம்; ஆட்டு - ஆட்டுமந்தை; வருடை - மலை ஆடு; தாவன உகளும் - தாவித் திரியும்.
8. பெருவரை - பெரிய மலை; குளவி - காட்டுமல்லிகை.
9. கூதளம் - ஒருவகை மலர்; ததைந்த - சூட்டிய; கண்ணியன் - தலைமாலையை அணிந்தவன்.
10. முயங்கல் - தழுவுதல், கூடுதல்.
11. புலவி - வருத்தம்; கொளீஇயர் - கொள்ளுதல்.

தோழி கூற்று

ஐந்திணை ஐம்பது 12 **மாறன் பொறையனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

பகற்குறி வந்து பெயர்கின்ற தலைமகனைக் கண்ணுற்றுத் தோழி செறிப்பறிவுறீஇயது.

கூற்று விளக்கம்

பகற்குறி வந்து திரும்பும் தலைவனைப் பார்த்துத் தோழி தலைவியை வீட்டுக்காவலில் வைத்த செய்தியைக் கூறியது.

மால்வரை வெற்ப! வணங்கு குரல்ஏனல்
காவல் இயற்கை ஒழிந்தேம்யாம் – தூஅருவி
பூக்கண் கழூஉம் புறவிற்றாய்ப் பொன்விளையும்
பாக்கம் இதுஎம் இடம்.

தெளிவுரை

பெரிய சிகரங்களைக் கொண்ட மலைநாட்டுக்குரிய தலைவனே! தினை முற்றியதன் காரணமாய் வளைந்த கதிர்களைக் கொண்ட தினைப்புனத்தைக் காவல் செய்கின்ற வாழ்க்கையை நாங்கள் கைவிட்டோம். தூய்மையான அருவிகள் பூக்களைக் கழுவிச் செல்லும் காட்டினைச் சூழ்ந்ததும், பொருட்செல்வம் மிக்கதுமான இப்பாக்கத்திலே எமது இல்லம் அமைந்துள்ளது. (எம்மைக் காணவேண்டுமெனில் நாளைமுதல் அங்கு வா என்று தோழி, தலைவி இற்செறிக்கப்பட்டிருப்பதைத் தலைவனிடம் கூறினாள்.)

கருத்து

பகற்குறி வந்த தலைவனிடம் தோழி, தலைவி இற்செறிக்கப்பட்டுள்ள செய்தியைக் கூறினாள்.

குறிப்பு

நீ வரைவொடு வரின் பொன் போன்ற எம் பாக்கம் இவளை உனக்கு நல்கும் என்னும் குறிப்புப் பொருள் இதன்மூலம் தோன்றக் காணலாம்.

சொற்பொருள்

1. மால் - பெரிய; வரை - சிகரம்; வெற்ப - மலைநாடனே; வணங்கு - வளைந்த; குரல் - கதிர்; ஏனல் - தினைப்புனம்.
2. இயற்கை - இயல்பை; ஒழிந்தேம் - கைவிட்டோம்.
3. பூக்கண் கழூஉம் - பூக்களைக் கழுவிச் செல்லும்; புறவு - காடு.
4. பாக்கம் -கடற்கரை சார்ந்த ஊர்.

தோழி கூற்று

நற்றிணை 68 **பிரான்சாத்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

சிறைப்புறமாகத் தோழி தலைமகளுக்கு உரைப்பாளாய்ச் செறிப்பு அறிவுறீஇயது.

கூற்று விளக்கம்

இரவுக்குறியிடத்தே வந்து தலைவன் ஒரு பக்கம் நிற்பது கண்ட தோழி, 'தலைவி இற்செறிக்கப்பட்டிருக்கிறாள்; இவளை வரைதலே நீ செய்யத்தக்கது' என்பது தலைவனுக்குக் கேட்கும்படியாய்த் தலைவியிடம் கூறியது.

'விளைபாடு ஆயமொடு ஓரை ஆடாது
இளையோர் இல்இடத்து இற்செறித்து இருத்தல்
அறனும் அன்றே ஆக்கமும் தேய்ம்'எனக்
குறுநுரை சுமந்து நறுமலர் உந்தி,
பொங்கிவரு புதுநீர் நெஞ்சுஉண ஆடுகம்,
வல்லிதின் வணங்கிச் சொல்லுநர்ப் பெறினே;
'செல்க'என விடுநள்மன் கொல்லோ? எல்உமிழ்ந்து
உரவுஉரும் உரறும் அரைஇருள் நடுநாள்
கொடிநுடங்கு இலங்கின மின்னி
ஆடுமழை இறுத்தன்று,அவர் கோடுஉயர் குன்றே.

தெளிவுரை

தலைவியே! உயர்ந்த உச்சிகளைக் கொண்ட அவர் மலையில், இருள் செறிந்த நடுயாமத்தில் கொடிபோல ஒடி மின்னல் ஒளி வீசியது; வலிமை மிக்க இடியும் இடித்தது. அதனால் மழை பெய்து, ஆற்றில் சிறிய நுரைகளைத் தாங்கி, நறிய மலர்களை உந்திப் புதுவெள்ளம் பெருகிவரும். (நாம் வீட்டில் அடை பட்டிருக்கிறோம்.) இவ்வேளையில் நம் அன்னையிடம் விரைந்து வந்து, 'விளையாட்டுத் தோழியருடன் விளையாடும் இளமகளை வீட்டில் அடைத்து வைப்பது அறமாகாது; அவ்வாறு செய் வதால் செல்வம் தேய்ந்துவிடும்' என்று பணிவாய்ச் சொல்லு பவர் இருப்பாராயின் அன்னை நம்மை விடுவிப்பாள். நாமும் சிறு

நுரைகளைச் சுமந்தும், நறுமண மலர்களைத் தள்ளியும் பொங்கி வரும் புதுநீரில் நெஞ்சம் களிப்பெய்த விளையாடலாம்.

கருத்து

தலைவியே! இற்செறிக்கப்பட்டிருக்கும் நம்மை அன்னை விடுவித்தால் தலைவனது ஆற்றில் ஓடும் புதுவெள்ளத்தில் நாம் மகிழ்ந்து விளையாட லாம்.

விளக்கம்

"அவனது மலைமுடியில் மின்னலும் இடியும் கூடிய மழைமுகில் தங்கியிருக்கிறது. அதனால் மழை பெய்து அம்மலையிலிருந்து வரும் ஆற்றில் நாளை புதுநீர் பெருகி வருவது உறுதி. நம் அன்னையைக் கண்டு 'இளமகளிரை விளையாடவிடாது வீட்டில் அடைத்திருப்பது அறமாகாது' என வணங்கிய மொழிகளால் வற்புறுத்திச் சொல்வார் இருப்பா ராயின் அன்னையும் நம்மைச் 'செல்க' என அனுப்புவாள். நாமும் புதுநீரில் நெஞ்சு மகிழக் குடைந்து ஆடலாம்" எனத் தோழி தலைவன் காதில் விழுமாறு தலைவியிடம் கூறினாள்.

குறிப்பு

அவனது மலையிலிருந்து வரும் புதுநீராதலின் அதில் குடைந்து விளையாடுவது அவரோடு கூடி ஆடுவதுபோலும் இனிமை வாய்ந்தது என்னும் குறிப்புப் பொருளைக் காணலாம்.

சொற்பொருள்

1. ஆயம் - தோழியர் கூட்டம்; ஓரை - ஒருவகை மகளிர் விளையாட்டு.
2. இல் - வீடு; செறித்தல் - அடைத்தல்.
3. அன்றே - அன்று; ஆக்கம் - செல்வம்; தேய்ம் - தேய்ந்துவிடும்.
4. குறுநுரை - சிறுநுரை; உந்தி- தள்ளியவாறு.
5. நெஞ்சுஉண - நெஞ்சம் நிறைய மகிழ்ந்து; ஆடுகம் - விளையாடுவோம்.
6. வல்லிதின் - விரைவாய்; பெறினே - பெற்றால்.
7. விடுநள் - விடுப்பள்; எல் - இரவு, இருள்.
8. உரவு - வலிமை; உரும் - இடி; உரறும் - இடிக்கும்.
9. நுடங்குதல் - அசைதல்.
10. ஆடும் மழை - பெய்யும் மேகம்; இறுத்தன்று - தங்கியுள்ளது; கோடு - உச்சி.

தலைவி கூற்று

நற்றிணை 236 **நம்பிகுட்டுவனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் சிறைப்புறத்தானாக வற்புறுக்கும் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் வரைந்துகொள்ளாமையால் வருந்தியிருக்கும் தலைவி, அத் தலைவன் சிறைப்புறமாய் வந்திருப்பதையறிந்து அவன் கேட்குமாறு தோழியிடம், 'என் நோய் மிகுந்தது; இனி வாழேன்! ஒருவேளை அவன் மலைக்காற்று என் மெய்யைத் தீண்டினால் பிழைப்பேன். ஆதலின், நான் முன்றிலில் சென்றிருக்க அன்னையிடம் அனுமதி பெற்று வா' என வருந்திக் கூறியது.

நோயும் கைம்மிகப் பெரிதே; மெய்யும்
தீயுமிழ் தெறலின் வெய்தே; ஒய்யென
மன்ற இருக்கையில் சிறிதுஆங்கு உயரிய
முன்றில் கொளினே நந்துவள் பெரிது,என,
நிரைய நெஞ்சத்து அன்னைக்கு உய்த்துஆண்டு
உரைஇனி வாழி தோழி! புரைஇன்று
நுண்ணோர் எல்வளை நெகிழ்த்தோன் குன்றத்து
அண்ணல் நெடுவரை ஆடித் தண்ணென
வியல்அறை மூழ்கிய வளிஎன்
பயலை ஆகம் தீண்டிய, சிறிதே.

தெளிவுரை

"தோழியே! நீ வாழ்க! என்னிடம் உண்டாகியுள்ள காமநோய் அளவு கடந்து பெருகியுள்ளது. கொழுந்துவிட்டுத் தீ எரிவது போல என் உடம்பெல்லாம் சுடுகின்றது. தலைவனோ என் உடம்பை மெலிவித்து, குற்றமில்லாததும், நுண்ணிய வேலைப் பாடமைந்ததும், ஒளி பொருந்தியதுமான என் வளையல்களை நெகிழச்செய்தனன்.

"அவன் மலையில், நெடிய உச்சியில் பரவி நின்று, குளிர்ச்சி ததும்பப்பெற்று, அகன்ற பாறைகளை அளவளாவி வந்த காற்று பசலை படர்ந்த என் மார்பிடத்தைச் சிறிதேனும் தீண்ட வேண்டு மென்று விரும்புகின்றேன்.

"ஆதலால், நீ இப்பொழுதே சென்று, நரகம் போலக் கொடுமை நிரம்பிய நெஞ்சு கொண்ட அன்னையிடம், 'உயர்ந்த நம் மனை முன்றிலில் புறத்திண்ணையில் சிறிது நேரம் இருக்க விட்டால் இவள் நலம் பெறுவாள்' என்று உரைத்து வருக! அவ்வாறு உரைப்பதால் குற்றமாகாது. (அவ்வாறுரைத்து அவள் இசைவைப் பெற்று வருக.)"

கருத்து

"தோழியே! என் காமநோய் மிகுதியாயிற்று. உடலும் வெப்பம் மிகுந்ததாயிற்று. இனியும் உயிர் வாழ்தல் அரிது. ஆயினும், தலைவன் மலையிலிருந்து வீசும் காற்றினால் நான் உய்ந்திருத்தலும் கூடும். எனவே, அன்னையிடம் சென்று, 'இவளை முன்றிலில் இருத்தினால் உய்வாள்' எனச் சொல்வாய்" எனத் தலைவி தோழியிடம் கூறினாள்.

குறிப்பு

முன்றிலுக்குச் செல்ல ஒப்புதல் பெற்று வருமாறுரைப்பதால் முற்றிலும் தான் வீட்டினுள்ளேயே அடைபட்டுள்ளதை அவள் புலப்படுத்துகிறாள்.

'தலைவனது மலையிலிருந்து வீசும் காற்று, சிறிதேனும் என்மீது பட்டால்தான் நலம் பெறுவேன் என்று கூறுவதிலிருந்து அவளது துயர மிகுதியை அறியும் தலைவன், இனியும் வரையாது காலம் நீட்டிப்பின் அவள் இறந்துபடவும் கூடும் எனக் கருதி வரைவுக்கான முயற்சியை விரைந்து மேற்கொள்வான்.

இறைச்சி

மலையில் பரவி, பாறைகளில் அசைந்தாடி வரும் காற்று என் மேனியிற்படின் உய்வேன் என்பதன் இறைச்சிப் பொருள், 'அவன் தோளைப் புல்லி அவன் மடிமிசை கிடந்தால் மகிழ் வேன்' என்பதாகும்.

சொற்பொருள்

1. நோய் - காமநோய்; கைம்மிக - அளவு கடப்ப; மெய்யும் - உடம்பும்.
2. தீயுமிழ் தெறலின் - தீயை உமிழ்ந்தாற்போல வருத்துதலினால்; வெய்தே - சுடுகின்றது; ஒய்யென - விரைவாய்.
3. மன்ற இருக்கையில் - முன்றிலின் எதிரேயுள்ள மன்று வெளியில்; உயரிய - உயர்ந்த.
4. முன்றில் கொளினே - புறத்திண்ணையில் இருக்கச்செய்தால்; நந்துவள் பெரிது - மிகுதியும் நலம் பெறுவள்.
5. நிரையம் - நரகம்; உய்த்து - சென்று.
6. புரை இன்று - (அவ்வாறு உரைப்பதால்) குற்றம் ஒன்றும் இல்லை.
7. நுண் நேர் - நுண்ணிய வேலைப்பாடமைந்த; எல்வளை - ஒளி வீசும் வளையலை; நெகிழ்த்தோன் - கழலச்செய்தவன்.
8. அண்ணல் நெடுவரை - பெரிய நெடிய உச்சியில்; ஆடி - படிந்து; தண்ணென - குளிர்ந்ததாய்.
9. வியல் அறை - அகன்ற பாறை; மூழ்கிய - பரவித் தோய்ந்து வரும்; வளி - காற்று.
10. பயலை - பசலை பரந்த; ஆகம் - மார்பு; தீண்டிய சிறிதே - சற்றே தீண்டும் வண்ணம்.

தலைவன் கூற்று

திணைமாலை நூற்றைம்பது 81 **கணிமேதாவியார்**

திணை : பாலை

கூற்று

தலைமகள் இற்செறிப்புக் கண்ட பின்னை அவள் நீங்கிய புனம் கண்டு ஆற்றானாய் மீள்கின்ற தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவி இற்செறிப்புச் செய்யப்பட்டிருப்பதைத் தலைவன் அறிந்து, அவள் இருந்து நீங்கிய புனத்தைக் கண்டு கூறியது.

கொன்றாய்! குருந்தே! கொடிமுல்லாய்! வாடினீர்
நின்றேன் அறிந்தேன் நெடுங்கண்ணாள் – சென்றாளுக்(கு)
என்னுரைத்தீர்க்(கு) என்னுரைத்தாட்(கு) என்னுரைத்தீர்க்(கு)
என்னுரைத்தாள்
மின்நிரைத்த பூண்மிளிர விட்டு.

தெளிவுரை

"கொன்றை மரமே! குருந்த மரமே! முல்லைக்கொடியே! நீங்கள் வாடிக் காணப்படுகின்றீர். உம் எதிரில் நிற்பவனான நான் உங்கள் வாட்டத்திற்கான காரணத்தை அறிந்துகொண்டேன். முன்புபோல் தலைவி உங்கள் இருப்பிடம் நோக்கி வாராமையே காரணமாகும். நீண்ட கண்களும் அணிகலன்களும் கொண்ட தலைவி இங்கிருந்து போனபோது நீங்கள் என்ன உரைத்தீர்கள்? அதற்குப் பதிலாக அவள் உங்களிடம் என்ன சொன்னாள்? பின்னர், நீங்கள் அவளுக்கு என்ன கூறினீர்கள்? அதற்கு மறுமொழியாய் அவள் செப்பியது என்ன?" எனத் தலைவன் அங்கிருந்த மரம் செடி கொடிகளை நோக்கிக் கேட்கிறான்.

கருத்து

மரஞ்செடிகொடிகாள்! தலைவி இற்செறிக்கப்பட்டிருப்பதால் அவள் உங்களோடு உரையாட இயலவில்லையே என்று வருந்துகிறீர்களா?

சொற்பொருள்

1. கொன்றை, குருந்தம் - மரங்கள்.
2. நின்றேன் - உங்கள் எதிரில் நிற்பவனான நான்; அறிந்தேன் - உங்கள் வாட்டத்திற்கான காரணத்தை அறிந்தேன்; சென்றாளுக்கு - இங்கிருந்து சென்றவளுக்கு (தலைவிக்கு).
3. என் உரைத்தீர்க்கு - என்ன கூறினீர்கள்; என் உரைத்தாட்கு - (அவள்) என்ன கூறினாள்; என் உரைத்தீர்க்கு - (பின் நீங்கள்) என்ன கூறினீர்கள்; என் உரைத்தாள் - அவள் பின்னர் என்ன பதில் கூறினாள்.
4. மின் நிரைத்த - ஒளி பூசிய; பூண் - அணிகலன்; மிளிர விட்டு - ஒளிவிடுமாறு.

தோழி கூற்று

நற்றிணை 376 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி கிளிமேல் வைத்துச் சிறைப்புறமாகச் செறிப்பறிவுறீஇயது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்திலே ஈடுபட்டு ஒழுகும் தலைவன், ஒருநாள் சிறைப்புறத்தில் நிற்பது கண்ட தோழி, அவன் கேட்குமாறு, 'தலைவி, வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளாள்' எனக் கிளியை நோக்கிக் கூறியது.

முறஞ்செவி யானைத் தடக்கையில் தடைஇ,
இறைஞ்சிய குரல பைந்தாள் செந்தினை,
வரையோன் வண்மை போல, பலஉடன்
கிளையோடு உண்ணும் வளைவாய்ப் பாசினம்
குல்லை, குளவி, கூதளம், குவளை,
இல்லமொடு மிடைந்த ஈர்ந்தண் கண்ணியன்,
சுற்றுஅமை வில்லன், செயலைத் தோன்றும்
நல்தார் மார்பன், காண்குறின், சிறிய
நன்குஅவர் அறிய உரைமின்; பிற்றை
அணங்கும் அணங்கும் போலும் அணங்கி,
வறும்புனம் காவல் விடாமை
அறிந்தனிர் அல்லிரோ அறன்இல் யாயே.

தெளிவுரை

முறம் போன்ற பெரிய காதுகளைக் கொண்ட யானையின் துதிக்கையினைப் போன்று தினைக்கதிர்கள் வளைந்து தலை சாய்ந்துள்ளன. அவற்றைப் பசிய அடித்தண்டுகள் தாங்கி நிற்கின்றன. அப்பயிர்களை வரையாது கொடுக்கும் வள்ளல் களாய்க் கருதிப் பரிசிலர்போலக் கூட்டமாய்ச் சுற்றத்தோடும் வந்து தினைக்கதிர்களை உண்ணுகின்ற வளைந்த வாயினைக் கொண்ட பசிய கிளிகளே! முன்பு தலைவன் தலைவியைக் கூடி நீங்கிய பின்னர், அறநெறியில் நில்லாத எம் அன்னை, எம்மை

வருத்தித் தினைப்புனங் காவலுக்குச் செல்லவிடாது நிறுத்தி விட்டாள் என்பதை நீங்கள் அறிவீர்கள்!

இதன் பிறகு வெறியாட்டு நிகழ்த்தித் தாய் வருத்தினாலும் வருத்துவாள். குல்லை, மலைப்பச்சை, கூதளம், குவளை, தேற்றா ஆகிய மலர்கள் கொண்டு புனையப்பட்ட மிகவும் குளிர்ச்சியான பூமாலையை அணிந்து, வரிந்து கட்டிய வில்லைக் கையில் ஏந்திக் கொண்டு எம் தலைவன் தலைவியின்பொருட்டாய் அசோக மர நிழலில் வந்து நிற்பான். அவனை நீங்கள் காண்பீர்களானால் இங்கு நடந்த எல்லாவற்றையும் கூறாவிட்டாலும் சிலவற்றை யேனும் விளக்கிக் கூறித் தலைவியின் துயரத்தைச் சொல்லுங்கள்!

கருத்து

'கிளிகளே! தலைவி இற்செறிக்கப்பட்டுள்ளாள்; தலைவன் அவளைக் காண்பது அரிது' என்று அவனிடம் சொல்லுங்கள்.

விளக்கம்

"தலைவியின் களவுறவு வெளிப்பட்டு, அன்னை அவளைத் தினைப்புனம் காத்தலினின்று நீக்கி, வீட்டுக்காவலில் வைத் துள்ளாள்; வெறியாட்டயர்ந்து துன்புறுத்தவும் கூடும். இனி அவளைக் குறியிடங்களில் சந்திக்க இயலாது. நிலையாய் அடைந்து மகிழ விரைவில் அவளை மணந்துகொள்" எனத் தலைவனுக்குத் தோழி உணர்த்துகிறாள்.

சொற்பொருள்

1. முறஞ்செவி - முறத்தைப் போன்ற காது; தடக்கை - பெரிய துதிக்கை; தடைஇ - வளைந்து.
2. இறைஞ்சிய - தலை தாழ்ந்த; குரல - கதிர்களைக் கொண்ட.
3. வரையோன் - வரையாது வழங்கும் வள்ளல்; வண்மை - வள்ளல் தன்மை.
4. கிளை - சுற்றம், இனம்; பாசினம் - பச்சைக் கிளிகள்.
5. குல்லை, குளவி, கூதளம், குவளை - மலர் வகைகள்; குளவி - காட்டு மல்லி.
6. இல்லம் - தேற்றா மலர்; மிடைந்த - சேர்த்துக் கட்டிய; கண்ணியன் - தலைமாலை அணிந்தவன்.
7. சுற்று அமை - வரிந்து கட்டிய; வில்லன் - வில்லினைக் கொண்டவன்; செயலை - அசோகு.

8. காண்குறின் - காண்பீர்களானால்; சிறிய - இச்சிறிய செய்தியை.
9. பிற்றை - இதன் பின்பு.
10. அணங்கு - தெய்வம்; அணங்கும் போலும் - வெறியாடல் நிகழ்த்தி னாலும் நிகழ்த்துவாள்.
11. அல்லிரோ - அல்லவா; அறன்இல் யாய் - அறமற்ற அன்னை.

தோழி கூற்று

குறுந்தொகை 392 **தும்பிசேர் கீரனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரைவிடைக் கிழத்தியது நிலைமை தும்பிக்குச் சொல்லுவாளாய்ச் சிறைப்புறமாய்த் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் வந்து குறியிடத்தே ஒருசார் ஒதுங்கி நிற்பதை அறிந்தாள், தோழி. அவள், தலைவி இற்செறிக்கப்பட்டதையும், அதனால் வரைந்து கொள்ளுதற்கே உரியள் என்பதையும் தும்பியிடம் சொல்வதுபோல அவன் கேட்குமாறு கூறியது.

அம்ம வாழியோ – மணிச்சிறைத் தும்பி! –
நல்மொழிக்கு அச்சம் இல்லை; அவர்நாட்டு
அண்ணல் நெடுவரைச் சேறி ஆயின்,
கடமை மிடைந்த துடவைஅம் சிறுதினைத்
துளர்எறி நுண்துகள் களைஞர் தங்கை
தமரின் தீராள் என்மோ – அரசர்
நிரைசெலல் நுண்தோல் போலப்
பிரசம் தூங்கு மலைகிழ வோற்கே!

தெளிவுரை

நீலமணி போன்று அழகிய சிறகினைக் கொண்ட தும்பியே! உனக்கு ஒன்று உரைப்பேன்; கேள். நல்ல சொற்களை ஒருவரிடத்தே சென்று சொல்வதற்கு அச்சம் கொள்ள வேண்டியதில்லை. நீ தலைவன் நாட்டில் உள்ள சிறந்த உயரிய மலையை அடைவாயானால் அங்கு வரிசையாய்ச் செல்லும்

கேடயங்களைப் போலத் தேனடைகள் தொங்கிக்கொண் டிருப்பதைக் காண்பாய். அத்தகைய மலைப்பகுதியை உடையவன், தலைவன். அத்தலைவனிடம் கடமை மான்கள் நிறைந்த தோட்டத்தில் அழகிய சிறுதினைப்பயிரிடையே களைக் கொட்டினை எறிவதனால் எழுகின்ற நுண்ணிய புழுதி உடலின்மேல் படிய, களையெடுப்பார் தங்கையாகிய தலைவி, தன் உறவினரை விட்டுப் பிரியாமலே இருக்கின்றாள் என்பதைச் சொல்.

கருத்து

'வண்டே! தலைவி இல்லக்காவலில் உள்ளாள்' என்று தலைவனிடம் சொல்.

விளக்கம்

மலைநாடன் விரைந்து மணந்துகொள்ள வேண்டும் என்பது குறிப்பு. உறவினரை விட்டுப் பிரியாமல் இருக்கிறாள் என்பது காப்பு மிகுதியைச் சுட்டுகிறது.

தும்பி செல்ல வேண்டும் என்பதற்காக மலையில் தேனடைகள் தொங்கும் என்கிறாள்.

தீய சொற்களைக் கூறுவதற்குத்தான் அஞ்ச வேண்டும். நல்ல சொற்களை எப்பொழுதும் யாரிடத்திலும் கூறலாம். தும்பி சொல்வது தலைவன், தலைவி ஆகிய இருவர்க்குமே நன்மை விளைவிக்குமாதலின், தும்பி தலைவனிடம் அஞ்சாது கூற வேண்டும் என்கிறாள், தோழி.

குறிப்பு

தும்பியை விளித்துப் பாடியதால் இப்புலவர் 'தும்பிசேர் கீரனார்' என வழங்கப்பெறுகிறார்; இவர் இயற்பெயரை அறிய இயலவில்லை.

சொற்பொருள்

1. மணிச்சிறை - நீலமணி போலும் சிறகு; தும்பி - வண்டு.
2. நல்மொழி - நல்ல சொல்.
3. அண்ணல் - பெருமை; நெடுவரை - உயர்ந்த மலை; சேறி ஆயின் - சேர்ந்தாய் ஆனால்.
4. கடமை - கடமை மான்; மிடைந்த - நிறைந்த; துடவை - தோட்டம்; அம் - அழகிய.

5. துளர் - களைக்கொட்டு; எறி - வீசி; களைஞர் - களையெடுப்பவர்.
6. தமர் - உறவினர்; தீரான் - விட்டு நீங்காள்; என்மோ - என்று சொல்.
7. நிரைசெலல் - வரிசையாய்ச் செல்லுகின்ற; நுண்தோல் - கேடயம்.
8. பிரசம் - தேனடை; தூங்கும் - தொங்கும்; மலைகிழவோன் - மலைக்கு உரிமையுடையவன்.

தோழி கூற்று

நற்றிணை 60 **தூங்கலோரியார்**

திணை : மருதம்

கூற்று

சிறைப்புறமாக உழவர்க்குச் சொல்லுவாளாய்த் தோழி செறிப்பறி வுறீஇயது.

கூற்று விளக்கம்

தலைவன் சிறைப்புறமாய் நிற்பதறிந்த தோழி, அவனுக்குத் தலைவியின் இற்செறிப்பினை உணர்த்தக் கருதி, உழவரிடம் கூறியது.

மலைகண் டன்ன நிலைபுணர் நிவப்பின்
பெருநெல் பல்கூட்டு எருமை உழவ!
கண்படை பெறாஅது தண்புலர் விடியல்,
கருங்கண் வராஅல் பெருந்தடி மிளிர்வையொடு
புகர்வை அரிசிப் பொம்மல் பெருஞ்சோறு
கவர்படு கையை கழும மாந்தி,
நீர்உறு செறுவில் நாறுமுடி அழுத்தநின்
நடுநரொடு சேறி ஆயின் அவண
சாயும் நெய்தலும் ஓம்புமதி; எம்மின்
மாஇருங் கூந்தல் மடந்தை
ஆய்வளைக் கூட்டும் அணியுமார் அவையே.

தெளிவுரை

மலையைச் செய்து வைத்தாற்போன்ற உயர்ந்த பல நெற் கூடுகளையும் உழுதற்குப் பயன்படும் எருமைகளையும் கொண்டுள்ள உழவனே! இரவெல்லாம் (மறுநாள் செய்ய

வேண்டிய வேலையைப் பற்றியே எண்ணியிருந்ததால்) தூங்காமல், குளிர்ச்சி பொருந்திய இருள் அகலும் வைகறைப் போதில் கண் விழித்தாய்; கரிய கண்களைக் கொண்ட வரால் மீன்களின் பெரிய ஊன் துண்டுகளை, அவை மிளிரும்படியாகக் குழம்பிலே போட்டு, அரிசிச் சோற்றை விரும்பித் திகட்டு மளவுக்கு மிகுதியாய் உண்டாய்; நீர்மிக்க சேற்றிலே நாற்றை நடுதற்கு உழத்தியரோடு சென்று கொண்டிருக்கிறாய்! அவ்வாறு சென்று நாற்று நடும்போது, அவ்வயல்களிலுள்ள வளமிக்க கோரைகளையும், நெய்தல்களையும் பிடுங்கி எறிந்துவிடாது பாதுகாத்து வை! ஏனெனில், மிக்க கரிய கூந்தலைக் கொண்ட தலைவி இற்செறிப்பு நீங்கினால் அந்த அழகிய கோரையை வளையாகவும் நெய்தலைத் தழை உடையாகவும் அணிந்து கொள்வாள்.

கருத்து

தலைவ! தலைவி இற்செறிக்கப்பட்டுள்ளாள்; அதனால் வயலிலுள்ள கோரைகளையும் நெய்தல்களையும் பறிக்க அவளால் வெளியே வர இயலாது.

குறிப்பு

தலைவி இற்செறிக்கப்பட்டுள்ளாள். ஆதலின், கோரையையும் நெய்தலையும் வந்து பறிக்க அவளால் இயலாது. இப்போது பறித்தற் கியலாததால் உழவனை அவற்றைப் பறிக்காது பாதுகாத்து வைத் திருக்குமாறு கேட்டுக்கொள்கிறாள்.

கோரையை வளையாய்க் கையில் கட்டுவதும், நெய்தலின் தழையைத் தழையுடையாய்க் கொள்வதும் அந்நாள் மருதநில மகளிரது வழக்கம்.

உள்ளுறை

உழத்தியர் ஆக்கிய வரால் கறியோடு சோற்றையுண்டு தொழிலில் ஈடுபடச் செல்கிறான் உழவன் என்பதன் வாயிலாய், தலைவியும் தலைவனை மணந்து இல்லத்தலைவியாய்த் திகழ மிகுந்த நாட்டம் கொண்டுள்ளனள் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. நிலைபுணர் - நிலை பொருந்திய; நிவப்பின் - உயர்ந்துள்ள.
2. பல் கூட்டு - பல நெற்கூடுகள்.
3. படை பெறாஅது - தூங்காது; புலர் விடியல் - வைகறைப்பொழுது.
4. வராஅல் - வரால் மீன்; பெருந்தடி - பெரிய ஊன் துண்டு; மிளிர்வை - மிளிரும்படியாய்.
5. புகர்வை - உண்பதற்கு ஏற்பத் தீட்டப்பெற்ற; பொம்மல் - மிகுதி.
6. கவர்வு - விருப்பம்; கழும மாந்தி - திகட்டுமளவுக்கு உண்டு.
7. நீர்உறு - நீர் நிரம்பிய; செறு - வயல்; நாறு முடி - நாற்று முடி; அழுத்த - நடுவதற்காக.
8. நடுநர் - உழத்தியர்; சேறி ஆயின் - சென்றாய் என்றால்; அவண - அங்கே.
9. சாய் - கோரைப்புல்; நெய்தல் - நெய்தல் தழை; ஓம்பு - பாதுகாத்து வை; எம்மின் - எம்முடைய.
10. மா இருங்கூந்தல் - செறிப்புண்டிருக்கும் கரிய கூந்தல்.
11. அழகிய கோரையை வளையாகவும் நெய்தலைத் தழை உடையாகவும் அணிந்துகொள்வாள்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 284 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தினை அரிந்துழிக் கிளியை நோக்கிக் கூறுவாள்போல் சிறைப்புறமாக ஓம்படுத்தது. (ஓம்படுத்தல் - ஒப்புவித்தல்).

கூற்று விளக்கம்

தினையைக் கொய்து தினைப்புனம் வெறுமையாகிவிட்ட பிறகும், தினைப்புனத்தைவிட்டு விலக மனமில்லாத கிளியை நோக்கிக் கூறுபவள் போல, ஒதுங்கி நிற்கும் தலைவனிடம் தோழி தலைவியை ஒப்புவித்துக் கூறியது.

அளிய தாமே, செவ்வாய்ப் பைங்கிளி;
குன்றக் குறவர் கொய்தினைப் பைங்கால்
இருவி நீள்புனம் கண்டும்,
பிரிதல் தேற்றாப் பேரன் பினவே.

தெளிவுரை

குன்றக் குறவர்கள் தினையைக் கொய்த பின்பு தானியங்கள் நீங்கப்பெற்ற அடித்தட்டைகள் நிற்கும் வறிய கொல்லையைக் கண்ட பின்னும், சிவந்த வாயினைக் கொண்ட பசிய கிளிகள் தாம் அப்புனத்தை விட்டுப் பிரிந்து செல்ல மனமில்லாத பேரன்பினைக் கொண்டனவாயுள்ளன. இக்கிளிகள் பெரிதும் இரங்கத்தக்கன.

கருத்து

இவளிடத்தே இன்பப் பயன் கொள்ளும் நீயும், இவள் தளர்வினும் முதுமையினும் இவளைப் பேரன்போடு இன்றேபோலப் பேண வேண்டும்.

விளக்கம்

தாம் முன்பு இனிதுண்டு வாழ்வதற்கேதுவாயிருந்த தினை இப்போது இல்லை என்றாலும் கிளி தினைத் தாளை விட்டுப் பிரியாப் பேரன்பு காட்டுதல்போல, முன்பு இங்கு, போந்துகூடி இன்பம் நுகர்வதற்கேதுவாயிருந்த இவள் இளமை நலம் புதல்வர் பயந்து முதுமை எய்துதலால் மறைந்தாலும் பிரியாத பேரன்புடையவனாகத் தலைவன் வாழவேண்டும் என்று கூறித் தலைவியைத் தலைவனிடம் ஒப்புவித்து வாழ்த்துகிறாள், தோழி.

சொற்பொருள்

1. அளிய தாமே - இரங்கத்தக்க; பைங்கிளி - பசிய கிளி
3. இருவி - அடித்தட்டைகள், அரிதாள்.
4. பிரிதல் தேற்றா - மனமில்லாத.

தலைவன் கூற்று

குறுந்தொகை 199 **பரணர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி செறிப்பு அறிவுறுப்ப நெஞ்சிற்குக் கிழவன் உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவியை இற்செறித்தனர் என்னும் செய்தியைத் தோழி அறிவிக்க, அதனைக் கேட்ட தலைவன் அப்போது தன் நெஞ்சிற்குக் கூறியது.

பெறுவது இயையாது ஆயினும், உறுவதுஒன்று
உண்டுமன் வாழிய நெஞ்சே! திண்தேர்க்
கைவள் ஓரி கானம் தீண்டி
எறிவளி கமழும் நெறிபடு கூந்தல்
மைஈர் ஓதி மாஅ யோள்வயின்,
இன்றை அன்ன நட்பின் இந்நோய்
இறுமுறை எனஒன்று இன்றி,
மறுமை உலகத்தும் மன்னுதல் பெறுமே.

தெளிவுரை

நெஞ்சமே! திண்மையான தேரினையும், கொடுக்கும் தன்மை கொண்ட கையினையும் கொண்டவன், ஓரி வள்ளல். அவனது கொல்லிமலைக் கானத்தில் படிந்து வீசும் கோடைக்காற்றின் மணத்தையும், நெளிவுத் தன்மையையும், மை போன்ற கருமையையும், மிக்க குளிர்ச்சியையும் கொண்ட தலைமுடியோடு மாமை நிறத்தையும் கொண்டவள், தலைவி. அவளோடு இன்று கொண்டதுபோலத் தோன்றும் இந்நட்பினால் ஏற்படும் காமநோய் அழிந்து படாமல் மறுபிறவியிலும் நிலைத்து நிற்கும் தன்மையுள்ளது.

கருத்து

'தலைவியை இப்பிறவியில் பெறுவது இயலாதெனினும் மறுபிறவியிலாவது பெறுவேன் என்பது உறுதி' எனத் தலைவன் தன் நெஞ்சிடம் கூறுகிறான்.

விளக்கம்

அலர் எழுந்ததால் தலைவி இற்செறிக்கப்பட்டதால் தலைவன் அவளைக் காண இயலாததாயிற்று. அப்போது அவன் காம வேட்கை மிக்கவனாய்த் தன் நெஞ்சை நோக்கி, "இந்த நட்பு அழியாதது. இப்பிறவியில் இயலாததாயினும், அடுத்த பிறவி யிலாவது அவளைப் பெறுதல் உறுதி" எனக் கூறி அதனை அமைதிப்படுத்துகிறான்.

சொற்பொருள்

1. இயையாது - இயலாது; உறுவது ஒன்று உண்டு - வருகின்ற நன்மை ஒன்று உண்டு.
2. திண்தேர் - வலிய தேர்.
3. கைவள் - கைவண்மை, கொடுப்பதில் சிறந்த வள்ளல்; ஓரி - கடையெழு வள்ளல்களுள் ஒருவன், வில் எய்வதில் வல்லவன், வல்வில் ஓரி என வழங்கப்படுபவன்; தீண்டி - படிந்து.
4. எறிவளி - வீசுகின்ற காற்று; நெறிபடு - நெளியாய் அமைந்த, அடர்ந்த.
5. மைஈர் ஓதி - கரிய குளிர்ச்சி பொருந்திய கூந்தல்; மாஅயோள் - மாமை நிறம் கொண்டவள்; வயின் - (அவள்) இடத்தில்.
6. இன்றை அன்ன நட்பின் - இன்றைய நட்பினைப் போன்ற.
7. இறுமுறை - அழிதல்; என ஒன்று இன்றி - என்பது ஒன்று இல்லாமல்.
8. மறுமை உலகத்தும் - மறு பிறப்பிலும்; மன்னுதல் பெறுமே - நிலைத்துப் பயன் தரும்.

தலைவன் கூற்று

திணைமாலை நூற்றைம்பது 4 **கணிமேதாவியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகள் இற்செறிந்த காலத்துப் புனத்தின்கண் வந்த தலைமகன் தலைமகளைக் காணாது ஆற்றாது பெயர்கின்றான் சொல்லியது.

கூற்று விளக்கம்

தினைப்புனங் காவலை நீக்கித் தலைவியை இல்லில் இருக்கச்செய்தனர், அவள் பெற்றோர். அதுபோழ்து அவளைக் காண வழக்கம்போல் தினைப் புனத்துக்கு வந்த தலைவன் அங்குத் தலைவியைக் காணாமல் திரும்பும்போது கூறியது.

> கோடாப் புகழ்மாறன் கூடல் அனையாளை
> ஆடா அடகினும் காணேன்போர் – வாடாக்
> கருங்கொல்வேல் மன்னர் கலம்புக்க கொல்லோ
> மருங்குல்கொம் பன்னாள் மயிர்.

தெளிவுரை

'குன்றாத புகழினைக் கொண்ட பாண்டியனது மதுரை நகரைப் போன்றவள், தலைவி. அவளைத் தினைப்புனத்திலும் நான் காண இயலவில்லை. அவள், பூங்கொம்பினைப் போன்ற இடையினைக் கொண்டவள். கூந்தலாகிய அவள் தலைமுடிகள், போர்க்களத்தில் பின்வாங்காத வேற்படையேந்திய மன்னர் அணியும் முதன்மை அணியான முடிபோல ஒன்றுகூடி வளர்ந்து மணப் பருவம் எய்தியதைக் காட்டினவோ?' எனத் தலைவன் தனக்குத் தானே கூறிக்கொண்டான்.

கருத்து

தலைவியின் கூந்தலாகிய தலைமுடிகள் முடிந்துகொள்ளும்வண்ணம் வளர்ந்து கூடி, அவள் முதுக்குறைவினைக் காட்டியதால் அவளை இற்செறித்தனரோ? (முதுக்குறைவு - பெண் பூப்படைதல்.)

குறிப்பு

தலைவியின் தலைமுடி ஐவகையாய்ப் பகுக்கப்பட்டு முடி இடப்படும் அளவுக்கு வளர்ந்துள்ளதால், அவள் மங்கைப்பருவம் அடைந்தாளென்று எண்ணித் தாய், தன் மகளை இல்லக்காப்பில் வைத்துள்ளாள் எனத் தலைவன் கருதுகிறான்.

சொற்பொருள்

1. கோடா - குறையாத; மாறன் - பாண்டியன்; கூடல் - மதுரை மாநகர்; அனையாளை - போன்றவளை.

2. ஆடா அடகு - மகளிர் விளையாட்டுப்பண்ணை. (அடகு - கீரை, பண்ணை - பண்ணை என்பதற்குக் கீரை, விளையாடுமிடம் என்னும் பொருள்கள் உண்டு). ஆடா - அடா. ஆடுதல் - சமைத்தல். ஆதலால், விளையாடுமிடம் சமைத்தற்கியலாப் பண்ணை எனப் பட்டது); போர் - போர்க்களத்திலே; வாடா - பின்வாங்காத.
3. கருங்கொல் - இரும்புக்கொல்லுத்தொழிலைக் கொண்ட; வேல் - வேற்படையினைக் கொண்ட; கலம் - அரசர் அணியும் முதன்மை அணிகலமாகிய முடி; புக்க கொல்லோ - ஒன்றுகூடி வளர்ந்து (முதுக்குறைவினைக்) காட்டினவோ?
4. மருங்குல் - இடைப்பாகமாகிய இடுப்பானது; கொம்பு அன்னாள் - பூங்கொம்பினை ஒத்தவளாகிய அவளது; மயிர் - கூந்தலாகிய முடிகள்.

தலைவன் கூற்று

நற்றிணை 44 **பெருங்கௌசிகனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

இற்செறிப்பின் பிற்றை ஞான்று தலைமகன் குறியிடத்து வந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியின் களவொழுக்கத்தை அறிந்த அன்னை அவளை இற்செறிப்புச் செய்தனள். குறியிடத்திற்கு வந்தபோது அதனை அறிந்த தலைவன் தன் நெஞ்சிடம் கூறியது.

பொருஇல் ஆயமோடு அருவி ஆடி,
நீர்அலைச் சிவந்த பேர்அமர் மழைக்கண்
குறியா நோக்கமொடு முறுவல் நல்கி,
மனைவயின் பெயர்ந்த காலை, நினைஇய
நினக்கோ அறியுநள் நெஞ்சே! புனத்த
நீடுஇலை விளைதினைக் கொடுங்கோல் நிமிரக்
கொழுங்குரல் கோடல் கண்ணிச் செழும்பல,
பல்கிளைக் குறவர் அல்குஅயர் முன்றில்,
குடக்காய் ஆசினிப் படப்பை நீடிய

பல்மர உயர்சினை மின்மினி விளக்கத்துச்
செல்மழை இயக்கம் காணும்
நன்மலை நாடன் காதல் மகளே.

தெளிவுரை

நெஞ்சே! தோட்டத்தில் நீண்ட இலைகளைக் கொண்ட தினைக்கதிர் முற்றியதால் தினைத்தாள் வளைந்துள்ளது. அது நிமிர்ந்து நிற்குமாறு அதனிடமுள்ள கொழுவிய கதிர்களைக் கொய்ய நினைத்தனர், குறவர் குடிமக்கள். பல்வேறு உறவுமுறை கொண்ட அக்குறவர்கள், தினை கொய்வதற்காக ஊராரைக் கூட்டி, விழா எடுத்தனர். அங்ஙனம் விழா எடுத்த முற்றத்தில், குடம் போன்று பழுத்துத் தொங்கும் காய்களைக் கொண்ட ஆசினிப் பலா மரங்களின் கிளைகள், தோட்டம் முழுவதும் பரவி வளர்ந்திருக்கும். அக்கிளைகளில் மின்மினிப்பூச்சிகள் அமர்ந்து ஒளி பரப்பியபடி இருக்க, அந்த வெளிச்சத்தை விளக்காய்க் கொண்டு வானத்தே செல்லுகின்ற மழைமேகத்தின் போக்கினைக் குறவர்கள் அறிவர். அத்தகைய தன்மை கொண்ட மலைநாட்டிற்குரிய தலைவன் மகள், அன்புக்குரிய நம் தலைவி.

ஒப்பற்ற தன் தோழியரோடு அவள் அருவியில் ஆடினாள். அவ்வருவிநீர் அலைத்தலால் விருப்பத்திற்குரிய குளிர்ச்சியான அவள் பெரிய கண்கள் சிவந்தன. அவற்றால் நம்மைக் குறிப்பிட்டு நோக்காது, மறைந்து காணும் பார்வையினையும், புன்னகையினையும் நமக்குத் தந்துவிட்டுத் தன் வீட்டிற்குச் சென்று விட்டாள். அவள் சென்ற பிறகு அவளை விரும்பி இங்கு வந்த நீ, அவளைக் காணுவது எவ்வாறு? (முன்னரே அவளைக் கைப்பற்றியிருக்க வேண்டும்.)

கருத்து

தலைவி இற்செறிக்கப்பட்டுள்ளாள்; இனி, முனைந்து வரைந்து கொண்டதற்குப் பின்னரே அவளை அடைய இயலும் என்பதைத் தலைவன் உணர்கிறான்.

விளக்கம்

களவுநெறியில் தலைவியோடு காதலுறவு கொண்ட தலைவன், அவள் காவல் காக்கும் புனத்திற்கு வந்து, அவளைக்

கண்டு இன்புற்று வந்தான். புனத்தில் கதிர்கள் முற்றியதும் தலைவியின் காவல் பணி முற்றுப்பெற்றது. எனவே, அவள் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பெற்றாள்; பெற்றோர் அவளுக்கு உரிய காவலும் அமைத்தனர். தலைவி தன் வீட்டிற்குச் சென்ற மறுநாள் குறியிடத்திற்கு வந்த தலைவன், தலைவியைக் காண வில்லையெனினும், அங்கு வந்த தோழியால், தலைவி இற்செறிக் கப்பட்டிருப்பதை அறிந்தான். அவளைக் காணாது திரும்பும் போது, முன்பு அவளைக் கண்டபோது பெற்ற இன்பங்களை மனத்தில் நினைத்தபடியே செல்கின்றான். மணம் முடித்தால் மட்டுமே அவளைத் தடையின்றிக் காணவியலும் என்பதையும் உணர்கிறான்.

இறைச்சி

வானத்தில் செல்லும் மேகத்தின் இயக்கத்தை அறியும் திறன் பெற்றவர் குறவர்கள் என்னும் தொடர்மூலம், தலைவியின் உடல் வேறுபாட்டாலே அவளது நிலையைக் கண்டறிந்து அவளை இற்செறித்தனன், அவள் தந்தை என்னும் இறைச்சிப் பொருள் வெளிப்படுகிறது.

உள்ளுறை

குறவர் மின்மினியை விளக்காய்க்கொண்டு மழைமேகத்தின் இயக்கத்தை அறிவர் என்பதன் வாயிலாய், தலைவனும் தோழி கூற்றால் தலைவியின் இயக்கத்தினை அறிய முனைகின்றான் என்பது பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. பொருஇல் - ஒப்பற்ற; ஆயம் - தோழியர் கூட்டம்.
2. நீர் அலை - நீரலைகளால் (மோதப்பட்டு); பேர்அமர் மழைக்கண் - விரும்பத்தக்க குளிர்ச்சியினைக் கொண்ட பெரிய கண்கள்.
3. குறியா நோக்கம் - கடைக்கண் பார்வை; முறுவல் - புன்முறுவல்; நல்கி - தந்து.
4. மனைவயின் பெயர்ந்த - வீட்டிற்குச் சென்ற; காலை - பொழுது; நினைஇய - (அவளை) நினைத்து வந்த.
5. நினக்கோ - உனக்கோ; அறியுநள் - அறியப்படுபவள் (ஆவளோ).

6. நீடு இலை - நீண்ட இலைகளைக் கொண்ட; விளை தினை - விளைந்த தினைப்பயிர்; கொடுங்கோல் - வளைந்த தாள்; நிமிர - நிமிர்ந்து நிற்குமாறு.
7. கொழுங்குரல் - கொழுவிய கதிர்கள்; கோடல் கண்ணி - கொய்ய நினைத்து.
8. பல்கிளைக் குறவர் - பல்வேறு உறவுமுறை கொண்ட குறவர்கள்; அல்கு அயர் - களிப்போடு விளையாடுகின்ற; முன்றில் - முற்றம்.
9. குடக்காய் - குடம் போன்ற காய்; ஆசினி - ஆசினிப்பலா, பலா வகைகளுள் ஒன்று; படப்பை - தோட்டம்.
10. உயர் சினை - உயர்ந்த கிளை; மின்மினி - மின்மினிப்பூச்சிகள்; விளக்கத்து - வெளிச்சத்தில்.
11. செல்மழை - வானத்தில் செல்லுகின்ற மேகம்.
12. காதல் - அன்பு.

தோழி கூற்று

அகநானூறு 232 **கொடிமங்கலத்து வாதுளி நற்சேந்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி, தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியை மணந்துகொள்ளும் கருத்தின்றிக் களவொழுக் கத்தையே விரும்பி ஒழுகினான்; ஒரு நாள் தலைவன் இரவுக்குறியிடத்துச் சிறைப்புறத்தே வந்து நின்றான்; அது கண்ட தோழி, தலைவன் கேட்பத் தலைவியிடம் கூறியது.

காண்இனி— வாழி, தோழி! பானாள்—
மழைமுழங்கு அரவம் கேட்ட, கழைதின்,
மாஅல் யானை புலிசெத்து வெரீஇ,
இருங்கல் விடரகம் சிலம்பப் பெயரும்
பெருங்கல் நாடன் கேண்மை, இனியே,
குன்ற வேலிச் சிறுகுடி ஆங்கண்,
மன்ற வேங்கை மணநாள் பூத்த

மணிஏர் அரும்பின் பொன்வீ தாஅய்
வியல்அறை வரிக்கும் முன்றில், குறவர்
மனைமுதிர் மகளிரொடு குரவை தூங்கும்
ஆர்கலி விழவுக்களம் கடுப்ப, நாளும்
விரவுப்பூம் பலியொடு விரைஇ, அன்னை
கடியுடை வியல்நகர்க் காவல் கண்ணி,
'முருகு'என வேலன் தரூஉம்
பருவ மாகப் பயந்தன்றால், நமக்கே.

தெளிவுரை

மூங்கிலைத் தின்னும் பெரிய யானை, நள்ளிரவில், மேகம் முழங்கும் இடியொலியைக் கேட்டது; அவ்வொலியினைப் புலியின் முழக்கொலி எனக் கருதி அஞ்சி, பெரிய மலைக்குகையெலாம் எதிரொலிக்குமாறு பேரொலி எழுப்பிப் பெயர்ந்தோடும். இத்தகைய காட்சி கொண்ட பெரிய மலை பொருந்திய நாட்டினை உடையவன், நம் தலைவன்.

குன்றங்களை வேலியாய்க் கொண்ட சிறிய ஊர்மன்றத்தில் வேங்கை மரங்கள் மணநாளை அறிவிப்பனபோல் பூத்து நின்றன; மணியை ஒத்த அம்மரங்களின் அரும்புகள் பொன்னிறப் பூக்களாய் மலர்ந்து உதிர்ந்து பரவி, அகன்ற பாறைகளால் ஆன முற்றத்தினை அழகு செய்யும்; அம்முற்றத்திலே குறவர்கள் தம் வீட்டில் உள்ள ஆடல் வல்ல மகளிரோடு குரவைக்கூத்து ஆடுவர்; அங்ஙனம் ஆடும் ஆரவாரமிக்க விழாக் களத்தைப் போன்று நம் அன்னை நாள்தோறும் பூக்கள் பலவற்றைப் பலியாகப் பரப்பி, முன்னரே காவல் அமைந்த நமது இல்லத்தைத் தெய்வத்தால் தீங்கு நேராவண்ணம் காத்திடக் கருதினாள். நமது மெலிவு முருகனால் ஏற்பட்டது என்று கருதி வெறியாடல் நடத்த வேலனை அழைக்கும் காலமாய் நமக்கு இக்காலம் அமைந்தது.

தலைவி! தலைவனின் நட்பு வெறியாடலில் முடிந்தது.

கருத்து

"தலைவியே! நான் சொல்வதை அறிந்துகொள். நம் மெலிவு முருகனால் ஏற்பட்டது என்று கருதி நம் அன்னை நம்மை இல்லக்காவலில் வைத்துள்ளாள்; அவள் நாளும் பூவைப் பலியொடு விரவிப் படைத்து, வேலனை

அழைக்கும் பருவமாய் இது நமக்கு அமைந்துவிட்டது" என்று தோழி தலைவன் கேட்கத் தலைவியிடம் கூறினாள்.

சொற்பொருள்

1. காண் - எண்ணிப்பார்; பானாள் - பால் நாள் - நடு இரவு.
2. மழை - மேகம்; கழை - மூங்கில்.
3. மாஅல் - பெரிய; செத்து - கருதி; வெரீஇ - அஞ்சி.
4. விடரகம் - மலைக்குகை; சிலம்புதல் - ஒலித்தல்.
5. கேண்மை - நட்பு.
6. குன்ற வேலி - குன்றங்களை வேலியாய்க் கொண்ட.
7. மணநாள் பூத்த - மணநாளை அறிவிப்பது போலப் பூத்தன.
8. ஏர் - ஒத்த; பொன் வீ - பொன் போன்ற மலர்; தாஅய் - பரவி.
9. வியல் அறை - அகன்ற பாறைகளை; வரிக்கும் - அழகுறுத்தும்; முன்றில் - முற்றம்.
10. தூங்கும் - ஆடுவர்.
11. ஆர்கலி - ஆரவாரம் மிக்க.
12. விரவுப் பூம் பலி - விரவிய பலவகைப் பூக்களாகிய பலி; விரைஇ - பரப்பி.
13. கடி - காவல்; வியல் நகர் - அகன்ற வீடு.
14. தரூஉம் - அழைக்கும்.
15. பயந்தது - விளைந்தது, அமைந்தது.

தோழி கூற்று

குறுந்தொகை 263 **பெருஞ்சாத்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

'அன்னை வெறி எடுக்கக் கருதாநின்றாள்; இனி யாம் இதற்கு என்கொலோ செயற்பாலது?' எனத் தோழி, தலைமகட்குத் தலைமகன் சிறைப்புறமாய்க் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவியிடம் தோன்றிய புதுப் பொலிவுகளைக் கண்ட தாய், அவளைத் தெய்வம் வருத்தியது என்று ஐயுற்று, வேலனை அழைத்து வெறியாட்டிற்கு

ஏற்பாடு செய்தாள். அதனைத் தலைவனுக்கு உணர்த்தி, தலைவியை மணந்துகொள்வதற்குத் தூண்டக் கருதிய தோழி, அவன் சிறைப்புறத்தே நின்றபோது தலைவியிடம் கூறியது.

மறிக்குரல் அறுத்து, தினைப்பிரப்பு இரீஇ,
செல்ஆற்றுக் கவலைப் பல்இயம் கறங்க,
தோற்றம் அல்லது நோய்க்குமருந்து ஆகா
வேற்றுப்பெருந் தெய்வம் பலஉடன் வாழ்த்தி,
'பேஎய்க் கொளீஇயள் இவள்'எனப் படுதல்
நோதக் கன்றே தோழி! மால்வரை
மழைவிளை யாடும் நாடனைப்
பிழையேம் ஆகிய நாம்இதற் படவே.

தெளிவுரை

தலைவியே! பெரிய மலைகளில் எப்போதும் மேகம் விளையாடிக் கொண்டிருக்கும் நாட்டிற்குத் தலைவனாகிய நம் காதலரிடம், நாம் மாசற்ற அன்பு கொண்டவர்களாய் இக் களவொழுக்கத்தில் ஒழுகி வருகின்றோம். இதையறியாத நம் தாய், (வேலனை அழைத்து) ஆட்டுக்குட்டியை அறுத்து, தினையுடன் தானியங்களைப் பரப்பி, ஆற்றிடைக்குறையாகிய மணல்மேட்டிலே பல வகை இசைக்கருவிகளும் ஒலி செய்ய, நம் நோய்க்கு மருந்தாகா, வேறான தெய்வங்கள் பலவற்றை ஒருங்கே வழிபட்டு வாழ்த்தி, 'இவள் பேயால் பற்றிக்கொள்ளப்பட்டவள்' என்று சொல்லச் செய்தல் வருந்துதற்கு உரியது.

கருத்து

'தாய் வெறியாட்டெடுக்கக் கருதியுள்ளாள்; இனி நாம் என் செய்வது?'

குறிப்பு

எவ்வளவு பெரிய தெய்வமானாலும் அது நம் காமநோய்க்கு மருந்தாவதில்லை எனத் தோழி குறித்தனள். தலைவியின் நோய்க்கு மருந்து தலைவன் ஒருவனே என்பது இதனால் உணர்த்தப்பட்டது.

சொற்பொருள்

1. மறிக்குரல் - ஆட்டுக்குட்டியின் கழுத்து; பிரப்பு - தானியங்கள்; இரீஇ - இருத்தி, பரப்பி.

2. செல் ஆறு - ஓடுகின்ற ஆறு; கவலை - ஆறு இருபுறமும் பிரிய நடுவில் அமைந்துள்ள மணல்மேடு (அரங்கம்); பல் இயம் - பல வகையான வாச்சியங்கள்; கறங்க - ஒலிக்க.
3. தோற்றம் - (அம்மேட்டில் செய்யும் பூசையில்) தோன்றும் தெய்வம்; அல்லது - அத்தெய்வம் அல்லாத மற்றவை.
4. வேற்றுப் பெருந்தெய்வம் - வேறு பெரிய தெய்வங்கள்; பல - பலவற்றையும்; உடன் வாழ்த்தி - ஒருங்கு வாழ்த்தி.
5. பேஎய்க் கொளீஇயள் இவள் - இவள் பேயால் பற்றப்பட்டவள்; எனப்படுதல் - என்று கூறப்படுவது.
6. நோதக்கன்று - வருந்துதற்குரியது; மால்வரை - பெரிய மலை.
7. மழை - மேகம்.
8. பிழையேம் ஆகிய நாம் - தவறு இல்லாதவர்களாகிய நாம்; இதன் பட - இந்தக் களவொழுக்கத்திலே ஈடுபட்டிருக்கவும் (இதனை அறியாமல்).

தலைவி கூற்று

நற்றிணை 51 **மதுரைப் பேராலவாயர்**

திணை : குறிஞ்சி

கூற்று

ஆற்றது ஏதமஞ்சி வேறுபட்டாள் வெறியாடல் உற்றவிடத்துச் சிறைப் புறமாய்ச் சொல்லியது.

கூற்று விளக்கம்

களவு ஒழுக்கத்தில் ஈடுபட்ட தலைவன், தலைவியைக் காண்பதற்காக வந்து வேலி ஓரமாய் நின்றான். அவன் வந்திருப்பதை அறிந்த தலைவி, தோழியை நோக்கித் தலைவன் கேட்குமாறு, அன்னை வெறியாட்டயர வேலனை அழைக்கவிருக்கிறாள் எனக் கூறியது.

யாங்குச்செய் வாம்கொல் தோழி! ஒங்குகழைக்
காம்புடை விடர்அகம் சிலம்ப, பாம்புஉடன்று
ஓங்குவரை மிளிர ஆட்டி, வீங்குசெலல்
கடுங்குரல் ஏறொடு கனைதுளி தலைஇப்
பெயல்ஆ னாதே, வானம்; பெயலொடு

மின்னு நிமிர்ந்தன்ன வேலன் வந்தெனப்
பின்னுவிடு முச்சி அளிப்பு ஆனாதே;
பெருந்தண் குளவி குழைத்த பாஅடி,
இருஞ்சேறு ஆடிய நுதல, கொல்களிறு
பேதை ஆசினி ஒசித்த
வீததர் வேங்கைய மலைகிழ வோற்கே.

தெளிவுரை

தோழியே! தலைவன் வரும் வழி எத்தகையது தெரியுமா? மூங்கில்கள் உயர்ந்து வளர்ந்துள்ள மலைப்பிளவுகளெல்லாம் எதிரொலிக்கும்படியாய் இடி-இடித்துப் பெருமழை பொழி கிறது. இடியினால் வாட்டமுற்று அஞ்சிய பாம்புகள் மலையில் கல்மீது விழுந்து புரண்டு வருந்துகின்றன. மிகுதியாய்ப் பெய்யும் மழையும் நின்றபாடில்லை. அத்தகைய மழையைக் கண்டதும், அவ்வழியில் வரும் தலைவனுக்கு என்ன துன்பம் உண்டாகுமோ எனக் கருதி அஞ்சினேன். அதனால் வேறுபட்ட என் மேனியை நோக்கித் தெய்வம் வருத்தியது எனக் கருதிய அன்னையும் வெறி யாடும் வேலனை அழைத்தாள். அவனும் மின்னல் கொண்டு செய்தது போன்று ஒளிரும் வேலினைக் கைக்கொண்டு வந்தனன். அதனால், பின்னிவிடப்பட்ட கொண்டையில் பூவைச் சூடுவது தவிர்க்க இயலாததாயிற்று.

தலைவன் வரும் வழியில், பரந்த அடியினையும் கரிய சேறு படிந்த நெற்றியையும் கொண்ட யானை, மிகவும் குளிர்ச்சி பொருந்திய காட்டுமல்லிகைக் கொடியை மிதித்து, ஆசினிப் பலா மரத்தை ஒடித்துப் பின்னர்ப் பூக்கள் சிதறிக் கிடக்கின்ற வேங்கைமரத்தினடியில் சென்று தங்கும். அத்தகைய மலைக்கு உரியவனாகிய நம் தலைவனுக்கு நம்மால் என்ன உதவி செய்ய இயலும்? கூறுவாய்.

கருத்து

வெறியாட்டயர்வதற்கு அன்னை வேலனை அழைத்துவிட்டாள். இனி நாம் தலைவனோடு களவிற்கூடி இன்புற வாய்ப்புக் கிட்டாது.

குறிப்பு

வேலன் வருதலும், தலைவியை முன்னிறுத்தி அவள் கூந்தலில் பூவை எடுத்துப் போட்டு நேர்த்திக்கடன் கொடுத்தலும் இயல்பாதலின், தலைவி தன் கொண்டையில் பூச்சூடுதலைத் தவிர்க்க இயலாததாயிற்று (முச்சி அளிப்பு ஆனாதே) என்று கூறினாள்.

உள்ளுறை

காட்டுமல்லிகையை மிதித்த களிறு, சேறு தன் நெற்றியில் அப்பிக்கொள்ள, ஆசினியை முரித்து, வேங்கைமரத்தின்கீழ்த் தங்குமென்பதன் வாயிலாய், தலைவியின் நலனுண்டு அவளை வாடவிட்ட தலைவன், ஊரார் கூறும் பழிச்சொல்லைக் கொண்டவனாய்த் தன் அறியாமையால் இன்னும் மணம் புரியாதிருக்கிறான் என்னும் உள்ளுறைப் பொருள் வெளிப்படு கிறது.

சொற்பொருள்

1. யாங்குச் செய்வாம் கொல்? - நாம் என்ன செய்வோம்?; ஓங்கு கழை - உயர்ந்த மூங்கில்.
2. விடரகம் - மலைப்பிளவு; சிலம்ப - எதிரொலிக்க; உடன்று - வருத்தமுற்று.
3. மிளிர - புரண்டு உழலுமாறு; வாட்டி - வருத்தி; வீங்குசெலல் - மிக்குச் செல்லும்.
4. கடுங்குரல் - கடிய முழக்கம்; ஏறு - இடி; கனை துளி - பெருமழை; தலைஇ - பொழிந்து.
5. பெயல் ஆனாது - இடையறவின்றிப் பெய்தது.
6. மின்னு நிமிர்ந்தன்ன - மின்னலை நேராய் நிறுத்தினாற்போன்று.
7. பின்னுவிடு முச்சி - பின்னிவிடப்பட்ட கொண்டை; அளிப்பு - பூவைச் சூடுவது; ஆனா - நீங்காதாயிற்று.
8. குளவி - காட்டுமல்லிகைக்கொடி; குழைத்த - உழக்கிய; பாவடி - பரந்த அடி.
9. இருஞ்சேறு - கருஞ்சேறு; நுதல - நெற்றியையும்.
10. பேதை - இளைய; ஆசினி - ஆசினிப்பலாமரத்தை; ஒசித்த - முரித்த.
11. வீததர் - மலர்கள் சிந்திக் கிடக்கின்ற; வேங்கைய - வேங்கை மரங்கள் உள்ள; கிழவோன் - உரிமையுடையவன்.

தோழி கூற்று

நற்றிணை 273 **மதுரை இளம்பாலாசிரியன் சேந்தன் கூத்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி தலைமகனது வரவுணர்ந்து தலைமகட்கு உரைப்பாளாய், 'நின் வேறுபாடு தாய்க்குப் புலனாக அவள் வேலனைக் கூவி வெறி அயரும்' என்பதுபடச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியின் மனையோரம் வந்து தலைவன் நின்றான். அதனை அறிந்த தோழி அவன் கேட்குமாறு தலைவியிடம், 'நம் தாய் வெறியயர்தலால், தலைவன் நிலை என்ன ஆகுமோ?' என்று வருந்திக் கூறியது.

இஃதுஎவன் கொல்லோ தோழி! மெய்பரந்து
எவ்வம் கூர்ந்த ஏமுறு துயரம்
வெம்மையின் தான்வருத் துறீஇ நம்வயின்
அறியாது அயர்ந்த அன்னைக்கு வெறிஎன,
வேலன் உரைக்கும் என்ப; ஆகலின்,
வண்ணம் மிகுந்த அண்ணல் யானை
நீர்கொள் நெடுஞ்சுனை நீடிதழ் தலைஇய
கண்போல் நீலம் தண்கமழ் சிறக்கும்
குன்ற நாடனை உள்ளுதொறும்,
நெஞ்சுநடுக் குறூஉம்அவன் பண்புதரு படரே.

தெளிவுரை

தலைவியே! உன் உடல் முழுவதிலும் துன்பம் பரவி நீ வருத்தம் உற்றிருப்பதை அன்னை அறிந்துகொண்டாள். அவள் நம்மிடம் கொண்டுள்ள அன்பினால் அவளும் வருந்தினாள். நமக்கு நேர்ந்தது இன்னதென அறியாததால், அன்னை வெறியாட்டயர்ந்தால், முருகன் வருத்தியதால் நமக்குத் துயரம் உண்டானது என வேலன் உரைப்பான். கருநிறம் பொருந்திய பெருமை மிக்க யானை, நீர் உண்ணும் நெடிய சுனையிலே செழித்த இதழ்களைக் கொண்ட நீல மலர்கள், கண்போல் பூத்துக் குளிர்ச்சி பொருந்தியனவாய் மணம் வீசும். இத்தகைய

காட்சி கொண்ட மலைநாட்டிற்குரிய தலைவன் பண்பு மிக்கவன். அவனை நினைக்குந்தோறும் என் நெஞ்சு நடுங்குகிறது. அவனது நற்பண்பால் உண்டாகிய தொடர்பு இனி எத்தன்மையில் முடியுமோ?

கருத்து

தாய் வெறியாட்டெடுத்தால் வேலன், தலைவியைத் தெய்வம் வருத்தியது என்பான். அதனால் தலைவி இற்செறிக்கப்படுவாள்.

விளக்கம்

இதனை அறியும் தலைவன் உடனே தலைவியை மணந்து கொள்ள உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வான்.

உள்ளுறை

சுனையின் நீரை யானை உண்ணும் என்பது, தலைவன் தலைவியின் இல்லம் வந்து, மணம் புரிந்து, தலைவியின் நலன் துய்ப்பான் என்பதை உள்ளுறுத்தியது.

சொற்பொருள்

1. இஃது எவன் கொலோ? - இஃது என்ன ஆகுமோ? மெய் பரந்து - மேனி முழுவதும் பரவி.
2. எழுறு - துன்பம் உறுவித்த; துயரம் - நம் வருத்தம்.
3. வெம்மையின் - (நம்மீது கொண்ட) காதலால்; தான் வருத்துறீஇ - தானும் வருத்தம் மிகுந்து.

3-4.நம்வயின் அறியாது - அதற்குரிய காரணத்தை நம்மிடம் ஆராய்ந் தறியாது; அயர்ந்து - வெறியாட்டயர்ந்த.

6. வண்ணம் - கரிய நிறம்; அண்ணல் - பெருமை.
7. நீடிதழ் - நீடிய இதழ்; தலைஇய - பொருந்திய.
8. கண்போல் நீலம் - கண் போலப் பூக்கும் நீலமலர்; தண்கமழ் - தண்ணிய மணம் கமழும்.
9. உள்ளுதொறும் - நினைக்குந்தோறும்.
10. நடுக்குறூஉம் - நடுங்கச்செய்கிறது; படர் - துன்பம்.

தலைவி கூற்று

அகநானூறு 292 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வெறி அச்சுறீஇத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

இரவுக்குறியில் தலைவன் ஒரு பக்கத்தே வந்து நின்றான். அது கண்ட தலைவி, அவன் வரவை அறியாதவள்போல் அவன் கேட்குமாறு, தாய் வெறியாட்டு நிகழ்த்த எண்ணி கூறியிருப்பதைப் பற்றியும், அவன் இரவில் வரும் வழித் துன்பத்தைப் பற்றியும் தோழியிடம் கூறியது.

கூறாய், செய்வது தோழி! வேறுஉணர்ந்து,
அன்னையும் பொருள்உகுத்து அலமரும், மென்முறிச்
சிறுகுளகு அருந்து தாய்முலை பெறாஅ,
மறிகொலைப் படுத்தல் வேண்டி, வெறிபுரி,
ஏதில் வேலன் கோதை துயல்வரத்
தூங்கும் ஆயின், அதூஉம் நாணுவல்;
இலங்குவளை நெகிழ்ந்த செல்லல்; புலம்படர்ந்து,
இரவின் மேயல் மரூஉம், யானைக்,
கால்வல் இயக்கம் ஒற்றி, நடுநாள்,
வரையிடைக் கழுதின் வன்கைக் கானவன்
கடுவிசைக் கவணின் எறிந்த சிறுகல்
உடுஉறு கணையின் போகி, சாரல்
வேங்கை விரிஇணர் சிதறி,தேன் சிதையூஉ,
பலவின் பழத்துள் தங்கும்
மலைகெழு நாடன் மணவாக் காலே!

தெளிவுரை

“*தோழியே! நம் உடல் இளைத்து, நம் வளையல்கள் கழன்றதை நம் தாய் வேறு காரணத்தால் ஏற்பட்டது என்று கருதி, அந்நோய் முருகனால் தீருமெனப் பொருளைச் செலவிட்டு, வேலனை அழைத்து வெறியாடுவதற்கு ஏற்பாடு செய்துள்ளாள். நம் துன்பத்தைப்பற்றி வேலன் யாது அறிவான்? அவனுக்கு,*

தாயின் முலைப்பால் உண்ணுவதைவிட்டு மெல்லிய தளிராகிய தழையுணவை உண்ணக்கூடிய மிகவும் இளமையான ஆட்டுக் குட்டியைப் பலியிடுவதே இன்றியமையாததாய் உள்ளது. மாலை தன் மார்பில் கிடந்தசைய முருக வழிபாட்டை ஆரவாரத்தோடு அவன் செய்ய இருப்பதை நினைத்தால் எனக்கு வெட்கமா யிருக்கிறது.

"இஃது ஒருபுறம் இருக்க, தலைவன் இரவு நேரங்களில் நம்மைக் காண வந்து செல்கிறான். நள்ளிரவில் தினைப்புனத்தில் பரண் மீதிருந்து காவல் செய்யும் கானவன், தினைப்புனத்திற்கு அருகே யானை வாராமல் தடுக்க, அதன் காலடி ஓசை கேட்கும் திசையினை நோக்கிக் கவண்கல் எறிவான். அக்கல் அம்பு போலப் பாய்ந்து சென்று, மலைச்சாரலில் இருந்த வேங்கை மரத்தின் பூங்கொத்துகளைச் சிதறச்செய்து, வேறொரு மரத் திலிருந்த தேனடையைப் பிளந்து, அடுத்து ஒரு பலாப்பழத்தைத் தாக்கி அதனுள் இருந்த சுளைக்குள் புகுந்து தங்கிவிடும் காட்சி கொண்ட மலைநாடுடைய நம் தலைவன் இன்னும் திருமண ஏற்பாட்டைச் செய்யவில்லை. இந்நிலையில் நாம் செய்யத்தக்கது என்ன?"

கருத்து

வெறியாடலுக்கு அன்னை ஏற்பாடு செய்துள்ளாள். தலைவனோ இருளில் காட்டுவழியில் வந்து செல்கிறான். அவன் இன்னும் திருமணத் திற்கான ஏற்பாட்டைச் செய்யவில்லை. இந்நிலையில் நாம் என்ன செய்வது?

விளக்கம்

வேலன் வெறியாட முனைந்தது இளைய ஆட்டுக்குட்டியைக் கொல்வதற்காகவேயன்றி, வேறு எதற்கும் அன்று.

உள்ளுறை

வேடுவன் எறிந்த கல், வேங்கையின் பூக்களைச் சிதறச்செய்து, தேனடையைச் சிதைத்து, பலாச்சுளையுள் தங்கிவிடும் என்பது, வெறியாடலால் எழுகின்ற பழி, தலைவன் குறியிடத்துக்கு வருவதைத் தடுத்து, தலைவியின் இன்பத்தை அழித்து, உள்ளத் திலேயே தங்கும் என்னும் கருத்தினை உணர்த்துகிறது.

சொற்பொருள்

1. வேறு உணர்ந்து - (நம் நோய்) வேறு காரணத்தால் உண்டானது என்று கருதி.
2. பொருள் உகுத்து - பொருளைச் சொரிந்து; அலமரும் - மனம் சுழலும்; மென் முறி - மெல்லிய தளிர்.
3. சிறு குளகு - சிறிய தழையுணவு; தாய்முலை பெறாஅ - தாயின் முலைப்பாலை உண்ணுவதை விட்டு.
4. மறி - ஆட்டுக்குட்டி; வெறிபுரி - வெறியாடலைச் செய்யும்.
5. ஏதில் - யாதும் தொடர்பில்லாத; வேலன் - வெறியாட்டாளன்; கோதை - மாலை; துயல்வர - அசைந்தாட.
6. தூங்கும் ஆயின் - வெறியாடுவானானால்; நாணுவல் - நாணப்படுவேன்.
7. செல்லல் - துன்பம்; புலம் படர்ந்து - வேற்றுப்புலம் சென்று.
8. மேயல் - மேய்தலை; மரூஉம் - பொருந்தி வரும்.
9. கால்வல் இயக்கம் - கால் ஊன்றி நடக்கும் வலிய நடையை; ஒற்றி - கூர்ந்து அறிந்து; நடுநாள் - நள்ளிரவில்.
10. வரையிடை - மலைக்கு இடையேயுள்ள; கழுது - பரண்; வன்கை - வலிய கை; கானவன் - வேட்டுவன்.
11. கடுவிசை - விரைந்து செல்லுதலைக் கொண்ட.
12. உடு உறு - இறகினைப் பொருந்திய; கணை - அம்பு.
13. விரிஇணர் - விரிந்த பூங்கொத்துகளை; தேன் - தேனடை; சிதையூஉ - அழித்து.
14. பலவின் - பலா மரத்தின்; தங்கும் - தங்கிவிடும்.
15. மணவாக்கால் - மணந்துகொள்ளாவிடில் (செய்வது கூறாய் தோழி).

தலைவி கூற்று

குறுந்தொகை 360 **மதுரை ஈழத்துப் பூதன் தேவன்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் சிறைப்புறத்தானாக, வெறி அஞ்சிய தோழிக்குச் சொல்லு வாளாய்த் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தாய் வெறியாட்டு எடுக்க எண்ணியதைக் கூறி அஞ்சிய தோழியிடம் தலைவி, "தலைவன் இங்கே வாராதிருப்பது நன்றாம். அதனால் துன்பம் உண்டாயினும், பின் இனிதாய் முடியும்" என்று கூறியது.

> வெறிஎன உணர்ந்த வேலன் நோய்மருந்து
> அறியான் ஆகுதல் அன்னை காணிய;
> அரும்படர் எவ்வம் இன்றுநாம் உழப்பினும்,
> வாரற்க தில்ல தோழி! சாரல்
> பிடிக்கை அன்ன பெருங்குரல் ஏனல்
> உண்கிளி கடியும் கொடிச்சிகைக் குளிரே
> சிலம்பின் சிலம்பும் சோலை
> இலங்குமலை நாடன் இரவி னானே.

தெளிவுரை

தோழியே! பொறுத்தற்கரிய பிரிவுத்துயரால் இன்றைக்கு நாம் வருந்தினாலும் எனது நோயைத் தீர்ப்பதற்கு வழி வெறி யாடுதலே எனத் தெளிந்த வேலன், அந்நோய்க்குரிய மருந்தினை அறியாதவன் என்பதை நம் அன்னைக்கு உணர்த்தியாக வேண்டும். மலைச்சாரலில் பிடியானையின் கையையொத்த பெரிய தினைக்கதிர்க் கொத்துகளிலுள்ள தினையை உண்ணு தற்கு வந்து படியும் கிளிகளை ஓட்டும் குறமகளின் கையிலுள்ள 'குளிர்' என்னும் கிளிகடிகருவி, காற்சிலம்பைப்போல ஒலிக்கின்ற சோலைகள் விளங்கும் மலைநாட்டிற்கு உரியவ னாகிய தலைவன் இரவில் இங்கே வாராதிருக்கட்டும். இதுவே என் விருப்பம்!

கருத்து

தலைவன் இரவு இங்கே வாராதிருக்கட்டும். அதனால் அன்னை என் நோய்க்கு மருந்து 'வெறியாட்டு' எடுத்தல் அன்று என்பதறிவாள்.

விளக்கம்

தெய்வம், மக்கள்மீது ஏறி ஆடுவதை வெறியாட்டென்பர். வெறியாடுவதுடன், தன் கையில் வேலைத் தாங்கி ஆடுவா னாதலின் இவன் வேலன் என்று வழங்கப்படுவான்.

வெறியாடும் இடத்தை அழகுறச்செய்து முருகனை வழிபட்டு வேலன் வெறியாட்டயர்வான். இவ்விடத்தை வெறியாடு களம் என்பர்.

குறிப்பு

தலைவன் இனி இராக்காலத்திலும் வாராதிருக்க! அப்பொழுதுதான் வேலன் என் நோய்க்கான மருந்து அறியாதவன் என்பதை அன்னை உணர்வாள்.

தலைவன் வாராமையால் எனது துன்பம் மேலும் மிகும்; வெறியாட்டு எடுத்தாலும் என் துன்பம் தணியாது. இது கண்டு, வெறியாட்டு இந்நோய்க்கு மருந்து அன்று என்னும் உண்மையை அன்னை உணர்வாள்.

சொற்பொருள்

1. வெறி என உணர்ந்த வேலன் - எனது நோயைத் தீர்க்கும் வழி வெறியாடுதல் என்று தெளிந்த வேலன் (பூசாரி); நோய் மருந்து - என் நோயைத் தீர்க்கும் மருந்து.
2. அறியான் ஆகுதல் - அறியாதவனாய் இருப்பதை; அன்னை காணிய - அன்னை அறியட்டும்.
3. அரும்படர் எவ்வம் - பொறுத்தற்கரிய வருத்தமாகிய துன்பத்தை; உழப்பினும் - அடைந்தாலும்.
4. வாரற்க - இங்கே வாராதிருக்கட்டும்.
5. பிடிக்கை - பெண்யானையின் கை; பெருங்குரல் - பெரிய கதிர்க் கொத்து; ஏனல் - தினை.
6. உண்கிளி - உண்ண வரும் கிளி; கடியும் - ஓட்டும்; கொடிச்சி - குறமகள்; கை - கையில் உள்ள; குளிர் - கிளியை ஓட்டும் கருவிகளுள் ஒன்று.
7. சிலம்பின் - சிலம்பினைப் போல; சிலம்பும் - ஒலிக்கும்.
8. இலங்கும் - விளங்கும்; இரவினான் - இரவுக்காலத்தில்.

தோழி கூற்று

நற்றிணை 47 **நல்வெள்ளியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

சிறைப்புறமாகத் தோழி தலைமகனுக்கு உரைப்பாளாய்த் தலைமகளிடம் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் சிறைப்புறத்தானாய் நிற்க, தோழி, தலைவியிடம், 'அன்னை எடுத்த வெறியாட்டு உன் பசலையைத் தீர்க்கவில்லை. தலைவன் அன்பு செய்யாமையாலேயே அப்பசலை தோன்றிற்று என்று நான் அவனிடம் சென்று சொன்னால் என்ன?' என்று கூறியது.

பெருங்களிறு உழுவை அட்டென, இரும்பிடி
உயங்குபிணி வருத்தமொடு இயங்கல் செல்லாது
நெய்தற் பாசடை புரையும் அஞ்செவிப்
பைதல்அம் குழவி தழீஇ ஒய்யென
அரும்புண் உறுநரின் வருந்தி வைகும்
கானக நாடற்கு, 'இதுஎன' யான்அது
கூறின் எவனோ தோழி! வேறுஉணர்ந்து,
அணங்குஅறி கழங்கின் கோட்டம் காட்டி,
வெறிஎன உணர்ந்த உள்ளமொடு மறிஅறுத்து,
அன்னை அயரும் முருகு,நின்
பொன்நேர் பசலைக்கு உதவா மாறே.

தெளிவுரை

தலைவியே! தலைவனைப் பிரிந்ததனால் உன் மேனியில் ஏற்பட்டுள்ள வேறுபாட்டினைத் தாய் பிறிதொன்றாய்க் கருதினாள்; கழங்கு, அவ்வேறுபாடு தெய்வம் வருத்தியதால் ஏற்பட்டது என்றது; எனவே, முருகனுக்கு வெறியாட்டெடுத்தால் நோய் தீரும் என்று எண்ணினாள்; உடனே, ஆட்டுக்குட்டியை அறுத்துப் பலியிட்டு முருகனை வணங்கினாள். இவ்வெறியாடலும் பொன்னொத்த உன் பசலை நோய் தீர்த்தற்குப்

பயன்படாததைக் கண்டாள். (அதனால் மிகவும் கவலையுற்றுள்ளாள்.)

ஒரு புலி, பெரிய ஆண்யானையைக் கொன்றபோது, அதன் கரிய பெரிய பெண்யானை அதனால் ஏற்பட்ட பிரிவுநோய்த் துன்பத்தோடும் வருத்தத்தோடும், நெய்தலின் பசிய இலை போன்ற அழகிய காதுகளைக் கொண்ட தன் கன்றினை விரைந்து தழுவிக்கொண்டு, ஆற்றுதற்கரிய புண்ணுற்றார் ஒருவரைப் போலத் தான் நின்ற இடத்தினின்றும் நகராது, அப்படியே நிற்பதாயிற்று. இத்தகைய நாட்டினையுடைய நம் தலைவனை அணுகி, 'நீ அன்பு செய்யாமையால் இப்பசலைநோய் தோன்றிற்று' என்று நான் கூறினால் அதனால் வரும் குற்றம் உண்டோ? கூறுக.

கருத்து

நம் இல்லத்தில் தாய் முதலியோர் செய்யும் கட்டு, கழங்கு, வெறி ஆகியவற்றை நான் கானக நாடனாகிய நம் தலைவனிடம் தெரிவித்தால் என்ன?

உள்ளுறை

பெண்யானை, தன் காதற்பெருங்களிற்றை உழுவை கொன்று விட்டதனால் பிரிவுநோய் வருத்தத்தோடு, தான் நின்ற இடத்தினின்றும் நகராது தன் கன்றைத் தழுவியபடி நிற்கும் என்பது, தலைவன் தொடர்பால் ஏற்பட்ட பசலையால் வேறுபட்டுத் தோன்றிய தலைவி, அவனது காதலன்பு ஒன்றையே தழீஇக் கொண்டு வேறு செயலின்றி இருக்கிறாள் என்னும் பொருளை வெளிப்படுத்துகிறது.

சொற்பொருள்

1. உழுவை - புலி; அட்டெனை - கொன்றுவிடவே; இரும்பிடி - பெரிய பெண்யானை.
2. உயங்குதல் - வருந்துதல்; பிணி - காதலால் உண்டாகிய நோய்; இயங்கல் செல்லாது - இயக்கம் எதுவுமின்றி (இடம் விட்டு நகராது).
3. பாசடை - பசிய இலை; அஞ்செவி - அழகிய காது.
4. பைதல் - துன்பம்; ஒய்யெனை - விரைந்து.
5. உறுநரின் - உற்றவர் போல; வைகும் - தங்கும்.

5-6. இது என யான் அது கூறின் - இங்கு நடப்பது இஃது என்று நான் (தலைவனுக்கு) எடுத்துக் கூறினால்.
7. எவனோ? - என்ன?; வேறு உணர்ந்து - (அவனால் உனக்கு உண்டாகிய வேறுபாட்டினை) வேறு ஒன்றாய்ப் பிறழ உணர்ந்து.
8. அணங்குஅறி - தெய்வம் வருத்திற்றா என்று அறிந்துரைக்கும்; கழங்கின் கோட்டம் காட்டி - கழங்கு மாறுபாடு காட்ட.
9. மறி - ஆட்டுக்கிடாய்.
10. அயரும் - செய்யும்; முருகு - முருக வழிபாடு.
11. உதவாமாறே - பயன்படாது என்று.

தோழி கூற்று

நற்றிணை 268 **வெறிபாடிய காமக்கண்ணியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் சிறைப்புறத்தே நிற்பதையறிந்த தோழி, அவன் கேட்குமாறு தலைவியிடம் பேசுவதுபோல 'அன்னை எடுக்கும் வெறிக்களத்துக்கு வரும் வேலனிடமே, 'நாம் தலைவனை விரும்புமளவுக்கு அவன் நம்மை விரும்பாதிருப்பது ஏனோ?' எனக் கேட்போமா?' எனத் தானே படைத்து மொழிந்து தலைவியின் வேட்கை மிகுதியைத் தலைவன் உணருமாறு செய்தது.

சூருடை நனந்தலைச் சுனைநீர் மல்க,
மால்பெயல் தலைஇய மன்நெடுங் குன்றத்துக்
கருங்கால் குறிஞ்சி மதனில வான்பூ
ஓவுக்கண் டன்ன இல்வரை இழைத்த
நாறுகொள் பிரசம் ஊறும் நாடற்குக்
காதல் செய்தலும் காதலம் அன்மை
யாதனிற் கொல்லோ? – தோழி! – வினவுகம்,
பெய்ம்மணல் முற்றம் கடிகொண்டு
மெய்ம்மலி கழங்கின் வேலன் தந்தே.

தெளிவுரை

தலைவியே! முற்றத்தில் புதுமணலைப் பரப்பிச் சிறப்புச்செய்து, உண்மையை எடுத்துரைக்குமாறு, கழங்கிட்டுக் குறி பார்க்கும் வேலனை வருவித்து அன்னை வெறியாடற்கு ஏற்பாடு செய் கின்றனள். அச்சம் பொருந்திய இடத்திலுள்ள சுனைகள் நீர் நிறையுமாறு கார் கால மழை பெய்யும். அதனால், உயர்ந்த குன்றத்தில் கரிய காம்புகளைக் கொண்ட மென்மையான குறிஞ்சிப்பூ மலர்ந்து விளங்கும். அக்குன்றிடத்தில் ஓவியன் எழுதி வைத்ததுபோல வேட்டுவர் இல்லங்கள் தோன்றும். அவ் வீடுகளில் தேனீக்களால் இழைக்கப்பெற்ற தேனடைகள் நிறையும் அளவுக்குத் தேன், குறிஞ்சிப்பூக்களில் ஊறி நிற்கும். இத்தகைய மலைநாட்டுக்கு உரியவனிடம் நாம் காதல் செய்து ஒழுகுகின்றோம்; ஆயினும், நாம் காதலிக்கும் அந்த அளவுக்கு அவனால் நாம் காதலிக்கப்படாதிருப்பது யாது காரணத்தாலோ? இந்த வினாவை அன்னை வருவிக்கவிருக்கும் வேலனிடம் வினவுவோம்! வா!

கருத்து

'நாம் விரும்புமளவுக்குத் தலைவன் நம்மை விரும்பவில்லையே! அஃது ஏன்?' என்று, தாய் வெறியாட்டயரும் களத்திற்கு வரவிருக்கும் வேலனிடமே கேட்போமா என்று சொல்வதன்வழி, தலைவி இற் செறிப்புண்டிருத்தலைத் தோழி, தலைவனுக்கு உணர்த்துகிறாள்.

குறிப்பு

கரிய காம்பினைக் கொண்ட வன்மையில்லாத பூ, வீட்டில் தேனீக்களால் இழைக்கப் பெற்ற தேனடைக்கு மிகுந்த தேனைக் கொடுக்கும் என்பது, குறவர் மகளாகிய தலைவி, தலைவனிடம் மிகுந்த அன்பைக் காட்டினாள் என்பதை உணர்த்துவதோடு, அவ்வன்பை அவன் உணரவில்லை என்னும் பொருளைத் தந்தும் நின்றது.

உள்ளுறை

குறிஞ்சிப்பூவின் தேன் இல்லத்தே இழைத்திருக்கும் தேனடை யில் நிறையும் என்பது, இல்லத்தே செறிப்புண்டிருக்கும் தலைவி

யின் உள்ளத்தில் தலைவன் தோற்றுவித்த காதல் பெருகிச் சிறந்துள்ளது என்னும் உள்ளுறைப் பொருளைக் கொண்டுள்ளது.

சொற்பொருள்

1. சூர் - அச்சம்; நனந்தலை - அகன்ற இடம்; மல்க - நிறையும்படியாய்.
2. மால் பெயல் - பெரிய மழை; தலைஇய - தலைப்பட்ட; மன்நெடும் - மிகவும் உயர்ந்த.
3. கருங்கால் - கரிய அடிமரம்; மதன்இல - வலிமையில்லாத; வான்பூ - வெண்மையான பூ.
4. ஓவு - ஓவியம்; கண்டன்ன - கண்டாற்போல; இல்வரை - வீட்டில்; இழைத்த - கட்டப்பட்ட.
5. நாறுகொள் - மணம் கமழும்; பிரசம் - தேனடை; ஊறும் - (தேன்) கசியும்.
6. காதல் செய்தலும் - நாம் காதல் செய்தொழுகவும்; காதலம் அன்மை - அவனால் காதலிக்கப்படாமை.
7. யாதனிற் கொல்லோ? - என்ன காரணத்தாலோ?; வினவுகம் - கேட்போம்.
8. பெய்ம்மணல் - புதிதாய்ப் பரப்பப்பெற்ற மணல்; கடிகொண்டு - விளக்கமுறுவித்து.
9. மெய்ம்மலி - மெய்ம்மையைத் தேர்ந்துரைக்கும்; வேலன் தந்தே - வேலனை வருவித்து.

தோழி கூற்று

நற்றிணை 173 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி தலைமகளுக்குரைப்பாளாய்ச் சிறைப்புறமாகச் சொல்லியது.

கூற்று விளக்கம்

சிறைப்புறமாய் வந்து நிற்கும் தலைவன் கேட்டு அறியுமாறு, தலைவியின் நோய் நீங்க அன்னை வெறியாட்டயரக் கருதியுள்ளாள் என்று தோழி கூறியது.

சுனைப்பூக் குற்றும், தொடலை தைஇயும்,
மலைச்செங் காந்தள் கண்ணி தந்தும்,
தன்வழிப் படூஉம் நம்நயந்து அருளி,
வெறிஎன உணர்ந்த அரிய அன்னையை,
கண்ணினும் கனவினும் காட்டி, 'இந்நோய்
என்னினும் வாராது; மணியின் தோன்றும்
அம்மலை கிழவோன் செய்தனன் இது'எனின்,
படுவண்டு ஆர்க்கும் பைந்தார் மார்பின்
நெடுவேட்கு ஏதம் உடைத்தோ?
தொடியோய் கூறுமதி, வினவுவல் யானே.

தெளிவுரை

தொடியணிந்துள்ள தலைவியே! உன்னையொன்று கேட்பேன்; அதற்கு மறுமொழி கூறு. சுனையில் பூத்த மலர்களைக் கொய்து அவற்றை மாலையாய்த் தொடுத்தும், மலையில் உள்ள செங் காந்தளைப் பறித்துச் சூடும் கண்ணியாய்க் கட்டியும் அவற்றை முருகவேளுக்குச் சார்த்தி, யாம் குன்றக் குமரனை வழிபடுவோம். தன்னை வழிபடும் நமக்கு அவன் அருள் செய்தலும் கூடும். நாமுற்ற வேறுபாட்டிற்கு மருந்து, வெறியாட்டு அன்றி வேறு இல்லையெனக் கருதி, அதற்கு ஆவன செய்ய முயலும் அன்னை யின் முன்போ அவள் கனவிலோ முருகன் தோன்றி, 'இந்நோய் என்னால் உன் மகளுக்கு ஏற்பட்டது அன்று; நீல மணியைப் போலத் தோன்றும் அழகிய மலைக்குரிய தோன்றல் ஒருவனே இதனைச் செய்தனன்' என்று தெரிவிக்குமாறு முருகனை வேண்டுவோமா?

வண்டுகள் மொய்க்கும் பசிய மாலையை அணிந்துள்ள அம் முருகவேளுக்கு அதனால் குற்றம் ஏதேனும் நேருமோ? என்று தோழி தலைவியிடம் கேட்கிறாள்.

கருத்து

தலைவியின் நோய் தீர அன்னை வெறியாட்டயரக் கருதியுள்ளாள். 'தலைவியே! அன்னை வெறியாட்டயருமுன் நாம் முருகனை வேண்டினால், அவன் உன் நோய் மலைத் தலைவன் ஒருவனால் ஏற்பட்டது என்பதை

நம் அன்னையிடம் நேரிலேனும் கனவிலேனும் தோன்றித் தெரிவிப்பான் அன்றோ?' என்று தோழி கேட்டாள்.

சொற்பொருள்

1. குற்றும் - கொய்தும்; தொடலை - மாலை; தைஇயும் - தொடுத்தும்.
2. கண்ணி - தலைமாலை; தந்தும் - கட்டியும்.
3. தன் வழிப்படூஉம் - தன் கருத்தின்படியே நடக்கும்; நயந்து - அன்புற்று.
4. வெறி - (நம் வேறுபாட்டுக்கு) வெறியாட்டயர்தலன்றிப் பிறிது இல்லையென.
5. கண்ணினும் கனவினும் காட்டி - நேரில் தோன்றி அல்லது கனவில் தோன்றி; இந்நோய் - (உன் மகளுக்கு ஏற்பட்டுள்ள) இத் துன்பம்.
6. என்னினும் வாராது - (முருகனாகிய) என்னால் வந்ததன்று; மணியின் தோன்றும் - நீலமணி போலக் காட்சியளிக்கும்.
7. அம்மலைகிழவோன் - அழகிய மலைக்குரிய தலைவன்; இது - இந்நோய்; எனின் - என்று சொன்னால்.
8. படுவண்டு - ஒலிக்கின்ற வண்டு; ஆர்க்கும் - மொய்த்து ஆரவாரிக்கும்; பைந்தார் - பசிய மாலை.
9. நெடுவேல் - நெடிய வேல் (கொண்டுள்ள முருகனுக்கு); ஏதம் - குற்றம்; உடைத்தோ - உண்டோ?
10. தொடியோய் - தொடியணிந்துள்ள தலைவியே!; கூறுமதி - கூறுக.

தலைவி கூற்று

சிலப்பதிகாரம், குன்றக்குரவை 15 — **இளங்கோவடிகள்**

திணை : குறிஞ்சி

கூற்று

வெறியாடல் நிகழும்போது தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

வேலன் வெறியாடல் நிகழ்த்தும்போது முருகன் அங்கு வந்தால் அம் முருகனை, 'என் காதலனோடு மணம் நிகழ அருள்புரிக என்று வேண்டுவோம்' என்று தலைவி தோழியிடம் கூறியது.

வேலனார் வந்து வெறிஆடும் வெங்களத்து
நீலப் பறவைமேல் நேர்இழை தன்னோடும்
ஆல்அமர் செல்வன் புதல்வன்வரும்; வந்தால்
மால்வரை வெற்பன் மணஅணி வேண்டுதுமே.

தெளிவுரை

தோழியே! வேலனார் வந்து வெம்மையான களத்திலே வெறியாடலை நிகழ்த்துவார். அங்கே நீலமயில்மீது அழகிய அணிகளை அணிந்த வள்ளியம்மையோடு ஆலமர்செல்வன் புதல்வனாகிய முருகன் வந்தால், பெரிய மலைநாட்டவனான என் காதலனோடு என் மணம் நிகழ அருள் புரியும்படி அவனைத் தொழுது வேண்டுவோம்.

கருத்து

முருகன் வந்தால், 'முருக! என் காதலனை நான் மணக்க அருள்புரி' என அவனை வேண்டுவோம்.

சொற்பொருள்

1. வேலன் - வெறியாடல் நிகழ்த்தும் பூசாரி.
2. நீலப்பறவை - நீல நிறப் பறவை, மயில்; நேர்இழை - அழகிய அணிகளை அணிந்த வள்ளி.
3. ஆல் அமர் செல்வன் - ஆலமரத்தின்கீழ் அமர்ந்திருக்கும் கடவுளாகிய சிவபெருமான்; புதல்வன் - (மகனாகிய) முருகன்.
4. மால்வரை வெற்பன் - பெரிய மலைநாட்டுத் தலைவன் (என் காதலன்).

தலைவி கூற்று

சிலப்பதிகாரம், குன்றக்குரவை 16 **இளங்கோவடிகள்**

திணை : குறிஞ்சி

கூற்று

வெறியாடல் நிகழும்போது தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

வேலன் வெறியாடல் நிகழ்த்தும்போது முருகன் அங்கு வந்தால் அம் முருகனை, 'என் காதலனோடு மணம் நிகழ அருள்புரிக என்று வேண்டுவோம்' என்று தலைவி தோழியிடம் கூறியது.

கயிலைநன் மலைஇறை மகனை!நின் மதிநுதல்
மயில்இயல் மடவரல் மலையர்தம் மகளார்
செயலைய மலர்புரை திருவடி தொழுதேம்
அயல்மணம் ஒழி;அருள் அவர்மணம் எனவே.

தெளிவுரை

கயிலாய மலையில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் மகனே! பிறைநுதலும், மயிலின் சாயலும், இளமையும் கொண்ட மலை நாட்டவர் மகளாகிய உன் வள்ளியம்மையின் அசோகின் தளிரையும், தாமரை மலரையும் போன்ற திருவடிகளைத் தொழுதோம்! பிறருடன் திருமணம் நடவாமல் எம் காதலரே எம்மை மணக்கும்படி அருள்புரிவாயாக!

கருத்து

'முருகா! என் காதலருடனேயே என் மணம் நடக்க அருள்புரி!' என அவனை வேண்டுவோம்.

குறிப்பு

முருகன் அருள் செய்தால், மகளின் மாறுதலுக்குக் காரணம் முருகன் அன்று, மலைநாட்டுத்தலைவன் என்பதை அன்னை அறிவாள்.

சொற்பொருள்

1. கயிலைநல் மலை - சிறந்த கயிலாய மலை; இறை - கடவுள், சிவபெருமான்; மகன் - முருகன்; மதி நுதல் - பிறை நுதல்.

2. மயில் இயல் - மயிலின் சாயல்; மடவரல் - இளமையள்; மலையர் தம் மகளார் - மலைநாட்டவர் மகளாகிய வள்ளியம்மை.
3. செயலைய - அசோகந்தளிரை ஒத்த.
4. அவர் - என் காதலன்.

தலைவி கூற்று

சிலப்பதிகாரம், குன்றக்குரவை 17 **இளங்கோவடிகள்**

திணை : குறிஞ்சி

கூற்று

வெறியாடல் நிகழும்போது தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

“வேலன் வெறியாடல் நிகழ்த்தும்போது முருகன் அங்கு வந்தால் அம் முருகனை, ‘என் காதலனோடு மணம் நிகழ அருள்புரிக என்று வேண்டுவோம்’ ” என்று தலைவி தோழியிடம் கூறியது.

மலைமகள் மகனைநின் மதிநுதல் மடவரல்
குலமலை உறைதரு குறவர்தம் மகளார்
நிலைஉயர் கடவுள்நின் இணையடி தொழுதேம்
பலர்அறி மணம்அவர் படுகுவர் எனவே.

தெளிவுரை

மலைமகளாகிய பார்வதிக்கு மகனே! பிறைநுதலையும் இளமையினையும் கொண்ட நின் மனைவியாகிய வள்ளியம்மை குறவர் குடியில் பிறந்தவர் ஆவார். இவ்வாறு தோன்றிய இடத்தானும் பெண் கொண்ட தன்மையானும் சிறப்புற்று உயர்ந்திருக்கும் கடவுளாகிய உன் இணையான திருவடிகளைத் தொழுதோம்! பலரும் அறியும்படியாய் எம் காதலர் எம்மை மணந்துகொள்ள அருள் புரிவாயாக!

கருத்து

‘என் காதலரே என்னை மணக்க அருள்புரி!’ என முருகனை வேண்டுவோம்.

குறிப்பு

முருகன் அருள் செய்தால், மகள், மலைநாடனைக் காதலிக்கிறாள் என்பதைத் தாய் அறிவாள்.

சொற்பொருள்

1. மலைமகள் மகன் - இமயமலை அரசன் மகளாகிய பார்வதிக்கு மகன் முருகன்.
2. குல மலை - சிறந்த மலையில்; உறைதரு - வாழுகின்ற; குறவர் மகள் - வள்ளி.
3. இணை அடி - இணையான திருவடிகள்.
4. அவர் - என் காதலன்; படுகுவர் - மணக்க வேண்டும்.

தலைவி கூற்று

சிலப்பதிகாரம், குன்றக்குரவை 18 **இளங்கோவடிகள்**

திணை : குறிஞ்சி

கூற்று

வெறியாடல் நிகழும்போது தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

வேலன் வெறியாடல் நிகழ்த்தும்போது முருகன் அங்கு வந்தால் அம் முருகனை, 'என் காதலனோடு மணம் நிகழ அருள்புரிக என்று வேண்டுவோம்' என்று தலைவி தோழியிடம் கூறியது.

குறமகள் அவள்எம் குலமகள் அவளொடும்
அறுமுக ஒருவ!நின் அடிஇணை தொழுதேம்
துறைமிசை நினதுஇரு திருவடி தொடுநர்
பெறுகநன் மணம்;விடு பிழைமணம் எனவே.

தெளிவுரை

குறமகள் வள்ளி எம் குலமகள். அவள் திருவடிகளுடன் உன் இரு திருவடிகளையும் தொழுது வணங்கினோம். ஆறு முகங்களைக் கொண்ட ஒப்பற்றவனே! நீர்த்துறையில் உன் திருவடிகளைத் தொட்டுச் சூள் உரைத்த எம் காதலர் கள

வொழுக்கத்தைக் கைவிட்டுப் பலரும் அறிய எம்மை மணந்து கொள்ள அருள் புரிவாயாக!

கருத்து

'என் திருமணம் என் காதலனுடனே நிகழ அருள் செய்' என முருகனை வேண்டுவோம்.

குறிப்பு

முருகன் அருள் செய்தால், தலைவி மலைநாடனைக் காதலிக்கிறாள் என்பதை அன்னை அறிவாள்.

சொற்பொருள்

1. குறமகள் - குறமகளாகிய வள்ளியம்மை.
2. அறுமுகன் - ஆறு முகங்களைக் கொண்ட முருகன்.
3. துறை - நீர்த்துறை; தொடுநர் - தொட்டுச் சூள் உரைத்த என் காதலன்.
4. நன் மணம் - என்னை மணக்கும் நல்ல திருமணம்

தலைவி கூற்று

சிலப்பதிகாரம், குன்றக்குரவை 19 **இளங்கோவடிகள்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழியைத் தலைமகள் கேட்பது.

கூற்று விளக்கம்

வெறியாடலின்போது தலைவன் வந்து சிறைப்புறமாய் நிற்க, அவனிடம் தான் சொன்னதைத் தோழியிடம் தலைவி கூறியது.

என்றுயாம் பாட மறைநின்று கேட்டுஅருளி
மன்றல்அம் கண்ணி மலைநாடன் போவான்முன்
சென்றேன்; அவன்தன் திருவடி கைதொழுது
நின்றேன்; உரைத்தது கேள்;வாழி தோழி!

தெளிவுரை

தோழி! நான் சொல்வதைக் கேள். வெறியாடலின்போது முருகனை நாம் வேண்டியதை, மணங்கமழும் மாலையைச் சூடிய தலைவனாகிய மலைநாடன் மறைவாய் நின்று, கண்டு சென்றான். நான் அவன் முன்னே சென்று, நாம் முருகனின் திருவடிகளைக் கையால் தொட்டு வணங்கி, அம்முருகனிடம் என்ன வேண்டினோம் என்பதைத் தலைவனிடம் எடுத்துச் சொன்னேன்.

கருத்து

தோழி! வெறியாடலின்போது நாம் முருகனிடம் என்ன வேண்டினோம் என்பதைத் தலைவனிடம் சொன்னேன்.

குறிப்பு

தலைவி தலைவனோடு குறியிடத்தில் கூடியிருந்தபோது அவனுக்குச் சொன்னதை, அவன் சென்ற பிறகு தோழியிடம் கூறியதாய்க் கொள்ளலாம்.

சொற்பொருள்

1. மறை நின்று - சிறைப்புறமாய் நின்று.
2. மன்றல் அம் கண்ணி - மணம் கமழும் அழகிய தலைமாலை; மலைநாடன் - தலைவன்.
3. அவன் - தலைவன்.
4. உரைத்தது - சொன்னதை.

தோழி கூற்று

சிலப்பதிகாரம், குன்றக்குரவை 20 **இளங்கோவடிகள்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி தலைமகனுக்குக் கூறியது.

கூற்று விளக்கம்

தன் தோற்றத்தைக் கண்டு ஊரினர் தன்னை முருகன் எனக் கருதுவர் என்று எண்ணியிருந்த தலைவனிடம் தோழி கூறியது.

கடம்பு சூடி உடம்பிடி ஏந்தி
மடந்தை பொருட்டால் வருவது இவ்வூர்
அறுமுகம் இல்லை அணிமயில் இல்லை
குறமகள் இல்லை செறிதோள் இல்லை
கடம்பூண் தெய்வ மாக நேரார்
மடவர் மன்றஇச் சிறுகுடி யோரே.

தெளிவுரை

“தலைவ! கடம்ப மலர் மாலையைச் சூடி, வேலினைக் கையில் ஏந்தி, நீ இவ்வூருக்கு மங்கை ஒருத்தியின் பொருட்டாய் வருகிறாய். உன்னைக் கண்டவர் உன்னை முருகன் என்று கருதுவர் என முடிவு கொள்கிறாய் போலும். உன் கருத்து, தவறு. ஏனெனில், உனக்கோ ஆறுமுகங்கள் இல்லை! அழகிய மயில் ஊர்தியும் இல்லை! பக்கத்திலே குறமகளாகிய வள்ளியும் இல்லை! செறிந்த பன்னிரு தோள்களும் இல்லை! ஆதலால், இச்சிற்றூரினர் தம்மைக் காக்கக் கடமை பூண்ட தெய்வமாகிய முருகன் என உன்னைக் கருத மாட்டார்கள். அவர்கள் அறியாமை வாய்ந்தவர்தாம்!” என்றாள், தோழி. (ஊரார் அறியாமை வாய்ந்தவர் எனச் சொல்லி மறைமுகமாய்த் தலைவன் இன்னும் மணம் செய்ய முயலாத அறியாமையைச் சுட்டிக் காட்டுகிறாள்.)

கருத்து

தலைவன் தன் தோற்றத்தால் தன்னை முருகன் என ஊரார் கருதுவர் என்று முடிவு கொள்கிறான். ஆனால், அது தவறு என்று கூறிய தோழி, அவன் வந்து செல்வதால் ஊரில் பழிச்சொல் ஏற்பட்டுள்ளதைக் குறிப்பிடுகிறாள்.

சொற்பொருள்

1. கடம்பு - கடப்ப மலர் மாலை; உடம்பிடி - வேல்.
2. வருவது இவ்வூர் - இவ்வூருக்கு வருகிறாய்.
4. செறிதோள் - செறிந்த பன்னிரு தோள்.
5. கடம்பூண் - (தம்மைக் காக்கும்) கடமை பூண்ட; தெய்வம் - முருகன்; நேரார் - கருதார்.
6. மடவர் - அறியாமை வாய்ந்தவர்.

தலைவி கூற்று

அகநானூறு 138 **எழூஉப்பன்றி நாகன் குமரனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லுவாளாய்த் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் களவொழுக்கத்திலேயே கருத்தூன்றியிருந்தான். ஒரு நாள் அவன் சிறைப்புறத்தே வந்து நிற்பதறிந்த தலைவி, தன் மேனி வேறுபாடு கண்டு செவிலி வெறியாட்டு எடுத்ததை அவன் கேட்குமாறு, தோழியிடம் கூறியது.

இகுளை! கேட்டிசின், காதல்அம் தோழி!
குவளை உண்கண் தெண்பனி மல்க,
வறிதுயான் வருந்திய செல்லற்கு அன்னை
பிறிதுஒன்று கடுத்தனள் ஆகி – வேம்பின்
வெறிகொள் பாசிலை நீலமொடு சூடி,
உடலுநர்க் கடந்த கடல்அம் தானை,
திருந்துஇலை நெடுவேல் தென்னவன் பொதியில்,
அருஞ்சிமை இழிதரும் ஆர்த்துவரல் அருவியின்
ததும்புசீர் இன்இயம் கறங்க, கைதொழுது,
உருகெழு சிறப்பின் முருகுமனைத் தரீஇ,
கடம்பும் களிறும் பாடி, நுடங்குபு
தோடும் தொடலையும் கைக்கொண்டு அல்கலும்
ஆடினர் ஆதல் நன்றோ? – நீடு
நின்னொடு தெளித்த நல்மலை நாடன்
குறிவரல் அரைநாள் குன்றத்து உச்சி,
நெறிகெட வீழ்ந்த துன்அருங் கூர்இருள்,
திருமணி உமிழ்ந்த நாகம் காந்தள்
கொழுமடற் புதுப்பூ ஊதும் தும்பி
நல்நிறம் மருளும் அருவிடர்
இன்னா நீள்இடை நினையும்என் நெஞ்சே.

தெளிவுரை

"தோழியே! கேள்! குவளை மலர் போன்ற மையுண்ட என் கண்களில் நீர் பெருகியது; என் துன்பத்தைக் கண்ட அன்னை, 'இது தெய்வத்தால் ஆயதோ!' என்று மயங்கி ஐயுற்றாள். வேலனையும் கட்டுவிச்சியையும் அழைத்தாள். அவர்களும் குறி பார்த்து, மணக்கும் வேம்பின் பசிய இலைகளை நீல மலருடன் சூடிக்கொண்டனர். பகைவரை வென்ற கடல் போன்ற சேனையினையும், திருத்தமான இலைபோலும் நெடிய வேலினையும் கொண்ட பாண்டியனது பொதிய மலையில் ஏறுதற்கரிய உச்சியிலிருந்து ஆரவாரத்துடன் வீழும் அருவி போன்ற தாள அறுதியோடு முழங்குகின்ற இனிய வாச்சியங்கள் முழங்கின.

"வேலன், அச்சம் பொருந்திய முருகக் கடவுளைக் கைதொழுது இல்லத்திற்கு வரவழைத்தான். முருகவேளின் மாலையாகிய கடம்ப மாலையின் சிறப்பினைப் பற்றியும், அவன் ஊர்தியாகிய யானையின் பெருமையைப் பற்றியும் பாடினான். பனந்தோட்டினையும் கடம்ப மாலையினையும் கையில் கொண்டு இரவு முழுவதும் பாடி ஆடுகிறான். இது நன்றோ?

"அது நிற்க, நெடுநாளாய், 'உன்னை விரைவில் மணந்து கொள்வேன்' என்று தெளிவுபடுத்தி வருகிறான், நம் மலைநாடனாகிய தலைவன். இரவுக்குறியிடத்துக்கு நள்ளிரவில் அவன் வரும் குன்றின் உச்சியில் வருவார் வழி தெரியாது தடுமாறும் வண்ணம் மிகுதியான இருள் செறிந்திருக்கும். அவ்விருளில் நாகம் அழகிய தன் மணியை உமிழ்ந்து, அதன் ஒளியில் இரை தேடிக்கொண்டிருக்கும். அப்பாம்பு, கொழுவிய மடலைக் கொண்ட காந்தளின் புதிய பூவின் தாதிலே திளைத்த வண்டின் நிறத்தைக் கண்டு, அவ்வண்டினைத் தான் உமிழ்ந்த மணியெனக் கருதி மயங்கும். அத்தகைய கடத்தற்கரிய மலைப்பிளவுகளைக் கொண்ட நீண்ட வழியை நினைக்கும் போது என் நெஞ்சு நடுங்குகிறது" என்று தொலைவில் நிற்கும் தலைவன் காதில் விழுமாறு தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

தோழி! என் மேனி வேறுபாடு கண்டு செவிலித்தாய் ‘வெறியாடல்’ நடத்தினாள். இந்நிலையில் தலைவனோ, பாம்பு இரை தேடும் வழியில் நள்ளிருளில் நம்மை நாடி வருகிறான். இந்நிலை நன்றோ?

விளக்கம்

தலைவியின் மேனி வேறுபாட்டினைக் கண்ட அன்னை அது தெய்வத்தால் ஆயது என்று கருதினாள்; வெறியாட்டயர வேலனை அழைத்தாள். அவன் வந்து, அருவியைப் போலத் தாள அறுதியோடு இனிய வாச்சியங்கள் ஒலிக்க முருகனை அழைத்து அவன் அணியும் கடம்ப மலர் மாலையையும், அவன் ஊர்தியாகிய யானையின் சிறப்பையும், அருள்வர இரவு முழுதும் பாடி ஆடுகிறான். இது நன்றோ? அது நிற்க, இரவில் காந்தளின் மலரை ஊதும் வண்டினைத் தான் முன்பு இரை தேடும்போது கக்கிய நீலமணியோ என்று நல்லபாம்பு மயங்கி நோக்கும் அரிய மலைப்பிளவில், மலைநாடனாகிய தலைவன் பாதி இரவில் துன்பமிக்க நீண்ட வழியைக் கடந்து வந்து செல்லுவதை எண்ணிப் பார்த்து என் நெஞ்சு நடுங்குகின்றது.

உள்ளுறை

காந்தளின் புதுப்பூவை நுகர்ந்ததனால் பெற்ற நல்ல நிறத்தைக் கொண்ட வண்டினைக் கண்ட நாகம் தான் உமிழ்ந்த மணியென மயங்கும் என்பதன் வாயிலாய், தலைவனுடன் இன்பம் துய்த்ததனால் பெற்ற புதுப்பொலிவு கொண்ட தலைவியைக் கண்டு அவள் அன்னை மயங்குகின்றாள் என்னும் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. இகுளை - தோழி! (காதலைக் கொண்டுள்ள தோழியே!)
2. தெண்பனி - தெளிந்த நீர்; மல்க - ததும்ப.
3. செல்லல் - துன்பம்.
4. கடுத்தல் - ஐயுறுதல்; வேம்பு - வேப்ப மரம்.
5. வெறி - நாற்றம்; பாசிலை - பசிய இலை; நீலம் - நீலமலர்.
6. உடலுநர் - மாறுபட்ட பகைவர்; தானை - சேனை.
7. இலை - வேலின் முனை; தென்னவன் - பாண்டியன்; பொதியில் - பொதிய மலை.

8. சிமை - உச்சி; ஆர்த்துவரல் - ஆரவாரித்து வரும்.
9. இன்இயம் - இனிய வாச்சியங்கள்; கறங்க - ஒலிக்க.
10. உரு - அச்சம்; முருகு - முருகக்கடவுள்; மனை - வீடு.
11. கடம்பு - கடம்ப மலர்; களிறு - யானை (முருகனின் ஊர்தி); நுடங்குதல் - அசைதல்.
12. தோடு - பனந்தோடு; தொடலை - மாலை; அல்கல் - இரவு (முழுவதும்).
14. தெளித்த - (விரைவில் வரைந்துகொள்வேன் என்று) தெளிவித்த.
15. குறி - இரவுக்குறி; அரைநாள் - நள்ளிரவு.
16. துன்னுதல் - நெருங்குதல்; கூர் - மிகுதி.
17. திருமணி உமிழ்ந்த நாகம் - அழகிய முடிமணியை உமிழ்ந்த நாகப்பாம்பு; காந்தள் - காந்தள் மலர்.
18. கொழுமடல் - கொழுவிய மடலைக் கொண்ட.
19. மருளும் - (தன் மணியோ என்று) மயங்கும்; அரு - அரிய; விடர் - மலைப்பிளவு.
20. நீள்இடை - நீண்ட வழி.

தோழி கூற்று

அகநானூறு 98 **வெறிபாடிய காமக்கண்ணியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் களவில் வந்து தலைவியைச் சந்திப்பதைத் தவிர்க்க விரும்பிய தோழி, தலைவன் சிறைப்புறத்தே நிற்க அவன் கேட்கும்படியாக அவன் விரைவில் மணம் பேசி வரவேண்டுமெனக் குறிப்பாய்த் தலைவியிடம் சொல்லியது.

பனிவரை நிவந்த பயம்கெழு கவாஅன்,
துனிஇல் கொள்கையொடு அவர்நமக்கு உவந்த
இனிய உள்ளம் இன்னா ஆக,
முனிதக நிறுத்த நல்கல் எவ்வம்

சூர்உறை வெற்பன் மார்புஉறத் தணிதல்
அறிந்தனள் அல்லள், அன்னை; வார்கோல்
செறிந்துஇலங்கு எல்வளை நெகிழ்ந்தமை நோக்கி,
கையறு நெஞ்சினள் வினவலின், முதுவாய்ப்
பொய்வல் பெண்டிர் பிரப்புஉளர்பு இரீஇ,
'முருகன் ஆர்அணங்கு' என்றலின், அதுசெத்து,
ஓவத்து அன்ன வினைபுனை நல்இல்,
பாவை அன்ன பலர்ஆய் மாண்கவின்
பண்டையின் சிறக்க,என் மகட்கு'எனப் பரைஇ,
கூடுகொள் இன்இயம் கறங்க, களன்இழைத்து,
ஆடுஅணி அயர்ந்த அகன்பெரும் பந்தர்,
வெண்போழ் கடம்பொடு சூடி இன்சீர்
ஐதுஅமை பாணி இரீஇ,கை பெயரா,
செல்வன் பெரும்பெயர் ஏத்தி, வேலன்
வெறிஅயர் வியன்களம் பொற்ப, வல்லோன்
பொறிஅமை பாவையின் தூங்கல் வேண்டின்,
என்ஆம் கொல்லோ – தோழி! மயங்கிய
மையல் பெண்டிர்க்கு நொவ்வல் ஆக
ஆடிய பின்னும், வாடிய மேனி
பண்டையின் சிறவாது ஆயின், இம்மறை
அலர்ஆ காமையோ அரிதே. அஃதான்று,
அறிவர் உறுவிய அல்லல் கண்டருளி,
'வெறிகமழ் நெடுவேள் நல்குவன் எனினே,
செறிதொடி உற்ற செல்லலும் பிறிது'எனக்
கான்கெழு நாடன் கேட்பின்,
யான்உயிர் வாழ்தல் அதனினும் அரிதே.

தெளிவுரை

பனிமேகங்கள் தவழும் உயர்ந்த வளம் பொருந்திய பக்க மலையில் முன்பு வெறுப்பெதுவும் இன்றித் தலைவன் வந்ததனால் இனிமை கொண்டதாய் ஆன நம் நெஞ்சம் பின் அவன் வாராமையால் துன்பம் கொண்டதாய் ஆனது.

தெய்வம் வாழுகின்ற மலையினைக் கொண்ட தலைவன் மார்பினைத் தழுவுவது ஒன்றனாலேயே நம் நோய் தணியும் என்பதை அன்னை அறியவில்லை; நெருங்கி விளங்கும் ஒளி பொருந்திய நம் தோள்வளைகள் நெகிழ்வுற்ற நிலையிலிருப் பதைப் பார்த்து அவள் செயலற்ற உள்ளத்தள் ஆயினாள்; குறி கேட்கவும் தொடங்கினாள். முதுமை வாய்ந்தவரும் பொய் கூறலில் வல்லவருமான கட்டுவிச்சியர், பிரப்பரிசியைப் பரப்பி வைத்து, 'இது முருகன் செயலால் ஏற்பட்ட குற்றம்' என்று கூறினர். அன்னை அதனை உண்மையென நம்பினாள்.

ஓவியம் போன்ற நல்ல வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பெற் றுள்ள நல்ல வீட்டில், 'பலராலும் பாராட்டப்படும் என் மகளின் பழைய அழகு அவளுக்குப் பழையபடி சிறப்புறுக' என அன்னை தெய்வத்தை வேண்டினாள். அகன்ற பெரிய பந்தரில், பல இனிய வாச்சியங்கள் ஒலிக்க, வெறியாடுதற்கேற்றவாறு வெறியாடற் களத்தினை வேலன் அழகுற அமைத்தான். அப்பந்தலிலே வேலன், வெண்மையான பனந்தோட்டினைக் கடம்ப மலரோடு சூடி, இனிய பாடலை அழகான தாளத்தோடு கூட்டிப் பாடி னான்; அடியவரைக் கைவிடாத முருகக்கடவுளின் பெரும் பெயர்களை ஏத்தித் துதித்தான்; வெறியாடும் களம் அழகு பெறுமாறு, வல்லோன் பொறியமைத்து ஆட்டுவிக்கும் பாவையினைப் போல அவன் கையை வீசி, வெறியாடுதலை விரும்பினால் என் நிலை என்ன ஆகுமோ?

வேலன் வெறியாடிய பிறகும், என் வாடிய மேனி, முன்பு போலச் சிறந்திடாவிட்டால், நம் களவொழுக்கம் எல்லார்க்கும் புலனாகிப் பலரும் தூற்றுமாறு அலராய் வெளிப்பட்டுவிடுமே!

அல்லது மணம் கமழும் நெடுவேலினையுடைய முருகன் அருள் கொண்டவனாகி, நம் முன்னைய அழகினைத் தந்துவிடு வானாயின், 'செறிந்த வளையலைக் கொண்ட தலைவி பெற்ற துன்பம் வேறொன்றினாற்போலும்' எனத் தலைவன் எண்ணு வானாயின் அவன் நம்மைப்பற்றி என்ன நினைப்பானோ?' என்று கலங்கி நாம் உயிர் வாழ்தலே அரிதாய்விடுமே!

கருத்து

வெறியாடலின் பின்னும் நோய் தீராவிட்டால் ஊரார் பழி கூற நேரும்; முருகன் நம்மேல் கருணை கொண்டு நோயைப் போக்கிவிட்டால், தலைவன் நம்மைப்பற்றி வேறாய்க் கருதுவான்! என் செய்ய?

விளக்கம்

நம் அன்னை நம் களவொழுக்கத்தை அறியாள்; ஆதலின், நம் உடல் வேறுபாடு எதனாலாயிற்று எனக் கட்டுவிச்சியை அழைத்துக் கேட்டாள். பொய் சொல்வதில் வல்லவளாய அவள், 'இது முருகன் அணங்கியது' என்றாள். அதனை உண்மையென நம்பி வேலனை வெறியாட அன்னை அழைத்துள்ளாள். அவன் வெறியாடிய பின்பும் நம் பழைய நலம் கூடவில்லையென்றால் ஊர் நம்மைப் பழி தூற்றும். ஒருவேளை, முருகன் நம்மிடம் கொண்ட அருளால் நம் முன்னைய அழகினைத் தந்துவிடுவானாயின் தலைவன், 'தலைவி அடைந்துள்ள துன்பம் நம்மீது கொண்ட காதலால் அன்று' எனக் கருதிவிடுவானாயின் நம் நிலை என்ன ஆகும்?

குறிப்பு

இதனைக் கேட்கும் தலைவன் யாருக்கும் எந்த ஐயமும் ஏற்பட்டுக் கலங்கிடாதவாறு விரைவில் மணம் பேசி வருவான்.

சொற்பொருள்

1. நிவந்த - உயர்ந்த; பயம் - பயன் - வளம்; கவாஅன் - பக்க மலை.
2. துனி இல் - வெறுப்பில்லாத.
4. முனிதல் - வெறுத்தல்.
5. சூர் - தெய்வம்; தணிதல் - நீங்குதல், குறைதல்.
6. வார்கோல் - நீண்ட திரட்சியான.
7. எல் - ஒளி.

7-8. கையறுதல் - செயலறுதல்; முதுவாய்ப் பெண்டிர் - தெய்வங்களை அழைத்துப் பாடும் கட்டுவிச்சியர்.

9. பிரப்பு உளர்பு - பிரப்பு அரிசி; இரீஇ - பரப்பி.
10. செத்து - (உண்மையென்று) கருதி.
11. ஓவம் - ஓவியம்; வினை புனை - தொழில் திறமையுடன் கட்டப்பெற்ற.

13. பண்டையின் - முன்பு போல; பரைஇ - பரவி - வணங்கி.
14. கூடுகொள் - பலவாய் இணைந்த; களன் - வெறியாடு களம்.
15. ஆடு அணி - ஆடுதற்கேற்ற அழகு; அயர்ந்த - செய்த.
16. வெண்போழ் - வெண்மையான பனந்தோடு; கடம்பு - கடம்ப மலர்; இன்சீர் - இனிய சீர்.
17. ஐது - அழகு; பாணி - தாளம்; இரீஇ - பொருந்தி; கை பெயரா - கை பெயர்த்து, கையை வீசி.
18. செல்வன் - முருகக் கடவுள்.
19. வெறி - மணம்; அயர் - வீசும்; பொறப - அழகு பெற.
20. தூங்கல் - (கூத்து) ஆடுதல்.
22. நொவ்வல் - வருத்தம்.
24. இம்மறை - மறைந்தொழுகிய இக்களவொழுக்கம்.
25. அஃதான்று - அதுவுமன்றி.
26. அறிவர்- அறிவு கொண்டவராகிய நம் தலைவர்.
28. செல்லல் - துன்பம்.

தோழி கூற்று

நற்றிணை 322 **மதுரைப் பாலாசிரியர் சேந்தன் கொற்றனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி சிறைப்புறமாகச் சொல்லியது.

கூற்று விளக்கம்

களவு ஒழுக்கத்தைக் கைவிட்டுத் தலைவன் தலைவியை மணந்து கொள்ளுமாறு விரைவுபடுத்தக் கருதும் தோழி, தலைவன் சிறைப் புறத்தானாய் இருப்பதறிந்து அவன் கேட்டுணருமாறு தலைவியிடம் கூறியது.

ஆங்கனம் தணிகுவது ஆயின், யாங்கும்
இதனின் கொடியது பிறிதுஒன்று இல்லை,
வாய்கொல் வாழி தோழி! வேய்உயர்ந்து,
எறிந்துசெறித் தன்ன பிணங்கரில் விடர்முகை,
ஊன்தின் பிணவின் உயங்குபசி களைஇயர்,

ஆள்இயங்கு அரும்புழை ஒற்றி வாள்வரிக்
கடுங்கண் வயப்புலி ஒடுங்கும் நாடன்
தண்கமழ் வியல்மார்பு உரிதினில் பெறாது.
நல்நுதல் பசந்த படர்மலி அருநோய்
அணங்குஎன உணரக் கூறி, வேலன்
இன்இயம் கறங்கப் பாடிப்
பன்மலர் சிதறிப் பரவுறு பலிக்கே.

தெளிவுரை

தலைவியே, வாழ்க! ஓங்கி வளர்ந்துள்ள மூங்கிலை இடையிடையே வெட்டி நெருக்கி வைத்தது போன்று பின்னிப் பிணைந்த புதர்கள் பல மண்டியிருக்கும் ஒரு மலைப்பிளவு. அதனை அடுத்துள்ள பாறைமீது ஊனைத் தின்னும் பெண்புலி மிகுந்த பசியுடன் உட்கார்ந்திருக்கும். அதன் பசியைப் போக்க விரும்பிய, வாள் போன்ற கோடுகளையும் கொடிய கண்களையும் கொண்ட வலிமையான ஆண்புலி, மக்கள் இயங்குகின்ற நுழைதற்கரிய சிறிய வழியை அடுத்துப் பதுங்கியிருக்கும். அத்தகைய மலைநாட்டினை உடையவனின் குளிர்ச்சியான, மணம் வீசுகின்ற, அகன்ற மார்பினை உரிமையோடு இன்னும் பெறாததால் உன் அழகிய நுதலில் பசலை படர்ந்துள்ளது. இந்நோய் முருகவேள் தீண்டியதால் உண்டாயிற்று என்று படிமத்தான் அன்னையிடம் கூறினான்; இனிய வாச்சியங்கள் பல ஒலிக்கப் பாடியும், பல வகையான பூக்களைத் தூவியும் முருகனை வேண்டி, 'இந்தப் பலியினை ஏற்றுக்கொள்' என்று ஆட்டினை அறுத்துப் பலியும் கொடுத்தான். அவ்வாறு கொடுக்கப்படும் பலிக்காக இந்நோய் உன்னை விட்டு நீங்குமென்றால் இதனைவிடக் கொடியது வேறொன்றும் உண்டோ? நினைத்துப் பார்.

கருத்து

தலைவியின் பசலை நீங்க அன்னை, முருகனுக்கு வெறியாட்டு நிகழ்த்து கிறாள். வேலனுக்கு இடுகின்ற பலியினால் இந்நோய் நீங்குமாயின் இதனினும் கொடுமையானது எதுவும் இல்லை.

குறிப்பு

இப்போதுள்ள நிலை நீடிப்பின் அன்னை வெறியெடுப்ப, நாண மேலீட்டால் தலைவி இறந்துபடுதலும் கூடும் என்பதையும் குறிப்பாய்த் தோழி கூறினாள்.

வேலன் வெறியாடி, தெய்வம் தாக்கியதால் இந்நோய் ஏற்பட்டதெனக் கூறின் அதனைவிடக் கொடியது வேறொன்றிருக்க இயலாது. ஆகவே, விரைவில் மணமுடித்தல் தக்கதெனத் தலைவன் துணிவான் என்பது தோழி கூற்றின் பயன்.

உள்ளுறை

ஆண்புலி இரை தேடித் தன் துணையின் துயர் போக்கக் கருதிச் செயற்படுகிறது. இதன் வாயிலாய், தலைவனும் பொருளீட்டச் சென்று, வரைபொருளொடு வந்து தலைவியை மணந்து கொள்ளுதல் வேண்டும் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. ஆங்ஙனம் - இவ்வகையால்; தணிகுவதாயின் - தணிந்து நீங்குமாயின்; யாங்கும் - எங்கும்.
2. பிறிதொன்று - வேறு ஒன்று.
3. வாய்கொல் - அதுதான் உண்மையாகுமோ?; வேய் - மூங்கில்.
4. எறிந்து - வெட்டி; செறித்தன்ன - செறித்து வைத்தாற்போல; பிணங்கர் - புதர்; விடர்முகை - மலைப்பிளவு.
5. பிணவு - பெண்புலி; உயங்கு பசி - வருத்தம் தரும் பசி; களைஇயர் - நீக்குவதற்காக.
6. ஆள் இயங்கு - ஆள்கள் சென்று வருதலுள்ள (நடமாட்டமுள்ள); அரும்புழை - நுழைதற்கு அரிய சிறிய வழியில்; ஒற்றி - அடுத்துச் சென்று; வாள்வரி - வாள் போன்ற வரிகளைக் கொண்ட.
7. வயப் புலி- வலிமையுள்ள புலி; ஒடுங்கும் - மறைந்திருக்கும்.
8. வியல் மார்பு - அகலமான மார்பு; உரிதினில் பெறாது - உரிமையோடு பெறாமையால்.
9. படர்மலி - துன்பம் மிக்க; அருநோய் - நீக்குதற்கு அரிய நோய்.
10. அணங்கு என - (உன் நோய்) தெய்வம் தாக்கியதால் ஏற்பட்டது என; வேலன் - வெறியாட்டாளன்.

11. இன்இயம் - (துடி, பறை முதலிய) இனிய வாச்சியம்; கறங்க - ஒலிக்க.
12. பன்மலர் - பல வகையான மலர்கள்; சிதறி - தூவி; பரவுதல் - வணங்குதல்; பலி - பலிச்சோறு.

தோழி கூற்று

அகநானூறு 242 **பேரிசாத்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தன் மகள் வருந்தி மெலிந்தமைக்குரிய காரணத்தை அறிய விரும்பிய தாய், வெறியாட்டு எடுக்கக் கருதி நின்றாள் என்பதைத் தோழி தலைவியிடம் கூறுவாளாய்ச் சிறைப்புறத்தானாகிய தலைவனுக்கு உணர்த்தியது.

அரும்புமுதிர் வேங்கை அலங்கல் மென்சினைச்
சுரும்புவாய் திறந்த பொன்புரை நுண்தாது
மணிமருள் கலவத்து உறைப்ப, அணிமிக்கு
அவிர்பொறி மஞ்ஞை ஆடும் சோலைப்
பைந்தாள் செந்தினைக் கொடுங்குரல் வியன்புனம்,
செந்தார்க் கிள்ளை நம்மொடு கடிந்தோன்
பண்புதர வந்தமை அறியாள், 'நுண்கேழ்
முறிபுரை எழில்நலத்து என்மகள் துயர்மருங்கு
அறிதல் வேண்டும்'என, பல்பிரப்பு இரீஇ,
அறியா வேலன் தரீஇ அன்னை,
வெறிஅயர் வியன்களம் பொலிய ஏத்தி,
மறிஉயிர் வழங்கா அளவை, சென்றுயாம்,
செலவரத் துணிந்த, சேண்விளங்கு எல்வளை,
நெகிழ்ந்த முன்கை நேர்இறைப் பணைத்தோள்,
நல்எழில் அழிவின் தொல்கவின் பெறீஇய,
முகிழ்த்துவரல் இளமுலை மூழ்க, பல்ஊழ்

முயங்கல் இயைவது மன்னோ– தோழி!–
நறைகால் யாத்த நளிர்முகைச் சிலம்பில்
பெருமலை விடரகம் நீடிய சிறியிலைச்
சாந்த மென்சினை தீண்டி, மேலது
பிரசம் தூங்கும் சேண்சிமை
வரையக வெற்பன் மணந்த மார்பே!

தெளிவுரை

முதிர்ந்த அரும்புகளைக் கொண்ட வேங்கை மரத்தின் அசைகின்ற மென்மையான கிளைகளில் வண்டுகள் பூவின் இதழ்களைத் திறந்தமையால் பொன் போன்ற நுண்ணிய பொடிகள் மயிலின் நீலமணி போன்ற தோகையில் உதிரும்; அதனால் அழகு மிகுந்து விளங்கும் புள்ளிகளைக் கொண்ட மயில், தோகை விரித்தாடும்; அத்தகைய சோலைக்குப் பக்கத்தே, பசிய தாளினைக் கொண்ட சிவந்த தினையின் வளைந்த கதிர்களைக் கொண்ட அகன்ற கொல்லையில், கழுத்தில் சிவந்த கோடுகளைக் கொண்ட கிளிகள் வந்து வீழும்; அக்கிளிகளை நம் உடனிருந்து ஓட்டிய நம் தலைவனின் நற்பண்புகளை நினைந்து வருந்தியமையால் நம் மேனி மெலிவுற்றது.

அதனை அறியாத அன்னை, 'நல்ல நிறங்கொண்ட மாந்தளிர் போன்ற அழகினைக் கொண்ட என் மகள் உற்ற மெலிவுக்குரிய காரணத்தை அறிதல் வேண்டும்' எனத் தினை முதலிய பொருள் களைப் பலியாய்ப் பரப்பி வைத்து, உண்மையை அறிய மாட்டாத வேலனை அழைத்து, வெறியாடும் களத்தினைப் பொலிவு பெறுமாறு செய்து, வேலன் முருகனைப் புகழ்ந்து வாழ்த்திட, ஆட்டுக்குட்டியைப் பலியாய்க் கொடுக்க முனைவாள்.

அங்ஙனம் செய்வதற்கு முன்பே, தொலைவிலும் ஒளி வீசும், கழன்று வீழும் வளையணிந்த முன்கையும், நேரிய மூட்டினைக் கொண்ட பெரிய தோளும் அழிந்துபட்ட அழகினின்றும் நீங்கிப் பழைய இயற்கை அழகினைப் பெறுமாறு, நாம் நம் தலைவனிடம் சென்றாதல் வேண்டும்.

அவன் நாடு, தேன் கூடுகள் நெருங்கித் தொடுக்கப்பெற்ற, குளிர்ச்சி பொருந்திய குகைகளைக் கொண்ட பக்கமலைகள் பொருந்திய பெரிய மலையினைப் பெற்றது. அம்மலையின் பிளவுகளுக்கு இடையே, நீண்டு வளர்ந்த சிறிய இலைகளைக் கொண்ட சந்தன மரத்தின் மெல்லிய கிளைகள் தீண்டுமாறு, உயரத்தே தேன் இறால்கள் தொங்கிக்கொண்டிருக்கும். அத்தகைய நெடிய உச்சியினைக் கொண்ட அம்மலை நெருக்கமான மூங்கிற்காடுகளைக் கொண்டிருக்கும். அத்தகைய மலைநாட்டிற்கு உரியவனது அகன்ற மார்பிலே, நம் இளமுலைகள் மூழ்குமாறு பலமுறை முயங்குதலே நமக்குப் பொருந்துவதாகும்.

கருத்து

தலைவன் மார்பைத் தலைவி முயங்கினால் நோய் நீங்கும்; வெறியாட்டு வேண்டாததாகும்.

விளக்கம்

“தலைவியே! நம்மொடு தினையிற்படியும் கிளிகளை ஓட்டி, உடனிருந்து கூடிப் பழகிய தலைவனால் ஏற்பட்டது, நம் உடல் வேறுபாடு. அதனை அறியாமல், நம் தாய் வேலனை அழைத்து, வெறியாட்டு எடுத்து, ஆட்டுக்குட்டியின் உயிரைப் பலியாய்க் கொடுக்குமுன், நம் பழைய அழகினைப் பெறத் தலைவனின் மணமிகு மார்பினை நம் இளமுலை முழுகும்படி பலமுறை கூடுவது பொருத்தமானது அன்றோ? தலைவனைக் கூடின் நோய் கெடும்; நாம் இழந்த அழகினைப் பெறுவோம். அதன்மூலம், வெறியாட்டின் தேவை இல்லாமல் ஓர் ஆட்டுக் குட்டியின் உயிரைப் பாதுகாத்தவர் ஆவோம்” என்று தலைவன் கேட்குமாறு தோழி தலைவியிடம் கூறினாள்.

குறிப்பு

சந்தன மரத்தின் கிளைகள் நீண்ட தேனடைகளைத் தீண்டுவதுபோலத் தலைவனைத் தழுவினால் தலைவியின் மேனி வருத்தம் நீங்கும்; அவளின் பழைய அழகு நிறையும்; அன்னையின் ஐயமும் அகலும் என்பதாம்.

உள்ளுறை

வேங்கையின் நுண்ணிய தாதுகள் மயிலின் தோகையின்மேல் உதிர்ந்து விழ, அதனால் அஃது அழகு பெற்றுக் களிப்புடன் ஆடு கின்றது என்பதன் வாயிலாய், தலைவி தலைவன் மார்பினைத் தழுவி அவன் மார்பின்மேல் உள்ள சந்தனம் படியப்பெற்றால் களிப்படைவாள் என்னும் கருத்துப் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. அலங்கல் - அசையும்.
2. சுரும்பு - வண்டுகள்.
3. கலவம் - மயில் தோகை; உறைப்ப - உதிர்ந்திட.
4. அவிர் பொறி மஞ்ஞை - பொறிகள் பரந்துள்ள மயில்.
5. கொடுங்குரல் - வளைந்த கதிர்.
6. செந்தார் - கிளிக்கழுத்திலுள்ள செவ்வரி; நம்மொடு கடிந்தோன் - நம்முடனிருந்து ஓட்டியவன்.
7. பண்புதர - அவன் நல்லியல்புகளை நினைத்து வருந்தியதால்; கேழ் - நிறம்.
8. முறி - தளிர்; துயர் மருங்கு - துயர் வந்த தன்மை.
9. பிரப்பு - பிரப்பு அரிசி.
10. தரீஇ - அழைத்து.
11. பொலிய - பொலிவுறுமாறு; ஏத்தி - துதித்து.
12. மறி - ஆட்டுக்குட்டி; உயிர் வாங்கா அளவை - உயிரைப் பலியிடா முன்னரே.
15. தொல் கவின் - பழைய அழகு.
16. முகிழ்த்தல் - முளைத்தல்; பல் ஊழ் - பலமுறை.
18. நறை - தேன்; கால்யாத்தல் - நெருங்குதல்; நளிர் - குளிர்ச்சி; முகை - குகை.
19. விடரகம் - மலைப்பிளவு.
20. சாந்தம் - சந்தனம்.
21. பிரசம் - தேன் அடை; தூங்கும் - தொங்கும்; சேண்சிமை - உயர்ந்த உச்சி.

தலைவி கூற்று

அகநானூறு 388 **ஊட்டியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறிச் சிறைப்புறமாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியை மணந்துகொள்வதில் கருத்தின்றி நாளும் களவின் பத்தையே விரும்பி இருவகைக் குறியிடத்தும் தலைவன் வந்து மீண்டான்; ஒரு நாள் இரவுக்குறியில் வந்து தலைவன் நிற்றலைக் கண்ட தலைவி, அவனது வருகையை அறியாதவள் போன்று, அவன் கேட்பத் தோழியை நோக்கிக் கூறியது.

அம்ம! – வாழி, தோழி! – நம்மலை
அமைஅறுத்து இயற்றிய வெவ்வாய்த் தட்டையின்,
நறுவிரை ஆரம் அறஎறிந்து உழுத
உளைக்குரல் சிறுதினை கவர்தலின், கிளைஅமல்
பெருவரை அடுக்கத்துக் குரீஇ ஒப்பி,
ஓங்குஇருஞ் சிலம்பின் ஒள்இணர் நறுவீ
வேங்கைஅம் கவட்டிடை நிவந்த இதணத்து,
பொன்மருள் நறுந்தாது ஊதும் தும்பி,
இன்இசை ஓரா இருந்தனம் ஆக,
'மைஈர் ஓதி மடநல் லீரே!
நொவ்வுஇயல் பகழி பாய்ந்தென, புண்கூர்ந்து,
எவ்வமொடு வந்தஉயர் மருப்பு ஒருத்தல்,நும்
புனத்துழிப் போகல் உறுமோ மற்று'என,
சினவுக்கொள் ஞமலி செயிர்த்துப்புடை ஆட,
சொல்லிக் கழிந்த வல்விற் காளை
சாந்துஆர் அகலமும் தகையும் மிகநயந்து,
ஈங்குநாம் உழக்கும் எவ்வம் உணராள்,
நன்னர் நெஞ்சமொடு மயங்கி 'வெறி'என,
அன்னை தந்த முதுவாய் வேலன்,
'எம்இறை அணங்கலின் வந்தன்று, இந்நோய்

தணிமருந்து அறிவல்' என்னும் ஆயின்,
வினவின் எவனோ மற்றே– 'கனல்சின
மையல் வேழம் மெய்உளம் போக,
ஊட்டி யன்ன ஊன்புரள் அம்பொடு
காட்டுமான் அடிவழி ஒற்றி,
வேட்டம் செல்லுமோ' நும்இறை எனவே.

தெளிவுரை

"தோழியே! வாழி! நான் கூறுவதைக் கேள்!

"மூங்கில்கள் நெருங்கி வளர்ந்துள்ள மலைச்சாரலில் சந்தன மரங்கள் முழுவதையும் வெட்டி, அவ்விடத்தை உழுது விதைத்து விளைந்த தினையின் கதிர்களைக் கிளிகள் கவர்ந்து செல்கின்றன. நமது மலையில் வளர்ந்த மூங்கிலை அறுத்துச் செய்த தட்டை கொண்டு அக்கிளிகளை ஓட்டினோம். ஓங்கி உயர்ந்த மலையில் மணங்கமழும் மலர்களைக்கொண்ட வேங்கை மரத்தின் கவையிடத்தே கட்டப்பட்ட பரணில் அமர்ந்துகொண்டு, பொன்னிறப் பூந்தாதுகளில் தேனைப் பருகும் வண்டினத்தின் இனிய இசையைக் கேட்டவண்ணம் இருந்தோம்.

"அப்பொழுது, ஒருவன் வந்து, 'குளிர்ச்சி பொருந்திய கூந்தலைக் கொண்ட பெண்டிரே! விரைந்து செல்லும் என் அம்பு பாய்ந்ததால் புண்பட்ட துன்பத்துடன் வந்த ஆண்யானை ஒன்று உங்கள் புனத்தின்வழிப் போனதோ?' என்று, சினங் கொண்ட நாய்கள் அருகே வர, வினவிச் சென்றான்.

"சந்தனம் பூசப்பெற்ற அவனது மார்பினையும் அழகினையும் மிக விரும்பிய நாம் துன்புற்று மிகவும் வருந்தியிருக்கிறோம். நம் அன்னை அதனை உணர்ந்துகொள்ளாமல் தவறாய் உணர்ந்து, வெறியாடல் வேண்டுமென வேலனை அழைக்கலானாள். வேலனும் வந்தான். 'இந்நோய் எம் இறைவனான முருகவேள் தீண்டி வருத்தியமையால் ஏற்பட்டது; இந்நோயினைத் தணிக்கும் மருந்தினை நான் அறிவேன்' என்று முதுமை வாய்ந்த அவ்வேலன் கூறுவான். அவனிடம், 'பொங்கியெழும் சினமும், மத மயக்கமும் கொண்ட களிற்றியானையின் உடலினுள் ஊடுருவிச் சென்றமையால், செந்நிறம் கொண்ட ஊன்

பொருந்திய அம்புடன், காட்டுவிலங்குகள் செல்லும் வழியைப் பின்பற்றி இறைவன் முருகவேள் வேட்டையாடச் செல்வதும் உண்டோ?' என்று நாம் கேட்டால் என்ன?" என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

சிறைப்புறத்தில் நிற்கும் தலைவன் கேட்கும்படியாகத் தலைவி தோழியிடம், 'அன்னை ஐயுற்று வெறியாடலைச் செய்ய முற்பட்டுள்ளாள். (ஆதலின், தலைவன் விரைந்து வரைந்துகொள்ள வேண்டும்' என்று கூறினாள்.)

விளக்கம்

"தோழியே! வாழ்க! நான் கூறுவதைக் கேள். மலைச்சாரலில் தினைப்புனத்துக் கிளிகளை ஓட்டி, பரண்மேல் இன்னிசை கேட்டு இருந்தோம். அப்போது, 'மங்கையரே! என் அம்பு பட்டுப் புண்ணுற்ற களிறு இங்கு வந்ததா?' என்று நம்மிடம் கேட்டுச் சென்றான், காளை ஒருவன். அத்தலைவனது மார்பும் அழகும் நம்மை வருத்த நாம் பெருந்துன்பம் அடைந்தோம். தாய் அதை உணராது, வெறியாட்டெடுக்க வேலனை அழைத்தாள். அவ் வேலனும், 'இந்நோய் முருகனால் உண்டானது; அதனைத் தணிவிப்பேன்' என்று சொல்வானாயின், நாம் சென்று அவ்வேலனைக் கண்டு, 'உன் முருகவேள் அம்பும் வில்லும் பற்றி யானை வேட்டையாடுவதும் உண்டோ?' என்று கேட்டால் என்ன?" என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

குறிப்பு

'ஊன் புரள் அம்பு' - குருதிக்கறையால் செக்கச்செவேல் என்றிருக்கும். அதனை, 'ஊட்டி அன்ன - செந்நிறத்தை ஊட்டியது போன்ற' என்னும் தொடரால் அம்பினைக் கூறியிருப்பதால் இப்பாடலாசிரியர், 'ஊட்டியார்' என்று வழங்கப்பட்டுள்ளார்.

சொற்பொருள்

2. அமை - மூங்கில்; வெவ்வாய் - அச்சுறுத்தும் ஓசை பொருந்திய; தட்டை - கிளி ஓட்ட மகளிர் பயன்படுத்தும் ஒரு கருவி (தட்டி ஓட்டுவர்).

3. விரை - மணம்; ஆரம் - சந்தனம்; அறஎறிந்து - முழுவதும் வெட்டி.
4. உளைக்குரல் - மெல்லிய கதிர்; கிளைஅமல் - மூங்கில்கள் நெருங்கிய.
5. குரீஇ - குருவி; ஓப்பி - ஓட்டி.
6. சிலம்பு - மலை; ஒள்இணர் - ஒளி பொருந்திய பூங்கொத்து.
7. கவடு - கப்பு, பிரிவுபட்ட கிளை; நிவந்த - உயரக் கட்டிய; இதணம் - பரண்.
8. பொன் மருள் - பொன் ஒத்த.
9. ஓரா - கேட்டபடி.
10. மை ஈர் ஓதி - குளிர்ச்சி பொருந்திய கரிய கூந்தல்.
11. நொவ்வுஇயல் - விரைந்து செல்லும்; பகழி - அம்பு.
12. ஒருத்தல் - ஆண்யானை.
13. போகல் உறுமோ? - போனதோ.
14. ஞமலி - நாய்; செயிர்த்து - சினங்கொண்டு; புடைஆட - அருகே வர.
15. கழிந்த - சென்ற.
16. சாந்து ஆர் - சந்தனம் பூசப்பெற்ற; அகலம் - மார்பு; தகை - அழகு; நயந்து - விரும்பி.
17. உழக்கும் - வருந்தும்.
18. வெறி என - வெறியாடல் வேண்டுமென.
19. முதுவாய் - முதுமை வாய்ந்த.
20. எம் இறை - எம் இறைவனாகிய முருகவேள்.
21. தணி மருந்து - தணிக்கும் (போக்கும்) மருந்து.
23. மையல் - மயக்கம்; மெய் உளம் போக - உடலினுள் ஊடுருவிச் செல்ல.
24. ஊட்டி அன்ன - பூசினால் போன்ற.
25. மான் - விலங்கு; ஒற்றி - பின்பற்றி.
26. வேட்டம் - வேட்டையாட; நும் இறை - உம் கடவுள்.

தோழி கூற்று

அகநானூறு 382 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறிக்கண் தலைமகன் சிறைப்புறமாகத் தோழி தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியை மணந்துகொள்வதில் கருத்தின்றிக் களவொழுக்கமே காமுற்று ஒழுகலானான்; ஒரு நாள் அவன் இரவுக்குறியில் வந்து ஒரு பக்கமாய் நிற்பதைக் கண்ட தோழி, அவன் வரவை அறியாதவள்போல, 'அவன் தலைவியை மணந்து செல்ல வேண்டும்' என்னும் கருத்தை அவன் கேட்கும் வகையில் தலைவியிடம் கூறியது.

பிறர்உறு விழுமம் பிறரும் நோப;
தம்உறு விழுமம் தமக்கோ தஞ்சம்;
கடம்புகொடி யாத்து, கண்ணி சூட்டி,
வேறுபல் குரல ஒருதூக்கு இன்இயம்
காடுகெழு நெடுவேள் பாடுகொளைக்கு ஏற்ப,
அணங்குஅயர் வியன்களம் பொலிய, பையத்
தூங்குதல் புரிந்தனர், நமர்'என, ஆங்குஅவற்கு
அறியக் கூறல் வேண்டும்– தோழி!–
அருவி பாய்ந்த கருவிரல் மந்தி
செழுங்கோட் பலவின் பழம்புணை யாக
சாரல் பேர்ஊர் முன்துறை இழிதரும்
வறன்உறல் அறியாச் சோலை,
விறல்மலை நாடன் சொல்நயந் தோயே!

தெளிவுரை

"தலைவியே! அருவியிலே பாய்ந்த கரிய விரல்களைக் கொண்ட பெண்குரங்கு, அவ்வருவியுடன் வந்த, வளமுடன் காய்த்த பலாப்பழத்தினைத் தெப்பமாய்க் கொண்டு, மலைச் சாரலில் உள்ள நம் பேரூரின் நீர்த்துறையிலே வந்து இறங்கும். வறட்சியை அறியாத சோலைகள் பொருந்திய வெற்றிமிக்க அம்மலைநாட்டிற்குத் தலைவனது சொல்லை விரும்பி ஏற்றுக் கொண்டிருக்கிறாய்.

"பிறர் அடையும் துன்பத்தைக் கண்டால் நல்லோர், தாங்கள் அவர்க்கு அயலவரே ஆனாலும், தாம் அதற்காக வருந்தி அதைப் போக்க முயற்சி செய்வர். அத்தகைய சான்றோர் தமக்கு ஏற்படும் துன்பத்தைப் பெரிதாய்க்கொள்ளாது அதை எளிதாய்க் கொள்வர். (இது சான்றோர் இயல்பு.)

"நம் உறவினர் கடம்ப மரத்தில் கொடி கட்டி, மாலை சூட்டி, பல்வேறு குரலுடைய தாள வழிப்படும் ஒரே மாதிரியான இசையைக் கொண்ட இனிய வாச்சியங்களைக்கொண்டு காட்டில் உள்ள நெடுவேள் ஆகிய முருகனைப்பற்றிப் பாடும் பாட்டுக்குப் பொருத்தமாய் வெறியாட்டுச்செய்யும் பெரிய களம் சிறப்படையுமாறு (வேலன்) மெல்ல ஆடுதலை, நம் உறவினர் விரும்பியுள்ளனர். தலைவன் இச்செய்தியை உணருமாறு, நீ அவனைக் காணும்போது கூறுதல் வேண்டும்" என்று தலைவியிடம் கூறுதல்போலத் தலைவன் அறியுமாறு தோழி சொல்கிறாள்.

கருத்து

தலைவியே! தலைவன் சொல்லை நம்பி நீ அவனை ஏற்றனை; பிறர் துன்பத்தைக் கண்டால் நல்லவர் அத்துன்பத்தை விலக்க முயல்வர்; அதுவேயன்றி, தமக்கு ஏற்படும் துன்பத்தினைப் பெரிதாய்க் கருதாமல் எளிதாய்க் கொள்வர். இது சான்றோர் இயல்பு. நம் உறவினர் முருகனைப் போற்றிப் பாடும் பாட்டிற்கு ஏற்ப வெறியாடுகளம் பொலிவு பெற வேலன் ஆடுதலை விரும்பினர். இனி நாம் என் செய்வது?

குறிப்பு

தலைவியின் உறவினர்கள் வேலன் வெறியாட்டுக்கு ஏற்பாடு செய்கின்றனர் என்றால், தலைவியின் களவொழுக்கம் இனிமேலும் மறைக்க இயலாததாகிவிட்டது என்பதைத் தலைவன் உணர வேண்டும் என்பது தோழியின் கருத்து.

பிறர் உற்ற துன்பத்திற்கு வருந்துதலும், தம்மை வந்தடைந்த துன்பத்தைப் பொறுத்தலும் சான்றோர் இயல்பாதலின், நம் தலைவன் நாம் அடைந்த துன்பத்தை அறிந்தால் விரைந்து வந்து அதனைப் போக்குதற்கு முற்படுவன் எனத் தோழி தலைவியிடம் குறிப்பாய்க் கூறினாள்.

சொற்பொருள்

1. விழுமம் - துன்பம்; நோப - வருந்தி (உடனே நீக்க முயலுவர்).
2. தமக்கோ தஞ்சம் - தமக்கு எளிதாய்க் கொள்வர்.
3. கடம்பு - கடம்ப மரம்; யாத்து - கட்டி; கண்ணி - மாலை.
4. தூக்கு - இசை முறை; இன்னியம் - இனிய வாத்திய ஒலி.
5. நெடுவேள் - முருகன்; பாடுகொளை - பாடும் பாட்டு.
6. அணங்கு அயர் வியன்களம் - வெறியாட்டுச்செய்யும் பெரிய களம்.
7. தூங்குதல் புரிந்தனர் - ஆடுதலை விரும்பினர்; நமர் - உறவினர்.
9. மந்தி - பெண்குரங்கு.
10. புணை - தெப்பம்.
11. இழிதரும் - இறங்கும்.
12. வறன் - வறட்சி.
13. விறல் - வெற்றி; நயத்தல் - விரும்புதல்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 166 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

வரையாது வந்தொழுகும் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகள் பசப்பிற்கு வருந்திய தோழி, அவனை இயற்பழித்தது.

(இயற்பழித்தது - இயல்பைக் குறைவுபடக் கூறுதல்.)

கூற்று விளக்கம்

தலைவியை வரைந்துகொள்ளாது களவொழுக்கமே மேற்கொண்டுள்ள தலைவன் சிறைப்புறமாய் வந்து நின்றனன். தலைவியின் பசலை நோயைக் கண்டு வருந்திய தோழி, தலைவன் கேட்குமாறு அவன் இயல்பைப் பழித்தது.

பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
வரிவெண் தாலி வலைசெத்து வெரூஉம்
மெல்லம் புலம்பன் தேறி
நல்ல வாயின, நல்லோள் கண்ணே.

தெளிவுரை

பெரிய கடற்கரையில் வாழும் சிறு வெண்மை நிறம் (கழுத்தில்) கொண்ட காக்கை, வரிகள் பொருந்திய வெண்மையான சோழிகளை, வலை என்று கருதி அஞ்சும். மென்மணல் பொருந்திய இத்தகைய கடற்கரையை உடையவன், தலைவன். அவன் சொற்களை உண்மை என்று நம்பியதால் என் தலைவியின் கண்கள் பசந்து நலமிழந்தன.

கருத்து

"தலைவன் சொற்களை உண்மை என்று நம்பியதால் தலைவியின் கண்களில் பசலை பாய்ந்தது. தன்னை நம்பி நடப்பவளைத் தலைவன் ஏமாற்றி ஒழுகுகின்றான்" எனத் தோழி தலைவனை இயற்பழித்துக் கூறுகிறாள்.

குறிப்பு

பரதவரின் வலைகளில் சோழி (பலகறை) கோக்கப்பட்டிருக்கும். ஆதலின், அலை ஒதுக்கிய சோழியை வலையிலுள்ள சோழி எனக் கருதி, காக்கை அஞ்சுகிறது.

காக்கை பலகறைகளை வலை எனக் கருதி அஞ்சியது என்பதன் வாயிலாய், தலைவனும் வரைவுக்கான முயற்சியை மேற்கொள்வது தனக்கு வருத்தம் தரும் செயலாய்க் கருதி அஞ்சுகிறான்.

தன் சொல்லை உண்மை என்று நம்பி நடப்பவளை ஏமாற்றி உண்மை யில்லாது ஒழுகுகிறான் எனத் தோழி தலைவனின் இயல்பைப் பழிக்கிறாள்.

சொற்பொருள்

1. வெண் காக்கை - கழுத்தில் வெண்ணிறம் கொண்ட காக்கை.
2. வரிவெண் தாலி - அலையாலே ஒதுக்கப்பட்ட வரிகளைக் கொண்ட பலகறைகளைக் கண்டு; வலைசெத்து - வலையென்று நினைத்து; வெரூஉம் - அஞ்சும்.
3. தேறி - தலைவன் சொற்களை நம்பி.
4. நல்லோள் - தலைவி; நல்ல ஆயின - அழகிழந்து கெட்டன (மங்கல மொழியாய் நல்ல ஆயின என்று கூறுகிறாள்).

தலைவி கூற்று

குறுந்தொகை 3 **தேவகுலத்தார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் சிறைப்புறமாக, அவன் வரைந்துகொள்வது வேண்டி, தோழி இயற்பழித்தவழி, தலைமகள் இயற்பட மொழிந்தது. (இயற்பழித்தல் - இயல்பைப் பழித்துப் பேசுதல்; இயற்பட மொழிதல் - இயல்பைப் போற்றிச் சிறப்பித்துக் கூறுதல்.)

கூற்று விளக்கம்

வரைந்துகொள்ளாது களவிலேயே ஒழுகிவரும் தலைவன் வேலிப் புறத்தே வந்து நின்றதையறிந்த தோழி, அவன் தலைவியை விரைவில் மணந்துகொள்ள வேண்டுமென அறிவுறுத்த விரும்புகிறாள். அதன் பொருட்டு, அவன் கேட்குமாறு, அவனது நட்பைப் பழித்துப் பேசினாள். தலைவி அவன் நட்பே சிறந்தது என்று தோழியை மறுத்துக் கூறியது.

நிலத்தினும் பெரிதே; வானினும் உயர்ந்தன்று;
நீரினும் ஆரளவு இன்றே, சாரல்
கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே.

தெளிவுரை

மலைச்சாரலில் கரிய தண்டினைக் கொண்ட குறிஞ்சி மரத்தின் பூக்களில் தேனெடுத்து வண்டுகள் பெரிய தேனடையைக் கட்டும். இத்தகைய காட்சி கொண்ட மலைநாட்டிற்குரியவன், நம் தலைவன். அவனோடு கொண்டுள்ள நட்பு நிலவுலகத்தை விடப் பெரியது; வானத்தைவிட உயர்ந்தது; கடலின் ஆழத்தை விட அளத்தற்கரிய ஆழமானது. (தோழியே! அத்தகைய அவன் காதலைக் குறைத்து மதிப்பிட்டுப் பேசாதே என்கிறாள், தலைவி.)

கருத்து

நான் கொண்டுள்ள நட்பு அகன்றது; உயர்ந்தது; ஆழமானது.

விளக்கம்

உலகில் மிக விரிவானது, பூமி; மிக உயரமானது, மலை; மிக ஆழமானது, கடல். இவை ஒவ்வொன்றினும் உயர்ந்தது, என் காதல்.

நீளம், அகலம், உயரம் ஆகியன ஒரு பொருளை உள்ளடக்கும். நில அகலத்தால், மலை உயரத்தால், கடல் ஆழத்தால் தலைவனின் காதலை உள்ளடக்க இயலாது.

நிலம், பயன் தருவதில் தவறலாம்; வான் பெய்யாது பொய்க் கலாம்; கடல்நீர் தன் தன்மையில் குன்றலாம். ஆனால், எம் நட்போ எக்காலமும் நிலை பெற்று நின்று பயன் தரும்.

குறிப்பு

குறிஞ்சி, பன்னிரண்டாண்டுக்கு ஒரு முறை மலைப்பாங்கரில் அரிதாய்ப் பூக்கும்.

சொற்பொருள்

1. பெரிது - அகலமானது; உயர்ந்தன்று - உயரமானது.
2. ஆரளவு இன்றே - மிகுந்த ஆழமுள்ளது.
3. கருங்கோல் - கருமையான கிளை; குறிஞ்சி - ஒருவகைப் பூ.
4. பெருந்தேன் - மிகுந்த தேன்; இழைக்கும் - சேர்க்கும்.

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 5 **மூவாதியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் சிறைப்புறத்தானாக இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் இயற்பட மொழிந்தது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தில் தலைவன் தினைப்புன வேலிக்கு வெளியே நின்றிருந்தான். அப்போது தோழி தலைவன் கொண்டுள்ள அன்பினைக் குறைத்துப் பேசிடத் தலைவி, தலைவனிடம் இயல்பாய் அன்பு உள்ளதை விளக்கிக் கூறியது.

சான்றவர் கேண்மை சிதைவின்றாய் ஊன்றி
வலியாகிப் பின்னும் பயக்கும் மெலிவில்
கயம்திகழ் சோலை மலைநாடன் கேண்மை
நயம்திகழும் என்னும்என் நெஞ்சு.

தெளிவுரை

“நற்பண்புகள் நிறைந்த சான்றோரின் நட்பு, கெடுதல் இல்லாதது; நிலைத்து நிற்பது; வலிமை வாய்ந்தது; பலவகை நன்மை பயப்பது. அதுபோல், நீர் நிலைகளால் வளமாய்க் காணப்படும் சோலைகள் சூழ்ந்த மலைநாட்டுக்கு உரியவனோடு கொண்டுள்ள நட்பு, குறைவில்லாதது; நன்மை பல தருவது என்று என் உள்ளம் உறுதியாய் நம்புகிறது” என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

தலைவனின் அன்பு, கெடுதல் இல்லாதது; நிலைத்து நிற்பது; நன்மை பல தருவது.

குறிப்பு

உயர்ந்தோர் உறவையும் தலைவனின் காதலையும் ஒன்றாய் எண்ணுகிறது தலைவியின் உள்ளம்.

சொற்பொருள்

1. சான்றவர் - நற்பண்புகள் நிறைந்த பெரியோர்; கேண்மை - நட்பு, உறவு; சிதைவு இன்றாய் - கெடுதல் இன்றி; ஊன்றி - நிலை பெற்று.
2. வலியாகி - வலிமை வாய்ந்ததாகி; பின்னும் - மேலும்; பயக்கும் - பலவித நன்மைகளை உண்டாக்கும்; மெலிவில் - மெலிவு இல் - குறைதல் இன்றி.
3. கயம் - நீர்நிலை (குளம்); கேண்மை - நட்பு.
4. நயம் திகழும் - இன்பம் மிகுந்து விளங்கும்.

2-4.மலைநாடன் கேண்மை மெலிவுஇல் நயம் திகழும் என்னும் என் நெஞ்சு.

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 12 **மூவாதியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் சிறைப்புறத்தானாக இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் இயற்பட மொழிந்தது.

கூற்று விளக்கம்

களவுக்காலத்தில் தினைப்புன வேலிக்கு வெளியே தலைவன் நின்ற போது, தோழி, அவன் கொண்டுள்ள அன்பினைக் குறைத்துப் பேசிட, அவனின் அன்பு நிலையானது எனத் தலைவி பெருமைபடக் கூறியது.

பெருங்கை இருங்களிறு ஐவனம் மாந்திக்
கருங்கால் மராம்பொழில் பாசடைத் துஞ்சும்
சுரும்(பு)இமிர் சோலை மலைநாடன் கேண்மை
பொருந்தினார்க்(கு) ஏமாப்(பு) உடைத்து.

தெளிவுரை

"நீண்ட துதிக்கையைக் கொண்ட பெரிய ஆண்யானை மலைநெற்பயிரைத் தின்று, கருத்த அடிப்பகுதியைக் கொண்ட மராமரச் சோலையில் பசிய இலை நிழலில் உறங்கும். இத்தகைய சோலைகளும் வண்டினங்கள் ஒலிக்கின்ற பூங்காக்களுமுள்ள மலைநாட்டிற்கு உரியவனின் நட்பு, அவனை நெருங்கி வாழ் பவர்க்கு முழுப் பாதுகாப்பை நல்கும்" எனத் தலைவனின் அன்பின் சிறப்பைத் தலைவி கூறுகிறாள்.

கருத்து

'தலைவனின் காதல் அவனை நெருங்கி வாழ்பவர்க்கு முழுப் பாதுகாப்பை நல்கும்' எனத் தலைவனின் இயல்பைத் தலைவி உயர்த்திப் பேசுகிறாள்.

சொற்பொருள்

1. பெருங்கை - பெரிய துதிக்கை; இரு களிறு - பெரிய ஆண்யானை; ஐவனம் - மலைநெல்; மாந்தி - தின்று.

2. மராம் - மராமரம்; பொழில் - சோலை; பசுமைஅடை - பசிய இலை; துஞ்சும் - தூங்கும்.
3. சுரும்பு - வண்டு; இமிர் - ஒலிக்கும்; கேண்மை - நட்பு.
4. ஏமாப்பு - பாதுகாப்பு; உடைத்து - உடையது.

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 57 **மூவாதியார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் சிறைப்புறத்தானாக இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் இயற்பட மொழிந்தது.

கூற்று விளக்கம்

களவுக்காலத்தில் தினைப்புன வேலிக்கு வெளியே தலைவன் நின்றபோது, தோழி தலைவன் கொண்டுள்ள அன்பினைக் குறைத்துப் பேசிட, தலைவனின் அன்பு நிலையானது எனத் தலைவி பெருமைபடக் கூறியது.

ஒழுகு திரைக்கரை வான்குருகின் தூவி
உழிதரும் ஊதை எடுக்கும் துறைவனைப்
பேதையான் என்றுணரும் நெஞ்சும் இனி(து)உண்மை
ஊதியம் அன்றோ உயிர்க்கு.

தெளிவுரை

“தோழியே! ஏறியும் இறங்கியும் செல்லும் அலைகளைக் கொண்ட கடற்கரையில் வாழ்கின்ற பெரிய கடல்பறவைகளின் இறகுகளினின்றும் சுழன்று வீசப்படும் காற்றால் பேரோசை எழும் நீர்த்துறையைக் கொண்டவன், தலைவன். அவன் வஞ்சகம் இல்லாத நெஞ்சினன் என்று என் மனம் கருதுகிறது. அதுவே என் வாழ்வுக்கு நன்மையையுண்டாக்கும்” எனத் தலைவி தோழியை நோக்கிக் கூறினாள்.

கருத்து

'தலைவன் மிகவும் பேதைமையுடையவன்' என்று தோழி குறை கூறினாள். அதற்குத் தலைவி, 'அவன் கள்ளங்கபடம் இல்லாத நெஞ்சினனா யிருப்பது நமக்கு நல்லதுதானே' எனத் தலைவி அவன் நிறை கூறினாள்.

குறிப்பு

ஏமாற்றும் வஞ்சகனாகாது, கள்ளம் கபடம் இல்லாதவனாயிருப்பது மிகவும் நன்மையுடையதே.

சொற்பொருள்

1. ஒழுகு திரை - ஏறியும் இறங்கியும் செல்லும் அலை; கரை - கடற்கரை; வான் - பெரிய; குருகு - கடற்பறவை; தூவி - இறகு.
2. உழிதரும் - சுழன்று வெளிப்படும்; ஊதை - காற்று; எடுக்கும் - எடுப்பாய் வீசும்.
3. பேதையான் - (வஞ்சகமின்றி) கள்ளம் கபடம் இல்லாதவன்; என்று - என; உணரும் - தெரியும்படியான; நெஞ்சும் - மனத்தையும்; இனிது உண்மை - நன்றாய் நாம் கொண்டிருத்தல்.
4. ஊதியம் அன்றோ? - நன்மையுண்டாக்கும் போக்கு அன்றோ? உயிர்க்கு - நம் வாழ்க்கைக்கு.

தலைவி கூற்று

குறுந்தொகை 322 **ஐயூர் முடவன்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் வரவு உணர்ந்து தலைமகள் இயற்பட மொழிந்தது.

கூற்று விளக்கம்

தலைவனது வரைவு நீட்டித்ததாக, தோழி தலைவனைப் பழிக்கத் தொடங்கிய பொழுதில், அவன் வந்து ஒரு பக்கத்தே நிற்பதனை அறிந்த தலைவி, 'அவன் இங்கு வரும் முன்பு நாம் அவன் ஊருக்குப் போய் அவனோடு பழகுவோம்' என்று கூறியது.

அமர்க்கண் ஆமான் அம்செவிக் குழவி
கானவர் எடுப்ப வெரீஇ, இனம்தீர்ந்து,
கானம் நண்ணிய சிறுகுடிப் பட்டென,
இளையர் ஓம்ப மரீஇ,அவண் நயந்து,
மனைஉறை வாழ்க்கை வல்லி யாங்கு,
மருவின் இனியவும் உளவோ?
செல்வாம் தோழி! ஒல்வாங்கு நடந்தே.

தெளிவுரை

செருக்குக் கொண்ட கண்ணினைக் கொண்டது, காட்டுப்பசு. அதன் இளங்கன்று அழகிய காதுகளைக் கொண்டது. காட்டு மக்கள் ஒலி எழுப்பியதால் அக்கன்று அஞ்சி, தன் இனத்தி லிருந்து நீங்கி, காட்டுக்கு அருகேயுள்ள சிற்றூருக்குப் போய்ச் சேர்ந்தது. அவ்வூரிலிருந்த இளமகளிர் அதனைப் பேணிக் காத்தனர். அக்கன்றும் அவர்களோடு பழகி அந்த இடத்தில் வாழ விரும்பியது; காட்டுவாழ்க்கையை விட்டு வீட்டில் வாழ்கின்ற வாழ்க்கையை ஏற்கும் பழக்கத்தைப் பெற்றது. அது போலக் கூடிப் பழகுவதைவிட இனிமை தருவது உலகில் வேறுண்டா? அதனால், தோழியே, நம்மால் இயன்றவரை நடந்து, தலைவன் இருக்குமிடத்துக்குப் போய்ச் சேர்வோம்.

கருத்து

தோழி! தலைவன் நாம் இருக்கும் இடத்திற்கு வாராவிட்டாலும் அவன் இருக்குமிடத்திற்கு நாம் போய்ச் சேர்வோம்.

விளக்கம்

"தலைவனை எதிர்பார்த்து நாம் காத்திருக்கிறோம்; அவன் வரவில்லை; அவன் அன்பிலன்" எனத் தோழி தலைவனைப் பழித்துரைத்தாள். தலைவன் அன்பிலாதவன் எனத் தோழி சொன்னதை மறுத்துத் தலைவி, "தலைவனை அன்பிலாதவன் என்று சொல்லாதே. அவன் இங்கு வாராவிட்டாலும், நாம் அவன் இருக்குமிடத்திற்குச் செல்வோம்" என்று கூறி அவன் நல்லியல்பு கொண்டவனே என்றாள்.

குறிப்பு

காட்டுப்பசுவின் கன்று காட்டை நீங்கி, சிற்றூரைச் சேர்ந்து, அங்குள்ளவரோடு கலந்து தங்கிப் பழகிக் காட்டையும் தன் இனத்தையும் மறந்து வாழ்தலைப் போல, தானும் தன் இல்லத்தைவிட்டு நீங்கித் தலைவனோடு சேர்ந்து அவன் ஊரில் அவன் பேணத் தான் வாழ வேண்டும் என்னும் தன் விருப்பத்தைத் தலைவி வெளிப்படுத்தினாள்.

சொற்பொருள்

1. அமர்க்கண் - செருக்கினைக் கொண்ட கண்; ஆமான் - காட்டுப்பசு; அம் செவி - அழகிய காது; குழவி - கன்று.
2. கானவர் - காட்டில் வாழ்பவர் (வேட்டுவர்); எடுப்ப - ஒலி எழுப்ப; வெரீஇ - அஞ்சி; இனம் தீர்ந்து - தன் இனத்தினின்றும் பிரிந்து.
3. கானம் - காடு; நண்ணிய - அருகில் உள்ள; சிறுகுடி - சிற்றூர்; பட்டென - அகப்பட்டதாய்.
4. இளையர் - இளைய மகளிர்; ஓம்ப - பாதுகாக்க; மரீஇ - கலந்து; அவண் - அவ்விடத்தை; நயந்து - விரும்பி.
5. மனை - வீடு; வல்லியாங்கு - வன்மை பெற்றது போல.
6. மருவின் - கலந்து பழகுதலைக்காட்டிலும்.
7. செல்வாம் - செல்லுவோம்; ஒல்வாங்கு - இயன்றவரையில் (ஒல்லுதல் - இயலுதல்).

தோழி கூற்று

ஐந்திணை எழுபது 11 **மூவாதியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகள் கேட்பத் தோழி தலைமகனை இயற்பழித்தது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியை மணந்துகொள்ளாமல் களவொழுக்கமே மேற்கொண்டிருக்க அதனைப் பொறுக்க இயலாத தோழி, சிறைப்புறத்தே இருக்கும் தலைவன் கேட்கும்படியாக அவனின் அன்பிலாத் தன்மையைத் தலைவியிடம் குறை கூறியது.

கேழல் உழுத கரிபுனக் கொல்லையுள்
வாழை முதுகாய் கடுவன் புதைத்(து)அயரும்
தாழ்அருவி நாடன் தெளிகொடுத்தான் என்தோழி
நேர்வளை நெஞ்(சு)ஊன்று கோல்.

தெளிவுரை

"தம் கொம்புகளால் பன்றிகளினால் கிளறப்பட்டதும், வேடர்களால் சுட்டெரிக்கப்பட்டதுமான தினைப்புனநிலத்தில் ஆண்குரங்குகள் வாழையின் முற்றிய காய்களைப் பழுக்கச் செய்வதற்காக மண்ணில் புதைத்து வைத்தன; பின்பு, புதைத்து வைத்த இடம் எது என அறியாமல் மயங்கின. அத்தினைப் புனத்தின் வழியாக அருவி நீர் பெருக்கெடுத்தோடியது. இத்தகைய நாட்டிற்குரிய தலைவன், நம் நாடன்; அவன், வளையல் அணிந்த என் தலைவியின் நெஞ்சிலே, அம்பு ஊன்றி நிற்பது போன்ற தெளிவான உறுதிமொழிகளைத் தந்து விட்டான்" என்று தோழி சொன்னாள்.

கருத்து

குரங்கு வாழைக்காய்களை ஓரிடத்தில் புதைத்து வைத்து விட்டுப் பின்பு அந்த இடம் எது என அறியாது மயங்கியது. அதுபோல விரைவில் மணப்பதாய் உறுதிமொழி கூறிய தலைவன், அம்மொழியை மறந்து மயங்குகிறான் எனத் தோழி அவனை இயற்பழித்துக் கூறினாள்.

சொற்பொருள்

1. கேழல் - காட்டுப்பன்றி; கரிபுனம் - சுட்டுக் கரியாக்கப்பட்ட தினைப் புனம்; கொல்லையுள் - மண் பரப்பில்.
2. முதுகாய் - முற்றிய காய்; கடுவன் - ஆண்குரங்கு; புதைத்து அயரும் - பின்பு புதைத்து வைத்த இடம் எந்த இடம் என அறியாமல் மயங்கும்.
3. தாழ் அருவி - தாழ்ந்து செல்லும்படியான அருவி; தெளி கொடுத்தான் - தெளிவான உறுதிமொழிகளைக் கொடுத்தான்.
4. நேர் வளை - நல்ல வளையலணிந்த தலைவியின்; நெஞ்சு ஊன்று - மார்பிடத்தே வைத்த; கோல் - அம்பு (போன்ற), ஊன்றி நிற்பது போன்ற.

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 4 **மூவாதியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் சிறைப்புறத்தானாக இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் இயற்பட மொழிந்தது.

கூற்று விளக்கம்

களவுக்காலத்தில் தினைப்புன வேலிக்கு வெளியே தலைவன் நின்றபோது, தோழி தலைவன் கொண்டுள்ள அன்பினைக் குறைத்துப் பேசிட, தலைவனின் அன்பு நிலையானது எனத் தலைவி பெருமைபடப் பேசியது.

மன்றப் பலவின் சுளைவிளை தீம்பழம்
உண்டுவந்து மந்தி முலைவருடக் – கன்றமர்ந்(து)
ஆமா சுரக்கும் அணிமலை நாடனை
யாமாப் பிரிவ(து) இலம்.

தெளிவுரை

மன்றத்தில் இருந்த பலா மரத்தின் இனிய பழத்தின் முதிர்ந்த சுளைகளைத் தின்று, நீர் வேட்கையுடன் கீழிறங்கி வந்த பெண் குரங்கு, அங்குத் தங்கியிருந்த காட்டுப்பசுவின் மடியைத் தடவும். அப்பசுவும் தன் கன்றுக்குச் சுரந்து அளிப்பதுபோல அன்பு கொண்டு பாலைச் சுரந்தளிக்கும். இத்தகைய வளமிக்க காட்சி கொண்ட மலைநாடுடையவன், நம் தலைவன். அவனை நாம் பிரிய மாட்டோம்; பிரிந்தால் உயிருடன் இருக்க மாட்டோம்.

கருத்து

தலைவன் மிக்க அன்பு கொண்டவன்; அவனை நான் பிரிய மாட்டேன்.

குறிப்பு

தலைவன் அன்பில் குறைவுபடாதவனென்பது, மந்தி முலை வருட, பசு பால் சுரக்கும் அழகிய மலைநாடன் என்பதனால் பெறப்படும்.

சொற்பொருள்

1. மன்ற - மன்றத்திலுள்ள; பலவின் - பலா மரத்தின்; சுளை விளை - முதிர்ந்த சுளைகள்; தீம்பழம் - இனிய பழம்.
2. முலை வருட - காட்டுப்பசுவின் முலையைத் தடவ; கன்றமர்ந்து - (அப்பசுவும் தன்) கன்றுக்கு விருப்பத்துடன் கொடுப்பது போல.
3. சுரக்கும் - பால் சுரந்தளிக்கும்.
4. யாமா - யாமே; பிரிவது இலம் - பிரிய மாட்டோம்.

தலைவி கூற்று

குறுந்தொகை 313 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : நெய்தல்

கூற்று

இரவுக்குறி வந்து ஒழுகுங்காலத்துத் தலைமகனது வரவு உணர்ந்து 'பண்பிலர்' என்று இயற்பழித்த தோழிக்கு, 'அவரோடு பிறந்த நட்பு அழியாத நட்பன்றோ?' என்று சிறைப்புறமாகத் தலைமகள் இயற்பட மொழிந்தது.

கூற்று விளக்கம்

இரவில் வீட்டருகே தலைவன் வந்து நிற்றலை அறிந்த தோழி, அவன் வரவு அறியாதாள் போன்று அவனைக் குறை கூற, அது கேட்ட தலைவி பொறாதவளாய்த் தலைவனைப் புகழ்ந்து கூறியது.

பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
நீத்துநீர் இருங்கழி இரைதேர்ந்து உண்டு,
பூக்கமழ் பொதும்பில் சேக்கும் துறைவனொடு
யாத்தேம்; யாத்தன்று நட்பே;
அவிழ்த்தற்கு அரிது;அது முடிந்துஅமைந் தன்றே.

தெளிவுரை

கழுத்தில் சிறிதளவு வெண்ணிறம் கொண்ட காக்கை, பெரிய கடற்கரையில் வெள்ளம் பெருகும் நீர் நிறைந்த பெரிய கழிகளிலே, மீன் இரையைத் தேடி உண்டு, பூக்கள் மணம் கமழும் மரச்சோலையில் தங்கும். இத்தகைய கடல் துறையினைக்

கொண்ட தலைவனோடு நாம் நம்மைப் பிணைத்துக் கொண்டோம். உறுதியாய்க் கட்டப்பட்ட அந்த நட்பு, யாராலும் அவிழ்த்துவிட இயலாதபடி முடியிடப்பட்டுள்ளது.

கருத்து

தலைவனோடு நாம் கொண்டுள்ள நட்பை என்றும் பிரிக்க இயலாது.

குறிப்பு

காக்கை இரையைக் கவர்ந்துண்டு, சோலையில் தூங்கும் என்பதன் வாயிலாய்த் தலைவனும் தலைவியைக் கைக்கொண்டு சென்று, இன்பத்துடன் தன் இல்லிலே உறைய வேண்டும் என்னும் குறிப்புப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. சிறு வெண் காக்கை - (கழுத்தில் சிறிதளவு) வெண்மை நிறம் கொண்ட காக்கை.
2. நீத்து - வெள்ளம்; நீர் - நீர் நிறைந்த; இருங்கழி - பெரிய கழி; தேர்ந்து - தேடி.
3. கமழ் - மணம் வீசும்; பொதும்பு - சோலை; சேக்கும் - தங்கும்.
4. யாத்தேம் - பிணைத்துக்கொண்டோம்; யாத்தன்று நட்பு - அந்நட்பு உறுதியாய்க் கட்டப்பட்டது.
5. அவிழ்த்தற்கு அரிது - அவிழ்ப்பதற்கு அரிதானது (இயலாதது); முடிந்து அமைந்தன்று - உறுதியாய் முடியிடப்பட்டுள்ளது.

தலைவி கூற்று

ஐந்திணை ஐம்பது 13 **மாறன் பொறையனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

சிறைப்புறத்தானாகத் தலைமகனை இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் இயற்பட மொழிந்தது.

கூற்று விளக்கம்

தலைவன் சிறைப்புறமாய் வந்து நிற்க, தலைவியிடம் தோழி, "தலைவன், தேனுண்டு முடிந்ததும் பூவினைத் துறக்கும் வண்டு போன்றவன்தானா?"

என, அவன் வாராமை குறித்துப் பழித்துப் பேசினாள். அப்போது தலைவி, 'தலைவனது புணர்ச்சி கிட்டாவிடினும் அவன் நாட்டு அருவியின் சேர்க்கை கிட்டுதலே போதும்' என உயர்வுபட மொழிந்தது.

கானக நாடன் கலவான்என் தோள்என்று
மான்அமர் கண்ணாய்! மயங்கல்நீ – நானம்
கலந்(து)இழியும் நன்மலைமேல் வால்அருவி யாடப்
புலம்பும் அகன்றுநில் லா.

தெளிவுரை

மான் போன்று மருளும் கண்களைக் கொண்ட தோழியே! கானக நாடனாகிய தலைவன் என் தோளைச் சேராததை எண்ணி நீ கலக்கம் கொள்ள வேண்டா. நாம் போய்ப் பல வகையான மணப்பொருள்களைத் தாங்கிக்கொண்டு தலைவன் நாட்டு மலையிலிருந்து இறங்கி வரும் வெண்மையான அருவி நீரில் ஆடி வந்தாலே நம் வருத்தமெல்லாம் நீங்கும்.

கருத்து

'தலைவன் என் தோளைத் தழுவாமையால் உண்டான வருத்தம் அவன் நாட்டு அருவிநீரில் ஆடுதலால் நீங்கிடும்.'

சொற்பொருள்

1. கலவான் - சேரான்.
2. மான்அமர் - மான் போன்று மருளும்; மயங்கல் - வருந்தாதே!; நானம் - (பல்வகையான) மணப்பொருள்கள்.
3. இழியும் - கீழிறங்கும்; வால் - வெண்மை.
4. புலம்பு - வருத்தம்; அகன்று நில்லா - நீங்கி ஓடும்.

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 9 **மூவாதியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் சிறைப்புறத்தானாக இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் இயற்பட மொழிந்தது.

கூற்று விளக்கம்

களவுக்காலத்தில் தினைப்புன வேலிக்கு வெளியே தலைவன் நின்ற போது, தோழி தலைவன் கொண்டுள்ள அன்பினைக் குறைத்துக் கூறிட, 'தலைவனின் அன்பு நிலையானது' எனத் தலைவி பெருமைபடக் கூறியது.

மன்றத்(து) உறுகல் கருங்கண் முசுஉகளும்
குன்றக நாடன் தெளித்த தெளிவினை
நன்றென்று தேறித் தெளிந்தேன் தலையளி
ஒன்றுமற்(று) ஒன்றும் அனைத்து.

தெளிவுரை

மன்றங்களில் பொருந்தியுள்ள கற்களில் கரிய முசுக்கலை என்னும் குரங்குகள் குதித்து விளையாடும். இத்தகைய மலைகளைக் கொண்டவன், நம் தலைவன். இயற்கைப் புணர்ச்சிக் காலத்தில் நான் தெளிவு கொள்ளும்படி அவன் என்னிடம் கூறியது எனக்கு நன்மை பயக்கக்கூடியதே என்று அறிந்து தெளிந்தேன். அப்படித் தீர்மானித்த எனக்கு அன்று தலைவன் காட்டிய அந்த அன்பு எக்காலத்தும் அத்தன்மை யினின்றும் மாறாது என்னைக் காக்கும். (ஆதலின், 'தோழியே! நீ வீணே தலைவனின் அன்பினைப் பழித்துக் கூற வேண்டா' என்றாள், தலைவி.)

கருத்து

'தலைவன் அன்பில்லாத் தன்மையன்' என்று தோழி கூற, 'அவன் அன்பு என்னை என்றும் காக்கும்; ஆதலின், அவனைப் பழிக்காதே' என்றாள், தலைவி.

சொற்பொருள்

1. உறுகல் - பொருந்தியுள்ள கற்களில்; முசு - கரிய முகம் கொண்ட குரங்கு; உகளும் - குதித்து விளையாடும்.
2. தெளித்த - (இயற்கைப்புணர்ச்சிக்காலத்தே நான்) தெளிவு பெறும்படி; தெளிவினை - (கூறிய) தெளிவான மொழிகளை.
3. தேறி - ஆராய்ந்து; தெளிந்தேன் - தீர்மானித்தேன்; தலையளி - அவன் அன்று காட்டிய அன்பு.
4. ஒன்று - ஒன்றாய் உள்ளது; மற்றொன்றும் - அவ்வொன்றும்; அனைத்து - அத்தன்மையினின்று மாறாது என்னைக் காக்கும்.

தலைவி கூற்று

அகநானூறு 332 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறிக்கண் சிறைப்புறமாகத் தோழிக்குத் தலைமகள் இயற்பட மொழிந்தது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியை இரவுக்குறியில் கண்டு திரும்பியவண்ணம் இருந்தான்; ஒருநாள் அவன் வந்து, சிறைப்புறமாய் நின்றபோது, அவன் வரவை அறியாதவள் போலத் தலைவி அவனைப் பாராட்டித் தோழியிடம் கூறியது.

முளைவளர் முதல மூங்கில் முருக்கி,
கிளையொடு மேய்ந்த கேழ்கிளர் யானை,
நீர்நசை மருங்கின் நிறம்பார்த்து ஒடுங்கிய,
பொருமுரண் உழுவை தொலைச்சி, கூர்நுனைக்
குருதிச் செங்கோட்டு அழிதுளி கழாஅ,
கல்முகை அடுக்கத்து மென்மெல இயலிச்
செறுபகை வாட்டிய செம்மலொடு அறுகால்

யாழ்இசைப் பறவை இமிர, பிடிபுணர்ந்து,
வாழைஅம் சிலம்பில் துஞ்சும் நாடன்
நின்புரைத் தக்க சாயலன் என,நீ
அன்புஉரைத்து அடங்கக் கூறிய இன்சொல்
வாய்த்தன – வாழி, தோழி! – வேட்டோர்க்கு
அமிழ்தத்து அன்ன; கமழ்தார் மார்பின்
வண்டுஇடைப் படாஅ முயக்கமும்,
தண்டாக் காதலும் தலைநாள் போன்மே!

தெளிவுரை

"தூறுகளில் முளைத்து வளரும் மூங்கில்களைத் தன் இனத்துடன் ஒடித்துத் தின்ற களிறு, நீர் வேட்கை காரணமாய் நீர்த் துறையருகே சென்றது; தன் வருகையை எதிர்பார்த்துத் தாக்குதற்குப் பதுங்கியிருந்த போர்க்குணம் வாய்ந்த புலியினைக் களிறு போரிட்டுக் கொன்றது; குருதி படிந்த கூர்மையான தன் கொம்பினை மழைநீரால் கழுவியது; பின்னர், கல்முனைகளைக் கொண்ட பக்க மலைமீது மெல்ல மெல்ல நடந்தது; யாழின் இசை போன்று வண்டுகள் ஒலி செய்ய, சினந்தெழுந்து தன் பகைப்புலியைக் கொன்று வீழ்த்திய செருக்குடன் சென்று, தன் பிடியுடன் கூடி, வாழைமரங்களைக் கொண்ட மலையில் உறக்கம் கொண்டது. அத்தகைய மலைநாட்டிற்குரியவன், நம் தலைவன்.

"தோழியே, வாழி! 'நம் தலைவன் என்னிடம் கொண்ட அன்பு காரணமாய், என் உள்ளம் அமைதியடையுமாறு நீ அன்று, உன் உயர்வுக்கேற்ற மென்மைத் தன்மையுடையவன்' என்று கூறிய இனிய சொற்கள் இன்று உண்மையாயின; தன்னை விரும்பியவர்க்கு அமிழ்தம் போன்ற தன் இனிய மார்பில் மாலை அணிந்திருக்க, இடையிலே வண்டுகள் நுழைய முடியாமல் என் தலைவனோடு இன்று நான் பெற்ற செறிந்த முயக்கமும், நீங்காத காதலும் முதல் நாளில் பெற்றவை போன்றே சிறந்திருந்தன" என்று பாராட்டிக் கூறித் தனது வரைதல் வேட்கையினைத் தலைவி வெளிப்படுத்தினாள்.

கருத்து

'தலைவன் உயர்ந்த பண்பினன்; தீராக் காதலன்' என்று தலைவி அவன் இயல்பைப் புகழ்ந்துரைக்கிறாள்.

குறிப்பு

இனிய முயக்கம் இடையீடின்றி இருக்க, தலைவன் வரைந்து கொள்ள வேண்டும் என்பதைத் தலைவி குறிப்பால் உணர்த்தினாள்.

உள்ளுறை

புலியை யானை கொன்று, தன் கொம்பினை மழைநீரால் கழுவி, செருக்குடன் நடந்து சென்று, வண்டுகள் ஒலிக்கத் தன் துணையோடு வாழை மரங்களிடையே துஞ்சும். இத்தொடர் வாயிலாய், தலைவன், அலர் உரைப்பவர் வாயை அடக்கி, களவினால் உண்டாகும் மாசு தீர, தலைவியை மணந்து, சுற்றம் கொண்டாட வளமிகு தன் மலைநாட்டில் இன்பம் துய்த்திருப்பான் என்னும் பொருள் பெறப்படுகிறது.

குறிப்பு

'வண்டு இடைப்படாஅ முயக்கம்': மார்பில் அணிந்த மாலையில் இருந்த வண்டுகள் நீங்குமாறு கொண்ட இறுக்கமான முயக்கம் என்றும் கொள்ளலாம்.

சொற்பொருள்

1. முதல - அடிப்பகுதி; முருக்கி - ஒடித்து.
2. கிளை - இனம்; கேழ்கிளர் - நிறம் விளங்கிய.
3. நசை - வேட்கை; நிறம் பார்த்து - அதன் உருவினை (வருகையை) எதிர்பார்த்து (நிறம் - உருவம்).
4. முரண் - மாறுபாடு; உழுவை - புலி.
5. அழிதுளி - மிக்க மழை.
6. முகை - முழை; இயலி - நடந்து.
7. வாட்டிய - தொலைத்த, கொன்ற; செம்மல் - செருக்கு, தலைமைத் தன்மை; அறுகால் - ஆறுகால் (வண்டு).
8. இமிர - ஒலிக்க; புணர்ந்து - சேர்ந்து.
10. நின்புரை - உன் உயர்வு; சாயலன் - மென்மைத் தன்மை கொண்டவன்.

11. அடங்க - என் மனம் அமைதியுறுமாறு.
12. வாய்த்தன - உண்மையாயின; வேட்டோர்க்கு - (தன்னை) விரும்பி யோர்க்கு.
13. கமழ்தார் - மணக்கும் மாலை.
14. இடைப்படாஅ - இடையிலே பொருந்தாத; முயங்குதல் - தழுவுதல்.
15. தண்டா - நீங்காத; தலைநாள் - முதல் நாள்.



சங்க இலக்கியங்கள், பழந்தமிழர் வாழ்வியலின்
பண்பாட்டுக் களஞ்சியங்கள்;

சாதாரண வரிக்குக் கூட மெருகூட்டி மிளிரச் செய்யும்
மேதை சிலம்பொலியின் முத்தான உரைகளோடு
தமிழுக்கு ஓர் அருங்கொடையாய்த்
தன் வாழ்நாளின் ஒப்பற்ற சாதனையாய்ப்

பதினான்கு தொகுதிகளாக வெளிவருகின்றன.
சிலம்பொலி செதுக்கியுள்ள உரைச்சிற்பங்கள் இவை
வெறும் பொழிப்புரைகள் அன்று, பொன்னுரைகள்.

தமிழ் கூறு நல்லுலகம்
சிலம்பொலியின் சீர்மிகு படைப்புக்குச்
சிவப்புக் கம்பள வரவேற்பு நல்கிப்
பெரிதும் பயன்பெறும்; அவரைப்
போற்றிப் பாராட்டும்.

இலக்கியவீதி இனியவன்

சிலம்பொலி...

செந்தமிழர் செவிகளுக்குத் தேனொலி;
செம்மாந்த சிந்தனையின் பேரொளி;
நன்னெறியாளர்; நுண்ணறிவாளர்;
தன்னலம் கருதாத் தமிழ்ப்பேரறிஞர்.
சங்கத்தமிழின் ஆழம்கண்ட வேழம் இவர்.

ஆறாயிரம் பக்கங்களில் பதினான்கு தொகுப்புகளாகச் சிலம்பொலி செல்லப்பனார் வடித்திருக்கும் "செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியம்", தமிழின் அக இலக்கிய உலகிற்கு அருளப்பட்டிருக்கின்ற அரும்பெரும் கொடை. ஐம்பதாண்டுக் காலத்திற்குமேல் தமிழின் அக இலக்கியங்களில் ஆழ்ந்து தவமிருந்து, சிலம்பொலியார் அயராமல் உழைத்ததன் காரணமாக, நமது இளம்தலைமுறையினருக்கு இப்படியோர் வரம் கிடைத்திருக்கிறது. தவமிருந்தவர் சிலம்பொலியார்; வரம் பெற்றவர்களோ தமிழர்கள்.

தமிழைத் திரட்டித் திரட்டி நிகழ்காலத்தின் கரங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற இந்நூல் வரிசை, என்றென்றைக்கும் நமது அகநூல் களுக்கான களஞ்சியமாகவும், அவற்றுக்கான அரணாகவும், அவற்றை நோக்கிப் பயணிக்க உதவுகின்ற பண்பட்ட பாதையாகவும் திகழும். இப்படைப்பு வரிசை உலகெங்கும் விரிந்து பரவுகின்ற உயிர்த்தன்மை மிக்க, உண்மைத்தன்மை மிக்க, படிப்போரை உயர்த்தும் தன்மை மிக்கவை. வணங்குவதற்கு மட்டுமன்று; நன்றி கூறவும் கைகூப்புவோம், சிலம்பொலியாரை நோக்கி.

கவிஞர் ஜெயபாஸ்கரன்

Set of 14 Books
ISBN: 978-81-8379-767-2

Vol-3
ISBN: 978-81-8379-770-2

விலை ரூ. 7200/-